Q22:A17
M68
224906

# ...ரமகாபாக...

## தசமஸ்கந்தநாடக...

ஐம்...

காட்டுமன்னார்கோவில் ஆண்டாள் வாப்பி...

இலட்சுமு அம்மாள்வர்க...

இயற்றப்பட்டு

காயார் - கொமாண்டூர்

மூ. சக்ரவர்த்தி ஐயங்கார...

இராகதாளங்களமைக்கப்பட்டு

பு. செ. இராஜகோபாலமுதலியார...

இராயப்பேட்டை

திருவேங்கடப்பிள்ளையவர்களாலும்

பிழையறப் பரிசோதிக்கப்பட்டு

நமது சிநேகிதராகிய

ஒதிக்காடு - கந்தசாமிமுதலியாரவர்களது

தாம்ஸன்கம்பெனி, மினர்வாபிரசில்

பதிப்பிக்கப்பட்டது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை
நகல்

ம்.

...ல்லிக்கேணி வீரராகவமு...
...லும் புதுவையில் வீராவெளித்தெரு...
ம - ா - ா - ஸ்ரீ, பால.- ராமசாமிநாயுடு கிரகத்திலும் பெங்களூரில்
டோன்மெண்டில் பால்சவுத்திரி வெங்கடாசலப்பிள்ளைவீட்டிலும்
வண்ணமலையில் ஓவர் சியர் கூடலூர் விஜயரங்கமுதலியாரிடத்திலும்
...ற்றுக்கொள்ளலாம்.

P. S. மணியார்டருபமாக தபால் சிலவு ஒரு அணா சேர்த்தனுப்பி...
புத்தகம் வெளியாருக்கு அனுப்பப்படும்.

பு. செ. இராஜகோபாலமுதலியார்
காரியத...



இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

எத்தனை நாளாயுன்னை நத்தித்திரிகிறேன் - ருக்மணித்தாயே
உற்றவார்த்தைசொன்னால் வாய்
முத்துதிர்ந்துபோமோ - ருக்மணித்தாயே ... ... ... *

சித்தங்கலங்கியுன்னைத் தேடிநான்வந்தேனே - ருக்மணித்தாயே
மெத்தத்தாமதஞ்செய்தால்
வேறேயார்கதி - ருக்மணித்தாயே ... ... ... *

பெற்றபிள்ளையனேகம் பிழைகள்செய்தபோதும்-ருக்மணித்தாயே
குற்றம்வையாமலே
கூட்டியணையாயோ - ருக்மணித்தாயே ... ... ... *

ஸ்தன்னியபானங்கொடுத்து-தாங்கிவளர்த்தஎந்தன்-ருக்மணித்தாயே
அன்னியாயஞ்செய்யாமல்
ஆசையைவையடி - ருக்மணித்தாயே ... ... ... *

பண்ணியகீர்த்தனை-பலப்படும்படியெந்தன் - ருக்மணித்தாயே
எண்ணியுன்நாதனுக்கு
இனிப்புறச்செய்யாயோ - ருக்மணித்தாயே ... ... *

கட்டியகீர்த்தனங் - கனப்படும்படியாக - ருக்மணித்தாயே
எட்டியுன்கணவனை
ஈடேற்றச்சொல்லடி - ருக்மணித்தாயே ... ... ... *

அச்சுக்கள்போட்டு - அனைவர்களும்படிக்க - ருக்மணித்தாயே
உச்சிதசீலனுக்கு
ஒருவார்த்தைசொல்லாயோ - ருக்மணித்தாயே ... ... *

அரங்கேற்றுதல்செய்து - அன்பர்களும்உய்ய - ருக்மணித்தாயெ
இரங்கியுன்நாதனுக்கு
இதமாகச்சொல்லடி - ருக்மணித்தாயே ... ... ... *

இஷ்டவுல்லாசமாக - இருக்கின்றவேளையில் - ருக்மணித்தாயே
கிஷ்டனிடத்தில்நீ
கிருபையாகச்சொல்லாயோ - ருக்மணித்தாயே ... ... *

வட்சஸ்தலந்தன்னில் - மருவிவிளையாடி - ருக்மணித்தாயே
லட்சுமிகோரிக்கை
நிறைவேறச்செய்யடி - ருக்மணித்தாயே ... ... *

அன்றிரவில் சொற்பனத்தில்அத்திருமாதைத் தரிசனஞ்செய்ய, இராயப்பேட்டை. வித்வான் வெங்கடாசலப்பிள்ளை குமாரர் திருவேங்கடப்பிள்ளையையும், பழைய காலேஜ் தமிழ்ப்பண்டிதர் புதுவை. நயநப்பமுதலியார்குமாரர் பு. செ. இராஜகோபாலமுதலியாரையுங்கண்டு, நீ பாடியிருப்பதைக் கொண்டுபோய்க் காண்பிப்பாயாகில், பிரபலப்படும், விசனப்படாதேயென்றுக்கியாபித்தபடி,எங்களை மறுநாளுதயத்தில் இருவரையுங்கண்டு அக்கீர்த்தனத்தையுஞ்சொல்ல,இராகதாளங்களமைத்துக்கொடுக்கசாயார். கொமாண்டேர். மு. ஸ்ரீவாசய்யங்காரவர்கள் துவிதியபுத்திரர் சக்ரவர்த்தி ஐயங்கார் உதவியையுங்கொண்டு சுமார். ௫-௬-வருஷங்களாக ஆங்காங்கு வேண்டிய விருத்தங்களும், கீர்த்தனங்களும், வசனங்களும், தக்கவாறமைத்து எழுதிமுடித்துக் கற்றோர்முதலிய கனவான்களுக்கு வாசித்துக்காட்ட அவர்கள் ஆனந்தப்படுவதைக்கண்டு ம-ா-ா-ஸ்ரீ, சேலம் மிட்டா இராமசாமிமுதலியார் குமாரர் கோபாலசுவாமிமுதலியாரவர்களுடைய பேருதவியால் அச்சிடத்துணிந்து இந்நாடகத்தைத் திருத்தமாகவும் அந்தம்மான் இஷ்டப்படிப் பிரபலமாக்கவும் அச்சிட்டுப் பூர்த்திசெய்வித்தனம்.

☞ இக்கீர்த்தனையிற்கண்ட இராகதாளங்கள் அல்லாமல் சங்கீத வித்துவான்கள் தங்களால் கூடியபடி இராகதாளங்கள் அமைத்துப் பாடிக்கொள்ளலாம்.

Q22:47
M88 22490

ஸ்ரீ

ஆதிமூலந்துணை.

# கதையின் அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| சுகமுனிவர்தோத்திரம் ... ... | ௧. |
| ஆண்டாள் தோத்திரம் ... ... | ௧. |
| நம்மாழ்வார் தோத்திரம் ... ... | ௨. |
| ஸ்ரீமந்நாதமுனிகள் தோத்திரம் ... ... | ௩. |
| ஆசாரியர் தோத்திரம் ... ... ... | ௪. |
| அவையடக்கம் ... ... ... | ௫. |
| பரீக்ஷித்து சுகமுனிவரைக் கேட்குதல் ... ... | ௬. |
| பூதேவிமுறையிடல் ... ... ... | ௭. |
| தேவர்கள் ஸ்ரீமந்நாராயணனைத் துதித்தது .. ... | ௮. |
| பிரமன் தோத்திரம்செய்தது ... ... | ௮. |
| அசரீரியுரைத்தது ... ... ... | ௰. |
| வசுதேவர் திருமணம் ... ... ... | ௰௧. |
| ஆகாசவாணி சொல்லியது ... ... ... | ௰௩. |
| வசுதேவர் கஞ்சனுக்கு நீதியுரைத்தது ... ... | ௰௪. |
| கஞ்சன் கோபந்தணிந்து அரண்மனை சேர்ந்தது ... | ௰௫. |
| தேவகியின் பிரதமகர்ப்பம் ... ... | ௰௫. |
| குழந்தையை வசுதேவர்சொன்னபடி கஞ்சனிடமளித்தது | ௰௬. |
| குழந்தையை மறுபடி வசுதேவரிடம் கஞ்சன்கொடுத்தது | ௰௭. |
| நாரதர் கஞ்சனைக் கலைக்கவந்தது ... ... | ௰௮. |
| நாரதனை வந்தகாரணஞ் சொல்லக்கேட்டல் ... | ௰௯. |
| கஞ்சன் தூதரையனுப்பல் ... ... ... | ௨௨. |
| குழந்தையை தூதரிடம் கொடுத்தல் ... ... | ௨௩. |
| விஷ்ணுமாயைக்குத் திட்டஞ்செய்தது ... ... | ௨௪. |
| பலராமன் அவதாரம் ... ... ... | ௨௫. |
| தேவகியின் அஷ்டமகர்ம்பம் ... ... | ௨௫. |
| கஞ்சன் பயந்தது ... ... ... | ௨௬. |
| தேவர்கள் துதித்தல் ... ... ... | ௨௭. |
| கண்ணன் அவதாரம் ... ... ... | ௨௯. |
| வசுதேவர் தோத்திரம் ... ... ... | ௩௰. |
| தேவகி தோத்திரம் ... ... ... | ௩௨. |

கண்ணன் உரைத்தது ... ... ... ௩௩.
கண்ணனை வசுதேவர் நந்தர் வீடுதியிற்சேர்த்தது ... ௩௫.
தூதர் கஞ்சனுக்கு குழந்தைபிறந்ததைத் தெரிவித்தது ... ௩௬.
தேவகி புலம்பல் ... ... ... ௩௭.
நாரதிசொல்லல் ... ... ... ௩௮.
வசுதேவரையும் தேவகியையும் சிறைநீக்கியது ... ௩௯.
கண்ணன் அவதாரத்தை நந்தகோபருக்குரைத்தல் ... ௪௨.
விரைதானஞ்செய்தது ... ... ... ௪௩.
ஆயர்பாடியில் மங்களங்கொண்டாடல் ... ... ௪௪.
கோபியர் குழந்தையைக் காணவருதல் ... ... ௪௪.
குழந்தையின் ரூபங்கண்டு புகழ்தல் ... ... ௪௫.
கண்ணனுக்குத் தைல்மாட்டுதல் ... ... ௪௭.
லாலி ... ... ... ... ௪௮.
தாலாட்டு ... ... ... ... ௪௯.
நந்தகோபர் ஆயர்களுக்குச் சொல்லல் ... ... ௫௰.
நந்தகோபருக்கு வசுதேவர்சொல்லல் ... ... ௫௧.
பூதனையை ஏவியது ... ... ... ௫௩.
பூதனை பாலகனைத்தேடல் ... ... ... ௫௪.
பூதகிவிஷமுலைகொடுத்தல் ... ... ... ௫௫.
விஷமுலையையுண்ணல் ... ... ... ௫௬.
பூதனை மடிந்தது ... ... ... ௫௭.
திருஷ்டிகழித்தல் ... ... ... ௫௮.
ரக்ஷாபந்தனஞ்செய்தல் ... ... ... ௫௯.
நந்தகோபர் ஆச்சரியப்படுதல்... ... ... ௬௧.
பூதனை வரலாறுகூறல் ... ... ... ௬௨.
பரீக்ஷித்து காரணங்கேட்குதல் ... ... ௬௩.
சுகமுனிவர் பூதனை வரலாறுசொல்லல் ... ... ௬௩.
சகடாசுரனைவதைத்தல் ... ... ... ௬௪.
திரணாவர்த்தன்வதம் ... ... ... ௬௬.
கோபியர் கண்ணனைப்புகழ்தல் ... ... ௬௭.
கண்ணன் கொட்டாவி விட்டது ... ... ௬௮.
நற்கர்வர்த்தைச் சொல்லல் ... ... ௬௯.
நற்கர்உரைத்தல் ... ... ... ௭௰.
நாமகரணம் ... ... ... ௭௧.
தவழ்ந்துவிளையாடல் ... ... ... ௭௧.
ஓடியாடல் ... ... ... ... ௭௨.
கோபிகள் முறையிடல் ... ... ... ௭௪.
அண்ணனுங்கண்ணனும் விளையாடல் ... ... ௭௫.



கண்ணனைக்கொணர்ந்து சோதைமுன்விடல் ... ௭௬.
கோபியர்வார்த்தையைக் கண்ணன் பொய்யெனல் ... ௭௭.
சோதை விடைதரல் ... ... ௭௮.
கோபிகள் தயிர்விற்றல் ... ... ௭௯.
கோபிகளுடன் கண்ணன்விளையாடல் ... ... ௮௰.
கண்ணனையறையிலடைத்துசோதையிடம்கூறயோசித்தல். ௮௧.
கண்ணன்செய் தடுக்கை சோதையிடம் முறையிடல் ௮௧.
சோதை கண்ணனை யென்செய்தாயெனல் ... ௮௨.
கண்ணன் தாய்க்குச் சமாதானஞ் சொல்லல் ... ௮௩.
கோபியரை சோதையேசுதல் ... ... ௮௪.
கண்ணனுக்குத் திட்டஞ்செய்தல் ... ... ௮௫.
கண்ணன் பழையபடி செய்யல் ... ... ௮௬.
கோபியரும் கண்ணனும் தர்க்கஞ்செய்தல் ... ௮௭.
ஒருத்தியை ஜடைபற்றியிழுத்தல் ... ... ௮௮.
கண்ணன் பால்தயிர் களவாடல் ... ... ௮௮.
கோபியர் மூறைப்பாடு ... ... ௯௰.
கோபியர் கண்ணனுக்கு புத்தியுரைக்கும்படி சொல்லுதல். ௯௧.
சோதை கண்ணனுக்கு புத்திசொல்லல் ... ... ௯௨.
தாய்க்குக் கண்ணன் விடைதருதல் ... ... ௯௨
கண்ணன் வெண்ணை திருடல் ... ... ௯௪.
சோதையுங் கண்ணனுந் தர்க்கித்தல் ... ... ௯௫.
கன்றைச்சட்டியிற் காட்டியது ... ... ௯௭.
கோபிகள்மேல் விஷசெந்துகளை விடுத்து விளையாடல் ... ௯௮.
கண்ணனுஞ் சோதையுந் தர்க்கித்தல் ... ... ௯௯.
ஒருத்தி முறையிடல் ... ... ௱௧.
பலராமனைக் கண்ணனைப்பற்றிக் கேட்குதல் ... ௱௩.
கண்ணனுக்குச் சோதை புத்திசொல்லுதல்... ... ௱௪.
கண்ணன் சமாதானங்கூறுதல் ... ... ௱௫.
கண்ணனைக்காணாமல் கோபிகள் தயங்குதல் ... ௱௬.
கண்ணனும் கன்னிகைகளும் தர்க்கித்தல் ... ௱௬.
கண்ணன் மண்ணையுண்டானெனல் ... ... ௱௭.
கண்ணன் திருவாயைத் திறந்தபொழுது சோதைகண்டது. ௱௮.
சோதை தயிர்கடைதல் ... ... ௱௰.
தயிர்த்தாழியையுடைத்தது ... ... ௱௰௧.
கண்ணனைப் பிடிக்கவோடுதல் ... ... ௱௰௨.
கண்ணனைத் தாம்பினாற்கட்டல் ... ... ௱௰௩.
மருதத்தின் விருத்தாந்தம் கேட்டல் ... ... ௱௰௪.

மருத்தின் விருத்தாந்தம் சொல்லல் ... ... ௱௰௫.
நளகூபமணி கிரீடாள் துதித்தல் ... ... ௱௰௬.
ஷை யாருக்கு விடைதரல் ... ... ௱௰௭.
இருவர்கள் நடந்ததைகூறல் ... ... ௱௰௮.
கண்ணன் பதுமைகொண்டு விளையாடல் ... ... ௱௰௯.
நாவற்பழம் விலைகூறல் ... ... ௱௨௰.
ஷை கொள்ளல் ... ... ௱௨௧.
இரத்தினமாக்கிப்பின் விளையாடல் ... ... ௱௨௨.
சோதை குழந்தைகளை யழைத்தல் ... ... ௱௨௩.
அலங்காரஞ்செய்தல் ... ... ௱௨௪.
பிருந்தைக்கு குடியேற யோசித்தல் ... ... ௱௨௫.
பிருந்தைக்குப்போதல் ... ... ௱௨௬.
தோழருடன் விளையாடல் ... ... ௱௨௭.
கன்றையெறிதல் ... ... ௱௨௮.
கொக்கின்வதம் ... ... ௱௨௮.
பிருந்தையில் விளையாடல் ... ... ௱௩௰.
மலைப்பாம்பைக்கிழித்தது ... ... ௱௩௰.
கட்டமுதுண்ணல் ... ... ௱௩௧.
கண்ணன் எல்லாந் தானாயிருத்தல் ... ... ௱௩௨.
பிரமன் கண்ணனை வணங்கியது ... ... ௱௩௩.
கண்ணன் அண்ணனுக்கு வனப்பெருமைகூறல் ... ... ௱௩௪.
கண்ணன் தோழருடன் வனத்தில் விளையாடல் ... ... ௱௩௫.
புனம்பழங்கேட்டல் ... ... ௱௩௬.
தேனுகாசுரன்வரல் ... ... ௱௩௭.
ஷை யான்வதம் ... ... ௱௩௮.
கண்ணன் மாடுமேய்த்தது ... ... ௱௩௯.
விஷஜலமுண்ட காலி கன்றுதோழர்களையெழுப்பிமீளுதல் ௱௪௰.
காளியன் விருத்தாந்தம் ... ... ௱௪௧.
ஷை வரலாறு ... ... ௱௪௨.
மடுவிற்குதித்தல் ... ... ௱௪௩.
காளியனுக்கும் கண்ணனுக்கும் வாதம் ... ... ௱௪௪.
கரைமேல் இருந்த மந்தையுந் தோழரும் புலம்புதல் ... ௱௪௬.
பிருந்தையோர் அவசகுனங்கண்டு கண்ணனைத் தேடிவரல். ௱௪௭.
நந்தகோபர் முதலியோர் வாடுதல் ... ... ௱௪௮.
கோபியர் வருந்துதல் ... ... ௱௪௯.
பலராமன் கண்ணனது மகிமைகூறல் ... ... ௱௫௧.
காளிங்கநிர்த்தனம் ... ... ௱௫௨.



காளியன் யோசித்தல் ... ... ௱௫௩.
நாககன்னியர்துதி ... ... ௱௫௪.
மாங்கல்யபிச்சைகேட்டல் ... ... ௱௫௫.
காளியன்துதித்தல் ... ... ௱௫௭.
கண்ணன் திட்டம்செய்தல் ... ... ௱௫௮.
காளியனுக்கும் கருடனுக்கும் நடந்தது ... ... ௱௫௯.
கருடன் வராமைக்குக் காரணம் ... ... ௱௬௰.
கோபாலர் அதிசயித்தல் ... ... ௱௬௧.
காட்டுத்தீ ... ... ... ௱௬௨.
கோபாலரைக்காத்தல் ... ... ௱௬௩.
வசந்தகாலம் ... ... ௱௬௪.
வனமேகிவிளையாடல் ... ... ௱௬௬.
பந்தாடுதல் ... ... ௱௬௭.
பிரலம்பாசுரன்வதம் ... ... ௱௬௮.
கோடைகாலம் ... ... ௱௭௰.
பசுக்களைத்தேடல் ... ... ௱௭௧.
காட்டுத்தீ ... ... ௱௭௨.
பாலர்கள் கண்ணனைத்துதித்தல் ... ... ௱௭௩.
கண்ணன்விளையாடல் ... ... ௱௭௪.
சாற்காலம் ... ... ௱௭௬.
கண்ணன்வேணுகானம் ... ... ௱௭௭.
கோபிகள் வேணுகானத்தைமெச்சுதல் ... ... ௱௭௮.
கௌரிவிரதம் கோபிகள் அநுஷ்டித்தல் ... ... ௱௭௯.
கரைமேல்வைத்த வஸ்திரங்கள் காணாமையால் கோபிகள் வாடுதல் ௱௮௧.
கண்ணனைக் குருந்துமேல் கண்டது ... ... ௱௮௩.
கூறையைத் தரும்படி கேட்டல் ... ... ௱௮௬.
கன்னிகைகள் செய்தவிரதத்தை மெய்ச்சுதல் ... ... ௱௮௭.
மாமிமார் இந்நேரம் என்செய்திரெனல் ... ... ௱௮௮.
கோபிகள் விடைதருதல் ... ... ... ௱௯௰.
கண்ணன் வனப்பெருமை கூறல் ... ... ௱௯௧.
கோக்கள் மேய்ந்த பெருமை ... ... ௱௯௨.
தோழர்கள் பசியெனல் ... ... ௱௯௩.
அன்னங்கேட்கத் திட்டஞ்செயல் ... ... ௱௯௪.
வேதியர் மறுத்ததை யுரைத்தல் ... ... ௱௯௫.
ரிஷிபத்தினிகளிடம் அனுப்பல் ... ... ... ௱௯௬.
ஷையார் அசனம் எடுத்தபெருமை ... ... ௱௯௭.
ஷையார் அசனம் எடுத்தல் ... ... ௱௯௮.

கண்ணன் க்ஷேமாதிசயங் கேட்டல் ... ... ௨௱.
அன்னம் உண்ணல் ... ... ௨௱௧.
வேதியர் துதித்தல் ... ... ௨௱௨.
இந்திரனுக்குப் பொங்கலேனெனல் ... ... ௨௱௪.
பொங்கலிடல் ... ... ௨௱௬.
இந்திரன் மேகங்களுக்குத் திட்டஞ்செயல் ... ... ௨௱௭.
மழைபெய்தல் ... ... ௨௱௮.
இரக்ஷிக்க வேண்டல் ... ... ... ௨௱௯.
கோவர்த்தனமெடுத்தது ... ... ... ௨௱௰௧.
கண்ணனை வரும்படி யழைத்தல் ... ... ௨௱௰௨.
கண்ணனைப்புகழ்தல் ... ... ... ௨௱௰௩.
கண்ணனைப்பற்றி நந்தருரைத்தல் ... ... ௨௱௰௪.
இந்திரன் க்ஷமிக்கும்படி கண்ணனை வேண்டல் ... ௨௱௰௬.
கண்ணன் கூறல் ... ... ௨௱௰௭.
கோவிந்த பட்டாபிஷேகம் ... ... ௨௱௰௮.
பட்டாபிஷேகப்பெருமை ... ... ௨௱௰௯.
நந்தரைக் காணோமெனல் ... ... ௨௨௰.
வருணன் துதித்தல் ... ... ௨௨௧.
வைகுண்டங்காட்டியது ... ... ௨௨௩.
சந்திரவருணனை ... ... ௨௨௪.
குழலூதியது ... ... ௨௨௫.
கோபிகள்மோகங்கொளல் ... ... ௨௨௬.
சிந்தையென்னும் பெண் பரமபதஞ் சேர்ந்த தெவ்வாறெனல் } ௨௨௮.
கோபிகளும் கண்ணனும் தர்க்கஞ்செய்தல் ... ... ௨௩௰.
கோபிகள் போவெனல் நியாயமோவெனல் ... ௨௩௨.
கன்னியரிஷ்டப்படி விளையாடல் ... ... ௨௩௪.
பிருந்தையில் நர்த்தனம் ... ... ௨௩௬.
கன்னியர் கண்ணனைத்தேடல் ... ... ௨௩௭.
கண்ணனையோடியழைத்தல் ... ... ௨௩௮.
கோபிகள் கண்ணனைப்போல் நடித்தல் ... ... ௨௪௰.
கண்ணன் மறைந்த பெருமை கூறல் ... ... ௨௪௧.
கோபிகா கீதை ... ... ௨௪௨.
கனகப்பாட்டு ... ... ௨௪௫.
நர்த்தனம் ... ... ௨௪௬.
கண்ணனிருந்த வைபவம் ... ... ௨௪௮.
ஜலக்கிரீடை ... ... ௨௪௯.
கோபியர் கொண்டாடல் ... ... ௨௫௧.



ஒவ்வொருத்தியோடும் தனித்தனி விளையாடல் ... ௨௫௩.
ஜலக்கிரீடை ... ... ௨௫௪.
பரீக்ஷித்து அன்னிய ஸ்திரியைச் சேரல்பாபமெனல் ... ௨௫௮.
நந்தரைமலைப்பாம்பினின்றும்மீட்டது ... ... ௨௫௯.
சுதரிசனன்விருத்தாந்தம் ... ... ௨௬௰.
கண்ணனையழைத்தல் ... ... ௨௬௧.
சங்கசூளனைவதைத்துகோபியரைக்காத்தல் ... ... ௨௬௨.
கோபிகள் கண்ணன் பிரிவைப்பற்றிவாடுதல் ... ௨௬௩.
விருஷபாசுரன்வரல் ... ... ௨௬௫.
கேசியான் வதம் ... ... ௨௬௬.
நாரதர் கஞ்சனைக்கலைத்தல் ... ... ௨௬௭.
தூதருக்குக் கஞ்சன் திட்டம் ... ... ௨௬௮.
அக்குரூரருக்கு கண்ணனண்ணனை யழைத்துவரச்சொல்லல் ... ... ... } ௨௭௰.
கோடகாசுரன்வரல் ... ... ௨௭௧.
கேசியான் வதம் ... ... ௨௭௩.
கண்ணனைநாரதர்கண்டது ... ... ௨௭௩.
வியோமாசுரன்வதம் ... ... ௨௭௫.
அக்குரூரர் இரதமேறியது ... ... ௨௭௬.
கண்ணன் திருவடியைக்கண்டு ஆனந்தித்தல் ... ௨௭௭.
ஆய்ப்பாடியைக்கண்டு புகழ்தல் ... ... ௨௭௯.
அக்குரூரர்விருந்துண்ணல் ... ... ௨௮௰.
நந்தகோபர் க்ஷேமங்கேட்டல் ... ... ௨௮௧.
கண்ணன் வந்தகாரியமென்னவெனல் ... ... ௨௮௨.
அக்குரூரர் வந்தகாரியஞ்சொல்லல் ... ... ௨௮௪.
கஞ்சனுக்குகாணிக்கை கப்பணங்கொண்டுவரும்படிபறையடித்தல் ... ... ... } ௨௮௫.
கண்ணன் பிரயாணங்கேட்டுக் கோபிகள்வாடுதல் ... ௨௮௬.
கோபிகளுக்குண்டான மனவருத்தம் ... ... ௨௮௮.
அக்குரூரரோடு அண்ணனுங் கண்ணனும் இரதமேறியது.. ௨௮௯.
கோபிகள் கண்ணன் மதுரைக்குப்போவதைப்பற்றி யுரைத்தல் ... ... ... ... } ௨௯௧.
அக்குரூரருக்குத் தரிசனமானது ... ... ௨௯௩.
சேஷியார் துதி ... ... ௨௯௪.
சேஷியார் மங்களம்பாடல் ... ... ௨௯௭.
ஆனந்தத்தோடு அக்குரூரர் ஓடிவரல் ... ... ௨௯௮.
கண்ணன் அதிசயம் என்னையெனல் ... ... ௨௯௯.
அக்குரூரர்கண்ட அதிசயங்கூறல் ... ... ௩௱.

கண்ணன் காரியமுடிந்தபின் உண்பேனெனல் ... ௩௱௧.
மதுரைப்பெண்கள் கண்ணன் அழகைக்கண்டு மயங்குதல் ௩௱௨.
கன்னியர் மங்களாசாசனம் செய்தல் ... ... ௩௱௩.
வண்ணான்வதம் ... ... ௩௱௫.
தையற்காரன்செய்மரியாதை ... ... ௩௱௬.
தட்டான்செய் மரியாதை ... ... ௩௱௭.
சுதாமன் பூமாலை சூட்டியது ... ... ௩௱௭.
கூனிவரல் ... ... ௩௱௮.
சேடியாள் சந்தனம் பூசுதல் ... ... ௩௱௯.
கூனி மருவ அழைத்தல் ... ... ௩௱௰.
கண்ணன் வில்லை முறித்தல் ... ... ௩௱௰௨.
சூரியாஸ்தவருணனை ... ... ௩௱௰௱.
சந்திரோதயவருணனை ... ... ௩௱௰௪.
கஞ்சன் அவசகுனம் காணல் ... ... ௩௱௰௫.
சேடியான் கனவுகண்டு நடுங்கல் ... ... ௩௱௰௬.
சூரியோதயவருணனை ... ... ௩௱௰௭.
கஞ்சன் மல்லரங்கம்வருதல் ... ... ௩௱௰௮.
கண்ணன்வருவதைக் கண்டவைபவம் ... ... ௩௱௰௯.
குவலயாபீடத்தை யழித்தது ... ... ௩௨௰.
கண்ணனும் பலராமனும் மல்லரங்கம்வரல் ... ... ௩௨௧.
பெரியோர் கண்ணனைத் துதித்தல் ... ... ௩௨௨.
கண்ணனை மல்லர் மல்லுக்கு அழைத்தல் ... ... ௩௨௪.
கண்ணன் விடைதரல் ... ... ௩௨௫.
மல்லர் ஆண்மைகூறல் ... ... ௩௨௫.
மல்லுக்கு எதிர்த்தல் ... ... ௩௨௭.
பெண்கள் சிறுபிள்ளைகளென்று விசனப்படல் ... ௩௨௮.
கண்ணன்மேல் மோகங்கொண்டது ... ... ௩௨௯.
மல்லர்மடிந்தது ... ... ௩௩௰.
கஞ்சனை மடித்தது ... ... ௩௩௩.
நாரதர் மங்களம்பாடல் ... ... ௩௩௪.
கஞ்சன் தேவியர் புலம்பல் ... ... ௩௩௫.
தாய்தந்தையரை சிறையினின்றும் மீட்டது... ... ௩௩௬.
பாட்டனுக்குப் பட்டங்கட்டல் ... ... ௩௩௭.
நந்தருக்கு கோகுலஞ்சேரும்படி சமாதானஞ்சொல்லல் ... ௩௩௯.
இருவருக்கும் உபநயனம் ... ... ௩௪௰.
வித்தியாரம்பம் ... ... ௩௪௧.
குரு, தட்சணை கேட்குதல் ... ... ௩௪௩.



வருணன் சொல்லியது ... ... ௩௪௩.
எமன் தோத்தரித்தல் ... ... ௩௪௪.
கண்ணனை சாந்திபர் துதித்தல் ... ... ௩௪௫.
உத்தவரைக் கோகுலமனுப்பியது ... ... ௩௪௬.
நந்தகோபர் விசாரித்தல் ... ... ௩௪௭.
உத்தவர் தேற்றியது ... ... ௩௪௯.
உத்தவரைக் கோபிகளேசல் ... ... ௩௫௧.
கண்ணனனுப்பிய தூதெனப்புகழ்தல் ... ... ௩௫௨.
கண்ணன் பிரிவால் தங்களுக்குண்டான துயரம் ... ௩௫௩.
உத்தவர் சொல்லியது ... ... ௩௫௪.
கண்ணனுடன் ஆடியிருந்த வைபத்தைச்சொல்லல் ... ௩௫௬.
கண்ணனைத் துரையில் வரும்படி சொல்லல் ... ௩௫௭.
கண்ணனுக்குப் பாடியில் நடந்ததை யுத்தவர்கூறல் ... ௩௫௮.
கண்ணன் கூனியிடம் போகுதல் ... ... ௩௬௰.
கூனிவருதல் ... ... ௩௬௧.
கண்ணன் கூனியொடு விளையாடல் ... ... ௩௬௨.
கூனியின் மகிமை ... ... ௩௬௩.
அக்குரூரர் தோத்திரம் ... ... ௩௬௪.
அக்குரூரரை அத்தினபுரம் அனுப்பியது ... ... ௩௬௫.
குந்தி க்ஷேமங்கூறல் ... ... ௩௬௭.
குந்தி கண்ணனைப்புகழ்தல் ... ... ௩௬௮.
அக்குரூரர் திருதராஷ்டிரனுக்கு நீதிகூறல் .... ... ௩௬௯.
திருதராஷ்டிரன் விடைதருதல் ... ... ௩௭௰.
அக்குரூரர் குந்திமுதலியோர் க்ஷேமங்கூறல் ... ௩௭௧.
கஞ்சன் தேவியர் ஜராசந்தனிடஞ்சென்று முறையிடல் ... ௩௭௨.
புத்திரிகளுக்குச்சொல்லல் ... ... ௩௭௩.
ஜராசந்தன் கண்ணனைத் தேடிவரல் ... ... ௩௭௪.
அவன் உத்தியானவனத்தைப்புகழ்தல் ... ... ௩௭௫.
தேவர்கள் விமானங்கள் அனுப்புதல் ... ... ௩௭௬.
கண்ணன் அண்ணனுக்குச் சொல்லல் ... ... ௩௭௭.
ஜராசந்தன் ஏசுதல் ... ... ௩௭௮.
கண்ணன் மறுத்துரைத்தல் ... ... ௩௭௯.
ஜராசந்தன் அடித்தல் ... ... ௩௮௧.
இராமகிருஷ்ணர் அவனைப்புடைத்தல் ... ... ௩௮௨.
பட்டணம் அலங்கரித்தல் ... ... ௩௮௩.
நாரதர்காலயவனுக்குரைத்தல் ... ... ௩௮௪.
கண்ணன் ரூபலாவண்ணியங்கூறல் ... ... ௩௮௬.

காலயவனைக்கண்டு கண்ணன் அண்ணனுக்குரைத்தல் ... ௩௮௭.
விசுகர்மனுக்கு ஒருதிருக்கம் கட்டும்படி கண்ணன்கேமனம் ௩௮௮.
பந்துமுதலியவரை துவாரகையிற்சேர்த்தல் ... ௩௮௯.
காலயவன்னோக்குதல் ... ... ௩௯௰.
கண்ணன் பயந்தான்போலோடல் ... ... ௩௯௨.
காலயவனையலக்கழித்தல் ... ... ௩௯௩.
காலயவன் நீருனது ... ... ௩௯௪.
முசுகுந்தன் வர்லாறுகூறல் ... ... ௩௯௫.
முசுகுந்தன் கண்ணனையாரெனல் ... ... ௩௯௭.
கண்ணன் விடைதருதல் ... ... ௩௯௮.
முசுகுந்தன் வரங்கேட்டல் ... ... ௩௯௯.
வரங்கொடுத்தல் ... ... ௪௱.
ஜராசந்தன் பதினெட்டாந்தரம்வரல் ... ... ௪௱௨.
மலையைக்கொளுத்தல் ... ... ௪௱௪.
பலராமன் திருமணம் ... ... ௪௱௫.
சுகமுனிவர் கண்ணன் திருக்கல்யாணவிந்தையைச்சொல்ல ஆரம்பித்தல் ... ... ... ௪௱௬.
ருக்மணியின் அவயவாலங்காரம் ... ... ௪௱௭.
சபையோர் ருக்மணியைக் கண்ணனுக்குக் கொடுக்கலாமெனல் ... ... ... ... ௪௱௮.
பீஷ்மன் மூத்தகுமாரன் கண்ணனுக்குக் கொடுக்கலாகாதெனல் ... ... ... ... ௪௱௰.
ருக்மணி பாக்கியரோடு முறையிடல் ... ... ௪௱௰.
வசனசாதுரி சமாதானங்கூறல் ... ... ௪௱௰௧.
ருக்மணி வேதியரை யழைத்துவரும்படி யுரைத்தல் ... ௪௱௰௨.
தோழியோடி வேதியரை யழைத்தல் ... ... ௪௱௰௩.
வேதியர் வருதல் ... ... ௪௱௰௪.
ருக்மணிக்கு வேதியர்வந்தாரெனல் ... ... ௪௱௰௫.
வேதியர் அழைத்தகாரியம் என்னையெனல் ... ... ௪௱௰௬.
ருக்மணி யோலையெழுதல் ... ... ௪௱௰௭.
ருக்மணி பின்னுமுரைத்தல் ... ... ௪௱௰௯.
வேதியர் ஏகுதல் ... ... ... ௪௨௰.
வேதியர் துவாரகையைக் கண்டவுடன் ஆனந்தப்படுதல் ... ௪௨௨.
கண்ணன் வந்தகாரியம் என்னை யெனல் ... ... ௪௨௩.
ருக்மணியெழுதிய ஓலைகொடுத்தல் ... ... ௪௨௫.
கண்ணன் ருக்மணியிஷ்டப்படி முடிப்பேனெனல் ... ௪௨௭.
கண்ணன் சாரதிக்கு நியமனஞ்செய்தல் ... ... ௪௨௮.





குண்டினபுரம் அலங்கரித்தல் ... ... ௪௨௧.
ருக்மணியின் மணக்கோலம் ... ... ௪௩௰.
சிசுபாலன் மணக்கோலம் ... ... ௪௩௨.
சிசுபாலனுக்கான சகுனம் ... ... ௪௩௩.
பலராமன் துணைவருதல் ... ... ௪௩௪.
ருக்மணி வேதியர் வராமையால் விசனப்படல் ... ௪௩௫.
ஒருதோழி வேதியர் வருவரென்றுரைத்தல் ... ... ௪௩௮.
விப்பிரர் போய்வந்த சேதிகூறல் ... ... ௪௩௮.
கண்ணனது அழகைக்கண்டு புகழ்தல் ... ... ௪௪௰.
சிசுபாலனது சையிந்நியத்திலுள்ளோர் கண்ணனை யேசல்... ௪௪௧.
சிசுபாலனுக்குக்கேட்க பீஷ்மன் விடைதரல் ... ௪௪௨.
ருக்மணியை யலங்கரித்ததைச் சொல்லல் ... ... ௪௪௩.
கௌரீதேவி பூசைசெய்ய வருதல் ... ... ௪௪௪.
கண்ணனே தனக்கு நாயகனாகும்படி அத்தேவியைப் பூசித்தல் ௪௪௫.
கௌரீதேவியை வரங்கேட்டல் ... ... ௪௪௬.
ருக்மணி மோகனரூபங்கொண்டது ... ... ௪௪௭.
பலராமன் இதுசமயமெனல் ... ... ௪௪௮.
ருக்மணியை யெடுத்துச்செல்லுதல் ... ... ௪௪௯.
சூழ்ந்திருந்தஜனங்கள் கண்ணனைத்தூஷித்தல் ... ௪௫௰.
கண்ணனை வழிமறுத்தல் ... ... ௪௫௧.
பலராமன் அடித்தோட்டியது ... ... ௪௫௨.
ஜராசந்தன் சிசுபாலனுக்குத் தேறுதல்சொல்லல் ... ௪௫௪.
ருக்மன் தண்டுதளங்களுடன் கண்ணனையெதிர்த்தல் ... ௪௫௫.
ருக்மனைக் கண்ணன் புடைத்தல் ... ... ௪௫௬.
ருக்மணி அண்ணனை மன்னிக்கவேண்டுதல் ... ... ௪௫௯.
பலராமன் நீதியுரைத்தல் ... ... ௪௬௰.
ருக்மணிக்குப் பலராமன் சமாதானஞ்சொல்லல் ... ௪௬௧.
துவாரகையிற் கண்ணன் சேர்தல் ... ... ௪௬௨.
கண்ணன் தாய்தந்தையருக்குரைத்தல் ... ... ௪௬௩.
மணவோலை யெழுதுதல் ... ... ௪௬௪.
சகலராஜாக்களும் துவாரகைசேர்ந்தது ... ... ௪௬௫.
ருக்மணியை தாய்தந்தையருடன் கல்யாணமண்டபம் வரு... ௪௬௭.
ம்படி செல்தல் ... ... ... ௪௬௮.
ருக்மணியைத் தாய்தந்தையர் அலங்கரித்தல்... ... ௪௬௯.
கண்ணன் மணக்கோலம் ... ... ௪௭௰.
ருக்மணியைத் தரும்படி வசுதேவர் பீஷ்மனைக் கேட்குதல்.. ௪௭௧.

ருக்மணியுடன் பீஷ்மன் வசுதேவர் அரண்மனைக்குவருதல். ௪௭௩
கண்ணன் பரதேசம் போகுதல் ... ... ௪௭௪.
திருக்கல்யாணம் ... ... ௪௭௬.
ஊசல் ... ... ௪௭௭.
லாலி ... ... ௪௭௮.
எச்சரிக்கை ... ... ௪௭௯.
மங்களம் ... ... ௪௮௰.
வாழி ... ... ௪௮௰.

---

# சாற்றுக்கவிகள்.

---

தஞ்சாவூர்ஜில்லா பட்டுக்கோட்டைத் தாலூகா
சித்தாத்திக்காடு ஸ்ரீமான் உபயவேதாந்த வித்வான்
ஸ்ரீநிவாசாசாரியருகந்தருளிச்செய்தது.

## சுலோகங்கள்.

லக்ஷ்மீக்ருதம் க்ருஷ்ணலீலாநாடகம் த்ராவிடோக்திபி:
ஸர்வச்ருதிமநோஹாரி ஜீயாத்கலி மலாபஹம் ... (௧)
பாதப்ரீதிஜநகம்கோபிர்வித்வஸ்தநூஷணம்
ஸ்ரீராமபிவசேவத்வம் லக்ஷ்மீஹரிகதாமிருதம் (௨)

## செய்யுள்.

ஆயன்செய்சரிதையெல்லாமிலக்குமியாமன்னைபாடுந்
தூயசெந்தமிழின்பாவைச் சொல்லவேபவமுந்தேயும்
மாயையுந்தீயுஞ்சோதி வானகங்கைமேலாகும்
சேயுநற்கிளையுஞ்செல்வஞ் சேருமேநாளுமம்மா.

---

சென்னை இராஜதானி வித்தியாசாலைத் தமிழ்ப்பிரதமபண்டிதர்
ஸ்ரீமத் உபய சுதரிசனம்.
ம-ா-ா-ஸ்ரீ,
கிருஷ்ணமாசாரியர் அவர்களாலியற்றப்பட்ட
(அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.)

திருவளரு மணிமார்பன் நிகழ்ந்தருளு மவதாரச் செயல்விளங்கக்
கருவளரும் வினையகலச் சுகமுனிவன் பாகவதங் கருணைதந்தான்
மருவளர் பூங்காட்டுமன்னார் கோவில்வரு மிலக்குமிப்பேர் மாதாரிங்
குருவளருங் கண்ணனிய நாடகத்தை யுலகுவப்ப வுரைத்ததன்பே.

---

சென்னைச் சருவகலாசாலைத் தமிழ்த்தலைமைப்புலமை
நடாத்திய
கோ. இராஜகோபாலபிள்ளையவர்களா லியற்றப்பட்ட
அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

மருக்காட்டு மலர்முகத்து வான்குணலட்சுமியெம் மோய்வருத்தலொல்
திருக்காட்டுமன்னார்கோயிற் கோதைபாலன்பு சிறந்தாள்காமச் [லாத்
செருக்காட்டுவிழிபங்கன் தினம்பராம் திருக்கண்ணன் சீர்த்திப்பாடல்
உருக்காட்டுபெறுவறந்த வுதவிக்கென் கைம்மாறுவுதவற்பாற்றே.

சென்னை யூனிவர்சிடி பிரதமவித்தர்
ம - ா - ா - ஸ்ரீ,
கந்தாடை - இராமச்சந்திர அய்யரவர்களாலியற்றப்பட்ட
(நேரிசை வெண்பா.)

சீர்மேவு கண்ணன் றிருக்காதை யோர்பாகம்
பார்புகழ நாடகமாய்ப் பாடியே - நேராக
வானுலகும் வையகமும் வாழ்த்தவே லக்ஷுமியுந்
தேனொழுகப் பாடினளே.

---

திருவல்லிக்கேணி
ஆங்க்லோ வெர்நாக்யுலர் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
கார்ப்பங்காடு கோபாலாசாரியர் இயற்றிய
கட்டளைக்கலித்துறை.

பண்பானவன்போ லருந்தியபேய்ச்சி பகிவிட்டதை
உண்பாலெனவு வந்தானிசையா லவனெண்சரிதை
பெண்பாலிலக்ஷுமி யம்மாணவன்பொடு பேசியதை
கண்பாயுவக்குமென் றெல்லோருமீதை நயப்பரன்றே.

---

சென்னை சர்ச் ஆப்ஸ் காட்லண்டு மிஷன்காலேஜ் தமிழ்த்தலைமை
உபாத்தியாயராகிய
புன்னைமாடபூசி - ஸ்ரீநிவாசாசாரியாரவர்களாலியற்றப்பட்ட
சந்தவிருத்தம்.

சகமுகத்தினிதிழியும் பாகவதாமுதக்கலையைத்தெரிக்குந்
இகபரத்திலுமினிமை செய்தருளேற்ற நாடகமாகவே
சகபதிக்கொடியன்னவனுக்குமோர் கன்னிகுடியபெண்மணிநு
மகமலர்ப்பதமெண்ணிலக்ஷுமிமாது செய்தனளின்றரோ.

---

மேற்படியிருவர் மாணாக்கரும்
சர்ச் ஆப்ஸ்காட்லண்டுமிஷன் காலேஜில்
தமிழ் உதவி
உபாத்தியாயருமாகிய
திருவல்லிக்கேணி - வைத்தமாநிதி - முடும்பை
சடகோப ராமாநுஜாசாரியரவர்களா லியற்றப்பட்ட
விருத்தம்.

நாதமுனிஞானிவழி காட்டுமணவூர்கோயி லுடியுறைவான்
கோதைமலர்ப்பாதவிணை கூறியிலக்ஷுமியென் றொருபெயராள்
ஓதமுனிவாணிபுய காதிபதிசர் சிரகம்பஞ்செயவே
வேதநகனெறியருள் பாகவதநாடகம் விளம்பினளரோ.



சென்னை சர்ச் ஆப் ஸ்காட்லண்டு மிஷன் காலேஜில்
தமிழ்த்தலைமை உபாத்தியாயராகிய
புன்னை மாடபூசி ஸ்ரீநிவாசாசாரியர் மாணாக்கரும்,
திருவல்லிக்கேணி நாஷனல் ஹைஸ்கூல் தமிழ் உபாத்தியாயருமாகிய
செட்லூர் கிருஷ்ணமாசாரியரியற்றியது.

காண்டாவனமெரியுண்ணக் கண்ணியகண்ணன் கழலிணையன்பாலே
ஆண்டாளின்னருள் பூண்டாளப்பெயரான்றமக் கோதையிலக்ஷுமியாள்
சேண்டாவமரர்கள் செவிசாய்த்தினிதமர் செஞ்சொற்பாகவதச்சரிதை
ஈண்டோர்நாடகமாகச்செய்தன ளென்னையன்னவளன்பென்னே.

---

திருவல்லிக்கேணி - ஆங்க்லோ வெர்நாக்யுலர் பிரைமரிஸ்கூல்
உபாத்தியாயர்
க. இராஜகோபாலபிள்ளையவர்களா லியற்றப்பட்ட
அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

கலியுகத்தில்வளாயீதிற் றீபமெனக்கற்றோர்காண
பொலிவுபெறக்குன்றேத்தான் காதையோர்புதுமையாக
மலிவுறுசொற்சுவைசேர லட்சுமியிம்மாநிலத்தே
வலிமைதரச்செய்தளித்தாள் கொண்டெண்மீர் வகையாய்த்தானே.

---

பழையகாலேஜ் தமிழ்ப்பண்டிதர்
புதுவை - நயநப்பமுதலியாரவர்களது கனிஷ்டகுமாரராகிய
சடகோபமுதலியாரவர்களா லியற்றப்பட்ட
நேரிசைவெண்பா.

கண்ணன்றிருச்சரிதை காதாரக்கேட்டுமிக
வண்ணமாய்ப் பல்லிசையாய் மண்ணுலகிற் - பண்ணினள்
பாகவதநாடகத்தைப் பாரிலக்ஷுமியின்
பாகவதனாடகத்தின் பண்பு.

---

ஸ்ரீ


ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# சோதனைபத்திரம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௩ | ௩ | எத்தனை ... | எத்துனை |
| ௪ | ௮ | ஸ்ரீவாச ... | ஸ்ரீநிவாச |
| ௪௮ | ௩௫ | மினுக்கவேவிட்டு ... | மினுக்கவிட்டு |
| ௮௫ | ௩௧ | நிறந்தோனே ... | நிறைந்தோனே |
| ௯௫ | ௨௫ | மதரதகைப் ... | மதரத்தைப் |
| ௱௰ | ௨௩ | கருணைமாற்ற ... | கருத்தினைமாற்ற |
| ௱௪௯ | ௰௧ | ளேஞேயினி ... | ளேஞேவினி |
| ௱௫௧ | ௬ | யெல்லாருவொருங்கு ... | யெல்லாருமொருங்கு |
| ௱௫௪ | ௩௧ | தாசரரதிகள் .. | தாசரதிகள் |
| ௱௬௰ | ௰௬ | வரராமை ... | வாராமை |
| ௱௬௨ | ௨௮ | பக்ஷணஞ்செய்தல் ... | கோபாலர் பயப்படுதல் |
| ௱௯௭ | ௨௮ | எடுத்தல் ... | எடுத்தபெருமை |
| ௨௱௫ | ௩௫ | கரிதி ... | கருதி |
| ௨௧௨ | ௧ | வடுத்தவருக் ... | விடுத்தெவருக் |
| ௨௩௧ | ௩௰ | திருந்தாலு ... | திரிந்தாலு |
| ௨௩௮ | ௫ | யேந்துந்தாளன் ... | யேந்துந்தோளன் |
| ௨௪௩ | ௰௩ | ஞானங்காட்டுறான் ... | ஞாயங்காட்டுறான் |
| ,, | ௩௩ | தவிசிதிருப்பது ... | தவித்திருப்பது |
| ௨௪௪ | ௨௫ | துணைதவா ... | துணைத்தவா |
| ௨௪௮ | ௮ | தாகந்த ... | தானந்த |
| ,, | ௩௰ | அறுபலிலவி ... | அறுபல்லவி |
| ,, | ௩௧ | கூடிடியே் ... | கூடியே |
| ,, | ௩௨ | நாயே ... | நாடியே |
| ௨௫௫ | ௨௪ | முகத்தானை ... | இடையானை |
| ௨௫௮ | ௬ | புனிதனிங்கூட ... | புனிதனுங்கூட |
| ௨௬௰ | ௰௮ | விருத்தாதங் ... | விருத்தாந்தங் |
| ௨௯௧ | ௯ | போகுறு ... | போகிறு |
| ௨௯௪ | ௰௧ | ரூபனே ... | ரூபனே |
| ௨௯௫ | ௨௬ | ஏற்றிங்வதி ... | ஏற்றிவந்தி |
| ௨௯௬ | ௰௪ | கொடுத்தேனே ... | கொடுத்தோனே |
| ௩௱௯ | ௨ | மாலைசத்தி ... | மாலைசாத்தி |
| ௩௧௫ | ௨௮ | சகுணத் ... | சகுனத் |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| | | ரு.க ... | ரு.கக |
| | | ரு.உ ... | ரு.கஉ |
| | | ரூரு ... | ரு.கரு |
| | | ரு.ச ... | ரு.கச |
| | | ரு.ரு ... | ரு.கரு |
| | | ரு.சு ... | ரு.கசு |
| | | ரு.எ ... | ரு.கஎ |
| | | ரு.அ ... | ரு.கஅ |
| | | ரு.கூ ... | ரு.ககூ |
| கூசம | மஅ | கண்ணனுக்கு ... | கண்ணனுக்கும் அண்ணனுக்[கும் |
| கூசரு | கூக | யெனக்களிக்க ... | தனக்களிக்க |
| கூருய | எ | பூரணம் ... | பூரணன் |
| கூகூசு | அ | வடிவால ... | வடிவாள |
| கூகூஎ | கூ | வாளைதனிற் ... | வளை தனிற் |
| சாம | மகூ | தரணியிற்தன் ... | தரணியிற்றன் |
| சகஎ | கூ | யுரியில் ... | புரியில் |
| சகஎ | உக | இணையிலா ... | இணையிலா |
| சகஅ | உரு | நிரைதனை ... | நிரைதனை |
| சரூரு | உஎ | ககூியாபய் ... | ககூியாய் |
| சரூச | ரு | காற்புரமு ... | காற்புறமு |
| சரூசு | கரு | தற்த ... | தித்த |
| சரூஎ | உஎ | புரா ... | புரு |
| சரூசு | உஎ | தங்கிட்டனரோ ... | தங்கிவிட்டனரோ |
| சரூகூ | மகூ | யுமக்கென்ன ... | வுமக்கென்ன |
| சசம | ரூரு | மெக்சி ... | மெச்சி |
| சசச | உம | மண்டினார்-அண்டினாரோ ... | மண்டினான் - அண்டினானே |
| சசுய | மசு | துஷ்டத்தனம் ஓதடா ... | துஷ்டத்தனம் ஏதடா |
| ,, | மஎ | கிருபையாளனே ஏதடா ... | கிருபையாளனே ஓதடா |

ஸ்ரீ



ஆதிமூலந்துணை.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

இதிகாசமாகிய

# ஸ்ரீமகாபாகவத தசமஸ்கந்த நாடகம்.

## சுகமுனிவர் தோத்திரம்.

விருத்தம்.

சுகமுனிவன் பரிக்ஷித்து வேந்தனுக்குச்
சொன்னபெருங் காவியத்தில் தசமஸ்கந்தம்
இகமதிலே கேட்பவருக் கினிமையாக
எற்றதிரு நாடகமாச் செய்யவெண்ணித்
தக்கில்லா அம்முனியை வணங்கிநித்தம்
தப்பாமற் படித்தவர்கள் வினைகள்தீரச்
சகமதிலே யென்றனுக்கும் அருளளிக்கச்
சாற்றுவே னிதைவிளக்கப் போற்றுவேனே. (க)

## ஆண்டாள் தோத்திரம்.

விருத்தம்.

ஜகமதிலெவரும்போற்ற க்ஷீரத்தில்துயிலுநாதன்
அகமதிலமருமென்றன் ஆண்டாளின்அடியைப்போற்றி
இகமதில்தசமஸ்கந்த நாடகமிதனைக்கொண்டு
சுகமுனியுரைத்தவாறு சொல்லவேயருள்செய்வாயே. (உ)

இராகம் - பிலகரி - ஆதிதாளம்.

பல்லவி.

கோதையேநின்னடிபணிந்தேன் - மனமகிழ்ந்தேன்
கூடியேயரங்கனுடன் ஆடுமென்னரியதாயே.

சரணங்கள்.

| | | |
|---|---|---|
| ௧. வேதவேதாந்தங்களுக்கோர் | ஆதாரமாகவேஎண்ணி | |
| மேதினியிற்பாசபந்த | விலங்கைவிடுத்துநண்ணி | |
| கீதங்களாற்பற்பல | விநோதமாய்த்துதிகள்பண்ணி | |
| கேசவனிடத்திலன்பு | கிட்டிவாழ்ந்திடுஞ்சேற்கண்ணி | (கோ) |
| ௨. மண்ணுலகுதன்னில்வாழும் | எண்ணிலாவுயிர்களுக்கு | |
| மாதாவாகவேயுதித்த | ஜோதிவடிவேயெனக்கு | |
| துன்னும்இருவினைகளைத் | தொலைத்தாட்கொண்டிடதிக்கு | |
| தோகையேநீயன்றியிலை | தூண்டுவாய்நின்றதனுக்கு | (கோ) |
| ௩. தஞ்சம்என்றுனையடைந்த | தாசாநுதாசனைநோக்கி | |
| தாரணியில்வரும்பஞ்ச | மாபாதகங்களைநீக்கி | |
| நெஞ்சினில்நினைத்தவரம் | தந்திடத்தருணம்தேக்கி | |
| நின்றநெடுமாலடிக்கண் | நீயுரையெனைக்கண்ணோக்கி | (கோ) |
| ௪. காகஞ்செய்பிழைபொறுத்த | காகுத்தனேயருள்வாரி | |
| கண்ணனாகவந்துதுதி | யரங்கமன்றருடபாரி | |
| சோகமுறுசேதனர்க்குச் | சொந்தமாம்புருஷாகாரி | |
| ஜோதிநெடுமாலடியில் | சொல்வாயென்பொருட்டுதாரி | (கோ) |

## நம்மாழ்வார் தோத்திரம்.

வெண்பா.

கண்ணன் திருச்சரிதைக் காசினியில் யான்பாட
எண்ணினே னென்னெண்ண மீடேற - நண்ணும்
பேரும் புகழ்சேர் பெரியநம் மாழ்வாரோ
காருந் தொழுமென்னைக் கண்டு. (௩)

இராகம் - நாட்டை - சாபுதாளம்.

பல்லவி.

சடகோபாசரணம்.

சரணங்கள்.

| | |
|---|---|
| ௧. சடகோபமுனியேநின்னிரு | சரணாரவிந்தந்தன்னை |
| அடியேனம்பினேனம்பினேனுளும்ஆட்கொள்வாயருளோடென்னை (சட) | |
| ௨. மதுரகவியாழ்வாருக்கோமுனம் | மர்மமுணாத்தருள்தீபனே |
| எதுகுலேசன்றன்அம்சமாய்வந்து | இலங்குந்திவ்யசொரூபனே (சட) |
| ௩. வேதமதைத்தமிழாகவுலகினில் | விளம்புங்குருகூர்நாதனே |
| நாதமுனிக்கதைபேதமின்றியே | நவில்விசித்ரபோதனே (சட) |



| | |
|---|---|
| ௪. நங்கைதிருவயிற்றுதித்தபாலனே | ஞானபாஸ்கரதேஜனே |
| வெங்கலியுங்கெடவந்துதித்திடும் | விமலமதிமுகராஜனே (சட) |
| ௫. மகிழ்தண்மாலைகள்மணம்எறிந்திட | மார்பிலணிந்திடுகோத்ரனே |
| ஜகத்தில்வாழ்வுறுசேதனர்க்குச் | ஜனனந்தீர்த்தருள்நேத்ரனே (சட) |
| குருகைவளர்நகர்தன்னிலன்பர்கள் | கூறும்வகுளாபரணனே |
| பொருவிலாஸ்ரீநிவாசாசாரியர் | போற்றுமந்தக்காரணனே (சட) |

## ஸ்ரீமந்நாதமுனிகள் தோத்திரம்.

வெண்பா.

ஓதிவரும்பாகவதம் ஓங்குலகில்யான்சொல்ல
நீதியுள்ளநாதமுனி நித்தியனே - சோதிவடி
வானசடகோப மாமுனியையாசரித்த
ஞானமதியோனே நவில். (௪)

இராகம் - காம்போதி - சாபுதாளம்.

பல்லவி.

நாதமுனியேயுன்றன் பாதமலரைச்சிராய்
நம்பினஎன்றனைக் கண்பாராய்.

அநுபல்லவி.

வேதந்தமிழ்சட கோபமுனியைநிதம்
விட்டுவிடாமல்நெஞ்சில்
வேண்டிக்கொண் டாடியோனும் (நாத)

சரணங்கள்.

| | | |
|---|---|---|
| கண்ணினுண் சிறுத்தாம்பைப் | பன்னீராயிரமுரு | |
| கானஞ்செயுமதுர | கவிக்குகந்துமுன்வரு | |
| விண்ணோர்புகழுமாறன் | விருப்பமுடனேதரு | |
| வேதவேதாந்தம்பெற்ற | விமலனும்உயர்குரு | (நாத) |
| உய்யக்கொண்டார்மணக் | கால்நம்பிமுதலந்த | |
| உத்தமர்தமக்கெல்லாந் | தத்துவமுறைதந்த | |
| அய்யனேவெயிலிடை | யழுங்கும்புழுபோல்வந்த | |
| அடியேன்வெம்பவத்தினில் | அமிழ்ந்தேனெனதுசொந்த | (நாத) |
| ௩. புக்ககந்தன்னில்சென்ற | மைக்கண்மங்கையரென்ன | |
| பூதலந்தனிலந்த | ஸ்ரீதரன் அருள்துன்ன | |
| மிக்கதலங்கள்தோறும் | மேவித்தொழுதுபன்ன | |
| வித்தகனேயுன்றன் | விரும்புங்கருணைமன்ன | (நாத) |

௪. நாளிலந்தனில்கொடி நாட்டியரசுபாவும்
நம்வெங்கலியைத்தீர்க்க நாரணநகர்மேவும்
சீநிவாசாசாரியர் திருவடிமலர்தாவும்
சித்தம்என்மேல்வைத்துச் சீக்கிரம்எனைஎவும் (நாத)

---

## ஆசாரியர் தோத்திரம்.

விருத்தம்.

அல்லலதைஅறுத்தெம்மை யாளாய்க்கொண்ட
அஷ்டகுலாசலகோத்திர முதித்தமேலோன்
வல்லவராமணவாள மாமுனியுமெச்ச
வாழ்கின்றசந்ததியின் மரபுதன்னில்
நல்லநவநீதம்போ லுதித்தபுண்ணிய
நாரணபுரத்தில்வரு நன்மைவாய்ந்த
நல்லாஞ்சக்கிரவர்த்தி ஸ்ரீநிவாசாசாரியர்
நற்றாளைவணங்கிநா னியம்புவேனே. (௫)

இராகம் - கமாஸ் - ஏகதாளம்.

பல்லவி.

ஆசாரியன்திருவடிபணிவாம் - சதா
ஆசாரியன்திருவடிபணிவாம்.

அநுபல்லவி.

நேசித்தவனருளை நிலைபெறநெஞ்சே (ஆசாரியன்)

சரணங்கள்.

௧. மூலமந்திரமதை விளைத்தார்
முன்செய்தகர்ம வினைகளைக்களைத்தார்
மோக்ஷவழியிதென் றுரைத்தார்
மோகக்கடல்கடந்த யோகக்கடலடைந்த
போகமதைக்கடிந்த ஆகமத்தைத்தொடர்ந்த (ஆசா

௨. துவயவசனமதை நீட்டினர்
சோகமோகதாபதிரய மோட்டினர்
சொரூபநிலையிதென்று காட்டினர்
ஜோதியென்பதுகறும் நீதியென்பதுபெறும்
மேதினிதனிலுறும் ஆதிபவமுமறும் (ஆச

௩. சர்மசுலோகார்த்தம் விதித்தார்
தானென்றஅகங்கார மமதையைமிதித்தார்
தன்னடிஜோதியுட் குதித்தார்
தாசரிடமிருந்த ஆசையென்பதுவந்த
பாசமென்பதிகந்த காசினிதனிற்சொந்த (ஆச



பஞ்சசமஸ்காரம் செய்தார்
பாரில்ஸ்ரீசைல மந்திரம்பெய்தார்
பாவவினைகள்முற்றுங் கொய்தார்
பரமமந்திரநேச தருமரூபப்பிரகாச
நரமணிதருக்கீச வரமருள்ஸ்ரீநிவாச (ஆசா)

---

## அவையடக்கம்.

விருத்தம்.

எண்ணுதற்கும்எழுதுதற்கும் அரியகண்ணன்
இனியதிருக்காதைதனை யியம்பமண்மேல்
பெண்ணொருத்தியெழுத்தறியாள் பாடுமிந்தப்
பிழைபொறுத்தல்கற்றுணர்ந்தோர் கடமையன்றோ
நுண்ணெனவேபக்தியது சிரமேற்கொண்டு
துயரகலக்குளறுதலெப் படியாமென்றால்
கண்ணகன்றகானகத்து மயிலைக்கண்டு
களித்தாடும்வான்கோழி யொக்குமன்றே. (௬)

இராகம் - பிலகரி - ஆதிதாளம்.

பல்லவி.

கண்டுநான்எப்படிசொல்வேன் - கண்ணன்சரித்திரம்
கண்டுநான்எப்படிசொல்வேன்.

சரணங்கள்.

௧. கண்டுநான்எப்படிசொல்வேன் கண்ணனுருடையகீதை
மண்டலத்திலேசிறிதும் வாலறிவில்லாதபேதை (கண்டு)

௨. தட்டாரப்பூச்சிபறந்து பொட்டெனஆகாயஞ்சேர்ந்து
கிட்டியேபிரம்மபட்டத்தைக் கட்டிக்கொள்வேனென்றாற்போல (கண்)

௩. சிற்றெறும்புதானுமூர்ந்து க்ஷீரசாகரத்தைச்சார்ந்து
உற்றவோர்க்ஷணத்தில்வாயால் உறிந்திடுவேனென்றாற்போல (கண்டு)

௪. கொசுகதுகெர்வங்கொண்டு கொஞ்சமும்அறிவில்லாமல்
கஜேந்திரஆழ்வானென்ன கர்ஜனைசெய்வேனென்றாற்போல (கண்டு)

௫. ஊர்க்குருவியுச்சிதமாய் உயரந்தன்னிற்பறந்து
பார்க்கிறபேரெல்லோருக்கும் பட்சிராஜனெனென்றாற்போல (கண்டு)

௬. கற்பகற்பகாலந்தோறும் காசினியில்அவதாரம்
அற்புதமாய்ச்செய்யும்லட்சுமி அன்பன்கலியாணகுணம் (கண்டு)

வசனம்.

பரிக்ஷித்துமகாராஜன் சுகப்பிரம்மரிஷியைப் பணிந்து கண்ணபிரான் சரித்திரத்தைச் சொல்லும்படிக் கேட்குதல்.

விருத்தம்.

திருமருவுதிங்கள்மர பதனிற்சேர்ந்து
தெள்ளறிவேயுருவான பரீக்ஷித்திராஜன்
பெருமைபெறுபிரமரிஷி சுகனைப்பார்த்து
பிறவிதனக்கவுஷதம்போற் கிடைத்ததேவே
அருளுடனேயடியேற்குச் சந்தேகங்கள்
அத்துணையுமேதீர எதுகுலத்தில்
கருநிறமால்அவதரித்த கதையைச்சொல்லிக்
காட்டென்றான்ஆனந்தம் ஊட்டென்றானே. (ஏ)

இராகம் - கல்யாணி - சாபுதாளம்.

பல்லவி.

தெரிவிக்கவேண்டும் - சுகமுனியே
தெரிவிக்கவேண்டும்.

சரணங்கள்.

க. தெரிவிக்கவேண்டுமையா க்ஷீராப்திநாதன்கதை
மருவிக்கருத்தின்மிக மகிழ்ச்சியுண்டாகுமதை (தெரி)

உ. சிரசாயிரமுள்ள சேஷன்பூலோகந்தன்னில்
சிறுவனாய்தேவகிவயிற்றில் சிலநாள்வசித்தகதை (தெரி)

ங. அந்தச்சிசுவுக்கபாயம் ஆனதனுகாதபடி
வந்துரோகணிவயிற்றில் மைந்தனாய்ப்பிறந்தகதை (தெரி)

ச. பின்பந்தக்ஷீராப்திநாதன் பேதையசோதைவயிற்றில்
இன்பக்கண்ணனாகவந்து இகத்திற்பிறந்தகதை (தெரி)

ரு. மற்றும்பாடியில்கண்ணன் மாநிலச்சிசுவைப்போல
பெற்றதாய்மனையைவிட்டுப் பேர்ந்தொளித்துக்கொண்டகதை (தெரி)

சா. பந்துஎனவாயரோடு பாலப்பருவமுதல்
தந்திரமாய்க்கோகுலத்தில் தான்வளர்ந்துவந்தகதை (தெரி)

எ. வந்தாயர்பாடியிலும் வடமதுரையிலும்ஓடி
அந்ததிருவிளையாட்டங்கே அத்துணையுஞ்செய்தகதை (தெரி)

அ. பன்னும்யமுனைக்கரையில் பக்ஷமாகக்கோலெடுத்து
மன்னுந்திருக்குழலூதி மாடுகள்மேய்த்திட்டகதை (தெரி)

கூ. ஆசையுடனக்குலத்தில் ஆய்ச்சியரிடத்திற்கூடி
லேசமுமச்சமில்லாமல் லீலைகள்புரிந்தகதை (தெரி)



ய. பூதனைசகடாசுரன் பொல்லாததுஷ்டனாய்வந்த
மாதுலனுங்கஞ்சனுயிர் மாய்க்கும்லக்ஷ்மிநாதன்கதை (தெரி)

---

வசனம்.

அசுரர்கள் செய்யுந் தீவினையால் பூதேவி பூபாரஞ் சகிக்க முடியாமல் காமதேனுரூபமாய்ப் பிரமனிடத்திற்சென்று முறையிடுதலைச் சுகர் பரிக்ஷித்துக்குச் சொல்லுதல்.

விருத்தம்.

இகம்புகழும்பரிக்ஷித்து வேந்துவேண்டி
எம்பெருமானற்கதையை யியம்புமென்ன
மகம்பெருகுஞ்சுகமுனியு மனதுவந்து
மணிமார்பாகேட்டிடுவா யெனத்தொடங்கி
அகமுடையவசுரர்செயுங் கொடுமையாலே
அயனிடத்திற்பூதேவி ஆவர்ய்ச்சென்று
சுகமுறவேகுறையைமுறை யிட்டசேதி
சொல்லுவார்மனக்கவலை வெல்லுவாரே. (அ)

இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

பரீக்ஷித்தேநீர்கேளும் - நான்சொல்கிறேன்
பரீக்ஷித்தேநீர்கேளும்.

அநுபல்லவி.

பரிக்ஷித்தேநீர்கேளும் பகவானுடையகதை
அரைக்ஷணந்தரிக்காமல் அன்பாய்ச்சொல்கிறேனதை (பரீக்ஷித்)

சரணங்கள்.

க. பூதேவியும் நாடி - அசுரர்பாதை
பொறுக்காமல் தானோடி
காமதேனுருவாய் கமலனிடத்திற்சற்றும்
தாமதமில்லாமல் சாற்றினாள்குறைமுற்றும்(பரீக்ஷி)

உ. சாற்றுங்குறைகள் போத - அயனந்த
சங்கரன்பா லோத
ஊற்றமாயிந்திராதி தேவர்களொருமித்து
ஏற்றகாரியமொன்று எண்ணினார்யோசித்து(பரீக்ஷி)

ங. எண்ணியபடி மன்னும் - க்ஷீராப்திக்கு
ஏகியேமால் முன்னம்
நண்ணிமுறையமிட்டு நன்றாகவேபத்தி
பண்ணித்துதிகள்செய்தார் பயனுண்டாகநத்தி(பரீக்ஷி)

தேவர்களெல்லாங் கூடி - ஸ்ரீதரனை
தேடியங்கே யோடி
பாவியரக்கர்செய்யும் பாதைகளைவிண்டு
ஆவியழிப்பீர்சென்று அருள்லட்சுமிநாதாகண்டு(பரிக்ஷி)

---

வசனம்.

தேவர்களெல்லோருமொன்றாய்ச்சேர்ந்து க்ஷீராப்தியில் சயனித்திருக்கும் ஸ்ரீமந்நாராயணனைத் தோத்தரித்தல்.

விருத்தம்.

முறையிட்டபூதேவி தன்துயரநீங்க
மூதமரரெல்லோருமொன்றுகூடி
உறையிட்டபாற்கடற்க ணோடிச்சென்றே
உலகளந்தநெடுமாலை யடிபணிந்து
கறைபட்டவசுரர்செயும் பாதையிந்தக்
காசினியிலினிபொறுக்க முடியாதென்று
சிறைபட்டமிகநொந்து வந்தோமென்னச்
சிந்தித்தாரவரடியை வந்தித்தாரே. (௩)

இராகம் - முகாரி - சாபுதாளம்.

கண்ணிகள்.

க. க்ஷீரசாகராவுன்றன் திருவடிமலர்களைத் தேடிவந்தோம் லோகநாதா
ஆரும்ஆதரவில்லை அய்யாவுன்னைத்தவிர ஆபத்பாந்தவா லோகநாதா
உ. பாரிலிருக்கவொட்டாம லசுரர்ஜனப் படுத்துகிறார் லோகநாதா
காருமெங்களையினி கார்மேகவண்ணனே கருணாநிதியே லோகநாதா
௩. பாரும்பாருமெங்கள் பத்மநயனனே பரமபுருஷா லோகநாதா
தீருந்தீருமெங்கள் துவேஷிகள்செய்திமை தீனரக்ஷகா லோகநாதா
௪. தாருந்தாரும்வரம் தாமசஞ்செய்யாமல் தாமோதரா லோகநாதா
சேரும்லட்சுமிநாதா சிந்தைவைத்தருளுவாய் ஸ்ரீதரனே லோகநாதா

---

வசனம்.

பிரமன் தோத்தரித்தல்.

விருத்தம்.

இச்சையுடனிவ்வாறு போற்றத்தேவர்
எழில்பெருகும்அயனுடனே எழுந்துநின்று
பச்சைவண்ணநின்தருளால் பாருமையா
பரந்தாமாவுசிதமலர்த் தாளாயெம்மை



நிச்சயமாயிரக்ஷிக்கத் தயவுசெய்ய
நீணிலத்தில்வேறுண்டோ நீலமேகா
எச்சகமுங்குக்ஷியிலே வைத்தமாயா
எடுஎன்றுன்கமலக்கை கொடுஎன்றானே. (௪)

இராகம் - புன்னாகவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

உம்மைநம்பினோமாதவா - உரகசயன
உம்மைநம்பினோமாதவா.

அநுபல்லவி.

உம்மைநம்பினோமினி உண்மையாய்நிர்மனம்
சம்மதித்துக்கேளும் சாற்றுவதைத்தினம் (உம்மை)

சரணங்கள்.

க. பாற்கடற்பதி வாரும் - மையினி
பட்சமுடனே காரும்
தீராக்குறையைத் தீரும் - பூதேவியைத்
திருவருளால் பாரும்
தேவாதிதேவா ஸ்ரீதேவிபோகா
போகாஎங்களையாளும் பூதயாளாகேளும் (உம்மை)

உ. அண்டர்தொழும் வரனே - ஆழிசங்கம்
அணிந்தநெடுங் கரனே
கண்டகவுத்துப பரனே - மகரமணி
கனககுண்டல தரனே
காரும்காரும் கவலைதீரும்
திருமெங்களையாளும் தீனரக்ஷகாகேளும் (உம்மை)

௩. அட்டாக்ஷரப் பொருளே - அனந்தன்மேல்
அருந்துயில்செய்தெருளே
மட்டில்லாத அருளே - கருணைசெய்து
மாய்த்திடு மெம்மருளே
வாரும்வாரும் வரங்கள்தாரும்
தாரும்எங்களையாளும் தாமோதரனேகேளும் (உம்மை)

௪. மோகினி ரூபத்தோனே - அரன்தன்னை
முன்னின்று காத்தோனே
போகலட்சுமி நாதனே - புவிதன்னில்
புனிதர்போற்றும்வேதனே
பாரும்பாரும் இப்போவாரும்
வாரும்எங்களையாளும் வாமனனேகேளும். (உம்மை)

திருமாலைச்சந்தம்.

பூவிலெங்களைப்புடைத்த பூரணவசுரனொன்னும்
பாவிகள்கொடுமையாலே பயணமாய்வந்தோமையா
ஆவியேயமுதேயெங்க ளப்பனேயாதிமூலா
மேவியகுறைகள்தீர்த்தே மேலவாஎம்மைக்காவாய். (௧)

எந்தையேயிருடிகேசா எம்முறையாவுங்கேட்டு
வந்ததோர்காரியத்தை மாயனேபூர்த்திசெய்வாய்
உந்தனையன்றிவேறே யொருவராலாகுமோதான்
வந்தனந்தந்தோமெங்கள் மாதவாஎம்மைக்காவாய். (௨)

தேவர்க்குந்தேவனான திகழ்பரம்பொருளேயந்த
மூவர்க்குமுதல்வனான மூர்த்தியேகருணைசெய்து
கோபிக்கவேண்டாமெங்கள் குறைகளைமுற்றுந்தீர்க்க
சேவித்துக்கொண்டோமின்று ஸ்ரீதராஎம்மைக்காவாய். (௩)

வசனம்.

அசரீரி சொன்னபடிப் பிரமன் தேவர்களுக்குரைத்தல்.

விருத்தம்.

துதியயனிந்திராதியர்க ளிந்தவாறு
தூயகுணநித்தியனைப் போற்றிச்செய்ய
அதிவிரைவாய்க்ககனத்தில் அந்தரியாமி
அசரீரியர்யுரைத்த வசனங்கேட்டுக்
கதியடைந்தோமினியொன்றுங் கவலையில்லை
கர்த்தனேயசுரர்பகை தீர்க்கவெண்ணி
மதியுள்ளவசுதேவர் மைந்தனாக
மாறுவானெனப்பிரமன் கூறுவானே. (௰௧)

இராகம் - மோகனம் - அடதாளம்.

பல்லவி.

வருகுவார்கேளும் - வானவர்களே
வருகுவார்கேளும்.

சரணங்கள்.

௧. வருகுவார்வருகுவார் வாதிகள்பயம்போக
வசுதேவதேவகி வயிற்றில்மைந்தனாக (வருகு)

௨. அஞ்சாதீர்அஞ்சாதீர் அவனியில்காத்திட
கொஞ்சநாளில்நமது குறைகளைத்தீர்த்திட (வருகு)

௩. பயமில்லைபயமில்லை பகைவராலேயினி
நயமாகவாழலாம் நம்புவீரிதைநனி (வருகு)

௪. சத்தியம்சத்தியம் சாற்றுவதைநீரும்
நித்தியானந்தனை நேராய்க்காணலாம்சேரும். (வருகு)



மங்களம்பாடுதல்.

விருத்தம்.

அயனிந்தவாறோத அவடம்விட்டு
அவரவர்கள்பதிக்கேகிப் போனபின்பு
தயவுடனே துளவணிந்த மாயன்நோக்கி
தானுமவர்மனக்கருத்தை முடிப்பதாக
நயம்பெறவேநாரணனும் மதுரைதன்னில்
நற்றேவகிவயிற்றி லமரவெண்ணும்
பயமகற்றுநாதனது குணத்தைச்சொல்லிப்
பாடுவோம்மங்களங்கொண் டாடுவோமே. (௰௨)

இராகம் - பந்துவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

மங்களம் மங்களம் மங்களம் - ஸ்ரீகண்ணனுக்கு
மங்களம் மங்களம் மங்களம்.

சரணங்கள்.

௧. மங்களம்ஸ்ரீகண்ணனுக்கு மரகதவண்ணனுக்கு
எங்கள்குலத்தண்ணனுக்கு எழில்புஜத்திண்ணனுக்கு (மங்க)

௨. அண்டர்தொழும்பாதனுக்கு ஆயர்குலநாதனுக்கு
பண்டமர்விநோதனுக்கு பாண்டவர்கற்றூதனுக்கு (மங்க)

௩. குன்றெடுத்ததுய்யனுக்கு குற்றமற்றமெய்யனுக்கு
கன்றெறிந்தகையனுக்கு காத்தருளுமய்யனுக்கு (மங்க)

௪. வசுதேவன்சேயனுக்கு வரமருள்வாயனுக்கு
பசுமேய்த்தஆயனுக்கு பாமைலக்ஷ்மிநேயனுக்கு. (மங்க)

வசனம்.

இராஜாதிராஜனாகிய உக்கிரசேனமகாராஜன் வடமதுரையில் அரசுசெலுத்திவருநாளையில் தன் புத்திரி தேவகிதேவியை வசுதேவருக்குத் திருமணஞ்செய்தல்.

———:0:———

விருத்தம்.

வடமதுரையாளுமுக்ர சேனராஜன்
வடிவழகித்தேவகிதன் மணமுடிக்க
அடலமைச்சர்தம்முடனே யாலோசித்து
அவனியரசரையெல்லாம் வரவழைத்து
திடவசுதேவர்க்களிக்க நிச்சயித்து
திருமாளிகைமுதல் அலங்கரித்து
பட்டமதிகமானபந்தற் றனிற்கல்யாணம்
பண்ணினான்க்ஷேமங்கள் எண்ணினானே. (௰௩).

இராகம் - ஸ்ரீராகம் - அடதாளம்.

பல்லவி.

கலியாணமதுசெய்தாரோ - தேவகிக்கு
கலியாணமதுசெய்தாரோ.

அநுபல்லவி.

கலியாணஞ்செய்தாரே காசினியோர்பன்ன
கடுகுமுனீந்திரர் களித்து அங்கேதுன்ன
மலிவாகவேதியர் மகிழ்ந்தாசிகூரச்சொன்ன
வடிவானவசுதேவர் மணவாளனுய்மன்ன (கலியாண)

சரணங்கள்.

௧. நிச்சயதாம்பூலம் எடுத்தார் - சபைதன்னில்
மெச்சியேசுபவாக்கு படித்தார் - திருமணம்
உச்சிதமாய்ச்செய்ய அடுத்தார் - வசுதேவற்கு
இச்சையாய்ப்புத்திரியைக் கொடுத்தார் - திருநாளில்
இங்கிதமாகவே யிருவர்க்குநீராட்டி
எற்றஎழிலாடை யாபரணம்பூட்டி
மங்களவாத்திய முழக்கங்களுநீட்டி
மாதுக்கிவரேசரி யென்றருகினில்கூட்டி (கலியா)

௨. வயமானவிருது பெருக்க - வசுதேவர்
மாவிரதநடந்து தரிக்க - பரதேசம்
பயணமாய்வீதிவந் திருக்க - உக்கிரசேனன்
பாவையைத்தருவேனென் றுரைக்க - தம்பதிகள்
பச்சைமலர்மாலை பாங்குடன்மாற்ற
பாடிமுறைப்படி பரிந்துசலாற்ற
மெச்சுமஷ்டகன்னி மார்களும்போற்ற
மேன்மேலுமணப்பாடல் விதம்விதமாய்ச்சாற்ற (கலியா)

௩. இன்பஹோமகுண்டம் வளர்க்க - புரோகிதர்
எற்றமந்திரஞ்சொல்லி விளக்க - தேவகியை
அன்பாகத்தாரைவார்த் தளிக்க - மங்கலியம்
அழகாகத்தரித்தாள் கண்களிக்க - விதிப்படி
ஆனந்தமானந்தம் ஆனந்தங்கூட
அம்மிமிதித்தருந் ததிகாட்டிநாட
வானத்தவர்வாழ்த்தி மலர்களைப்போட
மங்களார்த்தியேந்தி மாதர்களும்பாட (கலியா)

௪. பூரிதட்சணைகளுந் தந்தார் - வந்தவர்கள்
போஜனம்பண்ணி யுகந்தார் - நலங்கூசல்
தாரணிவியக்கப் புரிந்தார் - நாகவல்லி
தரமானவூர்கோலந் தெரிந்தார் - சேஷையிட்டு



தங்கையிட்டேருங் கஞ்சன்மகிழ்ச்சிதாவ
சதுரங்கசேனையும் சார்ந்தருகில்பாவ
மங்களஅட்சதை மாமுனிவருந்தூவ
வளநகராஞ்சூர சேனபுரியில்மேவ. (கலியா)

வசனம்.

திருக்கலியாண முடிந்தபின் சூரசேனபுரிக்கு வசுதேவரையும், தேவகியையும் இரதத்திலேற்றிக்கொண்டு செலுத்தும் கஞ்சனுக்கு ஆகாசவாணி சொல்லுதல்.

---

விருத்தம்.

இப்படியேகலியாண முடிந்தபின்னர்
எழில்சூரசேனபுரிக் கேகும்போது
அப்படியில்ஆகாச வாணிகண்டு
அதிமகிழ்வாய்ரதநடத்துங் கொடியகஞ்சா
மைப்படிந்தகுழலாள் தேவகிவயிற்றில்
மாயனெட்டாம்பேறாக வந்துதித்தே
எப்படியுமுனதுயிரை யழிப்பானென்றே
இரைந்திட்டாள்வானத்தில் மறைந்திட்டாளே. (௰௪)

இராகம் - ஆனந்தக்களிப்பு - ஆதிதாளம்.

பல்லவி.

வருவான்வருவான் கேளென்றாள் - அந்த
மாதவன்கண்ணனாக மாநிலந்தனில்.

சரணங்கள்.

௧. தேவகிமாது துய்ய - வயிற்றில்
செல்வனாகவேவந்து தோன்றிப்பைய
கோவத்துடனே நய்ய - உன்சிரம்
கொப்பெனக்கையது கொண்டுகொய்ய (வருவான்)

௨. அஷ்டம கர்ப்பமாக - கிருஷ்ண
அஷ்டமிரோகணியில் தோன்றிமோக
துஷ்டாவுன் றனைச்சாக - அடித்து
தொலைத்திடுவானிங்கு துன்பம்போக (வருவான்)

௩. கஞ்சாவுன்றனைப் போக்க - மேலும்
காசினியில்கடிந்தோ ரைத்தாக்க
தஞ்சமென்றோரைக் காக்க - இந்தத்
தாரணிபாரத்தை முற்றுநீக்க (வருவான்)

௪. வசுதேவனருள் பாலன் - உலகில்
வரலட்சுமிகண்டு மகிழ்சீலன்
சிசுபாலனும் ஞாலன் - அதி
தீயவர்தமக்கெல்லாங் குலகாலன். (வருவான்)

வசனம்.

ஆகாயவாணி யுரைத்ததைக்கேட்டுக் கஞ்சன் கோபங்கொண்டு தங்கையைவெட்ட நோக்க வசுதேவர் வேண்டாமென்று சமாதானஞ்சொல்லுதல்.

———:o:———

விருத்தம்.

கேளென்றுசொலிவானில் மறைந்தபின்பு
ஞயானமேயில்லாத பாபிகஞ்சன்
வாளெடுத்துவலதுகையி லேபிடித்து
மாதுதேவகிசிகையைப் பற்றியந்த
வேளையிலேதானோங்கி வெட்டநோக்க
வேந்தனும்வசுதேவன் மிகப்பயந்து
கோளதுவாம்ஸ்திரீயத்தி யெனமறுத்துக்
கூறுவார்நீதியுரைத் தாறுவாரே. (௰௫)

இராகம் - நீலாம்புரி - திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

௧. வெட்டாதேயுமெல்லியாளை மீண்டுவருவாளோநாளை
தட்டாதேயுமெந்தன்சொல்லை தையல்அபராதியல்ல

௨. ஸ்திரீயத்திதான்பொல்லாதென்று செப்புவார்கள்பாரில்நின்று
காயத்தையெடுத்ததாலே கருணைவேண்டுமுயிர்மேலே

௩. கூடப்பிறந்தவளென்று கொஞ்சமுமிலையோஇன்று
ஓடிப்பொருள்தேடக்கூடும் உடற்பிறப்புவருமோநாடும்

௪. தங்கையையெனக்குநீரோ தாரைவார்த்தளித்தீர்நேரோ
செங்கையிலேவாளைக்கொண்டே சேதிக்கவும்நீதியுண்டோ

௫. பெற்றசிசுகொண்டுவருவோம் பிசகாமலேகொல்லத்தருவோம்
உற்றவெங்கள்மீதிலேது ஒருபிழையுங்கிடையாது

௬. எப்படியவளைக்கொல்வீர் இன்னதென்றெனக்குச்சொல்வீர்
செப்புவதைக்கேளுமய்யா ஸ்திரீயைவிட்டுவிடுந்துய்யா

௭. ஜனனமிங்கெடுத்தபோதே சாவென்பதுவுந்தப்பாதே
தினமுஞ்சற்கருமஞ்செய்ய சிந்திக்கவேண்டுமுய்ய

௮. குடம்பைத்தனித்தொழிந்து குதித்தோடும்பக்ஷியிழிந்து
உடம்பைவிட்டுயிரும்போகும் உள்ளஞாயமிதுவாகும்

௯. மண்ணில்நாம்கண்டதோன்றும் மாநிலத்தில்நில்லாதென்றும்
எண்ணில்முந்தியேசாது எழுதியதைப்பார்த்தோது

௰. தேகத்தின்மேலபிமானம் தெரியாமல்வைப்பாரீனம்
போகத்தில்வைப்பதுநேசம் புவியிலதுமெத்தமோசம்



௰௧. தெய்வசங்கற்பமென்று தெரியவேண்டும்யாவுநன்று
உய்வதற்குமார்க்கங்கண்டு ஒழுகவேண்டுமெனங்கொண்டு

௰௨. மைத்துனனேயென்சொற்கேளும் வாய்மையாம்இதைக்கையாளும்
உத்தமியாம்லட்சுமிஜாலன் ஒருவனுண்டெவர்க்குமூலன்.

வசனம்.

"விதிவலிது" என்னும் பழமொழிப்படிக் கஞ்சன் ஆகாயத்தில் கேள்வியுற்றதை மறந்து யாவுந் தன்வசமாயிற்றென்று நினைத்துத் தேவகியை மன்னித்து அரண்மனைச்சேருதல்.

———:o:———

விருத்தம்.

வசுதேவர்சொன்னதினால் மனதிரங்கி
வஞ்சியதுகொலைதவிர்த்த வஞ்சகஞ்சன்
சிசுவினால்வதைநமக்கோ இல்லையென்று
சீராகஅரண்மனையிற் சேர்ந்துஅங்கே
அசுவமுதல்பரிசனைவோர்க் கீந்தபின்னர்
அவரவரைவிடுதிக்கே யனுப்பியாவும்
விசுவாசமாத்தனது வசமாச்சென்று
வியந்திட்டான்மனமகிழ்ந்தே நயந்திட்டானே. (௰௬)

இராகம் - மோகனம் - அடதாளம்.

கண்ணிகள்.

௧. கர்வமயக்கத்தில் சிறந்தான் - வாணி
ககனத்திற்சொன்னதை மறந்தான்
சர்வமும்ஸ்திரமாக நம்பினான் - கஞ்சன்
சர்ஜனர்களைமிக வெம்பினான்

௨. அரசர்தங்களையவ மதித்தான் - அவர்
அவனியெலாங்கைக்கொண் டெதிர்த்தான்
சரசவுத்தமர்களை நகைத்தான் - ஆதி
சர்ப்பசயனனைப் பகைத்தான்

௩. இந்திரன்முதலோரைக் கடிந்தான் - அவர்
இட்டசாபங்களி லிடிந்தான்
மந்தமதியினால் கோஷித்தான் - அந்த
மாதவனைமிக தூஷித்தான்

௪. சேனைபரிவாரந் தேடினான் - தானே
தெய்வமென்றுள்ளத்தில் நாடினான்
நாளிலநற்செயல் தடுத்தான் - லக்ஷ்மி
நாரணனார்பகை யடுத்தான்.

வசனம்.

தேவகி புத்திரன் உண்டாயிருத்தல்.

விருத்தம்.

மோகமொடுகர்வமிகு கஞ்சனர்த
முகுந்தன்வரவினைமறந்து முற்றுமற்ப
போகமதிலாழ்ந்துபூ வுலகுதன்னில்
பொல்லாதகொடுவினைகள் செய்துநிற்க
நாகரிகவசுதேவ ராஜனிஷ்ட
நாயகியாந்தேவகிசெய் நற்றவத்தில்
வாகானமதிமானை மைந்தனைக்
வகித்திட்டாள்கர்ப்பத்தில் சுகித்திட்டாளே. (௧௭)

இராகம் - ஸ்ரீராகம் - சாபுதாளம்.

பல்லவி.

புத்திரனுண்டாகினளே - தேவகிமாது
புத்திரனுண்டாகினளே.

அநுபல்லவி.

புத்திரனுண்டாகினளே உத்தமியாகியவந்த
பத்தினிதேவகிமாது நித்தியாநந்தம்பொருந்த (புத்திர)

சரணங்கள்.

௧. மாசங்களொன் றிரண்டு - மசக்கைகொண்டு
மதிமுகம்வெளுப்பு கண்டு
ஆசையாயையந்தாமாதம் அச்சுதமுந்தெளிக்க
வாசனைதரும்புஷ்ப மலர்முடித்துக்களிக்க (புத்திர)

௨. சீமந்தமணஞ் செய்து - சுபதினத்தில்
சீர்வரிசைகள் பெய்து
சேமதேவகிகோலம் நேர்த்தியாகமதிக்க
பூமியில்வழக்கம்போல் பூசுரராசீர்வதிக்க (புத்திர)

௩. பத்துத்திங்களும் பிறந்து - தேவகிமாது
பிரசவகாலமுஞ் சிறந்து
சத்துருக்களைஜெயிக்கும் சார்ங்கபாணிக்குமுந்த
புத்திரனைக்கீர்த்திமானை பொருந்தியுற்றளேவிந்தை. (புத்திர)

௪. பிறக்கும்பிள்ளைதனைக் கொண்டு - வசுதேவர்
பேதைகஞ்சன்முன்னே சென்று
சித்தம்எப்படியாமோ சேதிக்கும்படிகொடுக்க
கத்தும்அன்னைதந்தைசேர்ந்து கானிலத்திலேதுடிக்க. (புத்திர)

வசனம்.

பிறந்த குழந்தையை வசுதேவர் கஞ்சன்கையிற்கொடுத்து இஷ்டப்படிச் செய்யச்சொல்லுதல்.

---



விருத்தம்.

உத்தமியாந்தேவகிதன் திருவயிற்றில்
உதித்தநற்சிசுவையுமே யன்றுகொண்டு
மைத்துனனைக்கிட்டிவசு தேவரப்போ
மாநிலத்தையாள்கஞ்ச மன்னகேளும்
சத்துருவைச்சங்கரித்து வாழவெண்ணும்
சஞ்சலங்கள்தீருமென மனமகிழ்ந்தே
புத்திரனைத்தந்திட்டேன் கொல்லுமென்றே
போற்றினர்மனதையத் தூற்றினரோ. (௧௮)

இராகம் - முகாரி - அடதாளம்.

பல்லவி.

தந்துவிட்டேனையா - மைந்தனைக்கையில்
தந்துவிட்டேனையா.

அநுபல்லவி.

தந்துவிட்டேனையா தாமசங்கள்விண்டு
சிந்தைபடியேநீரும் செய்துகொள்வீர்தொண்டு (தந்துவி)

சரணங்கள்.

௧. தண்டனை செய்வீரோ - என்றுபயந்து
திந்தன னுய்வீரோ
மண்டலபூபதியே மைந்தனைக்கைக்கொள்ளும்
பண்டுபோலென்மீது பட்சந்தனையுள்ளும் (தந்து)

௨. சத்தியந் தப்பேனே - எவர்களென்ன
சாற்றினு மொப்பேனே
பத்தினியைவதை பண்ணவாளையெடுத்தீர்
சித்தமதைப்பெரிது செய்துதங்கையைவிடுத்தீர் (தந்து)

௩. திருமணஞ் செய்துமாது - ஊர்கோலமாய்த்
தேரேறிச் செலும்போது
அருவெறுப்புவார்த்தை அசரீரிதான்சொல்ல
பெருவிசனமெங்கள்மேல் பெறுவதுசரியல்ல (தந்து)

௪. அருமையாகவே யுற்ற - நாங்களிங்கு
அன்புடனே பெற்ற
மருமகனையுமக்கு வாதியாய்மதித்தீரோ
திருவுள்ளப்படிசெய்யத் தீரவிதித்தீரோ. (தந்து)

வசனம்.

கொடுத்த குழந்தையைக் கஞ்சன் வேண்டாமென வசுதேவரிடத்தில் மறுபடி கொடுத்தல்.

—:o:—

விருத்தம்.

தந்தொருபாலகனைக் கஞ்சன்பார்த்துத்
தவமுள்ளவசுதேவர் தம்மைநோக்கிச்
சிந்தனைகளிலேயிந்தப் பாலனாதி
சிசுவேழும்வதைசெய்யிற் பயனேயில்லை
தொந்தரைசெய்குழந்தையது எட்டாம்பேற்றைத்
துரிதமாய்நீர்கொண்டு வந்தென்கையில்
குந்தகமொன்றில்லாமற் கொல்வதற்குக்
கொடுத்திடீரென்மரணந் தடுத்திடீரோ. (௰௯)

இராகம் - அபுரூபம் - ஆதிதாளம்.

பல்லவி.

வேண்டாமிந்தப்பாலகன் - என்றனுக்கு
வேண்டாமிந்தப்பாலகன்.

அநுபல்லவி.

வேண்டாமிந்தப்பாலகன் மேதினியிலென்னைத்
தீண்டாவெடுத்துச்செல்லுந் தீவிரமாய்முன்னை (வேண்)

சரணங்கள்.

௧. ஏழுபாலகன் சீராய் - பிழைக்கட்டும்
எட்டாஞ்சிசுவைத் தாராய்
தாழவிடாதுமேலே போட்டுவாட்கிரையிட்டு
வாழுவேனுலகினில் மனபயமேவிட்டு (வேண்)

௨. ஈடில்லாபாலர் தம்மை - கொல்வதினால்
என்னசிலாக்கிய மிம்மை
கேடுசெய் அஷ்டம புத்திரனைக்கொன்று
நாடுதனிற்பெயர் பெற்றிடுவேன்நன்று (வேண்)

௩. தேவகியாள் மடியில் - மைந்தனைக்கொண்டு
சேர்த்திடுவீர் நொடியில்
பாவமாகுமிந்த பாலனைக்கொல்லுதல்
ஆவலுடனேகேளும் அறிந்துநான்சொல்லுதல் (வேண்)

௪. நிச்சயமாய்ப் பன்னும் - வார்த்தைகளை
உச்சிதமா யுன்னும்
பட்சமாய்பாலனை எடுத்துக்கொண்டுநீரும்
இட்சணம்தேவகி யிருக்குமிடத்தில்சேரும் (வேண்)

வசனம்.

நாரதர்வந்து கஞ்சனைக் கலைத்தல்.

——:0:——



விருத்தம்.

இந்தவிதமாய்க்கஞ்சன் சொன்னபின்பு
இன்பமாய்வசுதேவர் சிசுவைக்கொண்டு
சொந்தமுள்ள அரண்மனையிற் சேர்ந்தாரப்பால்
சொகுசாகநாரதரும் அறிவாற்கண்டு
விந்தைமிகுகாரியத்தைப் பூலோகத்தில்
விளைவாகத்தானுரைக்க வேண்டுமென்று
சிந்தைமிகுவஞ்சகனைக் காணவென்றே
சேர்ந்திட்டார்அவன்கொலுவில் நேர்ந்திட்டாரே. (௨௰)

இராகம் - மத்தியமாவதி - சாபுதாளம்.

பல்லவி.

வந்தார்வந்தார் - நாரதர் - வந்தார்வந்தார்.

சரணங்கள்.

௧. சடையின்முடியுங் கரகமண்டலமுஞ் - சார்ந்துகஞ்சனைநாடியே
அடையுமிசைகனவீணை மீட்டியே
அருமுனிவந்து தோன்றினார்
அருள்தருமுனிவந்து தோன்றினார் (வந்தார்)

௨. நாரணன்பக்தசின்னந்தரித்து - நாமம்வதனத்தில்தீட்டியே
காரணக்குருவாகவே யிங்கு
கானமுனிவந்து தோன்றினார்
உயர்ஞானமுனிவந்து தோன்றினார் (வந்தார்)

௩. தண்துளபமணமாலையுடனே - தாமரைத்தாரணிந்துமே
குண்டலங்களுங் காதிலிலங்க
கோலமுனிவந்து தோன்றினார்
மிகுசீலமுனிவந்து தோன்றினார் (வந்தார்)

௪. வானிலுரைத்தவாக்கைநினைந்து - வஞ்சகஞ்சனைத்தேடியே
பேணிலட்சுமி நாதனைப்பாடி
பெருமுனிவந்து தோன்றினார்
மாதவமுனிவந்து தோன்றினார். (வந்தார்)

வசனம்.

வந்தநாரதமுனிவரைக் கஞ்சன் வந்தகாரியம் சொல்லும்படிக் கேட்குதல்.

---

விருத்தம்.

வந்ததிருநாரதரைக் கஞ்சன்கண்டு
வணங்கியேவலம்வந்து அடிபணிந்து
சிந்தையுடனாசனத்தி லமரச்செய்து
க்ஷேமமுதலாவினவி யுபசரித்து

சொந்தமாம்பந்தமற்ற முனியேசொல்வீர்
துரிதமாய்வடமதுரை சேரவந்த
எந்தனிடபாக்கியந்தான் ஏதோவென்று
ஏற்றுவானவரடியைப் போற்றுவானே. (உக)

இராகம் - நாட்டை - சாபுதாளம்.

(கஞ்சன்சொல்லுதல்) பல்லவி.

இங்குவந்தகாரணஞ்சொல்லும் - நாரதரேநீர்
இங்குவந்தகாரணஞ்சொல்லும்.

அநுபல்லவி.

இங்குவந்தநாரதரே யேற்றசிம்மாசனமீதும்
மங்களமாய்வீற்றிருந்து வந்தகாரியத்தையோதும் (இங்கு)

(நாரதர்சொல்லுதல்) பல்லவி.

வந்தகாரணமிதுவே - கஞ்சராஜனே
வந்தகாரணமிதுவே.

சரணங்கள். (நாரதர்சொல்லுதல்)

க. வந்தவென்காரணத்தை வகைவகையாகத்தானே
சிந்தைமகிழ்ந்துகேளும் செல்வமிகுந்தகோனே
சொந்தமாயொருபேச்சு சொல்லுகிறேன்யானே
விந்தையாம்பாலனெந்த வேளையிலென்செய்வானே
கடுகியவசரப் பட்டீரோ - வசுதேவர்கையில்
பிடியுமென்றுகொடுத் திட்டீரோ - நாளைப்பொல்லாங்கு
படுவதறியாது விட்டீரோ - மகாவிஷ்ணுவை
அடுக்காமலருள் கெட்டீரோ - மன்னவுன்னிலும்
அட்டியின்றிபலசாலி யானுலப்போதென்னசெய்வீர்
கிட்டியவச்சிசுவைக் கொல்லாமலெப்படிபெய்வீர்
தட்டிநின்முடியைவாளால் தறித்தாலெவ்விதமுய்வீர்
மட்டியாகவிருக்காமல் மந்தமிதனைக்கொய்வீர்
தப்பிப்பிழையும்
இஷ்டருக் கருள்தருவன்
எழில்மத னிலுமுருவன்
துஷ்டரைக்கொல்லச் சிறுவன்
துரிதமாயிங்கே வருவன் (வந்தகாரண)

சரணங்கள். (கஞ்சன்சொல்லுதல்)

க. மட்டில்லாவடமதுரை மாநகர்தனிலேவல்ல
இட்டமந்திரிகளில்லை யென்றனுக்குரைக்கமெல்ல
பட்டணத்தில்வந்துநீரோ பயமென்னைவிட்டுச்செல்ல
சட்டமாயெனக்குச்சொன்னீர் சங்கதியெடுத்துநல்ல



சந்தோஷமாக மகிழ்ந்தேன் - எந்தனுடைய
சிந்தைகவலை நெகிழ்ந்தேன் - மாமுனியேநீர்
வந்ததற்காகப் புகழ்ந்தேன் - வாதிகள்தரும்
அந்தவிபவத்தை யிகழ்ந்தேன் - அந்தரத்திலே
அசரீரியுரைத்ததோர் அச்சொற்கள்செவியடுத்தேன்
விசையாய்வாளையுருவி வீசிக்கையிலெடுத்தேன்
கசறித்தேவகிஜடை கையிற்சுருவிப்பிடித்தேன்
வசுதேவர்சொன்னவுடன் மாதுகொலைவிடுத்தேன்
மனதிரங்கி
வல்லவனுண்டே யென்போலே
மாநிலத்தி லொருக்காலே
புல்லவனு மென்றன்மேலே
போர்செய்வானோ சினத்தாலே (இங்குவந்த)

(நாரதர் சொல்லுதல்.)

உ. வடமதுராபுரியின் மன்னவாவுன்றனைத்தேடி
தடையின்றிசேதிசொல்லத் தமதுசமுகத்தைநாடி
திடமாகத்தெய்வலோகத் தேயிருந்துவந்தேனோடி
இடைச்சேரிதனிலந்த இமையவரெல்லாருங்கூடி
இனியஆய்ச்சியர்க ளென்ன - கோரியபடி
கனியெவாடு பிறந்துமன்ன - தலைவனாக
தனிகன்நந்தன் அவர்க்குத்துன்ன - காரணமுண்டு
முனிவிலாது நான்சொன்ன - வார்த்தைநம்பும்
முந்தியுமசுரனாக மூதுலகில்நீபிறந்தாய்
பிந்தியுங்கஞ்சனாகவே பேருலகில்நீசிறந்தாய்
பந்தியாகராட்சதப் படைகளுடனேயுறைந்தாய்
உந்தியில்உலகம்வைத்த உச்சிதன்றனைமறந்தாய்
ஓகோகோவிங்கே
உள்ளபூமி பாரந்தீர்க்க
உத்தமர்தங் களைக்காக்க
கள்ளதுஷ்ட ருயிர்போக்க
கண்ணன்வந்திடுவான் பார்க்க (வந்தகாரண)

(கஞ்சன் சொல்லுதல்.)

உ. சொல்லியசொற்படிசெய்து சுத்தனேக்ஷேமப்படுவேன்
கொல்லவருங்கொடியோனைக் கூர்வாளுக்கிரையிடுவேன்
மெல்லவசுதேவரொச்சம் வித்தில்லாதொழித்திடுவேன்
மல்லல்வடமதுரையில் மாசெங்கோல்செலுத்திடுவேன்
மர்மந்தெரிந் துரைத்தீரோ - மகானுபாவா
தர்மவரம் விளைத்தீரோ - இகத்திலெனை

நிர்மலனைப் பிரித்தீரோ - தமியேனிட
கர்மவினை களைத்தீரோ - அந்தச்சிசுவை
கண்டுதூதர்களையேவி கொண்டுவந்திடப்படிப்பேன்
துண்டிடுமென்கோரைப்பற்கள் துலங்கிடயான்கடிப்பேன்
அண்டிவரும்பாலனைவா ளாலேயக்ஷணம்பொடிப்பேன்
விண்டுதணலில்பொறிபடவே யிருகண்கள்துடிப்பேன்
எப்படியேனும்
அவனியொடு போகபாக்கியம்
ஆயுளரசாக்ஷி சிலாக்கியம்
நவநிதியருளும் வாக்கியம்
நாரதரோதந்தீர் யோக்கியம்.(இங்குவந்த)

வசனம்.

கஞ்சன் வசுதேவரிடத்துக்குத் தூதனை யனுப்புதல்.

——:O:——

விருத்தம்.

வந்தந்நாரதரு மர்மஞ்சொல்லி
வானுமெகிழ்வாகச் சேர்ந்தபின்பு
பந்தமுள்ளகஞ்சனுமோர் தூதைக்கூவி
பரிந்துடனேவசுதேவ ரிடமேசென்று
சுந்தரஞ்சேர்பாலகனை யெடுத்துக்கொண்டு
சுருக்காகவரும்படியே திட்டஞ்செய்து
முந்தியிங்கேயெனக்குரைப்பீ ரென்னவப்போ
முடுகினார்நின்றங்கே கடுகினாரோ. (உஉ)

இராகம் - தன்னியாசி - ஏகதாளம்.

பல்லவி.

தூதர்வந்தாரோ - கஞ்சன்விடு
தூதர்வந்தாரோ.

சரணங்கள்.

க. தூதர்வந்தாரோ கோபமேபிறக்க
துரிதமாய்வசுதேவர் முன்சிறக்க
காதகராய்க்கண் கனற்பொறிபறக்க
கடுகடுகடு குடுகுடுவென (தூதர்வந்)

உ. சீலதேவகி மனையைத்தேடி
சிறிச்சிங்கம்போல் வாள்கையில்நாடி
பாலகனெங்கிருக் கின்றானெனப்பாடி
படபடபட திடுதிடுவென (தூதர்வந்)

ங. இடையிற்பெருங்கச்சி தட்டிகள்கூட்டி
ஈட்டிக்கடாரிகள் கத்திகள்பூட்டி



படையரக்கர்கள் பயமதுகாட்டி
பளபளபள தளதளவென (தூதர்வந்)

ச. கோடையிடிபோலே கோரமாய்க்கூவி
குழந்தையைக்கொண்டு வாருங்களென்றேவி
ஆடியசுரர் அலைகள்போலேதாவி
அடிஅடிஅடி பிடிபிடியென.(தூதர்வந்)

வசனம்.

வசுதேவர் வந்த தூதரிடத்தில் குழந்தையைக் கொல்லக் கொடுத்தல்.

———

கொச்சகம்.

வந்ததுஷ்டதூதர்களும் வன்சேதிதானுரைக்க
அந்தப்படிவசுதேவர் அருங்குழந்தைதனைத்தந்தார்
சிந்தைப்படியேகஞ்சன் சிசுவைவதைசெய்துபெரும்
நிந்தைவகித்தேசிலநாள் நீடுலகில்வாழ்ந்தனனே. (உங)

வண்ணத்தரு.

இராகம் - தோடி - ஆதிதாளம்.

க. வந்தாரோகஞ்சன்தூதர்கள் வந்துவசுதேவர்சிந்தைநொந்திட
தந்தாரோதலைவன்கட்டளை தடித்திடுமுதடுதுடித்திடவே
விதிகொடுத்தமகிபதி. மதிகரைந்துவிதனமாய்
கருகருகருவென வசுதேவர்

உ. கண்டாரோபாலனைச்சென்று கரைந்துகண்ணீர்சொரிந்தவயிறது
கொண்டாரோநெருப்புபோலவே குதித்தவர்கையில்மதித்தவர்குணம்
படியில்இடிகள்பல மடியில்கெடிகளிட
கொடியர்வசமென குழந்தையைவீச

ங. கொடுத்தாரோகஞ்சன்கைதனில்கொடுத்தவுடன்தயைவிடுத்துக்ககனத்தில்
விடுத்தானேயதிவிசையாகவே பிடித்துவாளினால்துடித்திட இரு
துண்டுகண்டட ணிரண்டுகண்களும்
நெருப்புபோலவே ஆகியப்போது

ச. இட்டானேவசுதேவனைச்சிறை இட்டுவிலங்குகள்கிட்டுமுள்ளேயென்று
எட்டியகாவல்வைத்து இருக்கின்றஅரக்கர்பெருக்கத்தையழைத்து
சின்னபின்னமாக செய்துசெய்துவர
முன்னமிகுதியின்னம் இல்லையென்னும்படி

ரு. யாதவர்தங்களையிங்கே வாதனைகள்தருந்தீதுபுரிந்திட
வேதனைசெயுமிப்போ நீதமென்சொலைப்போதமெனவுடன்
சென்றுநின்றிடக் கண்டுஇடையர்கள்
இன்றுநன்றுடன் விண்டுபோயினர்

வசனம்.

இந்தவிதமாகப்பிறந்த மற்ற ஆறுசிசுக்களையுங் கொன்றபின்பு தேவகி பலராமனை ஏழாங்கர்ப்பத்தில் வகித்தபோது விஷ்ணு யோகமாயைக்குச் சொல்லுதல்.

---

விருத்தம்.

இவ்விதமாய்க்கஞ்சனந்த சிசுவையன்று
இடைவாளாலழித்துடனே யடுத்திருந்த
அவ்விடத்துஆயர்களை யடித்துஓட்டி
அவன்தங்கைதந்தபிள்ளை யாறும்வெட்டி
எவ்விடத்தும்பெரும்பழியே கூறப்பெற்று
இருக்கின்றவேளைதனில் ஏழாங்கர்ப்பம்
செவ்வையாய்த்தேவகியும் கொள்ளவிஷ்ணு
செப்புவார்மாயைக்கு ஒப்புவாரே. (உச)

இராகம் - ஸ்திரீராகம் - அடதாளம்.

பல்லவி.

யோகமாயையேகேளாய் - என்றன்உரையை
யோகமாயையேகேளாய்.

அநுபல்லவி.

யோகமாயையேயுன்போல்      யுக்தியுடனேபுத்தி
யாகநடப்போரிந்த      அவனியிலில்லைசக்தி (யோக)

சரணங்கள்.

க. தேவகியாளை      யடுத்து - அவள்ஏழாம்
திவ்யகருவை      யெடுத்து
தாவிக்கோகுலமதில்      தையல்ரோகணிவயிற்றில்
தங்கும்படியமைப்பாய்      தாங்கமிகநயத்தில் (யோக)

உ. செய்தபிறகு      நானே - தேவகியாட்கு
செல்வனாய்ப்      பிறப்பேனே
வையகந்தனில்நந்த      கோபனுடையநல்ல
மனைவியசோதையாட்கு      மகளாயுதிப்பாய்சொல்ல (யோக)

ங. அனந்தன்தனக்கும்      பாரில் - பலராமனாக
அவதரித்திட      நேரில்
கனமாகவேயின்று      கட்டளைசெய்திட்டேன்
கருத்தில்நினைத்தபடி      கண்டுனக்குரைத்திட்டேன் (யோக)

ச. உதித்தபிறகு      கண்டாய் - பூலோகத்தில்
ஓங்காளிநாம      முண்டாய்
துதித்துப்பூசைகள்செய்வர்      துலங்கியிருக்கவேயும்
தூக்கிவரங்கள்தந்து      துணையாயிருப்பாய்நீயும்.(யோக)



பலராமன் அவதாரஞ்செய்தல்.

விருத்தம்.

எம்பிரானிந்தவித முரைக்கக்கேட்டு
எழில்யோகமாயையவன் றருள்பணிந்து
உம்பர்களும்வியக்கவே யுடனேசென்று
ஒளிவுடையதேவகியின் கர்ப்பந்தன்னை
அம்புவியில்ரோகணிதன் வயிற்றிற்சேர்த்து
அவள்சோதைகருப்பையி லமர்ந்தபின்பு
நம்பு திருமாலணையாய்க் கிடக்குஞ்சேஷன்
நறந்திட்டான்பலராமன் பிறந்திட்டானே. (உரு)

இராகம் - சங்கராபரணம் - சாபுதாளம்.

பல்லவி.

உதித்தாரோ - ஸ்ரீபலராமன் - உதித்தாரோ.

சரணங்கள்.

க. உதித்தாரோபலராமன்      ஒண்டொடிரோணுமணன்
பதிதபாவனசீலன்      பரமகல்யாணகுணன் (உதித்)

உ. ஈரொன்றுதேவகிக்கும்      எழுதிங்கள்ரோகணிக்கும்
சீர்தசமாதஞ்சென்று      சிறப்பாய்நவமணிக்கும் (உதித்)

ங. சேஷன்வசுதேவருக்கும்      செல்விரோகணிக்குஞ்சொந்த
தோஷமற்றமைந்தனாகி      தொல்லுலகில்க்ஷேமமுந்த (உதித்)

ச. கண்ணனுக்குமுன்னவனாய்      காசினியிலாதிசேஷன்
எண்ணிநம்பிமூத்தபிரான்      என்றுபேர்பெறநிர்தோஷன்.(உதித்)

---

தேவகி அஷ்டமகர்ப்பமுண்டாதல்.

விருத்தம்.

உதித்தபலராமனங்கே வளர்ந்திருக்க
உயர்மதியோர்தேவகியி னெட்டாங்கர்ப்பம்
கதித்தபெருங்காரணத்தைக் கண்டுபொங்க
கதிபெறவேவாரணமு மன்றுகூவித்
துதித்தவுடன்ஆதிமூலம் நான்தானென்றே
தோற்றியவக்காருண்ணியன் புத்திரனாக
மதித்திடவேதேவகியாள் வயிறுதன்னில்
வந்திட்டான்ஆனந்தந் தந்திட்டானே. (உசு)

இராகம் - மத்தியமாவதி - அடதாளம்.

பல்லவி.

மைந்தனுண்டானானே - தேவகிமாது
மைந்தனுண்டானானே.

அநுபல்லவி.

மைந்தனுண்டானுனே மாதுசிரோன்மணி
சுந்தரமாகிய சுததிவெகுசற்குணி (மைந்த)

சரணங்கள்.

க. மாதம்ஒன் றிரண்டு - மூன்றில்
மசக்கைதானுங் கண்டு
ஆதியில்மச்சக்கூர்ம வராகனுமவதார
அற்புதனைத்தனது அங்கத்திலலங்கார(மைந்த)

உ. தையல்நான் கைந்தாறு - திங்களில்
தங்கமேனி கூறு
பையவேநரசிங்க வாமனனுகிப்பின்பு
பரசுராமனுகப் பாரினிலேயன்பு(மைந்த)

௩. ஏழெட்டொன்ப தாகும் - மாதத்தில்
எழில்கொண்டதவள் தேகம்
பாழுறுபிருவினை தீர்க்கும்ரகுவீரனை
பலபத்ரசாமளா பவுத்தாவதாரனை(மைந்த)

௪. பத்துமாதமு மேகி - தேவகிக்குப்
பிரசவகாலமு மாகி
கத்திகத்தியேதுள்ளும் கஞ்சனும்நசித்திட
கண்ணனுங்கர்த்தாவுங் கர்ப்பத்தில்வசித்திட.(மைந்த)

வசனம்.

தேவகி கருப்பத்தைக்கண்டு கஞ்சன் பயப்படுதல்.

———:o:———

விருத்தம்.

புண்டரீகக்கண்ணனையே பிள்ளையாகப்
பூரணமாய்வயிறுதனிற் கொண்டிருக்க
அண்டர்களுங்களிகூரத் தேவகிக்கு
அதிரூபசௌந்தரிய மதுவிளங்க
கண்டொருநாள்கஞ்சதுஷ்ட மன்னனெண்ணிக்
கர்ப்பத்திலுள்ளசிசு காலனென்றே
விண்டங்குவிதிவசத்தாற் றயிரியத்தை
விலங்கினுன்மனநொந்து கலங்கினுனே. (உஎ)

இராகம் - புன்னுகவராளி - ஏகதாளம்.

கண்ணிகள்.

க. இவளுடையகர்ப்பத்தில் இருக்குஞ்சிசுதானே
அவனியிலேயெனக்கு அச்சந்தரவுதிப்பதேனே

உ. முந்துகர்ப்பங்களிவட்கு முகவொளிவுதானில்லை
இந்தக்கர்ப்பந்தனிற்சோதி இசைந்ததுவோதொல்லை



௩. இப்போதுவந்திவனுதிக்க என்றன்விதிவசமோ
எப்போதிந்தச்சிசுவை இறக்கச்செய்வதுநிசமோ

௪. கொல்லநினைந்திடும்போது குறுக்காய்வசுதேவன்
நல்லவசனங்கள்சொல்லி நையமனதுநோவன்

௫. சதிசெய்யுமதியாலே தருணமுங்கெட்டுப்போமோ
நிதியும்பதியுமற்று விதியால்விட்டுப்போமோ

௬. ஏசும்படியெவரும் என்னுயுளும்விட்டு
காசினியிலிறந்திடவுங் காலமோஎன்மட்டு

௭. எதிரியால்ஜெயிக்கப்படா என்பலந்தான்போச்சே
சிதறவெண்ணுதென்கீர்த்தி சிதையக்காலமாச்சே

௮. துன்னிடமெல்லாமரியாய்த் தோற்றுதென்னசெய்வேன்
என்னைலக்ஷ்மிபதிவந்து எதிர்க்கிலெப்படியுய்வேன்.

———:o:———

தேவர்கள் துதித்தல்.

விருத்தம்.

இந்தவிதங்கஞ்சமன்னன் புலம்பிநிற்க
இன்பமொடுபிரமன்முத லிமையோர்கூடி
வந்துகந்தேயாகாச மார்க்கந்தன்னில்
வணங்கியேமாதவன்மேற் பரிவுகொண்டு
சந்தோஷசாகரமே சர்வலோக
சரணியாசார்வபௌமா வென்றுரைத்து
வந்தனைகள்செய்துவெகு துதிகளாலே
வாழ்த்துவார்தமதுசிரந் தாழ்த்துவாரே. (உஅ)

இராகம் - ஸ்ரீராகம் - சாபுதாளம்.

பல்லவி.

ஆதிபரஞ் சோதி - உலகினில்
அறிவாரார் உன்சேதி.

அநுபல்லவி.

ஓதுமவரைநாளும் உவப்புடன்ரக்ஷிப்பாய்
ஓகோதிதுபுரியும் ஒன்னலரைசிக்ஷிப்பாய்(ஆதிபரஞ்)

சரணங்கள்.

சத்யசங்கற்பராயும் சமதரிசனராயும்
சாந்தகுணமுள்ள மூர்த்தியாகவிருக்கும்
நித்யபூதபவுஷ்ய வர்த்தமானங்கள்தோறும்
நிர்மலமாகவே தான்தரிக்கும்
உத்தமமாகவே யுலகமுதலமைத்து
உறுபஞ்சபூதங்க ளுண்டாக்கும்

சித்தசித்திலென்றும் அந்தரியாமியாய்
சேர்ந்துபூரணப் பொருளாய்காக்கும்
புத்திமிகுந்தவந்த சுரர்படும்வேதனை
புண்ணியவுனதருளால் போக்கும்
எத்திசையும்பத்த பாலனெனும்பெயர்
இருந்திடவாழ்ந்துகொண் டைமைநோக்கும் (ஆதிபர)

உ. ஆதிமூலப்பிரகிர்தி ஆதாரமாய்ச்செய்து
அதில்சமுசார விருக்ஷந்தானமைத்தீர்
ஜோதிமுக்குணமதை வேராக்கியதனுக்குத்
தோன்றுமிந்திரியக் கனிசமைத்தீர்
தோதுபஞ்சபூத மனம்புத்தியகங்காரந்
துலங்குங்கிளைகளாய்த் துறுத்திட்டீர்
தாதுவெழும்பட்டைத் துவாரமொன்பதுவெளி
தசப்பிராணநிலையாகப் பொருத்திட்டீர்
தீதுகாமமுதல் ஆறுஞ்சுபாவமாய்
தீதுக்கசுகமதி விருத்திட்டீர்
சாதுவிரும்பும்அறம் நான்கும்புவிதனில்
சகலர்க்குந்தெரியவே விரித்திட்டீர் (ஆதிபர)

ங. தேவருடையவிரு திருவடிஸ்பரிசத்தால்
தேர்ந்துபூமியின்பாரம் தீர்க்கவெண்ணி
பாவிகளுய்யநின் பஞ்சாயுதசின்னங்கள்
பாரினிலிருந்திடும் படிநண்ணி
ஆதிசொர்க்கமத்ய பாதாளந்தானெங்கும்
அரும்புகழ்திறமாக அண்டிடவே
கோதிலாதவுன்றன் லீலைகளனந்தமும்
குவலயத்தோர்கண்டு கொண்டிடவே
ஓதரிதாகுநின் பெருந்திருவிளையாட்டை
உண்மையாயெவர்களுங் கண்டிடவே
நீதறஜனிப்பாயிப் புவிதனிற்கொடியர்கள்
தேகத்தைச்சேதித்துத் துண்டிடவே (ஆதிபர)

ச. மச்சகூர்மாதி வராகவடிவமாய்
வந்தவதாரங்கள் தானெடுத்தீர்
உச்சிதஸ்தாவர ஜங்கமப்பொருள்களில்
உண்மையாய்நிரந்தர முறைந்தடுத்தீர்
முச்சகங்களையும் படைத்தளித்தழிக்கும்
முதல்வனுகியென்று மிருக்கின்றீர்
நிச்சயித்தமரர் முனிவர்களாயினோர்
நித்தமுந்தருந்துதி பரிக்கின்றீர்



அச்சமில்லாதந்த எதுகுலத்தோர்களும்
அமைந்துவாழ்ந்திட அருள்தருகின்றீர்
லட்சுமிநாயகனே மகிதலமீது
நலமிருந்திட அவதரிக்கின்றீர். (ஆதிபர)

---

## கண்ணன் திருஅவதாரம்.

விருத்தம்.

விண்ணவர்கள்துதித்தாடிப் போனபின்னர்
வேந்தேகேளெனச்சுகரும் விளம்புகின்றார்
மண்ணதனில்மழைபொழிய நதிகளோட
மலர்ந்துபூபரிமளிக்குங் காலந்தன்னில்
பெண்ணரசிதேவகிதன் பெருந்தவத்தால்
பிறங்குரவிகோடிவந் துதித்தாற்போல
எண்ணரியகண்ணனவள் திருவயிற்றில்
எய்திட்டார்அவதாரஞ் செய்திட்டாரோ. (உக)

இராகம் - சாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

அவதாரஞ்செய்தாரோ - கண்ணன்திரு
அவதாரஞ்செய்தாரோ.

அநுபல்லவி.

அவதாரஞ்செய்தாரோ அசுரர்குலகாலன்
தவமிகுந்தேவகி தனதுநற்புகழ்பாலன் (அவதார)

சரணங்கள்.

க. ஆவணிமாசந் துன்ன - கிருஷ்ணஷ்டமி
அமர்ந்தரோகணி மன்ன
தாவுமசுவனி மின்ன - பரணியாதி
தாரகைகளும் பன்ன
தங்குமேஷமிடப ராசிமுதலுதிக்க
தவமுனிவோர்களுந் தேவர்களுந்துதிக்க
பொங்குமெண்டிசையோரும் பூரித்துளமதிக்க
பூமியில்அற்புத பூமாரியும்உதிர்க்க (அவ)

உ. நீதிசற்புருஷர் பொங்க - வசுதேவர்
நெஞ்சில்சந்தோஷந் தங்க
வேதவேதியர் துங்க - அக்னிஹோத்ரம்
வீடுதோறும் விளங்க
வெண்டாமரைமலர் மிகுந்தமணமுண்டாக்க
விண்ணில்நவக்கிரகங்களு மேபூக்க

அண்டர்படுந்துய ரனைத்தையுமேதீர்க்க
அசுரர்குலத்தைவே ரறுத்தவனியைக்காக்க (அவ)

௧. வித்தியா தரர்பாட - அரம்பையர்
விண்ணின்று கூத்தாட
சத்தமேகமுங் கூட - முழங்கியே
தரையில்பொழிந்து நாட
தங்கியகாவலர் மதிமயங்கியிருக்க
தண்யமுனாநதி வெள்ளமதுபெருக்க
அங்குவசுதேவர் அடிவிலங்குதறிக்க
அந்தகாராக்கிரகத் தாழ்களையுமுறிக்க (அவ)

௨. தண்டைச்சிலம் பொலிக்க - தவத்தவர்
தமதுகோரிக்கை பலிக்க
கண்டாபரணஞ் சொலிக்க - நவமணிக்
கங்கணமிருள் விலக்க
புண்டரீகநயனம் பூர்ணசந்திரமுகம்
புன்னகைசெய்கனிவாய் பொருந்துமருளகம்
கொண்டுபெரியோர்தேடுங் குறைவிலாதசுகம்
குணமுடனெய்திடக் கோலமாயிச்செகம் (அவ)

௩. துய்யபீதாம் பரமும் - பஞ்சாயுதம்
துலங்கொளிசேர் கரமும்
செய்யகவுஸ்துப வரமும் - சிறந்தமார்பில்
ஸ்ரீலட்சுமிவாழ் திரமும்
மன்னும்மழகுடனே வனமாலையதுநீட
வளர்செவியில்ரத்ன குண்டலங்களாட
மின்னும்படியனேக ஆபரணங்கள்கூட
மேலுஞ்சதங்கைகிண் கிணியரைஞாணுட. (அவ)

---

வசுதேவர் தோத்தரித்தல்.

விருத்தம்.

அவதரித்தசுதனைவசு தேவன்கண்டு
ஆனந்தக்கண்ணீரி லாடியேதன்
தவநிறைவேறிற்றென்று சந்தோஷித்துத்
தக்கோதானமுதல் மனதாற்செய்து
அவனியிலேநாமென்ன பாக்கியஞ்செய்தோம்
அறிகிலேன்அரியவனைக் காணஇன்று
புவனமதுபோற்றுமிப் புத்திரனைநோக்கி
புகழ்ந்திட்டார்துதிசெய்து மகிழ்ந்திட்டாரே. (௩௰)



இராகம் - அசாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

வாரும்விபுவே லோகநாதா - என்றன்
மைந்தனேசெங்கமலப் பாதா.

அநுபல்லவி.

ஆருமறியாவுன்றன் அவதாரலீலைகளை
அறிந்தேன் - அருள் தெரிந்தேன் - மனம்
பரிந் தேன் - பக்தி புரிந் தேன் - சாமி. (வாரும்)

சரணங்கள்.

௧. பொய்யில்பராபர புருஷராகியும்பார்க்க
போதவுமழகிய பொன்னுருவாயுந்தீர்க்க
துய்யமுக்குணமயனாகி யுலகுண்டாக்க
தொடுத்தீர் - சக்தி அடுத் தீர் - ரக்ஷித்
தெடுத் தீர் - சேவை கொடுத்தீர் - சாமி (வாரும்)

௨. சத்தியம்பதினாறு சத்தியோடிருந்தாலும்
சகலமும்படைத்திட சக்தியுண்டாகிமேலும்
பற்றிப்பிரமாண்டத்தை பண்புடன்உக்தியாலும்
படைத் தீர் - கடலை அடைத்தீர் - துயர்
துடைத்தீர் - எமக்குக் கிடைத்தீர் - சாமி (வாரும்)

௩. பிரம்மாண்டத்தைப் படைக்குமுன்னுகநீரும்
பெரும்பொருளாகவே பிறங்குங்காரணஞ்சாரும்
திறமாமுனிவர்தேவர் தெரிந்திருக்கின்றார்பாரும்
தீரா - வெகு சூரா - வனந்தம்
பேரா - அருள் குமாரா - சாமி (வாரும்)

௪. சர்வாந்தரியாமியா இருக்கும்வத்துவும்நீரோ
சகலப்பிராணிகட்குஞ் சார்பாயிருக்கின்றீரோ
பெருமதியிரவிபோல் பிறங்குமுமதுபேரோ
பிறப் போ - வுமக் கிறப் போ - என்றும்
வெறுப் போ - இலை விருப் போ - சாமி (வாரும்)

௫. தேகமேஆத்மாவென்று தெரிந்துகொண்டவர்போலே
தினமுஞ்சொல்லியேமூடன் துதித்துக்கொள்ளுவன்சால
ஆகவேயவன்பிர பஞ்சவாசையினாலே
அறியான் - உம்மைக் குறியான் - பாவம்
எறி யான் - ஜன்மம் பறியான் - சாமி (வாரும்)

௬. இஷ்டங்கஷ்டமில்லா திருக்கும்விபுவேகேளும்
இகத்திலேயெங்கணும் இருந்தாடுகிறீர்நாளும்
சிஷ்டிதிதிசங்கார கர்த்தனாகவேயாளும்

சிலா - அனு கூலா - ஆதி
மூலா - பக்த பாலா - சாமி (வாரும்)

௭. பரப்பிரம்மமாகவே விளங்கும்ஹரியேநீரும்
பாராவிடிலோயில்லை பாலனஞ்செய்யயாரும்
அரனயன்முதலோர்கள் அறிந்துதுதிக்கநேரும்
ஆயா - பக்தர் நேயா - மிக்க
தூயா - சொந்த சேயா - சாமி (வாரும்)

௮. ஜெனனமில்லாதவரோ ஜென்மித்ததென்னகோலம்
திரிலோகங்களிலேயும் தேவாநீர்செய்யுஞ்ஜாலம்
கனமதுபொருந்துநின் காயநிறமோநீலம்
கண்ணா - மணி வண்ணா - எம
தண்ணா - வெகு திண்ணா - சாமி (வாரும்)

௯. தேவசிரேஷ்டரேநீரும் திருஅவதாரமிங்கு
செய்யப்போகிறீரென்ற சேதிதெரிந்துஅங்கு
கோபியாங்கஞ்சன்முந்து குழந்தைகளையொருங்கு
கொன்றான் - எங்குஞ் சென்றான் - பயம்
அகன்றான் - அரசி யன் றான் - சாமி (வாரும்)

௰. ஆயர்கள்கோனேயும தவதாரமதுசொல்ல
அறிந்தால்கஞ்சனும்வெகு அவசரமாகவல்ல
ஆயுதபாணியாக அணுகிவருவான்கொல்ல
அய்யா - ஆழிக் கையா - மெத்த
துய்யா - லக்ஷ்மி மெய்யா - சாமி. (வாரும்)

---

தேவகி தோத்திரம்.

விருத்தம்.

இந்தவிதம்வசுதேவர் துதித்தபின்பு
எழிலானதேவகியுன் சிரிப்புகொண்டு
அந்தசிசுபாலகனை யவளுங்கண்டு
அகிலமெலாமுண்டபெரு மானேயென்று
நிந்தைபெறுகஞ்சனிட கொடுமைதன்னை
நினைந்துடனேயுருகிமனம் வாடிநொந்து
பந்தமதுதனைவிட்டு நீங்கவெண்ணிப்
பாடினாள்மகனைக்கொண் டாடினாளே. (௩௩)

இராகம் - தோடி - சாபுதாளம்.

பல்லவி.

கேளும்அகிலகோடி நாயகனே - அதி
கிருபாவி தாயகனே.



அநுபல்லவி.

நாளுமுன்றன்மகிமை யாருமறியப்போமோ
நாரணனேயடியேன் சொல்லத்திறமாமோ (கேளும்)

சரணங்கள்.

௧. சகலஜகங்களுக்குங் காரணனேநேமி
சாருங்கரனேவர சர்வாந்தரியாமி
புகலருமடியார்கள் புண்ணியப்பொருளேபூமி
போற்றும்பரப்பிரம்ம மாகவுதித்தசாமி
இகத்தில்திரிகா லங்களுக்குங்காரண
னெனவேசதுர்மறை யியம்பும்பூரண
மகத்துவத்துவை மடுவில்வாரண
மழைக்கவந்தோனே யருள்செய்நாரண (கேளும்)

௨. மேதினியிலொருவன் விதியினாலேபிறந்து
மிக்கமெய்ஞ்ஞானத்தை வீணாகவேதுறந்து
வாதனைசெய்காலன் வரவதனைமறந்து
மலரடியடைந்தோர்க்கு மனதிரங்கிச்சிறந்து
நீதியுடன் அஞ்சல் அஞ்சலெனச்சொலி
நெடியகரமெடுத் தபயந்தந்துசலி
யாதுபெருமுத்தி யளிக்குமருள்பொலி
அரியேயிப்பொழுது முறையமிடுமொலி (கேளும்)

௩. பரமபுருஷாவென்றன் வயிற்றினில்நீவந்து
பாலகனாயவதரித் தாயருள்மிகுந்து
வர்மமுடையகஞ்சன் மனதில்சேதிதெரிந்து
வருவானென்செய்குவேன் வாளெடுத்துச்சினந்து
மனதுபதைக்குது வந்துசஞ்சலம்
மாதவத்தவர் வைத்துஐம்புலம்
தனதுகொண்டனு தினமுந்துதிநலம்
தங்குநின்னடி நம்பினேன்நிலம் (கேளும்)

௪. உத்தமமாகவே யூழிகாலத்திலெந்த
உலகமதையுன்றன் உதரத்தில்வைத்திருந்த
தத்துவனாநீ தமியனிடத்தில்வந்த
தன்மையுலகிற்பரி காசமாமோஇந்த
தகைமையென்போ லெவர்தமக்குண்டு
சார்ங்கமுதல்பஞ் சாயுதங்கொண்டு
மகிமைதரும்விஸ்வ ரூபமதைவிண்டு
மகியிற்பாலகன் வடிவனுனைக்கண்டு. (கேளும்)

வசனம்.

கண்ணன் தாய்தந்தையருக்குச் சொல்லுதல்.

விருத்தம்.

சிந்தையுடன்மனமகிழ்ந்து துதிகள்செய்த
செல்வமிகுதாய்தந்தை தம்மைநோக்கி
அந்தமிகுமணிகிரீட குண்டலாதி
ஆபரணம்ஆயுதங்கள் மிகச்சொலிக்க
விந்தையுடனேயுதித்த பாலனன்று
விர்த்தாந்தமோதிவடி வதனைமாற்றி
நந்தலறுமெனைக்கையி லேந்திகொண்டு
நாடென்றார்கோகுலத்துக் கோடென்றாரே. (௩௨)

இராகம் - நாதநாமக்கிரியை - ஏகதாளம்.

பல்லவி.

எந்தனுனாயைக்கேளும் - இருவர்களும்
எந்தனுனாயைக்கேளும்.

அநுபல்லவி.

வந்தேனுமதுகாராக் கிரகவருத்தமேக
தந்தைதாயுங்களுக்குச் சந்தோஷமேயுண்டாக (எந்தனு)

சரணங்கள்.

௧. சாயம்பூமனுவந் தரம் - பூர்வசன்மம்
தாயேபிரசனை யென்றும்
ஆயருக்கதிபதி யாகியஎந்தையே
அவனியில்அரசனாய்ச் சுபியெனப்பிறந்தீர் (எந்த)

௨. பிரமதேவ னுரைத்த - படிநீங்கள்
பிரஜாசிருஷ்டிகள் செய்ய
தரணியிலெனைநோக்கி சகஸ்ரதிவ்யவருஷம்
தவமதுசெய்திட்டீர் தருமவழியினின்று (எந்த)

௩. செய்தவந்தனை யுகந்து - இருவருக்கும்
சித்தகோரிக்கை பலிக்க
துய்யவராந்தர துணைவியுடனேநான்
தோற்றினேன்பிரத்தியக்ஷ மாகவுங்களெதிரில் (எந்த)

௪. நீதில்லாநல் வரமே - கேளுமென்று
செப்பினே னப்பொழுது
பேதமில்லாவுள்ளம் பெற்றிருவருமென்னை
பிள்ளையாயுங்கட்கு பிறக்கக்கேட்டுக்கொண்டீர் (எந்த)

௫. கேட்டவரங் கொடுத்து - மறைந்தபின்
கீர்த்தியு முண்டாக
நாட்டமாயிருவருங் கூடியணைந்ததால்
நானேயுங்கட்குப்புத்திர னாகஅவதரித்தேன் (எந்த)



௬. அண்டர்தொழ விரண்டாம் - ஜன்மத்திலே
அதிதிகாசிப ருனீர்
கண்டுஉபேந்திர வாமனனாயுங்கள்
கர்பத்தில்நான்சேர்ந்து கனிவாயவதரித்தேன் (எந்த)

௭. திவ்யதேகத் தோடே - மூன்றாஞ்சென்மம்
திரும்பவும் அவதரித்தேன்
பவ்யராமுங்கட்கு பூர்வத்தியானமுண்டாகி
பகவானென்றறிந்திடப் பாரில்வந்துதித்திட்டேன் (எந்த)

௮. தாதையே வாருமையா - இப்பொழுது
தயிரியம்து கொண்டு
வாதைசெய்யக்கஞ்சன் வருவதற்குமுன்னே
வளமாம்நந்தகோ குலத்திலென்றனைவிடும் (எந்த)

௯. நந்தகோபன் பாரி - அசோதைக்கு
நான்படைத்திடு மாயை
விந்தைபெண்சிசுவாக உதிக்குந்தருணமிது
விடுமெனைக்கொண்டங்கே வையுமவளையிங்கே (எந்த)

௰. சாற்றுங்கதவு திறக்கும் - யமுனையாறு
தாண்டவும்வழி விடுமே
மாற்றிவிசவரூபம் மறைத்துமகிதலத்து
மாயச்சிசுவைப்போல வடிவுகொண்டேனிதோ. (எந்த)

வசனம்.

வசுதேவர் நந்தன்மனைக்குக் கண்ணனை எடுத்துக்கொண்டுபோகுதல்.

———:0:———

விருத்தம்.

மைந்தனுனாவசுதேவர் கேட்டுமாறு
மகிழ்வாகித்தன்சிசுவைக் கரத்திலேந்த
விந்தைபெறுகுசிகா கிரகத்திலந்த
வேளைதனிற்கால்விலங்கு கழன்றுபோகச்
சோர்ந்தமிகுகாவலர்நித் திரைமயங்க
ஜோதிமணிக்கதவுகளுந் தாழ்திறக்க
அந்தநிசிராத்திரியிலே பிரயாணம்
ஆகினார்நந்தன்மனைக் கேகினாரே. (௩௩)

இராகம் - சங்கராபரணம் - சாபுதாளம்.

பல்லவி.

எடுத்தாரேகரத்தில் - மைந்தன்றனை
எடுத்தாரேகரத்தில்.

அநுபல்லவி.

எடுத்தாரோகரத்தில் இதயமதுமகிழ
இன்பமுடனந்த இமையவரும்புகழ (எடுத்தா)

சரணங்கள்.

௧. பூண்டவிலங்குகள் பூட்டுகளும்நீங்க
ஆண்டவன்மாயையில் அசுரர்களுந்தூங்க
பாண்டவதூதனைப் பக்ஷமுடனேதாங்க
ஆண்டவனுங்கண்ணன் அவனிதனிலோங்க (எடுத்)

௨. அந்தகாரஇரவில் அனந்தன்குடைபிடிக்க
சந்ததந்தாரையாய் மழைதரையிலடிக்க
மந்தமாருதமொடு மலர்வாரியுமடிக்க
நந்தகோகுலமதில் நாரணனும்நடிக்க (எடுத்)

௩. பூமனுமுன்செலப் பூமிபாரமொழிக்க
காமிகளாமசுரர் கணங்களெல்லாமழிக்க
நாமம்மிகுசோதை நந்தன்மனைசெழிக்க
க்ஷேமமாய்ஸ்ரீகிருஷ்ணன் சேர்ந்தேயருள்கொழிக்க (எடுத்)

௪. கோலமுடையமுனை யாறும்வழிதருக
சாலவேகஞ்சனுக்குச் சாகுங்காலம்வருக
சீலக்கோபியர்கள் சித்தமகிழ்ந்துருக
ஞாலமதில்லட்சுமி நாதன் அருள்பெருக. (எடுத்)

வசனம்.

வசுதேவர் கண்ணனைக் கோகுலத்திற்சேர்த்து மாயா சிசுவைக்கொண்டுவந்து அறையில்விட்டவுடன் அதுஅழத் தூதர் மயக்கநீங்கி விழித்துக் கஞ்சனுக்கோடி யுரைத்தல்.

———:o:———

விருத்தம்.

எடுத்துவந்தபாலகனைக் கோகுலத்தில்
எழில்சோதைமாதருகி லேவிடுத்து
அடுத்திருந்தமாயைதனைக் கையிலேந்தி
அதிவிரைவில்அவ்விருளில் அறையிற்சேர்ந்து
படுத்திருக்கும்பாரிபக்கல் அதனைவைக்கப்
பழையபடிதளைபூண்டு இருக்கமாயை
இடித்ததென அழுகுரலைக் கேட்டதூதர்
விகினார்கஞ்சனிடம் போகினாரே. (௬௪)

இராகம் - புன்னாகவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

மன்னவனேகேளும் - எங்கள்பேச்சை
மன்னவனேகேளும்.



சரணங்கள்.

௧. மன்னவனேகேளும் மதுராபுரியினின்றும்
தன்னரசாயாளும் தகைமையுடையாயென்றும் (மன்ன)

௨. தேவகிவசுதேவர் இருக்குஞ்சிறையிற்றங்கள்
காவலராய்நாளும் காத்திருக்குமெங்கள் (மன்ன)

௩. காத்திருந்திடும்வேளை கர்ப்பமெட்டாவது
பூத்திந்தபூமியில் புதுசிசுகூவுது (மன்ன)

௪. கூவியழுவதைக் கொற்றவனேகேட்டு
கோவத்துடனேவந்து கூறிரோமுன்மாட்டு. (மன்ன)

வசனம்.

தூதர் வார்த்தையைக்கேட்டுக் குழந்தையை வெட்டவருகின்ற கஞ்சனைக்கண்டு தேவகி புலம்புதல்.

———:o:———

விருத்தம்.

தூதருரைத்திடுமந்த சொல்லைக்கேட்டுத்
தூங்குகின்றகஞ்சனுன்றன் துயிலொழிந்து
காதகனுய்க்கடுகடுத்தே யெழுந்திருந்து
காலமிதுவயிரிதனை முடிக்கவென்று
நீதமின்றித்தனதுமுடி மயிர்விரித்து
நீள்வாளுங்கொண்டுவரு பவனைக்கண்டு
மாதாசிதேவகியும் மனமெலிந்து
மயங்கினாள்விசனத்தால் தியங்கினாளே. (௬௫)

இராகம் - நீலாம்புரி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. என்செய்வேன்எதுசெய்வேன் இளவரசேயின்று
எனதுகுறையைத்தீரும் அண்ணாவே
முன்செய்தபாபமோ மூதறிவோர்சாபமோ
முனிந்துசிசுவைக்கொன்றீர் அண்ணாவே

௨. மங்களகரமாக வாழும்வேந்தனேயிந்த
மகளென்னசெய்தாளென் அண்ணாவே
தங்கையாகியஎன்மேல் தயைசெய்திச்சிசுவுக்குத்
தாரும்பிராணபிச்சை அண்ணாவே

௩. அக்கினிகோபங்கொண்டு ஆறுசிசுவைக்கொன்றீர்
அகன்றதுஎழாங்கர்ப்பம் அண்ணாவே
விக்கியாபனஞ்செய்தேன் மெல்லியிவளைத்தர
வேண்டும்நான்தெண்டனிட்டேன் அண்ணாவே

௪. இஷ்டதெய்வமும்நீரோ என்னுடன்பிறந்நீரோ
எதுரைத்திடவேண்டும் அண்ணாவே
கஷ்டந்தாராதேயென்றன் கருத்தில்மிகவுநொந்தேன்
கருணையில்லையோசற்றும் அண்ணாவே

௫. வந்தகடைசியான வடிவுள்ளபெண்சிசுவை
வதைசெய்யாதேயுமென்றன் அண்ணாவே
இந்தக்குறையைத்தீர்த்து இளவரசாக்ஷிசெய்து
எங்கும்புகழவாழ்வீர் அண்ணாவே

௬. கல்லுங்கரையுமய்யா காரிகையழுகைக்கேட்டு
கடைக்கண்பாருமென்றன் அண்ணாவே
மல்லுசெய்யாமலே மங்கைதுயரம்நீக்க
மகிழ்வார்லட்சுமிநாதன் அண்ணாவே.

வசனம்.

இவ்வளவு சொல்லியும் மனதிரங்காமல் வெட்டத்துணிந்த கஞ்சனுக்குத் துர்க்கி சொல்லுதல்.

———:o:———

விருத்தம்.

தங்கைதுயரத்தையுங் கேட்டகஞ்சன்
தணல்போலக்கண்சிவந்து சினமேற்கொண்டு
அங்கிருந்தமாயையிரு காலைப்பற்றி
அந்தரத்தேவீசிவாள் பிடித்துநிற்க
பொங்கிதுர்க்கியாகாச மார்க்கஞ்சென்று
பொல்லாததுஷ்டமன்னா கேளாயென்று
அங்கையெட்டில்ஆயுதங்கள் ஏந்திச்சேதி
அறைகுவாள் ககனத்தில்மறைகுவாளே. (௧௪)

இராகம் - மோகனம் - ஆதிதாளம்.

பல்லவி.

கேளடாகம்ச காதகா - என்றனைக்கொன்றால்
கீர்த்தியோஉனக்குப் பாதகா.

அநுபல்லவி.

கேளடாமெத்தப் படியாதே
கெடுநரகில்வீழ்ந்து துடியாதே
வாளடாஎன்னை மடியாதே
வர்மமாய்ப்பிடிவாதம் பிடியாதே (கேளடா)

சரணங்கள்.

௧. அன்றயனெழுத்தைநீ அழிக்கவல்லாயோஅதை
அறியாமலேன் குரைக்கிறாய் - அதுவல்லாமல்
இன்றெனைவெல்வதற்கு ஏற்றசக்தியுனக்கு
ஏதடாவீண் உரைக்கிறாய் - இதமில்லாமல்



தேவகிதேவனை சிறையிலடைத்தாய்
தெரியாமற்பாறையி லெனையுமடித்தாய்
கோவமுடனேவந்து கொல்லநடித்தாய்
கூரியவாளினைக் கையிலெடுத்தாய் (கேளடா)

௨. மலைகிறாயிந்தவாழ்வு மண்ணிற்சதமோவதை
மனதினாலூன்றிப் பாரடா - என்றனுடைய
தலைதறிக்கிறேனென்று தாஷ்டீகம்பேசுகிறாய்
தப்பியுன்னுயிர் காரடா - துரிதமாக
ஓடிவந்தெனைக்கொல உளம்நினைத்தாயே
உனைக்கொல்லவளர்கிறான் ஒளிந்தொருசேயே
கூடுநின்போகபாக்கியம் குலைந்திடும்பேயே
கொக்கரித்தாடாதே குணங்கெட்டநாயே (கேளடா)

௩. அரசுமணிமுடி அமைந்தசெங்கோலுமுன்றன்
ஆவியும்இனி போகுமே - இன்னமுமந்த
பரசுபாணியுந்துதி பதுமநாபன்பேரிந்த
பாரில்விளங்க லாகுமே - புத்திகெட்டு
கவனமில்லாமலே கர்வமுங்கொண்டாய்
கருத்தினிற்சற்குண மனத்தையும்விண்டாய்
குவலையமளந்தோன் குரைகழல்அண்டாய்
கொஞ்சமுமினிவெற்றிக் கூறிலைகண்டாய் (கேளடா)

௪. அரியரன்அயனுமே அருவினைதப்பாதென்றால்
அந்தகாவன் குலைக்கிறாய் - அகிலந்தன்னில்
அரியைக்கொல்லயானை அலைகிறாப்போலநீயும்
ஆடியேனோ மலைக்கிறாய் - மடையாபாரும்
தரிக்கும்பாறையைச் செல்லரிக்குமோமேதி
தாமோதரன்வந்து தறிப்பான்உன்வாதி
நரிக்கும்எரிக்கும்இரை யாவாய்சேதி
நானென்னசொல்லுவேன் நடுவிலேநீதி.(கேளடா)

வசனம்.

துர்க்கிசொல்லி மறைந்தபின் கஞ்சன் வசுதேவரையும் தேவகியையும் சிறையினின்றும் விடுத்தல்.

———:o:———

விருத்தம்.

உரைத்தந்தவுற்பாத காளிதுர்க்கை
உயரத்திலற்புதமாய் மறைந்துபோனாள்
வரைத்தோளான்தனக்குற்ற விபத்தைக்கேட்ட
வஞ்சகஞ்சன்மிகப்பயந்து சற்றேயோசித்து

நனைத்தவர்கள்மெச்சு வசுதேவதேவகிக்கு
நாட்டியகைகால்விலங்கு யாவுநீக்கிப்
புனைத்தடமாஞ்சிறைவிடுத்து வினயமாகப்
புகலுவான்பகையினின்று மகலுவானே. (கஎ)

இராகம் - முகாரி - அடதாளம்.

கண்ணிகள்.

க. அத்தானேயுங்களை மெத்தப்பகைத்தேனே
ஆத்மபந்துவென் றறியாமலே
புத்திரரையெல்லாங் கொல்லத்துணிந்தேனே
புத்திநீதி குறியாமலே

உ. தயவென்பதில்லாமல் சத்துருவாகியே
சார்ந்தேன்சிசு அத்தி நானே
ஜெயமென்பதில்லாமல் உயிரோடிருந்தாலும்
செத்தசபம்போ லானேனே

ங. தெய்வமுந்திமொழி சொல்லியதேயிந்த
செனங்கள்மாத்திரம் அல்லாது
செய்வதென்னவினி சேயராறுவரையும்
சேதித்தேனென்கோபம் பொல்லாது

ச. அற்பவயதுள்ள புத்திரரைக்குறித்து
ஆசைதானுங்கொள்ளப் போமோ
பொற்பதுமனன்று போட்டதலைவிதி
போக்கவொருவரா லேயாமோ

ரு. தத்துவமென்பதை யறியாதமூடர்கள்
தன்னைத்தானே புகழ்வார்கள்
புத்திரபௌத்திராதி பொருள்கள்சதமென்று
பூரித்துள மகிழ்வார்கள்

சா. மங்களகரமுள்ள தங்கையேயுன்னிட
மைந்தரைக்கொன்ற வென்றன்மீது
சங்கைகொள்ளாமலே செய்தபிழைகளை
க்ஷமித்தருள்புரிவா யிப்போது.

வசனம்.

வசுதேவர் கஞ்சனுக்குச் சொல்லுதல்.

விருத்தம்.

தத்துவங்கள்தருமநெறி பலவுஞ்சொல்லித்
தாழ்ந்துநின்றமைத்துனனுங் கஞ்சன்தன்னை
உத்தமனும்வசுதேவர் கண்டுகந்து
உம்முடையவார்த்தையெலா முண்மையாவுங்



41

கத்தன்செயலல்லாமல் வேறேயெந்தக்
காரியமுநடக்காதிப் பூமிதன்னில்
சத்தியமாம்இதுவென்றே நீதியாகச்
சாற்றுவான்சிலகூறிப் போற்றுவானே. (கஅ)

இராகம் - மத்தியமாவதி - ஆதிதாளம்.

பல்லவி.

மைத்துனரோகேளும் - வருத்தம்வேண்டாம்
மைத்துனரோகேளும்.

சரணங்கள்.

க. மைத்துனரோகேளும் மகியிற்பிறந்தபோதே
வந்தவிதிகளெல்லாம் அனுபவித்திடவேண்டும்
சுத்தமனமில்லாமல் சோகமோகத்தில்சிக்கி
சுற்றித்திரிவார்கள் சிலமானிடர் (மைத்)

உ. புத்தியில்லாதபேர் மமதையிறேல்னீறாய்
புகலுவார்சகலமுந் தமதென்று
மூத்திக்கதிபன்செய லென்றறியாதெம்மால்
முடிந்திட்டதென்பார் சிலமானிடர் (மைத்)

ங. பூதபவிஷ்ய வர்த்தமானந்தெரியாமல்
பொன்னையேபுகலுவார் ஸ்திரமென்று
சோதிநூலருக்ஷம தேகத்தைச்சதமெனச்
சொல்லித்திரிகுவர் சிலமானிடர் (மைத்).

ச. பஞ்சபூதங்களும் பிறந்திறப்பதுண்டு
பிரபஞ்சத்தைநிசமாகப் பிரமித்துநின்று
தஞ்சமெனவேலட்சுமி பதியையடையாமல்
தயங்கித்திரிவார்கள் சிலமானிடர். (மைத்)

வசனம்.

கஞ்சன் காளி ககனத்தில் சொல்லியதை மந்திரிக்குச்சொல்ல அவன் பயப்படவேண்டாமெனத் தயிரியங் கூறல்.

———:o:———

விருத்தம்.

அனகவசுதேவருரை கேட்டகஞ்சன்
அன்றிரவுதள்ளிமக் கிரியைக்கண்டு
தனக்குரைத்தகாளிநிச வார்த்தையோடு
சகலமுந்தெளிவாகச் சாற்றிநிற்க
மனக்கவலையேனுனக்கு மன்னாவென்று
மதியமைச்சன்தயிரியங்கள் மெத்தச்சொல்லி
உனக்கொருதீங்கில்லையிதை யுறுதியாக
வுன்னெஞ்சேன் அச்சமின்றி மன்னென்றானே. (ககூ)

நொண்டிச்சிந்து - ஏகதாளம்.

பல்லவி.

கஞ்சனோவாரும் - உத்தரவு
கொஞ்சமேயெங்களுக்குக் கொப்பெனத்தாரும்.

சரணங்கள்.

க. பட்டணங்கள் கிராமம் - இடைச்சேரி
பாலரிருக்குங்கிர கங்கள்தோறும்
பொட்டெனவே யோடி - வளர்ந்த
புத்திரரொல்லாரையுங் கொன்றுவாரோம் (கஞ்சனோ)

உ. யுத்தத்துக் கஞ்சியோடும் - பெயரையும்
ஊர்களையிழந்துபோ னோரையும்
மித்திரர் அனைவரையுங்-கொன்றிடாமல்
வீரவிரோதிகளைக் கொன்றுவாரோம் (கஞ்சனோ)

ங. அந்தணர் பசுக்களையும் - அவனியில்
ஆலயமருமறை நான்கினையும்
விந்தை யாகசாலை - முழுமையும்
வெற்றியுடனழித் திட்டுவாரோம் (கஞ்சனோ)

ச. அரியர னயனாதி - தேவர்கள்
ஆகிலுநமக்கென்ன பயமில்லை
துரிதமாகவே சென்று - அவர்களை
துர்க்கதியமலோகஞ் சேர்த்துவாரோம் (கஞ்சனோ)

ரு. இந்திரன் முதலான - உத்தமர்
எழுநிலைமாடத் தொளிந்தாலும்
சிந்தையில் தங்காமல் - அவரையும்
ஸ்ரீலக்ஷ்மிபதியையும் ஜெயித்துவாரோம். (கஞ்சனோ)

வசனம்.

நந்தகோபருக்குக் கண்ணன் மைந்தனாகப்பிறந்ததை தாதிகள் சொல்லுதல்.

———:0:———

விருத்தம்.

அருந்துணையாமந்திரிக ளிந்தவாறு
அரசனுடனேயோதி விடையும்பெற்றுக்
கருமுதலாயழித்திங்கு வருவோமென்று
காசினியில்பலவிடங்கள் தேடிச்சென்றார்
தெருளசோதைதிகழ்சூதிகா கிரகத்தில்
திருமாலுங்கண்ணனா யுதித்தானென்று
அருகிருந்ததாதியர்க ளோடியங்கு
அறிவித்தார்நந்தருக்குத் தெரிவித்தாரே. (சம)



ஸ்திரீராகம் - சாபுதாளம்.

பல்லவி.

நந்தகோபரே கேளும் - நந்தகோபரேகேளும்
மைந்தனவதரித்தானேளும்.

சரணங்கள்.

க. சுந்தரமாகஅகத்தில் சோதையிட்சூதிகாகிரகத்தில் (நந்த)
உ. ஆயர்குலங்கள்தழைக்க அடியார்களெல்லோரும்பிழைக்க (நந்த)
ங. பாலகோபியரைக்கூட பலராமனுடனேவிளையாட (நந்த)
ச. துஷ்டரெல்லோரும்நசிக்க சிஷ்டரிந்தஜகத்தில்வசிக்க (நந்த)
ரு. திருவாயர்பாடியைத்தாங்க ஸ்ரீலட்சுமிபதியம்சமோங்க (நந்த)

வசனம்.

புத்திரன் பிறந்த சந்தோஷத்தால் வினா தானஞ்செய்தல்.

———:0:———

விருத்தம்.

சந்தோஷவார்த்தையுரை பெண்களுக்குத்
தக்கதோராடையா பரணமீந்து
அந்தமிகுபதினெண்வாத் தியமுழங்க
அந்தணர்களனைவரையும் வரவழைத்து
மைந்தனவதாரதினம் நல்லதென்று
மங்களமாய்ப்புரோகிதருஞ் சொல்லநந்தர்
சிந்தையிலேமகிழ்ந்துநன் னீரோயாடி
செய்கின்றார்வினாதானம் பெய்கின்றாரோ. (ருக)

இராகம் - தோடி - சாபுதாளம்.

பல்லவி.

வினாதானங்கள்செய்தார் - வேதியர்க்குநந்தகோபர்
வினாதானங்கள்செய்தார்.

அநுபல்லவி.

தரைமேல்புண்ணியங்கள் சிறக்க
தங்குமாயர்பாடி மேலும்சிறக்க (வினாதா)

சரணங்கள்.

க. சம்பாநெல்லுமுதலான தினிசுடனேகலந்து
அன்பாகவிதிப்படி அபரஞ்சிரத்நங்கள்கலந்து (வினா)
உ. கும்பல்கும்பலாகத்திலம் கோலமுடன்கொட்டி
சம்பிரமமாய்விப்பிரர்கட்கு சாஸ்திரப்படியெண்ணிக்கெட்டி (வினா)
ங. கோடிகோடியாய்பசுக்கள் கொணர்ந்தங்கேயலங்கரித்து
ஈடில்லாதஅந்தணருக் கிந்தார்மந்திரமுரைத்து (வினா)
ச. பட்டுபட்டாவளிநல் பணியாதிகள்நன்று
இட்டலட்சுமீபதியைநினைந் திந்திருந்தார்களன்று (வினா)

வசனம்.

ஆயர்பாடியில் மங்களோச்சவங் கொண்டாடுதல்.

———:o:———

விருத்தம்.

கொடுத்தபடி தானங்கைக் கொண்டுவிப்ரர்
கோலமொடு அவர்பதிக்குப் போனபின்னர்
எடுத்தங்கேசீர்வரிசை யாவுங்கொண்டு
எக்களித்து ஆயரெலாம் பரிந்துசூழ்ந்து
நடுத்தடத்தில்அரிநாயந் தன்னைப்பாடி
நந்தருக்குப்பிறந்தபிள்ளை யின்பெருக்கால்
அடுத்தடுத்துப்பதினெண்வாத் தியமுழங்க
ஆடினார்உற்சவங்கொண் டாடினாரே. (௪௨)

இராகம் - காம்போதி - அடதாளம்.

பல்லவி.

இந்தவுற்சவங்கள்செய்ய என்னதவஞ்செய்தோமென்று
சிந்தைமகிழ்ந்தரியையாயர் சேவித்தாரன்று.

அநுபல்லவி.

அந்தஅயோத்தியைப்போல அலங்காரங்கள்செய்துநாடி
மந்தகாசன்தன்னையேற்றி வாழ்த்தினரெல்லாருங்கூடி (இந்த)

சரணங்கள்.

௧. வாசலலங்காரஞ்செய்து வண்ணப்பந்தல்சமைப்பாரும்
வாசலிலாமுத்துக்கோலம் இட்டுஇருப்பாரும்
கோசலையாள்பாலன்போல குழந்தைரூபத்தைநீரும்
காசினியிற்சோதைமைந்தன் கலிதீர்க்கவந்தான்பாரும் (இந்த)

௨. குத்துவிளக்கோடுயர்ந்த கொடிவிளக்குகளேற்றுவாரும்
ரத்தினங்களிழைத்தபதுமை அங்குவைப்பாரும்
சுற்றிக்கம்பநாட்டிமகரத் தோரணங்கள்கட்டுவோரும்
சுத்தியாயர்கூட்டமாகக் கரங்கள்கூப்பித்தட்டுவாரும் (இந்த)

௩. நந்தன்பெருமையாவுஞ்சொல்லி நற்கொடிகள்நாட்டுவாரும்
அந்தமுள்ளகமுகுவாழை அடுத்திணைப்பாரும்
பந்திபந்தியாய்விசித்திர படங்கள்மேலேதூக்குவாரும்
விந்தையாகவீதியெங்கும் வேடிக்கைசெய்வதையும்பாரும் (இந்த)

௪. அட்டபாக்கியங்கள்மீற ஆயர்பாடிவாழ்த்திநேர
இட்டலட்சுமிபதியை எத்தியேசேர
மட்டிலாதவரிசைகொண்டு வந்துசிசுவைக்காணும்வீர
கிட்டணிங்கேபிறந்தானென்று கீர்த்தனங்கள்பாடியார. (இந்த)

வசனம்.

கோபியர்கள் குழந்தையைக் காண வருதல்.



விருத்தம்.

பெருமைமிகுசோதைபிள்ளை தன்னைக்காணப்
பெண்களெலாமொருமிக்கக் கூடிக்கொண்டு
அருமையுடையாபரணம் யாவும்நல்ல
ஆடைகளும்அலங்கார மாகப்பூண்டு
தெருவிலந்தமாலினது திருநாமத்தைத்
தியானித்துமங்களமே பாடிவந்து
ஒருமனதாய்நந்தர்திரு மாளிதன்னில்
ஒண்டினார்சிசுவருகில் அண்டினாரே. (௪௩)

இராகம் - தோடி - ஏகதாளம்.

பல்லவி.

கோவலமாதர்வந்தாரோ - குழந்தையைக்காண
கோவலமாதர்வந்தாரோ.

அநுபல்லவி.

கோவலமாதர்வந்தார் கோடிசந்திரன்போலே
பாவவிமோசனனும் பாலகன்பிறந்ததாலே (கோவல)

சரணங்கள்.

௧. குண்டலஞ்செவிகளில் ஆன்ன - வதனமதில்
கோலக்கஸ்தூரிபொட்டு மின்ன - தாளிரண்டிலும்
தண்டைசிலம்பு கலகலென்ன - இடையில்பசுந்
தங்கவொட்டியாணமு மன்ன - தேமற்படர்ந்த
கொங்கையிரண்டும்பூர்ண கும்பங்கள்போற்குலுங்க
அங்கந்தனிலுயர்பட் டாடைகளுந்துலங்க (கோவ)

௨. சூட்டியமாமலர் மணக்க - மங்கையருக்குச்
சோதிக்குழல்கள் தாழ்ந்திருக்க - தேகத்திலெங்கும்
பூட்டியபூஷணங்கள் மிக்க - ஒளிதரவே
புனுகுஜவ்வாது பரிமளிக்க - சுந்தரமாக
அந்தரந்தனிலுள்ள அரம்பையர்களுங்கண்டு
சந்தோஷமாகவேதான் சகலருங்கூடிக்கொண்டு (கோவ)

௩. வந்தமாதர்க ளீனவோரும் - எடுத்துவந்த
வரிசைகளெல்லாந் தந்துநேரும் - பலனைக்கண்டு
சொந்தவிக்குழந்தையைப் பாரும் - என்றெவர்களும்
சொல்லிக்கொண்டெங்கள்கையில்தாரும் - என்றுசோதை
தன்னையேகேட்டுக்ஷேமம் சகலமும்விசாரித்து
என்னவற்புதமென்றார் இதயமதுபூரித்து. (கோவ)

வசனம்.

கோபியர் குழந்தையின் அதிசயரூபத்தைக் கண்டு புகழ்தல்.

———:o:———

விருத்தம்.

பார்க்கவந்தகோபியர்கள் குழந்தைதன்னைப்
பரிவோடுஅவர்எடுத்து முத்தமிட்டுக்
காக்கவந்தநாதனமக் கிவனேயென்று
கருத்ததனிலெல்லவரு மிருத்திப்பாலன்
திர்க்ககரசரணரோகா சின்னமெல்லாம்
சீர்பொருந்தக்கண்டுளத்தி லானந்தித்துப்
பார்க்குள்மாலவதார மிதுதானென்னப்
பன்னுவார்தோத்திரஞ்செய் துன்னுவாரோ. (௪௪)

இராகம் - சாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

பார்க்கப்பதினாயிரங்கண்கள்போதுமோ - நந்த
பாலனுடையசேவை.

அநுபல்லவி.

ஆர்க்குங்கிடைக்குமோ அவனியிலிச்சிசு
அன்னையசோதையா ளென்னசெய்தாள்தவசு (பார்க்கப்)

சரணங்கள்.

௧. விந்தையாகியசிறு விரல்களுள்ளவிதமும்
விரைமலர்கள்போல விருக்குமிருபதமும்
அந்தமாய்க்கடைந்தன்ன அமைந்தகால்கள்மிதமும்
அரனுங்கண்டுநடிக்க அம்முழந்தாளிதமும் (பார்க்)

௨. துடையிரண்டும்யானைத் துதிக்கையினைப்பொருவும்
துதிப்பார்உவமைகாணு துய்யவிடையுருவும்
உடையும்புனற்சுழிபோல் ஒளிரும்உந்திமருவும்
உலகம்புகழுமந்த உரத்தினதுதிருவும் (பார்க்)

௩. குன்றெனவிருதோள்கள் கொண்டவலியுரமும்
கோகனகமலர்க் கொப்பாமிருகரமும்
ஒன்றியசங்கம்போல் ஓங்குங்கண்டதரமும்
உயர்ந்தசெம்பவளத்தை ஒக்குநல்வாய்நிறமும் (பார்க்)

௪. கவிலுஞ்சிமிழ்புரை நாசியினந்தமும்
நன்குநீலோற்பல நயனங்கள்சந்தமும்
செவியிரண்டும்வள்ளைப் பூவின்சம்மந்தமும்
சீர்புருவம்வில்லைச் சேர்ந்திடுதொந்தமும் (பார்க்)

௫. நெற்றிப்புகழும்பிறை நிகர்த்திடுநேர்த்தியை
நீலமேகமெனச் சிரசின்கேசபூர்த்தியை
உற்றரவிகோடி யுதித்தாற்போற்கீர்த்தியை
உள்ளவனுயுற்பவித் திடுமூர்த்தியை. (பார்க்)



வசனம்.

கண்ணனுக்குத் தைலமாட்டுதல்.

———:o:———

விருத்தம்.

பாலனதுபாதாதி கேசமட்டும்
பாங்கானஅவயவங்கள் தம்மைக்கண்டு
கோலமிகுகோபியர்கள் குதுகலிப்பாய்
குணமுள்ளசோதைபாக் கியத்தைமெய்ச்சி
மாலவனுயுதித்ததிரு மைந்தனுக்கு
மங்களஸ்நானஞ்செய் விக்கவெண்ணிச்
சீலமொடுபெரிமளவஸ் துக்களெல்லாஞ்
சேர்த்திட்டார்தைலமது தேய்த்திட்டாரோ. (௪௫)

இராகம் - ஆனந்தபைரவி - ஏகதாளம்.

கண்ணிகள்.

௧. எண்ணைக்காப்புச் சாற்றியே - ஒருகோபி
எடுத்தவனைச் சீராட்டினாள்
வண்ணமிகு கண்ணனுக்கு - ஒருகோபி
மஞ்சனாநன் னீராட்டினாள்

௨. பச்சைவண்ணன் றனக்கு - ஒருகோபி
பட்டுவஸ்திர முடுத்தாள்
இச்சையுடன் பாலனுக்கு - ஒருகோபி
ஏற்றபணிகள் தொடுத்தாள்

௩. சுட்டியுட னுச்சிபூவும் - ஒருகோபி
சுந்தரமதாய் தரித்தாள்
வட்டஜடை பில்லைகுச்சு - ஒருகோபி
வைத்துமிக அலங்கரித்தாள்

௪. இரவிமதிப்பிரபை துலங்க - ஒருகோபி
இஷ்டமுடன்சிரசி லிட்டாள்
மரகதக் குண்டலங்கள் - ஒருகோபி
வளர்செவியில் மாட்டிவிட்டாள்

௫. கண்டத்தில் கௌத்துவத்தார் - ஒருகோபி
கனமாகவே சாத்தினாள்
அண்டிபுஜ வலயங்களும் - ஒருகோபி
அழகுபெற இட்டேத்தினாள்

௬. ஆணிப்பொன் ஆனகடகம் - ஒருகோபி
அறிந்துகரத்திற் பூட்டினாள்
மாணிக்க மோதிரங்கள் - ஒருகோபி
மகிழ்ந்துவிரலிற் கூட்டினாள்

௭. என்னுப்பூ கிண்கிணியும் - ஒருகோபி
இடையில்இசையக் கட்டினாள்
தெள்ளறிவு மைந்தனுக்கு - ஒருகோபி
இகழ்பாதசிலம் பொட்டினாள்

௮. முத்துமல்லிகை சரங்கள் - ஒருகோபி
முன்னுச்சியிற் சூட்டினாள்
கஸ்தூரிதிலகப் பொட்டும் - ஒருகோபி
கதம்பங்களுந் தீட்டினாள்

௯. நற்பவள முத்துமாலை - ஒருகோபி
நன்மையுடனே தொடுத்தாள்
கற்பூர ஆரத்தியால் - ஒருகோபி
கண்திருஷ்டிகள் விடுத்தாள்

௰. மேலும்விசு வாசமாக - ஒருகோபி
விசிறியால் வீசினின்றாள்
ஸ்ரீலட்சுமிபதி யருளினால் - ஒருகோபி
சிசுகாலும் வாழ்கவென்றாள்.

வசனம்.

கண்ணனுக்கு லாலி பாடுதல்.

—:o:—

விருத்தம்.

கேசவனுக்காபரண மெல்லாம்பூட்டிக்
கிடையாதமலர்தேடிச் சூட்டிமிக்க
ஆசையுடன்பால்கொடுத்து மைபொட்டிட்டு
அரிதானபாலகனை யதிசீராட்டி
மாசகலமாணிக்கத் தொட்டிலிற்கண்
வளர்ந்திடவேவாழ்த்திமெல் லெனவிடுத்துக்
காசலம்புமுலைமாதர் அன்புதன்னைக்
காட்டுவார்லாலிசொல்லி யாட்டுவாரே. (௪௯)

இராகம் - பைரவி - சாபுதாளம்.

கண்ணிகள்.

௧. ஆணிச்செம்பவளக்கால் நட்டுவிட்டம்பூட்டி
அரியசெங்கனக சங்கிலிகளதில்மாட்டி
மாணிக்கச்சிறுகட்டில் வகையாகக்கூட்டி
மாதரலங்கரித்தார்கள் மகிழ்ச்சிபாராட்டி (லாலி)

௨. விந்தைமுகமல்லைதைத்த மெத்தைமேலிட்டு
மேற்றட்டில்பொற்கிளிகள் மினுக்கவேவிட்டு
மைந்தனையுந்தொட்டிலிற் கண்வளரவிட்டு
மங்கையர்களாட்டினார் மணிவடங்கள்தொட்டு (லாலி)



௩. மச்சாவதாரமாய் மறையளித்தசீலா
வரமோகியாயமுது வழங்குமதிலோலா
உச்சிதவராகமா யுலகளித்தமேலா
உயர்நரசிங்கமா யுதித்தஅனுகூலா (லாலி)

௪. வாமனனெனத்தோன்றி மண்ணளந்தபாதா
வானவர்க்குமுதவி செயும்மெய்ஞ்ஞானபோதா
ஏமமறுகோபியர்க்கும் இஷ்டமுளநாதா
இன்பமாய்க்கண்வளராய் எதுகுலப்பிரக்யாதா. (லாலி)

இதுவுமது.

௧. லாலிஸ்ரீகிருஷ்ணலாலி - அச்சுதா - லாலிஸ்ரீஅனந்தலாலி
லாலிமாலிந்தலாலி - ஈறாறு - நாமமுள்ளவனேலாலி

௨. கேசவநாரணனேலாலி - மாதவா - கீர்த்தியுள்ளவனேலாலி
மாசிலாவிஷ்ணுலாலி - கண்வளர் - மதுசூதனனேலாலி

௩. புகழ்திரிவிக்கிரமனேலாலி - வாமனா - புண்யஸ்ரீதரனேலாலி
திகழ்இருடிகேசலாலி - நித்திரைசெய் - ஸ்ரீபத்மநாபலாலி

௪. உயர்தாமோதரனேலாலி - திருப்பெயர் - ஓராயிரத்தலாலி
புயல்வண்ணமாலேலாலி - மாசோதை - புத்திரகண்மணியேலாலி

௫. நந்தகுமாரலாலி - எங்களுயிர் - நவநீதசோரலாலி
சிந்தைமகிழ்மைந்தலாலி - கண்வளர் - ஸ்ரீலட்சுமிநாதலாலி.

தாலாட்டு.

௧. மாணிக்கமரகதக்கல் வைடூரியமிழைத்த
ஆணிப்பொன்தொட்டில்தனை யழகாயலங்கரித்து
வாணிமகிழ்நாதன் வரவிட்டான்உன்றனக்கு
பேணியதில்கண்வளராய் பீதாம்பரனேகண்வளராய்

௨. ஏர்மருவுகிண்கிணிப்பூ இலங்குமரைவடங்கள்
மார்புக்கிசைந்த வைரமணிப்பதக்கம்
பார்வதியாள்நாதன் பண்ணிவரவிட்டான்
சீர்பெருகக்கண்வளராய் செல்வனேகண்வளராய்

௩. தாமரைத்தாள்களுக்கு தண்டைச்சிலம்புகளும்
கோமளமேனிக்குக் குறையற்றபூஷணமும்
க்ஷேமமாயிந்திரனுஞ் செய்துவரவிட்டான்
நேமனேகண்வளராய் நித்தியனேகண்வளராய்

௪. சங்குவலம்புரியும் சந்திரசாரப்பணியும்
அங்கத்துக்கேற்ற அரியபீதாம்பரமும்
மங்களமாக வானோர்வரவிட்டார்
துங்கனேகண்வளராய் துய்யனேகண்வளராய்

௫. உச்சிதப்பவளமும் ஒளிவுடையநல்முத்தும்
கச்சிதக்கைகளுக்கு கனகவளைநற்கொலுசும்
மெச்சிக்குபேரன் வேண்டிவரவிட்டான்
அச்சுதனேகண்வளராய் அற்புதனேகண்வளராய்

௬. காயாம்பூவண்ணனே கழுத்துக்கொருவடமும்
மாயாவுன்செவிகளுக்கு மணிமகரகுண்டலமும்
தூயகுலவருணன் துரிதமாய்வரவிட்டான்
ஆயனேகண்வளராய் அப்பனேகண்வளராய்

௭. கரவலயகங்கணமும் கனவங்கிதோடாவும்
பரவுமுகசுட்டியொடு பரிதிமதிநற்பிரபையும்
அருமையாயுன்றனுக்கு அருணன்வரவிட்டான்
பெருமையொடுகண்வளராய் பெருமானேகண்வளராய்

௮. மெச்சுவிழியஞ்சனமும் மேனிக்குச்சந்தனமும்
பக்ஷமுடனேசாந்தும் பரிமளகஸ்தூரியுமே
அக்ஷயமாயீசன் அறிந்துவரவிட்டான்
லக்ஷ்மிபதிகண்வளராய் ரத்தினமேகண்வளராய்.

———:o:———

வசனம்.

நந்தகோபர் ஆயர்களுக்குச் சொல்லுதல்.

விருத்தம்.

பாடியவப்பெண்களுக்கு நந்தகோபர்
பரிவாகஆடையாபரணமீந்து
தேடியதோர்திரவியங்கள் வேதியர்க்குத்
திரளாகவுயர்தான தருமஞ்செய்ய
நாடியதைப்பெற்றவர்க ளாசிகூறி
நன்னயமாய்த்தமதுமனை சேர்ந்தபின்பு
ஆடிவருமாயருக்குச் சோதைநாதன்
அறிவிப்பார்தமதெண்ணம் தெரிவிப்பாரே. (௫௭)

இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

ஆயர்களாகேளுங்கள் - என்றனுரையை
ஆயர்களாகேளுங்கள்.

சரணங்கள்.

௧. ஆயர்களாநீங்கள் அன்பாகவேயின்று
மாயாவதாரனை மருவிக்காத்திடும்நன்று (ஆயர்)

௨. உக்கிரசேனன்சேய்க்கு உள்ளதப்பங்கட்டி
திக்கெங்கும்புகழ்ந்திடத் திரும்பிவருவேன்கிட்டி (ஆயர்)



௩. போய்வருகிறேன்இந்தப் புத்திரரிருவரையும்
ஓய்வின்றிக்காத்திருங்கள் உட்கொண்டென்னுரையும் (ஆயர்)

௪. ஸ்ரீலட்சுமிபதியருள்செய் கோலத்தையாளும்
பாலனைப்பரிவுடன் பார்த்துக்கொள்ளுவீர்நாளும். (ஆயர்)

———:o:———

வசனம்.

நந்தகோபருக்கு வசுதேவர் சொல்லுதல்.

விருத்தம்.

ஆயருக்குநந்தனிந்த விதமுரைத்து
அதிவிரைவாய்வடமதுரை நகரிற்சேர்ந்து
தீயனுக்குக்கப்பமது செலுத்தவந்த
சேதியதைவசுதேவர் செவியில்கேட்டு
நேயனையன்பாகமுந்தி வரவழைத்து
நெருங்கியிருகையாலுந் தழுவிக்கொண்டு
தூயநந்தகோபருக்குச் சேதிமுற்றும்
சாற்றுவார்வசுதேவர் போற்றுவாரே. (௫௮)

இராகம் - சங்கராபரணம் - ஆதிதாளம்.

பல்லவி.

நந்தரோநீரிங்கு வந்ததினாலேயென்
சிந்தைமிகமகிழ்ந்தேன்.

அநுபல்லவி.

அந்தரங்கமான அன்பரோசேதிகேட்க
ஆசையுடனே யிருந்தேன் (நந்தரோ)

சரணங்கள்.

௧. அந்தகோகுலத்தி லாடுமாடுகளாதி
அனைவருஞ் சேமந்தானா
மந்தைமேய்த்திடு மாயர்களுஞ்சுகமாய்
வாழ்ந்துகொண்டிருக் கின்றாரா (நந்த)

௨. மைந்தரில்லாமலே மனமிகவும்வாடி
மனைவியோ டிருந்தீரோ
சிந்தனைதீர நின்மனைதன்னில்
செல்வன்வந் துதித்தானா (நந்த)

௩. என்றனுடையபாலன் உன்றன்மகனோடே
இணங்கி வசிக்கின்றானா
உன்றனைத்தந்தையா உண்மையாகநினைத்து
உகந்தங்கே உறைகின்றானா (நந்த)

௪. கஞ்சனுக்குக்கப்பங் கட்டும்பொருட்டாக
கடுகிவந் ததிறுலே
பஞ்சப்பிராணனுனநான் யரியந்தோழரேயும்மைப்
பார்க்கக்கிடைத்த தன்றோ (நந்த)

௫. குடும்பிரவாசத்தில் ஒதுக்கிவிட்டமரங்கள்
ஒன்றாகச் சேர்ந்திடுமோ
நாடுங்காடுந்திரிந்து நாம்தேடியலைந்தாலும்
நாரணன்செயல் தப்புமோ (நந்த)

௬. ஒருமையுடையநேசர் ஓரிடந்தன்னிலே
உறைந்தே யிருப்பாரோ
திருவுடையலட்சுமி தேவன் தன் அருளாலே
தெரிசித்தேனும்மை யிப்போது. (நந்த)

———:0:———

இதுவுமது - விருத்தம்.

வசுதேவர்சொல்லியதை நந்தர்கேட்டு
வஞ்சமற்றசிந்தையுடன் அவரைப்பார்த்து
அசுரகஞ்சன்உமதுசிசு ஆறுமிங்கே
அதமாக்கிவிட்டபின்பு பிறந்தபெண்ணை
விசுவாசமற்றெறிய விண்ணிற்சென்றாள்
விதியுமிப்படியாச்சே வேந்தேயென்ன
பசுவானவசுதேவர் மேலும்எண்ணிப்
பாவிப்பார்சங்கதிகள் மேவிப்பாரே. (௪௯)

இராகம் - செஞ்சுருட்டி - அடதாளம்.

பல்லவி.

நந்தரோவீணாகச் சிந்திப்பதாலே லாபம்என்னகாணும்.

அநுபல்லவி.

வந்தவிதி யனுபவிக்கவேணும்
மாயன்செயலென்றந் தப்பாதுகாணும் (நந்த)

சரணங்கள்.

௧. வந்துவெகுநாளாச் சுதுநீரும்
மந்தைதனிலுற் பாதநேரும்
எந்தனுடைய வார்த்தையைப்பாரும்
இங்கிதமாக யிருப்பிடஞ்சேரும் (நந்த)

௨. பாலகர்தம்மையங்கே நீர்விட்டு
பயணமாய்வந்தீரோ கஞ்சன்பொருட்டு
சாலவுமென்சொல்லைச் சிந்தையிலிட்டு
தங்காமற்சீக்கிரம் தாவினிற்கிட்டு (நந்த)



௭. இந்தவூரிலே யிருக்கவேண்டாமினி
எந்தனுரையி விதையமதாகனி
சிந்தையில்மாயனை எண்ணிடுவாய்தனி
சீக்கிரமிருப்பிடஞ் சேர்ந்திடக்கவனி (நந்த)

௮. எந்தகாலத்தில் எப்படியாகுமோ
அந்தவிதியினை யனுபவிப்பாகுமே
முத்தியலட்சுமி முகுந்தனுலாகுமோ
மோசம்வருமுன்னே பாடிக்குப்போகுமே. (நந்த)

———:0:———

வசனம்.

பூதகியை விஷமுலை கண்ணனுக்குக் கொடுக்கும்படிக் கஞ்சன் ஏவுதல்.

விருத்தம்.

இந்தவிதம்வசுதேவ ரோதநந்தன்
எழுந்துடனேயவரிடத்திற் செலவுபெற்று
வந்திருந்தஆயரொடு கப்பங்கட்டி
வண்ணத்திருத்தோதனி லேறிச்சென்று
சிந்தைதனில்ஆச்சரிய மேபெருகச்
சீருள்ளகோகுலத்திற் சேருமுன்னம்
பந்தமில்லாப்பூதகியைக் கூவிக்கஞ்சன்
பண்ணிணன்மதிமோசம் எண்ணிறனே. (௫௰)

இராகம் - பைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

பூதனையேகேளடி - என்வார்த்தையை
பூதனையேகேளடி.

அநுபல்லவி.

பூதனையேயிந்த புவியதனிற்பிறந்த
புத்திரரைக்கொல்ல புதுமையாகவேவந்த (பூதனை)

சரணங்கள்.

௧. ஆதியில்மாயை யொன்று - கோபத்துடன்
ஆகாயத்தனிற் சென்று
நீதியாகவே நின்று - உரைத்தசொல்
நிச்சயமாயிற் றின்று
வாதியாகவிந்த வையத்தில்வளர்கின்ற
சோதியாஞ்சிசுதனை துணித்துவாவெதிர்நின்ற (பூதனை)

௨. பட்டணங்களில் மேலும் - கிராமங்களில்
படியநீபோய்ச் சாலும்
மட்டில்லாப்பகை யாலும் - செழிக்கின்ற
மைந்தனையொருக் காலும்

விட்டுவிடாமலே வேதனைசெய்துகொல்
எட்டுநாளைக்குள்ளே என்னிடம்வந்துசொல் (பூதனை)

௩. பச்சைப்பாலனை யடுத்து - இருகரத்தால்
பரிவுடனே யெடுத்து
நச்சுமுலை கொடுத்து - அதையொரு
நாழியிலே கெடுத்து
மெச்சிக்கொள்ளும்படி வேகமாய்வந்துசேர்
அச்சமொன்றுமிலை அறிவித்திடுவாய்நேர் (பூதனை)

௪. தன்னைக்கொல்லுஞ் சாதி - பசுவையுந்
தான்கொல்ல நூலாதி
பன்னுமந்த சேதி - நமக்கினி
பக்குவமாம் நீதி
சொன்னேன்உனக்கதைத் துரிதமாகவோடி
மன்னுமக்குழந்தையை மடித்தென்றன்முன்வாடி. (பூதனை)

———:o:———

வசனம்.

பூதனை பாலகனைத் தேடி வருதல்.

விருத்தம்.

நாடியேகஞ்சனிந்த வார்த்தைசொல்ல
நங்கைபூதகியுமதி ரூபங்கொண்டு
ஓடியேயுலகத்தில் எங்குஞ்சென்று
உபத்திரவஞ்செய்து பாலகரைக்கொன்று
தேடியந்தக்கோகுலத்தில் வந்துசேர்ந்து
திருச்சோதைமகனையவள் மனையிற்கண்டு
வாடிவெகுபால்சுரந்து வந்தாள்போல
வருந்தினள்பாலனிடம் பொருந்தினளே. (௫௧)

இராகம் - துசாவந்தி - சாபுதாளம்.

பல்லவி.

வந்தாள்வந்தாள் - பூதகி - வந்தாள்வந்தாள்.

சரணங்கள்.

௧. வந்தாள்பூதனை முலையில்விஷம்வைத்து
வஞ்சனைகள்மிக நெஞ்சிலமைத்து
இந்திரஜாலங்கள் மிகவுங்கற்று
எழில்சேரும்நல்ல ரூபமேபெற்று (வந்தாள்)

௨. சிஷ்டர்யாவருந் தினமுநாடி
சிறந்ததிவ்யசங் கீர்த்தனம்பாடி
விஷ்ணுபத்திகள் மிகவுங்கூடி
மேன்மையாய்வாழுங் கோகுலந்தேடி (வந்தாள்)



55

௩. வண்டயங்காலில் கலகலவென்ன
மேனிதனிலா பரணங்களுமின்ன
குண்டலங்களுங் காதினில்துன்ன
குழுக்கிக்கோதைபோ லழகும்மன்ன (வந்தாள்)

௪. வஞ்சிக்கொடிபோ லிடையுந்துலங்க
மார்பில்முத்தா பரணம்இலங்க
பஞ்சின்மெல்லடிப் பாரில்நலங்க
பருத்தவிருகொங்கைக் குடங்களலங்க (வந்தாள்)

௫. தொடுத்தமல்லிகை முல்லைமுடித்து
துய்யமேகலை யணிந்துநடித்து
எடுத்துமதுவர்க் கங்கள்குடித்து
இதயம்தில்பிடி வாதம்பிடித்து (வந்தாள்)

௬. அத்தர்புனுகு ஜவ்வாதுகள்பூசி
அழகுநகைக ளிரண்டையும்வீசி
சித்தம்பிரமிக்க தேவதாசி
ஸ்ரீயுமெனக்கீ டன்றெனப்பேசி. (வந்தாள்)

————

வசனம்.

பூதகி விஷமுலை கொடுத்தல்.

விருத்தம்.

வந்தவொருபூதகியும் பாலனைக்கண்
வளரமணித்தொட்டிலிலே யிருக்கக்கண்டாள்
அந்தஜாடைகளெல்லா மாயன்கண்டு
அடுத்துவரும்பேயெனவென் றறிந்திருக்கத்
தந்தரமாய்ச்சோதைவிடை பெற்றுக்கிட்டித்
தன்னிடத்துவந்தவளை யுற்றேசிக்க
இந்தசிசுமாய்கைதனை யறியாமூளி
எடுத்திட்டாள்விஷமுலையைக் கொடுத்திட்டாளே (௫௨)

இராகம் - ஆனந்தபைரவி - அடதாளம்.

பல்லவி.

உண்ணடாமுலை உண்ணடா - கிருஷ்ண
உண்ணடாமுலை உண்ணடா.

சரணங்கள்.

௧. உண்ணடாவென்றன்முலையை உச்சிதமான துணைபே
கண்ணுறக்கமேதெளிந்தென் கற்பகமேயுன்றன்வாயால் (உண்)

௨. கங்கையைப்போல்பால்சுரக்குங் கனகரும்பஸ்தன்னியத்தை
செங்கரத்தாலேபிடித்துச் செம்மையாகவுன்றன்வாயால் (உண்)

௩. கன்னலுமமுதுந்தேனுங் கண்டுமுக்கனியுந்தோற்கும்
என்னுடையமுலைப்பாலை இனிமையாகஉன்றன்வாயால் (உண்)

௪. பெற்றதாய்முலைப்பாலுக்கும் மெத்தருசியாயிருக்கும்
நித்திரைசெய்யாமலிப்போ நீலவண்ணாவுன்றன்வாயால் (உண்)

௫. பண்ணியவென்புண்ணியத்தால் பாலகாநானிங்குவந்தேன்
நண்ணும்புகழெங்கும்பெற்ற நந்தன்மைந்தாவுன்றன்வாயால் (உண்)

௬. காசினியெங்குந்திரிந்து கால்கள்மிகநொந்துவந்தேன்
வாசனைவீசென்றன்பாலை மாசிலாமணியுன்றன்வாயால் (உண்)

௭. எதுகுலசிகாமணியே இப்பொழுதுன்பசிதீர
மதுரமானவென்றன்பாலை மன்மதனேயுன்றன்வாயால் (உண்)

௮. பால்வளம்பொருந்துமாயர் பாடிதன்னில்வாழுமிந்த
சேல்விழியாள்அசோதை செல்வமேயுன்றன்வாயால். (உண்)

———:o:———

வசனம்.

பூதகியின் விஷமுலையைக் கண்ண னுண்ணல்.

விருத்தம்.

முலைகொடுக்கஅரக்கியுமன் றங்குவந்து
முராரியென்றறியாம லேயெடுத்தாள்
கலையோதுங்கண்ணபிரா னந்தவேளைக்
காலனிடம்இவள்சேரக் கருத்திலெண்ணி
அலைபோலுந்தவழுந் திருக்கரத்தாலந்த
அகந்தைகற்றவஞ்சகிதன் தனத்தைப்பற்றிக்
குலைநடுங்கப்பாலதனைக் கோவிந்தனப்போ
குடித்திட்டான்பூதகியுந் துடித்திட்டாளே. (௩௩)

இராகம் - மத்தியமாவதி - ஆதிதாளம்.

பல்லவி.

உண்டானே பூதனைமுலை.

அநுபல்லவி.

உண்டானவள்முலையை யுயிருடனேகூட
அண்டபிண்டாண்டங்களும் அதிர்ந்துகிடுகிடுவென்ன (உண்டா)

சரணங்கள்.

க. ஈரேழுலகமுண்ட இருடிகேசனுமன்று
இழுத்தேயவள் ஸ்தன்னியத்தையுண்டபோது
பாரோரும்பயந்திடப் பதறிநடுநடுங்கிப்
பாலாவிடுவிடென்ன பாவியவளலற (உண்)



௨. மெத்தவுற்சாகத்துடன் மேதினியையளந்த
மேகவண்ணனன்று முலையைப்பற்றிவாயில்
வைத்துக்கொண்டுறிஞ்சிட வையகமும்அதிர
மாயாவிடுவிடென்று பேயாயவளலற (உண்)

௩. எங்குந்தானாகவே யிருக்கின்றகண்ணபிரான்
எண்ணிஸ்தன்னிய பானம்பண்ணகாலை
அங்கம்பதறிமாறு வஸ்தைகண்டுபூதை
அப்பாவிடுவிடென்று அச்சத்துடனலற (உண்)

௪. கஞ்சனனுப்பிவைத்த வஞ்சகப்பேய்முலையை
காளமேகனுமுண்ட காலத்திலந்த
நெஞ்சுடனேயுயிரை நடுங்கும்படியுறிஞ்ச
நாதாவிடுவிடென்று ராக்ஷசியுமலற. (உண்)

———:o:———

வசனம்.

பூதகி உயிர்விடுதல்.

விருத்தம்.

பேதைமுலைதனைக்கண்ண னுண்டபோது
பேருலகில்எண்டிசையுங் கிடுகிடென்ன
சோதையமர்கோகுலத்து ஆயரெல்லாம்
சுந்தரஞ்சேர்குழந்தையதி னாற்றல்கண்டு
வேதைநம்பாலகனுக்கு மூண்டோவென்று
விருதாவில்பயந்தவராய் மயங்கிநிற்கப்
பாதையிதென்றறியாத பேயாமூடி
மடிந்திட்டாள்சோர்ந்துடனே மடிந்திட்டாளே. (௩௪)

இராகம் - ஆரபி - சாபுதாளம்.

பல்லவி.

- பூதனையிடிந்தாளே - புவிதனில்
பாதகிமடிந்தாளே.

அநுபல்லவி.

பூதனைமடிந்தாளே போந்தவகைமறந்து
மாதவன்ருதிறால் மன்னுயிரைத்துறந்து (பூதனை)

சரணங்கள்.

க. தரிக்கிலாதுபே ரவஸ்தைதானுங்கண்டு
தரணிமலைபோலக் கைகால்பரப்புண்டு
அரக்கியுள்ளமதில் அலறியுளறிக்கொண்டு
அண்டமதிரஇடி இடித்ததுபோற்புண்டு(பூதனை)

௨. அஷ்டதிக்கெஜங்களும் அதிர்ந்துகிடுகிடென்ன
ஆயர்களுக்கெல்லாம் அளவறுபயந்துன்ன
இஷ்டர்கள் திருமாலின் இணையடிகளைப்பன்ன
இருக்கும்பெருமரத்தை வெட்டிச்சாய்த்ததென்ன (பூதனை)

௩. கோரைப்பற்களுங் குகைபோலமூக்குங்கள்ள
கொங்கைபெருமணற் குன்றுபோலவெள்ள
நீரில்லாதமடு நிகர்த்தவயிறுபள்ள
நெருங்கியகடிதட மாவெளிபோலுள்ள (பூதனை)

௪. ஒன்றிருபாழ்ங்கூபம் ஒத்தக்கண்கள்முகத்தில்
ஒளிசிவந்தமயிர் உடலின்மேற்புறத்தில்
குன்றுபோற்பெருந்தலை உடைத்தாகியுருவத்தில்
கோரமானவடி வெடித்துக்கோகுலத்தில் (பூதனை)

௫. பருவதம்போல்வீழ்ந்தாள் பாரிலுடலொளிக்க
பாலுடனுயிருண்டு பாலகனுங்களிக்க
அருமையாய்த்தேவர்கள் அரும்புமலர்தெளிக்க
அந்தரதுந்துமி வாத்தியம்விளிக்க (பூதனை)

௬. விண்ணில்கந்தருவர்கள் வீணைகொண்டுபாட
மேனகையூர்வசி மின்னனையாராட
மண்ணுலகிலெவரு மங்களஞ்சொலிநாட
மாயனுமவளுடை மார்பினில்விளையாட. (பூதனை)

———:o:———

வசனம்.

குழந்தையைக்கண்டு கோபிகள் திருஷ்டிகழித்துப் புகழ்தல்.

விருத்தம்.

விழுந்திறந்தபூதகிமேல் விபுவாங்கண்ணன்
விருப்பமொடுவிளையாடும் விதத்தைக்கண்டு
எழுந்திருந்துகோபியர்கள் விரைந்துஓடி
ஏகாந்தமாயாடும் சிசுவையேந்தி
அழுந்தியதோர்அஞ்ஞான மயக்கத்தாலே
அய்யனுக்குக்கண்திருஷ்டி யதனைநீக்கக்
கொழுந்தெரியுங்கற்பூர ஆர்த்திகொண்டு
கூடினார்மனமாறப் பாடினாரே. (௫௫)

இராகம் - புன்னாகவராளி - அடதாளம்.

கண்ணிகள்.

௧. தொடங்கியேதுதிகள்செய்து தோகைமார்களப்பொழுது
தொந்தமாகவந்து சூழ்ந்தார் - அசோதையாட்கு
வந்தனங்கள்செய்து தாழ்ந்தார்



௨. கைகால்கள்சுத்திசெய்து கருணையுடன்ஆய்ச்சியர்கள்
கண்ணனைக்கண்டு புகழ்ந்தார் - அக்காயாம்பூ
வண்ணனையெடுத்து மகிழ்ந்தார்

௩. ஸ்நானபானஞ்செய்துவைத்து சந்ததமும்பெண்களெல்லாம்
சங்கமாய்த்துதித்து நின்றார் - அசோதையிளஞ்
சிங்கமேவாழ்க வென்றார்

௪. மாதர்களெவருங்கூடி மைந்தனுக்குவிந்தையாக
மங்களாசாசனஞ் செய்தார் - அசோதைதரும்
தங்கத்தைப்போற்றி யுய்தார்

௫. ஆசையுடன்ஆய்ச்சியர்கள் கேசவனுமத்திறலே
அங்கநியாசஞ்செய்து தெளிந்தார் - அசோதையிட
துங்கன்பால்மனங் குளிர்ந்தார்

௬. சோதைதிருச்சேயனுக்கு சுபகரமுண்டாகவென்று
சொல்லியாசிர்வாதம் பண்ணினார் - சுதனையந்த
மெல்லிலட்சுமிபதியென் றெண்ணினார்.

———:o:———

வசனம்.

குழந்தைக்கு ரட்சாபந்தனஞ்செய்து புகழ்தல்.

விருத்தம்.

இந்தவிதந்துதிசெய்து பெண்களெல்லாம்
இச்சையாய்ப்பாலகனைக் கையிலேந்தி
சந்ததியுண்டாச்சுதென்று சோதையண்டைச்
சந்தோஷமாய்ப்பிரிய வசனஞ்சொல்லி
அந்தமுள்ளமைந்தனுக்கு ரட்சைசெய்ய
ஆசையதுமேன்மேலும் பெருகவெண்ணித்
தொந்தமாயவர்கள்வெகு வினயமாகத்
தூண்டினார்மாதவனை வேண்டினாரே. (௫௬)

இராகம் - தன்னியாசி - அடதாளம்.

பல்லவி.

ரக்ஷிக்கவேவேண்டும் - பாலாவுன்னை
ரக்ஷிக்கவேவேண்டும்.

அநுபல்லவி.

ரக்ஷிக்கவேவேண்டும் ராப்பகலாய்ப்பார்த்து
பக்ஷமாய்திருமாலுன் பங்கிலிருந்துகாத்து (ரக்ஷிக்க)

சரணங்கள்.

௧. பாதமலர்களை பரிமளபூமணம்
பரமபுருஷனுன் படிமுழுந்தான்களும்

மோதமுடனெக்ய — மூர்த்திதொடைகளும்
முதுசச்சிதாநந்தன் — முயன்றுகடிதடமும் (ரக்ஷிக்)

௨. அயக்ரீவன்தானென்னும் — அழகியகுக்ஷியும்
ஆசையாய்க்கேசவன் — அண்டமிதயமும்
பயங்கள்போக்கியீசன் — பக்ஷமாய்த்திருமார்பும்
பாலாவுன்கண்டத்தைப் — பலநாளுமேகின்றும் (ரக்ஷிக்)

௩. விஷ்ணுவானவருன்றன் — விந்தியபுஜத்தையும்
மெச்சியசிதரன் — விரைந்துமுகத்தையும்
இஷ்டமாயீஸ்வரன் — ஏற்றசிரத்தையும்
எண்ணுஞ்சக்ராயுதன் — இருநயனத்தையும் (ரக்ஷிக்)

௪. கெதாயுதனென்போன் — கிட்டிப்பின்பக்கமும்
கிலேசம்போக்கவாசு — தேவனெக்காலமும்
ஆதிசக்ராயுதன் — அனவரதம்அமர்ந்தும்
அன்பாய்உபேந்திரன் — ஆகாயத்திலிருந்தும் (ரக்ஷிக்)

௫. கருடவாகனனுன்றன் — காயாம்பூநிறத்தையும்
கண்டுனையவதாரர் — களித்துநாற்புறத்தையும்
இருடிகேசவன்பஞ்ச — இந்திரியத்தையும்
எக்காலம்நாரணன் — எழிலாந்தேகத்தையும் (ரக்ஷிக்)

௬. சேதுபதியுன்றன் — சிறந்தசித்தத்தையும்
செம்மையாய்லோகேசன் — சேர்ந்தமனத்தையும்
நாதனும்மாயவன் — நாளுஞ்சற்புத்தியும்
நல்லவர்கூட்டத்தில் — நாடுமுன்ஆத்மாவும் (ரக்ஷிக்)

௭. கோமுகுந்தன்பாலன் — குணவிளையாட்டிலும்
கொண்டாடுமாதவன் — கூறும்நயத்திலும்
தாவியவைகுந்தன் — தய்விகவண்மையும்
சந்ததம்நீயுண்டி — யுண்டிடும்வேளையும் (ரக்ஷிக்)

௮. சருவக்கிரகங்களும் — சார்ந்துபயங்காட்டும்
டாகினிடோகினி — ராக்ஷியும்வெருட்டும்
பொருவில்லாபூதவே — தாள்களுமிரட்டும்
போதவுமுனையுந்தி — பூத்தவன்காக்கட்டும் (ரக்ஷிக்)

௯. வினைதருங்கோடகம் — வெவ்வியபூதனை
விர்த்தபாலக்கிரகம் — மிக்கவும்பீடிக்கும்
கனவினிற்காண்கின்ற — காளிகூளிகளந்த
காவலன்காமத்தால் — கண்காணுதிருக்கவே (ரக்ஷிக்)

௰. அக்ஷயமாயஷ்ட — லக்ஷ்மியாள்பெறும்
அருளதுபொருந்திய — ஆயர்கள்பாடியில்



பக்ஷமுடனிருந்து — பாலாவுனைக்காக்க
பன்னிருநாமனைப் — பாடிநாம்துதிக்க. (ரக்ஷிக்)

——:o:——

வசனம்.

நந்தகோபர் கோகுலத்துக்கு வந்தபோது பூதகியின் பிரேதத்தைக்கண்டு வசுதேவர் சொல்லியது மெய்யென்று ஆச்சரியப்படுதல்.

விருத்தம்.

ரக்ஷிக்கவேண்டுமென்று தோத்தரித்து
ரக்ஷாபந்தனஞ்செய்து கோபிமார்கள்
பக்ஷமுடன்பாலகனைக் கையிலெடுத்துப்
பரிதிரமுலைகொடுத்துத் தொட்டிலிட்டார்
தக்ஷணமேஆயரொடு நந்தகோபன்
தனதுமனையிற்சேர்ந்து பார்க்கும்போது
சக்ஷிசெய்தபூதனைவீழ்ந் திறந்திருக்கக்
கண்டிட்டார்ஆச்சரியங் கொண்டிட்டாரே. (௬௭)

இராகம் - தன்னியாசி - ஆதிதாளம்.

பல்லவி.

அந்தவசுதேவர் இந்தவுற்பாதமுன்
அறிந்துசொன்னது நிஜமே.

அநுபல்லவி.

இந்தப்பூதனையாலே — என்னிளம்பாலகன்
இதயமதில்நினைந்து — எதுபயந்தாரோ (அந்தவசு)

சரணங்கள்.

௧. பூதபவிஷ்யவர்த்த — மானம்புகல்பவரோ
பூர்வஜ்ஞானந்தெரி — புண்ணியசாலியோ
நாதனருளினால் — நல்வரம்பெற்றவரோ
நாரணனிவ்வருவாய் — நாட்டினில்வந்தாரோ (அந்த)

௨. நந்தகோகுலத்திலே — நடக்குமுற்பாதத்தை
நன்றாயறிந்துதன் — ஞானத்தினாலென்னை
இந்தஇடத்தில்நீ — இருக்கக்கூடாதென்று
வலியதைக்கொஞ்சமும் — எண்ணில்நானறிகிலேன் (அந்த)

௩. சொன்னபடியால்நானும் — துரிதமாய்ப்புறப்பட்டுச்
சொந்தமனைபுகுந்து — ருதைக்கண்ணால்கண்டேன்
என்னஅதிசயமோ — இந்தபூதனைபிரேதம்
எழுவிற்கடைதூரம் — இருக்கிறதென்னகோரம் (அந்த)

௪. நானில்லாவேளையில் — நந்தகோகுலந்தனில்
நாடியராக்ஷசி — நமனுலகடைத்திட்டாள்.

வானவர்தலைவனும் மகவலக்ஷ்மியுடைநாதன்
வந்துகாத்தாரிந்த மைந்தனையருளினால். (அந்த)

———:0:———

வசனம்.

நந்தகோபருக்கு ஆயர்கள் பூதகியின் வரலாறுகூறுதல்.

விருத்தம்.

இந்தவிதம்வசுதேவ னைப்புகழ்ந்து
இருக்கின்றஆயரொடு நந்தகோபன்
வெந்தணலிலிடவே பூதனையைத்துண்டாய்
வெட்டியேமயானத்திற்கொண்டுசேர்த்து
செந்தழலுமூட்டியதைக் கொளுத்தும்போது
சிறந்தபரிமளதூமம் எங்குஞ்சூழ
அந்தகோகுலத்துள்ளோ ரதிசயித்து
ஆயினோர்அவள்வரவைக் கூறினரே. (கஅ)

இராகம் - பியாகு - சாபுதாளம்.

பல்லவி.

இந்தப்பூதனை வந்தசங்கதி
நந்தரேகேளும் ஆனந்தரேகேளும்.

சரணங்கள்.

க. விந்தையான அழகுருவமெடுத்து
மேனகையூர்வசி போலே - மனம்
மிக்கவருத்தப்பட்டத் தாலே - அக்காலே (இந்தப்)

உ. கொக்கரித்துக்கொண்டு கோகுலந்தன்னிலே
குலுக்கியொயில் நடைநடந்து - அந்தக்
குழந்தையைத்தேடித் தொடர்ந்து - வஞ்சமடர்ந்து (இந்தப்)

௩. கண்டெல்லோரு முள்ளம்பிரமிக்கும்படிக்
கனகபூஷணங்களு மணிந்து - மிக்கக்
கபடமாகவந்து பணிந்து - நெஞ்சந்துணிந்து (இந்தப்)

ச. ஓடியேநமது மாளிகையில்வந்து
உறங்கும்பாலகனை யெடுத்தான் - அவள்
உண்ணென்றுவிஷமுலைகொடுத்தாள் - உடல்துடித்தாள் (இந்தப்)

ரு. மைந்தனவள்பாலைக் குடித்தபின்பு
வல்லரக்கியுரு வெடுத்தாள் - மேலும்
மன்னுமுயிரை விடுத்தாள் - மலைபோல்படுத்தாள் (இந்தப்)

சு. படுத்தவள்மீதிலே தவழும்பாலனைப்
பரபரப்பாயோடி எடுத்தோம் - லக்ஷ்மி
பதிக்குவந்தனம் கொடுத்தோம் - பயம்விடுத்தோம். (இந்தப்)



வசனம்.

பூதகி வந்தகாரணத்தின் வரலாறு தெரிவிக்கும்படிச் சுகமுனியை வணங்கிப் பரீக்ஷித்துமகாராஜன் கேட்குதல்.

விருத்தம்.

நந்தகோபன்ஆயருரை சேதிகேட்டு
நடுங்காமல்தன்மனதி லதிசயித்து
மைந்தனுக்குமங்களமுண் டாகவென்று
மகிழ்வாகக்கோகுலத்தில் வீற்றிருந்தார்.
அந்தச்சங்கதியைப் பரீக்ஷித்துகேட்டு
அருளானசுகமுனியைப் பரிந்துநோக்கி
வந்தவஞ்சபூதகியின் வரலாறுசொல்ல
வணங்கினான்அவரடியில் இணங்கினனே. (ககூ)

இராகம் - கல்லியாணி - ஆதிதாளம்.

பல்லவி.

சொல்லுமையா - சுகமுனியே - சொல்லுமையா.

சரணங்கள்.

க. சொல்லுமையாவென்றனக்குச் சுகரிஷியேபெரிய
வல்லனுக்குப்பால்கொடுக்க வந்தவள்கதைதெரிய (சொல்)

உ. நஞ்சுமுலைப்பூதனையை நற்றகனஞ்செய்யும்போது
மிஞ்சுநற்பரிமளங்கள் வீசியகாரணமேது (சொல்)

௩. கஞ்சன்வெகுகோபங்கொண்டு காதகத்தனத்தாலேவும்
பஞ்சமாபாதகிதன்னைப் பற்றியசங்கதியாவும் (சொல்)

ச. கோலமிகுந்திடுமெந்தக் குழந்தையைக்கொல்லுவேனென்று
சீலலட்சுமிவடிவாய்ச் சிறந்தவள்சரிதையின்று. (சொல்)

———:0:———

வசனம்.

பூதகியின் வரலாற்றைச் சுகமுனி பரீக்ஷித்துக்குச் சொல்லுதல்.

விருத்தம்.

சொல்லுமெனப்பரீக்ஷித்து ராஜனந்தச்
சுகமுனியைப்போற்றி யெதிரேயிருக்க
அல்லலது அறுத்தரியை மனதிற்கொண்டு
அனுதினமும்அவன்றனை வாழ்த்திநிற்கும்
எல்லையில்லா அம்முனியும் இனிமையாக
எழில்சோதைதிருமகனைப் புதுமையாகச்
சொல்லவந்தபூதகியின் விருத்தாந்தத்தைக்
கூடுவார்சேதிசொல்லிப் பாடுவாரே. (உ௰)

இராகம் - சங்கராபரணம் - ஆதிதாளம்.

பல்லவி.

சொல்லுகிறேன்கேளும் - பரீக்ஷித்தேநான்
சொல்லுகிறேன்கேளும்.

சரணங்கள்.

க. சொல்லுகிறேன்கேளும் சூக்ஷமமாகவேதான்
செல்வன்பாலையுண்ட சீர்பெருமையையான் (சொல்)

உ. கொல்லவேணுமென்று கொங்கையில்விஷங்கொண்டு
மெல்லியென்பவளுடல் மிகுபரிமளங்கண்டு (சொல்)

ங. தாவித்தாமோதரனுக்குத் தந்துமுலைதுவண்டாள்
ஆவியகன்றுடலில் அதிமணமதுகொண்டாள் (சொல்)

ச. முகுந்தன்கைபட்டதால் மோக்ஷமதுபெற்றாள்
தகுந்தகீர்த்திபெங்குந் தாரணிதனிலுற்றாள். (சொல்)

———:0:———

வசனம்.

வண்டியாய்வந்த சகடாசுரனைக் கண்ணபிரான் உதைத்து வதைத்தல்.

விருத்தம்.

கேட்டனேபரீக்ஷித்து ராஜன்தானுங்
கீர்த்தியுள்ளமுனிவரனே யினிநடக்கும்
நாட்டுகின்றநாரணனார் விளையாட்டெல்லாம்
நான்கேட்கவருளுவீ ரெனமொழிந்த
தேட்டமதுமிகப்பெருகு மரையனுக்குத்
திரண்டசகடன்வந்த வாறுகூறி
வாட்டமுறக்கண்ணனுதை தன்றாலன்று
வாடினான்கதைசொல்லிப் பாடினானே. (சுக)

இராகம் - பைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

சகடனைக்காலாலே யுதைத்தசரித்திரத்தை
சக்கிரவர்த்தியே கேளும்.

அநுபல்லவி.

கதனங்காசினியெங்குங் காலனெனுமந்த
கஞ்சனேவலினாலே கபடமாகவேவந்த (சகடனை)

சரணங்கள்.

க. நண்ணரியஜென்ம நட்சத்திரங்காட்டி
நங்கையசோதையாள் நாரியர்தமைக்கூட்டி
எண்ணெய்ப்பரிமளங்கள் இன்பமாகத்தீட்டி
ஏற்றதிருமஞ்சனம் என்னுநன்னீராட்டி



எண்ணில்பணிகளு மிலங்கப்பூட்டி
எழில்சேர்பெண்கள் இசையும்பேட்டி
வண்ணத்தொட்டிலில் மாசீராட்டி
வளர்த்தும்பாலகனை மலர்த்தாள்நீட்டி (சகடனைக்)

உ. நந்தனுடையபாரி நங்கையரொடுகூடி
நாரணனேயிந்த நற்சிசுவென்றாடி
வந்தஅந்தணர்க்கெல்லா மாதானங்கள்நாடி
வழங்கிஅசோதையாள் வாஞ்சையுடனேதேடி
மருவித்துயில்கொளு மதலையெடுத்து
மணிசேர்தொட்டிலில் வாழ்த்திவிடுத்து
பொருவில்மனைதனிற் புசிப்பையடுத்து
பொருந்துஞ்சமயத்திற் புதல்வன்கடுத்து (சகடனைக்)

ங. பாலுண்டபின்தொட்டில் படுத்துத்துயில்வருக
பார்ட்டியசோதையின் பக்கலிலேமருக
காலங்குறுகின்று கஞ்சன்மனமுருக
காசினிசல்லோர்க்கு கனவாழ்வதுபெருக
பாலன்மகிதல பாரங்கழிந்திட
பரிந்துதேவரும் பன்மலர்பொழிந்திட
நாலுபுறத்திலுந் நல்லோர்மொழிந்திட
வானிலந்தனில் நடுக்கம்ஒழிந்திட (சகடனைச்)

ச. முறிந்துவிழுந்தவோசை மூன்றுலகமுங்கிட்ட
முற்றும்இரத்தினங்கள் முகுந்தனெதிர்கொட்ட
செறிந்தந்தஆயச் சிறுவர்ாற்காணப்பட்ட
சேதியெல்லாமொரு சுகணந்தனிலேவெட்ட
தெரிந்தசோதையுந் தேகமுவந்து
திடுக்கென்றெழுந்திருந் தேமுலைதந்து
பரிந்துவேதியர் பலரைக்கொணர்ந்து
பாலக்கிரகவேதை பறித்தனர்சேர்ந்து (சகடனைத்)

ரு. சாமவேதங்கள்முதல் சாதுக்கள்தாம்சொல்ல
தங்கக்குடங்களில் தீர்த்தம்நிறைத்தார்புல்ல
க்ஷேமமாய்ஹோமங்கள் நேர்ந்தார்பசுவினல்ல
செய்யினால்ஆகுதி நீட்டினார்குறைவெல்ல
பிரேமமாகவே பிராஜைகள்கூடி
பிள்ளையருமையைப் பேசிபேசாடி
க்ஷேமமாகவே ஆசிகளைப்பாடி
செய்துவித்தனர் ஸ்நானமூந்டி (சகடனைக்)

௬. அன்னதனமனேகம்          அதிதிகட்குந்தந்து
அந்தவேளையில்நந்த          கோபன்மனமுவந்து
பன்னகசயனனிப்          பாலனென்றுமிகுந்து
பாரிசோஷதயுடன்          பாவனைகள்புரிந்து
மின்னும்பல்விதம்          மெய்தனிலொட்ட
மெல்லிமார்களும்          அருகினில்கிட்ட
பொன்னின்தொட்டில்          புறந்தனில்முட்ட
பூவைலட்சுமி          பூபனுந்துட்ட. (சகடனைக்)

———:o:———

வசனம்.

கிரணவர்த்தன் வதம்.

விருத்தம்.

இந்தவிதமாய்ச்சகடன் முடிந்தபின்பு
எழில்மைந்தன்விளையாடிக் கொண்டிருக்க
அந்தவேளையிற்கிரண வர்த்தன்வந்து
அகங்காரத்தோடுசுழற் காற்றாய்மோதித்
தந்தரமாய்ப்பாலகனைக் கொல்லவெண்ணித்
தயிரியமாய்த்தோள்மீதிற் றூக்கிக்கொண்டு
அந்தரத்திலோடுகின்ற அசுரன்தன்னை
அழுத்தினன்சவமாக்கி விழுத்தினனே. (௬௨)

இராகம் - தன்னியாசி - ஆதிதாளம்.

பல்லவி.

கிரணவர்த்தன்விழுந்தான் - திடனற்று
திடுக்கெனவுயிரிழந்தான்.

அநுபல்லவி.

கிரணவர்த்தன்விழுந்தான்          தேசம்பொடிபடவே
மரணமென்பதுகிட்டி          வையத்துயிர்கெடவே (கிரணவ)

சரணங்கள்.

௧. துட்டனுகஞ்ச          தூதனும் - பெரும்
சுழல்காற்றாகவந்த          சூதனும்
மட்டில்லாதபிர          மாதனும் - கொல்ல
வகைதேடிவந்த          பேதனும்
கிருஷ்ணனைத்தோளில்          கொர்வத்துடனேகொண்டு
கிளம்பியாகாயத்திற்          தேசரிபோல்வெருண்டு
பொட்டெனவேபாலன்          பூங்கையினால்பண்டு
பூமியில்கோரமாய்          கூகூவென்றிடப்பிண்டு (கிரண)
௨. ஆயனைக்கொன்றிட          வெடித்து - அறியாமல்
ஆகாசமார்க்கத்தை          யடித்து
பேயெனச்செல்லவே          கடுத்து - பிள்ளை
பிளாமல்அவனையே          தடுத்து



மெத்தவருத்தியே          வீரமதையொடுக்க
மிகுபலவசுரனும்          மிஞ்சுதிடம்விடுக்க
செத்தபிணமாக          செகந்தனிலேபடுக்க
சேர்ந்தவரெல்லாரும்          சிரிக்கும்படியடிக்க (கிரண)
அடிபட்டுஅசுரனும்          சோகவே - அந்த
அண்டர்க்குமகிழ்ச்சியுண்டாகவே
படிதனிலிடர்களு          மேகவே - பெரும்
பாறையில்வீழ்ந்தவன்          சாகவே
துண்டுதுண்டாயங்க          முழுவதும்பொடிபட
தொலைந்ததென்றுத்தமர்          தெய்வத்தைக்கும்பிட
பண்டுமுனிவரர்          பயமனைத்தும்விட
பாரில்லட்சுமிநாதன்          பார்த்துக்களித்திட. (கிரண)

———:o:———

வசனம்.

கோபியர்கள் ஆச்சரியப்பட்டுக் கண்ணனைப் புகழ்தல்.

விருத்தம்.

பெருந்தேகஅரக்கனும் பிணமதாகிப்
பிரிதிவில்வீழ்ந்திருக்கத் தனதுபாலன்
கருமுகில்நேர்வண்ணனையே தாறுச்சோதை
கன்றிழந்தபசுபோலக் கதறிக்கூவ
அருகிருந்ததாதியர்க ளதையறிந்து
அச்சுதனையவனுடைய மார்பிற்கண்டு
பெருகுமதிமகிழ்ச்சியினால் பரிந்தெடுத்துப்
பேர்ந்திட்டார்தாயருகில் சேர்ந்திட்டாரே. (௬௩)

இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

ஆச்சரியம்ஆச்சரியம் ஆச்சரியம் - என்றுயர்கள்
அரியைக்கொண்டாடி யிருந்தார்.

அநுபல்லவி.

ஆச்சரியம்இதுஇந்த          அம்புவியில் அருள்பண்ணி
பேய்சசிமுலையுண்டவனை பிள்ளையென்றவர்களெண்ணி (ஆச்ச)

சரணங்கள்.

௧. நந்தர்முதலானோர்களும்          நாதனைப்புகழ்ந்தேயன்று
வந்தகோரசுரனும்          மடிந்திட்டானென்று
சிந்தைதனிலேமகிழ்ந்து          க்ஷேமங்கள்கோரியேசென்று
அந்தகோகுலந்தனிலே          அரியைக்கொண்டாடிநின்று (ஆச்ச)
௨. அங்குள்ளவாயர்களெல்லாம்          ஆசையுடனோடிவந்து
இங்கிதனைக்கண்டுமெத்த          எற்றங்கள்தந்து

மங்களமுண்டாகவென்று — வாழ்த்திமனதுகந்து
தங்கள்அன்புதான்பெருக — சந்தசமுமேபுகழ்ந்து (ஆச்ச)

௬. ஆயர்பாடிப்பெண்களெல்லாம் — அற்புதமாகவேசேர்ந்து
மாயாவதாரனைக்கண்டு — மகிழ்ச்சிகூர்ந்து
காயாம்பூவண்ணனைவிந்தக் — காதகவரக்கன்சோர்ந்து
பேயனும்நிலத்தில்வீழ்ந்து — பிரேதமானனென்றுதேர்ந்து (ஆச்ச)

௭. சோதையுமகனைத்தூக்கித் — தன்மடிமேல்வைத்துக்கொண்டு
நீதமாகஸ்தன்னியபானம் — நிமலனுமுண்டு
காதகனொழிந்தானென்று — கருத்திலுகந்துவண்டு
தூதுகுழல்வட்கபிரதன் — உண்மையிதனையுங்கண்டு. (ஆச்ச)

—:o:—

வசனம்.

கண்ணன் கொட்டாவிவிட்டபோது சோதை அவனுக்குள் சர்வலோகங்களையுங்கண் டாச்சரியப்படுதல்.

விருத்தம்.

விந்தையாஞ்சிசுசெயலைக் கண்டமாதர்
விபுலனவேயவரெண்ணிப் போனபின்பு
தந்ததிருக்குழந்தைதனை யெடுத்தசோதை
தன்மடிமேல்வைத்துமுலை கொடுத்திருக்க
அந்தவேளையிற்கண்ணன் ஆச்சரியமாக
அழகுதருங்கொட்டாவி விட்டபோது
பந்தியாயுலகனைத்தும் பவளவாயில்
பார்த்திட்டாள்மனமயக்கந் தீர்த்திட்டாளே. (௧௯)

இராகம் - தோடி - சாபுதாளம்.

பல்லவி.

சோதைகண்டாளதி சோத்யமாகவேநந்த
சுதனார்திருவயிற்றில்.

அநுபல்லவி.

வேதங்கள்பாடுகின்ற — நாதங்களுடன்கூட
மாதவனுடைவாயில் — வையமீரேழுநாட (சோதை)

சரணங்கள்.

௧. அந்தஅரனயனும் — அரியமரும்பதமும்
அயிராவதமொடு — அமராிருப்பிடமும்
மந்திரங்களோதும் — மகத்துக்கள்வாழிதமும்
வாயுமகாக்கினி — வருணலோகங்களும் (சோதை)

௨. சந்திரசூரிய — நக்ஷத்திரங்களும்
சத்தசாகரமும் — தடாகநதிகளும்
இந்திரகுபேரன் — இருக்குந்தலங்களும்
எழுதீபங்களும் — இலகுதாரகங்களும் (சோதை)



௩. அட்டதிக்குகளும் — அருமுனிவர்களும்
அந்தரங்கபரி — சுத்தஅன்பர்களும்
மட்டில்லாதபுக — வர்க்ககன்றுகளும்
மகிமைபெறுஞ்சிசு — நந்தருந்தன்னையும் (சோதை)

௪. பூமியுஞ்சொர்க்கமும் — புண்யலோகங்களும்
புன்னைவிருக்ஷங்களும் — பூந்தவனங்களும்
நேமியங்கையன்தன் — நிரந்தரச்சோதியும்
நீங்கிலாமகலட்சுமி — நிலைத்திருமார்பையும். (சோதை)

—:o:—

வசனம்.

கண்ணனுக்கும் அண்ணனுக்கும் நாமகரணஞ்செய்யும்படிக் குலகுருவாகிய கர்க்கரை வரவழைக்க அவர்வர அவரை நந்தர் புகழ்தல்.

விருத்தம்.

கண்டுதிருச்சோதையுமே யதிசயித்தாள்
கருணையாலீரேழு புவனமெல்லாம்
உண்டுமிழ்ந்தபாலனுக்கு நாமகரணம்
உவப்பாகச்செய்யவெண்ணித் துரிதமாதப்
பண்டிதங்கள்புரோகிதராங் கர்க்கர்தம்மைப்
பரிந்தழைக்க அவருமிகப் பண்பாயின்று
அண்டுகுருதன்னையெதிர் வந்துநந்தர்
அடுத்திட்டார்ஆசனமுங் கொடுத்திட்டாரே. (௨௦)

இராகம் - தன்னியாசி - ஆதிதாளம்.

பல்லவி.

வந்ததினால்தேவர் அடியேன்மனமகிழ்ந்து
வரனுகினேன்ஙிஷியே.

அநுபல்லவி.

சிந்தையில்நினைத்தபடி — வந்தீரேயும்மைச்
சேவித்தேனென் — முனியே (வந்தது)

சரணங்கள்.

என்றுமெல்லாங்குலகுருவாகி — அவனியிற்குதித்தவரோ
[illegible]ளோதிடுவிப்பிரர்களெல்லாம் — விஞ்சவுமதித்தவரோ
௫. இந்த[illegible] — [illegible]
னெல்லாமுகந்திடச் — சகலதத்துவம்விதித்தவரோ
ரனருளேவேண்டுமென்றெண்ணும் — சித்தத்திலுதித்தவரோ (வந்)
ஜகத்தினில்சமுசாரவாழ்க்கையையழிவா யெண்ணித்துறந்தவரோ
ஜெகத்தினில்தேகாபிமானமென்பதைமுற்றுஞ் சிந்தையில்மறந்தவரோ
மகத்துவமாதவன்மலரடிமனமதில் — வாழ்த்திச்சிறந்தவரோ
சகிதெவர்பிழையும்சற்கதியளிக்கத் — தரணியில்பிறந்தவரோ (வந்)

௩. யோகமார்க்கத்தால் திரிலோகங்கள் எங்குந்திரிந்தவரோ
போகவில்வாழ்க்கைகள்புவிதனில்பொய்யென்று புத்தியில்தெரிந்தவ
யாகாதிகிரியைகள்சாஸ்திரப்படியே அவனியில்புரிந்தவரோ [ரே
வாகுறவெனதுமனைதனிலின்று வந்தருள்சொரிந்தவரோ (வந்)

௪. அருமையானவிந்தசித்ராசனத்தில் அன்புடனுட்காரும்
பெருமையாகவிந்தபிரிதிவில்பெற்ற பிள்ளைகளைப்பாரும்
குருவெனவருசீர்சுபதினமொன்று கோரிக்குணித்துத்தாரும்
மருவிநாமகரணங்கள்செய்தென் மைந்தனைவாழ்த்திக்காரும். (வந்)

———:০:———

வசனம்.

கர்க்காசாரியர் நாமகரணஞ்செய்தால் கஞ்சன் கோபங்கொண்டு வருவானென்று சொல்லுதல்.

விருத்தம்.

நாமமிடநந்தகோபர் தானுஞ்சொல்ல
நன்னயமாய்க்கர்க்காசாரியருங்கேட்டு
நேமமிகுஆயருக்கு ஆசானாக
நீணிலத்தில்யானிருக்கை யாலுமுன்றன்
சேமமிகுஞ்செல்வருக்குப் பேரிட்டாலந்தச்
சேதிதனைக்கஞ்சனுஞ் சனுமேகேட்டு
தாமமெனச்சினங்கொண்டு வருவானென்று
தூறுவார்பயந்தவருங் கூறுவாரே. (௬௬)

இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

நந்தரேகேளும் - நான்சொல்வதை - நந்தரேகேளும்.

அநுபல்லவி.

நந்தரேயும்முடைய மைந்தரிருவருக்கும்
சிந்தையாய்நாமகரணம் செய்தால்துஷ்டன்வருவான் (நந்தரே)

சரணங்கள்.

௧. இந்தச்சங்கதியெல்லாம் இன்றுதெரிந்துவிட்டால்
அந்தக்கஞ்சனுமிங்கே ஆர்த்துவருவான்காணும் (நந்த)

௨. உரைத்தமுன்யோகமாயை உரைய்னைத்துங்[illegible]டமும்
கருத்தில்பயந்துகஞ்சன் கலங்கிநிற்கிறான்க[illegible]மும்

௩. பூங்கொடியெட்டாம்பேறு புத்திரியல்லவெ[illegible]ம் (சோதை)
தீங்குசெய்யுக்கஞ்சன் தேடிநிற்கிறான்காணு[illegible]

௪. வசுதேவருன்றனக்கு வளர்கேயொன்றறிந்தால்
அசுரனுங்கஞ்சன்மிக அகத்தால்வருவான்காணும் (நந்த)

௫. குழந்தையிருவரையும் கொடியவன்வந்துகொன்றால்
இழந்துநாமெல்லோரும் என்னசெய்வோங்காணும் (நந்த)



௬. பூதனைமுதலோரைப் போகச்சொல்லிவஞ்சன்
வேதனைசெய்தான்சொல்ல வேண்டுவதேன்காணும். (நந்த)

———:০:———

வசனம்.

கர்க்காசாரியர் ஒருவருக்குந் தெரியாதபடிக் குழந்தைகளுக்கு நாமகரணஞ் செய்தல்.

விருத்தம்.

கேளுமெனஆசானுஞ் சொன்னசொல்லைக்
கேட்டுநந்தர்தானுமிக வணக்கமாகத்
தானுடனேதடக்கையுங் கூப்பிநிற்கத்
தானறிந்தகர்க்கருமே யன்றுஇந்தக்
கோளுலகிலெவர்களுக்குந் தெரிந்திடாது
குறிப்பாகக்ககனத்தில் நாமகர்ணம்
ஆளுமதிப்பாலருக்குச் செய்துகந்து
அழைத்திட்டார்பெற்றவரும் பிழைத்திட்டாரே. (௬௭)

இராகம் - சாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

நாமகரணமன்று செய்திடுமழகை
நந்தர்கேட்டு மகிழ்ந்தார்.

அநுபல்லவி.

நேமமாகவே வந்திடுரிஷியும்
நித்தியராகிய பாலரிருவருக்கும் (நாமகர)

சரணங்கள்.

௧. சம்பிரமமுடனேராமபலபத்திர சங்கர்ஷணனொன்றும்
அம்புவிதனிலந்த ரோகணிபாலனுக்கு
அமைந்தபேர்மூன் றிட்டார் (நாமக)

௨. நேத்தியாய்க்கிருதாதிகழ்பலயுகமும் நிர்மலமாய்ஜனிக்கும்
கீர்த்திபொருந்திய சோதைதிருமகனைக்
கிருஷ்ணனென்று அழைத்தார் (நாமக)

௩. வசுதேவருடையமைந்தனாகமுந்தி வந்துபிறந்ததாலே
இசையவாசு தேவனெனப்பெயர்
என்றும்புழியு மழைத்தார் (நாமக)

௪. இந்தக்குழந்தைகளால்இடரதுநீங்கி யெவருமகிழ்வாரென்றார்
நந்தரேயுமது பாக்கியமென்சொல்குவேன்
நாதன்வந்துதித்தா னென்றார். (நாமக)

———:০:———

வசனம்.

இராமகிருஷ்ணர்கள் இருவரும் தவழ்ந்து விளையாடல்.

விருத்தம்.

பூர்த்தியாய்நாமகர்ண மிருவருக்கும்
பொற்புறவேசெய்துகர்க்கர் போனபின்பு
கீர்த்திமிகுநந்தகோ பனுமகிழ்ந்து
கிளையோடுமெருவியே வினைகளெல்லாந்
தீர்த்தருளும்பாலரொடு கோகுலத்தில்
தென்புமிகப்பெருகவே யிருக்குநாளில்
மூர்த்தியாம்ராமகிருஷ்ணர் வீதிதன்னில்
முயல்கின்றார்விளையாடப் பயில்கின்றாரோ. (௧௮)

இராகம் - அடாணா - ஏகதாளம்.

பல்லவி.

தவழ்ந்துவிளையாடி வாராரோ - ஸ்ரீராமகிருஷ்ணன்
தவழ்ந்துவிளையாடி வாராரோ.

அநுபல்லவி.

தவழ்ந்துவிளையாடிவாரார் தரையில்முழந்தாள்கள்கலங்க
அவிழ்ந்துகிண்கிணிகளாட ஆனந்தத்துடன்வீதியிலங்க (தவழ்ந்)

சரணங்கள்.

௧. மாட்டுத்தொழுவங்கள்தேடி மண்டியிட்டுச்சென்றடுத்து
பூட்டுங்கதவங்கள்திறந்து புகுந்துமாடுகளையும்விடுத்து (தவ)

௨. விடுதிவிட்டுவீதிதன்னில் விளையாடிவேர்வையுங்கசிய
உடலெங்கும்புழுதிபடிய உச்சிக்கொண்டைகுச்சுமசைய (தவ)

௩. மன்னுந்தங்கள்தோழரோடு மார்க்கமாகக்கலந்துகூட
பன்னும்ராமகிருஷ்ணர்மேனி பரிமளபுஷ்பங்கள்வாட (தவ)

௪. கன்றுகுட்டிவாலைத்துள்ளிக் கரத்தினாற்பிடித்துப்பின்னே
சென்றுவிளையாடியிளைத்துச் சிறுவர்இருவர்வீட்டின்முன்னே (தவ)

௫. மங்கைமெய்க்கச்சிறுவருதவி மருவும்விளையாட்டிற்பலிக்க
விந்தைராமகிருஷ்ணர்தேகம் விளங்குமாபரணஞ்சொலிக்க (தவ)

௬. சிந்தைமகிழ்வோடுசோதை சேயனைக்கண்டுபெருக்க
நந்தகோகுலத்துப்பெண்கள் நன்மனந்தன்னையுருக்க. (தவ)

—:0:—

வசனம்.

அசோதை சொல்லியுங் கேளாமல் ராமகிருஷ்ணர்கள் ஓடியாடுதல்.

விருத்தம்.

பொங்கிவிளையாடுகின்ற குழந்தைதம்மைப்
பேசியெடுக்கமுடியாமல் நின்றாள்சோதை
அங்கமதிலாபரணங்குலுங்கியாட
ஆனந்தமாய்நடித்து நிற்கும்போது



பங்கமறுமங்கிமுத லானவற்றால்
பாலருக்குப்பழிப்பேது வருமோவென்று
அங்கையினாற்பிடித்துத்திட்டஞ் செய்தபின்னும்
ஆடினார்வீதிமுற்றும் ஓடினாரோ. (௧௧)

இராகம் - காம்போதி - சாபுதாளம்.

பல்லவி.

தாண்டவகிருஷ்ணனு மாடினார் - அதைத்
தாய்மார்கோபிகள்கொண்டாடினார்.

அநுபல்லவி.

ஆண்டவன்தானென்று அவர்களும்நாடினார்
ஆர்த்திகள்தீர்ந்தங்கே அன்பாகக்கூடினார் (தாண்ட)

சரணங்கள்.

௧. கற்பகம்போலவே கண்ணனும் - தயிர்
காணும்வெண்ணெயுண்டு நடப்பதும்
அற்புதமாகவே யண்ணனும் - தானும்
அன்புடனேகூடிக் கிடப்பதும்
தற்பசயனனும் தத்தடிகளிட்டு
தண்டைச்சிலம்புகள் சத்திக்கப்பட்டு
துய்யசிசுக்கள்சென்று தொழுவங்களில்கட்டு
தூங்கும்கன்றுகளை துரத்திஓட்டிவிட்டு (தாண்ட)

௨. கோகுலந்தன்னிலே சேர்ந்து - அந்த
கோபாலர்கள்நேசம் பண்ணவே
ஏகமாயினவருஞ் சேர்ந்து - அங்கு
இருக்கும்பால்தயிர்களை யுண்ணவே
பாபவிமோசனன் பண்ணதைக்காண்பித்து
பாவையசோதையாள் பக்கலில்கோபித்து
கோபிகள்கூறினார் குற்றங்கள்ரூபித்து
குழந்தையைப்போலவே குதித்தாடினார்பித்து (தாண்ட)

௩. ஆனந்தமாகவே நித்தமும் - எண்ணி
அச்சுதனைக்கண்டு நாடுவார்
வானவர்கோனுக்கு சத்தமும் - சப
வாக்குகள்சொல்லியே பாடுவார்
தானகவெங்கும் விளங்குங்குணாகரன்
சகலவேதங்கட்கு மூலமனோகரன்
கோனகவெதுகுலம் வரமருள்சாகரன்
குவலயத்தில்பக்த கோடிவசீகரன் (தாண்ட)

ச. தள்ளியுரலின்மே லேறியே - எட்டித்
தாவியுறிகளை யறுப்பதும்
மெள்ளத்தயிர்பாலை வாரியே - உண்ணும்
வேளையடுத்தோரை யொறுப்பதும்
ஆசையிருக்கின்ற அச்சுதன்பால்கிட்டி
ஆச்சியர்கண்டங்கே அச்சமுறவதட்டி
எசுஞ்சமையத்தில் சோதையருகிலொட்டி
இன்னமும்பால்தயிர் ஈந்திடுமெனுங்கெட்டி. (தாண்ட)

———:o:———

வசனம்.

கண்ணனும் பலராமனும் செய்யுந் தொந்தரையைப்பற்றி யசோதையிடத்தில் கோபிகள் முறையிடல்.

விருத்தம்.

இந்தவிதம்விளையாடி யிராமகிருஷ்ணர்
எழிலானசோதை ரோகணியைத்தேடித்
தந்திரமாய்த்தாமொன்று மறியார்போலத்
தனமுண்டுகண்வளரும் போதுசொந்த
அந்தஇடைமாதரெல்லாம் ஒருங்குசேர்ந்து
ஆச்சரியகரமாக வோடிவந்து
பந்தமொடுதாயுடனே மைந்தர்செய்கைப்
பாடினார்கோபிகளுங் கூடினாரே. (எ௰)

இராகம் - முகாரி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. என்னென்றுசொல்லுவோ மெங்கள்குறைகளெல்லாங்
கேளாய் அம்ம கேளாய்

உ. அங்கியாயங்களை யறிந்துன்சேயையடக்கி
யாளாய் அம்ம ஆளாய்

ங. சட்டியில்மலர்க்கை யிட்டுவெண்ணெயைவாரிக்
கொண்டான் அம்ம கொண்டான்

ச. கிட்டியதோழர்க்குங் கிருபையுடனேதந்து
உண்டான் அம்ம உண்டான்

ரு. அண்ணனுந்தானுமாக வெங்கள்மனையினில்
வந்தான் அம்ம வந்தான்

சா. கண்ணினால்மயக்கிக் கணவனைப்போல்முத்தந்
தந்தான் அம்ம தந்தான்

எ. தொட்டிலில்படுத்துத் தூங்கும்பாலனைமனம்
கொண்டு அம்ம கொண்டு



அ. கிட்டவந்துகையால் கிள்ளியெழுப்புகிறான்
கண்டு அம்ம கண்டு

கூ. பட்டியில்கன்று குட்டிகளையவிழ்த்து
விடுத்தான் அம்ம விடுத்தான்

௰. கட்டிக்கொண்டெங்கள் கணவனைப்போல்பக்கல்
படுத்தான் அம்ம படுத்தான்.

———:o:———

வசனம்.

இந்தவிதமாகக் கண்ணன் செய்த துடுக்கைச்சொல்லிக் கோபியர் சென்றபின் மறுபடியும் அண்ணனும் கண்ணனுமாகத் தோழருடன் விளையாடுதல்.

விருத்தம்.

நங்கையர்களிவ்வாறு சொல்லக்கேட்டு
நற்சோதையிதவாகக் கூறவன்னோர்
தங்கள்சொந்தவீடுகளில் மாமிமார்கள்
தண்டிப்பாரென்றெண்ணி வேகமாகத்
தங்கமெனுமேனியார் சென்றபின்பு
தாமெழுந்தராமகிருஷ்ண ரிரண்டுபேரும்
பொங்கமுடன்தோழர்களைக் கூட்டிக்கொண்டு
புறப்பட்டார்விளையாடத் திறப்பட்டாரே. (எக)

இராகம் - தன்னியாசி - ஆதிதாளம்.

பல்லவி.

பாலகிருஷ்ணன் விளையாடிக்கொண்டிருந்தார்
பிராதாவுடன்கூட.

அநுபல்லவி.

கோலமாகவே கிண்கிணிசதங்கை
கொடியிடை கலகலென்ன (பாலகிரு)

சரணங்கள்.

க. உற்றதோழமாருடனே கூடி
யூரெல்லாந்திரிந்து விளையாடி
க்கெடுத்துவெண்ணெய்க்குக் கூத்தாடி
கர்கோபிகள் கிரகந்தனில்நாடி (பால)

உ. யஅன்பால் கோபிகளிடத்து
ாச்சிசோச்சி யென்றுநடித்து
றிடையாடையைக் கையால்பிடித்து
செங்கனிவா யதரந்தனைக்கடித்து (பால)

ங. சில்லுபுள்ளாடுங் தமயனைவிளித்து
சின்னிகிருஷ்ணன் விளையாடியிளைத்து

மெல்லியர்வீட்டினி லோடியொளித்து
மேலும்நெய்பாலுண்டு களித்து (பால)

௩. உறியிலிருந்த வெண்ணெயையெடுத்து
உற்றதோழரெல் லோர்க்குங்கொடுத்து
அறியவந்தவர்மேல் பழிகள்தொடுத்து
ஆருங்காணமல் ஓட்டம்பிடித்து (பால)

௪. கட்டியிருக்குந்தயிர் சட்டியையுடைத்து
கண்டுவந்தவரை யேசியடித்து
மட்டில்லாமலண் ணாந்துபடுத்து
மகேந்திரஜாலங்க ளாடிநடித்து (பால)

௫. அள்ளிவெண்ணெயை யடுத்தவர்மேல்பூசி
அவ்விடம்விட் டிருகைகளைவீசி
கொள்ளிப்பெண்களா வென்றவன்பேசி
கொங்கைக்குடங்களைப் பிடித்துடனேசி. (பால)

———:o:———

வசனம்

மறுபடியுங் கோபிகள் கண்ணனைக்கொணர்ந்து சோதைமுன்விடுத்து முறையிடல்.

விருத்தம்.

பாலகிருஷ்ணன்செய்துடுக்கை யெல்லாங்கண்டு
பரிக்கமுடியாமலந்த கோபிமார்கள்
நீலவிழிமங்கையர்கள் கோபங்கொண்டு
நோராகக்கண்ணனையும் பிடித்துவந்து
சிலமிகுஞ்சோதைமுன்னே யுவர்விடுத்துச்
சேதியெல்லாஞ்செப்பிமுறை யிட்டபோது
கோலமிகுங்கோவிந்தன் இருக்கமோனம்
கூறுவார்பழிசொல்லித் தூறுவாரோ. (௭௨)

இராகம் - உசேனி - சாபுதாளம்.

பல்லவி.

வேணுகானன்தன்னைப்பாரடி - அசோதையம்மா
வேணுகானன்தன்னைப்பாரடி.

அநுபல்லவி.

வேணுகானன் மிகவுமின்று விந்தையாகவந்துந்
கானங்கள்செய்கிறேனென்று கட்டுறான்கதைகள்கொண

சரணங்கள்.

தயிர்கடைந்துவெண்ணெய் திரட்டினோம் - தாழியில்போட்
தகூணத்திலுறியில் கட்டினோம்
சயிற்றின்மீதி லேறிக்கொண்ட கள்ளவேஷங்கள்கண்ட
வயிற்றுணிறையவாரியுண்ட வளரும்பாலன்தானும்விண்ட(வே)



௨. அதட்டிவந்தபேரைப் பிடிக்கிறான் - அப்புறம்போனால்
அடுத்துப்பாலுந்தயிருங் குடிக்கிறான்
பதட்டமாகவே கண்களை பார்த்துத்தாவியேமண்களை
பிதற்றிவாயினால் திங்களை பிடிக்கிறானின்றபெண்களை(வே)

௩. இந்திரஜாலம்எங்கு கற்றானடி - இவனைவயிற்றில்
எப்படிசுமந்து பெற்றாயடி
மந்தகாசங்கள் செய்யும் மார்க்கத்தில்நாங்கள்வையும்
தொந்தரைமிகவும் பெய்யும் துஷ்டனாகவேயுய்யும்(வே)

௪. எங்களிடம்குழந்தை போல்வந்து - இருக்கநாங்கள்
இளைத்துறங்கும் வேளையில்முந்து
செங்கரத்தாலே தொட்டு சேர்த்துப்பிடித்துக்கட்டி
மங்கைநாதனாக நட்டு மயங்கச்செய்யுங்கெட்டி.(வே)

———:o:———

வசனம்.

கோபியர்கள் சொன்னதெல்லாம் பொய்யென்று கண்ணன்சொல்லுதல்.

விருத்தம்.

பாவொன்றுசொல்லியிடை மாதரெல்லாம்
பட்டபடிசோதைமுன்னே கூறிநிற்க
கார்முகில்நேர்வண்ணனென்னு மைந்தன்கேட்டுக்
கண்களிலேநீர்ததும்ப அழுவான்போலத்
தார்குழலாள்தன்தாயின் முகத்தைநோக்கித்
தங்குமிந்நீலிகள்வீடு போனதில்லை
ஊரிலொருவரையும்நான் அறியேனென்று
உரைக்கின்றான்அவள்மனதைக் கரைக்கின்றானே. (௭௩)

இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

ஏதுமறியேன் எனதுதாயே.

அநுபல்லவி.

ஏதுமறியேன் எனதுதாயே - இந்த
மாதர்சொல்வார்த்தைகளைக் கேளாதேநீயே (ஏதுமறியே)

சரணங்கள்.

௧. கன்றுகள்மேய்த்து வரச்சென்றேன் - அந்த
கானகமெல்லாந்திரிந்துகுழ லூதினின்றேன்
அன்றிந்தமாத ரங்குவந்தார் - என்னை
ஆசையாகக்கட்டி யணைத்துமுத்தந்தந்தார் (ஏதுமறி)

௨. சிறியபுள்ளடித்து விளையாடி - வீதியில்
சேர்ந்தெனதுதோழருடன் செருக்கினேன்கூடி

உறியிலுள்ளபால் தயிரைநாடி - நான்
ஓடிவந்தேன்பசியா லுன்னிடந்தேடி (எதுமறி)

௩. இத்தனைக்கோவென்னைப் பெற்றெடுத்தாய் - இந்த
இடைச்சிகள்தூறுசொல்ல என்றனைவிடுத்தாய்
நித்தம்நான்கூறுவது மெய்யே - கொடிய
நீலிகள்உரைக்கின்ற நிஷ்டூரம்பொய்யே (எதுமறி)

௪. அம்மாகேளாதே யவர்சொல்லை - நான்
அவர்வீட்டில்போய்வெண்ணை யருந்ினதுமில்லை
பொம்மல்முலைமாதர் களையண்டி - அந்த
பூலக்ஷுமிநாதனறிய போகிலேன்ஒண்டி. (எதுமறி)

——:0:——

வசனம்.

முறையிட்ட கோபியருக்குச் சோதை விடைகூறல்.

விருத்தம்.

கண்ணனிந்தவிதமுரைக்கச் சோதைகேட்டுக்
கடுகடுத்துமுன்னின்ற கோபியரைப்பார்த்து
எண்ணமென்னநீர்கொண்டீர் என்றன்வீடு
எறியிந்தக்குழந்தையின்மேல் பழியைக்கூற
வுண்ணனெனவளர்ந்துவரும் வடிவன்மீதில்
வாய்வந்ததுமிகவும் ஆச்சரியமன்றோ
உன்னுமென்சேய்விட்டுவெளி வாரானென்று
ஓதினள்அவர்களுக்குத் தீதிலாளே. (எச)

இராகம் - ஆகிரி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. எதுமறியேனென்று என்துமுன்னேநின்று
எங்கியழுகிறான் பாரடி - அதி
சூதானவார்த்தைகள் கற்பனைகள்செய்து
சொல்லவந்தீரோ வென்னைத்தேடி

உ. கோபிகளாவென்றன் குழந்தையின்மீதிலே
கொடுமைகள்கூறலாமோ வந்து - அடி
பாபிகளாஇந்த பாலகனைக்கண்டு
பரிகாசஞ்செய்யலாமோ வந்து

௩. கூரிமுடனேகவ் நீதம்புசித்தானென்று
செப்பவந்தீரோ இதுநன்று - இங்கே
நோரகவன்றனை நீங்கள்பிடித்துவந்தால்
நிஜமதையறியலா மின்று



௪. திருட்டுகள்சுமத்தி சிறுகுழந்தையின்மேல்
செப்புவதுந் தருமமாமோ - நீங்கள்
முரட்டுத்தனமாய்வந்து மொழிந்திடிலோவந்த
மோசம்உங்களைவிட்டுப் போமோ

௫. பாரினிலொன்றுந் தெரியாதசிறு
பாலகன்அழுவது வசமோ - மேலும்
சாரசோரங்கள் செய்துவந்தானென்று
சாற்றுவதுமிங்கு நிசமோ

௬. இத்தனைதூரம் என்மகன்நடந்து
எப்படிவந்தா னம்மா - இது
மெத்தவுமதிசய மாகவிருக்கின்றது
வேறென்னசொல்லுவேன் சும்மா.

——:0:——

வசனம்.

கண்ணன்மேல் மோகங்கொண்ட கோபிகள் மறுநாள் வீதியில் தயிர் விற்று வருதல்.

விருத்தம்.

வந்துகுறைசொல்மாதர் தம்மைக்கண்டு
வடிவழகிசோதையும்என் செய்தானென்று
நிந்தைமொழிதனைவிட்டுப் போங்களென்ன
நிசாபதிநேர்முகமாதர் நீங்கிவிட்டார்
அந்தநாளிரவுபகல் கழிந்தபின்பு
அச்சுதன்மேல்மோகங்கொள் கன்னிமார்கள்
அந்தமிகுந்ததிதாழி தலைமேலேந்தி
ஆறுவார்வீதிகளிற் கூறுவாரே. (எரு)

இராகம் - ஆனந்தபைரவி - அடதாளம்.

பல்லவி.

ததிகொள்ளவாருங்கள் ஜனங்காள் - ஸ்ரீதரமாதவ
ததிகொள்ளவாருங்கள் ஜனங்காள்.

அநுபல்லவி.

தீதியோததி ஸ்ரீதரமாதவததி
நிதியாகியபதி நீலமேகனேகதி (ததிகொள்)

சரணங்கள்.

க. வேதகூரமதைக் கொள்வீர் - வேதாந்தமான
விசிஷ்டாத்வைதமதை யுள்வீர்
நாதகந்தமுகுந்த நாரணகோவிந்த
போதமுடையசொந்த புருஷோத்தமனிசைந்த (ததிகொ)

உ. திருமந்திரமான ததிகொள்வீர் - திருநாமமுறை
திவ்வியவிரதமதை யுள்வீர்
கருமுகிலாமேல் கருணாகரலோல
அரியம்சமானபால அவனுண்ணுமிச்சில (ததிகொ)

௩. துவயமானநவ நீதங்கொள்வீர் - துதிகள்செய்யும்
சுருதியாமமுதத்தை யுள்வீர்
பயங்கள்தன்னைப்போக்கும் பக்தருக்கானாக்கும்
ஜெயங்கள்மிகவும்வாய்க்கும் ஸ்ரீதரனருள்நோக்கும் (ததிகொ)

௪. சரமார்த்தமான கிருதங்கொள்வீர் - தத்துவமான
சாரமிரும்பக்தி யுள்வீர்
கரத்திலாழிதரித்தோன் கருணைதனைவிரித்தோன்
உரத்தில்லட்சுமிபரித்தோன் உண்ணுந்தயிர்கருத்தான். (ததிகொ)

———:0:———

வசனம்.

இவ்விதம் வீதியில் தயிர்விற்றுச் சென்ற கோபிகளுடன் கண்ணன் விளையாடுதல்.

விருத்தம்.

ததிவிற்குமாதரெல்லாம் வீடுவந்து
தக்கபடிசேருமுன்னே சிறுவன்சென்று
அதிதுரையாய்ப்பால்தயிரை யுண்டதல்லால்
அன்னநடையாருடனே யாடிநின்று
பதினாலும்மெல்லவர்க்கு மென்றுசொல்லிப்
பாலகனுந்தனதுமனை புகுந்தபின்னும்
நிதிமேவுமாய்ச்சியர்பால் நினைந்தேயேகி
நீடினான்லீலைசெய்யக் கூடினானே. (௭௬)

இராகம் - பந்துவராளி - சாபுதாளம்.

பல்லவி.

லீலைசெய்கிறானே கண்ணன் லீலைசெய்கிறானே.

சரணங்கள்.

௧. லீலைசெய்கிறானேகண்ணன் நீலமலைபோலவண்ணன்
கோலாகலமானவிண்ணன் கோபிமாருடையவெண்ணன் (லீலை)

௨. வெண்ணெய்க்குடத்தையுருட்டி இளம்பிள்ளைகளைவெருட்டி
பெண்ணின்மீதுமனமொட்டி பிரியமாயருகில்கிட்டி (லீலை)

௩. மத்தினால்குடமுடைத்து வாரித்தயிர்பாலெடுத்து
உற்றதோழர்க்குங்கொடுத்து ஓகோவென்றானுங்குடித்து (லீலை)

௪. கண்ணமூச்சியென்றுதொத்தி கன்னியர்கள்தம்மையெத்தி
வண்ணமுடனேகத்தி வாடிவாடியென்று அங்குசுத்தி (லீலை)



௫. பூசைசெய்யுமிடத்திற்சென்று பூவையர்கள்எதிரில்நின்று
ஆசைசாமிநானேயென்று அருளுகின்றேன்பிள்ளையென்று (லீலை)

௬. நிர்மலாங்கியர்கள்எண்ணி நித்திரைசெய்போதுநண்ணி
வர்மமாகஅள்ளிதண்ணி வாரியூற்றிக்கேலிபண்ணி. (லீலை)

———:0:———

வசனம்.

இவ்விதம் விளையாடிய கண்ணனைப்பிடித்து வீட்டிலடைத்துச் சோதைக்குப்போய்ச் சொல்லும்படி யோசித்தல்.

விருத்தம்.

லீலையிந்தவிதஞ்செய்து பாடிதன்னில்
நீலமேகன்களித்து நிற்கும்போது
வேலையெனுங்கண்ணமைந்த கோபிகளுங்கண்டு
வெருண்டவராயொருமிக்கக் கும்புகூடி
ஆலையெனத்திரிந்துவருங் கண்ணன்றன்னை
அடுத்ததொருவீடதனி லடைத்துவிட்டு
மாலையன்றுசிறுபிள்ளை யாகவெண்ணி
மயங்கினார்சொல்வதற்குத் தயங்கினாரோ. (௭௭)

இராகம் - தன்னியாசி - ஆதிதாளம்.

பல்லவி.

எல்லாருங்கூடி - நம்போய்ச் - சொல்லுவம்வாடி.

சரணங்கள்.

௧. பொல்லாத்தனத்தாலுன் புத்திரன்வந்தேயின்று
அல்லல்படுத்தியெம்மை அலக்கழிக்கிறானென்று (எல்லா)

௨. அன்பனில்லாவேளையில் அந்தப்புரத்தில்வந்து
இன்பலீலைகள்செய்து எகின்றான்என்னமுந்தி (எல்லா)

௩. கொண்டகணவனைப்போல் குணவசனங்களோதி
அண்டையிற்படுத்தவன் அணைத்துக்கொள்ளுஞ்சேதி (எல்லா)

௪. திருட்டுத்தனமாய்வந்து இருட்டறையிற்சென்று
உருட்டிவெண்ணெயையெல்லாம்உண்டொழிக்கிறானென்று (எல்லா)

௫. பட்டிக்கதவுகளைப் பதறித்திறந்துகன்று
குட்டிகளையவிழ்த்துக் கூத்தாடுகிறானென்று (எல்லா)

௬. மின்னற்கொடியையொத்த மெல்லியர்பின்னோடி
பின்னற்பிடித்திழுத்துப் பேசுறானென்றுசேடி. (எல்லா)

———:0:———

வசனம்.

கோபிகள் கண்ணனைக்கொண்டு சோதைமுன்விட்டு அவன் செய்தனவெல்லாஞ் சொல்லி முறையிடல்.

விருத்தம்.

வாடியெனக்கோபிகளும் எழுந்திருந்து
வளமானநந்தர்திரு மனைபுகுந்து
சேடியொடுசோதையையவ் விடத்திற்கண்டு
செல்வியேயுன்புதல்வ னெங்கள்வீட்டில்
தேடிநெய்பால்தயிரதனை யுண்டதன்றித்
திருமார்பன்லீலைகளுஞ் செய்தேயெம்மைப்
பாடிபடுத்தினதென்ன சொல்வோமென்று
பகருவார்பைங்கிளியை நிகருவாரோ. (௭௮)

இராகம் - சங்கராபரணம் - சாபுதாளம்.

பல்லவி.

கேள்கேளசோதா - கிருபைசெய்துமாதா
கேள்கேளசோதா.

சரணங்கள்.

௧. கேள்கேளசோதா கிருஷ்ணனுடையமாதா
நாளுஞ்செய்கிறான்தீதா நவிலுகிறான்வாதா (கேள்)

௨. சென்றுநெய்க்குடமொன்று சேர்ந்தெடுத்தானின்று
கன்றுதேடினேனென்று கனைக்கிறான்முன்னின்று (கேள்)

௩. பூவைகைவளைகண்டான் போய்க்கழற்றிவிண்டான்
நாவற்பழமுங்கொண்டான் நன்றாகவேயுண்டான் (கேள்)

௪. பாலையடுப்பிலீண்டி பார்த்தயல்வீடுதீண்டி
மாலைநெருப்புவேண்டி வருமுன்னுருட்டினாண்டி. (கேள்)

———:o:———

வசனம்.

சோதை கண்ணனை யேன் இவ்விதஞ்செய்தாயெனக் கேட்குதல்.

விருத்தம்.

சோதையேதேனென்று கோபிமார்கள்
சொன்னவுடன்தன்மகனை யவள்பிடித்துக்
கோதையர்கள்வாழுகின்ற குடிசைநோக்கிக்
கூசாமலேன்போனா யெனவடித்துப்
பேதைகளாலித்தூறு நிதமுங்கேட்கப்
பிள்ளையாய்நீயெனக்குப் பிறந்தாயிந்த
வேதைசகித்திடவென்னா லாகாதென்று
வெருட்டினாள்தன்மகனை மிரட்டினாளே. (௭௯)

இராகம் - சமாஸ் - அடதாளம்.

பல்லவி.

ஏதடாநீ யிடைத்தெருவிற்குப்போனாய்
என்றனுடையசொந்த நந்தன்திருமகனே.



அநுபல்லவி.

மேதினிதனில்நான் வேணபடியென்சித்தம் - ரீரீரீரீ
விளம்பினாலுமதை விரும்பிக்கேளாமணித்தம் (ஏதடா)

சரணங்கள்.

௧. வெண்ணெய்தயிர்பால்நமது மனையிற்கிடையாதோ-வாதோ
அண்ணனுடனேயதை அருந்திக்களிக்கப்போதாதோ
திண்ணமுடையவன்றன் திருமேனியும்வாட-ரீரீரீரீ
வண்ணக்கருங்குழலில் மயில்தோகைகளுமாட (ஏதடா)

௨. தின்டிநமதுவீட்டில் தின்பதற்கில்லையோடா-வாடா
சண்டிசெய்யாமல்நீயும் சாப்பிட்டுவிளையாடுபோடா
பண்டுலகந்தனை யுண்டுமிழ்வாயனே-ரீரீரீரீ
மண்டலமதில்நாங்கள் மகிழ்வந்தசேயனே (ஏதடா)

௩. கட்டியேயுன்னை கன்னிகள்வீட்டிற்போகாது-மீது
எட்டிப்பிரம்பினா லடிக்கிறேன்பாரிப்போது
சட்டித்தயிரையெல்லாங் கொட்டிவிட்டாயென்று-ரீரீரீரீ
திட்டியிம்மாதர்வந்து நீதுசொல்கிறாரின்று (ஏதடா)

௪. மோகமுடனேலீலை செய்தனைந்தாயென்றுவாடி-கூடி
தோகையவொல்வோருஞ் சொல்லுகிறார்வந்துநாடி
ஏகியப்படிநீ செய்திடலாகுமோ-ரீரீரீரீ
வாகுலாவுமுன்றன்மதி கெட்டுப்போகுமோ. (ஏதடா)

———:o:———

வசனம்.

அடிக்கவந்த தாய்க்கு கண்ணன் சமாதானங்கூறுதல்.

விருத்தம்.

கொடியிடையர்மனைகளுக்கேன் போனாயென்று
கோபமாய்ச்சோதைதன் மகனைக்கேட்க
வடிவமைந்தவடமதுரை யிற்பிறந்த
வாசுதேவன்பயந்தான் போல்நடித்துக்
கொடியதுஷ்டமாதர்வந்து கூறுஞ்சொல்லைக்
கொஞ்சமுநீநிஜமெனவே நம்பவேண்டாம்
அடியம்மாநானேது மறியேனென்று
அறைகுவான்அண்ணனுடன் உறைகுவானே. (௮௦)

இராகம் - முகாரி - சாபுதாளம்.

பல்லவி.

துடுக்கானகோபிய ரம்மா - வந்து
எடுப்பானவார்த்தைசொல்லி ஏசுறாரம்மா.

சரணங்கள்.

க. மாதாவேயுன்னைப் பிரியேன் - ஒரு
தீதானதும்வாதும் செய்யத்தெரியேன்
கோதாரும்பெண்களிடந் தரியேன் - அவர்
கூறுந்தூர்நடத்தையா னேதும்புரியேன் (துடுக்கா)

உ. நவநீதங்கிடை யாதோ - வீட்டில்
நாளும்நீகொடுப்பது அதுபோதாதோ
எவருக்குந் தெரியாதோ - இந்த
இடைச்சியர்களுக்கேன் என்னுடன்வாதோ (துடுக்கா)

ங. உறியில்வைத்தவெண்ணெய் கிட்டுமோ - பெரும்
உரல்தள்ளியேறினாலுமெனக் கெட்டுமோ
குறிப்புங்கண்ணுக்குத் தட்டுமோ - இந்தக்
கோதையர்கள்சொல்லும்பேச்சு சரிகட்டுமோ (துடுக்கா)

ச. சேர்த்தணைத்தென்னைக் கூடுறார் - அப்பால்
சென்றுபரிகாசஞ்செய் தாடுறார்
பார்த்தென்மேல்பழி போடுறார் - மேலும்
பதட்டமாயுன்னிடத்தில்சொல்ல நாடுறார். (துடுக்கா)

———:o:———

வசனம்.

கண்ணன் இவ்வாறு கூறக்கேட்ட அசோதை யவர்களை யேசுதல்.

விருத்தம்.

அன்னைதனைப்பார்த்தந்தப் பாலகிருஷ்ணன்
அத்தனைபேர்தங்களையுந் துஷ்டரென்று
சொன்னவுடனச்சோதை மகனைமெய்ச்சிச்
சுந்தரமாய்த்தனதுமடி மேலேவைத்து
முன்னிருக்குங்கோபியரை நோக்கிக்கோள்கள்
மொழிந்திடவேவந்தவரா யிருக்கின்றீர்கள்
என்மகன்தானொன்றுமறி யானேயென்று
செவாள்மாதர்களைப் பேசுவாளே. (அக)

இராகம் - சுருட்டி - ஏகதாளம்.

பல்லவி.

ஒன்றுமறியா னென்பாலன் - ஆதி
உரகசயன்ஸ்ரீவேணுகோபாலன்.

சரணங்கள்.

க. சேயனென்றனைவிட்டு வாரான் - பொல்லா
சேஷ்டைகள்செய்துவருத் தங்கள்தாரான்
ஆயமாதரைக்கண்ணால் பாரான் - நித்தி
யானந்தகல்யாணகுண வும்மைச்சேரான் (ஒன்று)



உ. நீவிகளெல்லோருங் கூடிக் - கொண்டு
நேயமாய்ப்பாலன்மேல் நிந்தையைநாடி
வேலையில்லாமலே யோடி - வெகு
வேகமாய்வந்தீரோ சொலவென்னைத்தேடி (ஒன்று)

ங. கும்பலாய்வந்து கைநீட்டி - இந்தக்
குழந்தையின்மீதிலே கொடுமைபாராட்டி
வம்பிகளாவெகு தாட்டி - ஆக
வந்தீரோபழிசொல மனஸ்தாபங்காட்டி (ஒன்று)

ச. கஷ்டிகளெல்லோருங் கட்டிக் - கொண்டு
கண்டபொழுதெல்லாங் கடினமாய்த்தட்டி
லக்ஷ்மிநாதன்றனைத் திட்டி - அதி
லாவண்யமாயிங்கு வந்தீரோகிட்டி. (ஒன்று)

———:o:———

வசனம்.

கண்ணனுக்கு அசோதை யார்வீட்டுக்கும் போகவேண்டாமெனத் திட்டஞ்செய்தல்.

விருத்தம்.

மனிதரைப்போலவதரித்த மைந்தன்றானும்
மாநிலத்தில்யாதொன்று மறியானென்று
இனிதாகச்சோதைசொல்லக் காதில்கேட்டு
இழையிடையார்தங்கள்மனை சேர்ந்தாரப்பால்
கனிவோடுமகனுக்கு மஞ்சனமுமாட்டிக்
கனகமணிப்பணிபூட்டி யமுதூட்டி
இனியெங்கும்போகாதே யென்றுதிட்டம்
இடுகின்றாள்ஆனந்தப் படுகின்றாளே. (அஉ)

இராகம் - பியாகடை - சாபுதாளம்.

பல்லவி.

எங்கும்போகாதே - கண்ணாநீ - எங்கும்போகாதே.

அநுபல்லவி.

கண்ணாவென்றன்மணி வண்ணாஹரிஹரி (எங்கும்)

சரணங்கள்.

க. எங்குந்தானாகப்பரவி நிறைந்தோனே
என்வயிற்றோன்றியிங்கு பிறந்தோனே (எங்கு)

உ. அண்ணனிடத்தினில் அன்பாகவேகூடு
வண்ணமுடையநம் வாசலிலேயாடு (எங்கு)

ங. நிச்சயம்பால்நவ நீதந்தயிருண்ணு
இச்சையானபடி இவ்விடந்தனில்நண்ணு (எங்கு)

ச. கண்டுவெண்ணெயெல்லாங் களவாடித்தின்கிருர்
பெண்டுகள்குசங்களைப் பிடிக்கிருனென்கிருர் (எங்கு)

ரு. எதடாவுன்றனை யிப்படிநான்பெற்றேன்
மாதர்கள்வாயினி னின்றிடவோவுற்றேன் (எங்கு)

சு. பேய்முலையுண்ட பிரானேயினிகாளும்
தாயெனதுசொல்லைத் தட்டாமற்கையாளும்.(எங்கு)

———:0:———

வசனம்.

இவ்விதம் மகனுக்குரைத்து அசோதை யந்தப்புறஞ் சேர்ந்தவுடனே உறங்குவான்போலிருந்த கண்ணன் எழுந்திருந்து கோபிகள் மனையிற் புகுந்து பழையபடியேசெய்ய வாரம்பித்தல்.

விருத்தம்.

போகாதேயெனத்தடுத்துப் புத்திரர்க்குப்
புத்திகளுஞ்சொல்லிநித் திரைசெய்விக்க
நோகாமலப்புறமே போகநோக்கி
தன்மையாயவளகன்ற வேளைதன்னில்
வேகமாய்வீடுவிட்டு முன்போலோடி
விந்தையாய்மெல்லியர்கள் மனையிற்சேர்ந்து
வாகானதயிருண்டு தாழியெல்லாம்
வாரிஞன்உடைத்தங்கே மீறிஞனே. (அசு).

இராகம் - வராளி - சாபுதாளம்.

பல்லவி.

ததிதாழியையுடைத்தானே - சீலன்கோபிகாலோலன்
ததிதாழியையுடைத்தானே.

சரணங்கள்.

க. ததிதாழியையுடைத்தானே தயிரினைவாரிக்குடித்தானே
மதிமாதரைப்பிடித்தானே வாதுகள்மிகப்படித்தானே(ததி)

உ. நிழல்படியிடமேகடந்து நீதியண்ணன்தனைத்தொடர்ந்து
கழலடிதெரியாமல்நடந்து காளமேகனுமடர்ந்து(ததி)

ங. ஊதியேதீபத்தைச்சற்றும் ஒளியில்லாதணைத்துமற்றும்
சேதிதெரியாமலுற்றும் சிங்காரமாய்த்திருடமுற்றும்(ததி)

ச. உருட்டியேயெங்கெங்குங்கொட்டி ஓகோவென்றுகையைத்தட்டி
மிரட்டிவந்தபெயரையதட்டி மேகவண்ணன்தானுங்கிட்டி(ததி)

ரு. வந்துதயிர்பாலைமூடி வைத்திருக்கக்களவுஆடி
விந்தையாகவுண்டிட்டோடி மென்கரத்திற்கோலைநாடி(ததி)

சு. கருமுகில்போல்கொண்டையமைந்த காரிகையார்தம்மைப்புணர்ந்த
திருலக்ஷ்மிநாதன்சொந்த திவ்யகரத்தாலேயந்த.(ததி)



வசனம்.

கோபிகள் கண்ணனைக்கண்டு அவர்கள் என்வந்தாயெனக் கண்ணனும் அவர்களுந் தர்க்கஞ்செய்தல்.

விருத்தம்.

தாழியெல்லாமுடைத்துடனே தயிர்குடித்து
தன்மனதுக்கேற்றபடி யேநடித்து
ஆழியப்பிலேதுயின்ரு னவடம்விட்டு
அடுத்திருந்தவீடதனி லேபுகுந்து
நாழியின்றிப்பந்தாடும் பெண்களோடு
நயமாகத்தான்பேசி நெருங்கிநிற்க
வாழிதிருநாமனே யிங்கேவந்த
வாறென்ருர்நியாயத்தைக் கூறென்ருரே. (அச)

இராகம் - சஹானு - எகதாளம்.

கண்ணிகள்.

(கோபிகள்.)

பெண்டுகளுள்ளப்புறத்தில் புருஷன்வந்ததேதடா
கண்டுஎங்கள்மனதைக் களவுசெய்யத்தகாதடா

(கண்ணன்.)

களவொன்றுஞ்செய்யவில்லைக் கன்னிகாளும்முன்னிலே
உளவறிந்துயானும்வந்தேன் உங்களிடந்தன்னிலே

(கோபிகள்.)

அறிந்தவுளவுகளேதோ ஆயர்தவமைந்தனே
சிறந்துஎங்களுக்குச்சொல்லும் சீதராகோவிந்தனே

(கண்ணன்.)

விந்தையாகவீதிதன்னில் வீசியாடும்பந்தது
அந்தமாகநும்படுக்கை யண்டையோடிவந்தது

(கோபிகள்.)

படுக்கையிற்பந்தோடிவந்து பாயவும்வசமாமோடா
எடுக்கவந்தேனென்கிருய்நீ யிதுவுமென்னநிசமோடா

(கண்ணன்.)

நிசமாகவேசொல்கின்றேன் நீலவேணிகேளடி
குசமெனும்பந்துகளெனக்குக் கொடுத்துநீயும்ஆளடி

(கோபிகள்.)

கொடுக்கவெங்களால்தரமோ கூறடாவெகுதந்தனே
துடுக்குசெய்யவேண்டாமினி சோதையருள்மைந்தனே

(கண்ணன்.)

சோதையருள்மைந்தனென்று சொல்லுகின்றபெண்களே
சோதைலட்சுமிபோலமார்பில் கூடிவாழுங்கண்களே.

———:0:———

வசனம்.

கண்ணன் வெளிப்பட்டு வீதியில் போகும்போது ஒருவடிவமைந்த சுந்தரவதியைக்கண்டு ஜடையைப்பற்றி யிழுத்து அவளை மருவும்படி யழைத்தல்.

விருத்தம்.

பந்தாடுங்கோபியரைக் கூடியந்த
பாலகிருஷ்ணனவர்களுட தாபந்தீர்த்து
தந்திரமாயவ்வீடு தன்னைவிட்டு
தாமோதரனும்வெளிப் பட்டபோது
அந்தமுள்ளவொருமாது வீதிதன்னில்
அம்சம்போல்நடைநடந்து போகக்கண்டு
இந்தசிறுபாலனவன் ஜடையைப்பற்றி
இழுத்திட்டான்லீலைசெய வழைத்திட்டானே. (௮௫)

இராகம் - சஹாநா - ஆதிதாளம்.

கண்ணிகள்.

(கோபி.)

நீலாநீலாநீல மேகஸியாமள
கோலாகலவென்னைக் குறும்புசெய்வதேதுகோமள (நீலா)

(கண்ணன்.)

தேனேமானே திவ்ய ரதிநிகர்பெண்ணே
நானேதுமறியேன் நங்கையெனதுகண்ணே (தேனே)

(கோபி.)

பண்ணுமெங்கள்தயிர்பால் குடித்துக்கொழுத்திட்டாய்
பின்னேவந்தின்றுபின்னல் பிடித்திழுத்திட்டாய் (நீலா)

(கண்ணன்.)

பார்த்துனதுபின்னலைப் பற்றிநானிழுத்ததில்லை
நேத்தியாமுன்னிருஸ்தனம் நின்றிழுத்திடுந்தொல்லை (தேனே)

(கோபி.)

உன்னையிழுத்திட்டதை உடனேசிசைபண்ணுமல்
பின்னலைப்பிடித்திட்டாய் பேதையென்றெனை எண்ணுமல் (நீலாநீ)

(கண்ணன்.)

எண்ணியிழுத்திட்டேனிச்சை யீடேறுமென்றுமங்கையே
பண்ணுவாய்நீரென்றே பக்குவமாயுன்கொங்கையை (தேனேதி)

(கோபி.)

பக்குவமாமிக்காலம் பாலனேயனுகூலனே
சக்கரக்கையாவென்னைச் சரசஞ்செய்யும்லோலனே. (நீலா)

வசனம்.

இவன் வீடுவிட்டு இன்னொருத்திவீட்டில் இருட்டறைக்குள் போய் கண்ணன் பால் தயிர் களவாடுதல்.



விருத்தம்.

தழுவியேயென்னையென்று மென்னச்சொன்ன
தன்கனத்தபெண்ணவளைக் கண்ணன்பார்த்து
முழுமனதாயவள்மோக முற்றுந்தீர்த்து
மோனமாயவ்வீடு விட்டகன்று
பழுதில்லாமறுமனையிற் சேர்ந்துகள்ளன்
பக்குவமாயிருட்டறையிற் புகுந்துமெள்ள
ஒழுகாதவுறிவைத்த தாழியெல்லாம்
ஒண்டிநின்றுடைத்தங்கு அண்டினனே. (௮௬)

இராகம் - எதுகுலகாம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

திருடன்வந்தான் - அம்மா - திருடன்வந்தான்
க்ஷீரத்தாழியுடைக்கத் திருடன்வந்தான்.

சரணங்கள்.

௧. செய்யும்கோர்த்தைக்காட்டச் சோதைமைந்தன்
பய்யகம்மனைபுகுந்தான் பாடியாள்சொந்தன்
நெய்யமுதுவெண்ணையுண்டான் நேரத்திலெந்தன்
அய்யந்தருந்துடுக்குக்கள் அதிசஞ்செய்விந்தன் (திருட)

௨. நித்திரைசெய்வேளையிலே நிர்மலாகாரன்
வைத்தவெணிமேலேறினான் மாதேவப்பாரன்
மெத்தவெடுதானெடுத்து விழுங்கினான்தீரன்
உத்தமனிவன்போலில்லை யுற்பாதசோரன் (திருட)

௩. சரிதனக்கென்றொருமாதை ஜாடையாய்க்கூவி
அறியஅவன்தோளிலேறி யன்புடன்மேவி
குறியாகக்கண்ணனுண்ணக் கொப்பெனத்தாவி
உறியில்தாழிதனையுடைத்தான் உற்றவர்க்காவி (திருட)

௪. தொட்டில்பாலகனைக்கண்டான் நூங்கவிநோதன்
கிட்டிக்கிள்ளியெழுப்பினான் கெட்டிகற்குதன்
பட்டிக்கன்றுகளைவிட்டான் பாவியழுதன்
கட்டியென்றனையணைந்தான் கார்நிறநாதன் (திருட)

ததியெடுபோல்வெண்ணெயிந்தச் செல்வந்தழைக்க
கதியிலையாநம்மையிங்கே கண்டோர்பழிக்க
பதிவந்துஜாரசோரம் பண்ணுன்செழிக்க
மதிசொல்வாரொருவரில்லை மைந்தன்பிழைக்க (திருட)

௬. பெருகவுங்க்ஷீரத்தைவாயால் பிள்ளைகுடித்தான்
தெரியவேகட்டியமணி சிறுவனடித்தான்

ஒருவருக்குந்தெரியாமல் ஓட்டம்பிடித்தான்
பருகிபேய்முலையையுண்டு பாரில்மடித்தான்.(திருட)

---:o:---

வசனம்.

மறுபடியும் கோபிகள் சோதையிடம்வந்து முறையிடுதல்.

விருத்தம்.

வந்தகண்ணனிருள்றையி லேபுகுந்து
வைத்ததிபால்குடித்து மணியடிக்க
அந்தசத்தங்கேட்டவுடன் கோபிமார்கள்
அடுத்துநந்தர்திருமகனைப் பிடிக்கவெண்ணத்
தந்திரமாயத்திருடன் தப்பித்தேகித்
தன்னுடையவரண்மனையிற் சேர்ந்தானப்பால்
இந்தப்பெண்களனைவரும்போய்ச் சோதைமுன்னே
எடுத்திட்டார்செய்விபத்தைத் தொடுத்திட்டாரே. (அள)

இராகம் - முகாரி - ஏகதாளம்.

பல்லவி.

சோதையேநீகேளாய் - உன்மகன்சேதி
சோதையேநீகேளாய்.

அநுபல்லவி.

நீதியில்லாமலே நீலவண்ணனுகந்து
மோதித்தயிர்க்குடங்கள் முழுதுமுடைத்தான்வந்து (சோதை)

சரணங்கள்.

க. உடைத்ததல்லாமல் தேடி - எங்களிடத்தில்
ஓடிவந்து நாடி
இடைச்சியர்கூந்தலை இவன்கரத்தால்தொட்டு
எழில்மலர்முடித்ததை என்னசொல்வோம்விட்டு (சோ)

உ. கொங்கைக்குடங்கள் பிடித்து - மதுரமுள்ள
கோவையிதழ் கடித்து
எங்களையணைந்திட்ட எண்ணிலா அனியாயம்
எங்குநாம்கேட்டதில்லை இதுவும்மெத்தஅபாயம் (சோ)

ங. அத்தர்புனுகு வாசி - ஜவ்வாதுகள்
அந்தமாகவே பூசி
சித்தத்தில்மையலாகி சேர்ந்தான்கணவன்போலே
ஜெகத்தில்கண்டோர்நகைக்கச் செய்தான்சிறுவன்மேலே

ச. அன்புஎங்கள்மேல் வைத்து - உன்பிள்ளையை
அடக்குவாய் நீமுற்றும்
முன்னம்எங்களுக்குள்ள முழுவசையும்நீக்கி
மூட்டுத்தனஞ்செய்து மொழியுந்துயரம்போக்கி. (சோ)



91

வசனம்.

கோபிகள் இவ்விதங் கண்ணன் செய்தவையெல்லாஞ்சொல்லிச் சோதையைத் தன்மகனுக்கு நற்புத்திவரும்படிச் செய்யக் கேட்குதல்.

விருத்தம்.

சோதையேகேளென்று தோகைமார்கள்
சொல்லியவன்செய்தவைகள் தெரியவைத்து
வேதையம்மாவுன்மைந்தன் வீண்துடுக்கன்
வெறுக்கவேநாங்களிந்த வூரைவிட்டுக்
கோதையெல்லாமித்தினமே வலசைபோகக்
கூடிவந்தோம்க்ஷணமேனுந் தாளோமிந்த
வாதைபண்ணவேண்டாமென் அப்பாவென்று
வருத்துவாய்அவன்மதியைத் திருத்துவாயே. (அஅ)

இராகம் - சங்கராபரணம் - ஆதிதாளம்.

பல்லவி.

மதிகள்சொல்லடியசோதாய் - மைந்தனனகிருஷ்ணனுக்கு
மதிகள்சொல்லடியசோதாய்.

அநுபல்லவி.

மதிகள்சொல்லடியசோதாய் மாமிநாத்தியென்னுமிந்தச்
சதிகளாமவர்களிடம் சற்றுமரியாதையில்லை (மதிகள்)

சரணங்கள்.

இடைத்தெருவில் வந்தாண்டி - இந்திரஜாலன்
இடைத்தெருவில் வந்தாண்டி
இடைத்தெருவிலே வந்தான்
எங்கள்மனை புகுந்தான்
குடத்துவெண்ணெயைத் தின்றான்
கொப்பெனவோடிச் சென்றான் (மதிகள்)

தாளைத்திறந்து கொண்டான் - ஜாரசோரன்
தாளைத்திறந்து கொண்டான்
தாளைத்திறந்து விண்டான்
தையலர்களைக் கண்டான்
தேளைப்பிடித்து நின்றான்
தோளில்விடுவே னென்றான் (மதிகள்)

கக்ஷிகள்பேசி நின்றான் - கமலக்கண்ணன்
கக்ஷிகள்பேசி நின்றான்
கக்ஷிகள்பேசி வென்றான்
கன்னியையேசிச் சென்றான்
லக்ஷ்மிநாத னென்றான்
ரதிகேளிசெய்க வென்றான் (மதிகள்)

வசனம்.

அசோதை கண்ணனுக்குப் புத்திசொல்லுதல்.

விருத்தம்.

மதிசொல்லுமென்றோது மாதரெல்லாம்
  மங்கியங்குவளைந்திருக்க மகனைக்கூவித்
ததிவெண்ணெய்சமதகத்தி வில்லையோடா
  தாராளமாயவர்கள் மனைக்கேன்போனாய்ப்
பதிவாசகாங்களெல்லாம் படுத்திருக்கப்
  பாலனுள்ளேவந்துவிட்டா னென்றுரைத்தார்
அதிசயந்தானிதுமிக்க வென்றென்சொல்லை
  ஆளென்றாள்இனியேனுங் கேளென்றாளே. (௮௧)

இராகம் - மோகனம் - ஆதிதாளம்.

பல்லவி.

கேளடாகண்மணியே - என்வார்த்தையைக்
கேளடாகண்மணியே.

அநுபல்லவி.

நாளுமுந்தனுடைய நடத்தையையறியார்கள் (கேளடா)

சரணங்கள்.

௧. பெண்களைத்தேடிப் பேசுவதேன்டி.
  கண்டவர்முன்வந்து க்த்தியேவைகிறார்
மண்டலபூபாலா - ஓ மண்டலபூபாலா (கேள)

௨. பிள்ளைகளைக்கிட்டிப் பிடித்தேனடித்தாய்மட்டி
  கொள்ளிகளெல்லாங்கூடிக் கூக்குரல்போடுறார்
கோகுலகோபாலா - ஓ கோகுலகோபாலா (கேள)

௩. தாண்டித்தயிர்பாலைத் தான்குடிப்பதோவேலை
  வேண்டிநான்கொடுத்தாலும் விரும்புவதில்லையே
வேணுகானகீதனே - ஓ வேணுகானகீதனே (கே

௪. பெருமையாகவேயுன்னைப் பெற்றநற்பேரென்னை
  அருமையாயிவர்வாயில் அகப்படாமற்செய்வாய்
ஆயர்திருக்கொழுந்தே - ஓ ஆயர்திருக்கொழுந்தே. (கே)

———:o:———

வசனம்.

இவ்விதஞ்சொல்லிய தாய்க்குக் கண்ணன் விடைதருதல்.

விருத்தம்.

அன்னமெனுநடைசோதை சொல்லைக்கேட்டு
  அடுத்திருந்தகண்ணனுந்தன் தாயைநோக்கி
முன்னநீசொல்லியகாள் முதலாயந்த
  முழுமோசக்காரிகள்வீ டடைந்ததில்லை



நன்னயமாயிதுகாறும் நமதுசொந்த
  நற்றமயனுடன்கூடி விளையாடுமென்னைப்
பின்னமாய்க்கூறுமிந்தப் பெண்களுக்கேன்
  பேச்சென்றான்மதிகெட்ட வேச்சென்றானே. (௮௨)

இராகம் - காபி - சாபுதாளம்.

கண்ணிகள்.

௧. பேதையுன்றனிடத்தில் நானும்
  பேசுறேன் - அம்ம - பேசுறேன்
கோதையர்களிடத்தில் நானும்
  கூடேன் விளையாடேன்.

௨. அன்னையுன்றன் மடியைவிட்டு
  அகன்றேனா - நான் - அகன்றேனா
மின்னற்கொடி யிடைமாதர்
  வீசுறார்மெத்தப் பேசுறார்.

௩. அண்ணனுடன் கூடிப்பந்து
  ஆடினேன் - இங்கே - பாடினேன்
எண்ணிவந்து கோபிமார்கள்
  எடுத்தார் - அதைத் - தடுத்தார்.

௪. இச்சையான வெண்ணெய்பாலும்
  இல்லையோ - அம்மா - சொல்லையோ
மொச்சைநாற்ற மோருவெண்ணெய்
  மோகமோ - எனக் - காகுமோ.

௫. தோகையர்க ளென்றன்மீது
  ஆறுறார் - சொல்லி - மாறுறார்
போகஞ்செய்ய முன்னமென்னைப்
  புல்லினார் - என்னைக் - கிள்ளினார்.

௬. எதுகுறைகளெனக் கிப்போது
  என்னமோ - இது - சொன்னமோ
வாதுசெய்ய நீலிமுண்டைகள்
  வளைந்தார் - வெட்கங் - குலைந்தார்.

௭. அன்னியர்கள் மனையிற்செல்ல
  அஞ்சுமே - மனந் - துஞ்சுமே
அன்னியாயமாய்த் தூறுசொல்ல
  அண்டினார் - என்னைக் - கிண்டினார்.

௮. கசுதிகட்டி யென்றன்மீது
  கடுகினார் - சொல்லி - முடுகினார்

லக்ஷ்மிநாதன் பாதசாக்ஷியாய்
சிறியேன் - ஒன்று - மறியேன்.

——:o:——

வசனம்.

மறுபடியும் கண்ணன் வெண்ணெய்திருடப் போகுதல்.

விருத்தம்.

அறிகிலேனென்றுரைத்த பாலன்சொல்லை
அன்னையுங்கேட்டாச்சியர்கள் தம்மைநோக்கிச்
சிறியவென்குழந்தைதனைத் திருடனென்னச்
சேர்ந்துவந்தீர்விகளே போங்களென்று
கறியமுதுபாலன்ன மூட்டிவிட்டுக்
கண்வளரச்செய்தன்னை யகன்றபின்னர்
உறிவெண்ணெய்பால்தயிரை உண்ணவெண்ணி
ஓடினான் அயல்மனையில் நாடினானே. (௬௧)

இராகம் - பந்துவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

உண்டானேஉண்டானே - உலகமுண்டபெரு
வாயனும்வெண்ணெயை - உண்டானே.

அநுபல்லவி.

உண்டானே உண்டானே
உறியைக்கண்டுமிகு உல்லாசங்கொண்டு (உண்டானே).

சரணங்கள்.

௧. வெருட்டியேமிக்கவும் பாய்ந்து
மெல்லியர்தங்களைத் தோய்ந்து
இருட்டறைக்குள்ளே வாய்ந்து
இட்டிருக்கும்பாத்திரங்களை யாய்ந்து (உண்டா)

௨. தாவியவ்வுறிதன்னி லேறி
சாமளவண்ணனு மீறி
பூவையர்தங்களைக் கூறி
புகுந்துநவநீதம் வாரி (உண்டா)

௩. கண்டுகோபிகள் வருக
கண்ணனும்சேவை தருக
அண்டியவர்களும் உருக
அச்சுதன்வாயமு தங்களும்பெருக.(உண்டா)

——:o:——

வசனம்.

மறுபடியும் கோபிகள்வந்து முறையிடல்.



விருத்தம்.

உண்டுறியின்மேலேறி யிருக்குமந்த
உத்தமன்தன் தயிரியத்தை யுற்றுச்சீராய்க்
கண்டுவெகுதாபமுடன் கோபிமார்கள்
கடுகியேகும்பலாய் ஓடிவந்து
அண்டுமிந்தஅருந் திருடனைப்பிடித்து
ஆகட்டும்வாடாநீ யென்றிழுத்துக்
கொண்டுவந்துசோதைமுன்னே தான்விடுத்துக்
கூறினார்குறைகூறி யாறினாரே. (௬௨)

இராகம் - முகாரி - சாபுதாளம்.

பல்லவி.

இனிநாம்சகிக்கமாட்டோம் அசோதையே
இனிநாம்சகிக்கமாட்டோம்.

அநுபல்லவி.

அனியாயமாய்எங்கள் ஆயர்பாடியைவிட்டு
அனைவரும்போகிறோம் அடியுன்மகனையிட்டு(இனிநாம்)

சரணங்கள்.

௧. வைக்கும்உறியைக் கண்டு - நவநீதம்
வாரியெடுத்துக் கொண்டு
முக்கியமாயுண்டு மோகந்தொடுக்கிறான்
சக்கரக்கையனுந் தழுவிப்படுக்கிறான் (இனிநாம்)

௨. கட்டுக்கண்ணு மூச்சி - ஆடுவோமென்று
கழல்கிறானன்பு பாய்ச்சி
பட்டுப்புடவையைக் கையால்பிடிக்கிறான்
பவளமாமதரத்தைப் பார்த்துக்கடிக்கிறான் (இனிநாம்)

௩. ஆயனையோட்டு கிறான் - ஐந்துலட்சம்
அரிவையைக் கூட்டுகிறான்
காயாம்பூவண்ணனும் கட்டியணைகிறான்
கற்பழிக்கும்வேளை கண்டுதுணிகிறான் (இனிநாம்)

௪. துஷ்டத்தனங்கள் வீடு - களிற்றினம்
தோறுஞ்செய்வதே பாடு
இஷ்டமாமுன்மைந்தன் இப்போதவன்செய்
இடக்கினிசகித்திடோம் இயம்புவதிதுமெய்மெய்.(இனிநாம்)

——:o:——

வசனம்.

சோதையும் கண்ணனும் கோபிகள் சொன்னதைக்கேட்டுத் தர்க்கித்தல்.

விருத்தம்.

சகிக்கமாட்டோமெனவே கோபிமார்கள்
சதாகாலமுறையிடுத லதனைக்கேட்டு
மகிக்குளபகீர்த்திபிள்ளை பெற்றேனென்று
மாதவாயென்செய்தா யெனவழைத்து
வகிக்காவிச்செய்கையினி மறக்கவென்றே
வஞ்சியவள்கைதனிலே பிரம்பெடுத்துச்
சிகிப்பறவையிறகுடைய சீமான்தன்னைச்
சிசுவெனவே அவளெண்ணிப் பேசுவாளே. (கரு)

இராகம் - மோகனம் - அடதாளம்.

பல்லவி.

வெண்ணெயேண்டாதிருடிஞய் - வேணுகோபாலகிருஷ்ண
வெண்ணெயேண்டாதிருடிஞய்.

அநுபல்லவி.

வெண்ணெய்திருடுவாயோ மெத்தக்கொடியசேயோ
அண்ணனுடனேநீயோ அகத்திலிருக்காயோ (வெண்)

கண்ணன்சொல் பல்லவி.

திருடவில்லையேவெண்ணெய் - அன்னையேகேளாய்
திருடவில்லையேவெண்ணெய்.

அநுபல்லவி.

திருடவில்லையே அன்னை தேடிவந்தார்கள்உன்னை
சிரசில்முடித்தார்புன்னை சேருமென்றார்கள்என்னை (திருட)

சரணங்கள்.

சோதை வினவுதல்.

க. இல்லாமற்சொல்வா ளோடா - எனதுபாலர்
இல்லாமற்சொல்வா ளோடா
இல்லாமற்சொல்வாளோ இளையனைப்புல்லுவாளோ
மெல்லியும்நல்லுவாளோ மிதமின்றிவெல்லுவாளோ (வெண்)

(கண்ணன்.)

க. சொல்லுகிறேனே சூது - இங்கேவந்து
சொல்லுகிறேனே சூது
சொல்லுகிறேனேசூது சுததிமார்வந்துநீது
அல்லும்பகலும்வாது ஆகிறாரிங்கிப்போது (திருட)

(சோதை.)

உ. சூதருடன் கூடலேஞே - விளையாட
சூதருடன் கூடலேஞே
சூதருடன்கூடலேஞே சோரனென்றேதத்தாஞே
மாதர்வசனந்தேஞே மனதுவாடவும்நாஞே (வெண்)



97

கண்ணன்.

க. கூடாமல்கன்று குட்டி ஓட்டிச்சென்றேன்
கூடாமல்கன்று குட்டி
கூடாமல்கன்றுகுட்டி குதித்தவர்வெண்ணெய்சட்டி
பாட்டாய்ச்சேர்ந்ததுதொட்டி பார்க்கப்போனேன்கிட்டி (திரு)

சோதை.

ட. கன்றுதாழியிற்புகுமோ கமலநயன
கன்றுதாழியிற்புகுமோ
கன்றுதாழியிற்புகுமோ கதைப்படித்தருமோ
நின்றுபழிசொல்நிஜமோ நீலமேகாவுன்வசமோ (வெண்)

கண்ணன்.

ங. புகுந்ததாழியைக்காட்டுறேன் எனதுதாயே
புகுந்ததாழியைக்காட்டுறேன்
புகுந்ததாழிகாட்டுறேன் புகலுமென்சொல்காட்டுறேன்
அகந்தையெல்லாமோட்டுறேன் அவளையின்றுவாட்டுறேன். (திரு)

வசனம்.

சொன்னபடி கன்றைச் சட்டியிற்காட்டிய கண்ணன் மறுபடியும் விளையாடக்கண்ட கோபிகள் முறையிடுதல்.

விருத்தம்.

கன்றுதுள்ளியோடுதலால் கோபிமார்கள்
கண்ணனுடைலீலையென்று தாமறிந்தார்
சென்றவர்களெல்லாருந் தங்கள்வீட்டில்
சேர்ந்தவர்கள் சீக்கிரமாய்ப்போனபின்னர்
அன்றுகண்டு மாயாவதாரனேசி
அடுத்தவுருபோயுடனே யாடிநிற்கக்
குன்றுமுலையார் சோதைமுன்னேவந்து
கூறுவார்பழிசொல்லித் தூறுவரோ. (கசு)

இராகம் - ஆனந்தபைரவி - அடைதாளம்.

சோதைஉன்மகன் எங்களைத்தொடலாமா
தொட்டாலும் துதிநுதல்பொட்டிடலாமா
இட்டாலும் எதிர்நின்றுகூத்தாடலாமா
ஆடினாலும் அதிவிகடம்பாடலாமா
பாடலாமா - ஆடலாமா - நாடலாமா - கூடலாமா (சோ)

௨. கோபிமார்குளிக்கு மிடத்தில் வரலாமா
வந்தாலும் வஸ்திரங்களை வாரலாமா
வாரினாலும் வசைசொல்லிக் கூறலாமா
கூறினாலும் குதித்தெம்மைச் சேரலாமா
சேரலாமா - மீறலாமா - சீறலாமா -- தூறலாமா (கோ)

௩. கஸ்தூரியள்ளிப் பூசலாமா
பூசினாலும் புறத்தில்சுத்தலாமா
சுத்தினாலும் குழலைச்சுத்தலாமா
சுத்தினாலும் சுழட்டியெத்தலாமா
யெத்தலாமா - பத்தலாமா - நத்தலாமா - கத்தலாமா (கஸ்)

௪. கோதிக்கூந்தலை முடிக்கலாமா
முடித்தாலும் முல்லைகள்தொடுக்கலாமா
தொடுத்தாலும் தொடைமேலடிக்கலாமா
அடித்தாலும் அஸ்தத்தைப்பிடிக்கலாமா
பிடிக்கலாமா - இடிக்கலாமா - கடிக்கலாமா - கடிக்கலாமா. (கோ)

வசனம்.

கண்ணன் விஷச்செந்துகளைப் பிடித்துக் கோபிகள்மேல் விடுத்து விளையாடுதல்.

விருத்தம்.

கேளெனவேசொலியவர்கள் போனபின்னர்
கிரயமாய்த்தாயுரைத்த வெல்லாங்கேட்டு
ஆளெனவேயக் கோபிமாரைக்கிட்டி
அடுத்தக்தமனைதோறு முடன்புகுந்து
தேளுடனேபாம்புகளும் பிடித்துக்கொண்டு
திறமாகப்பெண்கள்மேல் விடுக்கவன்றோ
கோளுடனேசெய்துடுக்கைச் சோதைமுன்னே
கூறினார்கண்ணனையே சீறினாரே. (௬௫)

இராகம் - அசாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

சொல்லுகிறோம்கேளடி - உன்மகன்சேதி
சொல்லுகிறோம் கேளடி.



99

அநுபல்லவி.

சொல்லுகிறோ மிவன் சூதுசெய்து - நாளும்
அல்லல்படுத்தியெம்மை அகலக்கிழித்திடுவதை (சொல்)

சரணம்.

௧. தேளைப்பிடித்துக்கொண்டு சிறுவனெதிரேநின்று
தோளில்விடுவேனென்று தூரத்திலெங்களைக்கண்டு
கொட்டவிட்டான் எங்கள்
கிட்டவிட்டான் அவன்
தட்டவிட்டான் கட்டி
தொட்டுவிட்டான் சேதி (சொல்)

௨. கடிக்கும்சர்ப்பத்தைக்கொண்டு கண்ணனெடுத்துவந்து
தடுக்காளங்களைத்தட்டி தூக்கங்கெடுத்துவிட்டு
மாட்டிவிழுத்தான் அதை
பூட்டிவிழுத்தான் எம்மைக்
கூட்டிவிழுத்தான் கண்ணைக்
காட்டிவிழுத்தான் சேதி (சொல்)

௩. நண்டுவெக்காலிதன்னை நாடிக்கொணர்ந்துமுன்னே
பெண்கள்பக்கமிலே பேசிவிட்டான்பாரும்
இடிக்கிவிட்டான் அவன்.
முடுக்கிவிட்டான் கொட்டித்
துடிக்கவிட்டான் சொல்லிப்
படிக்கவிட்டான் சேதி (சொல்)

௪. தனையன்வேண்டுமென்று தவசுவேண்டாம்இன்று
எனைச்சேர்ந்திடுவீராகில் ஏற்கும்பிள்ளையுண்டு
கட்டிச்சென்றான் மூற்றும்
எட்டிச்சென்றான் பற்றி
முட்டிச்சென்றான் லச்சை
விட்டுச்சென்றான். சேதி. (சொல்)

வசனம்.

விஷச்செந்துகளைப் பிடித்துக் கோபிகள்மேல் ஏன் விடுத்தாயென்று கண்ணனைச்சோதை கேட்கக்கண்ணனும் சோதையும் தர்க்கித்தல்.

விருத்தம்.

சொல்லியே கோபிகளு மனதுநொந்து
சூழ்ந்திருக்கக் கோபத்தால் மகனைநோக்கி
எல்லையில்லாப் புண்ணியங்க ளேதுசெய்தேன்
என்னப்பாஉன்றனை இப்படிப்பழிக்க
அல்லலதுதருஞ்செய்கை யினியெப்போதும்
ஆரிடத்துங்காட்டாது நீயிருக்க
நல்லமதியோடிங்கு பொருந்திநாட
காட்டுவேன் அடித்தன்னைக்கூட்டுவேனே. (௯௯)

இராகம் - மோகனம் - சாபுதாளம்.

சோதை சொல்.

௧. தேளையேண்டா கொட்டவிட்டாய் - சின்னகிருஷ்ணா
தேளையேண்டா கொட்டவிட்டாய்
தேளையேண்டா கொட்டவிட்டாய்
சிறியபெண்களைத் தொட்டாய்
நாளும்இப்படிக்கெட்டாய் நான்பெற்றெடுத்ததுட்டாய் (தேளை)

கண்ணன்சொல்.

௨. கொட்டாதோ என்னைத்தேளு - அடியம்மா
கொட்டாதோ என்னைத்தேளு
கொட்டாதோ தேள் என்னை
கோளுசொல்கிறார் அன்னை
இட்டுகிறாயேஎன்னை ஸ்திரிகளுடையமுன்னை (கொட்)

சோதை சொல்.

௩. பாம்பையேண்டா கடிக்கவிட்டாய் - பாலகோபாலா
பாம்பையேண்டா கடிக்கவிட்டாய்
பாம்பையேண்டா கடிக்கவிட்டாய்
பயமென்பதையும் விட்டாய்
தாம்பினாற்கட்டுப்பட்டாய் தாமோதரனேகெட்டாய் (பாம்)

கண்ணன்சொல்

௪. கடியாதோபாம்பு பல்லால் - அடியம்மா
கடியாதோபாம்பு பல்லால்



101

கடியாதோபாம்பு பல்லால்
கண்டறியாயோ சொல்லால்
அடியாதேயென்னைச்சில்லால் ஆச்சியர்களையல்லால் (கடியா)

சோதை சொல்.

௫. நண்டுவக்காலி யேன்விட்டாய் - ராஜகோபாலா
நண்டுவக்காலி யேன்விட்டாய்
நண்டுவக்காலி யேன்விட்டாய்
நன்னடக்கையேனோ காட்டாய்
பெண்டுகளிடத்தில்நீட்டாய் பெயர்க்குநீயேன்கட்டாய் (நண்டு)

கண்ணன் சொல்.

௬. விடுவேனோநண்டை துடுக்காய் - அடியம்மா
விடுவேனோநண்டை துடுக்காய்
விடுவேனோநண்டை துடுக்காய்
மெல்லியர்மேல் முடுக்காய்
படுவேனோபிரம்பெடுக்காய் பாடுவோனையடுக்காய் (விடு)

சோதை சொல்.

௭. பிள்ளைதவத்தையேன் அழித்தாய் - என்கண்ணே நீ
பிள்ளைதவத்தை யேன்அழித்தாய்
பிள்ளைதவத்தை யேன்அழித்தாய்
பெண்களை யேன்இழுத்தாய்
உள்ளேவாவென்றழைத்தாய் உன்வெட்கமுமொழித்தாய் (பிள்ளை)

கண்ணன் சொல்.

௮. அழிப்பதென்றாலே யென்ன - அடியம்மா
அழிப்பதென்றாலே யென்ன
அழிப்பதென்றாலே யென்ன
அன்னைசொல்லடி தன்ன
பழிப்பதேனோபன்ன பாரிவர்கள்மன்ன. (அழிப்)

வசனம்.

கண்ணன் மறுபடியுந் தாயைவிட்டகன்று இன்னொருத்தி வீட்டிற் புகுந்து துடுக்குச்செய்ய அவள் வந்து முறையிடல்.

விருத்தம்.

தாயாரும் இத்தவிதம் அதட்டிக்கேட்கத்
தானுமங்குபயந்தவன்போல் நடித்துக்காட்டி
ஓயாமலேயழுத வாடுமிந்த
உத்தமனைப்பிள்ளையென்றே யெடுத்தாணந்த
மாயாதசெய்கையுடை மகனேநீயும்
மங்கையர்கள்மனைக்கேக வேண்டாமென்று
வாயாரவாழ்த்தி யவளகன்றபின்பு
வாடினார்கோபிகளுங் கூடினாரே. (௧௭)

கண்ணிகள்,

கோபிகள்சொல்லுதல்.

௧. வந்தானம்மாவுன்றன்மகன் மனையிலேசோதாய்
இந்தாவென்றுகரம்பற்றி யிழுத்தாண்டிவாதாய்

அசோதை சொல்லுதல்.

௨. மாதர்கள்மனைதனிலே மகனேநீதானாய்
நீதமற்றுமடையன்போலே நீயுமேன்போனாய்

கிருஷ்ணன் சொல்லுதல்.

௩. போகவில்லையடியம்மா பொய்கள்சொல்கிறார்
போகஞ்செய்யமாட்டேனென்றால் போட்டிசெய்கிறார்

அசோதை சொல்லுதல்.

௪. போட்டிசெய்யவந்தீரென்று புகல்கிறான்நீங்கள்
நீட்டியாட்டிக்குலுக்கவேண்டாம் நீங்களும்போங்கள்

கோபிகள் சொல்லுதல்.

௫. போங்களென்றுசொல்கிறாயோ போட்டநற்பந்து
தாங்களுங்கள்மார்பிலுண்டு தாவென்றான்வந்து

அசோதை சொல்லுதல்.

௬. வந்துபந்துகேட்டாயென்று வான்முகில்வண்ணா
இந்தபெண்கள்மார்பில்பந்து இருக்குமோகண்ணா

கிருஷ்ணன் சொல்லுதல்.

௭. அண்ணனை அழைத்துக்கேட்டால் அம்மாதெரியும்
வண்ணமுள்ளமாதர்செய்த வகையும்விரியும்



அசோதை சொல்லுதல்.

௮. மோசஞ்செய்துஎன்மகனை முழுதும்வைகிறீர்
நேசஞ்செய்யமாட்டோமென்றால் நிந்தைசெய்கிறீர்.

வசனம்.

சோதைபலராமனை யழைத்துக் கண்ணன் சேதியைச் சொல்லும்படிக்கேட்குதல்.

விருத்தம்.

ஆமிவர்கள்சொல்வதென்ன நிசமோவென்று
அறிந்துகொள்ளசோதை மனதெண்ணிநின்று
சாமியெனும்பலராமன் தனையழைத்து
ஐடையுடையவிம் மாதரிங்குவந்து
சேமியங்கையனருளா லுதித்தசீல
நின்றம்பிமேற் றோஷங்கூறலிந்தப்
பூமியிலேயெங்கும் நான்கேட்டதில்லைப்
புகலென்றாள்சங்கையறுத் தகலென்றாளே. (௧௮)

இராகம் நாதனாமக்கிரிய - சாபுதாளம்.

சோதைசொல் தரு.

௧. கிஷ்டனுடைசேதியைச் சொல்லடாராமா
இஷ்டமாகவே இருக்கின்றசேமா
துஷ்டனாப்க்கண்ணனைத் துரத்தியேயின்னார்
தூமணிவண்ணன்மீதில் தோஷங்கள்சொன்னார்
கஷ்டமாயேசவோ காளனைப்பெற்றேன்
கன்னிகள்கோள்சொல்லிக் கசக்கவோவுற்றேன் (கிஷ்)

பலராமன்சொல் தரு.

௨. சொல்கிறேன்கேளடி யென்னுடையதாயே
சுந்தரத்தம்பியின் சூதுகள்மெய்யே
நல்லவார்த்தைசொல்லி யென்னையுமழைத்தான்
நங்கையர்மனைதனில் நாடியேதழைத்தான்
பல்லிகள்போலிவர் பாடியிலுதித்தார்
பாலனும்பரியாசம் பண்ணியேகுதித்தான் (சொல்)

சோதைசொல்தரு.

௩. கண்ணனேயவருடை இரகத்துக்கேன்போனாய்
கார்குழன்மார்களைக் கருதியே தானாய்
தன்னெனைப்பேர்வதுந் தொந்தனையாமே
குலங்குநங்குலத்துக்கு தோய்பழிப்பாமே
அண்ணனும்வந்திங்கே சொல்கிறான்வாதாய்
ஆயர்கள் தங்கட்கு அதிபனை ஓதாய் (கண்)

கண்ணன்சொல்தரு.

௪. அண்ணனுடையுனையை நம்பாதேயம்மா
அரிவையர்வீட்டுக்கு போவேனோ சும்மா
எண்ணத்தில் என்னமோ எண்ணினான் அண்ணன்
என்னுடைசெய்கையை அறியானே திண்ணன்
கண்ணனிடத்திலே தோஷத்தைக்கொண்டான்
கண்டவனைப்போல உன்னிடம்விண்டான். (அண்)

வசனம்.

கண்ணனுக்குச் சோதை நற்புத்திசொல்லுதல்.

விருத்தம்.

விண்டதிரு மகனையன்று தாயுநோக்கி
வீணன்போல் பெண்களிடம் போகவேண்டாம்
கண்டபடி யிடையர்களும் பழிப்பதாக
கடைகெட்டா ருடன்கூடி யாடவொண்ணு
அண்டர்களும் வியப்படைய வுனதுசொந்த
அதிமதியோன் அண்ணனுடனே யடுத்து
தண்டரள மணிமார்ப யினிமேலேனும்
தரியென்றாள் இருப்பதுவே சரியென்றாளே. (௧௧)

இராகம் - ஜாவளி - சாபுதாளம்.

பல்லவி.

கண்ணு என்சொல் - கேளடா
கண்ணு என்சொல் கேளடா

அனுபல்லவி.

அண்ணனுடன்கூடி யாடடா (கண்ணு)



சரணம்.

௧. நவநீதம் மனையிலில்லையோ
நாளும் இதென்ன தொல்லையோ (கண்ணு)
௨. எப்போதும் தூறு ஏற்றார்
இடை மாதர்வந்து தூற்றார் (கண்ணு)
௩. ஆயர்குலந் துதித்தாய்
அவதூறுசொல்ல அடுத்தாய் (கண்ணு)
௪. பிள்ளைகளி தீர்த்தோனே
பேரெங்குஞ்சொல்ல ஏர்த்தோனே (கண்ணு)

வசனம்.

இவ்வகையோதிய தாய்க்குக் கண்ணன் சமாதானங்கூறுதல்.

விருத்தம்.

இல்லையோ வெட்கமுனக் கென்றுகேட்க
ஏதம்மா இதுபுதுமை யல்லால்வேறு
தொல்லைதரு மிப்பெண்கள் சொல்லைக்கொண்டு
தேர்ந்தனைநீ படுவதையும் பார்க்குமெத்த
எல்லையில்லா ஆச்சரிய மெனக்குண்டு
இதையறிய என்னுடைய செய்கையெல்லாம்
ஒல்லையாய் நானுரைப்பேன் ஆதையானே
ஒழியென்றான் இவர்வார்த்தை இழிவென்றானே. (௩)

இராகம் - பைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

அம்மா நானொன்று மறியேன் - நீகைகிறாயே
அம்மா நானொன்று மறியேன்

சரணம்.

௧. அம்மாவொன்றுமறியேன் அண்ணனைவிட்டுப்பிரியேன்
சும்மாவுன்றன்சிறியேன் சூதருடன்திரியேன் (அம்)
௨. கன்றுமாடுகள்சேர்த்து காடுதன்னிலேமேய்த்து
நின்றுதோழரைப்பார்த்து நேரேவந்தேன்நேத்து (அம்)
௩. வரும்வழிதன்னிற்கண்டு வஞ்சியர்மடக்கிக்கொண்டு
தரும்திரோம்வெண்ணெயுண்டு தடுத்தார் என்னையுங்கண்டு (அம்)
௪. தெற்கோவடக்கோ அன்னே தெருவும் இருக்கோமுன்னே
மறக்கவேண்டாம் என்னை உள்ளத்தைநானுஞ்சொன்னேன். (அம்)

வசனம்.

தாய்சொல்லியபடியே கோபிகள் வீட்டுக்குப்போகாமல் நின்ற கண்ணனைக்காணுமல் கோபிகள் தயங்குதல்.

விருத்தம்.

நானென்று மறியேனே யென்றுசொல்ல
நற்சோதை கேட்டுளத்தில் மகிழ்ச்சிகொண்டு
வானவருந் தேடிவரும் வாமனனுமன்று
வளர்த்தவன்னை யிடுதிட்டம் போலநிற்கத்
தேனெழுகு மொழிப்பாடி யிடைச்சிமார்கள்
திருக்கண்ணன் வராமையினுல் மதிமயங்கி
ஆனதங்கள் கிரககிருத்தியந் தனைமறந்து
ஆடுவார் அருகுறவே பாடுவாரோ. (௱௧)

இராகம் - பியாகு - ஏகதாளம்.

பல்லவி.

கண்ணன் கண்ணன் கண்ணன் கண்ணன் - சகி
கண்ணன் இன்னம்வரக் காணேன்சகி

சரணம்.

௧. வண்ணமுடனேயும் மதனகோபாலன்
உண்ண அதரந்தரும் உத்தமசீலன்-உத்தமசீலன் (கண்ண)
௨. கூடிவிளையாடுங் கோபாலகிருஷ்ணன்
ஓடிவாராரோ இங்கே உத்தமர்க்கிஷ்டன்-உத்தமர்க்கிஷ்டன் (க)
௩. தாபங்களைத்தீர்க்கும் சாமளாகாரன்
கோபஞ்செய்தானோநம்மேல் கோகுலபாலன்-கோகுலபாலன் (
௪. பஞ்சலக்ஷங்குடியில்பால்வெண்ணெயுண்டோன்
அஞ்சாமல்லீலையிங்கே ஆடியேநின்றேன்-ஆடியேநின்றேன் (க)

வசனம்.

இவ்விதம் வருத்திய பெண்களிடத்துக் குவந்த கண்ணனும் கன்னிகளுந் தர்க்கித்தல்.

விருத்தம்.

கர்ணுமல் வாடிமிந்தக் கன்னியர்க்குக்
காசுநிதரவே கண்ணன் கருத்திலெண்ணித்
தோணுத பொருள்நடுவி லுதித்தாற்போலத்
தோன்றிநிற்கத் தொடுவளையார் தாமுங்கண்டு



கோணுத முகமுடைய கோவிந்தன்தன்னைக்
குழ்பலாய்த் தேனீப்போல் சூழ்ந்துகட்டி
காணுமல் வாயினுல் மருவச்சொல்லி
காடினுர் சேருமெனக் கூடினுரே. (௱௨)

இராகம் - ஹிந்துஸ்தானி - காபி - ஆதிதாளம்.

கன்னிகள்.

பெண்கள்.

௧. மருவவாருமே மையல்தீருமே - மருவவாருமே
மருவவாருமே மையல்தீருமே
கருமுகில்வண்ணு காமனுக்கண்ணு (மருவ)

கண்ணன்.

௨. வருவேனோபெண்ணே மயக்கமோகண்ணே - வருவேனோபெண்ணே
வருவேனோபெண்ணே மயக்கமோகண்ணே
தருவேனோமுத்தம் தாவடையில்நித்தம் (வருவ)

பெண்கள்.

௩. மையலாகுதே மனதுகோருதே - மையலாகுதே
மையலாகுதே மனதுகோருதே
ஐயமேனையா அருளுந்தேனையா (மைய)

கண்ணன்.

௪. ஆயினுலென்ன அன்னைபால்துன்ன - ஆயினுலென்ன
ஆயினுலென்ன அன்னைபால்துன்ன
போயிநீரங்கே பொய்சொன்னீரிங்கே (ஆயி)

பெண்கள்.

௫. காமன்செய்கிறுன் கணையாலெய்கிறுன் - காமன்செய்கிறுன்
காமன்செய்கிறுன் கணையாலெய்கிறுன்
தாமசம்என்னு ஜாலனேதுன்னு (காமன்)

கண்ணன்.

௬. எய்ததாலென்ன ஏங்கிநீர்பன்ன - எய்ததாலெனக்கென்ன
எய்ததாலென்ன ஏங்கிநீர்பன்ன
செய்திநீர்சொன்ன சேதிநானுன்ன. (எய்)

வசனம்.

இவ்விதம் பெண்களோடு விளையாடி அவர்களை விட்டகன்று தோழருடன் வீதியில் விளையாடிய கண்ணன் மண்ணையுண்ணக்கண்ட அண்ணன் தாயோடு சொல்ல அவள் கண்ணனைத் தண்டித்தல்.

விருத்தம்.

பெண்களுட னிந்தவிதம் விளையாடிப்பின்பு
பிரிந்திருந்த தோழருடன் வந்துசேர்ந்து
தன்கடவுள் படுத்துறங்கு நாதனன்று
தானுதித்த காரணத்தால் சிறுவனைப்போல்
விண்ணகத்தில் தேவருமே கண்டுநின்று
வியப்படைய விளையாடி வீதிதன்னில்
மண்ணையுண்ணக்கண்ட அண்ணன் தாய்க்குச்சொல்ல
மாதிருள் அடித்தப்போ கூறினளே. (௱௩)

இராகம் - பிலகரி - சாபுதாளம்.

சோதை.

௧. மண்ணையேயுண்டா தின்றாயடா - மகனேநீயும்
மண்ணையேயுண்டா தின்றாயடா
உன்னவொன்றுமில்லையோடா உற்பாதசோரா (மண்)

கண்ணன்.

௨. தின்னவில்லைமண்ணை யென்றன்தாயே - நீகேளாய்
தின்னவில்லைமண்ணை யென்றன்தாயே
பன்னகருபனறிய பார்த்தென்னையாளாய் (தின்)

சோதை.

௩. அண்ணன்முத லோர்கள்கூடி - சொல்லுறாரோடா
அண்ணன் முதலோர்கள்கூடி
கண்ணனேயுனக்கிந்த காரியமாமோடா (அண்)

கண்ணன்.

௪. சொல்கிறதும் அண்ணனது - சூதுகள்தாயே
சொல்கிறதும் அண்ணனது
இல்லையெனில்பார்த்திடுவாய் என்னிடவாயை (சொ)

வசனம்.

மண்ணையுண்டானென்று கண்ணனை யருகழைத்து வாயைக் காட்டென்று சோதை கேட்டபொழுது அவனுள் சகலலோகங்களையுங் கண்டு மகிழ்தல்.

விருத்தம்.

மண்ணையுண்டான் கண்ணனென மதிமயங்கி
மருண்டிடவே மாயவனை யருகழைத்து



வெண்ணெயுண்ட வாயுடையா யேதுக்காக
விருதாவிலிக் காரியஞ் செய்தாயென்று
பண்ணையுடைச் சோதையுமே பதைபதைத்துப்
பாலகன்மே லதிகோப மாகிமீறிக்
கண்ணைமிக வுருட்டியே யுன்றன்வாயைக்
காட்டென்றாள் ஆனந்தம் ஊட்டென்றாளே. (௱௪)

இராகம் - தோடி - அட்டதாளம்.

பல்லவி.

கண்டாளே யசோதை - கண்ணன்திருவயிற்றில்
கண்டாளே யசோதை

அநுபல்லவி.

அண்டாண்டபிண்டமும் அகிலசராசரமும்
உண்டானதெல்லாம்பிள்ளை உதரத்தில் ஒருமிக்க (கண்)

சரணம்.

௧. வாயைத்திறந்தவுடன் வளர்திருவானமும்
தாயையும்பிள்ளையும் தன்னையும் அவ்வையும்
கோகுலந்தனிலுள்ள கோபிகள்சகலரும்
தேமலர்ச்சோலையும் திரிமூர்த்தியாவரும்
வானவர் - தானவர் - வைகுண்ட - வாசிகள்
கானவர் - கோனவர் - கந்தர்வ - காத்திரர்
ஆனபெரியோர்கள் ஆகுநல்லோர்களும்
கூடியபந்துக்கள் கூட்டமெல்லாமங்கு (கண்)

௨. ஈரேழுபுவனமும் எடுப்பானமலைகளும்
ஆறும்நடுகளும் அடுத்தமர் ஓடையும்
ஆம்பல்முதலிய அரவிந்தமலர்களும்
ஓங்கியகோபுர உன்னதக்கோவிலும்
தங்கிய - பொங்கிய - தாசிகள் - வேசிகள்
துங்கிய - மங்கிய - குவலைய - ராக்ஷதர்
ஆகும்வடமதுரை யாளுந்துர்க்கஞ்சனும்
அண்டியகோபாலர் அனைவரையும் அங்கு (கண்)

௩. முப்பத்துமுக்கோடி மொழியுநற்தேவரும்
முதலானநாற்பத் தெண்ணாயிரரிஷிகளும்
செப்பவொண்ணாவிசித்திர சித்தர்வித்தியாதரர்
செகந்தனில்புண்ணியர் சிந்திக்குங்கியானிகள்

அற்புத - கற்புள - அருளுடை - மங்கையர்
நற்பத - பொற்புள - காரணன் - காரணன்
ஒப்பும்பலராம ‍ நோடமர்செல்வரை
ஒருமிக்கவிளையாட உத்தமன்வாய்தனில் (கண்)

௪. அதிரதர்சமரதர் அமையுநாற்சேனையும்
யானையுங்குதிரையும் ஆவினக்கூட்டமும்
விதிவழியால்வந்த விலங்கின்வகைகளும்
விஷமுளசெந்துகள் வேண்டியபடிநாடும்
விந்தையை - முந்திய - வித்தகன் - செயல்களை
தொந்தியில் - சிந்திய - துளவத் - தளங்களை
கண்டுமனமுருகி கருத்தில்தெளிவுவந்து
கண்ணன்பிள்ளையல்ல கரியைக்காத்தவனென்று. (கண்)

வசனம்.

இப்படிச் சகல அதிசயங்களுங்கண்டு கண்ணனைவாழ்த்தி விடுத்துச் சோதை தயிர்கடைதல்.

விருத்தம்.

சலந்தனில்தோற்று நிழலினைப்போலச்
சராசரம் யாவையுங்கண்டு
உளந்தனிற் கண்ணன்பிள்ளை யென்றெண்ணு
துயர்திருநாரணனென்றே
மலந்தருசிந்தை மதிமயக்கறுத்து
மகிழ்ந்தவள் ஆதிக்காற்சுதனும்
தலந்தனில் தாயின்கருணைமாற்றத்
தயிரினைக்கடையவந்தனளே. (௱௫)

இராகம் - தன்னியாசி - ஆதிதாளம்.

பல்லவி.

ததிகடைந்தாளே யசோதை - ததிகடைந்தாளே.

அனுபல்லவி.

ததிகடைந்தாளே நந்தர்மனைதனில்
சந்தோஷமாகவே அந்தஅசோதையும்
ததியிலனேகம் பேர் இருக்கையிலும்
தன்னிச்சையாகவே தாழிதன்னை வைத்து. (ததி)



சரணம்.

௧. உடுத்தவெண்பட் டிடைதனில்மின்னவே
ஒட்டியாணப்பணி ஒளிமிகத்துன்னவே
முடித்தமுல்லை முடிச்சுமுதிரவே
மும்முரமாய்க்கையும் வீசி அதிரவே. (ததி)

௨. மத்தக்கயிறினைப் பற்றியிழுக்கவே
மார்பில்சரங்கள் விளங்கித்தழைக்கவே
முத்துமுத்தாக முகந்தனில்வேர்க்கவே
முன்கையிற்கங்கண ஓசையுங்கேட்கவே. (ததி)

௩. சிங்காரமாய்ச்சோதை சித்தம் மகிழவே
சேர்ந்திருந்தபெண்கள் கண்டுபுகழவே
கொங்கைக்குடங்கள் குலுங்கியசையவே
கோபியர்கண்ணனைப் பாடியிசையவே. (ததி)

௪. ஆச்சரியமாகத் தயிர்கடையும்போது
ஆழியங்கையனுந் தாழிபற்றியீது
பாச்சிசோச்சியென்று பாலகன்போல்கண்ணன்
பக்குவமாகப் படிந்துமுலையுண்ண. (ததி)

வசனம்.

பாலுண்டிருந்த கண்ணனைவிட்டு அடுப்பிலிருந்த பால்பொங்கிப்போ கிறதென்று அதை யிறக்கும்படிச் சோதையோடக் கண்ணன் தயிர்த்தாழி யையுடைத்து இருட்டறைக்குள் உறியிலிருந்த வெண்ணையை யுண்ணப் போகுதல்.

விருத்தம்.

மடியேறிப்பாலுண்ணுங் காலந்தன்னில்
மாயகிருஷ்ணன் தனைவிடுத்துமங்கைசோதை
பொடிபடுந்தீ யடுப்பேறிக் கொதித்திருக்கும்
பொங்கும்பால் தனையிறக்கச்செல்லும்போது
அடியம்மா யெனைவிட்டேன் போனாயென்றே
அடுத்திருந்த தாழியதை யுடைத்துவிட்டுக்
கடினசித்த முடையவன்போ லிருட்டறைக்குள்
கண்டிட்டான் உறிவெண்ணெ யுண்டிட்டானே. (௱௬)

இராகம் - சங்கராபரணம் - ஏகதாளம்.

பல்லவி.

உறியிலேறினானே பாலன் - உத்தமலோலன்
உறியிலேறினானே பாலன்

அநுபல்லவி.

க. உறியிலேறினனே பாலன் உன்னதகுணசீலன்
கரியமுகில்நேர்வண்ணன் சியாமளநிறக்கண்ணன் (உறி)

சரணம்.

உ. ஹரியாயிருந்தபோதும் அன்னைவருவாளேயென்று
சரியாகவேயுரலைத் தள்ளியதின்மேலேநின்று (உறி)
ங. சுற்றிநாலுபுறமும் சொகுசாகப்பார்த்துப்பிள்ளை
பற்றியுறியைக்கையால் பயந்தவன்போலுள்ளே (உறி)
ச. கையையதனிலிட்டு கடுகிவெண்ணெயெடுத்து
மெய்யன்வாயிலிட்டு மேகவண்ணன் அடுத்து (உறி)
ரு. ஆயன் திருமகனும் அந்தகாரத்தில்சென்று
மாயாவதாரனும் மருண்டவன்போல்நின்று. (உறி)

வசனம்.

கண்ணன் செய்தவையெல்லாங் கண்ட சோதை கண்ணனைப் பிடித்தடிக்கும்படி அவனோடு ஓடுதல்.

விருத்தம்.

பொங்கிவரும் பாலதனைச் சோதைசென்று
போயடுப்பி லிருந்திறக்கிக் கீழேவைத்துத்
துங்கமுடன் தாழியண்டை வந்துசேர்ந்து
துண்டாக வுடைபட்டு இருக்கக்கண்டு
இங்கிதனை யிப்படியாச் செய்தகண்ணன்
எங்குற்றா னென்றவளுந் தேடிப்பார்த்துத்
திங்கள்மதி யுடையாளும் இருட்டறைக்குள்
தேடினாள் பிள்ளைபின்னே யோடினாளே. (நாள்)

இராகம் - பந்துவராளி - சாபுதாளம்.

பல்லவி.

ஓடினாளே சோதை - உத்தமனைப்பிடிக்க
ஓடினாளே சோதை

அநுபல்லவி.

நாடியவனைப்பிடிக்க நற்சுதனையடிக்க (ஓடி)

சரணம்.

முடித்தமலருதிர முன்னம்புவியதிர
பிடித்துக்கையினிற்கோலை பிள்ளைபின்னந்தவேளை (ஓடி).



உ. சிரமத்தால் அவள்களைக்க சீர்முகம்வேர்த்திளைக்க
பிரமித்தவடம்நின்று பேசியேவாவென்று (ஓடி)
ங. பிரம்மருத்திராதிகண்டு பிடிக்கக்கூடாதவிண்டு
மர்மமறியாக்கோதை மகனைப்பிடிக்கச்சோதை (ஓடி)
ச. காளமேகம்போல்வண்ணன் - கண்டவள் இளைப்பைக்கண்ணன்
நீலரூபன்னடிக்க நெருங்கியவள்பிடிக்க, ஓடி)

வசனம்.

இப்படிச் செய்த கண்ணனைத் தாம்பு கொண்டு சோதை யுரலோடு கட்டுதல்.

விருத்தம்.

ஓடியிந்தவிதம் அலுத்த தாய்வருத்தம்
உத்தமனுங் கண்டுளத்தி லிதக்கமுற்று
நீடியினி நாமிப்போ திரிந்தோமானால்
நிமைப்போது மினிசகிக்க மாட்டாளென்று
வாடிமிகத் தளர்ந்தான்போல் அருகிற்சிக்க
வாட்டமுறும் பிள்ளையினைக் கரத்தாற்பற்றிக்
கூடியினி யிடறுகளைச் செய்யாவண்ணம்
குட்டினாள் கொண்டுரலிற் கட்டினாளே. (நாது)

இராகம் - பந்துவராளி - ரூபகம் - தாளம்.

பல்லவி.

கட்டினாள் யுரலிற் சோதை
கண்ணனைச் சிறு தாம்பினாலே
கட்டினாளே யுரலிற் சோதை

அநுபல்லவி.

நிட்டைசெய்துங்காணொணாத சிட்டனைமதிமயக்கத்தாலே (கட்)

சரணம்.

க. ஆதியந்தமென்பதற்ற வேதனைலோகநாதனை
ஓதியந்தகோகுலத்தில் உத்தமனையுயர்நாரணனை (கட்)
உ. நீதியாகவேவிளங்கும் நித்தனைப்பரிசுத்தனை
ஜோதியானஉலகமுண்ட துய்யனையாழிக்கையனை (கட்)
ங. சருவலோகசரணியனாகி வந்தவனையருள்தந்தவனை
அரூபமாகியெங்குநின்ற ஆயனைசுத்தமாயனை (கட்)

௪. கருமுகில்நேர்வண்ணனிடையில் கட்டவுங்கயிறெட்டவும்
சரியில்லாமல்இருவிரற்கடை-குறையவுங்கண்ணன்நிறையவும் (கட்)

௫. கட்டுங்கயிறுஎட்டப்போதாமல் கண்ணனை மணிவண்ணனை
விட்டுவிட்டால் ஓடுவனென்றே மெய்யனைநந்தன்துய்யனை (கட்)

௬. ஒட்டுக்கயிறுகள்முடிந்து உள்ளனையெற்றுங்கள்ளனை
துட்டனென்றுசொல்லிச்சோதை சோரனையதிசூரனை (கட்)

௭. சகிகளெல்லோருஞ்சிரிக்க தான்சிரித்துமனந்தரித்து
முகில்நிறக்குழல்சோதைமுகம்-வேர்க்கவும்மெய்யன்பார்க்கவும் (கட்)

௮. அகிலலோகன்தாயின்இளைப்பை ஆற்றவும்உடன்தேற்றவும்
சுகியெனுந்திருலட்சுமிகேள்வன் துலங்கவேயருள்விளங்கவே (கட்)

வசனம்.

உரலிற்கட்டிய கண்ணன் உரலையிழுத்துக்கொண்டுவந்து மருதமரத்தைநோக்க அம்மரங்கள் அங்குற்றகாரணத்தைச் சொல்லும்படிப்பரீக்ஷித்துச் சுகமுனியைக் கேட்குதல்:

விருத்தம்.

கட்டினத்தாய்த் தானினைத்துச் சோதையன்று
கண்ணனவ னங்கிருப்பா னெனவேஎண்ணி
விட்டிவனை யினியவனு மிருக்குஞ்சொந்த
வீட்டிலுள்ள வேலைகளைச் செய்யப்போனாள்
கெட்டியே யவ்வுரலை யுருட்டியோடி
நேராக விளங்குமர முற்றனென்று
இட்டமாஞ் சுகருரைக்க மருதமூலம்
ஏற்றென்றான் பரீக்ஷித்து சாற்றென்றானே. (௱௧)

இராகம் - நாதநாமக்கிரியை - அடதாளம்.

பல்லவி.

என்றனுக்கு உரைத்திடய்யா எழில்ஞானமுனியேமெய்யா

அனுபல்லவி.

அந்தக்குபேரரத்தினம் அடைந்தசாபம் இத்தினம் (என்)

௧. நளகூபரமணிகிரீடர்கள் நாட்டில்வருவானேன்
நாரதமகரிஷியினுடைய சாபத்தைப்பெறுவானேன் (என்)

௨. குய்யகர்கள் இருவருமே கூடிஎங்குசென்றார்
வையந்தனில் அவர்மருத மரமாயேன்நின்றார் (என்)



115

௩. எத்தனைநாளாயவர்கள் இருந்தார் தாவரமாய்
உத்தமனேயித்ததியில் உரைப்பீரதைத்திரமாய் (என்)

௪. தாம்பினுலேகட்டிவிட்ட தாமோதரப்பெருமாள்
தேம்புமவர்வினைகள்தீர தேவரேனுடிவருநாள். (என்)

வசனம்.

சுகமுனிவர் பரீக்ஷித்துக்குச் சொல்லுதல்.

விருத்தம்.

அரியமறை முனிவர்களுந் தேடுநல்ல
அழகுள்ள சுகரும் பரீக்ஷித்தைநோக்கிச்
சரியான நடவடிக்கை யுடையகோவே
சாற்றுவேன் சந்தேகம் நீக்குமென்ன
கரியமுகில் வண்ணன் கட்டுண்டவாறும்
கருணையினால் மருதத்தை முறித்தவாறும்
பரிவினால் குய்யகரைக் கண்டவாறும்
பகர்ந்திட்டான் அரசனுமே யுகந்திட்டானே: (௱௨)

இராகம் - மத்தியமாவதி - ரூபகதாளம்.

பல்லவி.

பரீக்ஷித்தேகேளும்-குய்யகர்-பாரில்வந்ததைநாளும்

அநுபல்லவி.

அரியுடையபக்தர் நாரதமகமுனி
அன்றிட்டசாபத்தால் அடைந்தபலபிணி (பரீக்ஷி)

சரணம்.

௧. உருத்திரனுக்கவர் மெத்தத்துவேஷியாகி
உன்மதத்தால் உபவனத்திலிருவரோகி
மத்தியபானஞ்செய்து மதோன்மத்தராய்த்திரிந்தார்
மத்தியானகாலத்தில் மகிழ்ந்துகிரீடித்திருந்தார் (பரீக்ஷி)

௨. அப்ஸரஸ்திரிகளுடன் அவடத்தில்போகித்து
அங்கத்தைஸ்திரமாக எண்ணியேமோகித்து
தப்பானகாரியங்கள் தாங்கள்செய்துகொண்டார்
தாமேபெரியரென்று தழுவிக்கிரீடித்துநின்றார் (பரீக்ஷி)

௩. பரிசுத்தமானதோர் பகருநதிதன்னில்
பாசமற்றரிக்ஷிகள் பார்க்க அவர்கள்முன்னில்

கரியைப்போல அவர் காணப்பெண்களைத்தேடி
காலத்தைப்பாராமல் கலவிசெய்துகூடி (பரீக்ஷி)

௪. போகஞ்செய்யுமந்த காலந்தனில்வரவும்
பூரணஞானமுள்ள நாரதரங்குற்வும்
மோகத்தாலாடிய பெண்கள்கண்டுதெரிந்தார்
வேகமாகத்துகிலை யிடையிற்கட்டியிருந்தார் (பரீக்ஷி)

௫. தேகமனித்யமென்று சற்றேனுந்தேராமல்
இரிந்தவர்எதிரினில் வருவோரைப்பாராமல்
லோகத்தில்வாழ்வதே ருசியெனவேயுணர்ந்தார்
துச்சரைப்போலவே ரூபிகளைப்புணர்ந்தார் (பரீக்ஷி)

௬. வஸ்திரமில்லாமலிவர் வனத்தில்ஸ்தம்பம்போல்நிற்க
அஸ்தத்தில்வீணையுடை அவரிந்தசாபமேற்க
மொத்தத்தில்மரமாகி முளைத்துக்கோகுலம்பார்க்க
மொய்குழல்லட்சுமிநாதன் முனைந்துசாபந்தீர்க்க (பரீக்ஷி)

வசனம்.

கண்ணன் கட்டிய உரலோடுபோய் மருத்தை முறித்து நளகூபர மணிகிரீடாள் சாபந்தீர்த்தவுடன் அவர்கள் கண்ணனைத்துதிசெய்தல்.

விருத்தம்.

அந்தநாரத ரிட்டசாபந் தன்னை
யறிந்துகண்ணன் தீர்ப்பதேனத் தானுமெண்ணி
வந்துஉரல் தனையிழுத்து இடையிற்செல்ல
வளர்ந்தநெடு மரமிரண்டு முறிந்துவீழக்
கந்தருவர் போலவே ரூபங்கொண்டு
ககனத்தில் கிளம்பியுட னெதிரில்நின்று
வந்தனங்கள் செய்தேயம் மாயன்தானை
வணங்கினர் துதிசெய்ய இணங்கினரோ. (௱௰௧)

இராகம் - புன்னாகவராளி - சாபு தாளம்.

பல்லவி.

சரணமையாசரணம் ஹரி தாமோதராசரணம்
ஜனனமரணத்தைநீக்கும் ஸ்ரீதராவுன்சரணம்

அனுபல்லவி.

தருணமிதெங்களைக்காக்க சர்வக்கியனேவினைதீர்க்க
கருணையுடனேயேற்க கடாக்ஷித்தெங்களைநோக்க (சரணம்)



117

சரணம்.

௧. தேவர்கட்குந்தேவனான தேவதேவோத்தமனே
மூவர்கட்குமுதல்வனான மூலமாம்வித்தகனே
யாவருக்குந்தாயைப்போல ஆதரிக்குந்தூயனே
அவதிபடுங்கரியன்றழைக்க அடுத்துவந்தநேயனே (சரணம்)

௨. சத்வரஜதமத்துடனே தமகுணமும்நீரோ
சர்வமாகவேவிளங்கும் ஸகஸ்ரநாமப்பேரா
உத்தமனேயுலகமெல்லாம் உண்டுமிழ்ந்தவாயா
நித்யனென்றேயுனையறிந்தோம் நீணிலத்தில்மாயா (சரணம்)

௩. பரப்பிரம்மமாய்த்துலங்கும் பரம்பொருளேயாளும்
தரணிதனில்உம்மைப்போலத் தயாளுஇல்லைகேளும்
பிறவியில்லாமலெங்களை பேருலகில்கண்ணா
நிறவியேதயவுசெய்யும் நீலமேகவண்ணா (சரணம்)

௪. பரமபாகவதருடைய பதம்பணிந்தோம்சுவாமி
கருமங்கள்தீர்த்தருள்வாய் சங்கையுடையாய்நேமி
பெருமையாகவுமது சேவைபெற்றோம்நாமென்று
அருமையாகவும்பதத்தி லடைந்தோம்கதியின்று (சரணம்)

௫. வாசமலர்ப்பாதங்களை வணங்கும்படிசிரமும்
காசாம்பூமேனிதனைக் காணருள்நேத்திரமும்
கேசவனேயுனையெங்கள் கீர்த்தனைசெய்வாயும்
நேசமுடனஞ்சலிக்க நித்தமெங்கள்கரமும் (சரணம்)

௬. பொருவில்லாதநின்புகழைப் போற்றிச்செவிசாத்த
உருவமைந்தநின்கோயில் உகந்தெம்பதம்சுற்ற
பெருமிதமாம்நின்கருணை பேருலகிலுற்றோம்
திருலட்சுமிநாதனுன்னால் தீவினையுமற்றோம் (சரணம்)

வசனம்.

கண்ணன் நளகூபர மணிகிரீடவர்களுக்கு விடைதருதல்.

விருத்தம்.

துதிசெய்துநளகூப மணிகிரீடரும்
துயரற்றுக்கண்ண னெதிர்வந்துநிற்கக்
கதிபெற்றீர்நாரதரன் றிடுசாபத்தைக்
காலம்வருமளவு மனுபவிக்கவேண்டும்
விதிவலிதென் றுலகத்தில் சொல்லுவார்கள்
விலக்குவதற்குங்களா லாகுமோதான்

பதியடைந்துபகவானைப் போற்றிநீங்கள்
பாரொன்றுர்பழைய படிச்சேரென்றுரே. (௱௰௨)

இராகம் - செஞ்சுருட்டி - ஆதிதாளம்.

பல்லவி.

நளகூப்ரமணிகிரீடரே நான் சொல்கிறேன்கேளும்.

அனுபல்லவி.

நாரதரிஷிசாபந் தீர்ந்தீர்நாளும் (நளகூபமணிகிரீடரே)

சரணம்.

க. சத்புருஷர்களுடைய தரிசனபரியந்தம்
சமுசாரபந்தமது தானிருக்கும்அந்தம் (நளகூ)

உ. உத்தமமாகவிருக்கும் உள்ளகுணத்தோரே
நித்தமானபதவியினை நீங்களடைவீரோ (நளகூ)

௩. போற்றங்கள் உய்யகரோ புண்டரீகன்தாள்நாட்டு
நேற்றியாமென்வசனம் நீங்களுமேகேட்டு

௪. அய்யன் அருளாலே அகலும்வினைமேலே
செய்யும்இனிநீரும் ஜோதீசன்திருவேலை (நளகூ)

வசனம்.

கோகுலத்தில் உள்ள நந்தகோபர் முதலிய யாவரும் மருதம் மு... த்சையைக்கேட்டுப் பயந்து ஓடிவந்து கண்ணன் கட்டுடன் பயப்... லிருப்பதைக்கண்டு சந்தேகப்பட அங்கு விளையாடுஞ் சிறுபிள்ளைகள் நட... நவிஷயங்களைச்சொல்லுதல்.

விருத்தம்.

மாயனது நியமனத்தை யவருங்கேட்டு
மகிழ்ந்துவட திசைநோக்கிப் போனபின்பு
ஆயர்களு மரமுறிந்த வோசையாலே
அதிவிரைவில் மனம்பதைத்து ஓடிவந்து
காய்கனிபூ விலையோடுஞ் சாய்ந்துஅங்கே
கண்ணனுந்தன் கட்டோடு நடிவிருக்கக்
சேயர்களும் விளையாட்டை விட்டுஎல்லாஞ்
சேர்ந்திட்டார் செல்வங்கே நேர்ந்திட்டாரே. (௱௰௩

இராகம் - ஸ்ரீராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

ஆயர்களாகேளுங்கள் அறிந்ததைச்சொல்கிறோம் நாங்கள்



அனுபல்லவி.

க. மாயனெனப்பெயர் பெறுலோலன்
மகிமையைச்சொல்வோம் வெகுசீலன் (ஆயர்)

சரணம்.

உ. உரலையிழுத்தான் மாதவனும்
ஓடிவந்தானே யாதவனும் (ஆயர்)

௩. உரமாயிழுத்தது லடியற்றும்
ஒடிந்துவிழுந்தது மரமுற்றும் (ஆயர்)

௪. முறிந்தமரத்தி லிருந்திருவர்
முளைத்துவந்தார் கந்திருவர் (ஆயர்)

௫. அறிந்தவரோயவ்வரி யென்று
அஞ்சலிசெய்தார் எதிர்நின்று. (ஆயர்)

௬. அஞ்சலிசெய்தோர்க் கருள்செய்தார்
அண்டர்களும்பூ மழைபெய்தார் (ஆயர்)

எ. அவர்களும்வடதிசை யாய்ச்செல்ல
அறிந்ததைவந்திங்கே யாஞ்சொல்ல. (ஆயர்)

வசனம்.

கண்ணன் மரப்பாய்ச்சி பொம்மை முதலிய யாவுங்கொண்டு மழலைச் சொற்களோடுங்கூடிச் சிறுபிள்ளையைப்போல் விளையாடி நடித்தல்.

விருத்தம்.

அடிதொட்டு நடந்தபடி பாலரோத
அவருடைய சந்தேக நீங்காமையாலே
மடியிட்டுப் பிள்ளைதனைக் கொண்டுஉள்ளே
மதிமயங்கி யிவர்களெலா மிருக்கும்போது
படிமீதில் சிறுகுழந்தை போல்நடித்துப்
பாச்சி சோச்சியெனப் பரிந்துகேட்க
அடிசிலுடன் அறுசுவையுஞ் சேர்த்துஊட்ட
ஆடினன்பது மையெடுத் தோடினனே. (௱௰௪)

இராகம் - மத்தியமாவதி - ஆதிதாளம்.

பல்லவி.

ஆடினானே கண்ணன் விளையாடினானே கண்ணன்

அனுபல்லவி.

ஆடினானே கண்ணன் அந்தம்பெருக அந்தப்
யாடியிடைச்சிகள் சிந்தையுருகவே (ஆடி)

சரணம்.

௧. பொம்மையுங்கிண்ணமும்    பொற்கல்சச்செப்பும்
அம்மனைக்கிலுங்கும்    அழகானகிள்ளையும்
அண்டியேதன்னுடன்    ஆடுஞ்சிறுவரோடு
ஆடுவான் - வீதியில் - ஓடுவான் - திரிந்தங்கே
பார்டுவான்-நின்றுடன் - தேடுவான்-பைந்தொடியர்
ஓதியபடிசெய்து    உற்றவர்கள்களிக்க
நீதியாயக்குற்று    நீலன்பரிமளிக்க. (ஆடி)

௨. சிந்துபடியென்று    சேல்வழியாரோத
இந்துமுடிமார்சித்தம்    ஏற்கும்படிபாடி
இணைநிருபாதமலர்    காணச்சிவக்கவாடி
தைத்துவான் - அவர்களை - நத்துவான் - பின்னையுஞ்
சுற்றுவான் - கரங்களைப் - பற்றுவான் - தன்னையுங்
கட்டியவர்கள்தரும்    கனிவாயமுதமுண்டு
மட்டிகளெல்லாரும்    மனிதனென்றெண்ணநின்று (ஆடி)

௩. தண்ணீரில்தன்னிழல்    தான்கண்டுகோல்கொண்டு
எண்ணியதையடிக்க    எடுக்கக்கையதுதூக்க
கண்ணன்பயந்தவன்போல்    கடுகித்தன்தாயைக்கூவி
காட்டுவான் - பாபாவென்று - நீட்டுவான் - கதிசொல்லிக்
கூட்டுவான் - செய்கையெல்லாம் - நாட்டுவான் - இவ்விதமாக
சூதுகள்செய்துதன்    சொரூபத்தைக்காட்டாமல்
ஓதும்நித்தியனென்று    உணர்ந்தறியவொட்டாமல்

௪. மழலைச்சொல்லமுதூட்டி    மாதனைமயக்குவான்
குழல்போன்றவோசையால்    கும்பலாகவிருக்கும்
கோகுலந்தனில்லட்சுமி    குடியேறிவீற்றிருக்கப்
பேசுவான் - கைகளை - வீசுவான் - விருத்தனை
யேசுவான்-பயந்துடன் - கூசுவான்-கண்ணும்பூச்சி
ஆடுவான்பயல்களோடு    அடுத்திருப்பான்எட்டி
தேடுவான்பின்னோடே    திரும்பிவருவான்கிட்டி (ஆடி)

வசனம்.

இப்படிக் கண்ணன் விளையாடிக் கொண்டிருக்க ஓர்தினத்தில் ஒரு கிழவி நாவற்பழங்கூடையிற் கொண்டு வீதியில் விலைகூறல்.

விருத்தம்.

ஆவலுடன் பதுமைபந்து முதலாய்க்கொண்டு
அவ்விடத்தில் விளையாடிக் குழந்தைபோல



121.

கோவலுடன் கோபியருங் கண்டுசித்தம்
கொண்டாடத் தன்னையறி யாதவண்ணம்
பாவனைசெய் திருக்கூத்தே யாடிநின்று
பாடியிலே யன்னைதந்தை மயங்கச்செய்ய
நாவல்தருங் கனிவிற்குங் கிழவியோர்நாள்
நாடினள் வீதிதனில் பாடினளே. (௱௫)

இராகம் - ஸ்ரீராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

விலைகூறினளே - நாவற்பழம் - விலைகூறினளே

அநுபல்லவி.

விலைகூறினளே    வீதியிலேவந்து
விண்ணவருங்கூட    விரும்பும்படியுவந்து (விலை)

சரணம்.

௧. கன்னலுமுக்கனியும்    கருதில் இதற்குநேரோ
பன்னப்பலருசியும்    பாருமிதனிற்சேரோ
இன்னலமுண்டுபின்    ஏழைசொல்பாரென்று
அன்னநடைக்கிழவி    அவடந்தனிலன்று (விலை)

௨. உண்ணவுலகத்தோர்    ஓடிவருவார்பின்னே
நண்ணியென்னைத்தேடி    நாடுவார்கள்சொன்னே
வெண்ணிலிதைப்போல    எங்குங்கிடையாதினி
ண்ணநிறமுள்ள    மதுரந்தருங்கனி (விலை)
த்தனைதின்றாலும்    இளைப்பதுதட்டாது
இத்ததிதப்பினால்    இனியெங்குங்கிட்டாது
முத்தனுமுருந்தனும்    முறையாகவேதேடி
சித்தமுவந்துண்ணும்    சீனியேதென்றுபாடி (விலை)

௩. பக்ஷமுண்டாகவெங்கும்    பார்தனிலேபண்ண
நிச்சயமுள்ளபெரு    நித்தியானந்தகண்ண
தக்ஷணலட்சுமிநாதன்    தானும்பிதைக்கண்ண
இச்சைவைத்துடனே    இயைந்துவரவேயுண்ண (விலை)

வசனம்.

கண்ணன் தானியங்கொடுத்து நாவற்பழங்கொள்ளுதல்.

விருத்தம்.

பழக்காரி குரலோசை கேட்டவந்தப்
பாடியுள்ள குழந்தைமுதல் பெரியோர்யாரும்

வழக்காடிக் கனிவிற்பா ளருகிற்சென்று
  வாதாடிக் கைதனிலே வாங்கிதின்ன
முழக்கர்ன கோஷ்டியது சூழப்பெற்ற
  முகுந்தனுமே கரங்கொண்ட நெல்லெடுத்து
உழக்கான படிதனிலே யதனைக்கொட்டி
  ஒப்பினன் கொடுவென்னச் செப்பினனே. (௱௰௬)

இராகம் - தன்னியாசி - சாபுதாளம்.

பல்லவி.

பழக்காரிவாடி பழந்தக்துபோடி

அநுபல்லவி.

தழைக்குத்தானியம்வாங்கி சந்தோஷமாகவோங்கி (பழக்)

சரணம்.

௧. நாவற்பழங்கண்ணை நான்ருசிக்கவுண்ண
தாவியழைத்தேனின்று தந்துபோநீயின்று (பழக்)

௨. என்றன்கையிற்சம்பா எடுத்துவந்தேனன்பா
உன்றன் அளவுகண்டு உகந்துதாடியென்று (பழக்)

௩. நாழிசெய்யாமல்நீயும் நல்விலைகண்டுநயும்
ஆழியங்கையனன்பு ஆருவார்நீயுநம்பு (பழக்)

௪. இச்சையாகநன்ருய் இருக்கும்பழமீதென்ருய்
லக்ஷுமிநாதனாலே லாபும்பெறுவாய்சில

வசனம்.

இவ்விதமாக நாவற்கனிபெற்றுப் பழக்கூடைமுற்றும் இரத்தினமாயவள் தன்வீட்டுக்குப் போனபின் கண்ணன் பிள்ளைகளுடன் வீதியில் விளையாடு மழகைச்சொல்லுதல்.

விருத்தம்.

இந்தவிதங் கரங்கொண்ட நெல்லையிட்டு
  இருக்குநல்ல விளங்கானி தனக்குகந்து
விந்தைபெறுங் கைநிறையக் கனிகொடுக்க
  விபுவான கண்ணனுக்கு அருள்சுரந்து
மந்தமறக் கூடைபழ மெல்லாம்ரத்தின
  மாக்கியவள் வினைதனையும் போக்கிப்பின்பு
சிந்தைமகிழ் வாங்கிற்குஞ் சிறுவரோடே
  சேர்ந்திட்டான் விளையாட நேர்ந்திட்டானே. (௱௰௭)



இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

விளையாடினன்கண்ணன் விளையாடினன்
வேணுகோபாலகிருஷ்ணன் விளையாடினன்

அநுபல்லவி.

௧. களையாமற்றோழருடன் கலந்துநாடினன்
கருமுகில்நேர்மேனிசிலன்காண ஆடினன் (விளை)

சரணம்.

௨. தண்டைச்சிலம்புசையச் சாய்ந்தாடினன்
மண்டலத்தையுண்ட திருவாயாற்பாடினன்
கொண்டையிற்பூச்சிக்கக் கூத்தாடுவான்
அண்டைநிற்கும்பெண்கள்பார்க்க அவனும்பாடுவான் (விளை)

௩. கங்கணத்தோளசையக் கையைவீசினன்
மங்கைமாரியாருங்கண்டு மகிழப்பேசினன்
அங்கப்பணிகுலுங்க யானையாடினன்
திங்கள்முகமாதர் தேடஓடினன் (விளை)

௪. பந்தம்பதுமைகளுங் கையிற்கொண்டான்
ந்துபயல்களுடன் வாதாடுகின்றான்
ந்தும்பெண்கள் ஜடையைப் பற்றியிழுத்தான்
துபாடிபோடியென்று செப்பிப்பழித்தான். (விளை)

௫. கண்ணும்பூச்சியென்றுசொல்லிக் கையாற்கட்டுவான்
விண்ணின்மதியைக்காட்டி விரலைநீட்டுவான்
அண்ணுதம்பியெங்கேயென்று அய்யன்தேடுவான்
எண்ணுதெல்லாஞ்சொல்லிலக்ஷுமி நாதன்கூடுவான். (விளை)

வசனம்.

விளையாடும் இராமகிருஷ்ணரிருவரும் ரோகணியழைக்க வராமையால் சோதை யோடியழைத்தல்.

விருத்தம்.

ஆழமாமலை கடலிற் றுயிலுநாதன்
  அன்றந்த வீதியிலே யாடிநிற்க
வாழமனதுடன் யமுனை தீர்த்தங்கொண்டு
  வருகின்ற ரோகணியு மழைக்கமைந்தர்

தோழர்தமை விட்டுப்பின் வராமையாலே
துரிதமா யவள்சோதை தனக்குரைக்க
வாழையுடன் முக்கனியுந் தருவேனுண்ண
வாவென்றாள் கண்மணியே வாவென்றாளே. (௱௰௮)

இராகம் - காபி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. வாடாவாடாராமகிருஷ்ண தாடாதாடாஒருமுத்தம்
பேடாபோடாநம்மனைக்குப் போஜனந்தான்செய்வதற்கு (வாடா)

உ. தந்தைதாயாரிதுமட்டும் சாப்பிடாமற்காத்திருக்க
எந்தனருங்கலிதீர்த்த எம்பிரானேஉடாதேவாடா (வாடா)

௩. உன்னுடையதோழரோடி உனக்குப்பின்வரெனினும்
அன்னைசொற்படிசெய்யும் அவனைநீயுஞ்சென்றுபார்த்து (வாடா)

௪. ஜன்மநக்ஷத்திரமென்னச் சாற்றுந்திருவோணமின்று
நன்னயமாய்நீயும்வாடா நாழிவீணில்போக்கவேண்டாம் (வாடா)

௫. எண்ணெய்சீக்காய்மஞ்சளுமே-எடுத்தனைத்துஜலமும்வைத்தேன்
வண்ணமுடன்நீயுகந்து வந்துநன்னீருமாட (வாடா)

௬. புசித்தவொருசாமமாச்சு புழுதிபட்டமேனியனே
பசித்துவிளையாடவேண்டாம் பலராமனுடன்நீயும்வாடா (வாடா)

வசனம்.

திருமஞ்சனமானபின் இராமகிருஷ்ணருக்குத் திருவாபரணம் பூட்டல்.

விருத்தம்.

வந்திரு மைந்தர்தம்மை மடிமேல்வைத்து
வஞ்சியவள் வாயார முத்தமிட்டு
இந்தஇளங் குமரருக்குத் தைலங்கொண்டு
ஏற்றகற் கலவையுடன் தேய்த்துப்பின்பு
கந்தமலர்ப் பாதாதி கேசமெல்லாம்
கழுவியே புழுதியெல்லாம் நீங்கிப்போக
அந்தமிகும் மழகருக்கே அழகுசெய்ய
அடுத்திட்டாள் ஆபரணம் தொடுத்திட்டாளே. (௱௰௯)

இராகம் - மோகாரி - சாபுதாளம்.

பல்லவி.

பணிகள்பூட்டினார் - பலராமகிருஷ்ணர்க்கு
பணிகள்பூட்டினார்



அநுபல்லவி.

மணிவண்ணன்திருக்கழுத்தில் மகாகண்டிகையெடுத்து (பணி)

சரணம்.

௧. வண்ணக்கருங்குழல் வாரிப்பின்னியே
வண்டயக்கணுக்கு மையெழுதி
கொண்டைக்குப்பூச்சூடி கஸ்தூரிபொட்டிட்டு (பணி)

௨. பீதகவாடையுடுத்தி யிருவர்க்கும்
பின்னுமந்த தாயசோதை
தோதகமாய்க்கட்டி மணிகளும்பூட்டி (பணி)

௩. கொண்டையணிகளுங் குண்டலத்துடன்
கோமளமேனித் தாளுக்கு
தண்டைச்சிலம்பொடு தாவடம்மாட்டி (பணி)

௪. சுட்டியொடுசூரிய சந்திரபிரபையும்
சொல்லும்லக்ஷ்மி நாதனுக்கு
சட்டமாய்ச்சடை சிங்காரமுங்கட்டி. (பணி)

வசனம்.

உபநந்தர் இனத்தாரோடும் புத்திரமித்திரர்களோடும் பிருந்தைக்குப் போய் யோசித்தல்.

விருத்தம்.

பூட்டியே யாபரண மிருவருக்கும்
புகழ்ந்திருந்து சோதை ரோகணியுங்காண
நாட்டிலிவர் பிறந்தநாள் வந்ததென்று
நற்றன முதலளித்து விருந்துஞ்செய்து
கூட்டியதா லாயரெல்லா மங்குசேர்ந்து
கும்பலாய்க் குழந்தையுட னிருக்கும்போது
நீட்டியுபநந் தருந்தன் னினத்தைக்கூவி
நேசித்தார் குடியெழ யோசித்தாரே. (௱௨௰)

இராகம் - சங்கராபரணம் - ஏகதாளம்.

பல்லவி.

ஆயர்களாகேளுங்கள் ஆலோசித்துப்பாருங்கள்

அநுபல்லவி.

நியாயமாகச்சேருங்கள். நேர்ந்துசெய்வாருங்கள். (ஆய)

சரணம்

௧. இந்தவூரிலேயிருந்தால் இருக்வொட்டான்கஞ்சனும்
வந்தபூதனைமுதல்செய் வஞ்சனைகளெல்லாம்பாரும்(ஆய)

௨. சகடமாய்வந்தானொருத்தன் சாய்ந்துவிட்டான்தெய்வத்தால்
விகடச்சுழல்காற்றாய்வந்தான்-வீழ்ந்துகெட்டான்செய்தவத்தால் (ஆ)

௩. மருதமரங்கள்முறித்ததும் மைந்தரிருவர்பிழைத்ததும்
அரிகண்ணனைக்காத்ததும் ஆயர்குலங்கள்தழைத்ததும்(ஆய)

௪. பசுக்கள்கன்றுகள்பாலர்கள்நாம் பாரில்எதிரியைவெல்லுவோம்
வசிக்கயோக்கியமாயிருக்கும்-வனமதற்கெல்லோருஞ்செல்லுவோம்.()

வசனம்.

கோகுலத்தோர் எல்லாரும் பிருந்தைக்குப்போதல்.

விருத்தம்.

யோசித்த படிப்பாடி யாயரெல்லாம்
உடன்பட்டுப் பிருந்தைக்குப் போகவெண்ணி
வாசித்துப் படிப்பதுபோ லெவர்க்குஞ்சொல்லி
வண்டிகளில் வேண்டியவெல் லாநிறைத்து
நேசித்த மனிதர்முதல் ராமகிருஷ்ணர்
நெருங்கியதன் கிளையோடும் நந்தகோபர்
வாசித்தன் மேல்வியர்வை தோணப்பிருந்தை
நாடினார் வனநோக்கி நீடினாரே. ஆடி)

இராகம் - பிலஹரி - சாபுதாளம்.

பல்லவி.

பிருந்தாவனம்போகிறார் நந்தர் பிருந்தாவனம்போகிறார்

அநுபல்லவி.

அருந்துன்பமெல்லாம்போக ஆசையதுமுன்னாக(பிருந்)

சரணம்.

௧. மங்கையர்களுங்கூடி மகிழ்ந்துவண்டியில்நாடி
திங்கள்ஒளியும்வீசத் தேவர்கள்கண்டுகண்கூச(பிருந்)

௨. வாசமுள்ளசோதையுகந்த மைந்தர்நந்தகோபர்மகிழ்ந்த
ஆசையாகத்தேரிலேறி அடுத்துக்கண்ணன்க்ஷேமங்கோரி(பிருந்)



௩. கோகுலந்தன்னைவிட்டு கோபாலர்கோக்களையிட்டு
வாருடன்வனத்தையெண்ணி வந்தவர்எல்லோருநண்ணி(பிருந்)

௪. சங்கடங்கள்யாவும்விண்டு சகலசாமானுங்கொண்டு
தங்கலக்ஷ்மியோடுசென்று சுகமாகவாழவென்று(பிருந்)

வசனம்.

இப்படிப் பிருந்தாவனம்போன கண்ணன் தோழருடன் விளையாடுதல்.

விருத்தம்.

ஆடுகின்ற ஆவுடனே சென்றகண்ணன்
அடுத்திருந்த தோழரையு மழைத்துக்கொண்டு
பாடுகின்ற பறவைபக்கு குழலுங்கோலும்
பாங்காக வெடுத்துவனந் தன்னிற்சென்று
நாடுகின்ற பலவேஷங் கட்டிமேலும்
நரிபோலும் புலிபோலுங் கூவிச்சுற்றித்
தேடுகின்ற வேடிக்கை யாவுஞ்செய்து
திருந்தினான் விளையாடப் பொருந்தினானே. (௱௨௫)

இராகம் - கல்யாணி - ஆதிதாளம்.

பல்லவி.

கண்ணன் விளையாடினானே - பிருந்தையில்வண்ணக்
கண்ணன் விளையாடினானே.

அநுபல்லவி.

மு கண்ணன்விளையாடினானே கானகத்தில்நாடினானே
சி அண்ணனுடன்கூடினானே ஆனந்தமாப்பாடினானே (கண்)

சரணம்.

௧. கன்றுகள்போலிக்கத்தி கானகந்தன்னிற்சுற்றி
நின்றுபக்ஷிகள்பற்றி நேசித்தவரைநத்தி (கண்)

௨. மயில்போலஆடியும் மான்போலவோடியும்
குயில்போலப்பாடியும் குருவிபோல்நாடியும் (கண்)

௩. அன்னம்போல்நடந்தும் ஆறுகளைக்கடந்தும்
சின்னஞ்செய்துதொடர்ந்தும் செடிகள்மீதிற்படர்ந்தும் (கண்)

௪. சிங்கம்போலக்கூவிச் சேர்ந்தவர்மேற்றாவி
எங்கும்மணலைத்தூவி இருக்கும்பாலரை ஏவி (கண்)

௫. புலியைப்போலப்பாய்ந்து போகுமவர்மேற்சாய்ந்து
வலியற்றுப்போயோய்ந்து வந்தவர்பாற்றேய்ந்து (கண்)

௬. பற்பலவிதமுற்றுப் பாரில்வேஷங்கள்பெற்று
பொற்புறும்லக்ஷ்மியுற்றுப் பொருந்தும்படியாய்மற்று. (கண்)

வசனம்.

பிருந்தையில் கன்றாகிவந்த வற்சாசுரனை விளவின்மேலெறிந்து மடித்தல்.

விருத்தம்.

பிருந்தையிலே யிவர்களெல்லா மாடியங்கு
பேதமறவாழ்ந்து தங்க ளினத்தாரோடே
அருந்துயர மதுநீங்கிப் போயிற்றென்று
அனைவர்களுஞ் சந்தோஷ மாயிருந்து
விருந்தமுது செய்துவெகு வினோதமாக
வீற்றிருக்குங் காலிகளின் நடுவிலோர்நாள்
பொருந்தியகன் றுருவான வற்சனையுங்கண்டு
புரிந்திட்டான் விளவின்மே லெறிந்திட்டானே. (௱உ௫)

இராகம் - தன்னியாசி ஆதிதாளம்.

பல்லவி.

கன்றைவிளாவிலெறிந்தான் கண்ணனவதார
லோலன் சீலன் பாலன். (கன்றை)

சரணம்.

௧. பற்றியேகரத்தில்வாலைச்சுற்ற அதுகத்த
கண்ணன்குத்த வெகுளத்தா (க

௨. பிடித்துஅவன்பின்னங்காலையிறுக்க அதுமுறுக்க (௱உ௬)
கண்ணன்ஒறுக்க விதிவறுக்க (கன்றை

௩. எறிந்தவிசையிற்கனிகள்உதிர பூமியதிர
கண்ணன்குதிர விதிமுதிர (கன்றை)

௪. வானவர்கள்விண்ணில்நின்றுபுரிய மலர்சொரிய
கண்ணன்எறிய உடல்சரிய (கன்றை).

வசனம்.

கொக்காய்வந்த பகாசுரனை வதைத்தல்.

விருத்தம்.

கன்றுருவாம் வற்சனிவ் வாறுபட்டுக்
கன்மமெனும் ஜன்மமற்றுக் கதியடைந்தான்



அன்றுசென் றடனிருந்த தோழரோடு
அமுதுசெய்தார் யமுனைநதி தீரந்தன்னில்
என்றுமவர் காணாத பட்சியொன்று
எதிரிருக்கக் கண்டவரெல்லாம் நடுங்கக்
குன்றுருவாஞ் சூரனரு குற்றுக்கண்ணன்
கூறிட்டான் பிளவாகப் பீறிட்டானே. (௱உ௪)

இராகம் - தோடி-ஏகதாளம்.

பல்லவி.

புள்ளை புள்ளை யிழுத்தானே. கிழித்தானே
பூலோகநாதன் புள்ளைபுள்ளை யிழுத்தானே.

அநுபல்லவி.

கிள்ளிக்கிள்ளி அவன் தாளிலும்தோளிலும்
துள்ளித்துள்ளியவன் பற்றியுங்கொற்றியும்
உள்ளிஉள்ளியவன் புழுங்கவிழுங்க
கொள்ளிகொள்ளியென்று கக்க அவன்சிக்க. (புள்ளை)

சரணம்.

கண்டுஅசுரனைச்சீறி கண்ணன்யேறி கோபம்மீறி
அண்டியவனுடன் எதிர்த்துசிறகையுதிர்த்து மேலேகுதித்து
சூதாகவந்தானைச் சுழட்டியிழுத்து
தூமணிவண்ணனும் ஏசியேபழித்து
காதகனைவெகு வேகமாப்பிடித்து
காயாம்பூவண்ணனுங் கையினாலிடித்து (புள்ளை)

அக்கினியைப்போல எரிய - சினம்விரிய - பட்சிசரிய
செக்கானதேகமும்இளைக்க - புற்றிப்பிளக்க - யாருங்களிக்க
கஞ்சன்தன்ஏவலால் வந்தவனைப்பார்த்து
கார்முகில்ரூபனும் அண்டையிற்சேர்த்து
பஞ்சரகவேயவன் தேகத்தையடித்து
பாரித்தஜெந்துவின் பிராணனைக்குடித்து (புள்ளை)

விண்ணவர்கூடிப்பரிய - மலர்சொரிய - வெகுபிரிய
கண்ணனும் அண்ணனுங்கூட - விளையாட - தோழர்நாட
ஆடியேரம்பையூர் வசிகுதிக்க
அந்தவனத்திலே யானந்தம்உதிக்க
பாடியேகின்னரர் கந்தர்வர்துலங்க
பார்தனில்லக்ஷ்மி நாதனும்விளங்க (புள்ளை)

வசனம்.

மறுபடித் தோழருடன் காலியோட்டிக்கொண்டுபோய் கண்ணன் பிருந்தையில் விளையாடுதல்.

விருத்தம்.

வந்ததொரு கொக்கின்வாய் பிளந்துகொன்றான்
வானும் மெச்சவனத் தன்னிற்கிருஷ்ணன்
அந்தமிகு மண்ணன்தன் நேயரோடு
அத்தினமுங் கழித்தவட்டம் விட்டுமீண்டு
நந்தர்முத லுரியோர்கள் யார்க்குமங்கு
நடந்தவற்றைத் தோழர்களு மோதப்பின்பு
விந்தைகுழ லூதிவிளை யாடவோர்நாள்
வேண்டினன் தோழர்களைத் தூண்டினனே. (௱௨௫)

இராகம் - பந்துவராளி - அடைதாளசாபு.

பல்லவி.

விளையாடினாரோபாலர் விளையாடினார்

அநுபல்லவி.

௧. விளையாடினாரோபாலர் வேடிக்கையாகச்சிலர்
களையாமல்கானகத்தில் காலைதூக்கிதூக்கின்று. (விளை)

சரணம்.

௨. மண்டுகம்போல்கத்துவாரும் மரங்கள்மீதில்தொத்துவாரும்
வண்டுபோலச்சுற்றியாரும் விளைந்து ஆடி ஆடி யங்கு (விளை)
௩. போஜனங்கள்பண்ணுவாரும் புஷ்பமணம்தேடுவாரும்
பாசபந்தமெல்லாம்விட்டு பாட்டுப்பாடிப்பாடியோடி (விளை)
௪. வாலில்லாதமந்திபோலும் வனத்திலுள்ளமஞ்ஞைபோலும்
காலில்லாதமுடவனைக் கதறிக்கூவிக் கூவி யங்கே (விளை)
௫. பக்ஷிகள்பொல்பறப்பாரும் பசுவைப்போலப்பாய்குவாரும்
லக்ஷ்மிநாதனென்னத்தங்கள் லீலைசெய்துசெய்துகூடி (விளை)

வசனம்.

மலைப்பாம்பாய்வந்த அகாசூரனை வதைத்தல்.

விருத்தம்.

நடித்ததுத்த பாலரெல்லாம் வனத்தைவிட்டு
நற்றுயர் தந்தையரைச் சேரவெண்ணிப்



படித்துவரும் மார்க்கத்தில் பாம்பின்தேகம்
பாரித்த வாயைவழி யாகக்கண்டு
மடித்தவதின் சூதையறி யாமற்கிட்டி
மைந்தரெல்லாம் வசமாகிப் போனபின்பு
இடித்தரவைப் பொடிப்பனெனக் கண்ணன்காலை
இட்டிட்டான் வளர்ந்துடலைப் பிட்டிட்டானே. (௱௨௬)

இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

அகாசூரனை சம்மரித்தான் ஆனந்தகுண சீலனும்

அநுபல்லவி.

தகாதஅதிவிகாத கொர்வங்கொண்டு கொல்வேனென்றுவந்த (அகா)

சரணம்.

௧. கன்றுகள்தோழர்களோடு கலந்துகாளமேகனும்
சென்றுஅவன்வாயில்புகுந்து சேனு-வேணு-முட்டவளர்ந்து (அகா)
௨. சிக்கங்கள்கையிற்பிடித்து சிறுவருடன்கூடியே
ஒக்கஅவன்உள்ளேசென்று உயர்ந்து-அசைந்து-ஒங்கிக்கண்ணன் (அ)
௩. முரளிகானன்பாலர்கட்கு மோசம்வருமென்றெண்ணி
சர்ஸியலங்காரன்உடனே சத்தம்-அற்று-பெருத்துஅய்யன் (அகா)
௪. கோலும்குடுவையுங்கொண்டு கோபாலரோடுகூடியே
மாலும்அவன்வாயைவிட்டு வந்து-முந்தி-சேர்ந்துசுவாமி (அகா)

வசனம்.

கண்ணன் யமுனைக்கரையில் தோழருடன் கட்டமுதுண்டது.

விருத்தம்.

வட்டம்போல் வளைந்துநெடு வானமட்டும்
வாய்திறந்து கிடந்தமலைப் பாம்பையன்று
சட்டமா யதன்கர்ம மொழியக்கொன்று
சற்குணனு மண்ணன்தோழரையழைத்துக்
கட்டமுது செய்கவென்று யமுனையாற்றின்
கரையருகின் மணல்மேடு தனிலேசேர்ந்து
இட்டமுடன் அவரவர்சிக்கம் அவிழ்த்து
இருந்துண்டார் பொருந்தியங்கே விருந்துண்டாரே (௱௨௭)

இராகம் - பிலஹரி - அடதாளம் - சாபு.

பல்லவி.

பழையதமுது செய்கிறாரோ - பாலரெல்லாருங்கூடி
பழையதமுது செய்கிறாரோ.

அநுபல்லவி.

தழைத்திருக்குமரத்தின்கீழே ஜாரசோரர்குலதீரர் (பழை)

சரணம்.

௧. வகைவகையாய்ஊறுகாயும் வற்றல்வடாங்களுடனே
தொகையாகத்தோழரெல்லாம் சூழ்ந்துமகிழ்தன்னில்ஆழ்ந்து (பழை)

௨. கையில்வாங்கியுண்ணும்பேரும் கலந்துஉண்டு ஆடும்பேரும்
மெய்கலந்தபாலர்நடுவில் வேணுகானன்தானுநின்று (பழை)

௩. புட்டிதன்னில்கொண்டுசிலரும்-பொருந்தியிலையிலுண்டுசிலரும்
கட்டிகட்டியாகஅன்னம்-கரத்தில்கண்ணன்எடுத்துக்கொடுக்க (பழை)

௪. சட்டிகொண்டுசிலபேரும் சாய்ந்துபாறைதன்னிற்சிலரும்
கிட்டியந்தசிறுவர்நடுவில் கீர்த்தியாகக்கண்ணனுடனே. (பழை)

வசனம்.

பிரம்மாவந்து பசு கன்று தோழரை யொளித்துவிட்டபோது கண்ணன் தானே பசுக்களைப்போலவும் கன்றுமுதலிய தோழரைப்போலவும் ரூபங்கொண்டு பதிக்குப்போயிருத்தல்.

விருத்தம்.

பழையதந்த பாலருடன் உண்டிருக்கப்
பசுகன்று மேய்ந்தவைகள் காணமையாலே
கழைகுழலூதியகண்ணன் தேடிச்செல்லக்
கடுகென வப்பாலரையும் மறைக்கப்பிரமன்
இழையுமனக் குணமுடையான் தன்னையந்த
ஏர்குயவன் சோதித்தானென்றுஎண்ணித்
தழையுமந்தை யிளைஞர்களுந் தானேயாகித்
தங்கினான் பிருந்தையிலே பொங்கினானே. (௱௨௭)

இராகம் - காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

கன்றுகள்தோழர்கள் எல்லாந்தாமாகினான்
கண்ணன்மனைக் கேகினான்.



அநுபல்லவி.

அன்றுபாலன்போல ஆலிலைமேல்துயின்ற
ஆனந்தகுணசீலன் வேணுகோபாலன் (கன்று)

சரணம்.

௧. அன்றுதினந்தன்னில் அலறியேபசுக்கள் அடங்கலுமேவருக
நின்றுபால்சுரந்து நிலத்திலேகறக்க நீள்நதிபோற்பெருக. (கன்

௨ கண்ணன்வீடுதோறும்-கருதம்பாலர்போல-தனிக்கும்படியழைக்க
நண்ணியவர்செய்த நல்லமுதையுண்ண நாளுங்கூடியழைக்க. (

௩. பஞ்சலட்சங்குடியில்-பசுக்கன்றுகள்போல-பட்டியிற்சேர்ந்திருக்க
தஞ்சமென்பவரைத் தாங்குந்தாமோதரன் தானேயுற்றிருக்க. (

௪. சங்கதியொருவர்க்கும் சற்றுந்தோணாமலே ஜாலனும்விளையாட
மங்கைலட்சுமிதேவி மகிழும்படிகண்ணன் மாதாமடிநாட. (

வசனம்.

பிரமன் தானடைத்துவைத்த கன்றும் தோழர்களும் வெளியிலிருப்பதைக்கண்டு பிரமித்துக் கண்ணனை யடிபணிந்து தோத்தரித்தல்.

விருத்தம்.

இந்தவிதங் கன்றுடனே தோழராகி
இருந்தங்கு உண்டுவிளை யாடிநிற்கும்
விந்தையினை யொருவருடஞ் சென்றபின்பு
வேணுஅண்ணன் தெரிந்தரியப் போற்றிசெய்தான்
அந்தஅயன் தானடைத்த பாலர்மந்தை
அதிசயமாய் வெளிப்பட்ட விதந்தானென்ன
சிந்தனையாய்ப் போயவரைக் குகையிற்கண்டு
சேர்ந்திட்டான் சிரமடிமேல் தாழ்ந்திட்டானே. (௱௬

இராகம் - அசாவேரி - ஏகதாளம்.

பல்லவி.

சரணம் சரணம் நாதா - என்தன்பிழையை
க்ஷமித்தருள் மலர்ப்பாதா.

அநுபல்லவி.

சரணம்அடைந்தவென்னை சங்குசக்ரதரா
சத்புருஷரைக்காக்க ஜனனமெடுத்தவரோ (சரண)

௧. பாரில்நீலரூபங்கொண்ட பரந்தாமசத்தியரோ
நீரில்ஆதிசேஷன்மேலே - நித்திரைசெய்நித்தியரோ - இனி
பாரும்எந்தனைநீரும் பரிவினால்
பக்கமிருந்துகாரும் பஞ்சாயுதனே
சேரும்உம்முடை சேதனன்தனை
திருக்கரங்களால் உருக்கமாய்ப்பற்றும் (சரண)

௨. நாபிகமலத்திலென்னை கன்களித்தகாரணா
பாபியர்கள்இம்சைதீர்க்கப் பார்த்துவருங்காரணா - இனி
கோபங்கொள்ளாதேநீரும் குற்றஞ்க்ஷமியும்
கோபியர்கட்குலோலா குணசீலா
அண்டுமென்னுடைக் குறைகளைத்தீர்த்து
ஆர்த்துவருமெனைப் பார்த்தாண்டிடும் (சரண)

௩. ஆதியில்நீயொருவனை அடியன்முன்வந்தேகினீர்
நீதியாகவேமர்டுகின்றுகள் நிர்கக்காணவுமாகினீர் - இனி
இதும்எந்தனைநீரோ உகந்துஇப்போ
ஒளிரும்பதுமநயனா உரகசயனா
நாடிச்செய்த பரிக்ஷையைமறந்து
நாட்டில்சிஷனாய் கூட்டிக்காத்திடும் (சரண)

அளவில்லாமகிமைதனை அடைந்திருக்கும்நாதனே
தளர்வுடையபேர்களுக்கு தயவுசெய்யும்வேதனே - இனி
களைகளெல்லாந்தீர்த்துக் கருணையினால்
காப்பதுனதுபாரம் இதுசாரம்
வாருடன் ஜகமாயையைப்போக்கி
வாசுதேவனே யென்னையாண்டவா (சரண)

வசனம்.

அண்ணனுக்கு வனத்தின் சிங்காரத்தை மாட்டோட்டிக்கொண்டு தோழருடன் வரும்போது கண்ணன் சொல்லுதல்.

விருத்தம்.

அயனிந்த விதந்துதித்துப் போனபின்னர்
ஆனந்த மாய்ச்சூழுந் தோழரோடு
நயமாக விருப்பிடமே சென்றான்கிருஷ்ணன்
நடந்தனை வெல்லாமங்கு பாலரோர்தி
தயங்காமல் மாடுகன்று யோட்டியோர்காள்
தருந்தபல ராமர்முதல் சிறுவர்தம்மை



இயைந்தப்படி யழைத்துவன மகிமைகண்ணன்
எற்றினான் அண்ணனுக்குச் சாற்றினனே. (௱௩ம)

இராகம் - ஹிந்துஸ்தானி - சாபுதாளம்.

பல்லவி.

அண்ணாபலராமரே அதிசயங்கள் சொல்லக்கேளும்

அநுபல்லவி.

வண்ணமாகஇந்தவனம் வளர்ந்திருப்பதையெந்நாளும் (அண்)

சரணம்.

௧. கண்டுவிருக்ஷங்களும்மது கழலடியையநாடுது
வண்டினங்கள்தாமுங்கூடி மலர்ப்பதத்தைத்தேடுது (அண்)
௨. ருஷிகளும்மையேகுறித்து நாடுவர்போல்தோணுது
கிருஷிசெய்துவனமுவந்து கிட்டுவதாய்க்காணுது (அண்)
௩. ஆடியேமயில்களெல்லாம் ஆனந்தமாய்க்கூடுது
நீடியே குயில்களெல்லாம் நின்புகழைப்பாடுது (அண்)
௪. பாதஸ்பரிசத்தால்பூமி பாவனமாய்நிற்குது
நாதனேயுன்முகம்பார்த்து நாடும்வனம்பூர்க்குது (அண்)
௫. பழங்களுமதுகைக்குளட்ட பக்குவமாய்ச்சாயுது
கிழங்குவகைமிகவுங்கொண்டு கிடைக்கும்படியீயுது (அண்)
௬. வனலட்சுமிநாதனும்மை வடிப்பமாகத்தேடிச்சேரும்
கனலட்சியந்தன்னைக்கண்டு களித்துநீரும்ஓடிவாரும் (அண்)

வசனம்.

கண்ணன் தோழரோடு வனத்தில் விளையாடத்தங்குதல்.

விருத்தம்.

வனமகிமை கண்ணன்சொலக் கேட்டராமன்
வளருநெடு மகிழ்வாலே வந்திருக்க
இனமாகச் சூழ்ந்தசிறு மைந்தரோடு
எழிலாகு மாயனிளந் தென்றல்வீசக்
கனமாக நின்றகன்று காலியெல்லாம்
கருதியங்கே தூரத்தில் மேய்ந்துபோகத்
தனதாகப் பசுக்கள்பே ரிட்டழைத்துத்
தங்கினார் விளையாடிப் பொங்கினரோ. (௱௩௧)

இராகம் - கேதாரகௌளம் - தாளம்.

பல்லவி.

இந்தவனத்தில் விளையாடினாரே - இருவரும்
இடைப்பிள்ளைகளோடே

அநுபல்லவி.

கந்தமலர்மதுபெருகியநல்ருசி - கானகந்தனில்வில்லை
காய்கனிகளையுண்டு (இந்த)

சரணம்.

௧. சிந்தைகளித்துடல் சேர்ந்துவனத்திலே
விந்தைதரும்படி வேண்டுமினத்திலே
அந்தரதுந்துமி பம்பம்பம்மென
ஆடியரம்பையர் பாடியவாறென (இந்த)

௨. அந்ததருணத்தில் அண்ணன்படுக்கவே
முந்திமுகுந்தன் முன்காலைப்பிடிக்கவே
மந்தமாருதம் கம்கம்கம்மென
மாந்தளிர்கொண்டுகை ஏந்தியபடிவீச (இந்த)

௩. பாயும்புலியைப்போல் பாக்தாமன் ஆடவே
காயும்வனத்தினில் காளைகள்கூடவே
சாயும்பலவிதம் செய்செய்செய்யென
சங்கையில்லாமலே எங்கணும்ஏகியே (இந்த)

௪. தங்கமெனுந்திருத் கண்ணன்கண்வளரவே
பொங்கியபாலரும் புரிந்துடல்தளரவே
அங்கொருசப்தமும் இல்இல்இல்லென
ஆனந்தமாகவே ஆரணியந்தன்னிலே (இந்த)

வசனம்.

பனந்தோப்பில் பழுத்துப் பரிமளிக்கும் பழங்களைப் பறித்துக் கொடுக்கும்படிப் பாலர்கள் கண்ணனைக் கேட்குதல்.

விருத்தம்.

அயர்ந்திந்த விதமாக அந்தவேளை
அண்ணனுங் கண்ணனுமா யுறங்கும்போது
உயர்ந்தபனை மரங்கள்மிகுந் தோப்பினின்றும்
உண்டான பரிமளத்தின் வாடையாலே
பெயர்ந்துசிறு பிள்ளைகளக் கிருஷ்ணன்பக்கல்
பிரியமா யோடியுட னெழுப்பினின்று



வயர்தபசி வலிதீரக் கனிகொடுக்க
வாவென்றார் பறித்தெமக்குத் தாவென்றாரே. (௱௩௨)

இராகம் - முகாரி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. கண்ணுவந்தனோர்கள் கருதியேவந்ததைக்கேளும்கேளும்
எண்ணிவந்தகனியெங்களுக்குத்தந்து ஆளும் ஆளும்
௨. மெத்தப்பசிக்குது மேனியிளைக்குது பாரும் பாரும்
உத்தமம்நீரதை யுண்ணவெங்களுக்கிப்போ தாரும் தாரும்
௩. காதையடைக்குது கண்ணையிருட்டுது காரும் காரும்
வேதைதமைத்தீர்த்து வேண்டுங்கனிகளைத் தாரும் தாரும்
௪. தொந்தியும்வாடுது தொண்டைவறண்டது மேலும் மேலும்
அந்திபடுமுன் எம்பசியையாற்றினால் சாலும் சாலும்
௫. மதுரமானகனி எங்களுக்குத்தர வேணும் வேணும்
சதுரமாகவனம்போக எழுந்திருங் காணும் காணும்
௬. பக்ஷமாகவிந்தப் பாலர்வனந்தனில் நட்டு நட்டு
குக்ஷிபாதைதீரக் கோலலட்சுமீநாதா இட்டு இட்டு

வசனம்.

தேனுகாசூரன் வருதல்.

விருத்தம்.

சொல்லுரையால் கண்ணனந்த வனத்தைநோக்கிச்
சொருசாகத் தோழர்கண்ணனுடனேகூடி
எல்லையிலே வெகுஇம்சை செய்துவந்த
இழிவுடைய தேனுகனை யிறக்கவெண்ணி
முல்லைமலர் மதுவொழுகும் இடத்தைவிட்டு
மோசமதி யுடையவன்வாழ் காட்டைச்சேர்ந்து
ஒல்லவுற்று உயர்ந்தமரந் தன்னைக்கிட்டி
உதிர்த்திட்டான் கழுதையும்வந் தெதிர்த்திட்டானே. (௱௩௩)

இராகம் - பந்துவராளி - தாளம்.

பல்லவி.

கழுதைரூபியசுரன் வந்தான்
கண்ணன் ராமனைத்தேடியே

அநுபல்லவி.

கத்தியேயவன் சுற்றியே காலைக்குத்தியே
பாலரை யெத்தியே... (கழுதை)

சரணம்.

௧. உதறியுதறிப்பின்னங்காலை - யுதைப்பெனென்றுஓடியே
ஒண்டியே - அவனண்டியே - சொல்லிக்கிண்டியே
அடசண்டியேயென... (கழுதை)

௨. நீதியில்லாமல்என்வனத்தை - நிர்மூலஞ்செய்ததாரடா
நில்லடா - என்னசொல்லடா - நின்றுவெல்லடா
அப்பால்செல்லடாவென... (கழுதை)

௩. அச்சமில்லாமல் இந்தவிடத்தில் - அதட்டிவந்ததேதடா
ஆரடா - என்னபேரடா - இங்கேநேரடா
நின்றுகூறடாவென... (கழுதை)

௪. பழங்களெல்லாமுதிர்த்துத்தோப்பை - பாழாக்கியதைப்பாரடா
பாலனே - அதிகோலனே - வெகுசீலனே
லக்ஷ்மிலோலனேவென... (கழுதை)

வசனம்.

தேனுகாசூரனை பலராமன் வதைத்தல்.

விருத்தம்.

தேனுகா சூரன்வந்து தேட்டமாகத்
திருக்குமரர் சேதிகளை யறியாமற்றான்
பானுமுன்னே படுபனிநீ ரென்றுஎண்ணிப்
பயப்பட்டு ஒடுங்காமல் பலவும்பேச
வானுலகும் வையகமும் நடுங்கும்வல்ல
வடிவாளன் ராமனுக்குக் கோபம்மூள
நானுறையும் வனக்கனியை யுதிர்த்தீரென்ன
காடினான் அண்ணனுடன் ஜாடினனே. (௱௩௪)

இராகம் - பைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

தேனுகாசூரனைமடித்தான் - ஆதி
சேஷனங்கே நடித்தான்



139

அநுபல்லவி.

பானுகோடிப்பிரகாசன் பக்தர்களுக்குநேசன் (தேனு)

சரணம்.

௧. பற்றியேபின்காலை பனைமரத்தின்மேலே
சுற்றியவனடிக்க சுரூபங்கெட்டுவெடிக்க (தேனு)

௨. மரத்தோடுமரங்கீழ மாநிலத்தில்வீழ
உரத்தோடினமுஞ்சேர ஓடிவந்துநேர (தேனு)

௩. அண்ணனுங்கண்ணனுக நண்ணுஞ்சிறுவர்எண்ண அரக்கரெல்லாஞ்சாக நாடுங்கனிகளுண்ண (தேனு)

௪. ஊழிகாலந்தேடி ஒருமிக்கமேகங்கூடி
ஆழியப்பையூற்ற அதுபோலுதிரஞ்சுற்ற (தேனு)

௫. வனமதிற்பிணக்காடா வாடிவீழ்ந்தார்மேடா
கனங்கண்டுதேவர்காட ககனத்திலேயாட (தேனு)

௬. பக்ஷிஜாலங்கள்கூடி படிந்துபிணமேல்நாடி
லக்ஷ்மிநாதனைப்பாட நல்விருந்தென்றுஆட (தேனு)

வசனம்.

கண்ணன் பலராமனில்லாமல் தனியே தோழருடன் மாடோட்டிக் கொண்டு வனத்துக்குப்போகுதல்.

விருத்தம்.

துங்கமுள்ள துரைராமன் மனங்கொதித்துத்
துரிதமா யவனுயிரை வாங்கிவிட்டுப்
பொங்கமாய்த் தம்பியுடன் பதியிற்சென்று
புரிந்தகல் லமுதுமுண்டு கண்வளர்ந்தார்
இங்கிதமா யிப்படியே சிலகாலமட்டும்
இருந்தொருநாள் கண்ணனண்ணன் தன்னையன்றி
சங்கையற்ற தோழரொடு காலியோட்டிச்
சார்ந்திட்டார் வனம்போக்நேர்ந்திட்டாரே. (௱௩௫)

இராகம் - பில்கரி - அடதாளசாபு.

பல்லவி.

காலிகன்றுமேய்த்தார்கண்ணன்
கானகத்தில் தோழருடன்

அநுபல்லவி.

காலைபூணி - மாலுங்கூனி - கோலமேனி - கோ - கோ - கோ (காலி)

சரணம்.

௧. நாலுபக்கங்களிலுமேய்த்து நாதனும்பசுவைச்சேர்த்து
நங்கையாடி - செங்கையாடி - மங்கையோடி - பா - பா-பா (காலி)

௨. காளிங்கமடுவைநோக்கி காலிகன்றுகளைப்போக்கி.
கமலவல்லி - விமலவல்லி - குமுதவல்லி - டிரோ - டிரோ-டிரோ (காலி)

௩. ஓடியேகாலிகள்நடக்க ஒருமிக்கக்கொண்டுமடக்க
ஓகங்கா - ஓபாகி - ஓதேவி - ஓ - ஓ - ஓ (காலி)

௪. பேர்கள்சொல்லியேயழைத்து-பெருலட்சுமிநாதன்தழைத்து
போவனத்துக்கு-போதினத்துக்கு-போஇனத்துக்கு-போ-போ-போ.

வசனம்.

காளிந்திமடு ஜலத்தையுண்ட காலிகன்று தோழர்களையும் கண்ணன் எழுப்பி மீளுதல்.

விருத்தம்.

களித்தங்கு தோழருடன் காலியோட்டிக்
காடெல்லாந் திரிந்துவிடாய் பட்டதாலே
தளிர்த்தபெரு மரஞ்சூழ்ந்த தடாகமொன்று
தாகமது தணியவே தேடிச்சென்று
ஒளித்தபுனல் காளியன்வாழ் மடுவைக்கண்டு
உண்டமர்ந்தை தோழருமக் கரைமேற்சாய
விளித்துடனே கண்ணன்வெகு விநோதமாக
விரும்பினன் எழுப்பியுடன் திரும்பினானே. (௱௩

இராகம் - துஜாவந்தி - சாபுதாளம்.

பல்லவி.

நச்சுப்பொய்கை ஜலத்தையுண்டார் - அந்த
நாரணனும் எழுப்பிமீண்டார்

அநுபல்லவி.

இச்சையானபடிசென்று இடறுதெரியாமலன்று
அச்சுதன்தோழர்களோடி ஆயாசத்திரார்டி (நச்)

சரணம்.

௧. உத்தமனைமனதில்வைத்து அவர்களெல்லாம்
உண்மையாய்ப்பயங்களற்று
இத்தலத்திலிநமக்கேது இறப்பென்பதினியேது
பற்றுக்தாகத்திரவெண்ணி பாலரெல்லாருகண்ணி (நச)



141

௨. மடுஅருகில்ஒருமரமும் பார்ப்பதற்கு
மாநிலந்தன்மேலசிரமம்
கடுவிஷத்தோன்காளியன்வாழ் கங்கையிதுமெத்தவும்பாழ்
படிஜலத்தையறியாமல் பசுக்தலங்கள்தெரியாமல் (நச்)

௩. கல்லதிறமானதண்ணி உலகினில்
நாலுபேர்குடிக்கவெண்ணி
அல்லல்தருமவன்சென்னி அதன்மேல்நடிக்கபுண்ணி
மல்லுசெய்யக்கண்ணனென்ன மர்மம்வெளியாகிநண்ண (நச்)

௪. கஷ்டிசெய்தோன்கர்மந்தீர பழையபடி
காளியன்தன்தீபஞ்சேர
இச்சையில்நாங்கிளைத்து இளைஞர்களையணைத்து
லக்ஷ்மிநாதன்வரனானை லயிக்கச்செய்கிறகானை (நச்)

வசனம்.

பரீக்ஷித்துக் காளியனுடைய விருத்தாந்தத்தைச் சொல்லும்படிச் சுகரைக்கேட்குதல்.

விருத்தம்.

இந்தவிதம் பசுகன்று தோழர்தம்மை
எழுப்பியுடன் தங்கள்மனை வந்துகண்ணன்
சிந்தையிலே காளியனை மடுவைவிட்டுச்
சீக்கிரத்தில் துரத்துவனென் றெண்ணமிட்ட
விந்தையினைச் சுகர்சொல்லக் கேட்டராஜன்
விழுந்தடிமேற் போற்றிசெய்து தெண்டனிட்டு
பந்தமுட னரவதிலே யொளித்தவாறைப்
படியென்றான் அவன்கதையை முடியென்றானே. (௱௩௭)

இராகம் - தன்னியாசி - ஏகதாளம்

பல்லவி.

சொல்லுமையாருஷியே - காளியன்மடுவில்
தோய்ந்திருந்தகதையை

அநுபல்லவி.

அல்லும்பகலுமனுசந்தானஞ்செயும் சூரியரோதெரிய (சொல்)

சரணம்.

௧. எத்தனையோயுகமாய் இருந்தகாளியன்தனை
எப்படித்துரத்தி விட்டார்

வித்தகனுடைய பராக்கிரமத்தையெனக்கு
விளம்பிடும் யார்க்குமெட்டார் (சொல்)

௨. உரகஜந்துவான பாம்பிருக்குமடுவில்
உத்தமனெப்படி நாடினார்
கரத்தால்பிடித்தவனைத் தள்ளிமுடிமீதேறி
கண்ணனெப்படி யாடினார் (சொல்)

௩. விடஜெந்துவான சர்ப்பஞ்சலந்தன்னில்
வேதனை செய்ததென்ன
படமுடிகள்பதைக்க பக்குவமாயங்கு
பார்த்தவரும் பன்ன (சொல்)

௪. இரக்ஷகனாக விளங்குமரியவனை
சிக்ஷிப்பது மரிதோ.
பக்ஷமாகவேயந்த லெட்சுமிநாதனும்
பறக்கடித்ததும் பெரிதோ. (சொல்)

வசனம்.

சுகர்காளிந்தியின் வரலாறுகூறுதல்.

விருத்தம்.

சுகமுனிவன் அரசனுக்குச் சர்ப்பராஜன்
சூதுசெய்யுஞ் சரித்திர விருத்தாந்தத்தோடு
அகமுடையான் கர்வபங்க மானவாறும்
அம்மடுநீர் யார்க்கும் பயன்பட்டவாறும்
ககனமதில் தேவர்துதி செய்தவாறும்
கன்னியர்மங் கல்யபிச்சை கேட்டவாறும்
இகமதிலே கண்ணன் கூத்தாடும்வாறும்
எடுத்திட்டார் ருஷிசொல்லத் தொடுத்திட்டாரே. (௱௩௮)

இராகம் - அசாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

விளம்புகிறேனந்தகாளியன்கதையைநாளும்
வேந்தாகேளும்கேளும்

அநுபல்லவி.

விளம்புகிறேன்சர்ப்ப ராஜன்கதையைநாளும்
களம்பியம்மடுவினில் கிருஷ்ணன்குதித்தான்கேளும் (விள)



சரணம்.

௧. அந்தயமுனைநடுவில் அகாதமாய்மடுவொன்று
அனேககாலமா யிருந்ததுவேந்தா
வந்தங்குகாளியன் கருடன்பயத்துக்காக
மறைந்து அதனுள்வந்து நுழைந்துஇருந்தான்வேந்தா (விள)

௨. விஷச்சுவாலையினாலே மிகவுந்தீக்ஷணமாக
வெந்நீர்போற்கொதித் திருந்ததுவேந்தா
கஷாயவர்ணமாய் கெடுதலானமடு
கலங்கியலைநுரையுங் கதித்திருந்ததுவேந்தா (விள)

௩. சுற்றுமேசார்ந்தவழி தாவரசமூகங்கள்
சுவாலைபட்டதினாலே எரிந்ததுவேந்தா
சத்தியற்றுமிருகராசி தாகத்தால்நீர்குடித்து
கத்திப்பிராணனைவிட்டு காலஞ்சென்றதுவேந்தா (விள)

௪. ஒத்திருந்தவிருக்ஷங்கள் பற்றியெரிந்துபோயும்
ஒருவிருக்ஷமதிற்றப்பி யிருந்ததுவேந்தா
பற்றியேபரந்தாமன் பாதம்வைத்தேறுகைக்கு
பாவனமாகவிந்த பாரில்தழைத்ததுவேந்தா (விள)

௫. ஆதியில்கருடனும் அமுதங்கொண்டுவந்தந்த
அடப்பமரத்தின்மே விழிந்தாராம்வேந்தா
ஜோதிபடும்படியா சொற்புராணத்தின்படி
சுந்தரமாயுயர்ந்து தளிர்த்திருந்ததுவேந்தா (விள)

௬. பக்ஷிஜாலங்கள்கூடி பறக்கஅம்மடுவின்மேல்
படிந்ததில்வீழ்ந்துயிரை விட்டதுவேந்தா
லக்ஷ்மிநாராயணன்கண்டு லக்ஷியஞ்செய்யாமலே
லாவண்யமாய்க்குதித் ததிர்த்தனங்கேளும்வேந்தா. (விள)

வசனம்.

கண்ணன் மறுநாளில் காளிந்திமடுவிற்குதித்துக் கலக்குதல்.

விருத்தம்.

இதையமதில் களிகூர்ந்து கேட்டராஜன்
இனிநடக்குங் கதைகூற வேண்டக்கேளும்
உதையத்தில் எழுந்துகண்ணன். தோழரோடு
ஒருமிக்கக் காலிகன்று ஓட்டிக்கொண்டு

வனத்செயுங்கா ளியன்வாழு மடுவைக்கிட்டி
வந்துடனே யடப்பமர மீதிலேறிக்
குதைவிலங்கக் ககனத்திலுயர்ந் தெழும்பிக்
குதித்திட்டான் அந்நீரை மதித்திட்டானே. (௱௧௧)

இராகம் - சங்கராபர்ணம் - தாளம்.

பல்லவி.

குதித்தாரே கண்ணன் அம்மடுவில்
கொதிக்கும் அந்நீர்நடுவில்

அநுபல்லவி.

குதித்தார்ஜலங்கலங்க கோபத்துடன்துலங்க
பதிதன்காளியனேயோட்ட பக்தஜனங்களைக்கூட்ட (குதி)

சரணம்.

க. பீதாம்பரத்தைக்கட்டி பெருமாளுங்கையைத்தட்டி
சாதகமாகக்கிட்ட சாமர்த்தியந்தனைக்காட்ட (குதி)

உ. கண்டுகாளியன்சேர கார்முகில்வண்ணன்ஏற
அண்டியவனும்உய்ய அனார்த்தமிகவுஞ்செய்ய (குதி)

௩. கர்ச்சனைசெய்துநின்று கருடவாகனை அன்று
அர்ச்சனைபண்ணித்துதிக்க அங்குதோழருங்குதிக்க (குதி)

௪. தண்ணீர்தூரம்தெறிக்க தாமோதரன்குதிக்க
நண்ணிஜாலன்நிறக்க லட்சுமிகாதன்சிறக்க (குதி)

வசனம்.

காளியனுக்கும் கண்ணனுக்கும் தர்க்கம்.

விருத்தம்.

குதித்தகண்ணன் அம்மடுவின் நீரைமுற்றும்
குழம்பாக்கி வெகுதிடமாய்க் கலக்கியாட
எதிர்த்தகாளியன்வாயால் விஷத்தைக்கக்கி
எரித்தஜலம் போலதனைக் கொதிக்கச்செய்யப
பதித்தபெருந் தயவுடைய பகவானும்மப்போ
பாரிலனைத லட்சியும்பண் ணுதிருக்க
அதித்துடுக்கா யக்கிரமஞ் செய்வதிங்கே
ஆரென்றான் ஒதியுடன் நேரென்றானே. (௱௧௨)



இராகம் - நாட்டை - அடைதாளம்.

காளியன் - பல்லவி.

ஆரடாஎன்றன் மடுவில்குதித்தவன் நீ
ஆரடாஎன்றன் மடுவில்குதித்தவன்

கண்ணன் - பல்லவி.

நானடா அந்தநந்தர் திருமகன் - காளியா
நானடா அந்தநந்தர் திருமகன்

காளியன்.

க. அரியோடா மதக்கரியோடா - என்ன
வெறியோடா எனக்குச்சரியோடா - அடா (ஆரடா)

கண்ணன்.

உ. தள்ளுவேன் உன்னைக்கிள்ளுவேன் - சொல்லிக்
கொல்லுவேன் இப்போ வெல்லுவேன் - அடா (நானடா)

காளியன்.

௩. அச்சமில்லாமல்வந் தெதிர்நிற்கிறாய் - பாலா
அச்சமில்லாமல்வந் தெதிர்நிற்கிறாய்
ஆரடா எந்தவூரடா என்ன
பேரடா ஒருகைபார்டா - அடா (ஆரடா)

கண்ணன்.

௪. பாரடாவென்னைப் பரிகாசஞ்செய்கிறாய் - காளியா
பாரடாவென்னைப் பரிகாசஞ்செய்கிறாய்
வீண்படிக்கிறாய் பல்லைக்கடிக்கிறாய்
என்னநொடிக்கிறாய் மனந்துடிக்கிறாய் - அடா (நானடா)

காளியன்.

ரு. வாதுசெய்யவும் வல்லமையுண்டோடா - பாலா
வரதுசெ யவும் வல்லமையுண்டோடா
முடிக்கிறேன் - சொல்லிப்படிக்கிறேன் வாயாற்
க ஃகிறேன் உன்னைமுடிக்கிறேன் - அடா (ஆரடா)

கண்ணன்.

௬. முடிக்கிறேனென்று வீரியம்பேசுறாய் - காளியா
முடிக்கிறேனென்று வீரியம்பேசுறாய்
மூடடா உனக்குக்கேடடா எதிர்த்து
வாடடா மடுவிட் டோடடா - அடா (நானடா)

காளியன்.

௭. வெல்லுவேனென்ன விருதாவில்லசுருய் - பாலா
வெல்லுவேனென்ன விருதாவில்லசுருய்
வீசுவேன் விஷத்திற் காசுவேன் சொல்லி
ஏசுவேன் உன்னைப் பேசுவேன் அடா (ஆர்டா)

கண்ணன்.

௮. பேசுவேனென்று பினத்துகிருய்வாயால் - காளியா
பேசுவேனென்று பினத்துகிருய்வாயால்
புடைக்கிறேன் கையால் குடைக்கிறேன் - இப்போ
தடைக்கிறேன் தலைமேற் படைக்கிறேன் அடா (நானடா)

வசனம்.

காளியன் கண்ணனைச் சுற்றிக்கொள்ளப் பசுக்களும் தோழர்களும் புலம்பிவாடுதல்.

விருத்தம்.

இருவருமா விந்தவிதம் வாதாடிமீறி
எதிர்த்துடனே காளியனுங் கண்ணன்தன்னை
பெருகயிறு கொண்டுகட்டும் வாறுபோலப்
பிணித்தங்கு ஜலநடுவில் புரண்டுநிற்க
அருகிருந்த பாலர்களு மாவும்வந்து
அதுகண்டு சகிக்காமல் வாடிக்கூவி
ஒருவருந்தான் துணையிங்கே யில்லையென்றே
ஓடினர் சுற்றிசுற்றிப் பாடினரே. (௱௪௧)

இராகம் - நீலாம்புரி - சாபுதாளம்

கண்ணிகள்.

௧. அய்யோ அண்ணமாரே யிந்த ஆழமடுதன்னிலே
மெய்யனைப்பாம்பு சுற்றியேறியே விஷத்தைக்கக்குருதே.
௨. பொய்யோநாம் காலிமேய்த்த புன்னைவனந்தன்னிலே
பூரணஜகத்காரணை ஓகோவாரணை என்னசெய்குவோம்.
௩. ஒண்டியாகவே புன்னைவிட்டிங்கு ஊருக்கெப்படியேகுவோம்
உண்டவாநாங்கள் கண்டவா ஓகோ ஆண்டவாஎன்னசெய்குவோம்.
௪. நந்தகோபரிடத்திலோடியே நாங்களெப்படிச் சொல்லுவோம்
நாதனேமலர்ப் பாதனே ஓகோ நீதனேஎன்ன செய்குவோம்.



௫. சோதையம்மையின் அண்டையிற்சேர்ந்து சொல்லியெப்படி யுய்குவோம்
துய்யனே நீலமெய்யனே ஓகோ அய்யனே என்னசெய்குவோம்.
௬. பலராமன்தன்னை யொண்டியாயண்டி பார்த்துளப்படி சகிப்போம்
பாலனே வெகுகோலனே ஓகோ லோலனே என்னசெய்குவோம்.
௭. ஆய்ச்சிமார்களின் அண்டையில்ஓடி அவரையெப்படி பார்க்கலாம்
ஆயனே வெண்ணெய்வாயனே ஓகோ நேயனே என்னசெய்குவோம்.
௮. கடித்த காளியன்தன்னைக் கொன்றுடன்கரையிலேறியேவாருமே
கண்ணனே மணிவண்ணனே ஓகோ எண்ணனே யென்னசெய்குவோம்
௯. பிடித்தபாம்பின்வாய் கண்ணனையிங்கு பிரீதியாகவே சேருமே
பேதனே நான்குவேதனே ஓகோபோதனே என்னசெய்குவோம்.
௰. காணக்காளியன் கண்ணனைச்சுற்றிக் கசக்கிருன்இப்போ காருமே
கர்த்தனேலட்சுமி பர்த்தனேஓகோ நிர்த்தனே என்ன செய்குவோம்.

வசனம்.

பிருந்தையில் இருந்த நந்தர்முதலிய கோகுலவாசிகள் சகலரும் அவசகுனங்கண்டதால் கண்ணனைத் தேடிப்போகுதல்.

விருத்தம்.

பாலரெல்லாம் புலம்பிமூர்ச் சித்திருக்கப்
பசுகன்று மேயாமல் துடித்தவர்டக்
கோலமுள்ள பிருந்தையிலே பருந்துசுற்றக்
கொள்ளிகளும் எரிந்துவிண்ணி னின்றுவீழச்
சீலமுடை நந்தரிடத் தோள்துடிக்கச்
செந்திருநேர் சோதைவலப் புறம்பதைக்க
ஆலமுண்ட மனிதர்போல் ஆயரெல்லாம்
ஆடினர் வனம்வந்து தேடினரே. (௱௪௨)

இராகம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்

கண்ணி.

௧. வனத்தில் சென்றுஎங்கே தேடுவோம் - மகனே - மகனே
வழிகள்கண்டு எங்கேநாடுவோம் என் - மகனே - மகனே
வழிகள்கண்டு எங்கே நாடுவோம்.

௨. அனைத்துலகும் ஆளவந்தோனே - அம்புஜபாதனே
ஆரண்ணியத்தில் எங்கேதேடுவோம் - மகனே - மகனே
ஆரண்ணியத்தில் எங்கேதேடுவோம்.

Office of the ... of Books, Madras

௩. குலத்தில்வந்துதித்த கோலனே - கோமளாங்கனே
குறிகள்கண்டெங்கே தேடுவோம் - மகனே-மகனே
குறிகள்கண்டெங்கே தேடுவோம்.

௪. நிலத்தில்வந்துதித்த பாலனே நீலமேகனே
நிலவரங்கண் டெங்கே தேடுவோம் - மகனே - மகனே
நிலவரங்கண் டெங்கே தேடுவோம்.

௫. காட்டில்வெகுதூரம்வந்தோமே - கமலக்கண்ணனே
காணுமிடந்தோண வில்லையே - மகனே - மகனே
காணுமிடந்தோண வில்லையே.

௬. பாதம்பட்டஇடமுங்காணுதே - பதுமநயனு
பதைத்துஎங்கள்மேனி வாடுதே - மகனே - மகனே
பதைத்துஎங்கள்மேனி வாடுதே.

௭. இட்டமெங்கள்கண்கள்தேடுதே - இந்திரஜாலா
இருக்குமிடந்தன்னை நாடுதே - மகனே - மகனே
இருக்குமிடந்தன்னை நாடுதே.

௮. வந்துநாங்கள்தேடும்கண்ணனே - வைகுண்டவாசா
வழியைக்காட்டிகூட்டி வைப்பையே - சுவாமி - சுவாமி
வழியைக்காட்டிகூட்டி வைப்பையே.

வசனம்.

கண்ணனையும் பாலர்களையுங்கண்டு வந்த நந்தகோபர்முதலிய சகலரும்வாடுதல்.

விருத்தம்.

அருந்துணையாம் கிளைமக்க ளோடுநந்தர்
ஆரண்ணிய மெங்கும்போய்ச் சூழ்ந்துதேடி
வரும்பெரிய யமுனைநதி தீரம்வந்து
வடபக்க முள்ளமடு வண்டைசேர்ந்து
தருந்துயர மதுகொண்டு வருந்திப்பாலர்
தாமெல்லாஞ் சாய்ந்திருக்கக் கண்டுஅஞ்சிப்
பொருந்தியங்கு ஜலநடுவிற் புாளக்கண்ணன்
புலம்புவார் கதறியுடன் விளம்புவாரே. (௱௪௩)

இராகம் - எதுகுலகாம்போதி - சாபுதாளம்.

பல்லவி.

மடுவில்குதித்தாயோ கண்ணு - ஓகோ
மடுவில்குதித்தாயோ எங்கள்கண்ணு.



149

சரணம்.

௧. மடுயில்குதித்தாயோ மாளவிதித்தாயோ
மர்மத்தைச்சொல்லாயோ கண்ணு - ஓகோ
மர்மத்தைச்சொல்லாயோ எங்கள்கண்ணு (மடு)

௨. சதவருஷம்நின்று தரணியாளுவாயென்று
சகலரும்உரைத்தாரோ கண்ணு - உன்னை
சர்ப்பம்சுற்றிக்கொண்டதே எங்கள்கண்ணு - ஓகோ (மடு)

௩. அரவங்கடிக்குமென்று அப்பாஉன்றனையின்று
ஆருமேசொல்லவில்லை கண்ணு-உன்னை
அசையாமற்சுற்றினுனே எங்கள்கண்ணு - ஓகோ (மடு)

௪. தனங்களேனுமினி தானியமேன்சனி
தரிப்பமாநாங்களிங்கே கண்ணு-இப்போ
தயிரியம்சொல்வதாரோ எங்கள்கண்ணு - ஓகோ (மடு)

௫. உத்தமாஇம்மடுவில் ஓடிவந்துநடுவில்
ஒருமிக்கவீழுகிறோம் கண்ணு-உன்னை
ஒருவனுய்ப்பார்ப்போமா எங்கள்கண்ணு - ஓகோ (மடு)

௬. காளியனுக்கோஉன்னை கருதிவளர்த்தாள் அன்னை
காரணந்தெரியாயோ கண்ணு-உன்னைக்
கட்டவுங்கண்டோமே எங்கள்கண்ணு - ஓகோ (மடு)

௭. மலட்டுக்குறையொழிய மைந்தனுய்வந்திழிய
மாதுசெய்தாளோபாக்கியம் கண்ணு-உன்னை
மடக்கிச்சுருட்டுதிப்போ எங்கள்கண்ணு - ஓகோ (மடு)

வசனம்.

கோபிகள் கண்ணனைக்கண்டு வருந்துதல்.

விருத்தம்.

இந்தவிதமாய்ப் புலம்பபக் கோபாலரெல்லாம்
இருந்தவிடம் தரிக்கமுடி யாமல்நிற்க
விந்தையது மிகப்பெருக்க் கண்ணனங்கே
விளையாடக் காளியனுஞ் சுற்றிப்பின்னச்
சிந்தையது கொதித்திருந்த சோதைநந்தர்
செய்மடுவி லேன்குதித்தா னென்றுவாடக்
கந்தமலர்ச சூடுகுழல் கன்னிமாரும்
கதறினர் கண்டுடனே பதறினரே. (௱௪௪)

இராகம் - முகாரி - ஏகதாளம்.

பல்லவி.

கதறுகிறார்பார் எல்லாரும் - கண்ணா
மணிவண்ணா - ஓதிண்ணா - எங்களண்ணா

அநுபல்லவி.

கதறுகிறோமேயின்று          கண்ணாவுனைக்கண்டின்று
பதறுமனத்திலாழ்ந்து          பார்க்கமிகவுந்தாழ்ந்து (கதறு)

சரணம்.

௧. நஞ்சுமுலைதன்னையுண்ட - நாதனே-நீதனே - போதனே-ஓமோதனே
நஞ்சுமுலைதன்னையுண்ட
நாயகனேயுன்னைத்தேடி          நாங்களெல்லாரும்வாடி
நத்தியமுனைகூடி          நடந்திம்மடுவைநாடி (கதறு)

௨. அந்தவிஷந்தன்னையுண்டு - அய்யனே-மெய்யனே-கையனே-ஓசெய்ய[னே
அந்தவிஷந்தன்னையுண்டு
விந்தையவள்பாபம்போக          வேறுடல்பரிமளமாக
இந்தப்படிசெய்தமேலா          இச்சாசிற்கண்டுலோலா (கதறு)

௩. மருதம்உதைத்தபாதா - மாயனே - சேயனே - தூயனே-ஓநேயனே
மருதம்உதைத்தபாதா
உருவம்வெளிப்படுத்தி          உரலோடுநீடித்து
அருகில்நகர்ந்தெங்கள்          ஆசைக்கண்ணனேநாங்கள் (கதறு)

௪. உன்னைவிடஎங்களுக்கு - உற்றவா - கொற்றவா-பெற்றவா-ஓஎற்றவா
உன்னைவிடஎங்களுக்கு
உண்டோதுணையினி          உலகத்திலேநணி
பண்டெந்தவத்தில்முந்து          பாக்கியமேவந்து (கதறு)

௫. பிராணநாதனைச்சேர்ந்தீர் - பேரா - சீரா - வீரா - ஓகுமாரா
பிராணநாதனைச்சேர்ந்தீர்
பிராணனுநீராக          பேசிப்படிப்பதாக
தரணிதனிலமர்ந்து          தக்ஷகன்மடுவைச்சேர்ந்து (கதறு)

௬. அனேகமுந்தானையிருந்தாய் - ஆதி - சோதி - நீதி - ஓகியாதி
அனேகமுந்தானையிருந்தாய்
அனந்தநிர்த்தனமாட          அருள்லட்சுமிதானும்பாட
வனந்தனில்காங்கள்தேடி          வந்திவ்விடத்தைநாடி (கதறு)



வசனம்.

இவ்விதம் துக்கித்து, மடுவில் குதிக்கவோடிய பந்துகள் தாய் தந்தையர்முதலியவர்களை பலராமன், கண்ணனது மகிமையைச்சொல்லித் தடுத்தல்.

விருத்தம்.

வந்தவர்களெல்லாரு மொருங்குகூடி
வருந்தியழைத் தாலும்வெளி வராமைகண்டு
இந்தவுடல் கொண்டுமே தூர்க்குப்போக
எப்படிதான் மனந்துணியு மென்றுநொந்து
வெந்துயர மதுபெருக மடுவில்வீழ்ந்து
விரும்புமுயிர் துறப்பமென வோடும்போது
அந்தமுள்ள பலராமன் அவரையெல்லாம்
அடுத்திதிட்டான் மகிமைசொலித் தடுத்திட்டானே (௱௪௫)

இராகம் - தன்னியாசி - ஆதிதாளம்.

பல்லவி.

விழவேண்டாம் மடுவில் - நம்முடைய
விஷ்ணுவருவார் நடுவில்.

அநுபல்லவி.

விழவேண்டாமிந்த - விஷமடுதன்னிலே - வேகமாகமுன்னே-வீணாய்
அழவேண்டாஞ்சொந்த - ஆயர்திருமகன் - ஆடிவருவான்சொன்னேன்.

சரணம்.

௧. காரணத்தாலந்தக் கடல்வண்ணனுமிந்த
கண்ணனாகவே பிறந்தான் - பரி
பூரணனும்வந்து பிள்ளைகளுடன்கூடி
புனிதனாகவே வளர்ந்தான் (விழ)

௨. நந்தருடைய திருமகனென்னவே
நாராயணன் உறைந்தான் - அப்போ
வந்தசகடன் முதலோனாமாதவன்
வாங்கிப்பிராணன் நிறைந்தான் (விழ)

௩. அந்தமாகவேயிந்த ஆய்ச்சியர்கிரகந்தோறும்
ஆயனைப்போலே சென்றான் - அங்கே
சொந்தமாகவெகு விந்தையனேகஞ்செய்து
சொரூபம் மறைந்துநின்றான் (விழ)

௪. கன்றாகவேவந்த வற்சாசுரனைக்கண்டு
கையாற்கனிமே லடித்தான் - அந்த
பன்னகன்மைந்தனைப் பற்றிவிழுங்கவும்
பாரில்கிழித்து மடித்தான் (விழ)

௫. இச்சகத்திலுள்ள துஷ்டரெல்லாரையும்
இறக்கடிக்கவே வந்தான் - மெச்ச
மூச்சகத்தோரென்றுங் காணாதசேவையை
முகுந்தனமக்குத் தந்தான் (விழ)

௬. துஷ்டக்காளியன்கொட்டந் தன்னையடக்கி
துணைவனிங்கே வருவான் - அந்த
அஷ்டலட்சுமிபதி அவனுகையாலிங்கு
அதிமகிழ்ச்சி தருவான். (விழ)

வசனம்.

காளியன் முடிமேல் கண்ணன் கிர்த்தனஞ்செய்தல்.

விருத்தம்.

தெளிவாக விவர்க்கெல்லா மூறைத்திராமன்
தேற்றியே மடுவின்மேல் நிறுத்தவங்கே
ஒளிவகல மடுவிற்குள் கண்ணன்றானும்
ஒருமூகூர்த்த காலமவன் கட்டில்நின்று
வெளிவரவும் ஜனங்கள்படுந் துயரமெல்லாம்
விட்டகல மனதிலெண்ணி யுடனேவிஸ்வ
நளினமிகு ரூபமது கொண்டுபாம்பில்
நாடினன் மேலேறி யாடினனே. (௱௪௬)

இராகம் - பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

காளிங்கநிர்த்தனமாடினார் - திருக்
கண்ணன் அவதாரன்.

அநுபல்லவி.

காளியன்படமீதில் விரல்தன்னைநாட்டியே
வாளியுடன்மணி மாதவன்பூட்டியே
தாளிக்கொழுந்தை தாமோதரன்சூட்டியே
சர்ப்பத்தின்மேல்நின்று சகலர்க்குங்காட்டியே. (காளி)



சரணம்.

௧. காலிற்சிலம்பு கலீர்கலீரென்ன
கஸ்தூரிநாமம் பளீர்பளீரென்ன
மாலுடையமேனி மணிமணிமின்ன
மாதவனுங்கண்டு மடுவுதன்னில்அன்று
காதகன் அரவனைக் கண்டிக்கவேணுமென்று
நாதத்துடனேயந்த நாகம்முடிமேல்நின்று
நர்த்தனமும் நாட்டியமாடிக்கொண்டு... ... ... (காளி)

௨. எடுத்தபடங்கள்தோறும் எழும்பிஎழும்பிக்குதிக்க
அடுத்துப்பாம்பைத்தூக்கி ஆட்டி ஆட்டிவிடுக்க
துடித்தக்காளியனைத் துரத்திதுரத்தியடிக்க
தூயன்வாலைப்பற்றி சுருட்டியவனைச்சுற்ற
மாயவனும்மடுவில் மாறியெங்குமெற்ற
வாயவனுங்கொண்டு வருரக்தமாயுற்ற
பேயனைப்போலவன் பினத்திவரவுமுற்ற... ... ... (காள)

௩. பாலன்என்றுசொல்லி பாரும்பாரும்என்ன
பதைக்கச்செய்யாதேயென்று பணிந்துபணிந்துபன்ன
காலன் இவனேயென்று கண்டுகண்டுமென்ன
காலைமுடிமேல்வைத்துக் கையினாலேயந்த
வாலைப்பிடித்துக்கொண்டு வடிவன்ஆடிமூர்த்த
மாலைச்சிறுவனென்று மர்மந்தெரியவந்த
ஆலையென்னும்படி அய்யன்சுழலவிந்தை... ... ... (காள)

௪. தேவர்கள்கூடி ஜெயாஜெயாவென்ன
சிறக்கத்துந்துமி மேலேதும்தும்மென்ன
பாவனநாரதர் பகவான்பகவான்என்ன
பக்குவமாய்லட்சுமி பகவானைக்கொண்டாட
சக்கரக்கையனைச் சகலருந்துதிபாட
அக்கரைமேல்நின்ற அவர்கள்வந்துநாட
சிக்கியரவம்மடுவை சீக்கிரம்விட்டோட ... ... ... (காள)

வசனம்.

கண்ணனது வல்லமையைக்கண்டு காளியன்யோசித்தல்.

விருத்தம்.

இன்னவா யவன்பதைக்கச் சிரசின்மேலே
எழிலாகக் கண்ணனுமே நடிக்கும்போது

சன்னதமெல்லா மொழிந்து சர்ப்பமங்கு
சலிப்பண்டந்து சிறுவனது செயலைநோக்கி
முன்னமிந்த மடுவிலுற்ற பிராணனெல்லாம்
மூடிந்திருக்க இவனொருவன் தானேநின்றான்
என்னவிஷம் ஒருதீங்கும் இல்லையென்றே
ஏறிட்டான் யோசிக்க நேரிட்டானே. (௱௪௮)

இராகம் - ஆகிரி - அடைதாளம்.

பல்லவி.

காளியன்யோசித்தான் - கண்ணன்நிர்த்தனங்கண்டு
காளியன்யோசித்தான்

அநுபல்லவி.

௧. காளியனும்யோசித்தான் கருத்தில்மிகப்பயந்து
ஆளிவன்ஆழ்கடல் அமர்ந்தானென அயர்ந்து (காளி)

௨. பாலன்சிரசின்மேலே பாடிலீலைகள்செய்ய
கோலன்இவனேபள்ளி கொண்டவனென்றய்ய (காளி)

௩. அல்லாமற்போனாலென்மேல் ஆடிவருண்டோகூட
நில்லாதென்பிராணனினி நீர்யலாவென்றுபாட (காளி)

௪. தேவர்களானாலும் தீண்டிற்பிழைப்பாரா
காவலென்மடுவிலே கண்டுளத்தில்சீரா... (காளி)

௫. வந்தான்விளையாட வண்ணனென்றுஅஞ்ச
விந்தையெல்லாங்கண்டு வேண்டிவேண்டிகெஞ்ச (காளி)

௬. பக்ஷிவாகனனென்று பார்க்கத்தோணநல்ல
லட்சுமிநாதாவென்னை ரக்ஷிக்கவென்றுசொல்ல. (காளி)

வசனம்.

நாககன்னிகள்வந்து கண்ணனைத்துதித்தல்.

விருத்தம்.

வாடியே வதைபடுந்தம் கணவனின்னம்
வையகத்தி லினிவாழா னென்றுஅஞ்சி
நாடியே முடியின்மேல் ஆடுங்கண்ணன்
நற்பாத கமலத்தை நோக்கிச்சீராய்த்
தேடியே வருந்தா சாரதிகள்போலத்
திருவடிமேல் வீழ்ந்துகண்ணீர் சொரிந்து



கூடியே நாககன்னி மார்களன்று
கோரினார் காருமெனக் கூறினாரே. (௱௪௯)

இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

கருணாநிதியே பெருமாமணியே காருமெங்கள்பதியே

அநுபல்லவி.

தருணம்இது தாசனைக்காரும்நாதா
சரணமடைந்தோம் சர்வவினோதா (கருணா)

சரணம்.

௧. என்னதவம்இவன் செய்திருந்தானோமுன்னால் - உன்
இணையடிமுடிமேல்வைக்க - ஓஜெகதீசா
பவரோக - நாசா - பக்தர் - நேசா
பன்னகசயன - வுன்னித - பரமபுருஷா - பரமபுருஷா
நன்னுமெங்களை - யாதரியும் - நாரணா - பரிபூரணா - ஓ ...(கருணா)

௨. பண்ணினபாபமிவன் பாரில்எண்ணிக்கையுண்டோ - எம்
பக்தவற்சலாபாரும் - எங்களையாளும்
பரமபுருஷாநாளும் - குறையைக்கேளும்
எண்ணிமுற்றும் ஆதரியும் - இருடிகேசா - இருடிகேசா
வண்ணவந்துகாக்கவேணும் - கண்ணனே - மணிவண்ணனே - ஓ...(கரு)

௩. மூடன்உம்மையறியான் மோசம்போனானீசனே - உன்
மூர்த்திகரம்கண்டுவந்தோம் - ஓமோதா
வரும் நவநீதா - வேதபோதா
வேடம்கொண்டவித்தகா - வெங்கடேசா - வெங்கடேசா
நாடுமெங்கள் முறையைக்கேட்டு-நாதனே-மலர்ப்பாதனே-ஓ...(கரு)

௪. வாதுசெய்யவேண்டாமிவன் வளர்முடியின்மீதிலே - வெகு
தீதுசெய்தானென்று - கண்டு - தேடாதே
கொன்றுபோடாதே - பட்டுவாடாதே
மாதுஎங்கள்சொற்கிரங்கும் - மாயவா - மதிமாயவா
ஓதும்லட்சுமிமார்பனே - உத்தமா - தருஞ்சித்தமா - ஓ ... (கருணா)

வசனம்.

நாககன்னிகள் கண்ணனை மங்கல்யபிச்சைகேட்குதல்.

விருத்தம்.

கெதியேது இனிவேறே யென்றுசொல்லிக்
கேசவனை சரணடைந்து துதித்துப்போற்றி
நிதிதேடப் போனவர்க்குப் புண்ணியத்தால்
நேரிலே கிடைத்தபொருள் போலவாய்ந்த
அதிபெருத்த தயவுடனே நன்மைசெய்தே
அடியவனைக் காக்குமருள் சுரக்குந்தேவே
பதியிழந்த முண்டைகளாய்ப் போகாமலெம்மைப்
பாரென்றார் புருஷனுடன் காரென்றாரே. (௱௫௰)

இராகம் – சங்கராபரணம் – சாபுதாளம்.

பல்லவி.

பதிபிச்சைதாருமே – நீர்
பதிபிச்சைதாருமே – பகவான் – எங்களைக்காருமே
பதிபிச்சைதாருமே.

அநுபல்லவி.

கெதியென்று உன்னை யடைந்தோம்
கெட்டமதிதனை யிடைந்தோம் ... (பதி)

சரணம்.

௧. நீர்கொடுத்தகுணமல்லாமல் நிலத்தில்வேறேகுணங்களுண்டோ
காருமையாயெங்கள்பதியை கருணாநிதியே
பாரில்பிரஜைகள்போலநினைத்து பண்ணியபிழைபொறுத்து
தாருமையாதாசன்உயிரை தாமோதராகோவிந்தாஹரியே ... (பதி)

௨. ஜகத்தில்உம்மைத்தவிரவேறே தேவதேவனுண்டோபாரில்
அகத்தினாலேபிடித்தஇவனை யடக்கினீரய்யா
பகைத்திடவேண்டாமெங்கள் பதியாயிருக்கும்பாம்பை
இகத்தில்வாழச்செய்திடுவாய் ஈசாஜெகதீசாஹரியே. ... (பதி)

௩. பாலியத்தில்கல்லியாணம் பண்ணதாகஎண்ணவில்லை
காலிகன்றுமேய்த்திருக்கும் காளமேகனேயிப்போ
தாலிகட்டிவைத்ததாக தையலர்மகிழ்ந்துவாழ
ஆலிலைமேற்பள்ளிகொள்ளும் அச்சுதாஹரிமுகுந்தா ... (பதி)

௪. ஆர்த்தியென்பதெல்லாமேக அண்டினாள்லட்சுமியுன்னை
கீர்த்திசொல்லிப்பாடவெம்மால் கேசவாதிரமா
மூர்த்தியாகவேவிளங்கும் மூவுலகங்கட்குநாதா
பார்த்தெம்மைக்காத்தருளும் பத்மநயனாபாரில்ஹரியே ... (பதி).



157

வசனம்.

காளியனுக்கு அறிவுபிறந்து கண்ணனைத்துதித்தல்.

விருத்தம்.

வந்திருந்த கன்னியர்களிந்தவாறு
வருந்திமுறையிட்டதெல்லாங் கேட்டிதங்கி
நந்தர்திரு மைந்தனுக்கு அருள்சுரந்து
நாகத்தின் முடியைவிட்டு நீரிற்பாய
நொந்தவுடற் காளியனும் மூர்ச்சையாக
நுண்ணறிவன் கருணையினால தெளிந்தபின்னர்
எந்தையே யெளியன்பிழை பொறுக்கவென்றே
ஏத்தினான் அடிதொட்டுப் போற்றினானே. (௱௫௧)

இராகம் அசாவேரி – ஆதிதாளம்.

பல்லவி.

காரும் – அய்யா – ஹரியே – காரும் – அய்யா – ஹரியே – காரும்–அய்யா.

அநுபல்லவி.

காருங் – காருங் – கண்ணா – காளமேக – வண்ணா
காருங் – கருணையினால் – பாரும்எந்தனைநீரும் ... ... (காரும்

சரணம்.

௧. தாமசகுணத்துடனே சர்ப்பமாகப்பிறந்தேன்
காமக்குரோதத்துடனே கடித்தெல்லோரையுறந்தேன்
நேமநிஷ்டையற்ற நிர்மூடன்போற்சிறந்தேன்
சாமியுக்தனுடைய சரணந்தன்னைமறந்தேன் (காரும்)

௨. ஜெகத்திலேபொல்லாங்கைச் செய்திருந்துவாழ்ந்தேன்
அகத்திலேகர்வமே அடைந்ததனாற்றாழ்ந்தேன்
மகத்துவமுள்ளஇந்த மடுவுதன்னில்லாழ்ந்தேன்
புகத்தைப்பெறும்படியுன் பாதத்தையேசூழ்ந்தேன் (காரும்)

௩. ஜென்மத்தினுற்றமதி சிந்தித்தாலும்போமா
கன்மத்தினாலடைந்த காரியங்குறையலாமா
உன்மத்தனைவிந்த உரகத்தின்மேலேநேமா
தன்மத்தினாலுந்தன் தாளைவைத்தாயேசீமா (காரும்)

௪. தக்ஷகனுமெனக்கு தகுந்தநேமனஞ்செய்ய
புக்ஷிவாகனுமிந்த பாரில்வந்திரேமெய்யா

கக்ஷிசெய்யாமலிப்போ காரும்அடியனுய்ய
லக்ஷ்மிநாராயணனே லாவண்யமாக அய்யா. (காரும்)

வசனம்.

கண்ணன் காளியனுக்குத் திட்டஞ்செய்தல்.

விருத்தம்.

அந்தமீருங் காளியன்சொல் லுரைக்குக்கண்ணன்
அருள்சுரந்து அவன்மீதிற் கிருபையோடே
இந்தமடுச் சலமினிமே லார்க்குமிங்கே
இயைந்தபடி யனுபவிக்கச் செய்வதாகச்
சந்ததமுன் குடும்பமுடன் ரமணத்தீபஞ்
சார்ந்திருந்து நீவாழக் கடவையென்று
விந்தையா யிச்சரசை விடவும்நியாயம்
விரித்திட்டான் அவனுமுடன் குறித்திட்டானே. (௱௫௨)

இராகம் - மோகனம் - சாபுதாளம்.

பல்லவி.

இந்தமடுதன்னைவிடு கடல்நடுவில்
இருக்குந்தீபத்தில்அடு

அநுபல்லவி

அந்தகருடன்தனக்குபயந்து ஆலைபோலவனியிற்சுழன்று
வந்துபுகுந்தாய்இந்தமடுவில் வலியவிஷம்உள்ளபாம்பே (இந்த)

சரணம்.

இகத்திலிருப்புபொய்யடா - அடகாளியா
இதைநீநம்பியுய்யடா
மகத்தைத்தொழுங்கையடா - மனதினில்
மாறுக்காரியம்செய்யடா
இந்தமடுவுக்குற்றதோஷம் - இருக்காதினிமேலேபாரடா
சொந்தபந்துகளுடனேகூடி - துரிதமாகவேநீயுஞ்சேரவே (இந்த)
பூமிதன்னில்பன்னவே - மனிதர்கள்
புண்ணியத்தால்துன்னவே
நேமநிஷ்டைகள்செய்யவே - ஓமத்தில்
நெய்யாகுதிபெய்யவே
வந்துஇந்தசரசையடைந்து - வையசத்தோர்யாகம்பண்ணவும்
முத்தியுந்தன்வினையுந்தீரவே-முகுந்தனடியைமனதிலெண்ணியே (இ)



காலைவேளைவேதம் - கலையற்று
கருதுவதேகீதம்
மாலைப்பொழுதுசந்தி - வந்தனம்
மடுவிற்செய்கவந்து
கோலமாகவேபூர்சனங்களும் - கூடியிவடம்நிறைந்திருக்கவே
நீலமேகவண்ணன்றுளை - கீர்த்தியாகவேசுமக்குநாகமே (இந்த)
பக்ஷிஜாலங்கள்கூடி - ஜலந்தன்னை
பசுகன்றுகள்நாடி
பக்ஷிக்கச்செய்கவென்று - இதுமுதல்
பண்ணிவைத்தேன்நன்று
லக்ஷ்மியைப்போலும்பெண்கள் - லாவண்ணியமாகத்தோய
சக்ஷியற்றுநீயும்வாழ - கருடன்கிலிவிட்டுப்போக. (இந்த)

வசனம்.

கண்ணன் நியமனப்படி காளியனரமணத்தீபஞ் சேர்ந்தானென்ன பரீக்ஷித்து சுகமுனியைக் காளியனுக்கும் கருடனுக்கும் நடந்த விருத்தாந் தைச்சொல்லும்படிக் கேட்குதல்.

விருத்தம்.

கண்ணனது நியமனத்தைச் சிரமேற்றுங்கி
காணிக்கையாக நீலோற்பலப் பூமாலை
எண்ணமுடன் வைத்தடிமேல் வீழ்ந்துதெண்டம்
இட்டடியேன் செல்லவரந் தாருமென்று
தண்ணெனத்தன் குடும்பமுடன் போனனென்னத்
துய்யகுணப் பரீக்ஷித்துஞ் சுகரைச்சொல்வீர்
செண்ணமுள காளியனக் கருடர்க்கஞ்சி
சேர்ந்திட்டான் மடுவினிலேன் நேர்ந்திட்டானே. (௱௫௩)

இராகம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

கேளுங்கதையைராஜனே கிலியைப்போதுபோஜனே

அநுபல்லவி.

நாளும்அந்தக் கருடனுக்கு
நடுங்கிவந்து ஒளித்தவிதத்தை (கேளு)

சரணங்.

௧. அந்திடத் துள்ளோர்நாடி
அனைவரும் ஒன்றாய்க்கூடி

வந்துபாம்பின் புற்றைத்தேடி
வரிசையா யர்ச்சிப்பார்பாடி... ... ... ... (கேளும்)

௨. அர்ச்சித்து வைத்தபண்டம்
அத்தனையுஞ் சேர்த்துத்தண்டம்
கர்ச்சித்து வருவானென்று
கருடனுக்குக் கொடுத்தார்நின்று ... ... ... (கேளும்)

௩. இந்தக்காளியன் சேரான்
இடும்பூசை தன்னைத்தாரான்
வந்துகருடன் பார்த்து
வருத்தினன் இவனைச்சேர்த்து ... ... ... (கேளும்)

௪. அன்றுமுதல் சுளித்தான்
அவ்விடந் தன்னிலொளித்தான்
என்றும்விஷ மளித்தான்
இனிவாரானெனக் களித்தான் ... ... ... (கேளும்)

வசனம்.

கருடன் அம்மடுவினண்டை வாராமைக்குக் காரணஞ்சொல்லுதல்.

விருத்தம்.

இந்தகாளிய னந்தமடுவைச் சேர்ந்து
இறகுடையான் பயநீக்கி வாழவெண்ணிச்
சொந்தமக்கள் பந்துக்க ளோடுகூடிச்
சூழ்ந்ததற்குக் காரணத்தைச் சொல்லக்கேளும்
வந்தவடம் ஜலத்திற்குள் ளிருக்குஞ்செந்து
வகையாவும் இரையாக வதைத்துக்கொல்ல
பந்தமற்ற ருஷிபார்த்துக் கருடனுக்குப்
படித்திட்டார் சாபமிட்டுத் தடுத்திட்டாரோ. (௱௫௪)

இராகம் - மோகனம் - சாபுதாளம்.

பல்லவி.

கருடன்கொர்வங்கொண்டு - தீமைசெய்யக்
கிடைத்ததுசாபமொன்று.

அநுபல்லவி.

கருடன்மடுவிலுள்ள ஜலசரங்களைக்கொல்ல
வெருவியவைகளெல்லாம் - வெந்துயர்கொண்டுசொல்ல (கரு)



சரணம்.

௧. சாதிவழக்கம்போல - இரையாக
சார்ந்தமீன்களைச்சேர்த்து
சோதிக்கொன்றுதின்று - அவடத்தில்
கொக்கரித்திருந்தானேர்த்து
நீதியற்றுக்கெடுக்க - நேர்ந்தவைகையொடுக்க
ஆதிவினையடுக்க - அங்குஉற்றுமுடுக்க ... ... ... (கரு)

௨. திக்கற்றவருக்கெலலாம் - உலகினில்
தெய்வமுண்டாகுஞ்சேர
பக்கமிருந்துதவம் - செய்யும்ரிஷி
பார்த்தாரிது நேர
சிக்குஞ்சிவனைக்கொண்டு - சிதைக்குமிவனைக்கண்டு
இக்கெதிசெய்யுமின்னம் - இவடம்வராதேயென்ன ... (கரு)

௩. சொல்லியும்வந்ததாலே - சௌபலருஷி
சோககோபம்பெருக்க
அல்லல்படுத்தஇங்கே - இனியேனும்
அணுகாமலேயிருக்க
வல்லிடிதலைமேலே - வந்துவிழுந்தாற்போலே
சொல்லிச்சாபம்பிடிக்க - சூழ்ந்தாற்றலைவெடிக்க ... (கரு)

௪. அந்தக்காளியனொருவன் - இந்தமர்மம்
அறிந்ததனால்மெள்ள
வந்துமடுவில்சேர்ந்து - குடும்பமுடன்
வாழ்ந்திருந்தான்உள்ளே
நொந்துகருடனோடே - நுணலைகளித்துநாட
விந்தைதிருமால்தேட - விஷமுடிமேல் ஆட ... ... (கரு)

வசனம்.

கண்ணன்கரைமேல்வரவும் கோபாலர்களெல்லாங்கண்டு அதிசயித்தல.

விருத்தம்.

தனதாகச்சொன்னபடி யரவஞ்செல்லத்
தாரணிந்து ரத்னமணிப் பணிகள்பூண்டு
இனமாவு கன்றுமைந்த ரெல்லாந்தேற
இருந்தமடு விட்டுவெளி வந்தான்கண்ணன்
மனமாறக்கரையருகி லிருந்தோரெல்லாம்
மகிழ்வாகத் துதித்தங்கு குதித்தேயாடி

கனமான காளியன்கட் டவிழ்த்துமீண்டக்
கண்ணென்றூர் விந்தைதரும் எண்ணென்றூரே. (௱௫௪)

இராகம் - பைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

பிழைத்தவந்தாயேபாலா - மடுவைவிட்டு
பிழைத்தவந்தாயேபாலா.

அநுபல்லவி.

பிழைத்துவந்தாயேபாலா - பிரபலமானபூபாலா
தழைத்துஎல்லோரும்வாழ - தங்குமுன்னடிமேற்றூழ. (பிழை)

சரணம்.

க. துட்டக்காளியன்கொட்டம் - தன்னையடக்கி
தொலையச்செய்தாயேமுடுக்கி
கட்டங்களுந்தீர - கரைமேல்வந்தாயேநேர
இட்டர்களுஞ்சேர - எங்கள்மனமும்ஆற... ... ... (பிழை)

உ. தோழர்களுடன்கூட - ஐயனே
தொடர்ந்துநீவிளையாட
ஆழமானமடுவை - ஐயனேநீகடந்து
வாழப்பசுவினங்கள் - வந்தாயேநீநடந்து ... ... (பிழை)

௩. எங்கெங்குமேகளிக்க - பட்டமரங்கள்
எல்லாமிங்கேதளிர்க்க
பொங்கியம்மாவென்று - புண்ணியனேநீயழைக்க
தங்கியெதுவுமிந்தத் - தாவரத்திலேபிழைக்க ... ... (பிழை)

௪. பக்ஷமாகவேநேர - இருக்குமிந்தப்
பரிவாரந்தன்னைச்சேர
கக்ஷிசெய்ததக்ஷகனுங் - கசங்கமுடிமேலாடி
ரக்ஷிக்கஎம்மைக்கண்டு - லலிதம்செய்யவும்நாடி... ... (பிழை)

வசனம்.

தாவானலம்என்னுங் காட்டுத்தீயைப் பக்ஷணஞ்செய்தல்.

விருத்தம்.

அரியிவனை நோக்கிவெரு அதிசயித்து
ஆனந்தமாகவே பாடி வாழ்த்தப்
பரிசனங்க ளெல்லோரும் போதுபோகப்



பரிதிகடற் குள்ளொளித்து விட்டதாலே
உரிமையா யிவ்விரவு கழித்துநாளை
ஊருக்குப் போகவெண்ணி யுறங்குங்காலை
எரியெங்குங் கொளுத்திவரு நேர்மைகண்டு
ஈதென்றூர் கண்ணனே காரென்றூரே. (௱௫௫)

இராகம் - முகாரி சாபுதாளம்.

பல்லவி.

கண்ணாஎங்களைக்காருமே - காட்டுத்தீயைக்
கண்டித்தெம்மைப் பாருமே.

சரணம்.

க. கண்ணாஎங்களைக்காரும் காட்டுத்தீயைப்பாரும்
அண்ணனோடெல்லோரும் அகத்தில்கொண்டுசேரும் (கண்)

உ. வாணம்போலப்பொரிய வளரும்அனல்சொரிய
கானமெங்குஞ்சரிய கண்டிடமெல்லாந்தெரிய (கண்)

௩. பிரளயாக்னியைப்போலே பெருந்தீயெழும்பிமேலே
கரளம்என்னவரும் கனத்ததீயைநீரும் (கண்)

௪. சுற்றிவளைத்துக்கொண்டான் சுவாலையாகவேநின்றான்
பற்றியெரிக்குமென்றூர் பக்குவஞ்செய்யுமென்றூர் (கண்)

௫. இப்போதெங்களைக்காக்க இருப்பதுநீயேநோக்க
அப்பாயிதையவிக்க ஆரையுங்காணோம்பார்க்க (கண்)

௬. திக்குவேறில்லைதம்பி தெய்வமாயுன்னைநம்பி
இக்கனலாற்றவெண்ணி ஏற்றுவோம்பூசைபண்ணி. (கண்)

வசனம்.

காட்டுத்தீயைப்பானம்பண்ணிக் கோபாலரனைவரையும்காத்தது.

விருத்தம்.

அந்தரியாமியென்னும் பதத்திற் கேற்க
ஆருமிவன் திருக்கூத்தை யறியாவண்ணம்
சுந்தரிமார் சொல்லுதற்கும் அரியகண்ணன்
சொரூபமே யவர்களெதி ராகத்தோன்ற
மந்தரித்தே மறையவரும் போற்றுகித்தம்
மாயன்விஸ்வ ரூபமது கொண்டுவோடி
தந்தரித்தே யவ்வனலைப்பானஞ்செய்து
தங்கினன் ஊர்காத்துப் பொங்கினனே. (௱௫௬)

இராகம் - கல்யாணி - அடைதாளம்.

பல்லவி.

காட்டுத்தீயாய்வந்த - தாவானலந்தன்னை
கண்ணனும்பானஞ்செய்தார்.

அநுபல்லவி.

ஓட்டமாகவேவந்து காட்டில்வளைந்துகொண்ட
நாட்டந்தன்னைக்கண்டு நாராயணனும்பண்டு (காட்டு)

சரணம்.

க. அண்டபிண்டாண்டாண்டமு - மூண்டுமிழ்ந்தமாயன்
அடியவர்கட்குநேயன்
கண்டவுடனேயந்த - காலாக்கினிதன்னை
உண்டவதிசயமங்கே - ஒருவரறியாமல்முன்னே ... (காட்டு)

உ. சகலநதிகளும் - சாகரத்திற்கலக்கும்
சகஜமாகத்துலங்கும்
அகிலலோகநாதன் - அவனேயென்பதறிந்து
அகலக்குறுகித்தீயும் - அடைந்தானுள்ளேதெரிந்து ... (காட்டு)

ங. இரவுபகல்பிரமன் - எல்லோர்களுந்தொழும்
ஏகநாதனுய்ச்செழும்
கரவுசெய்யவரும் - கனலும்வாடிநின்று
பரவுந்தீயொடுங்கி - பயந்திருந்தானையன்று ... ... (காட்டு)

ச. கொண்டல்களும்வனத்தில் - கூடாமலேயோட
கோக்களெல்லாம்வாட
அண்டமளந்ததாளன் - அக்கினிதன்னையுண்ண
தண்டைத்திருவின்மார்பன் - தன்னையேதுதிபண்ண. ... (காட்டு)

வசனம்.

வசந்தகாலத்தைப்பற்றிச் சொல்லுதல்.

விருத்தம்.

ஆனபடி யக்கினியை விழுங்கியங்கு
அபித்தவரைக் காத்திருந்த கண்ணன்றன்னைக்
கானகத்தில் கண்டுதெரி சிக்கும்வாறாய்க்
கதிரவனு மோடிவந்தா னென்றுசொல்ல
ஞானமறை யோர்துதிக்க வுதையமாக
நய்ந்துடனே யெல்லோரும் பாடிசேர்ந்தார்



167

உ. மாங்கனிதேங்கனி தன்னைப்பறிப்பார்
வாசுதேவருடன் புசித்தங்கேதரிப்பார்
நீங்காமலேவந்து நேரவுங்குறிப்பார்
நீல்மேகன்புகழை நேத்தியாய்விரிப்பார் ... ... ... (அந்த)

ங. கட்டியேகண்ணும் மூச்சிகளாடவும்
கரத்தல்செய்பவர் தங்களைத்தேடவும்
கிட்டியேவருவதைக் கண்டிட்டோடவும்
கிருஷ்ணனிடந்தனில் வந்தவர்நாடவும் ... ... ... (அந்த)

ச. புல்லக்கில்ராமகிருஷ்ணனையேற்றவும்
பாலர்கள்தங்கள் தோள்களைமாற்றவும்
கல்லகமீதிலே கடுகியேதோற்றவும்
கண்ணனைப்பாடியே காலைகள்போற்றவும் ... ... (அந்த)

ரு. கந்தர்வர்களுங் கண்டுகண்கூசவே
கானங்கள்பாடினு ரவர்களும்பேசவே
அந்தரதேவர்க் கதிசயம்வீசவே
அரம்பையர்தங்களை யவர்களுநேசவே... ... ... (அந்த)

சு. வேங்கைபுலிகளைப் போலவர்பாய்குவர்
விருக்ஷத்தின்நிழலிலே வந்துடனேய்குவர்
தாங்கியேயொருவரை யொருவர்சாய்குவர்
தாமோதரனடி வந்தவர்தோய்குவர் ... ... ... (அந்த)

எ. மல்லர்கள்போலவே சண்டைகள்செய்குவர்
மரங்கள்மீதிலேறி மலர்களைக்கொய்குவர்
எல்லவருங்கூடி யேகமாய்ப்பெய்குவர்
எதுகுலநாதர்முன் னிருந்தவருய்குவர் ... ... ... (அந்த)

அ. பக்ஷிகள்போலவே பாலரும்பாடுவர்
பற்பலலீலைகள் செய்தவர்நாடுவர்
லக்ஷ்மிநாதனும் நீயென்றுகூடுவர்
லாவண்ணியமாய்த் திருவடிமுடிசூடுவர்... ... ... (அந்த)

வசனம்.

பிரலம்பாசூரன் கோபாலச் சிறுவர்களோடு தானுமொருவனுகக் கலந்திருப்பதைக் கண்ணன்கண்டு அவனை யெய்க்கும்படிப் பந்தாடுதல்.

விருத்தம்.

விளையாடிப் பாலரெல்லா மிருக்கும்போது
விந்தையாய்ப் பிரலம்பா சூரனெனும்போன்

சனேயாமற் ருனுமொரு சிறுவன்போலச்
சங்கத்தில் வேஷமது கொண்டுசேர்ந்தான்
இளேயாத் கண்ணனுமே யவனேக்கண்டு
இடறுசெய்ய வந்தவனேக் கொல்லவெண்ணி
அனேயமுது செய்கிருஷ்ணன் யாருஞ்சேர
ஆடென்ருன் பந்தடிக்க நாடென்ருனே. (௱கக)

இராகம் – நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

ஆடவாருங்கள் - பந்துவினே
யாடவாருங்கள்

அநுபல்லவி.

ஆடவாருங்கள்பந்து அனேவரும்ஒன்ருகச்சேர்ந்து
நாடவுத்தியுங்கூட்டி நாமும்பந்தயங்கட்டி (ஆட)

சரணம்.

௧. தாமனென்னும்பாலனுக்கு தாமோதரனெதிரியாக
ராமனென்னுநாமனுக்கு வேஷபாலனெதிரியாக
பெரியவுத்திதாங்களென்று பேசியங்குளதிரில்நின்று
சிறியவுத்திபலருமாக சேவகராய்ச்சிலருமாக (ஆட)

௨. அண்ணனேடுபிரிடியானே அவ்விடத்திலேபொருந்தி
கண்ணனேடிகடினரூபன் கள்ளவேடன்தனேநிறுத்தி
சொல்லிக்கல்லேச்சூறியகுமைத்து சுந்தரமாய்நிற்கவைத்து
எல்லேயாகமர்தைசுற்ற எடுத்துத்தோற்ருர்தாமுஞ்சுற்ற (ஆட)

௩. அஸ்தமானகாலமட்டும் ஆடவேண்டுமென்றுசொல்ல
விஸ்தரித்துப்பேசவேண்டாம் வேளேயிதுமெத்தநல்ல
பட்டுப்பந்துகையிற்கொண்டு பாரில்வஞ்சன்நேர்மைகண்டு
சொட்டுப்போடகினேவுவைத்து சுவாமிகருத்திலேயமைத்து (ஆட)

௪. இட்டமாகவெவருங்கூட எல்லவருமாகஆட
கட்டப்பட்டுங்கண்ணன்பக்ஷம் கபடமாகத்தோற்றுநாட
முன்னஞ்சொன்னமுறைமையாக-முனேந்தெடுக்குந்திறமையாக
சொன்னலக்ஷ்மிமார்பன்சொல்ல - சூதுசெயவந்தவனேக்கொல்ல. ()

வசனம்.

கண்ணன்பக்ஷம் தோற்கவே பந்தயப்படிக்கண்ணன் தாமனேயும் பிரலம்பன் பலராமனேயும் எடுத்தோடும்போது பிரலம்பாசுரனேப் பலராமன் கொல்லுதல்.



வானமதிற் சூரியனும் வடக்கிற்சாய
வாடினர்வசந்தருது தேடினரோ. (௱௫௭)

இராகம் - தன்னியாசி - ஆதிதாளம்.

பல்லவி.

வசந்தருதுதேடினர் - வனத்திற்கூடி
வாழவெல்லோரு நாடினர்.

அநுபல்லவி.

வசந்தமென்னுங்கால வரவுதன்னேப்பார்க்க
வையகத்தோர்சவுக்கிய வாழ்வையெண்ணியேற்க (வசந்)

சரணம்.

௧. உத்தராயணஞ்சேர உலகத்தில்தாபமேற
சுத்தமாம்தர்மனையுஞ் சுருங்கிக்குறுகிவாட
பத்தமாகப்பனிபேய பக்ஷிஜாலங்கள்ஓய
இத்தலத்தோர்களாற இடறுகளுந்தீற (வசந்)

௨. கனிகாய்மலரும்வீட்டில் காணக்கிடையாதுநாட்டில்
பனிமலேயோடுசண்டை பண்ணட்டிபோனதென்ன
தனித்தனிராசிகளிற் ருன்மாறச்சூரியனும்
இனிஉஷ்ணமேகதிக்க எவருங்கண்டுகுதிக்க (வசந்)

௩. ஏரிஜலங்கள்முற்றும் இல்லாமலேவற்றும்
பாரில்பசுவினங்கள் பருகுஞ்ஜலங்குழம்ப
சூரியன்மேஷத்திற் சொகுசாய்பிரவேசிக்க
நாரீமோகந்தொடுக்க நல்வேனிலும்அடுக்க (வசந்)

௪. பொதிகைமலேமுடியில் புரிந்தமணம்அடியில்
நதிகளின்மேற்படிந்து நானிலந்தனில்வந்த
அதிசயந்தனேக்கேழ்க்க அனங்கன்வரவையேற்க
புதியஉலகமென்ன பூமியெங்குந்தன்ன (வசந்)

௫. குயில்களோசைகாட்ட கோண்டுமோந்தளிர்நீட்ட
மயில்களும்வால்விரித்து மாடங்கள்மேலாட
ஒயிலிடைமாதர்கூடி ஒருமிக்கவேபாட
அயிலுடைமதன்கிட்ட அம்புகளுந்தீட்ட (வசந்)

௬. ஆறுமடுக்குளங்கள் ஆகுஞ்ஜலவளங்கள்
ஊரும்வயல்களெல்லாம் ஓங்கிப்பயிர்செழிக்க

தேறும்படியெவர்க்குந் — தெய்வஞ்சகாயஞ்செய்ய
நாறும்மலர்மணக்க — கங்கைமாரும்முடிக்க (வசந்)

௪. மரங்களெங்குந்தழைக்க — மற்றெவையுங்களிக்க
தரங்கம்முழுதுந்தீர்ந்து — தருக்களெல்லாம்பழுக்க
அரங்கம்எங்குமாக — ஆனந்தமாய்வாழ
சுரந்துமுகந்துலங்க — சொர்ணம்போலிலங்க (வசந்)

௫. பக்ஷிஜாலங்கள்கூட — பாடியெங்கும்நாட
கக்ஷியற்றுப்பாலாள் — களித்துப்பசுக்கள்மேய்க்க
லக்ஷ்மிவாவுக்கு — லபித்தசகுனமாக
குக்ஷிகுளிரப்பெருங் — குடியுந்தழைக்கவரும், (வசந்)

வசனம்.

கண்ணனும் பலராமனும் தோழரோடும் பசுக்களோடும் வனமேகி விளையாடுதல்

விருத்தம்.

வசந்தருது சேர்ந்தவுடன் ராமகிருஷ்ணர்
வனமேகித் திரியவே நினைவுகொண்டு
இசைந்தவினக் தோழர்மற்றை யாவரோடும்
எக்களிக்க முகமலர்ந்து எவருங்காணப்
பசந்தாகப் புறப்பட்டு வனத்துட்சென்று
பசுக்கள்தம்மை பசும்புல்லில் மேயவிட்டுக்
கசந்தலையிற் பாலரெல்லா மொன்றுகூடிக்
கருதினார்விளையாடப் பொருதினரே. (ராகு)

இராகம் - தன்யாசி - ஏகதாளம்.

பல்லவி.

அந்த்வனத்தில் விளையாடியிருந்தார்
அச்சுதனுடன்கூட.

அநுபல்லவி.

சொந்தமானசிறு — பாலருஞ்சேர்ந்து
கோதைதிருமகனுடனே — நேர்ந்து (அந்த

சரணம்.

௧. பச்சைப்புல்லிலே பசுக்களைவிடுவார்
பர்வதவுச்சியைப் போயவர்தொடுவார்
இச்சையானபடி யெங்கிலுமோடுவார்
ஏகமாகவே வந்துடனாடுவார்... ... ... ... (அந்த)



சரணம்.

௧. காற்றுக்குப்பதிலாகக் - கையாலவட்டத்தாலும்
சாற்றும்பனிநீரில் - சலவைக்கற்றடத்திலும்
ஊற்றுக்சலத்திலே - உள்ளமரத்திலும்
ஆற்றுக்கரைதோப்பு - ஆனகல்லிடத்திலும்
பார்த்துமுகந்தானுஞ்சோர்ந்து
பாலர்களுங்கூடிநேர்ந்து
ஆடி - மனம்வாடி - இனந்தேடி - திரிந்தோடும் ... ... (கோ)

௨. தூளியெங்குமெழும்ப - தூக்கமற்றுஒடுக்க
தேனிகள்ஊஷ்ணத்தால் - திருக்குளத்தில்துடிக்க
கேளிகளில்லாமல் - கெச்சைநீக்கிப்படுக்க
கூனிகளும்பறக்க - கூடாமலேயடுக்க
வாடுங்காலத்திற்றேடி
வான்மேகங்களுங்கூடி
வாழ - தனஞ்சூழ - நினைந்தாழ - மழைபெயும் ... ... (கோ)

௩. மழைபெய்தூர்குளிர - மனிதர்மகிழ்ந்திருக்க
தழைகளெல்லாமுதிர - தானியமும்பெருக்க
குழைக்கோலூதியப்போ - கோபிகளைஉருக்க
அழைக்கும்போதுடனந்த - ஆச்களும்வந்திருக்க
மரத்தடிதனிற்றங்கி
மத்தியானங்களிற்பொங்கி
காய - போதுசாய - அதிமாயக் - கண்ணன்றாடும் ... ... (கோ)

வசனம்,

மேய்ந்திருந்த பசுக்களைக்காணமல் பாலர்கள்தேடுதல்.

விருத்தம்.

பொம்மையுறும் மழைபொழியப் பூமியெங்கும்
போகவரச் செய்ததனாற் பாலரெல்லாம்
அம்மைதருங் கண்ணனென்னை யழைக்கமெத்த
ஆனந்தமாய்ப் பசுக்களொடு சென்று
செம்மையுண்டப் பிருந்தையிலே மேயவிட்டுச்
செல்வர்களும் விளையாடி நிற்கும்போது
உம்மையறும் ஆக்களங்கு மறைந்ததாலே
ஓடினார் வனந்தன்னிற் றேடினாரே. (௭௬௩)

இராகம் - காம்போதி - ஏகதாளம்.

பல்லவி.

தேடுகிறார்பசு - தேடுகிறார்பசு
தேடுகிறார்பசு - தேடுகிறார்பாலர்.

சரணம்.

க. தேடியேகளைத்து - சிறுவரும்இளைத்து
ஓடியேயலுத்து - உள்ளமுஞ்சலித்து ... ... (தேடு)

உ. புதர்களில்நுழைந்து - போர்வையையிழந்து
சிதறியேகுலைந்து - சேரவும்அலைந்து ... ... (தேடு)

௩. காடெல்லாஞ்சுற்றி - காணுத்தால்வற்றி
வாடியேநத்தி - வனமதிற்கத்தி... ... ... (தேடு)

௪. பர்வதம்பாவி - பார்த்தங்குலாவி
சர்வமுந்தாவி - சந்தேகம்மேவி ... ... ... (தேடு)

௫. குளம்படிகண்டு - கூவியேநின்று
இளங்குழுவன்று - ஏகமாய்ச்சென்று ... ... (தேடு)

௬. கோக்களையழைக்கக் - கோபாலர்தழைக்க
ஆக்கமுங்கொழிக்க - ஆயருஞ்செழிக்க ... ... (தேடு

௭. கிஷ்டன்குழலோசை - கேட்கவேயாசை
இஷ்டம்வாலைவிசை - எடுக்கவுமாப்பசை... ... (தேடு)

௮. பக்ஷிவாகனன்தேட - பாலர்களும்ஓட
லக்ஷுமிநாதனைக்கூட - லகுவாய்ப்பசுக்கள்நாட ... (தேடு)

வசனம்.

காட்டுத்தீயைக்கண்டு பாலர்கள் கண்ணனைத் தோத்திரம்பண்ணுதல்.

விருத்தம்.

தேடியே பாலரொடு சென்றகண்ணன்
திரும்புகையிற் பசுக்களையு மோட்டிக்கொண்டு
வாடியே பாலர்களும் அஞ்சமீண்டு
வானமட்டும் எரியுமக்னி யிவணாச்சூழ
நாடியே வன்னிதனை யணைத்துஇங்கே
நடுங்குமெங்க ளுயிர்காக்குந் தேவேயென்று
கூடியே பொன்னடிக்கீழ் வீழ்ந்துகையைக்
குவித்திட்டார் காருமெனத் துதித்திட்டாரே. (௱௬௪)



169

விருத்தம்.

தன்னைநிக ரற்றகண்ணன் கபடமாகத்
தன்பக்ஷந் தோற்கவே தானுஞ்செய்து
என்னையெதி ராகவுடை தாமனேநீ
ஏறுவா யென்னுடைய தோள்மேலென்ன
உன்னையொரு சரியான வுத்தியாக்கி
உள்ளபல ராமனைதான் யெடுப்பாயென்னப்
புன்னைவன நாதனுடன் வஞ்சபாலன்
புறப்பட்டார் சுற்றிவரத் திறப்பட்டாரே. (௱௬௫)

இராகம் - மோகனம் - அடைதாளம்.

பல்லவி.

பந்தயப்படியோடினார் - பாலரடுத்து
பக்குவப்பட நாடினார்

அநுபல்லவி.

பந்தயப்படியேசம் பாஷித்தபடிநின்று
வந்தஅரக்கன்தன் வாழ்வைமுடிக்கஅன்று (பந்த)

சரணம்.

க. கண்ணன்எடுத்துடனோடவும் - தாமன்
கருத்துக்கழல்மீதில்நாடவும்
அண்ணனைத்தூக்கியேநீடவும் - அரக்கன்
அணைகடந்துபோகக்கூடவும்
இடபனைப்பத்திர - சேனன்சுமந்துகொண்டு
எல்லைப்படியவர் - ஏகிவருவதென்று
படபடவென்ன - பாதத்தைநீட்ட
பந்தடித்தவிடத்தை - பார்த்திருவர்கிட்ட... ... (பந்த)

உ. இந்தவிதம்பிரலம்பன் - ராமனை
எடுத்துப்போகவும்வம்பன்
முந்தியோர்காளில்வெம்பன் - திரணுவர்த்த
முறடனென்னுந்தும்பன்
கண்ணன்தன்னைக்கொண்டு - ககனந்தனிற்போக
கனத்தபெருமலையாய்க் - கசடன்கையுநோக
எண்ணமெல்லாங்கெட்டு - ஈனன்விழுந்துசாக
ஏற்றதுபோலமூத்தோன் - எடுக்காப்பளுவேயாக... ... (பந்த)

௩. கனத்ததினுலேகட்டு - கைகால்
கஷ்டத்தினுல்விட்டு
வனத்திலேதான்பட்டு - மாய்ந்து
வதையும்வேளைதொட்டு
இனத்தின்ரூபத்தை - இடறுசெய்யவெடுக்க
இரத்தினகுண்டலங்கள் - இலங்கியேயடுக்க.
மனத்தில்கொண்டபகை - மறவாமலேதொடுக்க
மார்க்கத்தில்பலராமன் - மருண்டுஉதைகொடுக்க ...(பந்த)

௪. மோசஞ்செய்யமண்டு - ராட்சச
மூடனென்றுகண்டு
நாசஞ்செய்யும்படி - ராமனும்
நடுத்தலைமேலேயிடி
தேடிவிழுந்தாற்போல - திருக்கரந்தன்னாலே
தேவரும்பாலரும் - திகைக்கிடமுன்னாலே
வாடிப்பதைத்திட - வலமாகப்பின்னாலே
பாரில்விழக்குத்த - பார்த்தார்கள்அந்நாளே. (பந்த)

வசனம்.

கோடைகாலத்தைப்பற்றிச் சொல்லுதல்.

விருத்தம்.

சந்தத்மும்ராமகிருஷ்ணன் பிறப்புத்தொட்டுச்
சதிசெய்யும் வஞ்சகரை யழித்திருந்தார்
இந்தஅதி சயங்கண்ட இனத்துப்பாலர்
எக்களிக்கப் பாடியே துதிகள்செய்தார்
விந்தையிது மிகப்பெரிதென் றெண்ணிமேலே
விரைசெய் மலர்பறித்தமரர் தூற்றிநின்றார்
செந்தணல்போல் வெயிலெறிக்குங் காலந்தன்னைச்
செப்புவோம் அதன்செயலை யொப்புவோமே. (௱௬௨)

இராகம் - புன்னாகவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

கோடைகாலமே - அதின்ஜாடை
நாளுந்தாபமே.

அநுபல்லவி.

வாடைகொண்டல்தென்றல் - வலியும்மிகவோங்க
கோடையதிகரிக்கக் - குவலயத்தோர்நடுங்க... ... (கோ)



173

இராகம் - மத்தியமாவதி - சாபுதாளம்.

பல்லவி.

கண்ணனே சரணம் - கார்முகில்
வண்ணனே சரணம்

அநுபல்லவி.

கண்ணனே கார்முகில் வண்ணனேயிப்பொழுது
துண்ணனே துயர்நீக்கும் எண்ணனே யெங்கள்திருக் ... (கண்)

சரணம்.

௧. வந்துவளைந்துகொண்டான் - வனந்தனில்
வன்னிவடிவாய்நின்றான்
தந்தெங்களுயிர்பிச்சை - தற்காலந்தனிற்காரும்
அந்தமடுவருகில் - அணைத்ததுபோற்பாரும் ... (கண்)

௨. எரிப்பேனென்றுவருகுதே - எங்களைப்போக
இடந்தராமற்பெருகுதே
தரிப்போமிப்போதுஇங்கே - தாமோதரனேவெற்றி
விரிப்போம்நின்புகழ்பேசி - வெல்வோமத்தீயையாற்றி... (கண்)

௩. கங்குகரையைக்காணமே - காட்டினில்
கண்ணாயிதுவும்நாணமே
எங்கிருந்திந்தவனல் - ஏகிவருகுதென்று
சங்கையறுத்துக்காரும் - சரசவுல்லாசாஇன்று ... (கண்)

௪. பக்ஷிகளும்வாடுதே - ஆகாயத்தில்
பறக்கவும்இடந்தேடுதே
கக்ஷிசெய்தீயவித்து - காட்டைக்குளிரச்செய்ய
லக்ஷ்மிநாதனேகிருபை - லபிக்கவும்நாங்களுய்ய ... (கண்)

வசனம்.

கண்ணன் காட்டுத்தீயைப்புஷித்துப்பாலரையும் கோக்களையும் பாண்டீரமென்னும் மரத்தினடியில் சேர்த்திருக்கக்கண்ட சிறுவர்கள் ஆனந்தத்தால் கண்ணனைப்போற்றுதல்.

விருத்தம்.

துதித்திருக்குஞ் சிறுவர்களைக் கண்ணன்நோக்கித்
துயர்நீங்குங் கண்களைநீர் மூடுமென்று
விதித்தபடியெல்லோருஞ் செய்துநிற்க
வேணுவிந்தை ரூபமெடுத்தனலையுண்டு

பதித்தவளைப் பாண்டீரத் தருவின்கீழே
பழையபடி கொண்டவடஞ் சேர்த்துவைக்கக்
கதித்தவர்கள் விழித்தந்த புதுமையாலே
களித்திட்டார் குதித்தாடி விளித்திட்டாரோ. (௱௬௫)

இராகம் - தன்னியாசி - ஆதிதாளம்.

பல்லவி.

கிருஷ்ணா — கிருஷ்ணா - கிருஷ்ணாவென்றெல்லோரும்
கேசவனையழைத்தார் .

அநுபல்லவி.

கஷ்டங்கள்தீர்த்தெம்மைக் காத்துரக்ஷித்தீரோ
துஷ்டனும்அனலேநீர் துரிசாய்ப்பக்ஷித்தீரே ... ... (கிரு)

சரணம்.

௧. வந்தஆபத்தைநீக்கும் மாதவனென்றார்சிலர்
வனத்திற்றுயர்துடைக்கும் வாமனனென்றார்சிலர்
நந்தர்மைந்தனல்ல காரணனென்றார்சிலர்
நம்மையெல்லாம்ரக்ஷிக்கும் நாதனென்றார்சிலர் ... ... (கிரு)

௨. மந்திரம்வதேனுங் கற்றாரோவென்றுசிலர்
மார்க்கம்நமக்கொன்றும் விளங்கிலையென்றுசிலர்
தந்திரம்செய்யக்கற்ற சுவாமியென்றுசிலர்
தயவுள்ளபெரியோனுந் தானிவனென்றுசிலர் ... ... (கிரு)

௩. சர்வாந்தரியாமியும் இவனேயென்பார்சிலர்
ஜகத்திற்றிரிகாலந் தெரிந்தோனென்பார்சிலர்
நிர்வாகசாதுரிய நித்தியனென்பார்சிலர்
நீலமேகசியாமள நிபுணனென்பார்சிலர் ... ... (கிரு)

௪. குக்ஷியிற்சகம்வைத்த குணவானென்பார்சிலர்
கோக்களும்நாமுஞ்செய் புண்ணியமென்பார்சிலர்
லக்ஷ்மிமார்பனும் இவனேயென்பார்சிலர்
லாவண்யமாய்நம்மை ரக்ஷித்தானென்பார்சிலர் ... ... (கிரு)

வசனம்.

கண்ணன் வருஷாகாலம் வந்தவுடன் பழையபடித் பசுத்திரளோடும் பாலர்களோடும் வனமேகி விளையாடுதல்



விருத்தம்.

இப்படியாய்ச் சிறுவர்களும் போற்றிநிற்க
எழிற்கண்ணன் போதுபடு முன்னேநாமும்
எப்படியு நம்பதிக்குப் போவோமென்று
எல்லவரு மொருங்குபட வழைத்துக்கொண்டு
செப்பமுள்ளபாடியிலே வந்துசேர்ந்து
க்ஷீரான்ன முண்டுசுக மாயிருந்தார்
எப்புறமும் பச்சைசநற் காலஞ்சேர
எண்ணினார் விளையாட நண்ணினாரோ. (௱௬௬)

இராகம் - ஸ்ரீராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

வருஷருதுவைக்கண்டாரோ - ஸ்ரீராமகிருஷ்ணன்
வனத்தில்விளையாடச் சென்றாரே.

அநுபல்லவி.

வருஷருதுவைக்கண்டார் - வரவுந்தோழரைக்கொண்டார்
புருஷோத்தமனுங்கூட - பூங்குழலூதிநாட ... ... (வரு)

சரணம்.

௧. கீழ்காற்றுகளும்வீச - கெர்ச்சித்துமேகம்பேச
வாழ்வாரெவருந்தேட - வாசுதேவனைப்பாட ... ... (வரு)

௨. இந்திரதனுசுதோண - எழிலாய்ஆகாயங்காண
சந்திரபரிவேஷம்போட - சலவருஷமாய்ஜாட ... ... (வரு)

௩. குமுறியிடியிடிக்க - குன்றுவாடையடிக்க
பமரம்அதிகரிக்க - பாரில்மழைபெருக்க ... ... ... (வரு)

௪. அதிகவெள்ளம்வழிய - ஆனதடம்அழிய
எதிரெதிராகமின்ன - இடந்தெரியாமற்பன்ன ... ... (வரு)

௫. வந்தரிரூபம்போல - வானமத்தியிற்சால
அந்தமாய்த்தோன்றுநல்ல - அழகுவில்லென்றுசொல்ல ... (வரு)

௬. உலகரக்ஷகன்வந்து - உற்றனெனவுமுந்து
கோலமதியைமூட - கொண்டலெழும்பிநாட ... ... (வரு)

௭. புன்னாங்குழலைக்கேட்டு - புட்கள்வாய்பூட்டப்பட்டு
விள்ளாரெவருமென்று - விரும்பிநிற்கவுமன்று ... ... (வரு)

அ. கற்பகவனத்தைநோக்கி - களித்தப்பிருக்கதுயுந்தாக்கி
அற்பவனமாயென்ன - அதையுங்கேளிப்பண்ண ... ... (வரு)

௯. கொக்குகுருவிசென்று - கொழுக்கமீன்களைத்தின்று
பக்குவமுற்றோர்போல - பாரில்விளங்குங்கால ... ... (வரு)

௰. கலியுகந்தன்னில்வேத - கர்மமறந்துபேத
பலிகொள்வேதியர்நாட - பாரோரியுடைக்கோட ... ... (வரு)

௰௧. உத்தமரெங்குங்கூட - உபகாரமேதேட
நத்திச்ஜனங்கள்சாய - நற்குணங்களுமாய ... ... (வரு)

௰௨. அத்தியானஞ்சொல்லிமெத்த - ஆரியரெங்குஞ்சுத்த
மத்தியானத்தனில்நித்த - மன்னேகங்களுங்கத்த... ... ... (வரு)

௰௩. வேந்தன்திரவியஞ்சேர்த்து - வேண்டுமெனமழையைப்பார்த்து
ஈந்ததுபோல்நின்று - எழில்மேகம்பெயவன்று ... ... (வரு)

௰௪. பட்டிப்பூச்சிகள்சேர - பவளம்போலெங்குமூர
கட்டிக்காவல்வளைக்க - காளான்களுமுளைக்க ... ... (வரு)

௰௫. தான்யங்களும்விளைய - தரணியெங்கும்அளைய
மானியங்களில்வார - மனிதருங்கொண்டுசேர ... ... (வரு)

௰௬. என்னுங்காரியங்கூட - எங்கும்லக்ஷ்மிநாட
கண்ணனும்பசுகாக்க - கானகஞ்சென்றுமேய்க்க... ... (வரு)

வசனம்.

சரற்காலத்தைப்பற்றிச்சொல்லுதல்.

விருத்தம்.

வருடருது இவ்வாறு சென்றுபோக
வையகத்துத் தடாகநீர் தெளிந்துதோற்றக்
கருடன்முதற் பக்ஷிகளும் வானிலேறிக்
கலந்துதங்க ளினத்தோடு பறந்துவாழத்
திருடவரும் வாழ்நாளை வஞ்சனையினாலே
தினகரனும் பிரகாசங் காட்டிநிற்க
அருடருவான் கண்ணன் குழுவோடுகாட்டில்
அண்டினான் சரத்ருதுவில் மண்டினானே. (௱௯௭)

இராகம் - காட்டை - அடைதாளம்.

பல்லவி.

சரத்காலந்தன்னைக்கண்டாரோ - சந்தோஷமாக
சரசஞ்செய்திருந்தாரோ



அநுபல்லவி.

சரற்காலந்தன்னைக்கண்டார் - சகலருங்கூடிநின்றார்
விரற்களாற்பூவைக்கொய்தார் - வேணுகானமுஞ்செய்தார் ... (சரற்)

சரணம்.

௧. கண்ணன்நடப்பானென்ன - பலவர்ணக்
கம்பிளிவிரித்ததென்ன
எண்ணம்பூதேவிபெற்று - சிங்காரம்
எங்குஞ்செய்தாளேயுற்று
திண்ணன்நாரணன்பதம் - சேரலாமென்றுநிதம்
வண்ணவாயுவும்வீச - வாசனைக்கொண்டுபூச ... ... (சரற்)

௨. ஆசாரியர்தம்மைச்சேர்ந்து - உபதேச
அனுக்கிரகங்கொண்டுதேர்ந்து
பாசாபந்தம்நீங்கும் - திருப்தியாய்
பக்குவப்பட்டோங்கும்
தாசரைக்காப்பார்போலுந் - தரணிவளைகள்மிக்க
ஆசுவீசத்திலுண்ட - அத்தனைநீருங்கக்க ... ... (சரற்)

௩. காளியன்வாலைப்பற்றி - முடிமீதில்
கால்வைத்தாடியமூர்த்தி
காளிலேகாமடுக்க - வினைதீர்த்து
நற்கதியுங்கொடுக்க
ஆலப்பாம்புகளெட்டி - அங்கேபார்ப்பதுபோல
கோலக்காந்தளெதிரில் - கூரமலருங்கால ... ..... (சரற்)

௪. குளங்கள்தெளிந்துரிய - அலங்காரக்
குமுதங்களும்விரிய
இளங்கமுகெல்லாம்பார்க்க - மணமிகும்
ஏர்பெறும்பூக்கள்பூர்க்க
உளங்களிகொண்டெவரும் - ஓதப்பிருந்தைநல்ல
களங்கமில்லக்ஷ்மிவாழக் - கருதுங்காடென்றுசொல்ல .... (சரற்)

வசனம்.

கண்ணன் பிருந்தையில் வேணுகானஞ்செய்தது.

விருத்தம்.

இவ்விதமாய் விளங்குசரற் காலந்தன்னில்
இலங்குகண்ணன் யமுனைநதிச் சமீபமாகச்
செவ்விதரும் குழுவோடும் பசுக்களோடும்
சேர்ந்தவுட னமரர்களுங் கண்டுபோற்ற

எவ்விதத்தா லிவ்வோசை வந்ததென்று
எதுகுலத்துப் பெண்கள்மன துருகிநிற்க
அவ்விதமா யென்றெவருங் கேளாவண்ணம்
ஆடுவான் குழலூதி நாடுவானே. (௱௬௮)

இராகம் - பியாகு - ஆதிதாளம்.

பல்லவி.

பம்சரிவைத்தூதிநின்ருன் - கோபாலகிருஷ்ணன்
பம்சரிவைத்தூதிநின்ருன்.

அநுபல்லவி.

பம்சரியைக்கையிற்கொண்டு - வேணுரந்திரம்விரற்கண்டு
வம்சநாதன்இசைபாட - வானுமண்ணுங்குதித்தாட (பம்)

சரணம்.

௧. தண்டைச்சிலம்புகள்தாளில் - தளதளதளவென்ன
கண்டசரகுண்டலங்கள் - காதிற்பளபளென்ன
கொண்டையில்மயிற்ருேகையும் - வண்டுசூழ்வனமாலையும்
புண்டரீகக்கண்ணன்வேணு - பொம்பொம்பொம்மென ... (பம்)

௨. கங்கணங்கள்தோள்வளைகள் - கலகலகலவென்ன
தங்கவளைச்சங்கிலிகள் - கையிற்நகதகென்ன
மங்கையருடையகண்கள் மாருமலேபார்க்க
சங்கையறக்கண்ணன்வேணு - ஜம்ஜம்ஜம்மென... ... (பம்)

௩. கொத்துவனமாலைமார்பில் - குமுகுமுகுமுவென்ன
பத்துவிரல்மோதிரங்கள் - பளபளபளவென்ன
முத்துசரப்பளிசுத்த - மோகனமாலையசைய
உத்தமனுங்கண்ணன்வேணு - உண்டுண்டுண்டென ... (பம்)

௪. பட்டமாமுந்தளிர்த்துப்-பச்சுபச்சுபச்சென்ன
இட்டமாகுநற்பசுக்கள் - அம்மாஅம்மாவென்ன
திட்டநாகம்படமெடுத்துச் - சுழன்றுசுழன்றுஆட
அட்டலட்சுமிபதிநாதன் - அதிஅதியிசையாக ... ... (பம்)

வசனம்.

கண்ணன் வேணுகானத்தைக்கேட்டக் கோபிகாரத்தினங்கள் மனமுருகிக் கண்ணனைப்புகழ்தல்.

விருத்தம்.

நாடுதனி லென்றவருங் கேளாவண்ணம்
நாதன்குழ லூதிவன நடுவிலாட
வீடுதனிற் செய்கருமம் யாவும்விட்டு
வெளிவந்து கோபிகா மணிகள்கூடிப்



பாடுமிக்த மனமுருகு மொலியார்வாயிற்
பட்டதென வந்தெதிரிற் பரந்தகண்கள்
தேடுகின்ற கண்ணனருள் அமுதமென்றே
தேறுவார் ஆசையினுற் கூறுவாரே. (௱௬௯)

இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

கேளடியே நீசகியே - கிருஷ்ணன்முரளியை
ஸ்ரீகிருஷ்ணன் முரளியை

அநுபல்லவி.

௧. கேளடியேநீசகியே - கிருஷ்ணன்முரளியை
நாளும்நந்தகோபன்மகன் - பாடுஞ்சரளியை ... (கேளடி)

௨. கூடியேமயில்கள்காட்டில் - கோவிந்தன்இதத்தை
நாடியேதோகைவிரித்து - நடித்திடும்விதத்தை ... (கேளடி)

௩. நானுந்தேவன்கைதனில் - நற்குழலாயிருப்பேனே
கானில்மூங்கிலாய்ப்பிறந்தால் - கானம்பெற்றிருப்பேனே (கேளடி)

௪. காளிங்கமர்த்தாபன்ஓதும் - கானத்தையேற்று
நாளுங்குயிலோசையெனக்கு - நாராசமாயிற்று ... (கேளடி)

௫. காமதேனுகளுங்கூடி - கண்ணன்முன்னேடி
வாமனன்குழலைக்கேட்டு - வருகுதுநாடி ... (கேளடி)

௬. கோபாலகோபிகளுமிங்கே - கூடியேயுற்று
ஆபாசசர்வேந்திரியம் - அவன்மேலேவைத்து ... (கேளடி)

௭. இந்துபிருந்தையின்று - விசும்பாகக்காணுது
நந்தன்சுதன்மேனி - மேகமாகத்தோணுது ... (கேளடி)

௮. ஆகாயத்தில்தேவஸ்திரிகள் - ஆடைகள்நீங்க
தேகாபிமானமற்றுத் - தியங்கிறரோங்க ... (கேளடி)

௯. கன்றுகளுந்தாயைக்கிட்டிக் - கருதியேயோட
இன்றுபாலையுண்ணமறந்து - இருக்குதுநாட ... (கேளடி)

௰. ஆயுளிலேலக்கித்துவே - ஆனநாளென்று
மேயுபசுவிட்டுவாலைத் - தூக்குதேயின்று ... (கேளடி)

௰௧. வேடஸ்திரீகளுங்கூடி - விரும்பியேகூற
மூடத்தழைகளைப்போர்த்து - மோகமாய்ச்சேர ... (கேளடி)

௰௨. இஷ்டமாகப்பிருந்தையிலே - இருக்கிறேனென்று
அஷ்டலக்ஷ்மிதானுங்கூடி - ஆடுறாள்நின்று ... (கேளடி)

வசனம்.

தனுர்மாதத்தில் கோபிகாமணிகள் கௌரிவிரதம் அநுஷ்டித்தல்.

விருத்தம்.

வேணுஇந்த விதமூதி லீலைசெய்தான்
வெங்கதிரான் திசைமாறி வருதலாலே
சேணுலவு நிலவுமிகக் குளிர்ந்துகாயச்
செந்தணலுஞ் சூடுகுறை வாயிருக்கக்
காணுமந்தத் தனுர்மாதந் தன்னிலாயர்
கன்னிகளைக் குலதர்ம வழக்கமாகத்
தோணுகௌரி விரதமனுஷ் டிக்கச்சொல்லத்
தொடங்கினார் உடனவரும் உடங்கினாரோ. (௱௭௰)

இராகம் - கலியாணி - அடைதாளம்.

பல்லவி.

காத்தியாயினியம்மா பாரம்மா - எங்களைக்
கண்ணன்வசமாகச்சேரம்மா

அநுபல்லவி.

காத்தியாயியம்மனேபாராய் - கருணையுடன்
கருத்தின்படியேசேராய் - கவலைதீராய் ... (காத்)

சரணம்.

௧. பர்வதராஜபுத்ரி - நீயிந்த - பண்வாய்ப்பெண்கள்மித்ரி
நிர்வாகமானபெண்டாட்டி - நீலகண்டன் - நீங்காச்செல்வக்கண்ணாட்
டி - நீயேகதி ... ... (காத்)

௨. அர்த்தநாரீஸ்வரியே - அன்பருக் - கருளும்நல்லயிஸ்வரியே
விர்த்தர்களும்போற்றும் - வேண்டியே - விதம்விதமாகஏற்றும்
வித்தகிநீயே ... ... (காத்)

௩. காயாம்பூவண்ணனைநாடி - இப்போது - கலந்துநாங்களுங்கூடி
மாயாமனோன்மணிகீர்த்தி - மகிழ்வாக - மருவச்செய்வதுபூர்த்தி
இதுநேர்த்தி ... ... (காத்)

௪. சகலமுங்கைகொடுக்கப் - பகவதிதேவி - சாமளரூபனையடுக்க
இகமதில்நாங்கள்கோரும் - கௌரிதேவி - எம்பெருமானைத்தாரும்
கருணைசெய்து ... ... (காத்)

௫. இந்தப்படிநீசெய்ய - இன்பமாய் - இடைப்பெண்களும்பைய
விந்தையாகப்பூசை - சொல்லியபடி - விரும்பிச்செய்திடலாசை
இதனாலே ... ... (காத்)

௬. கந்தமலர்நாளும் - எங்கட்குக் - கருகிப்போவதுகேளும்
முந்துலட்சுமிநாதன் - கைப்பட்டால் - மோகந்தீரும்நீதன்
வரல்வேண்டும் ... ... (காத்)



வசனம்.

விரதத்தைப் பூர்த்திசெய்யும்படிக் கோபிகாகன்னிகைகள் யாவரும் ஒன்றாய்ச்சேர்ந்து முப்பத்தோராந்தினத்தில் தீர்த்தமாடி யிருக்கையில் கண்ணன் அவர்களுடைய வஸ்திரங்களையெல்லாம் வாரிப்போகக் கரையேறியபெண்கள் கூறைகளைக் காணாமல் கிரமமாக அவரவர் உடுத்தியிருந்த வஸ்திரங்களின் பேரைச்சொல்லி வாடுதல்.

விருத்தம்.

விரதமதைக் கன்னியர்கள் விருப்பமாக
விபுவான கண்ணனைத்தாம் தோய்வமென்று
சரதமுடன் முப்பதுநாள் நடத்திவந்து
சம்பிரமமாய்க் கடையில் பூர்த்திபண்ண
வரதனது கீர்த்தனத்தைப் பாடியாடி
வந்தவருந் துகில்களைந்து கரைமேல்வைத்து
நிரதிசகி யோடுநதி யாடக்கிருஷ்ணன்
நீடினான் சேலையெடுத் தோடினானே. (௱௭௧)

இராகம் - முகாரி - ஏகதாளம்.

கண்ணிகள்.

௧. நாணயப்பட்டுச்சேலை - அக்கா என்னது
நாகமடிரவுக்கை
காணோமென்று வீட்டுக்குப்போனால்
கணவனடிப்பானே ... ... ... ... *

௨. பச்சைவர்ணச்சேலை - அக்கா என்னது
பாதிரிப்பூரவுக்கை
மச்சிநாமும் வீட்டுக்குப்போனால்
மாமியடிப்பாளே ... ... ... ... *

௩. முத்துவர்ணச்சேலை - அக்கா என்னது
மொக்குமல்லிரவுக்கை
வைத்துமறந்தே னென்றுசொன்னாலும்
மாமனடிப்பானே ... ... ... ... *

௪. சந்திரகாவிச்சேலை - அக்கா என்னது
சரிகைப்பூரவுக்கை
விந்தையாயெவ்விதம் நாமும்நடந்து
வீட்டுக்குப்போவோமே ... ... ... *

௫. மதுரைத்தோம்புசேலை - அக்கா என்னது
மல்லிகைப்பூரவுக்கை

இதரமானவர் இதுதனைக்கேட்டால்
ஏசிச்சிரிப்பாரோ ... .... ... ... *

௬. கடலைபட்டாணிச்சேலை - அக்கா என்னது
காயாம்பூரவுக்கை
நடலையைச்சொல்ல வீட்டுக்கு எப்படி
நாம்போய்ச்சேருவமே ... ... ... *

௭. சொர்னநிறச்சேலை - அக்கா என்னது
சுந்தரமாம்ரவுக்கை
மர்மத்தையென்னென்று பேசியேவீட்டின்
மார்க்கம்நடப்போமே ... ... ... *

௮. கிளிமூக்குச்சேலை - அக்கா என்னது
கேன்காப்புரவுக்கை
வெளிகளில் எப்படி நடந்துநாமும்
வீட்டுக்குப்போவோமே ... ... .... *

௯. குங்குமப்பொடிச்சேலை - அக்கா என்னது
குத்தினிப்பட்டுரவுக்கை
இங்கேயிழந்து வீட்டுக்குப்போனால்
இளையவரேசுவரோ ... ... ... ... *

௰. ஆத்திப்பழுப்புச்சேலை - அக்கா என்னது
அரவிந்தமலர்ரவுக்கை
நாத்திமார்களும் இதுதனைக்கேட்டால்
நாணயம்பேசுவரோ ... ... ... ... *

௰௧. விசிறிப்பட்டுச்சேலை - அக்கா என்னது
விசித்திரமானரவுக்கை
சுசியாம்உடையற்று வீட்டுக்குப்போனால்
சொல்லிப்பழிப்பாரோ ... ... ... *

௰௨. மேகவர்ணச்சேலை - அக்கா என்னது
மின்னல்போன்றரவுக்கை
வேகமாகநாம்வீட்டுக்குப்போனால்
விருத்தரும்நகைப்பாரோ... ... ... *

௰௩. இந்திரவர்ணச்சேலை - அக்கா என்னது
லவுங்கப்பொட்டுரவுக்கை
சுந்தரிமார்கள் துணிகளையிழந்து
துயரப்படலாச்சே ... ... ... *

௰௪. ஜகமிரட்டிச்சேலை - அக்கா என்னது
ஜாஜிப்பூரவுக்கை



இகமதில்துணிகள் இல்லாமலெப்படி
ஏகலாம்வீட்டுக்கே ... ... ... *

௰௫. மஞ்சள்நிறச்சேலை - அக்கா என்னது
மத்தாப்புகோர்ரவுக்கை
மிஞ்சிவிட்டோமென்று வீட்டுக்குப்போனால்
மெல்லியர்ஏசுவரோ ... ... *

௰௬. பவளநிறச்சேலை - அக்கா என்னது
பாரிசாதரவுக்கை
தவசிகள்போலேவஸ்திரமில்லாமல்
தாண்டுவதாவனத்தை ... ... ... *

௰௭. கொச்சிப்பட்டுச்சேலை - அக்கா என்னது
குங்குமப்பூரவுக்கை
உச்சிதமாய்நிர்வாணிகள் எப்படி
ஓடுவோம்வீட்டுக்கே ... ... *

௰௮. இப்படியாகநின்று - அவர்களும்
ஏங்கியேஜலந்தனிலே
மைப்படிகண்ணாள் - லட்சுமிநாதனை
மனதில்நினைத்திருந்தார் ... ... *

வசனம்.

கோபிகள் சுற்றிப்பார்த்துக் கண்ணனைத் தங்கள் சேலைகளுடன் குருந்தின்மே லிருக்கக்கண்டு வாதாடுதல்.

விருத்தம்.

ஆடிஜல வசந்தங்க ளானபின்பு
அணைமீதி லிட்டதுகில் காணாதாலே
வாடியிந்தப் புடைவைகளை வாரிப்போன
வல்லவன்தா னென்று சுற்றிப்பார்க்க
நாடியங்கு அடுத்திருந்த குருந்தைமேலே
நகைமுகமா நாரணனு மிருக்கக்கண்டு
கூடியிந்தப் பெண்களுமே கிட்டிநின்று
கூசுவார் காருமெனப் பேசுவாரே. (௱௭௨)

இராகம் - எதுகுலக்காம்போதி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. கோழியழைப்பதற்குமுன்னம் - எல்லோர்களும்
குளிர்ந்தநீராடியிருந்தோம்
ஆழியங்கையனேயனியாயமாயெங்கள்
ஆடையெடுப்பதநியாயமா ... ... ... *

௨. நியாயமில்லாதகாரியம் - ஒருபோதும்
நான்செய்யேனந்தவீரியம்
மாயவதாரனைமனதில்நினைந்துநீங்கள்
மடுவில்குளிக்காலாமா... ... ... ... *

௩. அதுவும்புகழ்ந்துநாங்கள் - யமுனையில்
அனைவரும்நீராடையில்
மதுவுந்துந்துளவணிமார்பனேயெங்கல்
வஸ்திரம் எடுக்கலாமா ... ... ... *

௪. வஸ்திரம் எனக்கேதுக்கு - எல்லீர்களும்
வந்துகரைமேலுக்கு
அஸ்தத்தைகூப்பியேயென்றனைச்சேவித்தால்
ஆடைகள்தருவேன்பெண்காள்... ... ... *

௫. எல்லேயிதென்னஇளமை - யமுனையில்
எல்லவருங்குளிக்கையில்
சொல்லாமலேயெங்கள் துகிலையெடுத்துப்போன
துரையேயுனக்குத்தருமமா ... ... ... *

௬. தர்மமோவென்றுகேட்டீர் - என்னுடன்
தர்க்கமும்பேசுகிறீர்
அதர்மமாகவிடையில் ஆடையில்லாமலே
ஆற்றில் இறங்கலாமா ... ... ... *

௭. பரக்கவிழுத்துப்பட்டை - யமுனையில்
பரிந்துஸ்நானஞ்செய்கையில்
இரக்கமில்லாமலே யெங்கள் சேலையை
எடுத்துநீபோகலாமா ... ... ... *

௮. போகலாமாவென்றுகேட்டீர் - இப்படி
புனையவுமெங்கேகற்றீர்
ஏகமாகவந்து என்றனைக்கும்பிட்டு
எடுத்துக்கொள்ளுங்கள் பெண்காள் ... ... *

௯. காலைப்பொழுதுதன்னில் - யமுனையில்
கன்னியர்நீராடையில்
கோலச்சிற்றுடையைக் கொண்டுகுருந்தினிற்
கொம்பிலேகட்டலாமா ... ... ... *

௰. கட்டலாமாமாவென்றுகேட்டீர் - எல்லோரும்
கருத்திலென்றனைவைத்திர்
கிட்டியேயென்றனைச்சுற்றியேகரங்களை
தட்டினால்தாரோன்பெண்காள் ... ... ... *



௰௧. தடத்திற்றுமைப்பொய்கை - தடாகத்தில்
தையலர் ஆடையிலே
படத்துமேலேநடித்தபாலனேயெங்களைப்
பங்கப்படுத்தலாமா ... ... ... *

௰௨. பங்கப்படுத்தவில்லை - எல்லோர்களும்
பார்க்கும்படியாமுன்னே
அங்கந்தெரியவிங்கே அங்கைமேலேதூக்கி
அனைவருஞ்சேவியுங்கள் ... ... ... *

௰௩. நீர்தனிலேயிறங்கி - கன்னியர்
நீராடியிருக்கையிலே
பேரணைமேல்வைத்தகுகிலையெடுத்துப்போன
பேராயிரனேயென்றார் ... ... ... *

௰௪. பேராயிரனென்றீர் - பெண்களெல்லாம்
பேசிகதியில்நின்றீர்
யாரைநினைந்திந்தகோணபுகள்சொற்றீர்நீர்
அறியச்சொல்லுங்கள்பெண்காள் ... ... *

௰௫. மாமியர்பந்தாஉவைவிட்டு - யமுனையில்
மங்கையர்நீராடையில்
காமிபோலவந்துகன்னியராடையைக்
களவாடிப்போகலாமா ... ... ... *

௰௬. களவாடவரவில்லை - பெண்களா
கரைதனிலேறிவந்து
உளவுசொன்னனன்டையுங்கள்சேலையை
ஒப்புக்கொள்வீர்மின்காள் ... ... ... *

௰௭. கஞ்சனைக்கொல்லவென்று - கருத்தினில்
கபடங்களும்நினைந்து
வஞ்சனையாகவேவந்தவனேயெங்கள்
வார்த்தைக்கிரங்குமென்றார் ... ... ... *

௰௮. வார்த்தைக்கிரங்கென்றீர் - வஞ்சியரே
வந்துகரைமேல்நின்றீர்
ஆர்த்துஆனந்தமாய் அஸ்தங்களைநீட்டி
ஆடைகள்கொள்ளும்பெண்காள் ... ... *

௰௯. கன்னியருங்கூடிச் - சொல்லியபடிக்
கரைமேலேவந்து

சென்னிமேற்கையைத்தூக்கியேசேவித்துச்
சேலையைத்தாருமென்றார் ... ... ... *

உ௰. தாருமென்றவரைக்கண்டு - கண்ணனும்
தன் உள்ளமுங்களித்துக்
கோரிகைகள்செய்தவிரதமும்பூர்த்தியாய்
குதூகலமாயிற்றென்றார் ... ... ... *

வசனம்.

கண்ணன் நியமனப்படிக் கன்னியர்கள் கரையேறிக் கூறைகளைத் தரும்படிக் கேட்குதல்.

விருத்தம்.

தடநதியில் நீராடும் ஸ்திரீகளெல்லாம்
சாமியுடன் வாதாடிக் கரைமேல்வந்து
கடப்பமர மேலிருக்குங் கண்ணன் தன்னைக்
கண்டந்தப் பெண்களெலா மெதிரிற்சென்று
வடமதுரை தனிலுதித்த மாயன்பேரை
வாயாரச் சொல்லிமன முருகிநின்று
இடைப்பெண்கள் இருகரமுங் குவித்துத்தூக்கி
இணங்கினர் துகில்கேட்க வணங்கினரோ. (௩எ௰)

இராகம் - புன்னாகவராளி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. பேதையர்கள் நாங்களய்யா
பெண்சேலைத்தாருந்தய்யா
சோதைமைந்தாவுன்றன்கையால்
சொந்தமாகநாமுய்ய ... ... ... *

உ. சொந்தமானஎங்கள்துகிலைத்
தாராவிட்டால் ஒழுகிலே
நந்தகோபரிடத்திற்சொல்வோம்
நாங்களெல்லோரும்வெல்வோம் ... ... *

௩. கள்ளமில்லாமலேபாரும்
கட்டுந்துகில்தாரும்
உள்ளந்தனிலேமகிழ்வோம்
உத்தமனேபுகழ்வோம் ... ... ... *

௪. வெள்ளாட்டிவேலைசெய்வோம்
வித்தகனேயுய்வோம்
வள்ளலேயெங்கள்மானங்காரும்
வடிவழகாநீரும் ... ... ... ... *



௫. ஜாலமில்லாமலேநீயும்
சாமியெங்களைத்தோயும்
கோலமுடன்எங்கள்பட்டு
கொடுத்திடும்மர்மம்விட்டு ... ... ... *

௬. குளிரினால்மிகவும்நொந்தோம்
கும்பிட்டும்மைச்சேர்ந்தோம்
தளரும்இந்தப்பெண்களைக்கண்டு
தயவுசெய்வீரென்று ... ... ... *

௭. குருந்து தன்னைவிட்டிறங்கி
கோபிகளை நெருங்கி
மருந்தளித்தகையாவாரும்
மங்கையர்துகில்தாரும் ... ... ... *

௮. பக்ஷம்எங்கள்மேலேவைத்து
பரவசமாயுற்று
லக்ஷ்மிநாரணனேகேளும்
பக்ஷிவாகனஆளும் ... ... ... ... *

வசனம்.

கண்ணன் கோபிகாஸ்திரிகளுக்குச் சேலைகளைக்கொடுத்து அவர்கள் விரதங்களைமெச்சுதல்

விருத்தம்.

கெஞ்சியே மாதர்களுங் கேட்டிருக்கக்
கிருஷ்ணனுமேயவரிடத்திற் கிருபையாக
வஞ்சியர்க ளெல்லாரு மருகிற் சேர
வரவழைத்து வஸ்திரங்களுங் கொடுத்துக்
கொஞ்சியே யாடவர்தம் மனம்போற் செய்து
கோபியர்க ளனுதாபந் தீர்த்துமக்கு
அஞ்சிவரும்படிப் பண்ணீர் எவருமென்று
அளித்திட்டார் வரமதனைக் களித்திட்டாரோ. (௩எக)

இராகம் - நாதநாமக்கிரியை - அடைதாளம்

கண்ணிகள்.

க. பெண்களா கேளும்உங்கள் விரதத்தைப்
புகழ்ந்தேன் மனமகிழ்ந்தேன்
சென்னமா யென்னைக் கூடியணைகுவீர்
தேவிகாள் என்றன் ஆவிகாள் ... ... *

௨. திங்கள் முப்பதுந் தீர்த்தமாடினீர்
தேடினீர் என்னைப் பாடினீர்
மங்களம் உண்டாகுஞ் சொன்னேன்
மங்கைகாள் இளங்கொங்கை காள் ... ... *

௩. வருத்தவித்து முளைக்குமோ இனி
எண்ணிலே யிந்த மண்ணிலே
நிறுத்தினீர் என்னைக்கருத்து தன்னிலே
ஞானிகாள் என்றன் மேனிகாள் ... ... *

௪. கரங்க ளிரண்டையுஞ் சேர்த்துத் தூக்கினீர்
கண்களா இடைப் பெண்களா
வரங்கொள் இந்த இரவு தன்னிலே
வாருங்கள் என்னைச் சேருங்கள் ... ... *

௫. பட்டப்பகலில் சேரக் கூடுமோ
பாவைகாள் இதழ்கோவைகாள்
கெட்டகாரியமாகுமேயது
கேளுங்கள் கொஞ்சந்தாளுங்கள் ... ... *

௬. கொண்டபுருஷன் அண்டைதன்னிலே
கூடுங்கள் நீங்கள் நாடுங்கள்
மண்டலத்திலே நீதிசெய்குவீர்
மான்களா வொழுகுந்தேன்களா ... ... *

௭. சகிகளாநீங்கள் நோற்றநோன்பையுஞ்
சகித்தேன் மனம்வகித்தேன்
அகிலலோகநாதனுங்களோ
டாடுவார் என்றுங்கூடுவார் ... ... *

௮. அந்திநேரமாச்சுதிப்போது
அன்னங்காள் என்றன் சின்னங்காள்
உந்திபூத்தவன் உரையை நீங்களும்
ஒல்லுங்கள் நீங்கள் சொல்லுங்கள் ... ... *

௯. இக்ஷணந்தனில் என்றன் வார்த்தையை
யேற்றுங்கள் நீங்கள் போற்றுங்கள்
லக்ஷ்மிநாயகன் அருளால் வீட்டுக்குச்
சேருங்கள் நின்றுபாருங்கள் ... ... *

வசனம்.

கண்ணன் நியமனப்படி வீடுசேர்ந்த கோபிகா ரத்தினங்களை மாமிமார்கள் இந்நேரம் என்னசெய்தீரென்று கேட்குதல்.



விருத்தம்.

நேமியங்கைய னியமனமும் பெற்று
நிதியடைந்தார் போலவே களிப்பில்மூழ்கிச்
சாமியது திருவடியை மனத்திருத்திச்
சம்மதமாய்த் தங்களிருப் பிடத்தைநாடிக்
காமிகளும் அவரவர் வீட்டுக்குட்சென்று
கலந்துதங்கள் கிளையோடு மருவிநிற்க
மாமிகளும் மருமகளை மருண்டுநோக்கி
வாதிப்பார் சொல்லமனஞ் சோதிப்பாரே. (௱௭௨)

இராகம் - அடாணா - சாபுதாளம்

பல்லவி.

பெண்ணேயங்கே போனவகையென்னடி
பொல்லாதகண்ணனிருக்கின்ற புன்னைவனந்தனிற்
பெண்ணேயங்கே போனவகையென்னடி

அநுபல்லவி.

அந்நேரத்திலேயெல்லவருங்கூடி
யாசையுடனேயமுனைக்கரைதேடி ... ... (பெண்)

சரணம்.

தசரதபாலனாய்வந்துபிறந்ததிதீங்குகள்செய்தவண்டி - யந்த
தாடகையெனும்பெண்ணைத்தருணத்திலம்பினால்தப்பாமலெய்தவண்டி [டி
ஓடியேவந்தஅழகானமானின் உயிர்தன்னைக்கானகந்தன்னிற்கொன்றவண்
கூடியவிற்குதையாலேமுதுகினில்கூசாமற்கூனியையன்றிடித்தவண்டி.()

வரும்வழிதன்னிலேபரசுராமனைக்கண்டுவாதித்துநின்றவண்டீ - அவர்
தரும்அந்தவில்லைவாங்கியேகையால்தவபலங்கொண்டவண்டீ [டீ
சூர்ப்பநகியுடைமூக்கைவனத்திலே சூதாகத்தம்பியைக்கொண்டரிந்தவன்
நேர்ப்பானவாலியை முன்னின்றுகொல்லாமல் நேரும்மரத்தில் மறைந்து
[கொன்றவண்டீ (பெண்)

நந்தன்மனைதனில்வந்துவளர்ந்ததிவிந்தைகள்பண்ணவண்டி - இங்கே
சிந்தைமகிழ்ந்தென்றும்க்ஷீரந்ததிவெண்ணைத்திருடியேயுண்டவண்டீ
கோவுகள்மேய்த்துக்கோபாலரோடேகூடியேகொள்ளையடித்தவண்டீ
தாவியேவந்தபூதகிமுதலோரைத்தக்ஷணம்புவியிற்றான்முடித்தவண்டீ. ()

தையல்கள்எல்லோரைக்கண்ணால்மயக்கியேஜாலங்கள்செய்தவண்டீ-தன்
கைகளினாலேகட்டியணைத்துப்பெண்காமத்தைக்கொய்தவண்டீ
சக்ஷியாகவேவந்துஎதிர்நின்றுகன்னிகளைமிகவும்ஏசுவண்டீ [பெண்
லக்ஷ்மிநாதனுந்தானென்றுசொல்லியே லீலாவினோதம்மிகவும்பேசுவண்டீ

### வசனம்.

### கோபிகாமணிகள் மாமியர்க்கு விடைகூறுதல்.

### விருத்தம்.

நேரவே மருமகளைக் கண்டதட்டி
நேரமேன் சொல்லுமென்று கேட்டுத்தூற
ஆரவே பெண்கள்மிகப் பயந்தாற்போல
அடுத்திருந்த மாமியரைப் பார்த்துநின்று
தேரவே மார்கழிநீ ராடப்போனோம்
திருக்கண்ணன் தேடியுடன் வந்துஅங்கே
சேரவே சேலையெடுத் திட்டசேதிச்
செப்புவோம் உங்கள்முன்னே ஒப்புவோமே. (௱எ௩)

### இராகம் - ஆகிரி - ஆதிதாளம்.

### பல்லவி.

மாமியார்காள்கேளீர் - எங்களுரையை
மாமிமார்காள்கேளீர்

### அநுபல்லவி.

சாமியைநோக்கி எண்ணமுங்கடிய
சகலவைபவம்நடந்ததைமுடிய ... ... ... (மாமி)

### சரணம்.

௧. மாமிமார்களா சொல்கிறோம் கேளும்
மார்கழிநீராடப் போனமிந்நாளும்
கார்முகில்வண்ணனைக் கருத்தினில்வைத்தோம்
கன்னிகளெல்லோரும் நோன்புகள்நோற்றோம் ... (மாமி)

௨. உதையகாலத்தில் பாங்கியர்பந்து
உன்னிதமாய முனநதிவந்து
சாதகமாகவே சகலருங்கூடி
தாமோதரனது லீலையைப்பாடி ... ... ... (மாமி)

௩. ஆடைகள்அவிழ்த்துக் கரைமேல்வைத்து
ஆனந்தமாகவே கரங்களைக்குவித்து
ஓடைதன்னில் நீராடியிருந்தோம்
உத்தமனைமனம் நினைத்துச்சிறந்தோம் ... ... (மாமி)

௪. அந்தவேளையில் அச்சுதன்கண்டு
அம்மணத்தோடே குளிக்கிறாரென்று
மந்தகாசனுந்துகில்களை வாரி
வந்ததுதெரியாமற் போயினன்மீறி ... ... (மாமி)



௫. குளித்தெழுநாங்கள் கரைமேல்பார்த்தோம்
கூறையைக்காணத் தேடியலுத்தோம்
ஒளிதருங்கண்ணனைக் குருந்துமேற்கண்டோம்
ஒருமையாய்துகில்களைத் தரும்படிவிண்டோம் ... (மாமி)

௬. அடப்பமரத்துமே லாடையைக்கட்டி
அனைவரும்வாவென அஸ்தத்தைக்கொட்டி
இடைபெண்களென்றே பரிகாசஞ்செய்தான்
இந்திரஜாலம் மெத்தவும் பெய்தான் ... ... (மாமி)

௭. சோதைதிருமகன் மேலேநின்று
துகில்களைத்தருவேன் கொள்ளுங்களென்று
கோதையர்களை யிருகரங்களைத்தூக்கிக்
கும்பிடச்சொன்னான் அவன்தனை நோக்கி ... (மாமி)

௮. சீதரன்சொன்ன நியமனம்பெற்று
சிரசுமேலேயெங்கள் கரங்களைவைத்து
மாதவன்பதத்தைப் பணிந்துடைவாங்கி
வந்தோமிவடத்தில் மானமும்நீங்கி ... ... (மாமி)

### வசனம்.

### கண்ணன் தோழருக்குத் தாங்களிருக்கும் வனப்பெருமையைக் கூறுதல்.

### விருத்தம்.

இந்தவகைப் பெண்களெலா மாமியர்க்கு
இதவாக மாதவன்பே ருரைத்திருந்தார்
அந்தவிடந் தனைவிட்டு அனந்தநாமன்
அண்ணனோ டடுத்தவனத் துள்ளேசென்று
விந்தையாய் விளங்குமாரண்ணியத்தில்நின்று
விருக்ஷங்க ளதிசயத்தைச் சுட்டிமுற்றும்
சொந்தமுறுந் தோழருக்குக் கையாற்காட்டிச்
சொல்லுவா ராச்சரியம் விள்ளுவாரே. (௱எ௪)

### இராகம் - இங்கிலீஷ் - வர்ணமெட்டு - ஆதிதாளம்.

### பல்லவி.

தோழார்களாவாருங்கள்
தோகைமரத்தைப்பாருங்கள்

### அநுபல்லவி.

௧. தாழமாய்ப்புவிபரியந்திரம்
தழைந்திருக்குஞ்சரியந்திரம் ... ... (தோழ)

௨. வாராய் ஸ்ரீராமன் முதலாய் - வாராயர்ச்சுனனே நேராய்
பாராய் விருக்ஷங்களுடை - பலன்கள் குசுமங்கள் சீராய் (தோழ)

௩. காய்கனியிலே முதலாய்க் - கலந்துபல்லவத்துடனே
நேயமாகவே மரங்கள் - நிறைந்து நிழலித்துடனே ... (தோழ)

௪. காற்றுமழை வெய்யில்கானல் - ஏற்றுமரங்களுய்யுது
வேற்று மனுஷருக்கிவை - மிகவும் உபகாரஞ் செய்யுது... (தோழ)

௫. சிஷ்டர்களை யாசிரயித்த - சேதனரைத் தோயுது
இஷ்டமாக அவர்களுக்கு - ஏற்குஞ்சுகங்களீயுது ... ... (தோழ)

௬. மனம்புத்தி சித்தவிர்த்தி - வாக்கினாலே வாழ்த்தியே
தினமும் விருக்ஷபலன்களாலே - தீனர்களை யேத்தியே... (தோழ)

௭. சரசமாக இந்தவனத்தில் - சகலவிபவம் விளங்குது
திருமாலிங்கே வருதாகச் - சிறந்துகாணத் துலங்குது ... (தோழ)

வசனம்.

கண்ணன் கோக்கள் மேய்த்த பெருமையைச் சொல்லுதல்.

விருத்தம்.

காட்டினது வைபவத்தைத் தோழருக்குக்காட்டிக்
கருணையா லுலகளந்த கண்ணனங்கே
கூட்டியே கோபாலர் துதிக்கச்சென்று
கூர்வேற் கண்சோதையு மேகுதுகலிக்கப்
பூட்டிய பூஷணங்களெலா மசைந்தேயாடப்
புண்ணியனுந் தன்னண்ண னருகில்நேர
ஓட்டியே கானகத்தில் பசுக்கள்தம்மை
உகந்திட்டார் மேய்த்து வரமகிழ்ந்திட்டாரே, (௱எ௫)

இராகம் - ஆனந்தபைரவி - அடைதாளம்.

பல்லவி.

மாடுகன்றுகள் மேய்த்தார் கண்ணன்
டிறையோ டிறையோ வென்று
மாடுகன்றுகள் மேய்த்தார் கண்ணன்

அநுபல்லவி.

மாடுகன்றுகள் மேய்த்தார் - மாதவன் கானகத்தில்
நாடும் இடையர்போலே - நாரணனும் வனத்தில் ... (மாடு)

சரணம்

௧. கோலுங் குடையையுங் கைக்கொண்டு - கோபால கிருஷ்ணன்
தோலுந் தோப்பாரத் தோளிற்பூண்டு - காலூன்றியே
மேலும் முரளி யூதிநின்று - விஜயமுடன்



193

மாலுங்கோலமேனி - மகிழ்ந்து இடையனைப்போல்
சீலன்அந்த வனத்தில் - திரிந்து தோழர்களுடன் ... (மாடு)

௨. காடுமேடு பள்ளத்திற்பாய்ந்து - காம்தேனுக்கள்
நாடிபசும்புல்லுகள் மேய்ந்து - நயந்துகன்று
வாடிக் கூவுமென்று சேர்ந்து - வருத்தமாக
ஓடிப்பிரிந்த மாட்டை - தேடியதன் பின்னாலே
ஆடிவெய்யிலில்மேனி - பாடி - டிறே - டிறையோ வென்று (மாடு)

௩. அமுர்தவல்லி அம்புஜவல்லி - அலர்மேல்வல்லி
குமுதவல்லி கோமளவல்லி கோகிலவல்லி
விமலவல்லி விஜயவல்லி - என்றுசொல்லி
கமலவல்லி வாவென்று - கண்ணனங்கே யழைத்து
விமலனங்கே தழைத்து - மெய்யனுங்கான கத்தில் ... (மாடு)

௪. சிறந்துடிறேயென்றுமாடுஓட்டி - சின்மயரூபன்
நிறைந்தமடுவில்நீரைக்காட்டி - நித்தியகல்யாணன்
கறந்துபாலைக்குடத்திற்கொட்டி - கருணாநிதி
அறிந்துமாட்டைமடக்கி - அனைவர்களையுஞ்சேர்த்து
இருந்துநிழல்கள்தம்மில் - பொருந்திதிருமாலங்கே. ... (மாடு)

வசனம்.

தோழர்கள் கண்ணனிடத்தில் தங்களுக்குண்டாகிய பசியைச்சொல்லி முறையிடல்.

விருத்தம்.

மேய்த்துவந்த பசுக்கள்தம்மை மேகவண்ணன்
மேனாட்டார் காணவெகு விநோதமாகக்
காய்த்திருக்குங் கானகத்துத் தருவின்கீழே
கங்கையினற் கரையருகி லேமடக்கி
வேய்த்துளைக் கோலுடைய விண்ணுடுகொடும்
வித்தகனு மனைவருடன் படுத்திருக்க
நோய்த்தரு வெம்பசியதனற் றோழரெல்லாம்
நுணங்கினார் கண்ணனைக்கண் டிணங்கினாரோ. (௱எ௬)

இராகம் - ஸ்ரீராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

கண்ணாநீர் எங்கள் களைதீருமே - இ
கண்ணாநீர் எங்கள் களைதீருமே

அநுபல்லவி.

அன்னனுடனேகாருமே - அன்னந்தாருமே ...

சரணம்.

௧. பசியால் - இளைத்தோம் - களைத்தோம் - தளைத்தோம் - உளைத்தோம்
பங்கயத்தாளா - எங்களையாளா ... ... (கண்)

௨. க்ஷுத்து - தீரும் - நீரும் - வாரும் - பாரும்
சுந்தரத்தோளா - தந்திரத்தாளா ... ... (கண்)

௩. கருணா - நிதியே - கெதியே - மதியே - ஸ்திதியே
கமலக்கண்ணா - கார்நிறவண்ணா ... ... (கண்)

௪. பக்தர் - பாலா - சீலா - லோலா - கோலா
பகரருநீதா - பார்புகழ்நாதா ... ... ... (கண்)

வசனம்.

தோழர்களை யாகஞ்செய்யும் பிராமணர்களிடஞ்சென்று அன்னங் கொண்டுவரும்படித் திட்டஞ்செய்தல்.

விருத்தம்.

ஏகமாய்ப் பசிக்குதெனக் கூடிக்கூறி
இருக்கின்ற தோழர்களை நோக்கிக்கண்ணன்
நாகமேற் சயனிக்கு மகிமையுள்ள
நாரணனா யிருந்துமிகு ஏழைபோல
யாகஞ்செய் யறிவில்லா விப்பிரர்களண்டை
யான்விட்டே னென்றுநீ ரன்னங்கேட்கப்
போகவென வவர்களெலா மோடிநின்று
போற்றினர் தருகவெனச் சாற்றினரோ. ... (௱௭௭).

இராகம் - கலியாணி - சாபுதாளம்.

பல்லவி.

அன்னங்கேளுமென்றார் - கண்ணன்
அண்ணனுடனே நின்றார்

அநுபல்லவி.

அன்னங்கேட்டுத்தண்டு - அந்தவிடத்திலுண்டு
என்னஎங்களைக்கொண்டு - இருக்குஞ்சீலனைக்கண்டு ... (அன்)

சரணம்.

௧. கன்றுமேய்த்துக்களைத்தார்
கண்ணன்ராமன் இளைத்தார்
நின்று இந்த தடத்தில்
நெருங்கியுங்களிடத்தில் ... ... (அன்)





௨. பசிகளாலே பாலாள்
படுத்திருக்கிறார் சீலாள்
விசையாயெங்களையோடி
வேதியர்களைத்தேடி ... ... (அன்)

௩. க்ஷுத்துகளால்சலித்து
தூங்குகிறார்வனத்து
சத்துக்களையடுத்து
சங்கதியைத்தொடுத்து ... ... (அன்)

௪. அன்று உலகமுண்டோன்
அனந்தசயனங்கொண்டோன்
இன்று உங்களைக்கண்டு
ஏகமாகவிண்டு ... ... ... (அன்)

௫. நந்தகோபற்குமைந்தன்
நல்லவர்கட்குச்சொந்தன்
அந்தமாகப்பன்ன
அவர்கள்விரும்பித்தின்ன ... ... (அன்)

௬. வெண்ணெயுண்டவாயன்
விண்ணவர்க்குத்தூயன்
மண்ணையுண்டமாயன்
மங்கைலக்ஷ்மிநேயன் ... ... (அன்)

வசனம்.

வேதியர் கண்ணன் நியமனத்தை மறுத்துச்சொல்லியதைத் தோழர் களுரைத்தல்.

விருத்தம்.

அன்னமிடக் கேட்டவுடன் பாலரங்கு
அவசரமா யந்தணரும் வெளியில்வந்து
என்னவுங்க ளியல்பைநாம் யோசிக்கிலிங்கே
இடையருக்குப் பிடரியிலே புத்தியாகச்
சொன்னவச னப்படிநீர் செய்தீரின்று
சோறிட்டார் சேதமா மென்றுஓட்ட
நன்னயமாய்த் தோழர்களுங் கண்ணனண்டை
நாடினர் செய்திசொலக் கூடினரோ. ... (௱௭௮)

இராகம் - மத்தியமாவதி - சாபுதாளம்.

பல்லவி.

அன்னங்கேட்டோமையா - யாகசாலையில்நாங்கள்
அடித்துத்துரத்திவிட்டார்

அநுபல்லவி.

பின்னமாய்ப்போமென்று பூசுரர்யாகங்கள்
கண்ணனுனுமிடைப்பிள்ளைக்கிடோமென்றார் ... (அன்)

சரணம்.

விந்தையாய்விப்பிரர்கள்பந்திபந்தியாக வேதமுறைகள்செய்கிறார் - அதி
சந்தோஷமாகவேமந்திரங்களோதி சகலாகுதிபெய்கிறார் - அங்கே
வந்தபிராமணரெல்லாம் வாங்குந்தசதானங்கள் வாரிவாரியீகிறார்
அந்தவேளைதன்னில் - அன்னங்கள்யாசித்தோம்
அத்தனைபேர்களும் - அதட்டியில்லைபோவென்றார் ... (அன்)
படுத்திருக்கிறார்பலராமனுங்கிருஷ்ணனும்பாரினிலென்றுகேட்டோம்அவர்
துடித்துப்பசியுடன்களைத்திருக்கிறாரென்று சொல்லியேகூச்சலிட்டோம்- [நீங்கள்
எடுத்து ஒருகவளங்கொடுத்தாற் போதுமென்று எல்லோருந்தெண்டனிட் [டோம்
அடுத்திருந்தவேதியர் - பிடித்துஎங்களைத்தள்ளி
ஆயனுக்கன்னமிடில் - யாகநஷ்டமாமென்றார் ... (அன்)
எப்படிவந்தீரிங்கே எக்கியதீக்ஷதர்கண்டால் இறக்க அடிப்பாரென்றார்- [பொல்லா
தப்பிலிகளாவிந்ததருணந்தனிலேவந்து சத்துசெய்யாதேயென்றார் - இப்
ஒப்புவாரோஹரிஉங்களுக்கன்னமிட்டால் ஓடிப்போநீங்களென்றார்[போ
எப்பிறப்பானாலும் - இடைப்பிறப்பல்லவோ
அப்பனானாலுநாங்கள் - ஒப்பமாட்டோமென்றார் ... (அன்)
பச்சென்றதர்ப்பையும்பாலிகையும்பரப்பி பாங்காய்ஓமஞ்செய்கிறார் - மிகு
உச்சிதமாகவேசமுத்துகளுங்கொணர்ந்து ஓதஓதசகிறார் - அவர்
சொச்சமாகவேசூழ்ந்துஅக்கினிதன்னை சுருதிகள்சொல்லியுய்கிறார்
இச்சையாகவதை - இசைந்தவர்களுமுண்டு
கச்சைலட்சுமிநாதன் - கருணைகிடைக்குமென்று ... (அன்)

வசனம்.

மறுபடியுந் தோழர்களை ரிஷிபத்தினிகளிடத்திற் கனுப்புதல்.

விருத்தம்.

கண்டுவேந்து சொலுந்தோழ ருரையைக்கேட்டுக்
கண்ணனுமவ் வேதியர்மே லிதக்கமாகி
விண்டிழிவாய் விப்பிரரைக் கூறிநிற்க
வேண்டாம்நீர் மறுபடியு மங்கேயன்பாம்
பெண்டுக ளிருக்குமிடம் போவீராகில்
பிரசாதங் கிடைக்குமென் றேயனுப்ப



197

வண்டுவிழி யாரருகிற் சேர்ந்துஅன்னம்
வருந்தினர் இடுகவெனப் பொருந்தினரோ. (௱எக)

இராகம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

எக்கியபத்னிகாளுங்கள் - இடத்தில்ராமகிருஷ்ணருள்
இரந்துவா அன்னமென்றார்

அநுபல்லவி.

சக்கரைக்கையனுந்தமையனுடனேயுண்ண
அக்கரையாகவேயாசிரிதானைநண்ண ... ... ... (எக்)

சரணம்.

௧. ஆதியந்தமற்றோன் அயன்முதலோரைப்பெற்றோன்
ஆயர்களுக்குள்உற்றோன்
வேதியர்பாரியைக்கண்டு - விரும்பியன்னங்கொண்டு
வேகமாகவேயின்று - மெய்யனும்உண்ணவென்று ... (எக்)
பக்தபரிபாலன்பாமரருக்குக்காலன்
பரமகல்யாணசீலன்
உத்தமஸ்திரீகளைக்கண்டு - உகந்துபிரசாதங்கொண்டு
வித்தகனுமின்று - வேண்டியுண்ணவென்று ... (எக்)
௨. பண்டுஉலகம்உண்டோன் - பாலசயனங்கொண்டோன்
பாபபுண்ணியம்விண்டோன்
பெண்டுகளைக்கண்டு - பிரசாதந்தனைக்கொண்டு
கன்றுமேய்த்துநின்று - கண்ணனும்உண்ணவென்று ... (எக்)
௩. அனந்தன்காலிமேய்த்து - அனைவருடனேவாய்த்து
ஆசிரமஞ்சமீபித்து
வனத்திலுங்களைக்கண்டு - வாங்கியன்னங்கொண்டு
வானவர்நாதன்இன்று - வாகாய்உண்ணவென்று ... (எக்)

வசனம்.

ரிஷிபத்தினிமார்கள் கண்ணனுக்கு அசனம் எடுத்தல்.

விருத்தம்.

பாலரிந்த விதமோதரிஷி பத்னிமார்கள்
பரவசமா யவர்தேகக் தமைமறந்து
காலமிது நாம்செய்த தவத்தால்முன்னம்
கைகூடி வந்தபலப் பிராப்தியென்று
கோலமுள வவ்விருவர் தரிசனத்தைதக்
கோரிநாங் காத்திருக்க வனுவிலோதும்

சிலமுள விளங்குமரர் தங்களோடே
சேர்ந்திட்டார் எடுத்துடனே நேர்ந்திட்டாரோ. (௱௮௰)

இராகம் - அசாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

கிருஷ்ணன்அசனங்கேட்டார் - என்றவசனங்கேட்டுப்
பொட்டெனவெழுந்திருந்தார்

அநுபல்லவி.

கெட்டபொருளிங்கே - கிட்டிவந்ததுபோலே
மட்டற்றசந்தோஷ - மயக்கப்பெருக்கினாலே .... ... (கிரு)

சரணம்.

௧. மரணம்அடைந்தவூரில் - பிராணசஞ்சீவிநேரில்
வந்ததுபோலவர்க்கு - மாதவனைக்காண
தருணம்கிடைத்ததென்று - சகலருங்கூடிநின்று
சமுசாரத்தாசைவிண்டு - சந்தோஷங்கள்கொண்டு ... (கிரு)

௨. சவலைப்பிள்ளைகள்சென்று - தாய்முகந்தன்னைக்கண்டு
ஸ்தன்னியபானமுண்டு - தாபந்தீர்ந்ததுபோல
கவலைகளுந்தீர்ந்து - கன்னிமார்களுஞ்சேர்ந்து
கண்ணன் தன்னையுகந்து - கடுகியேபோவோமென்று ... (கிரு)

௩. பிறவிக்குருடனுக்கு - பிறங்கக்கண்ணவனுக்கு
பெருமையாகக்காண - பெருமானளித்ததுபோல்
நிறமுள்ளநாதனை - நித்தியானந்தனை
நிறுத்திமனதுதன்னில் - நேரிலேபோவோமென்று ... (கிரு)

௪. பக்குவஅன்னமும் - பலவிதஅபூபமும்
பண்ணும்பாயசமும் - இன்றுசபலமென்று
சர்க்கரைப்பந்தலிலே - தேன்மாரிபொழிந்தாற்போல்
சந்தோஷமாகவிந்த - சமையத்திற்போவோமென்று ... (கிரு)

வசனம்.

வேதியர்பத்தினிகள்கண்ணபிரானுக்குபிரசாதம்எடுத்தல்

விருத்தம்.

கிஷ்டனுமசனமிடக்கேட்டாரொன்னுங்
கேளிக்கையாலவர்களெழுந்திருந்து
கஷ்டமிகுசமுசாரபந்தந்தன்னை
கன்னியர்கள்மறந்ததிகவினையமாக
இஷ்டதெய்வமதைக்காணத்துரிதமாக
இதயத்திலவன்புகழைநினைத்துப்பொங்கி



199

அஷ்டவயிஸ்வரியமன்றுகண்டாற்போல
அடுத்திட்டாரறுசுவையுமெடுத்திட்டாரோ (௱௮௧)

இராகம் - முகாரி - ஆதிதாளம்.

பல்லவி.

அசனம்எடுத்தார் பத்தினிமார்கள் - ராமகிருஷ்ணனுக்கு
அசனம்எடுத்தார்பத்தினிமார்கள்.

அநுபல்லவி.

224906.

அசனம்எடுத்தார்கள் - அங்குள்ளஸ்திரீகள்
விசனங்கள் தீர்ந்தந்த - வேணுநாதனுக்கு
நிசபக்தியுடன் - நீலமேகனுக்கு
பசியென்றுரைத்த - வசனத்தைக்கேட்டு ... ... (அச)

சரணம்.

௧. செந்நெல்அரிசிவடிசில்துய்யும் - சிறுபருப்பும்
அன்றுருக்கினபுதுநெய்யும் - ஆடைத்தயிரும்
கண்ணனுக்கென்றவர்கள்செய்யும் - கனிவாக
போனகம்பொரிக்கறி - பானகம்பாயசம்
தேனுடன்சர்க்கரை - தேங்காய்கனிவர்க்கம்
பாலுடனவநீதம் - பலபலவிதங்களும்
கானகத்திலிருக்குங் - கண்ணபிரானுக்கு ... ... (அச)

௨. பச்சடிபதினெட்டுவிதமும் - பால்பொரியும்
உச்சிதகூட்டுகளிதமும் - உகந்துகண்ணன்
மெச்சுமோர்குழம்புசுதமும் - மிகஇஷ்டமாய்
பக்ஷணம்போக்கியமும் - பக்குவஅன்னமும்
லக்ஷணமாகவே - நிறைந்தஓகோரையும்
பச்சென்றவூர்காய் - பலபலவிதங்களும்
வைத்துஅப்பளம்வடை - வற்றல்களுடனே ... ... (அச)

௩. கதலிபத்திரத்துடன்தொன்னையும் - கட்டுகட்டாக
இதமாம்பத்திரங்கள்மின்னவும் - யாகசாலை
படியுங்கடந்தெவர்தம்மையும் - வெறுத்து
சந்தனகுசும்பதாம்பூலம்எடுக்க
விந்தையாகக்கொண்டுவீசியவர்நடக்க
வந்துகணவர்கள்மார்க்கந்தனிற்றடுக்க
ஒன்றுஞ்சட்டைபண்ணமல்-ஓடிக்கண்ணனைச்சேர ... (அச)

௪. சென்றந்தபெண்களும்மீண்டார் - நேத்திரவழியால்
ஸ்ரீகிருஷ்ணனைநேரிற்கண்டார் - அண்டையில்நின்று
சயனித்திருக்குஞ்சேவைபூண்டார் - தெண்டனிட்டு

அஸ்தங்களைச்சகிகள் - தோளினில்வைத்து
மச்சாவதாரனை - மனதிலேயுற்று
பச்சைப்பல்லவத்தாலே பணிதிகள்தரித்த
லக்ஷ்மிநாதனை - அடிக்கடிஸ்மரித்து ... ... ... (௮௪)

வசனம்.

அசனங்கள் கொண்டுவந்த ஸ்திரீகளோடு க்ஷேமாதிசயங்களைக்கேட்டு விசாரித்தல்.

விருத்தம்.

அசனங்க ளெடுத்துவந்த அன்னமுங்கள்
அகங்களிலே யுள்ளசுக க்ஷேமஞ்சொல்லும்
விசனங்கள் தீர்த்திந்தத் துலையதான
விரிவாகு மாரண்ணியம் வந்ததேது
தசனதவஞ் செய்திட வல்லவர்களான
தயாளுக்க ளறிவிலுடன் கோபிப்பரென்ற
வசனத்தைக் கேட்டந்த மாதரெல்லாம்
மயங்குவார் எதிர்நின்று தயங்குவாரோ ... (௱௮௨)

இராகம் - சாவேரி - ஏகதாளம்.

கண்ணிகள்.

௧. தயங்கிநின்றபெண்களை - தாமோதரனுங்கண்டு
தனியாகஇங்குவரலாமா - உங்கள்
பதியிருக்குஞ்சாலைக்குப்போங்கள் ... ... ... *

௨. பதியும்நிதியும்கல்ல - கெதியும்எங்கட்குநீரோ
பிரசாதங்கொண்டுவந்தோம்சுவாமி - நீரும்
பசிதீரவேயுண்ணுஞ்சுவாமி ... ... ... *

௩. பசிகள்தீரவிந்தப் - பசுகளிடத்திலே
கொடுத்தனுப்பவுங்கூடாதோ - பெண்காள்
எடுத்துஇங்கேவரலாமோ ... ... ... *

௪. எடுத்துவந்ததினாலேகிடைத்ததுமதுசேவை
தடுத்திடவேண்டாம்நீருஞ்சுவாமி - எங்கள்
தாபங்களைத்தீருஞ்சுவாமி ... ... ... *

௫. தாபந்தீர்க்குங்கணவர்யாகஞ்செய்திருக்கிறார்
போகம்புஜிக்கவங்கேபோங்கள் - பெண்காள்
யாகம்நிறைவேற்றப்போங்கள் ... ... *

௬. யாகமும்போகமும்தேகம்எங்கட்குநீரோ
யாகவேயிங்குவந்தோஞ்சுவாமி - நீருங்
கோபஞ்செய்யவேண்டாஞ்சுவாமி ... ... ... *



201

௭. கோபம்எந்தனுக்கேது - குலசிரேஷ்டாளுங்கள்பர்த்தா
சபித்திடுவார்அங்கேபோங்கள் - பெண்காள்
தவித்திடுவார்அங்கேபோங்கள் ... ... ... *

௮. சாபவிமோசனற்குசாபபாபங்களுண்டோ
சங்குசக்ரனன்றோசுவாமி - நீரும்
சதுர்முகன்பிதாவன்றோசுவாமி ... ... ... *

௯. சதுர்முகன்பிதாவென்று - சரியாய்நீங்களறிந்தீர்
சடங்குசெய்பவரறிவாரோ - அந்த
திடங்கொள்வேதியரறிவாரோ ... ... ... *

௰. வேதியராலென்னவேதங்கற்றாலுமென்ன
வித்தகன்உன்னையறியாதார் - சுவாமி
கர்த்தனென்றுன்னையறியாதார் ... ... ... *

௰௧. கர்த்தனையறியாரென்று - பர்த்தாவைப்பழிக்கிறீர்
பத்தினிமார்கட்கிதுநியாயமா - பெண்காள்
உத்தமிகட்கிது நியாயமா ... ... ... *

௰௨. நியாயமாவென்றுரைத்தீர் - நாராயணனேநீரும்
நயந்துஎங்களைக்காருஞ்சுவாமி - இனி
பயங்கள்தம்மைத்தீருஞ்சுவாமி ... ... ... *

௰௩. பயங்களுங்களுக்கேது - மயங்கவேண்டாம்நீங்கள்
பர்த்தாவிலுந்தெளிந்தீர்போங்கள் - பெண்காள்
தெரிந்ததுங்கள்சித்தம்போங்கள் ... ... ... *

௰௪. தெரிந்ததும்முடையசெயலேயல்லால்வேறு
செய்கையொன்றுமறியோஞ்சுவாமி - இப்போ
மகிழ்ந்ததுமதுசேவைசுவாமி ... ... ... *

௰௫. மகிழ்ந்தோமென்றுரைத்தமங்கையர்களைக்கண்டு
மாதவன் அன்னம்வாங்கிக்கொண்டார் - அப்போ
மாறுவரங்களீய்ந்துநின்றார் ... ... ... *

௰௬. நின்றகண்ணனைக்கண்டு - நெருங்கியேகைகுவித்து
நிஜலட்சுமிமார்பன்விடைகொண்டார் - பெண்கள்
நேசமாய்ப்பதியிடஞ்சென்றார் ... ... ... *

வசனம்.

கண்ணன் தோழர்களுடன் அன்னமுண்ணுதல்.

முடுகு - விருத்தம்.

தொண்டுசெய் ஸ்திரீகளையொன்று முறையாவிப்பிரர்
தொடர்ந்துயாகம் முடித்தார்

கண்டொரு மடக்கையதில்கொண்டு அரியையமனதில்
கர்மதேகம் விடுத்தாள்
பண்டுபோலக்கண்ணன் நின்று தோழர்நடுவில்
பரிதிபோலச்சொலித்தான்
கொண்டல்மணி வண்ணனும் அண்டர்நாட்டமுதபோல்
கூடியுண்டுகளித்தான் ... ... (௱௮௩)

இராகம் – மோகனம் – ஆதிதாளம்.

பல்லவி.

அன்னமுண்டாரோகண்ணன் – அனைவருடனே
அன்னமுண்டாரோகண்ணன்.

சரணம்.

௧. அன்னமுண்டாரோகண்ணன் – அன்னையுடன் – மணிவண்ணன்
பன்னகசயனத்துன்னன் – பாலருட – நடுவில் ... (அன்)

௨. அந்தரிஷிபத்தினிதந்த – ஆசையாகக் – கோவிந்தன்
சொந்தமாகவேவந்த – தோழர்களுடன் – நடுவில் ... (அன்)

௩. சித்திரான்னவகையும் – திருப்பணியாரத் – தொகையும்
உத்தமமாகக்கண்ணன் – உகந்து சபை – நடுவில் ... (அன்)

௪. இராஜராஜர்க்குப்போஷன் – ராஜகோபால – வேஷன்
போஜகஞ்சனுக்குத்துவேஷன் – புகழ்க்கூட்டம் – நடுவில் (அன்)

௫. அண்டமுண்டவாயன் – அடியார்களுக்கு – நேயன்
புண்டரீகச்சாயன் – பூம்பொழில் – தன்னடுவில் ... (அன்)

௬. பிரம்மதேவனைப்பெற்றோன் – பேசுலக்ஷ்மி – மார்பில்வைத்தோன்
நிர்மலமாகவுற்றோன் – நிறைந்து – ஆயர்நடுவில் (அன்)

வசனம்.

வேதியர் கண்ணன் நியமனப்படி செய்யாமற்போனதால் வந்த தங்கள் பத்தினிகளைக்கண்டு ஞானம்பிறந்து கண்ணனைத் துதித்தல்.

விருத்தம்.

கண்ணனண்ணன் றோழருட னன்னமுண்டு
கலந்தபடி காவியுடன் போனாரப்பால்
எண்ணமுடன் வேதியர்க ளொன்றுகூடி
இப்பெண்கட் கிருந்தமதி யில்லைநாமும்
பண்ணதர்மயாக நிஷ்டையெல்லா மின்றே
பலனற்றுப்போச்சு தெனமனம் வெறுத்து
வண்ணனே க்ஷமித்தருள வேண்டுமென்று
வணங்கினர் சரணமென இணங்கினரோ ... (௱௮௪)



இராகம் – பிலஹரி – ஏகதாளம்.

கண்ணிகள்.

௧. சரணஞ்சரணமையா – சாதுசர்ச்சனமெய்யா
தாசர்களைக்காரும் – ஸ்ரீகிருஷ்ணா
ஜனனமரணந்தீர்க்கும் – ஸ்ரீமன்னாராயணனை
தெரியாமற்போனோம் – ஸ்ரீகிருஷ்ணா ... ... *

௨. ஏகமாகஸ்திரீகள் – எல்லவரும்உமக்கு
எடுத்துப்பிரசாதந்தந்தார் – ஸ்ரீகிருஷ்ணா
யாகம்எக்கியமுதல் – செய்துநாங்களும்மை
யறியாமற்போனோம் – ஸ்ரீகிருஷ்ணா ... ... *

௩. சந்திவந்தனமுதல் – சற்றுந்தெரியாதபெண்கள்
சாமியென்றுனையறிந்தார் – ஸ்ரீகிருஷ்ணா
சர்வஜெபம்தபம் – சன்மார்க்கங்களறிந்தும்
சாமியறியாமற்கெட்டோம் – ஸ்ரீகிருஷ்ணா ... ... *

௪. நித்தியகர்மமறியா – நேரிழையிடையாரின்று
நேராயும்மைப்பணிந்தார் – ஸ்ரீகிருஷ்ணா
கற்றுநாலுவேதம் – கருத்திலுனைவையாமல்
கர்வந்தனையடைந்தோம் – ஸ்ரீகிருஷ்ணா ... ... *

௫. ஜென்மபுண்ணியமும் – செய்யும்விரதமும்
தீக்ஷதரென்றபேரும் – ஸ்ரீகிருஷ்ணா
தன்மமானமறைக் – குலத்தாரென்றசீரும்
தகித்திடவேண்டும் – ஸ்ரீகிருஷ்ணா ... ... *

௬. ஏற்றமானநாங்கள் – இதரவர்ணங்கட்கு
இங்கில்குருவானாலும் – ஸ்ரீகிருஷ்ணா
உற்றவுன்மகிமையை – உணராமல்நாங்களும்
உலகத்தில்மயங்கினோம் – ஸ்ரீகிருஷ்ணா ... ... *

௭. அகண்டபரிபூரணன் – அன்னம்யாசித்தது
ஆச்சரியமன்றோ – ஸ்ரீகிருஷ்ணா
விகண்டவாதஞ்செய்து – விப்பிரர்நாங்களென்று
விலக்கிவிட்டோமையா – ஸ்ரீகிருஷ்ணா ... ... *

௮. தேசகாலநேர்மை – வாயுஅக்னிமுதல்
திக்குகள்நீரன்றோ – ஸ்ரீகிருஷ்ணா
வாசமாகவெங்கும் – உறைபவாநீரென்று
வாழ்த்தாமற்போனோம் – ஸ்ரீகிருஷ்ணா ... ... *

௯. யோகீஸ்வரர்கட்கும் - யோகியானகுலத்தில்
யுதித்திருந்தும்நாங்கள் - ஸ்ரீகிருஷ்ணா
மாகியானபெரியோர்கள் - மர்மமுரைத்திருந்தும்
மதியற்றுப்போனோம் - ஸ்ரீகிருஷ்ணா ... ... *

௰. அகம்பாவங்கள்கொண்டு - ஆனஉன்மாய்கையில்
அகப்பட்டுக்கொண்டோம் - ஸ்ரீகிருஷ்ணா
பகவானாகவிருக்கும் - பாலகோபாலாஉன்னை
பணிந்தோம்க்ஷமித்தருள் - ஸ்ரீகிருஷ்ணா ... ... *

௰௧. பக்ஷிவாகனா வுந்தன் - பாதமலரைநெஞ்சில்
பதித்துநின்றிருக்கிறோம் - ஸ்ரீகிருஷ்ணா
லக்ஷ்மிநாதனேஎங்கள்மேற்கிருபையாய்
ரக்ஷித்துவரவேணும் - ஸ்ரீகிருஷ்ணா... ... ... *

வசனம்.

கண்ணன்நந்த கோபனை இந்திரனுக்கேன் பொங்கலிடவேண்டுமென்று கேட்குதல்.

விருத்தம்.

யாகஞ்செய் பிராமணர்க ளனுதாபமாகி
அரிசரண மடைந்தங்கேயிருந் தாரப்பால்
வேகமா யோடிவந்தே யாயரெல்லாம்
வேண்டியே நந்தர்தனைச் சூழ்ந்து நின்று
ஏகமா யிந்திரற்குப் பொங்கல்வைக்க
. எல்லவரும்போவோ மென்றுரைத்துக் கேட்கப்
போகசயனனு மிந்தப் புதுமையேனோ
புகலென்றான் அனுமானம் அகலென்றானே (௱௮௫)

இராகம் - ஆகிரி - சாபு - தாளம்.

கண்ணிகள்.

க. இந்திரனுக்குப்பொங்கலிட்டால்
என்னபலன்கிடைக்குமெந்தையா - இங்கே
வந்தஎல்லோர்களும் - மயங்கியோசனைசெயுமர்மங்களையெனக்கு
மகிழ்துரைக்கவேணும் - மெய்யா ... ... ... *

உ. மெய்யாகவுரையு மென்ற
மேகநிறன்தன்னைநந்தர்கண்டு - இங்கே
பெய்யவேமும்மாரிபிரபஞ்சந்தன்னிற்பயிர்
செய்யவேயிந்திரன்ஜெகத்துக்கதிகாரிகொண்டு ... *

௩. எந்தசாஸ்திரபிரமாணங்கொண்டு
இணங்கிநீர்செய்கிறீரோஐயா - இப்போ



சொந்தமாயெல்லோருஞ்சுயவிச்சையாகவே
மந்தமதியினால்மருண்டுமுயன்றீரோமெய்யா ... ... *

௪. ஏகமாகஇந்திரன்சொல்ல
எங்குமழைகள்பொழியக்கண்ணா - அந்த
மேகங்களுக்கெல்லாம்நாதனாகுமவன்
மெச்சும்படிக்கிங்குமேன்மையாய்ச்செய்கிறோம்நல்வண்ணா *

௫. தர்மமென்றுஒருஇந்திரன்
தரணிதனிலேயிருந்தாலையா - அவரவர்
கர்மங்களைத்தீர்த்துகடிகியேசதமகன்
காத்துரக்ஷித்துக்கதியுங்கொடுப்பானேமெய்யா ... *

௬. ஆதிமுதல்பெரியோர்கள்
அனுஷ்டித்துவந்ததிதுகண்ணா - பக்தி
நீதியாகவேநாங்கள்நித்தியமாயவனுக்கு
நீணிலத்திலாண்டிலோர்நாள்நேர்ந்திடுவோம்வண்ணா ... *

௭. செய்யுங் கர்மங்களாலே
ஜனனமரணங்கள்தன்னையய்யா - இந்த
வையகத்தில்ஞானமூற்றுவாழுமானிடர்கட்கு
வரும்நிதியமென்னசொல்லுவடிவுதரும்அய்யா... ... *

௮. சொல்லுவதுஎன்னவென்ற
சுந்தரன்தன்உரையைநந்தர்கேட்டு - இந்த
நல்லநிறக்கண்ணனைநானிலத்திற்பிள்ளையென்றுஎண்ணி
நாடியேதங்களுடன்நடைத்துணையாகவேயிட்டு ... *

௯. பிராம்மணக்ஷத்திரியவைசியர்
பேசுஞ்சூத்திரரென்றும்அய்யா - அவரவர்
நேமந்தப்பாமலேநித்தியமாகப்புவியில்
நிதமுமேசெய்தவர்கள்நீடித்திருக்கிறார்மெய்யா ... *

௰. இருக்கிறுரென்றுரைத்த
இந்திரஜாலனைநந்தன்பார்த்து - அங்கே
பெருக்கதேவேந்திரனுக்குபெரும்பொங்கல்வைக்கவே
பெயருவாரெவரையும்பிரியமாய்நாமங்குகாத்து ... *

௰௧. நாலுவிதவிர்த்திசெய்து
நாடிவைசியரிருந்தார்அய்யா - அதில்
காலிகன்றுமேய்க்குங்காரியங்கள்நமக்கு
கட்டளையாய்நாம்செய்யகரிதியிட்டார்மெய்யா... ... *

௰௨. கட்டளைகளிட்டாரென்ற
கண்ணனுரைநந்தகோபன்தெரிந்து - அந்த

பட்டணத்திலுள்ளபக்துக்கள்பயணமாய்
பாங்காகவரவேபாலனைச்சேர்த்தாசைபுரிந்து... ... *

௰௩. காடுககரம்புவியில்
வீடுகள்நமக்குஇல்லைஅய்யா இந்த
காடுசெடிதன்னிலேநாடியிருக்கின்றநாம்
கூடியேமலைதன்னைபாடியேபூசைசெய்வோமெய்யா... ... *

௰௪. பூசைசெய்வோமென்றுரைத்த
கேசவன்உரையைகந்தர்பொருந்தி - அதி
ஆசையுடனேயந்தஆயர்களெல்லோரும்
ஆனந்தமாகியேஅப்படியேசெய்கவென்றார்... ... *

௰௫. குக்ஷியிலேஜகத்தைவைத்தோன்
குழந்தையைப்போல்நந்தன்தன்னைநோக்கி - அதி
லக்ஷணமாகவேகிரிகிட்டிச்சேரவே
நாமெல்லாமொன்றாகநடக்கவேவேண்டுமீர்தேக்கி ... *

௰௬. ஸ்ரீஜலட்சுமிநாதன்சொல்லை
நிச்சயமாம்ஆயர்களும்எண்ணி - அப்போ
இசைவாகுஞ்சாமான்களெல்லாமங்கெடுத்து
ஏராளமாயவர்கள்வரையுற்றுசேர்ந்தார்கள்நண்ணி ... *

வசனம்.

கண்ணன் நியமனப்படிக் கோவர்த்தனத்துக்கு ஆயர்கள் பொங்கலிடுதல்.

விருத்தம்.

கண்ணனது நியமனத்தாற் சேர்ந்தவாயர்
  கடல்வந்து வளைந்ததென மலையைச்சூழ்ந்து
எண்ணமுடியா பாண்டம் எங்கும்வைத்து
  இந்திரனுங் கண்டு பிரம்மிப்பதாக
திண்ணமுடனதிபக்தி வினயமாகத்
  தீர்த்தங்களாடியிடஞ் சுத்திசெய்து
வண்ணமுனவரையினடி வாயில்நின்று
  வணங்கினர் பொங்கலிட இணங்கினரே ... (௱௮௬)

இராகம் - மத்தியமாவதி - அடைதாளம்.

பல்லவி.

பொங்கலிட்டாரே - ஆயர்கள் - பொங்கலிட்டாரே

அநுபல்லவி.

பொங்கலிட்டாரே - ஆயர்வரைக்கு
போகமாகச்சூழ்ந்த நிரைக்கு



செங்கண்மாலின்சொல்லையிட்டு
மங்களமுண்டாகும்பொருட்டு ... ... (பொங்)

சரணம்.

௧. க்ஷீரான்னத்துடனேபொங்கல்
ததியோதனம்புளியோதனந்தங்கல்
சாரமாகக்கண்ணனுண்ண - சட்வர்க்கத்துடன்மலைக்கு (பொங்)

௨. அப்பமுறுக்குவடையுந்தோசை
அனேகவபூபத்துடன்பூசை
உப்பமாகக்கண்ணனுண்ண - உகந்துஎல்லோருமலைக்கு (பொங்)

௩. கனிவர்க்கம் அனேகம்ராசி
கலவைகஸ்தூரிபூசி
இனிமையாகக்கண்ணனுண்ண - ஏற்றமாகவேமலைக்கு (பொங்)

௪. கோவர்த்தனமலைகயிலெடுக்க
கோபாலர்கூடியடுக்க
பாவவிமோசனனுமுண்ண - பாலனமாகமலைக்கு ... (பொங்)

௫. அன்னைதந்தைகண்டுமகிழ
ஆயரெல்லாரும்புகழ
தன்னைநிகரில்லானுண்ண - சரசமாகமலைக்கு ... (பொங்)

௬. கண்டசரங்களசைந்தாட
கானமுனிவர்கண்டுகொட
அண்டமுண்டவாயனுண்ண - ஆனந்தமாகவேமலைக்கு (பொங்)

௭. இஷ்டமாய்த்தோழருஞ்சூழ
இடையர்களென்றும்வாழ
அஷ்டலக்ஷ்மிநாதனுண்ண - ஆசையாகவேமலைக்கு ... (பொங்)

வசனம்.

இந்திரன்மேகங்களுக்குத்திட்டஞ்செய்தல்

விருத்தம்.

பொங்கலிட்ட வாயரெல்லாம் பூர்த்திசெய்து
  புகழ்ந்தவர் களரிநாமந் தன்னைப்பாடி
மங்கள வாத்தியத்தொனியா முழக்கத்தோடு
  மாதர்மக்கள் வரையை வலமாகவந்து
செங்கமலப்பாத னுடன் காலியோட்டிச்
  செம்மையாய்க் கோகுலத்திற் சேர்ந்திருக்க
இங்குகண்ணன் பூசைதடுத் திடவேகோபம்
  எடுத்திட்டான் மேகமிந்திரன் தொடுத்திட்டானே...(௱௮௭)

இராகம் - நாதநாமக்கிரியை - ஆதி - தாளம்.

பல்லவி.

மேகங்களாகேளீர் - எந்தன்உரையை, சப்த
மேகங்களாகேளீர்

சரணம்.

க. மேகங்களாவுங்கள்விலங்குகளைவிடுத்தேன்
ஏகமாய்க்கூடியின்றுஇடிக்கவுத்தரங்கொடுத்தேன் ... (மேக)

உ. என்னுடையபூசைகெடுத்ததோரிடையனை
மின்னுடைபிரபாவத்தால்மிரட்டிடுமடையனை ... (மேக)

ந. வற்றவேகடல்நீரைவாரிநீருங்குடிக்க
முற்றுமக்கோகுலம்முழுகும்படியடிக்க ... ... (மேக)

ச. பன்னவேயிடிமெத்தபயமாகவேயிடிக்க
தென்னனுடனேபிரசண்டமாருதந்தடிக்க ... (மேக)

ரு. தூண்தூணகவேமழைசொரிந்துஅந்தநிலத்தில்
ஆண்பெண்ணடங்கலும் - அழியஆயர்குலத்தில் ... (மேக)

சு. காடுதனில்பிரளையம்நடுங்கச்செய்வதுபோல
மாடுகன்றுடன்யாவும் - மடங்கப்பண்ணச்சில ... (மேக)

எ. பாவனமாகக்கோ - பாலர்கள்வந்தித்தார்
கேவலக்கண்ணன்சொல் - கேட்டென்னைநிந்தித்தார்... (மேக)

அ. வாசவனென்றென்னை - வையத்தில்நேசித்தார்
கேசவனென்றெண்ணி - கிருஷ்ணனைப்பூசித்தார் ... (மேக)

சு. தான்டவேசமுசார - சாகரச்சள்ளைதன்னை
வேண்டியேமுன்னோர்கள் - வேள்விசெய்வாரென்னை ... (மேக)

ய. பர்வதபூசைபண்ண - பரிந்துசெய்தவன்பய்ய
கெர்வம்பறந்திடக் - கிளம்பிமழைபெய்ய ... (மேக)

யக. ஆயிராவதம்ஏறி - அழைக்கிறேன்வாயுவை
துயிலாமலெவர்களும் - தியருறப்பேயுவை ... (மேக

யஉ. கக்ஷிசெய்தெந்தன் - காலப்பூசைதடுத்தான்
லக்ஷ்மிநாதனும் - இவனேயெனஅடுத்தான் ... (மேக)

வசனம்.

இந்திரன் சொற்படி மேகங்கள் மழைபெய்தல்.

விருத்தம்.

உரைத்தவந்தமகபதியினுரையைகேட்டு
ஒருமிக்கமேகமெலாங்கூட்டமிட்டுக்



குரைத்திருக்குக் கடல்நீரைக் குடித்துமீண்டு
குவலயத்தோர் நடுங்கவே ககனமேகி
இரைத்திருக்கு மம்மலையை யடுத்தபாடி
எப்புறமு மிருள்சூழ மூடிக்கொண்டு
நரைத்தபசு மாட்டுடனே மக்கள்யாரும்
நடுங்கினார் மழைகொட்ட வொடுங்கினாரே. ... (௱அஅ)

இராகம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

பேயுதேமழை பேயுதே - எங்கும்
பேயுதேமழை பேயுதே

சரணம்.

க. பேயுதேமழையுநன்று - பிறங்குமின்னலுமின்ன
பாயுதேஜலமுமொன்று - பாரும்முழுகுமென்ன ... (பேயு)

உ. இடித்துக்கீழ்மாரிகொண்டு - ஏகமாய்மேகங்கள்சென்று
குடித்துத்தண்ணீரைமொண்டு - குடங்குடமாகநின்று... (பேயு)

ந. பகைத்துக்கல்மாரிகொட்ட - பள்ளமேடுகள்தட்ட
நகைத்துஆயரையோட்ட - நாதங்கள்மிகவும்காட்ட ... (பேயு)

ச. கூடிவெள்ளம்புரட்ட - குடிகளெல்லாஞ்சுருட்ட
ஓடியெல்லாந்திரட்ட - ஓங்கியங்கேயுருட்ட ... (பேயு)

ரு. கர்ஜ்ஜித்துமேகங்கள்கூவ - காலிகன்றுகள்நோவ
அர்ஜ்ஜித்துகண்ணனைத்தாவ - ஆயரெல்லாரும்பாவ ... (பேயு)

சு. பெருங்காற்றடித்துவீச - பிரஜைகள்பயந்துவாச
திருமால்தெரிந்துபேச - தேவரும்மனதுகூச ... (பேயு)

வசனம்.

ஆய்ப்பாடி ஸ்திரீகளெல்லாருங்கூடிக் கண்ணனை இவ்விபத்தைநீக்கி ரக்ஷிக்கும்படி வேண்டுதல்.

விருத்தம்.

ஓயாமல் மழைபொழிய உலகுதன்னில்
ஒதுங்கவிட மின்றிமக்கள் மாடுவாட
சாயாமல் வழிமறைத்து ஜலமுமோடச்
சாகரமும் புரண்டெதிரி லுற்றாற்போலக்
காயாம்பூ வண்ணனுமே கண்டுகூசக்
கனிவாய்ச்சிக் கோபிகளுங் கலங்கிச்சித்தம்
மாயாவதாரன் தன்னடியில் வீழ்ந்து
மகிழ்ந்திட்டார் காருமெனப் புகழ்ந்திட்டாரே (௱அகூ)

இராகம் - முகாரி - சாபுதாளம்.

கண்ணிகள்.

க. கிருஷ்ணாஎங்கள்கிலேசந்திருமே - ஹரி - ஹரி - ஹரி
இஷ்டமுடன்கூடிவாருமே - யசோதைமைந்தா
கஷ்டங்களைத்தீர்த்துக்காருமே - கமலக்கண்ணா
கருணையினுலெங்களைப்பாருமே ... ... ... *

உ. பிரளயகாலம்போலேயிருட்டுதே - ஹரி - ஹரி - ஹரி
பிரபஞ்சமெங்குமுழுகிவிட்டுதே - பிருந்தைநாதா
தலையுடன்காலிமுதலாயுருட்டுதே - சாமளவண்ணா
சாகரம்போலெங்கும்புரட்டுதே ... ... ... *

௩. இடிகளிடித்துமின்னல்மின்னுதே - ஹரி - ஹரி - ஹரி
இந்திரதனுசுபோலத்தன்னுதே - எம்பெருமானே
அடித்துப்பெருங்காற்றுமன்னுதே - அனந்தசயனா
ஆகாயத்தில்மேகம்பன்னுதே ... ... ... *

௪. கல்மாரியாகக்கொட்டுதே - ஹரி - ஹரி - ஹரி
காடுமேடுவீடுங்கெட்டுதே - காயாம்பூவண்ணா
சில்லுகளாலெறிந்துஓட்டுதே - சின்மயரூபா
தேவேந்திரன்செயல்போற்காட்டுதே ... ... *

௫. ஆலங்கட்டிமழையும்பெருகுதே - ஹரி - ஹரி - ஹரி
ஆறுவெள்ளமாகவருகுதே - ஆயர்கொழுந்தே
காலனுரையைப்போலத்தருகுதே - கரியவண்ணா
காலங்களுமாறிநேருதே ... ... ... ... *

௬. குளிர்களாலேநொந்துவாடினோம் - ஹரி - ஹரி - ஹரி
கோவுமுதலாகநாடினோம் - கோபாலகிருஷ்ணா
தளருதேதேகம்என்றுபாடினோம் - தாமரைக்கண்ணா
தாளிலேசரணுகக்கூடினோம் ... ... ... *

௭. துக்கித்தவரைரக்ஷிப்பேனென்றீர் - ஹரி - ஹரி - ஹரி
துயரம்நீக்கவேளையுண்டென்றீர் - சுந்தரத்தோளா
அக்கரையற்றவர்போலநிற்கின்றீர் - அரியநாமா
ஆயர்களைக்காக்கவுட்கொண்டீர் ... ... ... *

௮. ரக்ஷகனும்மைத்தவிரவேறுண்டோ - ஹரி - ஹரி - ஹரி
லக்ஷ்மிநாதனென்றும்மைக்கொண்டோம் - நீலமேகவண்ணா
பக்ஷமாயெங்களையாளும்ஆளுமென்றோம் - பரமபுருஷா
பணிந்திந்தகதியில்முன்னின்றோம் ... ... ... *



வசனம்.

கண்ணன் கோபாலர்களையும் பசுகன்றுமுதலிய ஜீவராசிகளையும் மழையினின்றும் காத்து ரக்ஷிக்கும்படிக்கோவர்த்தனத்தைக் குடையாகப் பிடித்தல்.

விருத்தம்.

பணிந்திருக்கு மாயர்களைப் பார்த்துக்கண்ணன்
பரிவினு லவரவர்கள் பயமுநீங்க
தணிந்தவனப் பிராணிகளு மங்கேயுள்ள
தங்குபசு கன்றுகளை மழையிற்காக்கத்
திணிந்தகிரி யதனையொரு விளையாட்டாகச்
சிறுவர்நின்று காளானைப் பிடுங்கும்வாறு
அணிந்தமணிக் கரமுடையா னெங்களண்ணல்
அடுத்திட்டான் குடையாக வெடுத்திட்டானே ... (௱௯௰)

இராகம் - சுருட்டி - சாபுதாளம்.

பல்லவி.

எடுத்தாரோகுன்றைக்குடையாய்ப்பிடித்தாரோ
அடுத்துவந்தபேர்க்குஅபயங்கொடுத்தாரோ.

அநுபல்லவி.

எடுத்துச்சுண்டுவிரலினாலே
பிடித்துவரையைக்குடையாய்மேலே
அடுத்தவரைக்காக்க - ஆயர்பயந்தீர்க்க
கெடுத்தவனுங்கரிய - கேசவனுஞ்சரிய ... ... (எடுத்)

சரணம்.

வந்ததந்தைதாய்முதலாய் மாதவனுங்கூட்டி
இந்தமலைகீழிலுற்றுஇருமென்றுதடங்காட்டி
அந்தவிந்திரன்கர்வத்தையடக்கிறேனப்பாலோட்டி
சொந்தமுள்ள ஆயர்களுக்குச்சொல்லியேபாராட்டி
விந்தைவிந்தையாகக்கண்ணன்வேணுகானமுஞ்செய்ய
நந்தன்முதலோர்கள்கண்டுகாரணமென்றுமெய்ய
சந்தோஷமாகஸ்திரீகள்சரணமாகவேயுய்ய
பந்தமுள்ளவிந்திரனல்மேகம்பரவிமழையும்பெய்ய
எந்தன்கைகிரிகெடாது - இடத்திற்சேதங்கொடாது
வந்திருங்கள்சூதியா - எந்திரங்களறிய
சிந்தைதனிலிசைய - ஸ்ரீசரணும்விசைய ... (எடுத்)

அடித்தகாற்றுமழைக்குமாயர் - அனைவர்களும்பயந்து
பிடித்தவந்தமலையின்கீழே - பிரமனைமுதல்வந்து

விடுத்தவருந்தாகம்பசியை - மேன்மையாகவேசேர்ந்து
படித்துமவன்திருநாமம் - பரவசத்திற்றோய்ந்து
உடுத்தபீதகவாடைப்பிரான் - உகந்தெல்லோரையுங்கண்டு
கடுத்தமகபதியுடைய - காரணம்இதுவென்று
எடுத்தெழுநாள்வரையை - ஏகவிரலிற்கொண்டு
தடுத்துக்கல்மாரிதன்னை - தளராமலங்குநின்று
பொடித்தமேகம்போய்விட்டது - பூமியும்வெளியாகப்பட்டது
சேர்த்திடுங்கள்நீங்கள் - சேர்ந்துவெளியிற்போங்கள்
கருத்திலீசனைவையுங்கள் - காரணந்தெரிந்துய்யுங்கள்... (எடுத்)

௩. அக்கியானபேர்களரியை - அறியாமற்கெடுவார்கள்
நிக்கிரகித்தசெயலைவிட்டு - நீதியாகத்தொடுவார்கள்
சுக்கியானிகள்சுவாமிநாமம் - துதித்துப்பாடுவார்கள்
தக்கவேயவர்களவர்க்கு - தாசராகிவிடுவார்கள்
துக்கித்தவரைரக்ஷிப்பதவர்க்கு - சுபாவமாமெந்தனய்யா
பக்கியாகவிந்திரன்தன்னை - பரக்கவாட்டுவார்மெய்யா
விக்கியாபனங்கள்செய்தேன் - மேதினியோருய்ய
சொக்கினபேர்க்கவருந் - தாதரவுகுவர்செய்ய
சிக்கியவர்மனதுதன்னிலே - சேரவிருப்பாரென்றுமுன்னிலே
ஒக்கக்கவலைபோக்கி - ஒருமிக்கவேதேக்கி
பக்கந்தன்னிலேநோக்கி - பாலன்மலையைத்தூக்கி ... (எடுத்)

௪. வாங்கிவசனம்யாருமன்று - மாதவனருள்பெற்று
நீங்கியவர்துயரந்தன்னை - நீலமேகனையுற்று
தாங்குமலையைநிலத்திற்கண்ணன் - சகலருங்காணவைத்து
பாங்கியர்களோடுசேர்ந்து - பாலலீலைகள்முற்று
மோங்கியுலகமளந்தோனுட - வுத்தமர்கொண்டாட
ஏங்கியிருந்தவசோதைமுதலாய் - இசைத்துமங்களம்பாட
தூங்காததும்புருமுனியுமன்று - துதித்துவீணையையீட
தேங்கக்கருணையாயர்குலத்தில் - திருமாலென்னத்தெரியவுளத்தில்
தேசங்களும்புகழ - தேவர்களும்மகிழ
நேசர்களுந்திகழ - நேமியனும்நிகழ ... ... (எடுத்)

வசனம்.

இவ்விதங் காத்துரக்ஷித்த கண்ணனைத் தங்களுடன் கிரகத்துக்கு வரும்படி யழைத்தல்.

விருத்தம்.

குடையாகக் கோவர்த்தன மெடுத்துக்கண்ணன்
கோவினமு மாயர்முதல் யாவுங்காத்தான்



தடையின்றித் தேவர்கள் துந்துமிமுழக்கித்
தாங்குமரி யென்றுமலர் மாரிபெய்தார்
படைசெய்த விந்திரன்தன் கெர்வமன்றே
பங்கமா யுள்பயந்து நின்றானங்கே
அடையவே பதிசேர நந்தரோடே
அழைக்கின்றார் அச்சுதனைத் தழைக்கின்றாரோ. (௱௬௧)

இராகம் - மோகனம் - ஆதிதாளம்.

பல்லவி.

கோகுலநாதா - வா - வா - வா - வா - கோகுலநாதா

சரணம்.

க. கோகுலத்துக்காயனே - குழலூதும்வாயனே
நாகத்துமேல்சயனனே - ஸ்ரீநா - நா - நா - நாதா ... (கோ)
உ. குன்றமேந்துங்கையனே - கோக்கள்மேய்க்கும்மெய்யனே
அண்டர்தொழும்அய்யனே - ஸ்ரீஹரி - ஹரி - ஹரி - ஹரி ... (கோ)
௩. வேணுகானப்போதனே - விண்ணவர்க்குநாதனே
பானுகோடிமீதனே - ஸ்ரீபதி - பதி - பதி - பதி ... (கோ)
௪. காளிங்கமர்த்தாபனே - காலிகள்பிரதாபனே
காளமுகில்ரூபனே - ஸ்ரீகா - கா - கா - கண்ணா ... (கோ)

வசனம்.

நந்தரிடத்தில் கோபாலர்கள் கண்ணனைப்புகழ்தல்.

விருத்தம்.

அழைத்துவந்த ஆயரெலா மதிசயித்து
அவனுடைய லீலைகளை மனதுட்கொண்டு
தழைத்திடவே வந்ததிந்த கோகுலமும்பண்டு
தான்செய்த தவப்பலனோ என்னவென்று
பிழைத்தோம்நாங் காலியுட னிவனாலென்று
பேசியே யஞ்சலியுஞ் செய்துநின்று
உழைத்திருந்த நந்தரிடந் தன்னிற்சென்று
ஒப்புவார் ஹரியென்றே செப்புவாரே ... (௱௬௨)

இராகம் - மத்தியமாவதி - சாபுதாளம்.

பல்லவி.

நந்தகோபரேகேளும் - ஹரி
உம்மிடமைந்தனானின்றாளும்

அநுபல்லவி.

நந்தகோபாவுந்தன் விந்தைதவத்தருமை
சிந்தைதனிற்றெரிந்து செப்புகிறோம்பெருமை ... (நந்த)

சரணம்.

க. பூதகியைவதைத்தான் - சகடந்தன்னை
பொடிப்பொடியாகவுதைத்தான்
காதகனைசுழற் - காற்றையவன்சிதைத்தான்
கன்னியரோடிங்கு - கலந்தாடியேசுகித்தான் ... (நந்த)

உ. நவநீதங்களையுண்டான் - நமதுகண்ணன்
நங்கையாற்கட்டுமுண்டான்
அவலீலையாயர்ச்சுன - அம்மரத்தைதமுறித்தான்
பவரோகந்தீர்க்குநாதன் - பாலவேஷங்குறித்தான் ... (நந்த)

ங. கன்றுகாலியுமேய்த்தான் - பிருந்தாவனத்தில்
கானஞ்செய்திடவாய்த்தான்
அன்றுவற்சனைக்கண்டு - அறிந்துவாலைப்பிடித்தான்
கொன்றுவிளவின்மேலே - குறிப்பாகவேயடித்தான் ... (நந்த)

ச. பகாசுரனைப்பிளந்தான் - பிராதாவுடனே
பலவிந்தைகளளந்தான்
அகாசுரன்வயிற்றில் - அவன்மாளவேவளர்ந்தான்
இகலோகந்தன்னிலிந்த - எதுகுலத்திற்கலந்தான் ... (நந்த)

ரு. தேனுகாசுரனையொழித்தான் - கனிகளீய்ந்து
சிறுவர்பசியையழித்தான்
பானுபோலக்கண்ணன் - பாடிதன்னிற்செழித்தான்
வானிற்றேவர்மகிழ - மதுவனத்தைக்கழித்தான் ... (நந்த)

சு. காட்டுத்தீயைப்பக்ஷித்தான் - பிரலம்பனை
கண்டவுடன்சிக்ஷித்தான்
நாட்டிற்கொடியரையெந் - நாளிலுங்கக்ஷித்தான்
கூட்டமாம்நம்மைமுற்றுங் - கூடவேரக்ஷித்தான் ... (நந்த)

எ. துஷ்டகாளியனைமிதித்தான் - முடிமேல்நின்று
துலங்கஆடிக்குதித்தான்
இஷ்டமாகமடுவை - எல்லவர்க்கும்பகிர்த்தான்
கஷ்டம்நமக்குநீங்க - கண்ணனிங்கேயுதித்தான் ... (நந்த)

அ. குன்றைக்குடையாகவெடுத்தான் - கல்மாரியை
கோபாலனேதடுத்தான்
என்றுமவனைப்பாடி - இருக்கஞானங்கொடுத்தான்
நின்றலக்ஷ்மிநாதன் - நிறைவாய்நம்மையடுத்தான் ... (நந்த)

வசனம்.

இவ்வாறு புகழும் கோபாலருக்குக் கண்ணனைப்பற்றிக்கர்க்கர்சொல்லியிருந்தபடி பக்தர் உரைத்தல்.



215

விருத்தம்.

தீதின்றிக் கண்ணனையக் கோபாலரன்று
தேற்றமாய்ச் செய்மகிமை யுரைக்கக்கேட்டு
நீதியா யிதுகாறும் வெளியிடாமல்
நெடுநாளாய் மறைத்திருந்த ரகஸியத்தைக்
காதிலே யெல்லோர்க்குஞ் சொல்வோமென்னுங்
கருத்தோடு களித்தமனத் தோனேயாகி
ஆதியிலே கர்க்கர்வகுத் திட்டவாறு
அறிவித்தா ராயருக்குந் தெரிவித்தாரே ... (ாகூ)

இராகம் - புன்னாகவராளி - ஏகதாளம்.

பல்லவி.

கேளுங்கள் - கோபாலர்களா - கேளுங்கள் - எங்கள்
கிருஷ்ணனுடைமகிமைகேளுங்கள்

அநுபல்லவி.

நாளுங்கர்க்கருரைத்தவாக்கியங்கேளுங்கள் - நம்மை
யாளுங்கண்ணனுடைசிலாக்கியங்கேளுங்கள் ... (கேளு)

சரணம்.

க. யுகயுகந்தோறுங்கண்ட - உன்னிதசீலன் - இங்கே
ஒளிர்மகனாகவந்து - உற்றாரைப்பாலன்
ஜெகந்தனிற்சேதனைாரக்ஷிக்கும்லோலன் - அந்த
ஸ்ரீமந்நாராயணனேவந்து உதித்தானென்றார் ... (கேளு)

உ. இரத்தபீதகசுக்கில - வர்ணங்கொண்டோன் - அதி
ரம்மியமாகப்புவியில்லீலைகண்டோன்
உத்தமமாங்கிருஷ்ணநிறமாய்நின்றோன் - இந்த
உலகந்தன்னிலேவந்து உதித்தானென்றார் ... (கேளு)

ங. அதிமானுஷவிக்கிரகனாய்ப்பிறந்தோன் - எங்கும்
அனேகநாமரூபத்தோடுசிறந்தோன்
சோதிமயமாயுள்ளும் புறமுநிறைந்தோன் - இடையர்
சொல்லக்குலத்தில்வந்து - உதித்தானென்றார் ... (கேளு)

ச. சிசுரூபமாயிருந்துசிறக்குநாதன் - ஜெகத்தில்
செய்ததைநாம்எண்ணில்அதிசூதன்
அசுரசம்மாரியாயவதரித்தநீதன் - இந்த
அவனிதன்னிலேவந்துஉதித்தானென்றார் ... ... (கேளு)

ரு. அராசககாலத்திற்சோரர்கள்கண்டு - அவர்கள்
அபகரித்துப்புவியிற்கூடியதுகண்டு

கரத்திற்பஞ்சாயுதமேந்திக்கொண்டு - அப்போ
கீண்டனைசெய்யவென்று உதித்தானென்றார் ... (கேளு)

௬. பயங்களெல்லாருமிவனாலொழித்து - மிகப்
பாபகர்மங்கள்முற்றும்பறக்கழித்து
நயந்தெந்தன்பிள்ளையாகவிங்குதழைத்து - அந்த
நாகந்தமையனாகஉதித்தானென்றார் ... ... (கேளு)

௭. தன்னைத்தவிரவிந்திரஜாலனருமை - இந்தத்
தரணியிலாரறிவாரிவன்பெருமை
என்னைப்பொருளாகவிங்கிட்டவொருமை - நமது
ஏற்றகுருவுசொல்லவுணர்ந்தேனென்றார் ... ... (கேளு)

௮. உணர்ந்தநாள்முதலாயுன்னிதனைநண்ண - மெத்த
உகந்திருவருக்குநான்சிஸ்ருஷைபண்ண
புணர்ந்தவென்ஜன்மத்தின்புண்ணியமென்ன - அந்த
பொன்னாழிக்கையன்வந்துஉதித்தானென்றார் ... (கேளு)

௯. அந்தகர்க்கருமன்றனேகமொழிந்து - அவர்
ஆனந்தமாயகன்றார்காதிற்பொழிந்து
இந்தமலையவன்கைக்குஒருபந்து - என்று
எண்ணிச்சொல்வதுஞ்சரியல்லவென்றார் ... ... (கேளு)

௰. இரக்ஷகனாயகிலத்தில்இருவினையும்போக்க - இப்போ
ராஜகோபாலனாக நம்மைக்காக்க
பக்ஷமாகவிவ்விடத்தைப்பாவனமாக்க - அந்த
பைந்தொடிலட்சுமிநாதன் உதித்தானென்றார் ... (கேளு)

வசனம்.

இந்திரன் கெர்வமழிந்து காமதேனுவை முன்னிட்டுவந்து அதன் மூலமாகக்கண்ணபிரானைப் பொறுத்துரக்ஷிக்கும்படி வேண்டிக்கொள்ளுதல்.

விருத்தம்.

கேளுமென்று நந்தரிந்த விதமாயன்று
கிருஷ்ணனது வரலாறு தன்னைச்சொல்லி
ஆளுகின்ற தேவனிவ னென்றுபோற்றி
ஆனந்த மாயாயர் வாழ்ந்திருக்கவேழு
நாளுமழை பொழியவே செய்தவிந்திரன்
நடுங்கியே கெர்வமறக் காமதேனுவோடே
தாளுந்தடக் கரங்குவித்தே யெதிரில்நின்று
தணிந்திட்டான் வந்தடியிற் பணிந்திட்டானே (௱௯௪)



இராகம் - தன்னியாசி - ஆதிதாளம்.

பல்லவி.

க்ஷமித்தாளவேணும் - ஸ்ரீதரனேகேளும்
க்ஷமித்தாளவேணும்.

சரணம்.

௧. உம்முடரூபம்விளங்கும் - உத்தமமாய்த்துலங்கும்
தமகுணநாசா - தத்துவப்பிரகாசா ... ... ... (க்ஷமி)

௨. சுக்கியானமாயிருக்கும் - சுந்தரனேயுருக்கும்
அக்கோபமேது - அனந்தாவிப்போது ... ... (க்ஷமி)

௩. துஷ்டவதநாயகரோ - கஷ்டபரிபாலகரோ
இஷ்டமென்கர்த்தனே - எழிலுடைநித்தனே ... (க்ஷமி)

௪. நானென்றவகங்கொண்டேன் - நாதாவுன்முன்நின்றேன்
தேனென்னுங்குணத்துங்க - தீரனேபொறுத்திங்கே ... (க்ஷமி)

௫. ஈஸ்வரனென்ற - எண்ணியப்போதுநின்ற
கேசவாவெனைக்கண்டு - கிருபையாகவிண்டு... ... (க்ஷமி)

௬. புத்தியின்றிப்பதைத்து - புண்ணியாநான்கொதித்து
மத்தன்போற்செய்திட்ட - மடையனும்மைமக்கிட்ட ... (க்ஷமி)

௭. மதமகங்களுடைந்தேன் - மாதவனேயடைந்தேன்
இதமருள்தேக்கி - எளியேனைநோக்கி ... ... (க்ஷமி)

௮. இந்தத்தரணிதன்னில் - எடுத்தவதாரமுன்னில்
சிந்தியாதுவிட்டேன் - செய்தவமானப்பட்டேன் ... (க்ஷமி)

௯. அனேகவதாரங்கொண்டாய் - அமரர்பங்கிலேநின்றாய்
தனதாமாதிமூலா - தற்காத்தருளும்லீலா ... ... (க்ஷமி)

௰. எந்தன்பூசைதடுத்து - இருந்தினாற்றுடித்து
விந்தையாய்மேகமுற்றும் - விட்டானையாள்சித்தம் ... (க்ஷமி)

௰௧. வியர்த்தம்நான்செய்த - விகடமெல்லாங்கொய்த
உயர்திருமார்பனே - யுண்மையிற்சார்பனே... ... (க்ஷமி)

வசனம்.

இவ்வகையாய்த்துதித்திருக்கும் இந்திரனுக்குக் கண்ணன்சொல்லுதல்.

விருத்தம்.

துதித்திந்த விதமாக விந்திரனும்போற்றத்
துயரொழிய வவனுடைய கர்வம்நீங்க
உதித்துவருங் கதிரவன்போற் கிரீடமின்ன
உலகளந்தோ னடிவணங்கி யெதிரிருக்க

மதித்தவனுஞ் சொல்லியதை யுற்றுநோக்கி
மயங்கியேசெய்திட்டா னெனமன்னித்துப்
பதித்தமணிப் பணியணிந்த மாயனன்று
பன்னுவான் பரிவதனாற் றன்னுவானே. (௱௧௫)

இராகம் - ஸ்ரீராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

கேளிந்திரனேதென்பா - கேளுங்கேள்நீயன்பா.

அநுபல்லவி.

நாளுமென்தாசர்மேலே - நானாசைவைப்பதாலே. ... (கேளி)

சரணம்.

க. வந்துன்பூசைகெடுத்தேன் - வளர்மலையையெடுத்தேன்
சிந்தையென்மேலடுக்கச் - செய்தேனருள்கொடுக்க ... (கேளி)

உ. அயிராவதமேலேறி - ஆயிரங்கண்ணுகோரி
செய்தாய்மழைபொழிய - ஜெகந்தனில்நீயிழிய ... (கேளி)

௩. அன்பனாமுன்னைக்காக்க - அவதரித்ததைநோக்க
இன்பத்திரிலோகபத்தியம் - இருக்கவுனக்குநித்தியம்... (கேளி)

ச. என்னினைப்பேபெருக்க - இதுசெய்தேன்நீயிருக்க
முன்போலவெந்நாளும் - முடியோடரஞ்சயாளும் ... (கேளி)

வசனம்.

காமதேனு கோவினசமூகத்தோடு கண்ணனடியில் வீழ்ந்து பிரம தேவன் இந்திரனையும் தன்னையும் அனுப்பித் தேவரீருக்குக் கோவிந்தபட்டாபிஷேகஞ் செய்யும்படி யனுப்பினானென்று சொல்லுதல்.

விருத்தம்.

சாமள வண்ணனிந்த விதமுரைத்துச்
சபைநடுவில் வீற்றிருக்கும் போதிலோடி
ஆம்துர க்ஷீரமது பெருக்கெடுக்க
அய்யனிணை யடிமீதில் வீழ்ந்துநின்று
நேமனமாய்ப் பிரமனெங்கட் கியம்பலிங்கே
நேர்ந்துமக்குத் திவ்வியதிருப் பட்டஞ்சாத்த
நாமமா யிரமுடையாய் வந்தோமென்றே
நாடினாள் அவன்புகழைப் பாடினாளே ... (௱௧௫)

இராகம் - சாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

சரணம் - சரணம் - சரணம் - ஜாலா கோபிலோலா
ஜனனமரணம் ஒழிக்கும் - சீலா கோபாலா



சரணம்.

க. அச்சுதாகோவிந்தாஹரி - அனந்தாலிங்கந்தா
சச்சிதாநந்தவிக்கிரக - தந்திராமூலமந்திரா ... (சரண)

உ. பிரம்மதேவருடையநியமனம் - பெற்றோங்கூடியுற்றோம்
நிர்மலனேயுன்னைமனம் - நினைத்தோம்பவம்ஒழித்தோம் (சரண)

௩. மந்தரமாயுனக்குப்பட்டம் - கட்டகரங்கொட்ட
சுந்தரனேயிங்கேவந்து - சுற்றினோம்பதம்பற்றினோம் ... (சரண)

ச. பாவனமாயெங்களையாளும் - பாதனேலோகநாதனே
கோவர்த்தனோத்தாரணமுஞ்செய்த - கோவேயெங்கள்தேவே (சர)

வசனம்.

காமதேனு கூறியபடிக் கண்ணபிரானுக்கு இந்திரன் கோவிந்தபட்டாபிஷேகஞ்செய்த பிரபாவத்தைச் சொல்லுதல்.

விருத்தம்.

கூடிநின்ற கோக்குலமுங் காமதேனும்
கோபாலனடிவணங்கித் துதித்திருக்க
ஆடிநின்ற வரம்பையூர் வசியுந்தேவர்
ஆனவருங் கண்ணனையே வாழ்த்திநிற்கப்
பாடிநின்ற கந்தரகாந் தருவர்வந்து
பகவான்றன் னிணையடியைப் பணிந்தோராக
நாடிநின்ற விந்திரனு நாரணற்கு
நாட்டினான் கோவிந்தமுடி சூட்டினானே. (௱௧௬)

இராகம் - சாவேரி - சாபுதாளம்.

பல்லவி.

கோவிந்தபட்டாபி - ஷேகத்துடைமகிமை
கூறுவேன் வேந்தனே கேளும்.

அநுபல்லவி.

கோவிந்தனென்று நாமஞ்சாத்தி
கோகுலத்து நாதனைவாழ்த்தி
பாவனமாய்ப் பதந்தனைப்போற்றும்
பணிந்துதேவர் பரிமலர்சாத்தும்... ... (கோவி)

சரணம்.

க. பிரமதேவருரைத்தபடியே - யெல்லாருஞ்சேர்ந்து
பிருந்தையிலேயிருக்கும் - நாதனிடத்தில்வந்து
தர்மசமஸ்தாபனம் - செய்தவனிவனென்று

சகலவிருதுவாத்தியங்கள் பெருக்கவே
தாசதாசர்கள் - மனதையுருக்கவே
அகளங்கமாகக் - கட்டியக்குறித்திடும்
அனந்தகாமற்கு - பட்டந்தரித்திடும். ... ... (கோவி)

உ. காமதேனுமுதலாய்க் - கறந்துபால்களைப்பெய்ய
கண்டுஅயிராவதங் - கொண்டுகங்கைகள்துய்ய
க்ஷேமமாகவமரர் - நேர்ந்துமலருங்கொய்ய
நீலமேகனுக்கிந்திரன் - நின்றபிஷேகஞ்செய்ய
அரம்பைமேனகை நடனமாடவே
நிறைந்துகின்னரர் வீணைமீடவே
அன்பாய்த்தும்புரு நாரதர்பாடிடும்
அனந்தசயனற்குப் பட்டஞ்சூடிடும். ... ... (கோவி)

ங. செழித்துப்பிருந்தைமுற்றுஞ் - சிங்காரமாய்ச்சிறக்க
சேர்ந்துபசுக்களெல்லாம் - க்ஷீரந்தன்னைக்கறக்க
சுழித்துநதிகளெங்குஞ் - சொல்லவெள்ளஞ்சுரக்க
சோதைமகனையன்று - சூழ்ந்தவரும்நிறக்க
சல்லியமற்றுவனவிலங்குகுதித்திட
சரசமாகப்பட்சிஜாலங்களித்திட
மெல்லியர்கூடியேகைகளைத்தட்டிடும்
மேகவண்ணனுக்குப்பட்டமுங்கட்டிடும்.... ... (கோவி)

ச, விருக்ஷங்களுந்தழைத்து - விளங்கியங்கேதிகழ
மேதினியில்யாரும் - விஷ்ணுவென்றுபுகழ
பச்சைரத்தனமயமாய் - பர்வதங்கள்நிகழ
பாடியிலிடைப்பெண்கள் - பகவானென்றுமகிழ
வக்ஷத்தில்லக்ஷ்மி - வைத்தவனுங்கண்ட
வனத்திலிந்திரற்கு - விடைகளுமீண்ட
கஷ்டமெல்லோருங் - கழித்திடவாண்ட
கண்ணன்றனக்குத்திருப் - பட்டமும்பூண்ட. ... (கோவி)

வசனம்.

நந்தகோபர் ஹரிவாசவிரதம் அனுஷ்டித்துத் தெரியாமல் அகாலத்தில் நதிக்குப்போய்க் கோபாலருடன் ஸ்நானஞ்செய்யும்போது நந்தகோபரை யொருவருமறியாதபடி வருணதூதர் வருணநகரத்திற்சேர்க்கக் கோபாலர்கள் நந்தரைக்காணோமென்று கண்ணனிடத்தில் முறையிடல்.

விருத்தம்.

இந்திராணிநாதருடன் தேவர்களுங்கூடி
எழிற்கண்ணனைமனத்தாற் பதிபோய்ச்சேர்ந்தார்



நந்தருமேயரிவாச விரதங்கொண்டு
நள்ளிருளில்யமுனைநதி சென்றடைந்து
சுந்தரஞ்சேர்தோழருடன் தீர்த்தமாடச்
சூழ்வாயிடும்வருணனது தூதர்வந்து
அந்தரமாயவரைக் கொண்டேகவாயர்
அடுத்திட்டார்கண்ணனுக்குத் தொடுத்திட்டாரே. (௱கூஎ)

இராகம் - சங்கராபரணம் - சாபு - தாளம்.

பல்லவி.

கண்ணாநாங்களென்னசெய்குவோம் - காணோம்நந்தரை
கண்ணாநாங்களென்னசெய்குவோம்.

அநுபல்லவி.

கண்ணாநாங்களென்னசெய்வோம் - கவலையெப்படி கொய்வோம்
அண்ணலேயெவரைவைவோம் - அகன்றஎப்படியுய்வோம். (கண்)

சரணம்.

க. ஏகாதசிவிரதம்பிறந்து - இருக்கநாங்களுஞ்சிறந்து
வேகமாகயமுனைசேர்ந்து - விரும்பிஞெமுழுகநேர்ந்து (கண்)

உ. எங்களுடன்வருந்துய்யா - இறங்கிதீர்த்தமாடமெய்யா
மங்களமானசெய்யா - மர்மமென்னசொல்வோமய்யா (கண்)

ங. தேடியெங்குமலைந்தோம் - தீர்த்தத்துட்போயுழைத்தோம்
ஓடிவந்தழைத்தோம் - உய்யும்வகையிழைத்தோம் (கண்)

ச. சொந்தமெங்களையாளும் - சொல்லுங்குறையைக்கேளும்
நந்தரையழைத்துமீளும் - நாதாஎங்கட்கெந்நாளும் (கண்)

ரு. கஷ்டஞ்செய்தானைத்தேடி - கண்ணாநீயும்நாடி
இஷ்டமுன்தந்தையைச்சேரும் - ஈசனேகண்பாரும் (கண்)

சா. லட்சுமியுடையநாதா - ரக்ஷியும்பொற்பாதா
பட்சிவாகனநீதா - பக்தர்க்கருளுந்தாதா. (கண்)

வசனம்.

கோபாலர் உரைத்ததைக்கேட்டுக்கண்ணன் வருணநகரஞ்சேர வருணன் கண்ணனைத்துதித்தல்.

விருத்தம்.

என்னமுடன் கோபாலர் மனதுநொந்தே
எம்பெருமான் செவிகளிலே சாற்றிநிற்கத்
துன்னமொடு வருணனது தூதர்வந்து
தூக்கிப்போனாரென்று மனதிலெண்ணி

கண்ணந்த மண்டலத்தை யடையும்போதிற்
கண்டபுனல் வேந்தனர்க் கியங்கொடுத்துத்
தண்ணமுதா தந்தைதனைத் தருவேனென்று
தாழ்ந்திட்டான் அவனடியில் வீழ்ந்திட்டானே. (௱௬௮)

இராகம் - துஜாவந்தி - ஆதிதாளம்.

பல்லவி.

பொறுத்திடவேண்டுமையா - யான்செய்தபிழையை
பொறுத்திடவேண்டுமையா.

அநுபல்லவி.

பொறுத்திடவேண்டுமையா - ஸ்ரீதராயானுய்ய
புத்தியில்லாமல்மெய்யா - புரிந்தேன்பொன்னாழிக்கையா (பொறு)

சரணம்.

௧. இன்றையதினந்தன்னில் - சோதைமைந்தா
ஏற்கும்பலனையுன்னில்
குன்றைப்பிடித்ததிருக் - கோபாலன்முன்னானே
சென்றதினாலடியேன் - ஜென்மசாபல்யமானேன் ... (பொறு)

௨. சாரமாயுந்தனடியில் - சாமளரூபா
சரணமாகப்படியில்
கோரசம்சாரபந்தக் - கொள்கைதனைக்கடந்து
கூடுவார்ஹரிபக்தர் - கூட்டத்துள்நடந்து ... ... (பொறு)

௩. நிரதிசையானந்தா - நிர்மலரூபா
நீலமேகக்கோவிந்தா
தரையிலவதரித்த - தண்ணருள்மணிவண்ணா
கரையேற்றியேயென்னைக் - காத்திடுமெய்க்கண்ணா ... (பொறு)

௪. யோகமாய்கைகளைந்தாய் - உலகந்தன்னை
உண்டுகண்ணீவளர்ந்தாய்
ஏகவஸ்துவேயாக - இருக்கின்றகாரணனே
எளியேனையழைத்திட - ஏலாதோகாரணனே ... (பொறு)

௫. அசுரவேளையிலின்று - அறியாமல்நந்தர்
ஆற்றிலுற்றாரென்று
பசுபோன்றவனாத்தூதர் - பதறியேயெடுத்தார்
வசுதேவர்மைந்தனிங்கே - வரும்படியாய்விடுத்தார் ... (பொறு)

௬. தந்தையையழைத்துநீரும் - கோகுலந்தன்னில்
சந்தோஷமாகச்சேரும்
எந்தன்மேற்கோபம் - இல்லாமற்பெருமானே
சிந்தைபெரிதுசெய்யும் - ஸ்ரீலட்சுமிதிருமாலே ... (பொறு)



வசனம்

வருணன் நகரத்தைவிட்டு வந்தகண்ணன் நந்தரையும் கோபாலரையும் பிர்ம்மகிருதமென்கிற மடுவில்குளிக்கும்படித் திட்டஞ்செய்து அவர்களெல்லாருக்கும் ஞானக்கண்கொடுத்து, வைகுண்டங்காட்டியதைச் சொல்லுதல்.

விருத்தம்.

வருணநகர்விட்டுவெளிவந்தகண்ணன்
வையகத்திலம்மடுவினருகில்நின்று
தருணமதில்நந்தருடன் ஆயர்யாரும்
தண்ஜலத்தில் நீராடியிருக்கும்போது
கருணையினாலவர்களுக்கு ஞானமுள்ள
கண்கொடுத்துத்தன்னுடைய ரூபம்யாவும்
பொருணிறைந்தவைகுந்த நாடுமுற்றும்
பூட்டினனன்றங்கே காட்டினனே. (௱௬௯)

இராகம் - தோடி - சாபு - தாளம்.

பல்லவி.

காட்டினார்வைகுண்டம் - ஆயர்களுக்கு
காட்டினார்வைகுண்டம்.
காட்டினார்வைகுண்டம் - கண்ணனனேகபண்டம்
மேட்டிமையாகக்காண மேன்மையவர்க்குத்தோண (காட்)

சரணம்.

௧. கோட்டிமன்மதன்போல - கொம்பனையார்க்குத்தோன்றும் ..
பூட்டியபூஷணம் - புராணந்திருமேனியென்றும்
சூட்டியதுளவணி - சுந்தரத்தோளானும்
கூட்டியதோழர்க்கு - குதுகலமாக்கோனும் ... (காட்)

௨. பெரியோருந்தவத்தால் - பெற்றதோர்லோகமும்
சரியாகவேயெங்குந் - தானனபோகமும்
ஹரியுமனேகவிதம் - அடைந்ததன்தேகமும்
கருமுகில்வண்ணனுங் - களித்திடுங்கேகமும் ... (காட்)

௩. ஓதியவேதங்கள் - உரைக்கின்றநாதமும்
சோதியாகவெங்குந் - துலங்கியகீதமும்
நீதியாகவங்கு - நிறைந்தவபேதமும்
ஆதியிலக்குரூரர் - அறிந்தநற்பாதமும் ... ... (காட்)

௪. ஒருநாளும்அழிவே - யுணராதவூர்களும்
பெருநாளும்அவனைப் - பிரியாதபேர்களும்
வருநாளும்மூலனை - வாழ்த்தும்வானவர்களும்
திருநாளும்அங்கே - திகழ்கின்றசீர்களும். ... ... (காட்)

வசனம்.

சரற்காலசந்திரனை வருணித்தல்.

விருத்தம்.

சொந்தமுள்ளவாயருக்குச் சோதைமைந்தன்
சொகுசாகவளநாடு காட்டிவிட்டான்
அந்தநந்தராயர்களுங் கலந்துபோற்றி
ஆரணனேயிவனென்னவறிந்துகொண்டார்
மந்தகா சனுநல்ல சரற்காலத்தின்
மாருதத்தி னுடனுல் லாசமாகச்
சந்திரனுங் குணதிசையி லிருளைநீக்கச்
சார்ந்திட்டான் கிரிமீதி லூர்ந்திட்டானே. ... (உஎ)

இராகம் - பிலஹரி - சாபுதாளம்.

பல்லவி.

உதயகிரிமேலே யுதித்தான்சந்திரனன்று
உத்தமன்குழலூதவே.

அநுபல்லவி.

இரவிதான்போமட்டும் - இருந்துகடலுக்குள்ளே
இருளைத்தூரத்திற்கும் - இளங்கண்ணன்சேவைகொள்ள. (உத)

சரணம்.

க. சரற்காலச்சந்திரன்வந்துபிரகாசிக்க
சந்திரகிரணங்கண்டு சக்கிரவாளம்புசிக்க
கருப்புவில்லதிகாரிகளித்தெங்கும்வசிக்க
கன்னிகளெல்லாருங் - கனவானைத்தரிசிக்க ... ... (உத)

உ. அம்புதன்னிலமர்ந்த - ஆம்பல்அல்லியும்நாண
அம்பரந்தன்னிலே - அம்புலியைக்காண
கும்பலாய்க்கொழுமணற் - குன்றுகளிற்றோண
கோவிந்தனைக்கண்டு - குமரிவிரகம்பூண ... ... (உத)

ந. பூமிப்பெண்முகத்திலே - பொட்டுவைத்ததுபோலே
பூர்வதிசையிலன்று - பூத்துவந்ததினாலே
கேமியங்கையனென்று - நினைப்புற்றதினாலே
நீளுங்கிரணமுற்றும் - நிசமாகக்காட்டிமேலே ... (உத)

ச. பக்ஷமாகவனேகம் - பக்ஷிகளுங்கூவ
பலபலமிருகங்கள் - படுத்தெழுந்துதாவ
லக்ஷ்மிநாயகனன்று - லாவண்ணியமாய்ப்பாவ
லாலிமங்களஞ்சொல்லி - ரம்பையர்மலர்தூவ ... (உத)



225

வசனம்.

இவ்விதமுதித்த பூர்ணசந்திரோதயத்தில் கண்ணன் குழலூதியது.

விருத்தம்.

சந்திரனு மெழுந்திருந்தான் சாமிமுன்னே
சரசமாம் மந்தமா ருதமும்வீச
மந்திரமாம் நாமத்தை யுடையான்மீது
மன்மதனு மலர்வாளி கொண்டுநாடச்
சுந்தரமாங் கன்னியரை மருவவெண்ணிச்
சோதைமைந்தன் மணற்குன்றின் மேலிருந்து
விந்தையாய் வேணுகா னம்படிக்க
வியந்திட்டார் மாதருட னயந்திட்டாரே ... (உஎக)

இராகம் - கலியாணி - சாபுதாளம்.

பல்லவி.

பூர்ணமிநிலவினில் - புள்ளாங்குழலையூதி
புகழுறமையல் கொண்டான்

அநுபல்லவி.

காரணமாயந்தக் - கன்னியரையழைக்க
நாரணன்பயிற்றிரு - நாதத்தினாற்றழைக்க ... (பூர்ண)

சரணம்.

க. கற்பகத்தருபோல - புஷ்பித்துமணந்துய்ய
அற்புதமாகவண்டு - தேனுண்டுகானஞ்செய்ய
செப்பமுடனேயிளந் - தென்றல்வீசியெய்ய
பற்பநாபன்பல்லவப் - பந்தலிலேயுய்ய
நகமுகத்திலும் - நந்தவனமலர் - நாதன்மேல்வந்துபடிய
பிகங்கள்கோகி - லங்கள்கிளிகள் - பேச்சிலமுதம்வடிய
சுகசரீரமயூரங்களெல்லாம் - தோகையால்வீசசுவாமியைக்கூடிய
பகவானிருக்குவனமுமன்று - பார்க்கஜோபிதமாகமுடிய ... (பூர்ண)

உ. அன்பாகவேயமுனை - அழகுஜலந்துளிக்க
அலைகள்விசிறிப்பன்னீர் - அவடமெங்குந்தெளிக்க
கும்பலாய்க்குறுமணற் - குன்றுபளபளிக்க
கோவிந்தநாமனுங் - கொண்டுமனங்களிக்க
அம்புவில்லியும் - அல்லிமலர்வாளி - அரிவையர்மேலேசொரிந்திட
இன்பமாகவே - எங்கும்பரிமளம் - எம்பிரான்மேல்வந்துபடிந்திட
சிங்காரவிளந்-தோப்புமரங்களும்-சேவைநோக்கியேசுழன்றுதெரிந்திட
மங்களமாய்-மங்கையருமன்று-மாரிவிழிமலர்களைப்பொழிந்திட (பூர்)

ங. குழலோசையைக்கேட்ட - பிராணியெல்லாங்களிக்க
கோவிந்தனைக்கூவி - கோபிகளும்விளிக்க
தழல்போலமன்மதன் - தாவியம்பையிறைக்க
தண்மதியன்றங்கே - தணலாயவர்க்குறைக்க
பட்டமாமுயிர்-விட்டபிணங்களும் - பச்செனப்பிழைத்தன்றுபாடவும்
கெட்டமிருகமுங்-துட்டதனம்விட்டு-கேட்டுஆனந்தக்கூத்தையாடவும்
இட்டஅசனத்தை-வாரியுண்ணவே-யெவர்க்குமுடியாமலோடவும்
பட்டணத்திலுள்ள-பக்தர்யாருக்கும் - பகவானிடத்தில்மனதுநாடவும் (பூர்)

ச. பக்ஷிஜாலமனேகம் பழங்கள்தம்மைக்கோத
பரிமளங்கொண்டுபிருந்தை பாலன்மீதில்மோத
இச்சையாகப்பிரமரம் - இறைந்துகானங்களோத
லக்ஷ்மியங்கேவந்து - லயிக்கவேணுஊத [லவே
கிரியில்மயில்களும்-கிருஷ்ணமப்புக்குத் - தோகையைவிரித்தாடும்போ
அரியைநினைந்து-ஆய்ச்சிமார்களும் - அடுத்துவருகுவர்சாலவே
பரிந்துகணவர்க்கு-உபசரியாமல் - பைந்தொடியார்களும்ஏலவே
விரைந்துவிரக-தாபத்தாலே - விரும்பிமெய்யைமறந்துகாலவே. (பூர்)

வசனம்.

வேணுகானங் கேட்ட கோபிகள் மோகங்கொண்டதைச் சொல்லுதல்.

விருத்தம்.

மையலது பெருகினர் மங்கையர்களன்று
மாதவன்தன் குழலொலியைக் கேட்டபோது
பையவே யெல்லோரும் பரிந்தெழுந்து
பதிக்கிரக கிருத்தியங்கள் தமைமறந்து
கையாழி வைத்ததிரு மாலைநத்திக்
கணவனை யணையவந்த சேதிமுற்றும்
உய்யவே பரீக்ஷித்து ராஜன்கேட்க
உரைத்திட்டார் சுகமுனியு நிறைத்திட்டாரே ... (உ௱உ)

இராகம் - முகாரி - அடைதாளம்.

பல்லவி.

கிஷ்டன்மேல்மோகங் கொண்டசரித்திரம்
இஷ்டமாய்க்கேளும் வேந்தே

சரணம்.

க. கஷ்டமானசமுசாரத்திலாசையைக்
கன்னியர்கள்மறந்தார் - கல்லா
திஷ்டநிக்கிரகனைநினைந்துமனந்தன்னில்
தோகையருஞ்சிறந்தார் ... ... ... ... (கிஷ்)



உ. கன்றைவிட்டுப்பால்கறக்கமறந்தொருத்தி
காரியஞ்செய்திருந்தாள் - அந்த
குன்றையெடுத்ததிருக் - கையனையேயுன்னி
கோபாலனென்றுரைத்தாள் ... ... ... ... (கிஷ்)

ங. கையிற்கலசம்எடுத்துஒருகோபி
கானைதன்னைக்கறந்தாள் - அவள்
செய்யும்வியாபாரத்திற்சித்தம்வையாமலே
ஜெகதீசனைற்சிறந்தாள்... ... ... ... ... (கிஷ்)

ச. காய்ச்சினபாலையிறக்கமறந்தொருத்தி
காமங்கொண்டேயலைந்தாள் - அந்த
பேய்ச்சிமுலையுண்டபெருமானைமனதில்
பேசியங்கேமலைந்தாள்... ... ... ... ... (கிஷ்)

ரு. பாலகனுக்குப்பால்கொடுக்கமறந்தொருத்தி
பாடிமனங்களித்தாள் - வேண்டுங்
காலத்திலேயன்னங் - கணவனுக்கிட்டிட
கைவராமலிளித்தாள் ... ... ... ... ... (கிஷ்)

சு. பாயசத்துக்குப்பால்கலக்கமறந்தொருத்தி
பாகமனேகஞ்செய்தாள் - அந்த
மாயாவதாரனைமனதில்நினைந்தவள்
மையல்பெருகியுய்தாள்... ... ... ... ... (கிஷ்)

எ. புசித்துஅன்னந்தன்னை கைகழுவாமலே
போகமனந்துணிந்தாள் - மேலும்
பஜித்துக்கண்ணன்தன்னைபார்க்கநிர்வாணியாய்
பலநகைகளணிந்தாள் ... ... ... ... ... (கிஷ்)

அ. மஞ்சள்முகந்தனில் - பூசமறந்தொருத்தி
மார்பினிற்பூசிக்கொண்டாள் - திவ்விய
அஞ்சனந்தன்னை அழகாய்விழிக்கிட்டு
ஆடியேயங்கில்நின்றாள் ... ... ... ... (கிஷ்)

க. இடையிற்புடைவையுடுக்கமறந்தொருத்தி
எங்குந்திரிந்துவந்தாள் - அந்த
நடையிலழகான நாராயணன்தன்னை
நாடிமனதுவந்தாள் ... ... ... ... ... (கிஷ்)

ம. தரிக்கும்பணிகளைத்தகுதியில்லாமற்சிலர்
தடமாடியேயணிந்தார் - அந்த
அரியிடமாகவேயாசையினாலோடி
அனைவர்களும்பணிந்தார் ... ... ... ... (கிஷ்)

௰௧. பெற்றதாய்தந்தை - புருஷன்முதலோரை
பெருமூடராய்நினைந்தார் - அந்த
உத்தமமாய்வேணு - ஊதுங்கண்ணனண்டை
ஓடியேவந்தணைந்தார் ... ... ... ... (கிஷ்)

௰௨. இன்னஞ்சிலபேரை வீடுதன்னிலடைத்து
இருபுறந்தாளடைத்தார் - அவர்களில்
என்னலக்ஷ்மிநாதா என்றுசிந்தையந்தி
லதிமுக்தியடைந்தாள் ... ... ... ... ... (கிஷ்)

(வசனம்.)

புருஷனை விட்டுக் கண்ணனைச்சேர நினைத்தவர்களில் ஒருத்தியாகியசிந்தையந்தி எவ்வாறு பரமபதஞ் சேர்ந்தாளென்று பரீக்ஷித்துக் கேட்கச்சுகமுனிவர் சந்தேகம்நீக்குதல்.

விருத்தம்.

முத்தியடைந் தாளென்ற மொழியைக்கேட்டு
முதுமதியோன் சுகப்பிரம்ம ரிஷியைநோக்கிப்
பத்தியினால் விபசாரஞ் செய்யலாமோ
பதிவிரதா தருமநெறி தப்பிப்போகப்
புத்திகெட்டுக் கண்ணனையே கூடிமுற்றும்
புருஷனையும் விலக்கிவந் தவளுக்கேது
உத்தமனே பொன்னாடு வாய்த்ததென்ன
உரையென்றான் ஐயமதைக் களையென்றானே (௨௱௩)

இராகம் - ஆகிரி - சாப்புதாளம்.

கண்ணிகள்.

௧. சொல்கிறேன்கேளும் - பரீக்ஷித்தேநாளும்
சோதைமகன் விருத்தாந்தம்
எல்லையில் எதுவும் இவனாயிருந்திடல்
என்பதுவே சித்தாந்தம் ... ... ... ... ... *

௨. முன்னஞ்சொல்லிய மொழியைமறந்துநீர்
முறைமையாய்க் கேட்கிறீரென்னை
இன்னந்தெளியச் சொல்கிறேன்கேளும்
எம்பெருமான் கதைதன்னை ... ... ... ... *

௩. பயத்தாலாவது அவனைஒருகுரல்
பாரிலழைத்தாலே போதும்
நயத்தாலாவது நாரணவென்றே
நமஸ்கரித்தால் வினைதீரும் ... ... ... ... *



௪. திட்டியாவது கிருஷ்ணவென்றவனை
தியானித்தாலே கருணைநேரும்
மட்டியானதோர் அஜாமளனுக்கு
மார்க்கங்கிடைத்தது பாரும் ... ... ... ... *

௫. தூஷித்திருந்த சிசுபாலனைக்கண்ணன்
தொந்தரையறவே நினைத்தார்
பூஷித்திருந்த புனிதன் பிரகலாதனன்
பொருந்தப் பிராட்டியோடணைத்தார் ... ... ... *

௬. கண்டாகருணன் என்றவனுக்கு
கனகநாடுதந்து களித்தார்
அண்டையில்வந் ததுருவனுக்குடனே
அழியாப்பதவியு மளித்தார் ... ... ... ... *

௭. பாஷாணமான அகலிக்குஅடியால்
பதிசாபத்தைத் தீர்த்தார்
தோஷரகிதன்செய் துரோபதைமானத்தை
தோணமலேநின்று காத்தார் ... ... ... ... *

௮. சரணமடைந்த இலங்கைவிபூஷ்ணன்
ஜனனமரணங்களையரித்தார்
மரணமடைந்த ஜடாயுவைமாதவன்
வலக்கையிலேவைத்தெரித்தார் ... ... ... ... *

௯. ஜானகியிடத்தில் பிழைசெய்தகாக்கைக்கு
தாசரதிகண்கொடுத்தார்
கானகந்தன்னிலே தேடியேவந்திடும்
கன்னியரிஷ்டமுந்தொடுத்தார் ... ... ... ... *

௰. மடுவிற்கரியன்று மூலமென்னக்கரா
மடியவோடிவந்துகாத்தார்
நடுவிலமுதத்துக்கா - கையேந்தியவரக்களை
நாரணனேநின்றேய்த்தார் ... ... ... ... ... *

௰௧. அடைக்கலம்புகுந்த சுக்கிரிவனுக்கங்கே
ஆனந்தமாமுடிசூட்டினார்
படைக்கலம்விட்டந்தபலமுள்ளவாலியை
பரலோகமேறவேவோட்டினார் ... ... ... ... *

௰௨. சத்துருவானாலும் மித்துருவானாலும்
சாமியவனுக்கு என்ன
புத்திரவாச்சல்யமுள்ள லக்ஷ்மிநாதன்
பூமியிற்புதுமையன்ன ... ... ... ... ... *

வசனம்.

வந்த பெண்களோடு கண்ணன் வாக்குவாதஞ்செய்தல்.

விருத்தம்.

சொல்லியே சந்தேக முழுதுந்தீர்த்துச்
சோதைமைந்தன் திருச்சரிதை தன்னைக்கேளும்
மல்லிகையி லமர்ந்தசிறு வண்டுமென்று
மதுவையுண்ண மறந்திருந்த கானத்தாலே
மெல்லியரு மாரன்கை யம்பால்நொந்து
மெய்ச்சுபுகழ் வேணுடையா னருகிற்சேர
நல்லமறைத் திருவுருவ னவர்களுன்ளே
நாடினன் வாதுசெய்யவோடினனே ... (௨௱௪)

இராகம் - யமுனாகலியாணி - ஆதிதாளம்.

பல்லவி.

வந்தபெண்களைக்கண்டுகண்ணனும்
வாதிப்பார் - மனஞ்சோதிப்பார்

அநுபல்லவி.

இந்தவனத்தினில் வந்ததேதென்று - ஏசுவர் - விகடம் - பேசுவர் (வந்)

சரணம்.

௧. தந்தைதாய்ச்சகோதரருக்கு
தலைவணக்கங்கள் வைத்துநீர்
மந்தகாசமாய்ப் பிருந்தைவனந்தனில்
மருவவும் வேண்டிநத்துறீர்
சொந்தமாகவே யிருக்குமெந்தனை
சோதிக்கும்படியெத்துறீர்
குந்தலாங்கியெல்லாருங்கூடியே
கும்பலாகவம்பிகளேபோமென்று... ... (வந்)

௨. பாலகருக்குப் பாலைப்புகட்டியே
பாடிவீட்டில் தட்டாமலே
காலமறிந்துகணவனண்டையில்
கலந்துமருவக்கிட்டாமலே
நீலம்போலக்கண்ணுடையபெண்களா
நித்திரைபண்ணவொட்டாமலே
கோலமாதரேகுழந்தையழுதிடில்
கோபிப்பார்போங்களங்கேயென்று... ... (வந்)



௩. வீட்டிலிருக்கும்பேரைமதித்து
வேலைசெய்துநில்லாமலே
நாட்டிலிருக்கும்வேலைக்காரருக்கு
நடத்துமலுவல்சொல்லாமலே
காட்டிலிருக்குஞ்சிம்பமுதலிய
கடுவிலங்குபயமிலாமலே
ஓட்டமாகவேவந்தீர்களும்
உகந்துவீட்டிற்குப்போகுவீரென்று ... (வந்)

௪. அர்த்தராத்திரிவேளைதன்னிலே
அன்னியபுருஷனைத்தேடியே
சத்தமொருவர்கேளாமலூரிலே
சகிகளெல்லோருங்கூடியே
பர்த்தாவிடத்திற்பயமில்லாமல்
பதறிநீங்களுமோடியே
கர்த்தனொருவனையறிந்துநில்லாமல்
கடுகிவந்ததுபோதும்போமென்று ... ... (வந்)

௫. ஊர்கள்மடுக்கள்யாவுந்தாண்டினீர்
உற்றார்சொல்லைக்கேளாமலே
பேர்களெவர்களுஞ்சொல்லியேசவே
பெருவனத்தில்வாளாமலே
பாரிலெவரையுஞ்சட்டைபண்ணமலே
பரிந்துகைவிட்டாளாமலே
கார்முகில்வண்ணனையென்றுமெண்ணியே
கடந்துவந்தீரேனோபோமென்று ... ... (வந்)

௬. ஊமைசெவிடுபொட்டைநொண்டியா
உதவாமல்அவரிருந்தாலும்
காமியாகவேபாஸ்திரீகமனமும்
கங்குலிற்புரிந்தாலுமே
பாமரனய்ப்பயித்தியங்கொள்ளவே
பார்க்கவெங்குந்திருந்தாலுமே
கேமந்தப்பியேவந்ததுபோதும்
நீலிப்பெண்களேபோகநீரென்று ... ... (வந்)

௮. மாமிமாமன்மைத்துனனுங்கொழுனனும்
மதனியோரத்திவைவரே
பூமிதன்னிலேயுங்கள்மனிதரும்
புடைத்துநிந்தனைசெய்வரே

சாமியென்றெனைவந்தடைந்திடில்
சரியுங்கூந்தலைக்கொய்வரே
நேமியாளனைநினைந்துபயமின்றி
நீங்கள்போகுவீர்வீட்டுக்குளென்று ... ... (வந்)

௯. நிர்மலமாமிந்தயமுனாதீரத்தில்
நெருங்குரிஷியிடந்தன்னிலே
பிர்மாமுதலானதேவர்களுங்கூடி
பேசியுலவுந்தடந்தன்னிலே
மர்மமாய்லக்ஷ்மிநாதனும்நீடி
மகிழ்ந்திருக்குமடந்தன்னிலே
தர்மமோவுங்களைக்கூடிச்சுகிப்பது
தையலரேநீங்கள்போங்களென்று ... ... (வந்)

வசனம்.

வந்தகன்னியர் கண்ணனைப் போவென்று சொல்லுதல் நியாயமோ வெனக் கேட்குதல்.

விருத்தம்.

வந்ததேதென்னவெனக் கண்ணன்கேட்க
வஞ்சிமின்னற்கொடியிடையாரழுதுவாடி
அந்தமுள்ளகரந்தாடைதாங்கநின்று
அரவிந்தமுகங்கோணநிலத்தைநக்கீறிச்
சுந்தரமாயெங்களதுவீட்டைவிட்டுச்
சூழவந்ததிதுவிஷயமாகத்தானோ
தர்தரமாங்கிருஷ்ணனேசொல்லுமென்றே
தயங்கினார்பாடிஎதிர்மயங்கினரோ. ... ... (௨௫)

இராகம் - எதுகுலகாம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

இங்கேவந்தபேரையங்கேபோபோவென்றால்
என்னநியாயமோசுவாமி

அநுபல்லவி.

அங்கேமன்மதனாலே யடிபட்டெல்லாரும்
ஆறவேயிங்கேவந்தோம் என்சுவாமி ... ... ... (இங்)

சரணம்.

௧. தந்தைதாய்சகோதரான் - பதிபுத்திராதிதனங்கள்
சகலமும்நீரென்றெண்ணி



அந்தஆபாசபந்து - அனைவரையுந்துறந்து
ஆசையுன்மீதிலேநண்ணி
மந்தகாசனேயுன்னை - மருவவேண்டுமென்று
மார்க்கமாகவேநோன்புபண்ணி
சொந்தமாகநினைந்து - வந்தஎங்களையெல்லாம்
துரையேநீயெப்படிதுணிந்து ... ... ... ... (இங்)

௨. போகவென்றாலோகாலும் - வாராதுஉன்னைவிட்டுப்
போகமனம்நேராது
ஆகையினாலுனக்கு - அடிமைசெய்யுமஸ்தம்
அதைவிடவேகோராது
ஏகவஸ்துவான - இக்கண்ணனைத்தவிர
எங்கண்கள்பாராது
மேகவண்ணாஉம்முடை - மிகுபதசாக்ஷியாய்
மெய்யாயுனையடுத்துநின்ற ... ... ... ... (இங்)

௩. மாதவாவுந்தன்குரல் - ஒலியைக்கேட்டவந்த
மாடும் இரையெடாது
சாதகமாயுந்தன் - சரளிதன்னைக்கேட்ட
சர்ப்பம் ஆட்டல்கெடாது
வேதனேயுந்தன்திரு - வேணுநாதத்தைக்கொண்ட
விலங்கினமும் ஓடாது
பேதையர்உம்முடைய - பெருமையையேபாடிப்
பிரீதியைமேலிட்டுத்தேறி ... ... ... ... (இங்)

௪. சின்னப்போதுபிடித்து - திருடிவெண்ணெயுண்டு
சிமானைப்போற்புரந்தீர்
பன்னகரூபனந்த - பலராமனுடன்கூடிப்
பாடிவந்துசிறந்தீர்
உன்னிதமாகவே - யுகந்தெங்களைத்தோய்ந்து
ஒருவனாகவேகலந்தீர்
சொன்னமொழிவிட்டு - சோதைமைந்தனேயிப்போ
தூரந்தன்னிலிருந்துஓடி ... ... ... ... (இங்)

௫. கதறிவிரகமென்னும் - காய்ச்சலைத்தாளாமல்
கன்னியரும்நொந்தோம்
அதரபானமான - அமுதமெங்கட்குத்தந்து
ஆதரிக்கவேவந்தோம்
சிதறவிடாமலே - சீக்கிரமெங்களைக்கூடிச்
சேரவுரையுந்தந்தோம்

பதறுதெங்கள்தேகம் - பத்மலோசனுவிந்த
பரிவேயுருவாய்ச்சேர்ந்துகூட ... ... ... .. (இங்)

௬. அன்றுதேவருக்காக - அமுதங்கையிலெடுத்து
ஆதரித்திடவில்லையோ
இன்றெங்களுடைய இனியசொற்களைக்கேட்டு
இதங்கமனம்வல்லையோ
நின்றுகால்கடுக்க - நெருங்கியிருக்கும்பேர்க்கு
நியாயமொன்றுமில்லையோ
சென்றுஞ்செல்லாமலே - சித்தம்பிரமித்தளம்மை
சேரவும்லட்சுமிநாதனேநீட ... ... ... .. (இங்)

வசனம்.

தாசரதிகளாகிய கன்னியரிஷ்டப்படிக் கண்ணன் விளையாடுதல்.

விருத்தம்.

காமியாம் பெண்களுளா தன்னைக்கேட்டுக்
கண்ணனுமே கருணையருள் சொரிந்தானிந்தப்
பூமியிற்புல் லெறும்பாதி முதலாயுள்ள
புன்ஜீவ ராசிகட்கும் படியளக்குநாதன்
நேமியுள்ளான் சிறுநகையே செய்துநின்று
நிசாபதியின் வெளிச்சத்தில் வேறுபட்டுச்
சாமியுமே யாத்மராம ரூபங்கொள்ளச்
சகித்திட்டார் கூடிமனஞ் சுகித்திட்டாரோ ... (உ௱௬)

இராகம் - மோகனம் - ஆதிதாளம்.

பல்லவி.

சுகித்தாரேகண்ணன் - கன்னியரிஷ்டம்
வகித்தார் மணிவண்ணன்

அநுபல்லவி.

சுகித்தாரேவண்ணன் - சுந்தரமாய்க்கூடி
தளிர்த்தபல்லவமீதில் - தானுகவிளையாடி ... ... (சுகி)

சரணம்.

சந்தனத்திருநிழலும் - சாரும்ஒளிவிழலும்
மந்தகாசன்விருப்பும் - மார்பில்திருஇருப்பும்
நந்தர்சுதன்தேட்டமும் - நாயகிமாரீட்டமும்
குந்தலாங்கிகளுடன் - குளிர்ந்தங்கே
இருந்தாரே - கண்ணன் - கோபிகளுடன்
நிறைந்தார்மணிவண்ணன்



சந்தனமலாரனபூம்படுக்கைமேலே
விந்தையாகக்கையை - வீசியங்நிலவிலே... ... ... (சுகி)

௨. செண்பகமலர்ச்சாலையும் - செங்கழுநீர்ச்சோலையும்
கும்பலாகக்கரியும் - கூடியங்கேதேடியும்
உம்பர்தொழுநாதனும் - உகந்தக்தபோதனும்
கொம்பனையாருடன் - குதித்தங்கே
கூடினார்கண்ணன் - கோபிகளுடன்
ஆடினார்மணிவண்ணன்
செண்பகமலரான - பூம்படுக்கையின்மேலே
அன்பாகஅவருடன் - ஆடியங்நிலவிலே... ... ... (சுகி)

௩. புன்னமரத்தோப்பும் - பூங்கமுகுவாய்ப்பும்
உன்னதமாம்வரையும் - உயர்யமுனைக்கரையும்
சின்னகுயிலோசையும் - செந்திருமேலாசையும்
குன்றமெடுத்தவன் - சிரித்தங்கே
குதித்தாரேகண்ணன் - கோபிகளுடன்
ரமித்தார்மணிவண்ணன்
புன்னமலரான - பூம்படுக்கையின்மேலே
அன்னநடையாரை - அணைந்தங்நிலவிலே ... ... (சுகி)

௪. வெட்சிசெடிகணமும் - வீசியிருக்கும்மணமும்
பட்சிகளுடையதிரளும் - பாடியிருக்குங்குரலும்
பட்சமாகவேகலந்து - பரிமளங்கள்மலர்ந்து
உச்சிதசீலன் - உற்றங்கே
உணர்ந்தாரேகண்ணன் - கோபிகளுடன்
மணந்தார்மணிவண்ணன்
வெட்சிமலரான - பூம்படுக்கையின்மேலே
வேணுமகிபனும் - வெண்மணல்நிலவிலே ... ... (சுகி)

௫. மல்லிமுல்லைக்கொடியும் - மார்க்கந்தன்னிற்படியும்
அல்லிமலரோடையும் - அருமந்தவாடையும்
மெல்லியர்மேல்மோகமும் - மேவும்பணியனேகமும்
சொல்லியவருடனே - சுரந்ததங்கே
தோய்ந்தாரேகண்ணன் - கோபிகளுடன்
சேர்ந்தார்மணிவண்ணன்
மல்லிகைமலரான - பூம்படுக்கையின்மேலே
சல்லியமில்லாமல் - சகசமாய்நிலவிலே ... ... (சுகி)

௬. பாதிரிமரச்சமூகமும் - பாரிசாதஅமோகமும்
சாதகமயிலாடவும் - சரசமாய்க்குயில்பாடவும்

சோதைமகன்மெச்சவும் - சுந்திரிமார்நச்சவும்
நீதமுடனே - நித்தியானந்தன்
நினைந்தாரேகண்ணன் - கோபிகளுடன்
அணைந்தார்மணிவண்ணன் -
பாதிரிமலரான - பூம்படுக்கையின்மேலே
பாலலக்ஷ்மிநாதன் - பரிந்தந்நிலவிலே ... ... ... (சுகி)

வசனம்.

கோபிகளோடுகண்ணன் பிருக்ஷையில்திருக்கூத்தாடியது.

விருத்தம்.

களித்தந்தக்கயல்விழியார்தங்களோடு
காமரதிகேளிகளுஞ்செய்தபின்னுங்
குளித்தெழுந்துயமுனைநதிக்கரையின்மேலே
கும்பலாய்ப்பெண்களெலாங்கூடிநிற்க
ஒளித்துலவுந்தாரகையினடுவிலோடி
உதித்துவருமுவாமதிபோற்காணவன்று
அளித்துமதுஇதழ்பருகவாய்ச்சியர்க்குள்
ஆடினாரச்சுதனும்பாடினாரே (௨௱௭)

இராகம் - மோகனம் - சீசார்த்தம் - ஆதிதாளம்.

பல்லவி.

ஆடினாரோகண்ணன் - அவர்நடுவில்
பாடினாரோகோபிமார் -

அநுபல்லவி.

ஓடிவனத்திற்சென்று - கூடியவர்கள்நின்று
சூடிமலர்கள்கொண்டு - பாடி - தா, ததிங்கண, தோமென்று (ஆடி)

சரணம்.

௧. தண்டைபாடகஞ்சிலம்பு - தாள்தன்னிலசைய
கொண்டையில்மயில்தோகை - கோலமுடனிசைய
வண்டுசூழ்வனமாலை - மார்பினிற்கசிய
புண்டரீகாக்ஷனையும் - பம்சரியூதி
ஆடினாரே அங்கே
செண்டார்கருங்குழல் - பெண்டுகள்நடுவினில்
அண்டமளந்தபாதன் - தக்கட-ததிங்கட-தளங்குதோமென்று (ஆடி)

௨. கங்கணந்தோள்வளை - காந்தியாய்த்துலங்க
சங்குவரிக்கண்டத்தில் - சரப்பளியும்இலங்க
தொங்கலுத்ரீயமும் - ஜோதியாய்க்குலுங்க



தோம்தோமென்றுஅந்த - சோதைமைந்தன்
ஆடினாரே அங்கே
சுட்டிமுகவட்டுடன் - பட்டங்களுமசைய
கொட்டிக்கரமிரண்டை - தட்டித்தா-ததிங்கணதோமென்று (ஆடி)

௩. வக்ஷஸ்தலந்தன்னில் - வகுளமுந்தரித்து
கச்சைகட்டியிடையில் - தட்டியைவரித்து
உச்சிதமாகவே - வேணுபூரித்து
அச்சுதன்பாதவின்னியாசம் - அவர்நடுவில்
ஆடினாரோ அங்கே
பச்சைசால்வையோடு - பணியனேகந்தரித்து
உச்சிநிலாவிலே - தக்கிட-ததிங்கிடதளங்குதோமென்று ... (ஆடி)

௪. தாளிக்கொழுந்தை - தலைதனிற்சூட்டி
பீலித்தழையை - பிணைத்ததிற்கூட்டி
காளங்கிமர்த்தாபன் - கைகளைநீட்டி
ஆளமனமுங்கொண்டு - அவருடனே
ஆடினாரோ அங்கே
வேலிலக்ஷ்மீபதி மெல்லியருடன்கூடி
காலியைமேய்த்த - கரதாளி - தாததிங்கணதோமென்று ... (ஆடி)

வசனம்.

கன்னியர் கண்ணன் இனி நம்மைவிட் டகலானென்று எண்ணிய வுடன் கண்ணன் மறைந்துபோக ஆரண்ணியத்திலவர்கள் தேடியலைதல்.

விருத்தம்.

ஆடியந்த வனநடுவி லயர்ந்தோராகி
யாண்டவனு நம்மைவிட் டகலானென்றே
பாடியே பைந்தொடியார் கெர்வங்கொள்ளப்
பரந்தாம னுடனதையுந் தானறிந்து
ஓடியப்போ தொருத்தியுடன் மறைந்துநிற்க
ஒருங்காக மற்றந்த மாதரெல்லாம்
வாடியே யாரண்ணியந் தன்னிற்றேடி
வருந்தினார் காணமதி திருந்தினாரோ ... ... (௨௱௮)

இராகம் - புன்னாகவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

கண்டீரா கண்டீரா - கண்ணன்தன்னைக்
கண்டீரா கண்டீரா

அநுபல்லவி.

கண்டீரா கண்டீரா காடுசெடிமலைகாள்
கொண்டல்வண்ணன்மேனியைக் - குன்றுகாள்சிலைகாள் ... (கண்)

சரணம்.

௧. பூமியளந்ததாளன் - பொன்னாழியேந்துந்தாளன்
நேமியங்கையாளன் - நித்தியனைக்கண்டீரா ... ... (கண்)

௨. மல்லிகைக்கொடிகளா - மாமரச்செடிகளா
மெல்லியமுடிகளா - மெய்யனைக்கண்டீரா ... ... (கண்)

௩. செண்பகமரங்களா - சிங்காரத்தரங்களா
கண்படுகரங்களா - கண்ணனைக்கண்டீரா ... ... (கண்)

௪. புஷ்பச்செண்டுகளா - புதுமதுவண்டுகளா
நிஷ்பலநண்டுகளா - நேயனைக்கண்டீரா ... ... (கண்)

௫. கனியின்றினுசுகளா - கதலிபனசுகளா
இனியவினைவுகளா - இஷ்டனைக்கண்டீரா ... ... (கண்)

௬. ஆறுகுளம்மடைகாள் - ஆம்பலூரோடைகாள்
வெறுமணற்குன்றுகாள் - விமலனைக்கண்டீரா... ... (கண்)

௭. மாடேறுடுகாள் - மயிற்கூட்டப்பேடுகாள்
நாடும்மேடுகாள் - நாதனைக்கண்டீரா ... ... (கண்)

௮. பக்ஷிஜாலவொயில்காள் - பாடுகின்றகுயில்காள்
லக்ஷ்மிக்கிள்ளைகாள் - லாவண்ணியனைக்கண்டீரா ... (கண்)

வசனம்,

கன்னியர் கண்ணனை வனத்தில் அங்குமிங்கு மோடியழைத்தல்.

விருத்தம்.

கண்டீரா வென்றுரைத்து மாதரந்தக்
காடெல்லாமவ்விரவிற்பயமேயற்றுப்
பண்டுலகமுண்டுமிழ்ந்தபகவான்றன்னைப்
பதியாகவவர்கூடவேண்டுமென்று
வண்டுமலர்வாளியினால்வருந்தமேனி
வடிவாளன்நாமத்தைமனத்திருத்திக்
தண்டாளவடமசையவோடியோடித்
தாண்டினார் அழைத்தவனைவேண்டினாரே ௨௱௧

இராகம் - சங்கராபரணம் - சாபுதாளம்.

பல்லவி.

ஓநாதா-நாதா-நாதா - பிராண நாதா
நாதா - எங்களைக்காருங்கோபாலா



அநுபல்லவி.

நாதா இங்குவாராவிட்டால்
நாங்களுயிர்வைக்கமாட்டோம்
ஞாயமாவுனக்குப்பூபாலா ... ... ... ... (ஓநா)

சரணம்.

௧. விரகாக்கினிஆறில்
விழுந்திட்டோமக்கீரில்
கரையேற்றவாரும்கோபாலா
ஓநாதா - நாதா - நாதா - பிராணநாதா
கட்டியெங்களைச்சேரும்பூபாலா ... ... ... (ஓநா)

௨. கருப்புவில்லாளிகண்டு
கடினசித்தமாய்நின்று
வருத்துகிறானம்பால்கோபாலா
ஓநாதா - நாதா - நாதா - பிராணநாதா
உகந்துஎங்களையாளும்பூபாலா ... ... ... ... (ஓநா)

௩. மலர்கள்கரிகிப்போயும்
மாரனைப்பார்நீயும்
அன்றுமெம்மைக்காரும்கோபாலா
ஓநாதா - நாதா - நாதா - பிராணநாதா
அணைந்தெங்களைக்கிட்டும்பூபாலா ... ... ... (ஓநா)

௪. எங்குசென்றுதேடுவோம்
இணையடியைநாடுவோம்
தங்குமிடஞ்சொல்லும்கோபாலா
ஓநாதா - நாதா - நாதா - பிராணநாதா
கூடியெங்களைச்சேரும்பூபாலா... ... ... ... (ஓநா)

௫. கூவிக்குரல்ஓய்ந்ததே
கூசிக்காலுந்தேய்ந்ததே
நாவிலமுதமுண்ணுங்கோபாலா
ஓநாதா - நாதா - நாதா - பிராணநாதா
நம்பினஎங்களைப்பாரும்பூபாலா ... ... ... (ஓநா)

௬. லக்ஷ்மிமார்பில்வைத்தீர்
லலிதம்எங்கேகற்றீர்
பக்ஷமாய்வாருங்கோபாலா
ஓநாதா - நாதா - நாதா - பிராணநாதா
பரிவாயெங்களை நாடும்பூபாலா... ... ... ... (ஓநாதா)

வசனம்.

கண்ணன் பிரிவாலுண்டாகிய விசனத்தைநீக்கக் கோபியர் கண்ணனைப்போலநடித்தல்.

விருத்தம்.

நாதனைத்தேடியவர்வனத்திலெங்கும்
 நரிபோலநுழைந்தவனைக்காணமையலே
பேதமிந்தமதிசெய்யும்வாதைதன்னைப்
 பேதிக்கக்கன்னியருமனதிலெண்ணி
நீதமுள்ளபலகருமமுன்னம்நித்தியன்
 நீணிலத்திற்செய்தவிளையாட்டைச்சொல்லிப்
போதமுள்ளபலநடனமாகவந்தப்
 புண்ணியராய்விளையாடநண்ணினரே (உ௱ய)

இராகம் - தேசிகதோடி - ஆதிதாளம்.

பல்லவி.

விளையாடினர் கோபியர்சென்று
வேணுகானனைப்போலவேநின்று

அநுபல்லவி.

களையாமலேயங்குநாடி - சர்வக்கியனைப்பாடிப்பாடி ... (விளை)

சரணம்.

௧. பாலனென்றுசொல்லியொருத்தி - பாடிவனந்தன்னிலிருந்தாள்
கோலபூதகிபோலேயொருத்தி - குந்திமுலைகொடுத்ததாக ... (விளை)
௨. கிருஷ்ணனென்றுசொல்லியொருத்தி - கெங்கையோரந்தன்னிலிருந் [தாள்
கிருஷ்ணன்போலவேயொருத்தி - வேஷங்கட்டிநின்றதாக (விளை)
௩. சோதைமைந்தனென்றுஒருத்தி - சூழுந்தோழரோடேயிருந்தாள்
வாதைசுழல்காற்றுபோல - வந்தெடுத்துப்போனதாக ... (விளை)
௪. கொக்குஎன்றுசொல்லியொருத்தி - கோணரூபமாகவிருந்தாள்
பக்குவமக்கண்ணன்போல - பாலரோடுவந்ததாக ... (விளை)
௫. துட்டகாளியனென்றுஒருத்தி - துலங்குமடுவிலேயிருந்தாள்
எட்டமுடியிலேறிமிதித்து - எவருங்காணநடித்ததாக ... (விளை)
௬. நாகக்கன்னிகளாகச்சிலரும் - நயந்துவரங்கேட்டிருக்க
ஏகவஸ்துபோலொருகோபி - இஷ்டமாகக்கொடுத்ததாக (விளை)
௭. வரைக்குப்பொங்கலிடுவராக - வளைந்துசிலர்நின்றிருக்க
உரைக்குநாதனுமொருத்தி - ஒதியங்கிலிருந்ததாக ... (விளை)



௮. அன்றுஇந்திரனென்னமேகம் - ஆக்கினையுஞ்செய்தொருத்தி
நின்றுஒருத்திகண்ணன்போல - நிலத்தில்வரையையெடுத்ததாக (வி)
௯. பலராமனென்றுஒருத்தி - பாலலீலைசெய்திருக்க
பலராமனைப்போலவொருத்தி - பசுக்கள்மேய்த்துநின்றதாக (விளை)
௰. மண்ணையுண்டானென்னவொருத்தி-மகிழ்ந்து வாயைக்காட்டியிருக்க
வெண்ணெயுண்டான்போலவொருத்தி - வேடிக்கைசெய்திருந்ததாக()
௰௧. தாமரைக்கொடியாலேஒருத்தி - தாம்புஎன்னகட்டவிருக்க
சாமரையுங்கையிலெடுத்து - சார்ந்துவீசிநின்றதாக ... (விளை)
௰௨. உரலோடுகட்டவொருத்தி - உகந்துநடுவிலேயிருக்க
விரலிலேவெண்ணெயெடுத்து - வீசியுதட்டிவிழைத்ததாக (விளை)
௰௩. கூட்டக்கோக்களாகச்சிலரும் - கோபாலபாலராகப்பலரும்
காட்டுத்தீயைககண்டுமயங்க - கண்ணனைப்போலணைத்ததாக (விளை)
௰௪. இங்கிலிவர்அசுரர்போல - ஏற்றபலரூபங்கொண்டு
தங்கிமனம்போனபடியே - தையலக்ஷ்மிபதியைத்தேடி (விளை)

வசனம்.

கண்ணன்மறைந்த அதிசயத்தைக் குறித்து ஒருத்தியோடொருத்திச் சொல்லிக்கொள்ளுதல்.

விருத்தம்.

விளையாடிக்கொடியிடையாரலைந்துதேடி
 வேணுதனைக்காணமல்மெய்ம்மறந்து
களையாடுமதர்களுங்கானகத்தில்
 கருமுகில்நேர்மேனியன்றன்னடியைமண்மேல்
வளையவேவந்தவரிலொருத்திகண்டு
 வஞ்சியர்களெல்லார்க்குங்காட்டிநின்ற
கிளையோடுதாங்களவன்புகழைப்பாடிக்
 கேளென்றுரிதுநல்லநாளென்றுரே ஙாயக

இராகம் - சங்கராபரணம் - சாபு தாளம்.

பல்லவி.

பார்சகி - பாரளந்தாரடி - பார்சகி

அநுபல்லவி.

பாரு - பாருசகி - பாரளந்தார் சகி ... ... ... (பார்ச)

சரணம்.

௧. ஆடி - அனைவருடன்கூடி - ஓடிப்போனமாயம்
ஒருவர்க்குந்தெரியாது ... ... ... (பார்ச)

௨. இணைந்து - எவளேயோபிணைந்து - அணைந்துநின்றாடி
அவரடியைநின்று ... ... ... (பார்ச)

௩. கலந்து - கண்ணனுமலர்ந்து - நிலந்தனிலூன்றிய
நிமலன்விரலையின்று ... ... ... (பார்ச)

௪. எத்தி - யெடுத்துடனேற்றி - சுற்றிவந்திருக்கிற
சொருசைநீகண்ணாலே ... ... ... (பார்ச)

௫. மானே - மதுரசத்தேனே - தானேஉமிழ்ந்திட்ட
தம்பலமிதுநீயே ... ... ... ... (பார்ச)

௬. நதியில் - நடுத்தநியில் - பதியப்பயந்தோய்ந்த
பக்குவமிதையுற்றுப் ... ... ... (பார்ச)

௭. அலைந்து - மங்கையர்கலைந்து - குலைந்துவந்திவடத்தில்
கும்பலாயிருந்ததைப் ... ... ... (பார்ச)

௮. வனம் - செய்ததுகனம் - அனந்தனடிபட
ஆற்றியதென்னமோ ... ... ... (பார்ச)

௯. ஜனகன்ஜ - கத்துக்கனகன் - கனகனுளுலுங்கூட
கண்டுதொழுமடியைப் ... ... ... (பார்ச)

௰. பிர்ம - ருத்ராதிதர்ம - மர்மஞ்சிரசணிந்த
மாலின்பதமிதோ ... ... ... (பார்ச)

௰௧. இன்னம் - அனேகஞ்சின்னம் - முன்னஞ்செய்திருந்த
முகுந்தனிருப்பையிங்கு ... ... ... (பார்ச)

௰௨. சூதன் - லட்சுமிநாதன் - வேதன்நம்மைவிட்டு
வேறுற்றதென்னமாயம் ... ... ... (பார்ச)

வசனம்.

இவ்விதம் இவர்கள் கண்ணனைத்தேடிப் போகையில் - கண்ணனோடு நெடுந்தூரம் போனஒருத்தி கால்நொந்து தன்னை யெடுத்துக் கொள்ளும் படி கண்ணனைக் கேட்டவுடன் கண்ணனும் ஏறென்றருளியக் கைவைத் தேறும்படிக் குதித்தவுடன் மறைந்தநாதனைக் காணமல் மயங்கிவாடும் அவளைக்கண்டு-எல்லோரும் ஒன்றாய்க்கூடிக்கோபிகாகீதைபாடி வடிவான னைப்புகழ்தல்.

விருத்தம்.

அடிகண்டுசகிகளெல்லாமவனைப்போற்றி
அலைந்தவடம்விட்டப்பாற்செல்லும்போது
பிடியிடையாளொருத்திதனியாகநின்று
பிரியமுடனழுபவளைக்கண்டுகேட்க



243

மடிமையினாற்கண்ணன்மேலேறக்கூற
மாயவனந்நொடிதனிலேமறைந்தானென்று
வடிவழகிமாருடனேதானுஞ்சேர
வாடினார்கோபிகள்கீதைபாடினாரே உ௱௰உ

இராகம் - தோடி — ஆதிதாளம்.

பல்லவி.

கஷ்டாவாருமே - எங்கள் - கிலேசந்தீருமே
இஷ்டந்தாருமே - மனம் - இரங்கிக்காருமே

அனுபல்லவி.

௧. துஷ்டமன்மதன் தூரத்திவோட்டுறான்
இஷ்டமாம்படை - ஏற்றிவாட்டுறான்
கஷ்டஞ்செய்யவே - கணையுந்தீட்டுறான்
கஷ்டமுயிர்விட - ஞானங்காட்டுறான் ... ... ... (கிஷ்)

௨. இராத்திரிகாலந் - தன்னிற்பிதாமகன்
ஏமாற்றிநித்திரை - யிட்டானேயதமன்
பார்த்துப்பணியாமல் - பவத்திற்சிக்கினோம்
கேத்திரமுழுடியே - நிலத்திற்சொக்கினோம்
பிராதக்காலத்தில் - பசுக்களோட்டியே
பிரியபாலனைப் - பெருகக்கூட்டியே
விரதனேயந்த - வெய்யில்கானலில்
வேர்க்கமாடுகள் - ஓட்டகானலில் ... ... ... (கிஷ்)

௩. மாலேயுன்னுடை - பாதந்தன்னிலே
மனதிருக்குதே - யெங்கள்முன்னிலே
கோலமாதருங் - கூடிஅல்லிலே
கூவியழைத்திடும் - எங்கள்சொல்லிலே
நீலமேகனே - வந்துகாரென்று
நினைத்துப்பாடுறோம் - நாங்களுமின்று
ஞாலமீதிலே - கிருபையேபண்ணி
ஞாயமாகுமெம் - ஆசையையெண்ணி ... ... ... (கிஷ்)

௪. மழைதடுக்கநீ - மலையெடுக்கவில்லையா
மங்கையர்கோர - வரவுந்தொல்லையா
தழைசேர்வனத்திலே - தனித்துமாயமா
தவிசிதிருப்பது - உனக்குநியாயமா
அழைக்குரலுக்குச் - சற்றுமஞ்சாமல்
ஆட்டிவைப்பது - உந்தன்தஞ்சமா

இழையுமனதுடை - எங்கள்மீதிலே
இதக்கமில்லையோ - யிந்தப்போதிலே ... ... ... (இஷ்)

ரு. கனகாட்டினில் - வாழும்வேந்தனே
கர்வம்நீங்கவே - யாளுஞ்சொந்தனே
உனதுமோகமாம் - வாரிதன்னிலே
ஓடுமெங்களைச் - சேருமுன்னிலே
தனதுசெய்தமைத் - தாங்கிக்காராமல்
தள்ளிப்போவதுந் - தகுமோபாராமல்
வனமாலைமார்பனே - வருகக்கோருதே
வஞ்சிதனங்களும் - வார்விடவுமீறுதே ... ... ... (இஷ்)

சு. கல்லுமுள்ளுமே - காலிலுறுத்தவே
காட்டில்நடக்கிறோம் - மனந்திருத்தவே
சொல்லுமெங்கள்மேல் - தயவுநீர்வைத்தும் •
சொந்தமாகவே - யாளுவீர்முற்றும்
மல்லுமாரனும் - மறையவேசொட்டு
மாதவாவந்து - மகிழுவாய்போட்டு
நில்லுமெம்முடன் - நிதமுமாடவே
நீதனேயோடி - சேருங்கூடவே ... ... ... (இஷ்)

எ. பிராணனெங்கட்கு - தள்ளிப்போகுதே
பேதைப்பெண்கள்தன் - மனமுநோகுதே
கராவைமடுவிலே - கண்டனைசெய்த
கதறும்யானைக்கு - அபயமும்பெய்த
தராதரமெங்கும் - தானாய்நிறைந்தவா
சகிகளைவிட்டு - வனத்திலுறைந்தவா
மராமரமேழும் - மாறத்துளைதவா
மங்கைமார்துயர் - மறக்கவோடிவா ... ... ... (இஷ்)

அ. கங்கையோரத்தில் - காலியோட்டியே
கண்ணனேதிருக் - கானங்கூட்டியே
செங்கைமாருக்குச் - சேவைகாட்டியே
சேருவீர்உந்தன் - பாதம்நீட்டியே
இங்கேயப்படி - யோசைகேட்கவே
ஏற்றருபனே - வருவீர்பார்க்கவே
மங்கைகண்களை - நீங்காதபோதனே
மாலையாலக்ஷ்மி - மருவும்நாதனே ... ... ... (இஷ்)



வசனம்.

இப்படித் துதித்துக்கொண்டிருக்கையில் கண்ணன் இவர்கள் நடுவிலிருக்கக்கண்ட ஆனந்தத்தால் கண்ணனைக் கனகப்பாட்டினால் புகழ்தல்.

விருத்தம்.

கூடியந்தக்கன்னியர்கள்துதிக்குமோசை
கோவிந்தன்செவிகேட்டுக்கருணைகொண்டு
பாடியேயிருக்குமவர்நடுவிலன்று
பரிதியெனத்தோன்றிமெத்தேவைக்காண
தேடியேதிரிந்தலுத்தஸ்திரீகளெல்லாந்
திருமாலும்பிரமிக்கக்கூத்துமாடி
நாடியேநந்தர்சுதன்முன்னேநின்று
நயந்திட்டார்மகிமைதனைவியந்திட்டாரோ உ௱௯௩

கனகப்பாட்டு.

க. சேவித்தொருத்தி - சேவித்தொருத்தி
ஸ்ரீதரனைநத்தித் - திருவடியைச்சுற்றி
சிற்றுடைபற்றிச் - சேர்த்துஅணைத்துக்கொண்டாள்
மாதவனைப் - பார்த்துஅணைத்துக்கொண்டாள் ... ... *

உ. கண்வழியாலொருத்தி - கண்வழியாலொருத்தி
கண்ணனைநத்திக் - கருத்திலிருத்தி
கால்களைப்பற்றிக் - கட்டிமனதில்வைத்தாள்
முகுந்தனை - யெட்டிமனதில்வைத்தாள் ... ... ... *

ங. அஞ்சலிசெய்து - அஞ்சலிசெய்து
அரிதனைவைது - அவள்பயங்கொய்து
அவனிடமுய்து - அன்பாய்நினைத்திருந்தாள்
அமலனைத் - தென்பாய்நினைத்திருந்தாள் ... ... ... *

ச. ஒருநிமைப்போதும் - ஒருநிமைப்போதும்
உன்னையெப்போதும் - ஒழியாமல்முப்போதும்
நத்தினபோதும் - நடக்கக்காலும்வந்ததோ
நாரணா - என்னைவிடுக்கக்காலும்வந்ததோ ... ... ... *

ரு. ஓபிராணநாதா - ஓபிராணநாதா
உம்மிடத்தில்வாதா - உயிர்போகலாகாதா
வும்மைவிடவீதா - ஒடுங்கிவெறுத்திருந்தாள்
உத்தமனை - நடுங்கிவெறுத்திருந்தாள் ... ... ... *

சு. ஆஎன்விதியே - ஆஎன்விதியே
அடுத்தவன்கதியே - ஆயன்தன்பதியே

அமலன்தன்மதியே - அவனியில்தனிக்கச்செய்தாய்
அச்சுதனைப் - பவனியில்தனிக்கச்செய்தாய்... ... ... *

எ. நான்செய்தகுற்றம் - நான்செய்தகுற்றம்
நடுவேயுன்சித்தம் - நாயமானபத்தம்
நாளுமென்னைமுற்றும் - நங்கையையாளவேணும்
நாதனே - யிம்மங்கையைஆளவேணும் ... ... ... *

அ. கடைக்கண்ணால்நோக்கி - கடைக்கண்ணால்நோக்கி
கண்ணன்வசமாக்கி - காமநோயைப்போக்கி
கருத்தோடுதேக்கி - கற்பகமேகாருமென்றான்
கண்ணா - என்அற்புதமேகாருமென்றாள் ... ... ... *

க. வாடியதுபாதம் - வாடியதுபாதம்
வனத்திலேகாதம் - வந்ததுவினோதம்
வருந்தியதுநீதம் - வாயால்நான்சொல்லுவேனோ
வாமனா - வுன்வடிவழகைச்சொல்லுவேனோ ... ... *

ய. செடியும்வனமும் - செடியும்வனமும்
சேர்ந்தஇனமும் - ஸ்ரீதரனும்மனமும்
இருந்ததுதினமும் - எங்களுக்கெப்போதுமென்றான்
பெருமானே - பொருந்தினதெப்போதுமென்றாள் ... ... *

யக. மாயாவினோதன் - மாயாவினோதன்
மங்கையர்கள்நாதன் - மனதுள்ளபோதன்
யமுனையில்வேதன் - ஆடினான்கோபியரோடு
அனந்தநாமன் - கூடினான்கோபியரோடு ... ... ... *

கஉ. லக்ஷ்மிநாதன் - லக்ஷ்மிநாதன்
லாவண்ணியபாதன் - ரக்ஷிக்குங்கீதன்
ரம்மிக்குமோதன் - ராசியாய்க்கூடிநின்றான்
கோபாலன் - ஆசையாய்க்கூடிநின்றான் ... ... ... *

வசனம்.

கண்ணனுங்கன்னியரும் நர்த்தனஞ்செய்தது

விருத்தம்.

கண்ணனற்சேவையினாற்களித்தபெண்கள்
கள்ளுண்டார்போலமகிழ்வாரிமூழ்கி
தன்னருளானேவலினால்யமுனாதீரம்
நருமதுரமொழிக்கிள்ளைமாருஞ்சேர்ந்து
எண்ணமுள்ளகலவியொடுசரசமான
ஏகாந்தமாகமனஞ்சென்றவாறு



நண்ணவேநாரணனோடாடியூடி
நாடுவார்நர்த்தனத்திற்பாடுவாரே

இராகம் - எதுகுலகாம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

நர்த்தனங்கள்செய்தார் - நங்கையருடன்கண்ணன்
நர்த்தனங்கள் செய்தார் -

அநுபல்லவி.

கர்த்தனுகளெல்லாரையும் - கார்த்துரக்ஷிக்கும்வண்ணன்... (நர்த்)

தரு.

க. கையோடுகைகோர்த்து - கன்னிகைமாரைச்சேர்த்து
மெய்யன்மேனிவேர்த்து - விரகதாபம்தீர்த்து

கும்பல்கும்பலாய்க்கூட்டி - கோபஸ்திரிகளையாட்டி
அன்புதன்னைக்காட்டி - அனங்கன்தன்னையோட்டி
எம்பிரானும்வந்து - இஷ்டம்அவர்க்குத்தந்து
உம்பர்வியக்குநாதன் - உலகளந்தநற்பாதன் ... ... (நர்த்)

உ. அன்னநடையார்கூடி - அரியிடந்தன்னைநாடி
மின்னலிடையார்ஓடி - மேகரூபனைத்தேடி

தண்டைச்சிலம்பசைய - தாண்டியதிவிசையா
கொண்டையிற்பூகசிய - கோபாலனும்வசிய
அண்டமளந்ததாளன் - அருவரைகொண்டதோளன்
செண்டலங்காரஞானன் - சேர்ந்தவர்கட்காதினன் ... (நர்த்)

ங. மதுரமொழியார்மேனி - மான்போலலையக்காணி
லதிரவருமுகிலானி - யனந்தனென்னுநிதானி

அதரபானங்கொடுத்து - ஆச்சிமாரையடுத்து
உதரவேதனைதடுத்து - உளங்குளிரநடித்து
பதருமற்பாங்கியர்கூட - பாலகிஷ்ணனும்நாட
சிதறுலீலைகளாட - ஸ்ரீதரனைக்கொண்டாட ... ... (நர்த்)

ச. பிரிந்திருந்தவிடாய்தீர - பெண்களெல்லாருட்சேர
அறிந்துஅரியும்நேர - அண்டர்வரமுங்கோர

கனககுண்டலமிலங்க - கஸ்தூரிநாமந்துலங்க
வனமாலையுமலங்க - வஸ்திரங்கள்விலங்க
தனங்களெல்லாம்வீற - தாமோதரனைக்கூற
மனங்களெல்லாமாற - மகிமையைக்கண்டுதேற ... (நர்த்)

௫. கன்னமுங்கன்னஞ்சேர்த்து - கட்டியொன்றாகப்பார்த்து
உன்னிதசீலனையேயுற்று - ஒய்யாரலீலைகற்று

இடையிற்பட்டுநழுவ - இஷ்டமாகத்தழுவ
இடையார்வினைகழுவ - எம்பெருமானொழுவ
வடமதுரையுதித்தோன் - வனந்தனிலேகுதித்தோன்
தடையில்லாமல்வதித்தோன் - தாரணியோர்மதித்தோன் (நர்த்)

௬. ஆனந்தகூத்தாடி - அய்யன்புகழைப்பாடி
தாநந்தவனநாடி - தையலரோடே

புஜத்தோடுபுஜமொற்றி - பூவையர்களையெற்றி
வசமாகவேபற்றி - வாமனனுஞ்சுற்றி
குசகுங்குமம்உதிர - கொம்பனையார்குதிர
நிசலக்ஷ்மியெதிரா - நீலமேகனுஞ்சதிரா ... ... (நர்த்)

வசனம்.

பிருந்தாவனத்தின் அலங்காரத்தையுங் கண்ணன் இருந்தவைபவத்தையுஞ்சொல்லுதல்.

விருத்தம்.

நிர்த்தனங்களான பின்னர்நிமலனங்கே
நிறைந்ததாரகைக் கூட்டநடுவிலேயோர்
கர்த்தனெனும்பகவானே சந்திரன்போலக்
காணவெகுவிந்தை செய்திருக்கவங்கே
விர்த்தவயதுள்ளோரும் விரகங்கொண்டு
வேடிக்கையாகமணற் குன்றிலேறிப்
பர்த்தாவைநீங்கிவந்த பெண்களோடு
பாடினார்வனமழகைக் கூடினாரே உாமரு

இராகம் - கல்லியாணி - சாப்புதாளம்.

பல்லவி.

பிருந்தாவனந்தன்னில் பைங்கிளிமாருடன்கூடி - அந்த
நந்தர்மகனதி விந்தையாகவிளையாடி.

அநுபலிலவி.

௧. பிருந்தாவனந்தன்னில் வந்தவர்கூடிடியே
விந்தையாய்ப்பலம் புசித்தங்கேநாயே
மந்தகாசமாய்மலர் துளிர்சூடியே
சிந்தைமகிழ்ந்தந்த ஸ்திரிகளும்பாடியே ... ... (பிருந்)



தரு.

௧. பாதிரிமந்தாரைபாரிசாதத்தருச்சாலை - அதைப்
பார்க்கவெங்கெங்குமெட்டினமட்டுநற்சோலை
ஆதரவாய்த்தோகையாடும்மயில்மலைமேலே - அந்த
மாதருடனேவிளையாடும்மாரனைப்போலே

கோலாகலமாகப்பக்ஷிகளுங்கூட
நாலாவிதமாகவோடிவிளையாட
நேராகக்கிளிகள்குயில்களெல்லாம்நாட
நீலவண்டுகளுங்கானங்களைப்பாட ... ... (பிருந்)

௨. ஆறுகளோடைகள்ஏரிமடுவுகளுள்ள - அதில்
ஆம்பலுமல்லியும்நீலோற்பலங்களுங்கிள்ள
நீரில்மகரங்கள்மச்சியமிளவாளைதுள்ள - அந்த
நேர்முகில்வண்ணனுங்கண்டுஅதிசயங்கொள்ள

சிங்காரமாகவேசேர்ந்துவனம்நாடி
எங்கெங்குபூப்பிஞ்சுகாய்பழங்கள்சாடி
மங்களமாகவேமாதவனும்ஆடி
மகிழ்ச்சியாகக்கோபியருடன்கூடி ... ... (பிருந்)

௩. அந்தஇரவிலேயானந்தமாகவேநண்ணி - அய்யன்
அத்தனைபேருக்கும்ஞானவுபதேசம்ஒண்ணி
வந்தவெல்லோர்களும்வாழவேதன்மனமெண்ணி - அந்த
வாமனன்பெண்கட்குவாயினலாசிகள்பண்ணி

உங்களுடையமனந்தனைச்சோதிக்க
ஒளித்துக்கொண்டேனிங்கேபேதிக்க
திங்கள்முகத்தோரேயென்னுடன்வாதிக்க
நீரவும்மன்னித்துப்பேசியேதுதிக்க ... ... (பிருந்)

௪. நல்லநிலவிலும்வெள்ளைமணலிலுஞ்சென்று - அங்கே
மல்லிகைமுல்லைமலர்களுஞ்சூடியேநின்று
சில்லென்றபல்லவமேலிருந்துலீலையன்று - அந்த
மெல்லியருங்கைகோர்த்துவிளையாடவென்று

உச்சிதமாய்லக்ஷ்மிநாதனும்பாய்ந்து
உகந்தஸ்ரீகளுந்தானுமாய்த்தோய்ந்து
அச்சுதனுடையகிருபையையாய்ந்து
ஆனந்தமாகவெல்லோர்களும்வேய்ந்து ... ... (பிருந்)

வசனம்.

கண்ணன்ராஜக்ரீடைசெய்ததைச்சொல்லுதல்

விருத்தம்.

தேவர்களுமுனிவர்களுங்கூடியங்கே
திருக்கண்ணன்கோலத்தைக்கண்டுவக்க
யாவர்களும்பிருந்தையிலேகைகள்கோர்த்தே
யன்றுதித்தசந்திரபரிவட்டம்போல
மூவர்களுமெச்சவதிமோகங்கொள்ள
மொய்குழலாரோடுதிருமாலுஞ்சேர்ந்து
கோவர்களுமொருகாளுஞ்செய்யாவாறு
கூடினன்கிரீடித்துநீடினனே ... ... (௨௱௰௬)

இராகம் - கமாஸ் - அடைதாளம்.

பல்லவி

ராஜகிரீடைசெய்தான் - யாதவகிருஷ்ணனும்
மாதர்களுடன்கூடி - ராஜகிரீடைசெய்தான்

அநுபல்லவி

ராஜகிரீடைசெய்தான் - ராஜகோபாலகிஷ்டன் - ரீ - ரீ - ரீ
தேஜஸுடன்விளங்கும் - திவ்வியரூபஇஷ்டன்... ... (ராஜ)

தரு.

௧. பத்மஇதழ்போலுமத்தியிற்காய்போலுநிறைந்து - நிறைந்து
பாலகோபாலன்
உத்தமமாகவேயுகந்துஸ்திரீகளுடன்சிறந்து
வித்தகனுமதிவேடிக்கைகள்கறந்து - ரீ - ரீ - ரீ
சித்தந்தன்னில்மகிழ்ந்துஸ்ரீதரனும்இருந்து ... ... (ராஜ)

௨. முரளியைவாயில்வைத்துவிரல்கள்பஞ்சரந்திரங்கள்-மூடி - மூடி
வேணுகோபாலன்
சரளிஅலங்காரம்சரிகமபதநிசபாடி
புரளவேமேனியில்பூஷணங்களுமாடி - ரீ - ரீ - ரீ
திரளாகவேகண்ணன்தேவியருடன்கூடி ... ... (ராஜ)

௩. சோடசகலையெனச்சுற்றிலுங்கோபிகள் சூழ்ந்து - சூழ்ந்து
கண்ணன்
நாடவேயிந்திரநீலம்போல்நடுவினில்வாய்ந்து
ஆடவேயந்தஆய்ச்சியருடன்தோய்ந்து - ரீ - ரீ - ரீ
கூடவேகோவிந்தன்கோதையருடன்சேர்ந்து... ... (ராஜ)

௪. மேளமிருதங்கத்துடன்வீணைகுழலெடுத்து - ஊத - ஊத
மோகனரூபன்
தாளிற்றண்டைசிலம்புதரணியிலதிர்ந்தோசைமோத
வாளக்கண்மடந்தையர்வந்துஅதிபோதா - ரீ - ரீ - ரீ
கோளரிமாதவன்கூடியங்கேகூத்தா ... ... ... (ராஜ)



௫. அலைகளாகிறகையால்யமுனையும் வாவென்றழைக்க - அழைக்க
ஆச்சுதன்மீதில்
மலர்களின்ரேணுவைவாயுவுங்கொண்டுவந்துஇழைக்க
பலபலலீலைகள்பகவான்செய்துதழைக்க - ரீ - ரீ - ரீ
நலமுடன்வாழ்ந்தந்தநாரிகளும்பிழைக்க ... ... (ராஜ)

௬. உச்சியில்வந்தநிலாவொருயுகமவடத்திலிருந்து - இருந்து
வெடியாமலே
மெச்சவே கொடுத்தவர்க்கதரபானமென்னுமருந்து
அச்சுதனையந்தஆய்மொழியார்வருந்த - ரீ - ரீ - ரீ
கச்சுலக்ஷ்மிநாதன்களித்தவடம்பொருந்த ... ... (ராஜ)

வசனம்.

கண்ணனைக்கோபிகள் கொண்டாடுதல்

விருத்தம்

இத்தநிமிற்கிரீடித்தசிரமந்திர
இனியவேய்ங்குழலையெதிராஜனாத
அத்தியிலாசையினலொருத்திமுந்தி
அத்தத்தில்வீணைகொண்டெதிரிற்பாடச்
சித்தத்திலதியிஷ்டம்வைத்தபெண்ணும்
ஸ்ரீதரனைத்தோள்தட்டிப்பாடிநின்றாள்
மொத்தத்திலவர்களெலாமுகுந்தன்றன்னை
மொழிந்திட்டாரவன்புகழைப்பொழிந்திட்டாரே (௨௱௰௭)

இராகம் - ஆனந்தபைரவி அடதாளம்.

பல்லவி.

தோழி - தோழி - கண்ணனுடன்கூடுவோம்வாடி
கர்ணாமிர்தமாய்கானங்களைப்பாடுவோம்வாடி
கலகலென்று - கலந்துஇங்கேஆடுவோம்வாதோழி

அநுபல்லவி.

தோழிகளெல்லாருங்கூடி - சோதைமகனைக்கொண்டாடி
ஆழியங்கையனைப்பாடி - ஆர்த்திகள்தீருவோம்வாடி ... (தோழி)

தரு.

௧. வேணுநாதம் வாயில்வைத்து - ஊதியேதோழி
வேணுநாதம் வாயில்வைத்து - ஊதிக்கொண்டு கூத்தாடி
வேணுரந்திரங்கள் விரல்களால்மூடி - வேடிக்கையாய்நாடி
கானமுடன் சங்கீத சாயித்தியங்கள்கூடி
சரசமுடனேயங்கே - சரி-கம-பத-நிச-சரளியலங்காரம்பாடி
தாளமிருதங்கம் தம்புருமீடவே

வாளங்கண்மடக்கைதயர் வர்ணித்துப்பாடவே
கோலாகலமாகக் கோபிகளாடவே
மாலுங்கண்டது மகிழ்ந்துகொண்டாடவே
அறிந்துபரத - சாஸ்திர - நாட்டியம்
தெரிந்து நிர்த்தனங்கள் செய்ய
பரிந்துதேவர் - மலர்கள் - பெய்ய
இருந்தபிருந்தாவனமு முய்ய
எட்டியெ கண்ணனைக் - கட்டியேபிடித்திட்டு
தட்டியேகரங்களைத் - தளங்குதோமென்று. ... (தோழி)

௨. கின்னரகருடதேவர் கந்தர்வர்தோழி
கின்னரகருடதேவர் கந்தர்வர்களுஞ்சென்று
கேளிக்கைநிர்த்தனத்துடன் வேடிக்கையென்று
கண்ணபிரான்விளையாட்டைக் கருதியேயன்று
கானகமுனிவரங்கே கம - பம - தம - வென்றுபாடி
தேன்மொழிமாதர்கள் சேர்ந்து புகழ்ந்திட
மேனகையூர்வசியோர்கள் மகிழ்ந்திட
மான்விழியாய்ச்சியர் கண்டுநிகழ்ந்திட
மாரனும் பெண்கள் மயக்கத்திலாழ்ந்திட
வந்துபிருந்தாவனந்தன்னில்
மாதவனுடைய முன்னில்
பைந்தொடிமாதருமெண்ணில்
விந்தையாய்விளையாடமண்ணில்
பதித்துப்பாதவின்னியாசம் - குதித்துக்கோபியர்கள்
துதித்துச்சக்கரதரனைத் - திங்-கிங்-தோமென்று ... (தோழி)

௩. நம்மையெல்லாங்காட்டில் விட்டுத்தனித்தவன்தோழி
நம்மையெல்லாங்காட்டில் விட்டுமறைந்திருந்தாண்டி
நங்கையொருத்திக்குச்சேவை நன்றுகத்தந்தாண்டி
இம்மையிலேநம்மையெலா மீடேற்றவேண்டி
ஏகநாதனென்றேயவர் - இம - பம - தம - வென்றுபாடி
அனங்கன்வில்வளைத்து அம்புகள்போடவே
தனங்களில்தைக்கவுந் தையலர்கூடவே
வனங்களில்சென்றந்த வஞ்சியர்நாடவே
மனங்களைக்கண்டங்கு மாலுங்கொண்டாடவே
பரிந்தவர்களைச்சோதித்து
அறிந்துமனதைப்பேதித்து
தெரிந்தவரையுய்வாகித்து



பரிந்தேவருக்கும்போதித்து
பற்றிப்பரந்தாமனை - யெற்றிநாம்வளைத்து
நித்தமுங்கூடியே - நனி-தப-பம-வென்று ... (தோழி)

௪. கோபாலசமுத்திரந் தன்னில்கோபியர்தோழி
கோபாலசமுத்திரந் தன்னில் கோவிந்தனுய்ந்து
குதுகலமாய்ப்பெண்களுங் கோபாலனைத்தோய்ந்து
தாபமெல்லாந்தீரத்திருவருளிற்பாய்ந்து
தயவாமானந்தத்தால் ததிங்கணதோமெனவாய்ந்து
கேசவனுடனே கிரீடித்து அசைய
கேளிக்கைநிர்த்தன மாடியேயிசைய
வாசனையாகமதுக்களுநசைய
வாசவன்மீதிலேவனிதையர்பசைய
லக்ஷ்மிநாதன்தன்னையேற்றி
லலிதமாயவனைப்பற்றி
அச்சுதன்பாதத்தைச்சுற்றி
ஆய்ச்சிகளெல்லாம்போற்றி
அடுத்துக்கண்ணனை - யெடுத்துமுத்தமிட்டு
கொடுத்து அதரபானங் ♦ ரும்-கும்-கும்மென்று ... (தோழி)

(வசனம்.)

கண்ணன் அவளவளிஷ்டப்படி ஒவ்வொருத்தியோடும் தனியாக இருந்து விளையாடுதல்.

விருத்தம்.

வாசமாம் வைகுண்ட நாடுவிட்டு
வந்தவிபுதனைப் பாடியிருந்தபோது
காசலம்புமுலைமாதர் கருத்துப்போலக்
கண்ணனங்குவிளையாடத் தானுமெண்ணிப்
பூசநல்லசந்தனமு மஞ்சனமுந்தீட்டப்
புஷ்பமுதலானவெலா மவர்க்குத்தந்து
நேசமாங்கன்னியரை யடுத்துநின்று
நெருங்கினான் லீலைசெய மருங்கினானே ... (உாயஅ)

இராகம் - நாதநாமக்கிரியை - சாபுதாளம்.

கண்ணிகள்.

௧. அஞ்சனங்கண்ணில் - எழுதியொருத்திக்கு
கஞ்சநாபனுங் கலந்துமோகித்தான்
மஞ்சள்முகத்திலே பூசியொருத்திக்கு
மதனகோபாலன் மகிழ்ந்துபோகித்தான் ... ... *

௨. திலகம்நெற்றியில் தீட்டியொருத்திக்கு
தேவதேவனுஞ் சேர்ந்துமோகித்தான்
துலக்கமாய்முகம் துடைத்து ஒருத்திக்கு
சோதைபாலனுஞ் சொல்லியே போகித்தான் ... ... *

௩. வாசனைகந்தம் வைத்தே ஒருத்திக்கு
பூசக்குசந்தன்னில் புதுமையாய்மோகித்தான்
கேசம்வாரியே பின்னியொருத்திக்கு
கேசவனுங்கன்னி கிட்டவே போகித்தான் ... ... *

௪. மல்லிகைமலர் சூட்டி யொருத்திக்கு
மாரனைப்போல மருவவே மோகித்தான்
முல்லையரும்பை முடித்தே யொருத்திக்கு
மோகனரூபனு மோடியாய்ப்போகித்தான் ... ... *

௫. கண்டசரஞ்சிக்கு விடுத்து ஒருத்திக்கு
அண்டர்நாதனு மணைந்து மோகித்தான்
தண்டைச்சிலம்புகள் அசைய வொருத்திக்கு
தாண்டவகிருஷ்ணனுந் தங்கியே போகித்தான் ... ... *

௬. ஆடையிடைதன்னில் உடுத்தியொருத்திக்கு
அம்புஜபாதனும் ஆவலாய்மோகித்தான்
தாடையில்முத்தங்கொடுத்து ஒருத்திக்கு
தந்திரமாய்த்தாமோ தரனும்போகித்தான் ... ... *

௭. தங்கபணியுந்தரித்தே யொருத்திக்கு
மங்களரூபனுமர்மமாய் மோகித்தான்
கொங்கைமேற்கச்சைகட்டியொருத்திக்கு
கோவிந்தன்பிருந்தையிற் கூடியேபோகித்தான் ... ... *

௮. பாசபந்தங்கள்பறக்கவொருத்திக்கு
பத்மலோசனன்பகர்ந்துமோகித்தான்
நேசமாய்ஞானக்கண்கொடுத்துஒருத்திக்கு
நிசலட்சுமிநாதன்சேர்ந்துபோகித்தான் ... ... ... *

வசனம்.

கண்ணன் ஜலக்கிரீடை செய்தது.

விருத்தம்.

நழுவிவிழுங் கனிபோல நாதனன்று
நாரியரோ டிவ்விதமா யாடிநின்று
கழுவவினை யமுனைநதி தன்னிற்சென்று
கண்ணனுமே ரதிகேளி செய்யவெண்ணித்



தழுவுமந்தக் கன்னியர்க டம்மைச்சேர்த்துத்
தங்கநிற வோடத்தி லேற்றித்தேனய்
ஒழுகதர பானமவர்க ளிக்கவன்னோர்
ஓடினர் வாரியுற்றுப் பாடினரோ ... ... (௨௱௰௧)

இராகம் - புன்னாகவராளி - அடதாளம்.

ஏலப்பாட்டு.

௧. ஜலகிரீடையாடவின்று - ஸ்ரீகள்
ஸ்ரீதரனைக்கூடிநின்று
பலபலலீலைகள்பண்ண - பரமன்
பரவசமாகவேநண்ண
அலைமோதும் ஆறுதன்னில் - இழிந்து
ஆயாசங்களுந்தீர்ந்து
சரற்காலசந்திரனை - போலே
சகிகளுடனக்காலே

சரசமுடனேயங்கே சங்கீதம்பாட
சந்தோஷமாகவே பெண்களும்கூட
துரிசாகவேதேவர் மலர்களும்போட
சுந்தரக்கன்னிகை மார்களும்ஆட

தொடுத்து - மோகங்கள் - கொடுத்துக்-கண்ணனும்
அடுத்து - ஆச்சியர் - படித்துப் - பாசுரம்
பஞ்சாயுதத்தான் - மிஞ்சுங்கரத்தான்
கொஞ்சியணைத்தான் - கூடியிணைத்தான்

குளிர்ந்து - தெளிந்து - தணிந்து - அணிந்து
மின்னல்போலொத்த முகத்தாளைக்கண்டு
வேணுகோபாலனும் மோகங்கள்கொண்டு
தென்றலும்வீச ஜலந்தனில்நின்று
திங்களும்வந்திங் கிழிந்ததோவென்று

செங்கழுநீர்பறிக்க - மங்கையளாவரிக்க
கொண்டையிலேதரிக்க - குலாவிச்செருக்க

கோடி - விதம்ஆடி - குணம்பாடி - தகைநாடி - கோபிகன்
ஜாரன் - ததிசோரன் - சுகுமாரன் - கெம்பீரன்

ஏலேலோ நாவாய்சரித்திரம் - கோவிந்தா
ஏலேலோ பரமபவித்திரம் ... ... ... ... *

௨. கழுத்துமட்டுஞ் சலத்திழிந்து - ஒருஸ்திரி
கண்மூடிநதியமுந்தி
தழைத்துத்தவம் செய்வேனென்று - அனேகம்
சகிகளுடன்சொல்லிநின்று
குழைத்துமாதவனைமனம் - வைத்து
குணயோகிபோலுற்று
செழித்துஇரு கரங்குவித்து - தேவியர்
தேகாபிமானமற்று

சிங்காரமாகவே சேர்ந்தவர்நாட
சேற்கெண்டைபோலத் துள்ளிவிளையாட
அங்கத்திலணிந்த ஆபரணமாட
ஆயிரம்நாமனை யறிந்துகொண்டாட

தடுத்துக் - கண்ணனைப் - பிடித்துக் - கோபியர்
கொடுத்துத்-தம்பலம் - எடுத்துத் - தோளினில்
அண்டமுண்டவாயன் - தொண்டருக்குநேயன்
தண்டுளவமாயன் - புண்டரீகச்சாயன்

ஊர்ந்து – நேர்ந்து - சார்ந்து - சேர்ந்து
பாசிக்கொத்துபோல - கேசங்கள்பறக்க
பக்ஷிவாகனன்தன் - பக்கத்திற்சிறக்க
கேசவாமாதவா என்றவர்திறக்க
கேளிக்கைநிர்த்தனத் தாலேநிறக்க

கருநீலங்கொய்து - கலந்தவர்பெய்து
சரியாகச்செய்து - சகலரும்உய்து

தாவி - எமதாவி - எனமேவி - மிகக்கூவி - எங்கள்

நாதன் - அதிமோதன் - நான்குவேதன் - மலர்ப்பாதன்

ஏலேலோ - நாவாய்சரித்திரம் - கோவிந்தா
ஏலேலோ - பரமபவித்திரம் ... ... ...

௩ கிட்டனதிவேடிக்கைகள் - செய்ய
கிளிமொழியார் கண்டுய்ய
கட்டநடுஆற்றில் தந்திரம் - நாவாய்
நடுவிலுண்டாக்கிரந்திரம்
கொட்டவே நீர்சிதற - கோபியர்
கூடியெல்லாம்பதற



இட்டமுளமாதருங்கள் - இடையில்
எழிற்கலையாலடைத்திருங்கள்
கொட்டியேகைதனைக் கோவிந்தனங்கே
கோபியரெல்லாருங் கூடினீரிங்கே
பட்டிழந்தீர்முன்னம் போலநீர்துங்க
படகிலேநிர்வாணங் கண்டுநானங்க

பயந்து - பாங்கியர் - நயந்து-நாதனை
வியந்து - வேதனை - உயர்ந்து - கோபியர்
சண்டப்பிரசண்டம் - சாமியேதெண்டம்
கண்டய்யாதுண்டம் - இல்லாதுவிண்டம்

எண்ணி - நண்ணி - பண்ணி - தண்ணி
தாங்காமலேபடகு தலைகீழாய்ச்சாய
ஏங்கியேகண்ணா இதுஎன்னமாயம்
பாங்கிகாளென்பக்கம் வாருங்கள்தோய
ஓங்கியேகரையிற் சேர்க்கிறேன்ஞாயம்

தாமரையைநாடச் - சகிகளுஞ்சூட
நேமமாய்க்கூட - நின்றுவிளையாட

தேற - கரையேற - மனமாற - அருளூற - பெண்கள்
கண்ட - மோகங்கொண்ட - தாபம்விண்ட - களிப்புண்ட
ஏலேலோ - நாவாய்சரித்திரம் - கோவிந்தா
ஏலேலோ - பரமபவித்திரம் ... ... ... ...

பேர்புகழும்யமுனைதன்னில் - பெண்கள்
பேசியன்பாய்க் கூடிமுன்னில்
ஏர்பெருகும்புனல்தாண்டி - எல்லாரும்
எக்களிக்கப்போகவேண்டி
கார்புகழுங்கண்ணனைக்கூடி - கன்னியர்
கலந்தவடந்தனில்நாடி
சீர்பெருகுஞ்செங்கமலம் - பறித்து
சிரசுதனிலேதரித்து

அழகுள்ளபடகுள்ளாராயனைக்கிட்டி
ஆனந்தாவாரியிலாழ்ந்துகைகட்டி
பழமொழிகூறியேகைகளைத்தட்டி
பங்கயக்கண்ணனைத்தோள்களிற்கொட்டி

பார்த்துப் - படகில் - சேர்த்துத் - துடுப்பை
கோர்த்துக் - கண்ணனுந் - தீர்த்துக் - கவலை
தள்ளப்பாதள்ளு - தண்ணியிலேதள்ளு
மொள்ளாமலேபடகு - வேகமாய்த்தள்ளு

மிகுந்து - புகழ்ந்து - உகந்து - மகிழ்ந்து
மோகனரூபனும் - மோகிகளைநோக்கி
விதம்விதமாகவே - லீலையுந்தேக்கி
போகசயனனும் - புதுமையாய்க்காட்டி
பொங்குநதிதன்னிலேயோடத்தையோட்டி
பூவையருமாடப் புனிதனிங்கூட
சேவையைத்தேடச் - சேர்ந்தவர்பாட
நாத - லக்ஷ்மிகீத - சுரமோத - வருநீத - செல்வன்
விந்தன் - வெகுசொந்தன் - திருநந்தன் - அருமந்தன்
ஏலேலோ - நாவாய்சரித்திரம் - கோவிந்தா
ஏலேலோ - பரமபவித்திரம் ... ... ...

வசனம்.

பரீக்ஷித்து சுகமுனிவரை அன்னியஸ்திரீயைச் சேருதல் பாபமல்லவாவெனக் கேட்க முனிவர் விடைகூறுதல்

விருத்தம்.

பழவிதழார் யாவரையுங் கரையிற்சேர்த்துப்
பண்டுசெய்த புண்ணியத்தாற் பிழைத்திர்தேவன்
கழலடியை யுங்கள்மனத் திருத்திநீங்கள்
கருதுவனம் விட்டில்லஞ் சேர்கவென்னக்
கிழமதியன் கிருஷ்ணனனு மதியாற்சென்றார்
கேட்டிருந்த பரீக்ஷித்துஞ் சுகரைநோக்கி
அழலான நரகமன்னிய ஸ்திரீயைச்சேரல்
அதுவென்றார் முனிகேளும் இதுவென்றோ ... (உ௨ய)

இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

பரீக்ஷித்தேகேளும் - நான்சொல்லுகிறேன்
பரீக்ஷித்தேகேளும்

அநுபல்லவி.

பரீக்ஷித்தேநீரும் - பாபமில்லைபாரும்
பக்தர்களையாளும் - நித்யன்கதையெந்நாளும் ... (பரீ)

சரணம்.

க. அக்கினிவியாபித்து - அனத்தையுமெரித்து
அக்கினியுங்கண்டோ - மதற்குத்தோஷமுண்டோ ... (பரீ)
உ. சூரியசந்திரகிரணம் - சுற்றியங்குதருணம்
சூரியனுக்கதனாற் - றோஷமுண்டோமெத்த ... (பரீ)



௩. எங்குந்தானுகக்கண்ணன் - இயங்குமணிவண்ணன்
அங்கேயிருக்கவோது - அவனுக்குத்தோஷமேது ... (பரீ)
௪. அனேகஜந்துக்குசாமி - அவனும்அந்தரியாமி
வனமாலியாயிருந்தான் - வடிவுமுண்டோபொருந்த ... (பரீ)

வசனம்.

அம்பிகாவனத்துக்குச் சென்று அம்பிகாதேவிபூசையைச்செய்ய ஆயரெல்லாரும் போயிருந்த காலத்தில் கண்ணன் நந்தரை மலைப்பாம்பினின்றும் மீட்டது.

விருத்தம்.

உரியமுனியுரைத் தனுமானத்தைத்தீர்த்து
ஓதுவேனினிநடக்குங் கதைகேளென்று
அரியதிருக்கண்ணனோடாயரெல்லாம்
அம்பிகா வனஞ்சென் றம்பிகையைப்போற்றிச்
சரியாகப் பிரார்த்தனை செய்தான பின்னர்
சரிந்தமலையடியிற் கண்வளரும்போது
கரியமுகில்வண்ணனருந் தந்தைதன்னை
கண்டதென்றுணரவுண்ட தன்றென்றனே ... (உ௨௬)

இராகம் - பைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

நந்தனைசர்ப்பம் விழுங்கின விந்தையை ..
நன்றாகக் கேளும் வேந்தே

அநுபல்லவி.

அந்த அம்பிகையுடை விரதம்முடிந்தபோதே
வந்த அரவமும் வாயிற்கொண்டதோத ... ... ... (நந்)

தரு.

க. காலைப்பிடித்து விழுங்க அரவம் நந்தன்
கண்ணுறக்கந் தெளிந்து சொந்தன்
மாலேமணிவண்ணா வாருமென்று பதற
மனதில் பீதி கொண்டு வாயைவிட்டுக்கதற ... ... (நந்)
உ. அலறியவோசையை ஆயரெல்லாங்கேட்டு
அண்டையிலோடியோட்டி
கிளறியேகற்களால் அடிக்கவுஞ்சாகாமல்
கெட்டியாகப்பற்றி விழுங்கிற்றுபோகாமல் ... ... (நந்)
௩. கடித்து விழுங்கிய காரணமுந்தெரிந்து
கண்ணன்விரைவாய்ப்பரிந்து

துடித்துடல்கையக்காலால்தூக்கியதையெறிய
வெடித்துக்கர்மசரீரம் விமான மீதிற்றெரிய ... ... (நந்)
௪. ஏறியிருந்தவனைய சோதையாள்பாலன்
ஏதுமறியாதபோற்சீலன்
பாரிலேபாம்பாகி பழிக்க நீயிருந்ததை
பகருவாயெனக்குப் பண்பாயிப்போததை ... ... (நந்)

வசனம்.

சுதரிசனனென்னுங் கந்தருவன் கண்ணனுக்குத் தன் விருத்தாந்தத்தைச்சொல்லுதல்.

விருத்தம்.

நிலையெதுவுமறிந்திருக்குங்கியானியான
நிபுணசிரோமணியாகுங்கண்ணனன்று
மலையவேயெதிரிருக்குங்கந்தருவன்தன்னை
மாநிலத்தில்மலைப்பாம்பா யிருந்ததேனோ
கொலைபுரியநீதுணிந்த தெதனால்முற்றுங்
கூறுவா யென்றவனுங் கேட்டபோது
அலையுடைய சாகரத்திற் றுயிலுநாதா
ஆளென்றான் விருத்தாதங் கேளென்றானே... (௨௨௨)

இராகம் - மோகனம் - ஆதிதாளம்.

பல்லவி.

கிருஷ்ணாகேளுஞ் சொல்கிறேன்
கிருஷ்ணாகேளுஞ் சொல்கிறேன் - கேசவா - ஹரிமுகுந்தா-ஸ்ரீ
கிருஷ்ணாகேளுஞ் சொல்கிறேன்

அநுபல்லவி.

துஷ்டனாகிய வடியேன்
ஸ்தூலமெய் மெய்யென்றிருந்தேன் ... ... (கிருஷ்)

தரு.

௧. மிருத்திகைதேகந்தனக்கு - முத்தாபரணங்கள்பூட்டி
யிரத்தினகேயூரகங்கண - கவசங்கள்மாட்டி
சக்தியுள்ளவனைப்போல - தங்கவிமானத்தின்மேலே
எத்திசையும்நான்திரிந்து - மெத்தபலவானென்றிருந்தேன். (கிருஷ்)
௨. அதிகுரூபியாயிருக்கும் - ஆங்கீர சரிஷியைக்கண்டு
அகந்தையினாலடியேன் - அசப்பியஞ்செய்தேன்
குரூபியாகப்போவாயென்று - கொடுத்தசாபந்தன்னைக்கொண்டு



கூடிசர்ப்பமாய்வனத்தில் - கோடிகாலமிங்கிருந்தேன் ... (கிரு)
௫. வேதமுனிசபித்தவுடனே - வேண்டியேமுடிவணங்கி
விமோசனம்எப்போதெனக் - கென்றுகேட்டேன்
யாதவகுலந்தனிலே - கண்ணனாயவதரித்தோர்
காலத்தில்வருவாரிங்கே - காணத்தீருஞ்சாபமென்றார் ... (கிரு)
௬. உம்முடையநாமந்தன்னை - உரைத்தவர்க்குங்கேட்டவர்க்கும்
ஒருக்காலும்பாபமில்லையென்று - ஓதவுங்கேட்டேன்
என்மீதிலடிபட்டபின்பு - இருக்குமோரிஷியின்சாபம்
முன்போலென்னுலகையாள - விடைதருவீர்லக்ஷ்மிநாதா (கிரு)

வசனம்.

கண்ணன் சேவையை நோக்கிவந்த கோபிகாமணிகளைச் சங்கசூளனென்னும் அசுரன் இடைவழியில் மடக்கிக் கொண்டு போகையில் அவர்கள் கண்ணனைக் கூவியழைத்தல்.

விருத்தம்.

விடைபெற்றுச் சுதரிசனன் விண்ணிற்சேர்ந்தான்
விமலனுந் தமயனுமாய் வனத்தேவந்தார்
அடைவாகக் கண்ணன் குழலூதுகின்றார்
அதுகேட்ட பெண்களெலா வருமார்க்கத்தில்
இடைவழியிற் சங்கசூள னெதிரில்நாடி
யிழையிடையா ரனைவரையுந் தேரிலேற்றித்
தடையின்றி வடமுகத்தைநோக்கிச் செல்லத்
தாவினார் கேசவனைக் கூவினாரே (௨௨௩)

இராகம் - முகாரி - சாபுதாளம்.

பல்லவி.

கேசவா எங்களுடன் பேசவா-ஓகோ-ஓகோ
கேசவா எங்களுடன் பேசவா

அநுபல்லவி.

கேசவா உன்மீதிலாசைகொண்ட எங்களை
மோசஞ்செய்துவிண்ணிற்கொண்டுபோகின்றானே ... (கேச)

தரு.

௧. ஆதியே - பரஞ் - சோதியே
நீதியாகவுன்னை - நெருங்கவந்தஎங்களை
பீதியாகவசுரன் - பிடித்துப்போகின்றானே ... ... (கேச)
௨. அய்யனே - ஆழிக் - கையனே
மெய்யாகவுன்னை - விரும்பிவந்தஎங்களை
கையாலேயசுரன் - கட்டிப்போகின்றானே ... ... (கேச)

௩. நியாயமோ - என்ன - மாயமோ
ஆயக்குழல்கேட்டு - அடுக்கவந்தஎங்களை
ஓயவேயெம்மையின்று - ஒடுக்கிப்போகின்றானே ... (கேச)
௪. கண்ணனே - மணி - வண்ணனே
அண்ணனுநீயுமா - ஆசையாமெங்களை
திண்ணெனவந்திவனை - தொலைப்பாய்லக்ஷ்மிநாதா... (கேச)

வசனம்.

அண்ணனுங் கண்ணனுமாகச்சென்று அரக்கனைக்கொன்று கோபால ஸ்ரீகளை யாதரித்தல்.

விருத்தம்.

கேசவனைக் கிளிமொழியா ரழைத்தல்கேட்ட
கிருஷ்ணபல ராமரன்று பரிவாலோட
நீசனதைக் கண்டவுடன் திகிலினாலே
நீள்சடையார் தமைவிட்டு நேராய்ப்போக
மோசமதி யானையிப்போ முடிக்கவேண்டும்
முறையாக இவ்விடத்தி லிருந்தண்ணாநீ
தாசரதியாரைக் காத்திட வென்றங்கே
தடுத்திட்டான் குய்யகனை யடுத்திட்டானே ... (௨௨௪)

இராகம் - கல்லியாணி - அடைதாளம்.

பல்லவி.

கொல்லுகிறேன் பாரடா - குய்யகாவுன்னைக்
கொல்லுகிறேன்பாரடா.

அநுபல்லவி.

நில்லுநில்லடா நீயோடாதே முன்னே
சல்லியஞ்செய்திருக்குஞ் - சண்டாளநாயேயுன்னை ... (கொ)

தரு.

௧. கரியைப்போல் ரூபம் எடுப்பன் - அசுரன்தன்னை
கண்ணன்சிம்மம்போற்பிடிப்பன்
அரியையவக்துஅடிப்பன் - அனந்தநாமன்
அவன்முதுகிலேயிடிப்பன்
சரியாகஇருவரும் சண்டைசெய்துசுற்றி
சாமளவண்ணனும் அவன்கரத்தைதப்பற்றி
குறியாகவேயுன்னைக் கொன்றிடுவேன்குத்தி
குதித்துஓடாதேயிந்த - வனத்தில்மூடாஒத்தி ... ... (கொ)
௨. மானைப்போலேதள்ளுவன் - குய்யகனை
மணிவண்ணனின்றே யெள்ளுவன்



கானல்ஜலமெனக்கொள்ளுவன் - காளமேகன்
கையாலவனைத்தள்ளுவன்
கோனாரோவாவெனக் கொழுப்பினாலேயழைப்பன்
கோமளவண்ணனுங்கூடியங்கேதழைப்பன்
தானகவேதாவித்தலைகீழாகவுழைப்பன்
தாமோதரனுங்கிட்டித்தரைதனிலேயிழைப்பன் ... (கொ)

௩. அரவம்போலேயாகுவன் - அரக்கன்பின்னே
அரிபருந்தேயாகுவன்
தரையிற்புற்றிலேகுவன் - கண்ணனுமன்று
தானும்பற்றப்போகுவன்
வரைதனைச்சுற்றியே - வலமிடமாயோட
வகையாகவண்ணனும் - வாடாமலேநாட
கரையாதகற்களை - கண்டகனும்போட
கரிமுகில்மேனியன் - கருத்தாகவேஜாட ... ... (கொ)

௪. பக்ஷியைப்போல்பறப்பன் - ராக்ஷசன்தன்னை
பற்றிக்கண்ணன்சிறப்பன்
கக்ஷிவிலங்காய்ப்பிறப்பன் - கமலநயனன்
கண்டுவெளியிற்றிறப்பன்
தக்ஷகன்மேற்படுத்தோன் தானவனைப்பிடிக்க
தடிசங்கருளனுக் - தாளாமலேகடிக்க
லக்ஷ்மிநாதனிடும் குத்தாற்றலைவெடிக்க
ராக்ஷசப்பட்டிமகன் - மாண்டுவுடல்துடிக்க ... ... (கொ)

வசனம்.

அசுரனைக்கொன்று ஸ்ரீகளை வீட்டுக்குப்போகத் திட்டஞ்செய்து பசுக்கள்மேய்க்கச்சென்ற கண்ணனைப்பிரிந்திருக்க முடியாமல் கோபிகைகள் சொல்லுதல்.

விருத்தம்.

தண்ணருளான் தயைவிட்டுத் தருப்பிடுங்கி
தாழ்சடையா னெனவன்று கோபங்கொண்டு
உண்ணவே பேய்களுக்கு விருந்தேயாக
உடைத்துமண்டை சிரோரத் னந்தனையெடுத்து
அண்ணனுக்குத் தானளித்தே யனங்கனைப்போல்
ஆய்ப்பாடி மார்களோ டாடிநீங்கள்
எண்ணமுடன் பதிக்கேகி வாழ்கவென்றே
ஏகினான் பசுமேய்க்கப் போகினனே ... (௨௨௫)

இராகம் - பந்துவராளி - சாபுதாளம்.

கண்ணிகள்.

௧. கண்ணனைக்கண்ணிலும் - உள்ளந்தனிலும்வைத்து
காணேனென்றுரைத்தாள் - ஒருகோபி
மண்ணும்விண்ணுந்தோன்றாமல் மன்மதவிரகத்தால்
மையல்கொண்டிருந்தாள் - ஒருகோபி ... ... *

௨. நாழிவருஷமாக - இருக்குது எனக்கின்று
நாதன்வாரானோவென்றாள் - ஒருகோபி
ஆழியங்கையனையணையவேண்டுமென்று
அன்பினாலேயுரைத்தாள் - ஒருகோபி ... ... *

௩. போதொருயுகமாக - இருக்குது எனக்கென்று
புனிதனேவாவென்றாள் - ஒருகோபி
சூதுகள்செய்தந்த சோதைதிருமகனுஞ்
சொல்லாமற்போனானென்றாள் - ஒருகோபி ... ... *

௪. வினாடிகற்பமாக - வெறுக்கிறேனானின்று
விமலனில்லாமலென்றாள் - ஒருகோபி
நானாவிந்தையுஞ்செய்து நம்மைவிட்டகன்ற
நாதன்வாரானோவென்றாள் - ஒருகோபி ... ... *

௫. வில்போல்வளைந்தகண்ணன் - வேணுகானங்களூதும்
வேடிக்கைபார்ப்போமென்றாள் - ஒருகோபி
கல்மாரிகாத்துகந்தகருணைக்கடலுமான
கண்ணனைக்காணேனென்றாள் - ஒருகோபி ... ... *

௬. ஆவியாகவிருக்கு - மனந்தகல்யாணலோலன்
அதோநிற்கிறானென்றாள் - ஒருகோபி
பாவியானபிரமன் பகலையிரவாக்காமல்
பண்ணினதேனென்றாள் - ஒருகோபி ... ... *

௭. காளமேகவண்ணனைக் - கண்டுமயில்களெல்லாம்
களித்தாடுகிறதென்றாள் - ஒருகோபி
ஏனஞ்செய்திங்கே எம்பெருமானின்று
ஏமாற்றிப்போனானென்றாள் - ஒருகோபி ... ... *

௮. எதிராகவேநம்மைப் - பார்த்திருக்கின்றவய்யன்
எங்கேபோனானோவென்றாள் - ஒருகோபி
கதிரவனைக்கிழக்கில் கண்டதிலையல்லோ
கார்வண்ணன்போனானென்றாள் - ஒருகோபி ... ... *

௯. பட்டமரந்தளிர்க்கும் - பசுக்களுநின்றுமேயும்
பரமன்வந்துற்றானென்றால் - ஒருகோபி
இட்டமாங்குழல்கேட்க இருக்குநாகங்கள்படம்
எடுத்தாடுமேயென்றாள் - ஒருகோபி ... ... *

௰. விருஷபங்களுங்கத்தி - விபுவைக்காணச்சுற்றி
வேண்டிக்கூவுதென்றாள் - ஒருகோபி
புருஷலக்ஷணமுள்ள புனிதன்ராமனுடன்
புண்ணியன்வாரானோவென்றாள் - ஒருகோபி... ... *

௰௧. கோக்களின்பாததூளி - கொண்டல்களைமறைக்க
கோவிந்தன்வருவதென்றாள் - ஒருகோபி
பாக்கிலைதந்திதழ் பருகிநிற்கும்படியா
பார்ப்பதெப்போதென்றாள் - ஒருகோபி ... ... *

௰௨. சங்கேதப்படியோடி - சகிகளெல்லாருங்கூடி
சாமியைக்காண்போமென்றாள் - ஒருகோபி
மங்கைலட்சுமிநேசன் - மருவிநம்மையணைந்து
மகிழுவரென்றுரைத்தாள் - ஒருகோபி ... ... *

வசனம்.

கோபிகைகளோடு விரும்பியபடிவந்து ஆடிப்பாடி கோகுலஞ்சேர்ந்திருக்கையில் விருஷபாசூரன் வந்ததைச் சொல்லுதல்.

விருத்தம்.

வேதையவர்க் கில்லாமல் விபுவாங்கண்ணன்
விரும்பிய போல்வந்து விளையாடிக்கூடிச்
சோதைமைந்தனோ டேவருந் தங்கள்தங்கள்
சுயக்கிரகஞ் சேர்ந்தினிதாய் வீற்றிருந்தார்
பேதையாங் கஞ்சன்தன் ஏவலாலே
பிரபலமாம் ராமகிருஷ்ணரையுங்கொல்ல
வாதைபட்டே யுயிரொழிய விருஷபனுமன்று
வாடுவான் பாலர்களைத் தேடுவானே ... (௨௨௬)

இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

விருஷபாசூரனும்வந்தானே - வேணுவைத்தேடி
விருஷபாசூரனும்வந்தானே

அநுபல்லவி.

விருஷபாசூரன்வந்தான் - விபுவுமனதுவந்தான்
புருஷலக்ஷணமற்ற - புல்லேறெனச்சுற்ற ... (விரு)

தரு.

௧. குளம்பினுற்பூமியைக் - குத்திக்கிளறிநின்று
கோவத்துடனேதுள்ளிக் - கூடியவரைவென்று
கிளம்பத்தன்கீர்த்தியை - கெர்வத்தினுலேயன்று
கெடுமதியாலந்த - கிருஷ்ணனெங்கேயென்று ... (விரு)

௨. வாலேச்சுழட்டியவன் வாதுசெய்யவடித்து
வாதியெங்கேயென்று வாக்கினுலேபடித்து
சாலேகளில்மரங்கள் சாயும்படியிடித்து
சத்துருவைக்காணச் சந்தடியாய்த்துடித்து ... ... (விரு)

௩. குன்றுகளையுமுட்டிக் கூவமங்கைசிதற
கோவிந்தாவென்றன்று கோபாலருங்கதற
கன்றுகாலிகளெல்லாம் கண்டுமிகப்பதற
கன்னியர்கூடித்தங்கள் - கைகளையுமுதற ... ... (விரு)

௪. கொம்பினுற்கண்ணனைக் கொல்லுவேனென்றுரைக்க
கொழுத்ததன்மேனிமயிர் கோவத்தினுலிறைக்க
வம்புக்குவருவாரை - வழிகளிலேமறைக்க
வசுதேவன்கையினுல் - வல்வினையைக்கரைக்க... ... (விரு)

௫. கண்ணனவனைக்காண - கன்மஜென்மமுநீங்க
காரியமுற்றுமன்று - கைகூடியேயோங்க
எண்ணமெல்லாங்கெட்டு - எதிரில்நின்றுதேங்க
என்னைக்குமறியாத - இடிபுடைப்பட்டேங்க ... ... (விரு)

௬. துஷ்டனுமிவ்வரக்கன் - துரத்தியாயரைமுட்ட
தூமணிவண்ணனைத் தொடர்ந்தவருங்கிட்ட
இஷ்டலக்ஷ்மிநாதன் - இன்பமாய்க்கைதட்ட
இடறுசெய்யமாடா - யிருந்தழிந்திடுங்கெட்ட ... ... (விரு)

வசனம்.

விருஷபாசுரனை அழித்தது.

விருத்தம்.

குத்திநிற்கு மாட்டண்டைக் கண்ணன்கிட்டிக்
கொம்பிரண்டைத் தன்கரத்தில் கொண்டுதாவி
எத்தியே வெகுதூரந் தள்ளிச்சென்று
எம்பெருமா னெடுத்தெறிந்து விட்டுநின்றார்
கத்தியே யுடல்நைய நிலமேல்வீழ்ந்த
கனைதெளிந்து மறுபடியு மெதிர்த்துவந்தான்
சத்தியற்றுப் போகவே சாமிகன்றாய்ச்
சாடினான் சண்டைசெய்யக் கூடினனே ... (௨௨௭)



267

இராகம் - நாதநாமகிரியை - ஏகதாளம்.

பல்லவி.

விருஷபாசுரன்கீழேவிழுந்தான் - பொல்லா
விருஷபாசுரன்கீழேவிழுந்தான்

அநுபல்லவி.

அம்பொன்முடியன் - கஞ்சன்வெற்றிக்
கொடியுமற்றாற்போல ... ... ... ... ... (விரு)

தரு.

௧. துரத்திநின்றோடியேவந்தான் - அவன்
துஷ்டத்தனத்தாலே மிகநொந்தான்
கரத்தினுற்கண்ணனுங்கிழிக்க - பதைத்துக்
காணநாக்கைப்பிதுக்கிக் கண்டவர்பழிக்க ... ... (விரு)

௨. கத்திக்கத்தியங்கேநடப்பான் - கண்ணன்
காலுதையாற் கீழிற்கிடப்பான்
சத்தியேரத்தமும்வடிய - நூதன்
சூரத்தனங்களற்றுச் சுருக்காகமடிய ... ... ... (விரு)

௩. நவரந்திரங்களுங்கிழிய - அதில்
நாடியமலஜலம் தானுகவழிய
அவையவங்களெல்லாமழிய - அரக்கன்
ஆங்காரகெர்வமுமப்போதே யொழிய... ... ... (விரு)

௪. காக்கைகழுக்களுங்கொத்த - கசடன்
கர்மங்கள்முற்றிலுமேயன்று வற்ற
பார்க்கவெல்லோர்களுமெத்த - பாடிப்
பரந்தாமனைக்கண்டு பாடியார்சுற்ற ... ... ... (விரு)

௫. கந்தருவர்கீர்த்தியைப்படிக்க - கருடர்
ககனத்திற்கூடியே நடிக்க
ஆந்தாதுந்துமியடிக்க - ஆயர்
ஆண்டவன் பாதத்தையன்பாகப்பிடிக்க ... ... (விரு)

௬. தருமலர்வாரித்தேவர்போட - விண்ணிற்
றங்கியபெண்களு நாட்டியமாட
திருலக்ஷ்மிநாதனைக்கூட - ஆயர்
தேவன்ஜெயஞ்சொல்லித் தேர்ந்தவர்பாட ... ... (விரு)

வசனம்.

நாரதமகாமுனிவர் சென்று கஞ்சனைக்கலைத்தல்.

விருத்தம்.

அருமருந்தை யளித்த கையனாலேயன்று
அரக்கனுமே யந்தகனூர் சென்றடைந்தான்
தருநிறைந்த வனந்தனிலே யாயரெல்லாம்
தழைத்துவிளை யாடியே யிங்கிருந்தார்
தருமதுர யாழிசையே கையிற்கொண்டு
தரித்திடு நாரதன் மதுரைதன்னில்வந்து
வருவிபத்து தனையோதிக் கஞ்சன்தன்னை
வாதிப்பா னவன்மனதைச் சோதிப்பானே ... (உஉஅ)

இராகம் - மோகனம் - அடைதாளம்.

பல்லவி.

கஞ்சா சொல்கிறேன் கேளடா - கண்ணனைக்கொல்ல
கனவிலுமாகாதுன்னாலடா

அநுபல்லவி.

அம்சமுதலான அவதாரமுங்கொண்டோன்
அரியவனாகையால் அண்டத்தையுமுண்டோன் ... (கம்)

தரு.

க. ஆயர்களுக்குமெய்யன் - அஞ்சுலக்ஷம் அன்னமணையுக்கையன்
மாயமாகவந்து மறைந்திருக் கிருக்கிறான் துய்யன்
மறந்திடவேண்டாநீ மணிவண்ணனும்அய்யன் ... (கம்)

உ. வித்தையிலேகெட்டி - அவனுடை மேனிரத்தினக்கட்டி
குற்றவாளிகளைக் - கொல்லவேமார்தட்டிக்
கொண்டிருக்கிறானந்த - கோகுலத்திலேமட்டி ... (கம்)

ங. வசுதேவர்பாலன்கண்ணன் - ஆயரூரில்வளர்ந்திருக்கிறான் துன்னன்
அசுரசம்மாரஞ்செய்ய - அனந்தனேயவனண்ணன்
ஆனந்தராமனுடன் - அண்டுவான்மணிவண்ணன் ... (கம்)

ச. குக்ஷியிற்செகம்வைத்தோன் - பிரமனைக் குழந்தையாகப்பெற்றோன்
பக்ஷலக்ஷ்மிகாதன் - பகவானாகவுற்றோன்
பாரிலுந்தனைக்கொல்ல - பகைவனேகற்றோன் ... (கம்)

வசனம்.

நாரதர் போனவுடன் கஞ்சன் தூதரையழைத்துச் சொல்லுதல்.

விருத்தம்.

நாரதன் சொல்லுரையாலே கஞ்சனன்று
நடுங்கியே பெருமூச்சு விட்டெழுந்து



ஊரதறும் படிகத்தி யுக்கிரமுங்கொண்டு
உடைவாளை யுருவித்தன் கையிலேந்தி
சேரவசுதேவன் தங்கை தனையுங்கொல்லச்
சீறியெழுந் தவனைமுனி தடுத்துச்செல்லக்
கோரவிலங் கிட்டவரைச் சிறையிருத்திக்
கூறுவான் மனஞ்சற்று ஆறுவானே ... ... (உஉ௯]

இராகம் - தனியாசி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. ஓடித்தூதர்காள் வாருங்கள் - எந்தனுடைய
வுரைதனைக் கேட்டுச்சேருங்கள்
நாடியேயெந்தனுக்கு நன்மையுண்டாகும்படி
நந்தன்முதலோரும் நாசமாய்ப்போகும்படி
கும்பல்வந்தாற் க்ஷேமமுண்டாம் - வசுதேவர்
நம்புகுழந்தைகள் துண்டாம் ... ... .... ... *

உ. அந்தராமகிருஷ்ணரென்றும் - இருவர்
அழகாம்பிள்ளைகளின்றும்
நந்தகோகுலத்திலே நாடியிருக்கிறார்கூடி
நவநீதங்களையுண்டு நாநிலத்திலேயாடி
இருக்கிறாரவர்கள் கண்டார் - நாரதர்
உருக்கமாயெனக்குவிண்டார் ... ... ... ... *

ங. மந்திரிமாரேநில்லுங்கள் - எனக்கொரு
மந்திராலோசனைசொல்லுங்கள்
இந்திரன்செய்யுந்தனுர் - யாகஞ்செய்கிறேனென்று
தந்திரமாயூரில் - சகலர்க்குரையுஞ்சென்று
உரைத்தால்தான்நன்மையுண்டாம் - உலகத்தில்
நிரைத்தால்தான்கீர்த்தியுண்டாம் ... ... ... ... *

ச. எதிராகவேவாருங்கள் - காவலர்களே
என்னுரையைப்பாருள்கள்
மதுரையலங்கரித்து மல்லரங்கங்கட்டுங்கள்
மடைப்பயல்கள்வரவே மணியாடிமாட்டுங்கள்
கட்டிநற்போருமுண்டாய் கருத்துப்போல்
வெட்டுவேன் துண்டிரண்டாய் ... ... ... ... *

ரு. உற்றபாகரேதேடுங்கள் - சொல்லியபடி
யுள்ளதுகொண்டோடுங்கள்

மத்தகஜத்தைக்கொண்டு - மார்க்கத்தில்நிறுத்துங்கள்
மல்லுசெய்யும்வகையா மடக்கிப்பொருத்துங்கள்
நிறுத்தினாலவனாவம்பாம் - கஜங்களும்
திருத்தமாச்செய்யுந்தும்பாம் ... ... ... ... *

௬. மல்லகஜெட்டிவாருங்கள் - எந்தனுக்கு
மகிழ்ந்துவாக்குத்தாருங்கள்
பொல்லாதசிறுவரைப் - புடைத்திடுங்கள்கூடி
புவிதனிலெந்தனைப் - புகழ்ந்திடும்படிநாடி
புடைத்தால்தான்வாழ்வுபாரும் - பழிதன்னை
துடைத்தாலென்குறைதீரும் ... ... ... ... *

௭. கேசியேநீவாடா - கிருஷ்ணனண்டை
கிளம்பியஸ்வமாய்ப்போடா
தோஷியவ்விருவரைத் - துரையாகவேகொல்லு
துரையாமென்னிடத்தில் - தொலைந்தாரெனச்சொல்லு
சொன்னால்நான்வாழ்வேனென்றான் - உலகிலல்லால்
முன்னாலென்தாழ்வேயென்றான் ... ... ... ... *

௮. இஷ்டஜனங்காள்வாரீர் - என்புத்தி
ஏற்றமிதைப்பாரீர்
அஷ்டதிக்குப்பாலர் - அனைவர்களும்நடுங்க
ஆய்க்குலத்தில்வளரும்அச்சிறுவரொடுங்க
செய்தமுயற்சிபாரும் - அவர்சிரம்
கொய்தாலென்னுயிர்தேறும் ... ... ... ... *

வசனம்.

அக்குரூரரையழைத்து பலராமனையும் கண்ணனையும் அழைத்து வரும்படிச் சொல்லுதல்.

விருத்தம்.

க்ஷேமமுண் டாகுமென்றிவ் விதமேயாக
ஜெகதீசன் தனைச்செயிக்க மூடனெண்ணி
ஏமமிகுந்திட வறிவு கெட்டுநிற்க
எழுத்துப்போல் தானிகத்தை விட்டுநீங்க
நேமமிகுந்திடு மமைச்சர் தங்கட்குள்ளே
நிபுணசிரோன்மணி யக்குரூரனை யழைத்து
ஆமதுரக்கோக் குலத்துள் வளர்ந்திருக்கும்
அய் யென்றான் பாலர்வரச் செய்யென்றானே (௨௬)



271

இராகம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

அக்குரூரரேயுமக்கு ஆயிரநமஸ்காரம்
அடியேன் சொல்வதைக்கேளும்

அநுபல்லவி.

நிக்குரூரமாகவே நேரும்எனதுபூபா,
விக்யாபனஞ்செய்தேன் விரும்பும்விசிதரூபா ... (அக்)

தரு.

௧. நந்தகோகுலந்தனில் நன்றாகவேயிரு
மைந்தர்கள்வந்து வளர்ந்திருக்கிறாரொரு
விந்தைதனைக்கேட்ட நாள்முதலாய்நேரில்
சிந்தைநொந்திருக்கிறேன் சீமையாளாமலூரில்... ... (அக்)

௨. யாகங்கள்செய்கிறான் அரசன்கஞ்சனென்று
வேகமாகநந்தன் விடுதிக்குநீர்சென்று
ஏகமாகநீங்கள் - எல்லாருமேதழைத்து
சாகரம்போல்வரச் — சாற்றியதாயழைத்து ... ... (அக்)

௩. மல்லயுத்தவேடிக்கை - மகிமைகளையுரைத்து
எல்லவர்செவியிலும் - ஏராளமாய்நிரைத்து
கல்லதனமாக நாட்டில் அவரைக்கூட்டி
கொல்லவென்னிடத்திற்குக் கொண்டுவந்திடுபேட்டி ... (அக்)

௪. வந்தபின்னிருமைந்தர் வளர்முடிதனைக்கொய்வேன்
எந்தன்மனம்குளிர - எரியுந்தீயிற்பெய்வேன்
உந்தனுக்குவேண உபசாரங்களுஞ்செய்வேன்
சிந்தையில்லாமல்முடி - சிரசிற்றரித்துய்வேன்... ... (அக்)

வசனம்.

கஞ்சன்ஏவிய கோடகாசூரன் கண்ணனெதிரில் அஸ்வரூபமெடுத்து வருதல்.

விருத்தம்.

அரசன்மனப்படி செய்வே னென்றுசொல்லி
அக்குரூரர்களிப்பினால் மேனிபொங்கப்
பரவசமாய்ப் பரந்தாமன் சேவைகாணப்
பலித்ததே பாக்கியமெனப் பதிக்குப்போனார்
சரசமாய்க் கஞ்சனுமே வீற்றிருந்தான்
சபலசித்த கோடகனு மஸ்வரூபங்கொண்டு

முரசடித்த வாறதுபோல் மிகக்கனைத்து
முடுகினான் பாடிவந்து கடுகினானே ... (உ௩க)

இராகம் - மோகனம் - சாபுதாளம்.

பல்லவி.

கோடகாசூரனும் வந்தான் - பொல்லாக்
கோடகாசூரனும் வந்தான்

அநுபல்லவி.

ஓட்டமாகவே ஓடியூரினில்
நாட்டமாயெவருங் - கண்டுநடுங்கவே ... ... (கோட)

தரு.

க. அரவம் ஆயிரமுடியும் நடுங்க
அதைக்கண்டவ ரெவர்களுமொடுங்க
உரத்தினாலே வீதி தன்னிலே சுற்றியே
சுற்றியே அவன் சுற்றியே
சிரத்தைக் குலிக்கி குலிக்கி குலிக்கி
ஸ்ரீகிருஷ்ண னெங்கென்று எற்றியே ... ... (கோட)

உ. வீசிவாலை விசையாய் நடந்து
வீதியிலுள்ள பசுக்களிடைந்து
காசினியிலுள்ள ஜனங்கள் கண்டு
கண்டு அவர் கண்டு
கூசபயந்து - பயந்து - பயந்து
கோவிந்த னிடத்திற் பண்டு ... ... ... (கோட)

௩. கடிப்பே னென்றவன் வாயைத்திறந்து
கத்தியே யெங்கிலுந் திரிந்து
துடிக்கவதன் உதடுமெத்த பதற
பதற அப்போ பதற
அடிக்கடி கதறி கதறி கதறி
அச்சுதனைத்தேடி யுதற ... ... ... (கோட)

௪. உதைக்கிறே னென்று கால்தூக்க
ஒதுங்குவர் கண்ணனும் பார்க்க
பதைக்கவே வந்த ராக்ஷசன்காலைப் பற்றவே
பற்றவே கிருஷ்ணன் பற்றவே
சதைக்க எண்ணி எண்ணி எண்ணி
சாமிலக்ஷ்மி நாதன்சுற்றவே... ... ... (கோட)



வசனம்.

கோடகா சூரனைக் கண்ணன் மடித்தது.

விருத்தம்.

உதைப்பனென்றே யோடிவந்த பரியைக்கண்டு
ஒதுங்கியே பயந்தான்போ லய்யனின்றான்
பதைப்போடே யருகுற்றான் காலைப்பற்றிப்
பந்துபோ லெடுத்துவிண்ணில் வீசிவிட்டான்
வதைப்பாடா நிலமீதிற் படியவீழ்ந்தான்
வருத்தத்தாற் கோபமோ டெதிர்த்துமீள
இதைப்பார்த்த கண்ணன்தன் கையைவாய்க்குள்
இட்டிட்டா னிருபிளவாய்ப் பிட்டிட்டானே ... (உ௩உ)

இராகம் - பைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

கேசியும் அழிந்தானே - கெர்வத்தாலே
கேசியும் ஒழிந்தானே

அநுபல்லவி.

பேசியக்கஞ்சன்சொந்த - பேரஸ்வமாய்வந்த ... (கேசி)

தரு.

துள்ளியே குதித்தோடி தொந்தரைசெய்திடநாடி
புள்ளிப் புரவித்தேடி புண்ணியன் கையால்வாடி ... (கேசி)

கனைத்துமிகக் கடுத்து கண்ணன்தனையடுத்து
நினைத்துவந்தான் தடித்து நிமலனாலேதுடித்து ... (கேசி)

கதறியூர்கலங்கக் கண்டவரும்விலங்க
பதறிவந்தவனின்று பாரில்விழுந்தன்று ... ... (கேசி)

பக்ஷமாய்மலர்சொரிய பாடியுள்ளோர்பரிய
லக்ஷ்மிநாதனைப்பாட ரம்மியமாய்க் கொண்டாட ... (கேசி)

வசனம்.

கண்ணனுக்கு இனிநடக்கும் விந்தையினை நாரதமகாமுனிவர் சொல்லுதல்.

விருத்தம்.

அம்பரத்திற் றேவர்களுந் துதித்திருக்க
அரம்பையொடு கின்னரு மாடப்பாடப்
பம்பரம்போல்வளையெடுத்த நாதன்றன்னைப்
பாடியுள்ளோர் மகிழ்வாகப் பரிந்துபேச
எம்பெருமான் செவிகளிலே வந்துசாற்ற

இனிநடக்கும் விந்தையின் னின்னவென்று
தம்புருநாரத னென்னுஞ் சீலனங்கே
தங்கினன் சேதிசொல்லிப் பொங்கினனே ... (உகக)

இராகம் - முகாரி - ஆதிதாளம்.

பல்லவி.

கேளுங் கேளுங் கண்ணு - விந்தையைக்
கேளுங் கேளும் வண்ணு

அநுபல்லவி.

கேளுங் கேளுங் கண்ணு கேசிமாண்டது போலே
கிளைப்பான் வியோமாசூர - துஷ்டனித்தலமேலே ... (கேளு)

சரணம்.

க. அணிமாசித்தியடைந்து - அசுரர்கள்
தணியாமதமிடைந்து
பிணியாகக்குடைந்து - கர்வித்த
பணிமார்புகளுடைந்து
போக்கிவிட்டசேஷம் - நோக்கியிப்போதிங்கே
பார்க்குள்ளரசராகத் - தாக்கியிருப்பவரை
நீக்கியளிக்கும்படி - தேக்கியிருக்கநேரில்
பாக்கியம்பெற்றதிந்த - கோக்குலகிருஷ்ணனீர் ... (கேளு)

உ. அக்குரூரர்வந்துபோகுவர் - மதுரைக்கு
பக்குவமாய்க்கொண்டேகுவர்
சிக்கவேமண்ணுகுவர் - ஜெட்டிகளுதிரம்
கக்கியுடல்நோகுவர்
கம்சனேடுசெங்கன் - தொம்சமாவனப்போ
வம்சவீனன்கரி - இம்சையாகவங்கே
தங்கமாய்த்தனூர்யாக - பங்கமாகவிட்டு
தந்தவக்கிரஜரா - சந்தன்போர்புரிய ... ... ... (கேளு)
அப்பால்நடக்குமெத்த - அதிசயத்தை
இப்போதென்மொழிசுத்தம்
தப்பாதுதருபத்தம் - கொண்டுவர
ஒப்பாதவன்சித்தம்
அப்போதபஜயக் - காப்பாமகபதிக்கு
கப்பாதுதிருக்கு - துப்பாசாபமகற்றி
இப்பாரிலிராசர் - மெய்ப்பாங்கன்னிகளை
எப்பாரும்புகழ - செப்புங்கல்யாணஞ்செய்வீர் ... (கேளு)



275

பார்த்தசாரதியென்னவும் - வேதியன்தாரை
வார்த்தபிள்ளைகள்துன்னவும்
பூர்த்தியாய்புகழ்மன்னவும் - பூமிபாரம்
தீர்த்துநாங்கள் பன்னவும்
பாரதமும்முடிய — கோரதரும்மடிய
பாரமுடிகடிய - நேரைவர்க்குச்சூடிய
வாரகையிற்கூடிய - வீரபதம்படிய
சேரவரும்வடிய - கோரலுத்தரிடிய ... ... ... (கேளு)

வசனம்.

கண்ணன்பசுக்களோடுந் தோழர்களோடும் ஒருமலையடிவாரத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போது வஞ்சனைசெய்யும் படிவந்தமாயாவியானவியோமா சூரனைவதைத்ததைச் சொல்லுகின்றது.

விருத்தம்.

நாரதரிவ்வாறுரைத்தே யரியைப்போற்றி
நயந்துடனே யிருப்பிடத்தைநோக்கிச்சென்றார்
பாரதனிற்பாலருடன் மலையடியிற்சேர்ந்து
பசுக்களையுமேய்த்த பின்புமடக்கிநின்று
தீரவேபசிநோய்க் கின்னமுது முண்டு
திறமாக வெல்லாரு மிருவிற்கூட
வீரதனப் பெற்றநம தண்ணலப்போ
வேண்டினர் விளையாடத் தூண்டினரோ ... (உகச)

இராகம் - காம்போதி - ஏகதாளம்.

கண்ணிகள்.

க. அஜமாய்ச்சிலபேர்கள் அதிலேபாதிச்சோரர்
நிஜம்போற்கண்ணனுடன் - லீலைகளுஞ்செய்து
ஆடினரோ - அங்கே - நாடினரோ *
அண்ணனுடன் - கூடினரோ ... ... ...

உ. கூடியிருக்கின்ற - கூட்டந்தன்னைக்கண்டு
ஓடியுரோமாசுரன் - ஒளித்தவ்விடஞ்சென்று
வந்தானே - வந்தவனுஞ் - சேர்ந்தானே ... ... *
சேர்ந்துசூதாயிருந்தானே ...

ந. சூதாகவேயிருந்து - தூங்கும்வேளையறிந்து
பாதகன்பாலரைப் - பர்வதக்குகையிலே
ஒளித்தானே - ஒளித்துமவன் - களித்தானே *
களித்தவனும் - பழித்தானே ... ... ...

ச. பழித்திருக்கிறசுத்த - பாமரனைப்பார்த்து
விழித்துஸ்ரீதானும் - வீணுவெனச்சேர்த்து
பிடித்தாரோ - பிடித்தவனை - அடித்தாரோ
அடித்தவனை - மடித்தாரோ ... ... ...

வசனம்.

அக்குரூரர் மதுரையைவிட்டுக் கண்ணனையும் அண்ணனையும் அழைத்துப்போகத் தேரேறிவருதல்.

விருத்தம்.

குகையில்விட்ட கோபால ரனைவரையுமாங்கு
கொண்டுவெளிப் பட்டகுழல் வாயன்மீதில்
நகைமுகமாய்ச் சுரர்கள்மலர் தூற்றிப்பாட
நந்தன்மகன் தன்னைவட மதுரைசேர்க்கத்
தகைபெருகு மக்குரூர ராசையாகத்
தறுதலையான் கஞ்சனுரை யதனல்நல்ல
சிகைமுடியான் ஸ்ரீதரனை யெண்ணிப்போற்றிச்
சிந்தித்தான் தேரேறி வந்தித்தானே ... (உகரு)

இராகம் - துஜாவந்தி - சாபுதாளம்.

பல்லவி.

அக்குரூரர்ரதந்தனிலேயேறிக்கொண்டாரோ - திரு
விக்கிரமனுடையசேவைகிடைத்ததென்றோ

அநுபல்லவி.

க. உக்கிரசேனன்மகனுரையையுகந்துபன்னவே - அந்த
சக்கிரக்கையனைக்காணவிது தருணமென்னவே ... (அக்)

தரு.

க. எண்ணில்லாதவூழிதவங்கள்என்னசெய்தேனே - அந்தக்
கண்ணனுடையதரிசனத்தைக் காணவுய்தேனே
பண்ணினசுகிர்தமென்றெண்ணிப்பையவே - அந்தப்
பத்தவுதாரனைக்கண்டு பஜனைசெய்யவே ... ... (அக்)

உ. கோரமானதவங்கள்செய்யக்குறிப்பறியேனே - அந்த
காரணன் செய்கையையினிநான்தெரியேனே
வாரணங்காத்தமாயன்சீரைவளமாப்புகழ்ந்தே - அந்தப்
பூரணனுடையமகிமையுன்னிப்புந்தியில்மகிழ்ந்தே ... (அக்)

ங. எந்தன்மனங்கோரும்வரமிப்போகூடுமோ - அந்த
நந்தன்திருமைந்தன்சித்தம்என்மீதில்நாடுமோ



சிந்தைதனிலேமகிழ்ந்துசேவைநாடியே - அந்த
மந்தகாசலோலனிருக்கும் மர்மம்பாடியே... ... (அக்)

ச. தோஷியிடத்திலிருந்துவந்ததுஷ்டனென்பாரோ - அவர்
பேசவுமெந்தனிடத்தில் பிரியம்வைப்பாரோ
காசினியோர்புகழுந்திருவண்ணனையேற்க - அந்த
நேசன்பக்தர்வாசவனும்நிமலனைப்பார்க்க ... ... (அக்)

ரு. சத்துருவின்தூதனென்றுசாமிவைவரோ - அந்த
உத்தமனுமென்னைக்கண்டு உதவிசெய்வரோ
கர்த்தனதுசெயலென்றுன்னிகருத்துட்கொள்ளவே - அந்த
சுத்தமதியோனைக்காணுஞ் சொகுசிற்றுள்ளவே ... (அக்)

சூ. மனமேயுனக்குமாயனிடத்திற் பயங்களேதுக்கு - அந்த
தனவானடியர்மனதுநோக அழையார்வாதுக்கு
இனமானவாயர்போலங்குஎன்னோடுகூடவே - இன்று
மனமாரப்பேசிமந்தகாசன்மருவிநாடவே ... ... (அக்)

எ. பிருந்தைதன்னிலேகண்ணன்திரிந்தபெருமைகாணவே - அங்கே
இருந்தபுட்களும்வண்டுகளும்பாடும்இனிமைதோணவே
பொருந்துந்தோழர்கடுவிற்புனிதன்திரிந்துவருகவே - அப்போ
திருந்துமென்னைக்கண்டுவரமுஞ்சீமான்தருகவே ... (அக்)

அ. கானகத்துவிருக்ஷங்களாகூடச்சேர்ரோ - வேணு
கானனுடையதரிசனத்தைக் காணவாரீரோ
வானவரைக்காக்கும்வாசுதேவனென்னவே - எனக்
கானலக்ஷ்மிநாதன்தனைக்காண்போமென்னவே ... (அக்)

வசனம்.

இவ்வாறு சொல்லிவருகிற அக்ரூரர் கண்ணன் திருவடி பதிந்திருக்கிற அந்த அடையாளத்தைக்கண்டு ஆனந்தபரவசராகி அவனைத் துதித்து அம்மண்ணைவாரித்தன் சிரமீதணிந்ததைச் சொல்லுதல்.

விருத்தம்.

தேரின்மேலிப்படித் துதித்துவருமக்குரூரர்
தெளிவானமணற் குன்றின்மீதழுந்தி
பாரினின்றும் பசுக்குலத்தோடேகும்போது
பதிந்திருந்தபகவான் தன்னடியைக்கண்டு
ஊரினிலேயிழந்த பொருள்கிடைத்தாற்போல
வுயர்மதியோ னுடனக்குரூ தம்கிறத்தி
ஏரிடுமச்சுவட்டு மண்ணைவாரிவாரி
ஏற்றினர் சிரமீதிற்றூற்றினரோ ... (உகசு)

இராகம் - கல்யாணி - அடைதாளம்.

பல்லவி.

கண்டாரேயக்ரூர் - கண்ணன்திருவடியைக்
கண்டாரேயக்ரூரர் -

அநுபல்லவி.

கண்டாரேஅக்ரூரர் கண்ணன்கழலடியைக்
கொண்டாரேமுடிமீதில் கோவிந்தன்பதப்பொடியைக் (கண்)

தரு.

க. மாபெலிச்சாலையில் வந்ததிருவடியோ
வஞ்சித்துமூவடிமண் கொண்டதிருவடியோ
பாவனமாயெங்கும் பரந்ததிருவடியோ
பக்தவச்சலன் திருப்பாதம்படிந்ததென்று ... ... (கண்)

உ. அண்டபிண்டாண்டத்தை யளந்ததிருவடியோ
அகிலமுந்தானுகி அமருந்திருவடியோ
கொண்டல்வண்ணனிங்கே குதித்ததிருவடியோ
கோக்கள்மேய்த்துலவுங் கோபாலனடியோவென்று ... (கண்)

ந. துஷ்டகாளியன்முடி துகைத்ததிருவடியோ
தூமணிவண்ணன் தன்துய்யமலரடியோ
கஷ்டங்களைத்தீர்க்குங் கண்ணன்திருவடியோ
கானகத்திற்றிரியுங் கர்த்தனடியோவென்று ... ... (கண்)

ச. தேவாதிதேவருந் தேடுந்திருவடியோ
தேவகியாளுடைச் செல்வன்திருவடியோ
மூவர்க்குமேலான முகுந்தன்திருவடியோ
மொய்குழல்லட்சுமி முதல்வனடியோவென்று ... (கண்)

வசனம்.

இவ்விதந்துதித்து ஆய்ப்பாடிச் சேர்ந்தஅக்ரூரர் அந்தவைபவங்கண்டு ஆனந்தித்தல்.

விருத்தம்.

அடிகண்டேயச்சுதனைப் பஜித்துக்கொண்டு
ஆனந்தபாஷ்பமது பெருகச்சேர்ந்து
தடிகொண்டேயாய ரெல்லாங்காலியோட்டித்
தங்களதுமனைசேரச் சொல்லும்போது
பிடிநடையாரொழில்கண்ட பெரியோனங்கு
பித்தனைப்போல் வந்தபடிபேசியோடிக்
குடியுவக்குங்கண்ணனமர் குலத்தில்நேரக்
கூடினர்அவர்களுடன் கூடினரோ (உநஎ)



இராகம் - நாதநாமக்கிரியை - ஏகதாளம்.

பல்லவி.

ஆய்ப்பாடியதிசயங்கண்டார் - அக்ரூரர்சிந்தையில்
ஆனந்தங்கொண்டார்

அநுபல்லவி.

ஆய்ப்பாடியதிசயமென்றார் - ஆயர்
அதிர்ஷ்டத்தை நானென்னசொல்லுவேனென்றார் ... (ஆய்)

தரு.

க. கன்றுகள்தாயையழைக்க - அங்கே
காமதேனுக்கள்போல் பசுக்கள்தழைக்க
என்றுமாயர்பழிகழிக்க - நிற்கும்
இடத்தையக்ரூரர்கண்டுடல்செழிக்க ... ... (ஆய்)

உ. கறந்திடுமோசையுமேற்க - அந்தக்
கண்ணனமர்ந்திடுமூலையும்பார்க்க
நிறைந்திடுஞ்செல்வம்பெருக்க - அந்த
நேமியங்கையன் மனதையுருக்க ... ... ... (ஆய்)

ந. அந்தணர்கண்டங்குசூழ - அந்த
அமரரும்வந்தய்யனடிகளிற்றாழ
செந்திருகூடியேவாழ - பாடி
சேர்ந்தவரானந்தவாரியில்வீழ ... ... ... ... (ஆய்)

ச. ஆசாபாசங்களுமோட - அங்கே
யடுத்தவரெல்லாரு மானந்தம்பாட
தாசானுதாசருங்கூட - அப்போ
தங்கியவக்ரூரர்தானுமேயாட ... ... ... (ஆய்)

ரு. இள்ளையவாயலிற்கட்ட - அது
கேசவன்வருவதைக்கிசியேயிட்ட
சள்ளையில்லாமற்கைதட்ட - பெண்கள்
சாடையாற்கண்ணனைச்சேரவுங்கிட்ட ... ... (ஆய்)

சு. பக்ஷிஜாலங்கள்பறக்க - அங்கே
பால்போற்றடாகத்தில் நீருஞ்சுறக்க
மச்சுமாளிகைபோல்நிறக்க - அந்த
மங்கைலக்ஷ்மிநாதன்மாடுங்கறக்க ... ... ... (ஆய்)

வசனம்.

அக்குரூரருக்கு நந்தகோபர் விருந்திட்டதைச் சொல்லுதல்.

விருத்தம்.

அதிசயமா யாய்ப்பாடி யனைத்துநோக்கி
அக்குரூர ரானந்தத்தாலே பொங்கித்
துதிசேருங் கண்ணனது பதியைநாடித்
தூமனத்தான் துரிதமுடன் வருதல்கண்டு
கதியளிக்கும் வேய்ங்குழலா னோடியன்று
கரம்பற்றிப் பலராமன் பின்னேசெல்ல
மதியுள்ள நந்தரிடங் கொண்டுசேர்க்க
மருந்தென்றுருண்ணிங்கே விருந்தென்றாரோ... (௨௩௮)

இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

விருந்துசெய்தாரேநந்தர் - விண்ணோர்வியக்க
விருந்துசெய்தாரே நந்தர்

அநுபல்லவி.

அருந்தவர்தமக்குமுந்தி - அர்க்கியங்களுங்கொடுத்து
வருந்தியாசனமிருத்தி - வழிபாடாகப்பொருத்தி ... (விரு)

தரு.

௧. எண்ணெய்காப்புசாத்தி - நீராட்டிவைத்து
எழிலாடையும் போத்தி
திண்ணமுடனே கூட்டி
திருவாபரணம் பூட்டி
நண்ணவெல்லோருஞ் சேர்ந்து
நல்லதெனக்களி கூர்ந்து ... ... ... (விருந்)
௨. சென்நலமுதானவன்னம் - சிறுபருப்பும்
சேர்ந்தபதார்த்த மின்னம்
கன்னலெனும் பலராமன்
கார்முகில் வண்ணநாமன்
இன்னயமாக ரெட்டித்து
இருவருமாகவட்டித்து ... ... ... (விருந்)
௩. பக்ஷணம்பரமான்னம் - பரிந்தெடுத்துப்
படைக்கவுமவர் முன்னம்
உச்சிதமுக்கனி கொடுக்க
உன்னிதநெய்பால் விடுக்க



இச்சையானபடி யுண்ண
ஏற்றபடியாகப் பண்ண ... ... ... (விருந்)

௪. சந்தனஜவ்வாதுபூசினார் - தமையனுடன்
சவரியுங்கொண்டுவீசினார்
விந்தைமலர்கள்சூட்டி
வேணுங்கச்சேரிகூட்டி
இந்தவிதமாகவாட
எழில்லக்ஷ்மிநாதன்நாட ... ... ... (விருந்)

வசனம்.

நந்தகோபர் அக்குரூரரைப் பந்துக்களுடைய க்ஷேமாதிகளையும் கஞ்சனது சேதிகளையுஞ் சொல்லும்படிக் கேட்குதல்.

விருத்தம்.

இந்தவித மாகநந்தர் அக்குரூரருக்கு
ஏற்றநல்ல விருந்திட்ட பின்னரங்கே
முந்துநம துறவினர்கள் சுகக்ஷேமம்யாவும்
மொழியுமெனக் கேட்டுமனந் தளர்ந்துநின்று
சுந்தரஞ்சேர் தோளானே யலுத்துவந்த
சோர்வகலப் படுத்துறங்கு முன்னானுங்கள்
பந்தகஞ்சன் படுபாவி சேதிதன்னைப்
பாடென்றான் செவிசாத்தி நாடென்றானே ... (௨௩௯)

இராகம் - முகாரி - சாபுதாளம்.

பல்லவி.

கஞ்சன்இருக்கிறானா - மகாபாபி
வஞ்சன்செருக்கிறானா

அநுபல்லவி.

கஞ்சனிருக்கிறானா - காதகலோபியான
கொஞ்சிடுங்குழந்தைகளை - கொன்றமாபாவியான ... (கஞ்)

தரு.

௧. தேவகிவசுதேவரை - சிறையிலிட்டான்
தீங்குகள் செய்துவிட்டான்
கோவத்துடனந்தக் - கோமானிருக்கநேரில்
க்ஷேமமுங்களுக்குச் சிக்குமோயவ்வூரில் ... ... (கஞ்)
௨. யதுவிருஷ்ணிபோஜ - குடும்பத்தார்
அகன்றிவ ணிடும்பற்றார்

தீதுசெய்வாரோடே - சேர்ந்திருக்கிறுனென்று
நீதமாய்நீரிங்கே - நேரோவந்தீரோவின்று ... ... (கஞ்)

௩. அனிஷ்டநிவாரணங்கள் - அய்யன்செய்ய
அனைவருங்கண்டுய்ய -
இஷ்டமாயுங்களுக்கு - இன்பமுண்டாவதாக
சிஷ்டரானவும்மைச் - சேவித்தேன்சதிராக ... ... (கஞ்)

௪. அதிதூரம்வந்த - அலுப்புநீங்க
அமரும்நித்திரையோங்க -
துதிசேர்புகழ்கொண்ட - தூயனேவருகோலப்
பதிலக்ஷ்மிநாதனைப் - பாடிக்கண்வளராலக் ... ... (கஞ்)

வசனம்.

நந்தர்க்ஷேமாதிகளை விசாரித்து அவரைநித்திரைசெய்யும்படி விட்டுப் போகக்கண்ணன் தனியாய் அக்குரூரர்கண்வளர்ந்திருக்கு மறைக்குட் சென்றுவந்த காரியமென்னவென்று ஆந்தரீகமாகவிசாரித்தல்.

விருத்தம்.

நந்தர்பெரியோனை விட்டகன்றபின்னர்
நயந்தொருவரறியாமலெழுந்திருந்து
சுந்தரமாயவர்வளருமறைக்குட்சென்று
சோர்வகலத் திருக்கரத்தாலடியைப்பற்றி
விந்தைமதியுள்ளோனே விரைந்திவ்வூர்க்கு
வேண்டிவந்த விதமதனையுரையாயென்று
தந்தரமாய்க்கண்ணனந்தரகசியத்தைத்
தருவிப்பான் சொற்சுவையால் வருவிப்பானே (உசும)

இராகம் - தன்னியாசி - மிசுரதாளம்.

பல்லவி.

ஏதிங்கேவந்தய்யா - அக்குரூரரே
ஏதிங்கேவந்தய்யா

அநுபல்லவி.

மோதுங்கரடிபுலி காடுதன்னைக்கடந்து
சூதுகாரகஞ்சன் தூதனுகநடந்து ... ... ... (ஏதிங்)

தரு.

௧. நந்தன்திருமைந்தன் - இப்போ - நாடிவந்தேனேயிங்கே
விந்தைவிளையுமெந்தன் - கைகளால் - வேண்டியுரைத்தீரேயங்கே
தந்தசிறுசிசுஆறும் - தறித்தானப்பாவியோடி



அந்தகுடிகேடனென்று - அழிவானவ்வாறுவாடி
சிந்தைதனிலன்புகொண்டு - சேர்ந்தீரோயிங்குநாடி
பந்தமில்லாதபாவி - பதைத்திடநாள்தேடி
உரைக்க - எங்கள்மனங் கரைக்க - வடமதுரை
நிரைக்க - நீங்களங்கே விரைக்க - ஜகமெல்லாம்
கொண்டுகளிப்படையா
விண்டுவெளிப்படையா ... ... ... (ஏதிங்)

௨. ஹரிபக்தியுள்ளவரோ - அலுத்து - ஆய்ப்பாடிவந்தீரே
இரியுநம்மரபோரை - க்ஷேமமாய் - தெரிசித்துகந்தீரே
பாரிப்பதிதன்னிலே - பாபிகஞ்சன்பிறந்து
மாரியில்லாததுபோல் - மனிதரெல்லாம்பறந்து
கோரியமாதாபிதா - குதுகலத்தைத்துறந்து
வீரியமற்றங்கே - விளங்கவிங்கேதிறந்து
களைத்தீர் - செய்வதுன்னி - யிளைத்தீர் - பந்துக்களை
வளைத்தீர் - கோகுலத்தில் - முளைத்தீர் - எங்களைத்தேடி
சேருங்கருத்தென்ன
நீரும்வருத்தென்ன ... ... ... (ஏதிங்)

௩. தந்தைவசுதேவர் - மதுரையிலே - தரித்தாராஆவி
எந்தாய்தேவகியும் - க்ஷேமமாய் - இருக்கிறாராமேவி
முந்தியிட்டவிலங்கை - முறித்தெறிந்திடலென்று
சிந்தைமகிழவிந்தச் - சிறுவர்கள்போய்நின்று
விந்தையாயெப்போது - வேதனைகளைக்கொன்று
பந்தமாமுடிசூட்ட - பாட்டனுக்கென்றின்று
சொல்லும் - துட்டன்தன்னை - வெல்லும் - காலமெது
அல்லும் - பகலுந்துணை - நில்லும் - பகைவனும்
பஞ்சைகஞ்சனைவெட்ட
அஞ்சமிஞ்சகைதட்ட ... ... ... (ஏதிங்)

௪. பூதகிநஞ்சுமுலை-கொடுத்துடன் - போய்க்கொல்லென்றுவிட்டானே
காதகசகடன்தலை - வெடித்திட்டு - காலனூர்போய்த் தொட்டானே
பாதகன்வார்த்தையாற் - பதைத்ததோவுமதாவி
தோதகமாயப்போ - அர்த்தனைநீர்மேவி
நூதனமாய்நியாயம் - நுழைத்துங்கேளாப்பாவி
ஓதவெங்களைக்காண - ஓடிவந்தீரோதாவி
சாதியும் - நினைத்தபடி - ஓதியும் - வகையாகப்
போதியும் - எங்களையுஞ் - சோதியும் - இப்போது
பண்டுபகையறக்க
இன்றுநாம்சிறக்க ... ... ... (ஏதிங்)

வசனம்.

கண்ணனோடு அக்குரூரர் வந்த விஷயத்தைச் சொல்லுதல்.

விருத்தம்.

வந்தவிதஞ்சொல்லுமெனக் கண்ணன்கேட்க
வஞ்சனையாயழைத்து வரச்சொன்னசூதை
சிந்தையிலேதானென்று டொளியாமலெல்லாஞ்
ஸ்ரீதரன்தன்செவிகளிலே யேற்றவெண்ணி
விந்தையினிவிளைவதையுங் காண்போமென்று
வேணுகோபாலனைத் தன்கையாற்கட்டி
சுந்தரஞ்சேர்முகத்தானுந் தயவுசெய்யச்
சொல்லுவார் வெளியாகவிள்ளுவாரே ... (௨௪௧)

இராகம் - எதுகுலகாம்போதி - ஆதிதாளம்

பல்லவி.

அழைத்துவரச்சொன்னானையா - அதிதுரையாய்
அண்ணனுடனேகூட - வடமதுரைதன்னில்

அநுபல்லவி.

அழைத்துவரச்சொல்லி யனுப்பினானென்னை
அதிமூடனான கஞ்சனுமுன்னை
செழித்திடும் ஸ்ரீ தரனென்றறியாமல்
ஜெகதீசனேயுந்தன் திருவுளந்தெரியாமல் ... (அழை)

தரு.

௧. நாரதருரைத்தவுரைதனைமூடனுங்கேட்டான் - கேட்டுடன் வாளால்
ஈறுக்கிறேன்வசுதேவதேவகியென்றுபுறப்பட்டான் - புறப்படவே
சீறுநீதியாற்றடுத்துடன்முனியும்போய்விட்டான்-போய்விட்டபின்
சேரவேயிருவர்க்குங்கால்தன்னில்விலங்குகளிட்டான்-விலங்கிட்டு
இருக்கின்றமந்திரிமாரையழைத்தான்
இனமில்லாயோசனையப்போதிழைத்தான்
தரிக்கின்றகெர்வத்தில்தலைகீழாய்குழைத்தான்
தனக்கெதிராரென்றுதானாகவுழைத்தான் ... (அழை)

௨. மதுரையில்மகரதோரணங்கட்டெனவரித்தான் - வரித்துப்பந்தல்
மாடமாளிகையெங்குமிகவுமலங்கரித்தான் - அலங்கரித்து
மதுமலர்மாலைகள்மகிழ்ந்திடமுற்றிலும்விரித்தான் - விரித்துமேலும்
மல்லரங்கமுங்கட்டியேபோர்செய்யத்தரித்தான் - தரித்தங்கே



தனுர்யாகஞ்செய்யவுந்தாஷ்டிகந்தொடுத்தான்
தரணியில்வேந்தரைவரச்சொல்லிவிடுத்தான்
அனுசிதனென்றபேரவனியிற்கொடுத்தான்
ஆண்டவனென்றுகையறியாமலெடுத்தான் ... (அழை)

௩. நேசத்தினால்விசுவாசமாய்வந்தெனையடுத்தான் - அடுத்துந்தன்
நிசபத்திமானென்றெனக்குக்கையெடுத்தான் - எடுத்துன்னை
மோசஞ்செய்திடமூடனுமேவகைகொடுத்தான் - கொடுத்துஎன்னை
முன்னிட்டுப்போகவெந்தனைவுன்னிடம்விடுத்தான் - விடுத்துடனே
கூட்டிவரச்சொல்லிக்கோரதம்விட்டான்
கொடுமையாகவத்தொழிலையுந்தொட்டான்
நாட்டிலுழைப்பவர்ஞாயத்திற்கிட்டான்
நாரணனேயுனையறியாமற்கெட்டான் ... (அழை)

௪. பொல்லாதநாளுஞ் சொல்லாமல்வந்து விட்டது - விட்டதல்லாமல்
பூமியிலவனுயிர்போகவுநாள்தொட்டது - தொட்டவுடனே
வல்லாண்மைகுன்றும் வேளைவரப்பட்டது - பட்டதாலே
வாதுக்குனையழைத்து வரவென்னையிட்டது - இட்டபின்பு
வஞ்சனைசெய்ய வரவெதிர்பார்த்து
வகையாகசேனை வதைக்கவுஞ்சேர்த்து
நெஞ்சினில்நீசன் நினைவுறக்கோர்த்து
நிசலக்ஷ்மிநாதனென்றறியாமலீர்த்து ... ... (அழை)

வசனம்.

நந்தகோபர்பாடியிலுள்ள,கோபாலர் யாவருக்கும் கஞ்சனுக்குக்காணிக்கை முதலியதுங் கொண்டுபோகும்படிப் பறையறைந்து தெரிவிக்கும்படி வெட்டியானுக்குத்திட்டஞ்செய்ய அவன்பறையடித்தல்.

விருத்தம்.

இந்தவித மோதிக்கண் ணனையகற்றி
எழுந்திருந்து நந்தரிடஞ் சென்றுநாளை
சிந்தையிலே மகிழ்ந்துகஞ்சன் மதுரைதன்னில்
சிறப்பாகத் தனுர்யாகஞ் செய்வதாலே
விந்தைபெறும் வெகுமதிகள் எடுத்துநீங்கள்
வெண்பாலுஞ் செந்தயிரு நெய்யுங்கொண்டு
பந்தமுள்ள வினத்தோடே வருகவென்னப்
பாடினார் பறையடித்தே யாடினாரோ ... (௨௪௨)

இராகம் - நாதநாமக்கிரியை - சாபுதாளம்.

பல்லவி.

பாடிப்பறையறைந்தான் - வெட்டியான்
ஓடிப்பறையறைந்தான்

அநுபல்லவி.

தேடியேயெல்லாருங் - கூடிவருகவென்று
நாடித்தெருவெங்கும் - நந்தருரைப்படியன்று ... (பாடி)

தரு.

க. இந்தவூரிலிருக்கும் - இடையர்கள் - எல்லவரும்பெருக்கும்
பந்தமாய்க்கஞ்சனுக்கு - பாலுந்தயிருங்கொண்டு
சந்தோஷமாகவே - சார்ந்துவரவுங்கண்டு ... (பாடி)

உ. யாகஞ்செய்கிறான்கஞ்சன் - இருக்கும் - அவனியாளும்வஞ்சன்
ஏகமாயெத்தனித்து - இனியபொருளெடுத்து
வேகமாகவரவே - வேண்டிவீதியடுத்து ... (பாடி)

ங. தெருக்கள்தோறுஞ்சுற்றி - திரிந்து - தேடியவனுங்கத்தி
உருக்கமாகவே - உகந்துதரும்படி
நெருக்கமாயூரெல்லாம் - நேசித்துவரும்படி ... (பாடி)

ச. பக்ஷமாகநந்தன் - இந்தப் - பாடியோர்க்குச்சொந்தன்
இஷ்டமாகநானே - இசைந்துமதுரைபோக
அஷ்டலட்சுமிநாதன் - அவனுநாமுமாக ... (பாடி)

வசனம்.

கண்ணன் மதுரைக்குப் போகிறானென்று கேட்டவுடன் கோபிகாஸ்திரீகள் வாடுதல்.

விருத்தம்.

பறையடித்தார் கண்ணனொடு நந்தர்சேரப்
பலராம சகிதராய்ப் பயணமென்றார்
தரையதிரப் புகன்றிடுமச் செய்திகேட்ட
டையலரும் பெருமூச்சோ டறிவழிந்து
இரையருந்தாக் கிளியாகி மனதுவாட
எழில்மாரன் மலர்வாளி கொண்டுஜாட
நரைகொண்ட மாதர்களும் விதனங்கொள்ள
காடுவார் கோபியர்கள் வாடுவாரோ ... (உசங)



இராகம் - எதுகுலகாம்போதி - அடைதாளம்.

பல்லவி.

என்னசெய்வோந் தோழிமார்களா - கண்ணனைப்பிரிந்து
ஏதுசெய்வோஞ்சகிமார்களா

அநுபல்லவி.

என்னசெய்வோஞ்சகிமாரே - எழிற்கண்ணனஞ்சொந்தன்
பன்னகநாமனுடனே - பயணமென்றார்கோவிந்தன் ... (என்)

தரு.

க. பிரமனென்றுபேரெடுத்தான் - படுபாவி
பெருமானைப்பிரியவிடுத்தான்
சிரமொன்றுபோனவனைச் - சேரவழைத்துத்தள்ளி
சேதிப்போந்தலைநான்குஞ் - ஜெகத்தோர்சிரிக்கக்கிள்ளி (என்)

உ. பிறந்தநாள்முதற்கண்ணன் - நம்மைவிட்டுப்
பிரியாதிருந்தவண்ணன்
துறந்துநமதுறவை - தூரப்போகிறான்சூதன்
மறந்துபோவானோநம்மை - மந்தகாசவிநோதன் ... (என்)

ங. இடையர்கள்மதியழித்து - இளித்தவாயர்
இருக்கிறாரேவிழித்து
வடமதுரைகோனுக்கு - வரிசைகளுங்கொண்டு
திடமாகநிற்குமிந்தத் - தீயர்தமையுங்கண்டு ... (என்)

ச. பெருமழைகொட்டாதோ - பிரயாணங்கெட்டுப்
போகுநாள்கிட்டாதோ
தருமநூற்புரோகிதர் - தாராபலஞ்சொல்லாரா
தடுத்தவர்பயணத்தைத் - தநியிலேநில்லாரா ... (என்)

ரு. ஊழ்வினைகளுங்கூடி - யுற்றக்குரூர
உருவமாகவேநாடி
பாழ்மனத்தோன்கஞ்சன் - பதைக்கிறான்யாகஞ்செய்ய
பைங்கிளிமாரெல்லாம் - பகவான்பிரிவால்நைய ... (என்)

சா. எவர்வைத்தாரக்குரூரர் - என்றபேரை
ஏற்குமென்னகுரூரர்
கவர்ந்துகண்ணனைக்கூடி - கலந்துபோவதுமெய்யோ
கன்னியர்நாங்களிங்கு - கரைந்தழுகிறோமெய்யோ ... (என்)

எ. மதுரைதனிலேமின்னார் - மயிலனையார்
மங்கையர்நமதொன்னார்

சதுரியப்பெண்கள்நம்மை - சகிக்காமொப்பாமென்பாரே
சாமிநீயங்கினிமேல் - சாரக்கூடாதென்பாரே ... (என்)

௮. கண்ணீராறுபோலாகி - கண்ணன்வழியில்
கனத்தவெள்ளமாயேகி
திண்ணன்மதுரைபோகா - தெதிர்கொண்டுமறுக்காதா
திருலக்ஷ்மிநாதனிங்கு திரும்பவும்பெருக்காதா ... (என்)

வசனம்.

இதுவுங்கோபிகைகள்படும் மனவருத்தத்தைச் சொல்லுதல்.

விருத்தம்.

என்னநாம்செய்யவதென்றே யிடைச்சிகள்கூடிநின்று
உன்னிதசீலன்தன்னை யொழிவதாலறிவுகெட்டு
இன்னிலந்தன்னிற் கண்ணனேகிறான் மதுரைக்கென்று
பன்னவேமனங்கலங்கிப் பாடுவாராடுவாரே ... (௨௪௪)

ராகம் - ஆகிரி - சாபுதாளம்.

கண்ணிகள்.

௧. சகியேநாமென்னசெய்வோம் - பிராணனைவிட்டு
சரீரமெப்படியுய்வோம்
அகிலலோகநாதன் - மதுரைபோக
அடுத்தான்கமலபாதன் ... ... ... ... *

௨. எப்படிமனம்வந்ததோ - நம்மைப்பிரிந்து
ஏகவுங்கால்வந்ததோ
சொற்படியேயாச்சே - மதுரைவாழுஞ்
சுந்தரிகளுக்கேச்சே ... ... ... ... *

௩. நந்தர்க்குபுத்தியில்லையே - கண்ணனைவிட
நமக்குவந்ததுதொல்லையே
மைந்தனையழைத்துவர - வஞ்சன்சொன்னால்
மறுத்துரையாரோசேர ... ... ... ... *

௪. விதியுமிப்படியாச்சே - நாமிருந்த
வேடிக்கையும்போச்சே
மதியில்லாதபிரமன் - ஏன்படைத்தான்
மங்கைமாருக்கதமன் ... ... ... ... *

௫. வாணியைநாம்படித்து - கண்ணனைத்தர
வணங்குவமாபிடித்து
சேணியன்நமதிஷ்டம் - செவிசாத்தி
சேதிப்பாயெங்கள்கஷ்டம் ... ... ... *



௬. தெய்வமிப்படிபண்ணிற்றே - நம்மையெல்லாம்
திகைக்கவைத்திடவெண்ணிற்றே
கையைக்கன்னத்தில்வைத்தார் - எல்லார்களும்
கண்ணீராறுயுற்றார் ... ... ... ... *

௭. பட்டணத்துப்பெண்கள் - மருர்கிட
பழக்கமானகண்கள்
இட்டமையாளாயண்டி - கண்ணனும்
இனிநம்மைச்சேராண்டி ... ... ... ... *

௮. பங்கஜதளநேத்திரன் - நம்முடைய
பதியானநற்பாத்திரன்
இங்கேவருவதேது - மறுபடிநம்மை
இணங்கியிருப்பதேது ... ... ... ... *

௯. பெண்களெல்லாருமோடி - வழிமறித்துப்
பிடிப்போங்கண்ணனைநாடி
மண்மேல்மகிழ்வாக - ஏகுங்குரூரனை
மறுப்போமிகழ்வாக ... ... ... ... *

௰. சற்றைக்குழல்முடிந்து - கோதுளிமேலே
கண்ணன்மேனியிற்படிந்து
உத்தமன்வருவதெப்போ - இனிமேலே
உகந்திடுவதுமொப்போ ... ... ... ... *

௰௧. திரும்பியும்நில்லானே - போகும்போது
திருப்தியுஞ்சொல்லானே
இரும்புவிதனிலிங்கே - நாங்கள்கூடி
இருப்பதுமினியெங்கே ... ... ... ... *

௰௨. நலமாம்நமதுறவை - எண்ணிலய்யன்
நாடுவோமவன்வரவை
கலங்காமல்நாம்பணிவோம் - பூலக்ஷ்மி
கணவனைச்சேர்ந்தணிவோம் ... ... ... *

வசனம்.

சோதையம்மன் விடைபெற்ற கண்ணனும் பலராமனும் மதுரைக்குப்போகும்படி யக்குரூரரோடு ரதம் ஏறுதல்.

விருத்தம்.

பெண்களெலா மிவ்வாறு புலம்பிவாட
பிரபலமாய் பிரயாண முரசுங்கொட்ட

தண்ணருளான் தாயிருக்கும் பதியிற்சேர்ந்து
தாங்கியவ ளிணையடியைச் சிரமேல்வைத்து
என்னமிகும் அக்குரூர நாதரோடு
இசைந்தடியேன் போகவரந் தாருமென்று
பண்ணிசையாள் விடைபெற்றுப் பரிந்தெழுந்து
பாடினன் தேர்மீது நாடினனே ... (உசரு)

இராகம் - மோகனம் - சாபுதாளம்.

கண்ணிகள்.

க. தேர்தனிலேறினன் தேவகியாள்மைந்தன்
சேஷனுடனேகூடி ஸ்திரீகளுடையசொந்தன்
ஊரிலுள்ளபேர்க்கு உரையாமலேவிந்தன்
உதையகாலப்பிரயாணம் உகந்தானேகோவிந்தன்

உ. க்ஷீரந்ததிநவ நீதங்களெடுத்தார்
சேர்ந்து ஆயர்கள் வண்டியைவிடுத்தார்
நேராகமதுரைக்குப் போகவும்படித்தார்
நிச்சயப்படும்படி பேரியும்அடித்தார்

ங. பின்தொடர்ந்தோடியே பெண்களும்வந்தார்
பெருமாள்பிரிவைநோக்கி பேசியேநொந்தார்
முன்போலக்கூடி யிருமென்றுரைதந்தார்
முகுந்தனேயுன்னை விடோமெனத்தொடர்ந்தார்

ச. கண்டந்தஸ்திரீகளைக் கடகக்கையமர்த்தி
கண்ணனுமவர்களை வாராமல்நிறுத்தி
அண்டையிற்சொல்லென ஆள்களைத்துரத்தி
அவர்களால்வருகின்ற பெண்களையிருத்தி

ரு. மதுரைக்குப்போனாலும் மறவேனென்நாளும்
மன்னன்செய்யாகத்தைப் பார்த்திங்கேகேளும்
குதுகலமாகவே க்ஷேமமாய்மீளும்
கொம்பனைமார்களா கொஞ்சநாள்தாளும்

சு. கஞ்சனைக்கொல்லக் கருத்தினிற்கொண்டார்
கண்ணனுந்தந்தையர் க்ஷேமத்தைக்கண்டார்
அஞ்சனக்கையனும் ஆனந்தமுண்டார்
ஆய்மொழியார்களைப் போமெனவிண்டார்

எ. நந்தன்முதலோர்க ளெல்லோருங்கூட
நாரணன்நாமத்தைப் பஜித்தவர்பாட



மந்தைபசுக்களும் மனதுகள்வாட
மணிவண்ணனைக் காணகாடெங்குந்தேட

அ. தேரைச்செலுத்தியே போகுறாரென்று
சிங்காரமாடிமேல் பெண்களுஞ்சென்று
ஊரைவிட்டுடன் மறைகிறாரென்று
முறையாமற்போறார் லக்ஷ்மிபதியின்று

வசனம்.

கண்ணன்மதுரைக்குப் போகிறவைபவத்தை கோபிகாஸ்திரீகள் சொல்லுதல்.

விருத்தம்.

மின்னனையார்க்கிந்த விதமுரைத்துக்கண்ணன்
மேல்நடக்கும் வாறதனையறியாநீங்கள்
பன்னகசயனன் தன்கிருபையாலே
பதிக்கேகிச்சிலகாலம் பொறுப்பீராகில்
கன்னயமாய்நானுமிங்கே யுங்களுக்கு
நாடறியசுலமாக வருவேனென்ன
சின்னமதிபோன்றநுதற் பெண்களெல்லாஞ்
சிந்தித்தார் காருமெனவந்தித்தாரோ .. (உசசு)

இராகம் - வராளி - ஏகதாளம்.

பல்லவி.

அதோபோறார் - அதோபோறார் - அதோபோறார் - நாதன்
அதோபோறார் - அதோபோறார் - அம்புஜபாதன்.

அநுபல்லவி.

அதோபோகிறாரய்யன் - அகிலந்தன்னிலேமெய்யன்
இதோஎங்கள்சொற்கேட்டுக் - கிதங்காமற்போறார்விட்டு (அதோ)

தரு.

க. நேசமாயக்குரூரர் ரதந்தன்னில்நாடி
கேசவநாரணன் போகுறாரோடி
வாசல்வழியாக வெல்லோருங்கூடி
வார்த்தையும்சொல்லாம லேகிறார்சேடி ... (அதோ)

உ. வெண்ணெய் களவாண்ட விஷ்ணுமதுசூதன்
விட்டுநம்மைப்பிரிய வெறுத்தாரேபோதன்
திண்ணன் மனமெல்லாந் திருடியே மோதன்
தெரிவையர்தமைவிட்டு தேரூர்ந்தானேவேதன் ... (அதோ)

ரு. சின்னவன்போலிந்தச் சீமான்ரிஷிகேசன்
சேதிசொல்லாமலின்று சிறப்பாகமோசன்
பன்னகனுமண்ணன் பக்கத்தில்நேசன்
பைங்கிளிமார் நீங்கப் பயணமானான் ஈசன் ... (அதோ)

சா. அச்சுதனனந்தன் அரியாம் ஆரணன்
அண்டர்கள்தேடும் அகண்டபரிபூரணன்
இச்சையாய் நம்மைவிட் டேகுமிக்காரணன்
இயல்லக்ஷ்மிநாதனும் எங்களுயிர்த்தாரணன் ... (அதோ)

வசனம்.

காளிந்தி மடுவில் கண்ணன் அக்குரூருக்குத் தரிசனமானதைச் சொல்லுதல்.

விருத்தம்.

போன விமானங்காட்டில் மறைந்ததாலே
பொருளிழந்தார் போலவேபெண்கள் நின்றார்
ஆனபடியதிவிசையாய் ரதமுஞ்செல்ல
அவர்களெலாங் காளிந்தி நதியைச்சேர
தேனமுத குணமுடையா னண்ணனோடு
தேரிழிந்து நீர்ப்படிந்து வந்தபின்பு
ஞானமதியக்குரூரர் கடன்முடிக்க
நாடினார்தீர்த்தமங்கே யாடினாரே ... (உசஎ)

கொச்சகம்.

க. தேர்தனைக்கண்டு நின்று ஜலந்தனிலே யக்குரூரர்
யாரிதைக் கொண்டுவந்தே யமைத்திட்டா ரிதனுள்ளாக
கார்முகில் வண்ணனோடு கடும்பரிகொணர்ந்த தென்றே
நீர்தனை விட்டெழுந்து நிறுத்தின விடத்திற்கண்டார் ..

உ. திருந்திய ரதத்தின்பேரில் திருமாலு மண்ணனோடே,
பொருந்தியே பெருமையாகப் புலப்படும் புதுமைகண்டு
வருந்திய மனத்தானேகி வளரும்பாம்பணையோனாக
மருந்தென நீரில்நோக்கி மகிழ்வாக வெதிர்நின்றாரே ..

வசனம்.

அக்குரூரர் கண்ணனைத் துதித்தானந்தித்தல்.

விருத்தம்.

தரிசித்தாரக்குரூரர் நீருள்ளாக
தாமோதரன் திவ்வியரூபத்தோடு .



பரிசித்தார்மெய்மறந்தார் பதியஞானம்
பாடினாராடினார் பரிந்துநோக்கி
அரிமுகுந்தாவச்சுதாவாமனாவென்
ஆருயிரேயமல மலர்ப்பாதனேமுன்
கரியதனைக்காத்தவனே யென்னப்பன்னிக்
கண்டிட்டாரானந்தங் கொண்டிட்டாரோ ... (உசஅ)

இராகம் - தோடி - ஆதிதாளம்.

பல்லவி.

கண்டாரோயக்குரூரர் - கண்ணன்விஸ்வரூபத்தைக்
காளிந்திமடுஜலத்தில் -

அநுபல்லவி.

அண்டர்கள்நாதனை - யம்புஜபாதனை
செண்டலங்காரனை - சேஷசயனனை ... ... (கண்)

சரணம்.

க. கொண்டல்வண்ணனை - கோபிகள்எண்ணனை
குன்றமெடுத்தவனை - குடையாய்ப்பிடித்தவனை
புண்டரீகாக்ஷனை - பூமகள்நாதனை
புஜங்கசயனனை - புகழும்நயனனை ... ... (கண்)

உ. அண்டமளந்தவனை - யானைக்கருபனை
தொண்டர்துயரதனை - தொலைக்குநல்வேதனை
தண்ணருள்நீதனை - தங்குநற்போதனை
தற்பசயனனை - தாமரைநயனனை ... ... (கண்)

ங. அரைநூல்மாலையும் - அரைவடக்கிங்கிணியும்
அழகுபீதாம்பரமும் - அய்யன்திருமேனியும்
கரையில்கேயூர - கங்கணகாந்தியும்
கடலிற்சயனனை - கமலநயனனை ... ... (கண்)

ச. பத்மவிதழ்போலப் - பத்துவிரல்களும்
வஞ்சாயுதங்களும் - பரந்தபுஜங்களும்
உத்தமப்பிரமனை - யுகந்தநல்லுந்தியும்
உரகசயனனை - ஒளிரும்நயனனை ... ... (கண்)

ரு. பாந்தமுகத்தழகும் - பல்லொளியுஞ்சிரிப்பும்
பவளக்கனிவாயும் - பகர்திருநாசியும்
சிரசில்கிரீடமும் - திலகலலாடமும்
சேர்திருமார்பனை - சிரந்தநயனனை ... ... (கண்)

௬. வட்சஸ்தலந்தனில் - வனமாலைகவுஸ்துவம்
வழுத்துமுப்புரிநூலும் - வலம்புரிச்சங்கமும்
பட்சமாகமுந்து - பரிந்திடுங்கோவிந்த
பகர்லக்ஷ்மிநாதனே - பத்மநயனனே ... ... (கண்)

வசனம்.

இவ்விதவைபவத்தோடு தரிசிக்கப் பெற்ற அக்குரூரர் மனதுக்கும் வாக்குக்கும் எட்டாவத்தப்பரம்பொருளை தன்னுற்கூடியமட்டும் புகழ்ந்து துதித்தல்.

இரட்டையாசிரியப்பா.

ஆனந்தபைரவி.

நித்தமங்கள திவ்ய விக்கிரகரூபனே
  நலந்தரும் பிரபஞ்சலோலா
நாராயணவுனது நாபிகமலத்தில்முன்
  நான்முக னுதிக்கவில்லையோ
நந்தர்திருமைந்தனென வறிவீனர்சிலபேர்கள்
  நாட்டினி லுரைப்பதென்னே
ஞானகர்மேந்திரிய விஷயங்கள்யாவுக்கும்
  நாயகா முத்திமுதலே
நடுநிலைமையோடு விளையாடிடும்ரூபனே
  நவநீத மானவிபுவே
நாகலோகத்தவருந் தேவலோகத்தெவரும்
  நாடுபுண்ணிய சீலனே
நாரதமுனீந்திரர்க ளாயினோர்போற்றுநல்
  நாதவே தாந்தமணியே
நாடுநீர்வாயு தியாகியேயெங்கிலும்
  நயந்திடுஞ் சுகுணசீலா
சித்தமுறுக்ஷீரத் தினடுவிலே வளர்கின்ற
  சுயம்புமும் மூர்த்திமேலா
சொல்லரியபக்ஷிமுதலீ யெறும்பாதியாய்ச்
  சொலித்து வருவைகுந்தனே
சொர்க்கமத்தியமுதல் பாதாளமுற்றிலுஞ்
  சுருதிவடிவான சுடரோ
சோதிடம்வேத வேதாந்தமேயானதோர்
  சுரூபனேயாதிமூலா
சுந்தரகுணகரசுரர்க்க முதமீய்ந்தவெகு
  சூரனே தேவதேவா
சோரகுணமான போர்வாளரக்கரழிய
  தோன்றிவருதய்யபோதா.



சுத்தனிஷ்கள நிமலஜோதிமயகீதனே
  சுபன்னவாகனரூடனே
சொக்குநல்லோரிடஞ் சூழ்ந்தேயிருந்திடுஞ்
  சூத்திர லீலாவிநோதா
அத்தகிரி யேமகிரி யண்டபகிரண்டமு
  மடங்கலு நிறைந்த கோலா
அரிதானபிறவிசாகரநீந்தவாய்த்ததிரு
  அழகுசேர்ந்திடுமோடமே
அனந்தசுபாசிரயபகவத்பிம்பாகர
  ஆனந்தமானபரனே
அண்டமுகட்டின்சிரசாகியேவிளங்குமென்
  அரிநமோநாராயணா
அத்திமரந்தன்னிலேதொத்திடுங்கனிபோல
  அகிலமுன்மேனிதனிலே
ஆடியசைவாடுதேயய்யனேயப்பனே
  யடியவர்க்கருளுவோனே
அத்தனேநித்தனேயித்தரணிவருபத்து
  அவதாரமுடையவையா
ஆழாழிமத்தியிலாலின்மேலேபடுத்
  தமர்ந்திடுமனந்தசயனா
எத்தலத்துள்ளிலும்முத்திசேர்வித்தென
  இருக்குமெஞ்ஞானவொளியே
இகபரமிரண்டிற்குமேற்றசீர்காரணா
  ஏகாந்தமானபொருளே
இரவியொடுபிரமனுமேருறுஞ்சடையானும்
  ஏற்றிவந்திடுநாமனே
இந்தமண்டலத்திலேவிந்தைமதிகஞ்சனை
  இம்சிக்கவந்தவீரா
இருள்சேருமிருவினைகளினியெனைச்சேராம
  லீடேற்றவருமுத்தமா
இந்திரன்கொர்வமடக்கவேமுன்னின்று
  எழில்வரையெடுத்தகையா
இங்கிலென்முன்னாகத்தோன்றிடுமெய்யனே
  ஈசனேமனமுவந்தே
இயலட்சுமிநாயகாவேழையைக்காக்கவே
  இணையடியைப்போற்றுவேனே ... (உ௪௧)

இராகம் - சங்கராபரணம் - அடைதாளம்

பல்லவி.

கண்ணாவுந்தன்பாதம் நம்பினேன் - என்னைக்
காப்பதுன்கடமை சொன்னேன் - கமலக்
கண்ணாவுந்தன்பாதம் நம்பினேன் -

அநுபல்லவி.

ஆயிரஞ்சிரசுள்ள - ஆதிசேஷனுமல்ல
அய்யாவுன்மகிமையை - யறிந்தவனுஞ்சொல்ல... (கண்)

சரணம்.

௧. மச்சாவதாரனாய் வந்தோனே - யந்த
மதுகயிடவர்களையுறந்தோனே - யுன்
மைந்தர்க்குவேதங்கள் தந்தோனே - யென்
மனதுக்கவலையைபோக்கி விடுத்தோனே
மங்களமாந்திவ்யசேவை கொடுத்தேனே ... ... (கண்)

௨. கூர்மாவதாரனாயுதித்தோனே - கடலில்
குன்றைமூதுகிற்பதித்தோனே - அப்போ
கூடியமுதமும்மதித்தோனே - அதைத்
தேவர்கட்கெல்லாந்தேடிக்கொடுத்தோனே
பாவியசுரரைப்பறக்கவிடுத்தோனே ... ... (கண்)

௩. சுவேதவராகமாய்ப்பிறந்தோனே - அப்பால்
சூழ்ந்துபாதாளந் திறந்தோனே - யுள்ளே
சுட்டிராக்ஷசனுயிர் கறந்தோனே - அந்தப்
பூமியைமுன்போல் கொணர்ந்து விரித்தோனே
நேமியங்கையனாய் நிதமுந்தரித்தோனே ... ... (கண்)

௪. சிம்மாவதாரமாய் வளர்ந்தோனே - அங்கே
சீராயிரணியனைப்பிளந்தோனே - அந்த
ஸ்ரீலட்சுமியாலன்று தளர்ந்தோனே - வந்து
பக்தன்பிரகலாதனனை பாரினிற்காத்தோனே
பாமரனுமென்முன் - பார்க்கவும்பூத்தோனே ... (கண்)

௫. வாமனரூபமெடுத்தோனே - அந்த
மாபலிமுன்வந்தடுத்தோனே - மண்
மூவடிகொண்டுமுடித்தோனே - சொல்லும்
லோகமுவேதமுநீயாய்நிறைந்தோனே
ஏகராமனாய் எங்குஞ்சிறந்தோனே ... ... (கண்)

ஸ்ரீமகாபாகவதத்சமஸ்கந்தநாடகம். ௨௯௭

௬. பரசுராமவதாரசூரனே - பாரில்
பார்த்தவரசர்பணிவீரனே - உள்ள
மரவுரிதரித்ததோர் தீரனே - அந்த
தசரதபாலர்க்குத் தபபலமீய்ந்தோனே
தவஞ்செய்யமறுபடி தனியாகத்தோய்ந்தோனே ... (கண்)

௭. ராமாவதாரமெடுத்தோனே - லங்கை
ராக்ஷசப்பூண்டைமடித்தோனே - உந்தன்
நாயகிசிறையைவிடுத்தோனே - அப்பால்
ஊனைவிபூஷணற்கு - உவந்தேயளித்தோனே
உண்மையாயென்முன்னே - ஓதக்களித்தோனே ... (கண்)

௮. கிட்டாவதாரமாயுதித்தோனே - பொல்லா
துட்டர்கள்தம்மைவதைத்தோனே - அண்ணன்
இட்டனாயிருந்துநகைத்தோனே - இங்கே
எழிலானபெண்களோடின்பமாய்ச்சென்றோனே
தொழில்செய்யவெந்தனையாளாக்கினின்றோனே ... (கண்)

௯. ஒருத்திமகனாய்ப்பிறந்தோனே - பின்பு
ஒளித்துக்கோகுலத்திற்சிறந்தோனே - அங்கே
திருத்தமாய்ப்பசுக்களுங்கறந்தோனே - என்றும்
இஷ்டமுடன்தயிர்வெண்ணெய்பாலுண்டோனே
இம்மடுவிற்குள்ளே இருக்கவும்விண்டேனே ... (கண்)

௰. சகலமுநீயாகவேகண்டேன் - அண்ட
சராசரமுன்னிடத்திற்கண்டேன் - அந்த
சதுர்முகன்முதலோரையுங்கண்டேன் - இன்னுந்
திருலக்ஷ்மிவிளையாடுந் திருவுரமுங்கண்டேன்
தேவாதிதேவனைத் தெரிந்தெதிரில்நின்றேன் ... (கண்)

வசனம்.

இவ்வாறுதுதித்து அக்குரூரர் மங்களம்பாடுதல்.

வாழிவிருத்தம்.

௧. கண்ணனேவாழிவாழி கவுஸ்துவாபரணாவாழி
வீண்ணனேவாழிவாழி வலம்புரிச்சங்காவாழி
அண்ணலேவாழிவாழி யருளுநாரணனேவாழி
திண்ணமால்வாழிவாழி திருமங்கைநாதாவாழி ... (உருய)

இராகம் - அசாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

திருவுறையுமார்பனுக்கு ஜெயமங்களம் - நல்ல
திவ்யமுகரூபனுக்கு சுபமங்களம்

அநுபல்லவி.

அருமறையளித்தவர்க்கு - ஸ்ரீயாய்க்களித்தவர்க்கு
பெருவரையெடுத்தவர்க்கு - பெய்மழைதடுத்தவர்க்கு ... (திரு)

சரணம்.

க. நந்தமுகுந்தனுக்கு விந்தனுக்குமங்களம்
நவநீதசோரனுக்குச் சாரனுக்குமங்களம்
மந்தகாசலோலனுக்குமன்மதகோலனுக்கு
சுந்தராகாரனுக்கு சோதைகுமாரனுக்கு ... (திரு)

உ. காயாம்பூவண்ணனுக்கு துண்ணனுக்குமங்களம்
கருமுகில்ரூபனுக்கு தீபனுக்குமங்களம்
மாயாவதாரனுக்கு மங்கைவாழ்மார்பனுக்கு
மாயாப்புகழோனுக்கு மாடோட்டுங்கோனுக்கு ... (திரு)

ங. தேவகிமைந்தனுக்கு சொந்தனுக்குமங்களம்
தேவரனுகூலனுக்கு மூலனுக்குமங்களம்
பவமறுந்தாளனுக்கு பருத்துயர்தோளனுக்கு
நவமாய்நடித்தோனுக்கு நற்றுளவத்தாரனுக்கு ... (திரு)

ச. வசுதேவசேயனுக்கு - வள்ளலுக்குமங்களம்
வையமுண்டவாயனுக்கு - நேயனுக்குமங்களம்
அசுரசம்மாரனுக்கு - ஆனந்தசாரனுக்கு
சிசுபோன்றபோதனுக்கு செல்விலக்ஷ்மிநாதனுக்கு ... (திரு)

வசனம்.

இவ்விதமாய் மங்களம்பாடிக் கரையேறிய அக்குரூரர் கண்ணனைக் கண்டு நாராயணா, நாராயணா, வென ஆனந்தக்கூச்சலோடு ஓடிவருதல்.

விருத்தம்.

மங்களங்கள் பாடிமெய்ம் மறந்துநிற்க
மாதவனு மதுகேட்டு மறைந்துபோனான்
செங்கண்மா லதிசயத்தை மனத்திருத்தி
சீக்கிரத்தில் மடுவைவிட்டுக் கரைமீதுற்று
அங்கந்த வக்குரூரர் தேரின்பேரில்
அவனிருக்கும் வைபவமுங் கண்டுநேரிற்
பங்கயம்போற் றாளுடைய பகவானென்றே
பாடினார் பணிந்தபடி யோடினாரே ... (உருக்)

இராகம் - பியாகு - சாபுதாளம்.

பல்லவி.

நாராயண - நாராயண - நாராயண - நாராயண
நாராயண - நாராயண - ஸ்ரீகோபாலஹரே



சரணம்.

க. க்ஷீரசாகரசயனா - திவ்யாம்புஜநயனா ... ... (நாரா)
உ. பீதாம்பரஜோபிதா - பிரம்மதேவர்க்குப்பிதா ... (நாரா)
ங. யமுனாதீரவாசா - ஈரேழுலகநேசா ... (நாரா)
ச. பிருந்தாவனஈசா - பிரபலநாமப்பிரகாசா ... (நாரா)
ரு. சங்குசக்கரஅத்தா - சாதுஜனசித்தா ... ... (நாரா)
சா. அஷ்டாக்ஷரபாத்திரா - அடியவர்மகிழ்தோத்திரா ... (நாரா)
எ. பதிதபாவனசீலா - பரமகல்யாணலோலா ... (நாரா)
அ. ஸ்ரீலக்ஷ்மிமணவாளா - ஸ்ரீதராவெனையாளா ... (நாரா)

வசனம்.

இவ்விதமாகப் பணிந்துவரும் அக்குரூரரைக்கண்ட கண்ணன் அதிசயம் ஏதாவதுண்டோவெனக் கேட்குதல்.

விருத்தம்.

கண்டபடி பணிந்தவராய்க் கூத்தேயாடிக்
கண்ணனரு கணைந்தவந்த வக்குரூரர்
எண்டிசையுங் கேட்கப்பே ரினசச்சலோடே
யேற்றதிரு நாரணா வெனமொழிந்து
தண்டரள மார்பனே முகுந்தாவெந்தன்
தாரகமே மெய்ப்பொருளே யென்றுபோற்ற
விண்டருள்வீ ரதிசயமே தய்யாவென்றே
வேண்டினான் கிருஷ்ணனுமே தாண்டினானே ... (உருஉ)

இராகம் - பைரவி - அடைதாளம்.

பல்லவி.

ஏதய்யா அக்குரூரா இத்துணைபோது
எங்கேபோனீரையா சொல்லும்

அநுபல்லவி.

ஸ்ரீதாகவெங்களைத் தேர்தனிலேபொருந்த
ஏதுகாரணமாகப் போனீரங்கேவருந்த ... ... (ஏத)

சரணம்.

சூரியோதயகாலத்தில் தேரைவிட்டேயிறிங்கு
சொல்லிஸ்நானஞ்செய்யப்போனீரே
ஆரியரோயஸ்தமானகாலமாச்சுதே
ஆதிநாதனைக்கண்டானந்தித்திருந்தீரோ ... ... (ஏத)

உ. காளிந்திமடுநதிகண்முன்னேயிருக்கையில்
காட்டில்வழிதப்பியலைந்தீரோ
கோளரிமாதவனைக்கொண்டுமனதினில்
குதித்துக்கூத்தாடியே கூடமலைந்தீரோ ... ... (ஏத)

௩. நீரிலிழிந்து நீராடியிருக்கும்போது
நீரோதாவதங்கேகண்டீரோ
பாரிலில்லாதவதிசயங்கள்தம்மை
பார்த்துப்பூரித்துப்பரவசங்கொண்டீரோ ... ... (ஏத)

௪. அந்தரமானகாட்டிலறியார்களைவிட்டு
அய்யாநீரங்கேனிருந்திரோ
விந்தையாகவேவிளங்கும்லக்ஷ்மிநாதன்
விளையாட்டைக்கண்டுடன்,மெய்யைமறந்திரோ ... (ஏத)

வசனம்.

அக்ரூரர்தான்கண்ட வதிசயத்தைக் கண்ணனுக்குச்சொல்லுதல்.

விருத்தம்.

இந்தவிதமாகவெழிற்கண்ணனன்று
ஏதுமறியான்போலக்கேட்கவக்ரூரர்
சிந்தைக்கும்வாக்குக்குமெட்டாவெந்தன்
சிறப்புடையஜெகதீசனீயேயென்று
விந்தையாயம்மடுவிற்கண்டுநின்ற
வேடிக்கைதனைச்சொல்லவேண்டுமென்றால்
அந்தமுள்ளஅரிமுகுந்தாஅடிமைக்கோர்வா
யானலுங்கூறுவேன்கேளென்றனே (உ௬௩)

இராகம் - சங்கராபரணம்-அடைதாளம்.

பல்லவி.

நாராயணவுன்னை நம்பினேன்சரணம்
காரார்திருமேனிக் கண்ணனேசரணம்

சரணம்.

க. பரத்வமும்வ்யூகமும் விபவமும்நீயே
பரலோகநேமனப் பகவானும்நீயே ... ... (நாரா)

உ. அரனயனமைந்த வரனந்தன்நீயே
அரியாயச்சரசிலே யமர்ந்தவன்நீயே ... ... (நாரா)

௩. ஈரேழுபுவனத்தை யுண்டவன்நீயே
எங்குந்தானகவே யிருப்பவன்நீயே ... ... (நாரா)



௪. உனையன்றியதிசய மொன்றுண்டோநாதா
உரகசயனனே யோதுவாய்நாதா ... ... (நாரா)

வசனம்.

அக்ரூரருக்குள்ள பக்திவிநயத்துக்குகண்ணன் சந்தோஷப்பட, இரதத்தைச்செலுத்தி மதுரைப்பட்டணஞ்சேர்ந்தவுடன், அக்ரூரர் கண்ணனை விருந்தமுது செய்யும்படியழைக்கக், கண்ணன்வந்தகாரியம் முடிந்தபின், உண்ணவருவேனென்றுரைத்தல்.

விருத்தம்.

நாரணனு மிதுகேட்டு நயந்திருக்க
நடத்தியே தேரையதி விசையாய்ச்சேர்ந்தார்
சேரானு ரருகிலெதிர் நோக்கிநிற்குஞ்
சொந்தவினக் கூட்டமதைக் கண்டிறங்க
ஈரமன துடையவந்த வக்ரூரர்
எழிற் கண்ணனண்ண னிருவரையுங்கிட்டி
நீரமுதுங் குடிசைதனிற் கொள்கவென்ன
நில்லென்றான் கொஞ்சதினந் தள்ளென்றனே ... (உ௬௪)

இராகம் - கல்யாணி - ஆதிதாளம்.

பல்லவி.

அக்ரூரரோகேளும் - அம்மானைக்கொன்று
அப்பால்வருவோம்நாமும்

அநுபல்லவி.

அக்ரூரரோநீரும் - அனுக்கிரகஞ்செயவாரும்
விக்யாபனஞ்செய்தேன் - வேண்டுமெங்களைப்பாரும் ... (அக்)

சரணம்.

க. எவரையுங்கெடுத்தான் - அதிபாவியென்
றெங்கும்பேரெடுத்தான் -
தேவகிதேவர்சிறைவிட்டுநண்ண - திரேஷிதன்னைமுடித்து
திரும்பிவருவோமுண்ண - ... ... ... (அக்)

உ. முன்னாகவிண்டு - மதுரையாளும்
மூடனைக்கண்டு -
பின்னாகப்பாலர்வருவதாகக்கூறும் - பிறகுவிளையும்விந்தை
பேசும்படிபாரும்... ... ... ... (அக்)

௩. பிழைகளைநினைந்தான் - எங்கள்மேற்
பின்னையுஞ்சினந்தான் -

அழையுமென்றமையனுப்பினனசிக்க - அவனைக்கொன்றநாளை
அய்யாநாங்கள்புசிக்க ... ... ... (அக்)

௪. விண்ணவர்கூடி - விபவத்தில்
வேண்டியேபாடி
எண்ணம்பலித்துகானிவ்விடஞ்சூழவே - இடையர்கள்முன்போல
இருந்திங்கேவாழவே ... ... ... (அக்)

வசனம்.

கண்ணன்மதுரைக்குப்பிராதாவுடனே வந்திருப் பதையக்குரூரர் கஞ்சனுக்குரைத்து வீடுசேர்ந்ததையும் மறுநாள் உதையத்தில் கண்ணன்பந்துகளோடுநகரம்பார்க்கப் புறப்பட்டுவரும்போது மதுரைப்பட்டணப்பெண்கள் கண்ணனுடைய அழகைக்கண்டு மயங்குதலையுஞ் சொல்லுதல்.

விருத்தம்.

கண்ணனிவ்வாறுரைக்க வக்குரூரர்கேட்டுக்
கடுகியேகஞ்சனது கிரகஞ்சேர்ந்து
நண்ணவேநர்தர் மைந்தரிருவராக
நயர்துமது வேள்விக்கு வருவாரென்று
விண்ணவரும்வியப்படையவில்லஞ்சேர்ந்தார்
விபவமாயுபவனத்தில் வீற்றிருந்த
மண்ணுடையான் கிளையோடேயிரவுதள்ளி
மறுநாளில்மதுரைநகர் பார்ப்போமென்னத்
துண்ணெனவத் தோப்பைவிட்டுவிளையமாக
துணைவருடன் வெளிப்பட்டுவந்துமுற்றம்
எண்ணெழில்சேர் வீதியலங்காரத்தோடே
யேற்றபடியமைந்திருக்க விந்தையாகப்
பண்ணுடையவாய்மாதர் மாடநோக்கிப்
பரிதியொளிவேண்டியதே யில்லையென்றே
எண்ணுமகத்தவித்தகனைக்கண்டபெண்கள்
இயங்கினார்மனமுருக மயங்கினரோ (௨௫௫)

இராகம் - பந்துவராளி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. மதுராபுரியில்வாழு மங்கையருங்கண்டு
மாதவனுமென்றார் - சிலமாதர்
சதுராகவெங்கள்முன்னே சஞ்சரித்திடவந்த
சாமியிவனேயென்றார் - சிலமாதர் ...

௨. கானத்துமான்கள்தேடி கங்கையிற்சந்திர
கருதியதுபோல்வந்தார் - சிலமாதர்



தேனைத்துளிக்கும்புட்பம் - தீண்டும்வண்டுகள்போலத்
தெரிந்தோடியேவந்தார் - சிலமாதர் ... ...

௩. வானத்தின்தாரலுக்கு - வாய்விரிக்குஞ்சிப்பிபோல்
வாயைத்திறந்துவந்தார் - சிலமாதர்
தானந்தவுரியோர்க்கு - தகுபணிகள்செய்யாமல்
தள்ளியேயோடிவந்தார் - சிலமாதர் ... ... *

௪. தைலந்தலையிலிட்டு - தான்முழுகமறந்து
தரிசிக்கவந்துநின்றார் - சிலமாதர்
கையிலரைப்பெடுத்து - கலையைச்சிரசில்வைத்து
கண்டுசேவித்துநின்றார் - சிலமாதர் ... ... *

௫. உடுத்ததுகில்நழுவ - உடையுங்கட்டமறந்து
ஓடிவெளியிலுற்றார் - சிலமாதர்
படுத்துத்துயிலொழிய - பாதிநித்திரைதன்னில்
பகவானைகாணவுற்றார் - சிலமாதர் ... ... ... *

௬. ஒருத்திபுடைவைதன்னை - யொருத்தியெடுத்துடுத்தி
ஓடியேயங்குவந்தார் - சிலமாதர்
தரித்தபணிகள்தம்மை - தகுதிதெரியாமலே
தடுமாறியிட்டுவந்தார் - சிலமாதர் ... ... ... *

௭. வடித்துவசனந்தன்னை - நிமிர்த்ததெரியாமல்
வைத்தோடிவந்தார்கள் - சிலமாதர்
படித்துக்கண்ணன்தன்னை - பரபரப்பாகவே
பார்க்கவேவந்தார்கள் - சிலமாதர் ... ... ... *

௮. கண்ணுங்கருத்துமுற்றுங் - கழலடிமேல்வைத்து
கைகட்டிச்சேவித்தார் - சிலமாதர்
என்னும்லக்ஷ்மிநாதன் - இவன்தானென்றுசொல்லி
எத்தியேசேவித்தார் - சிலமாதர் ... ... ... *

வசனம்.

இவ்விதமாய்த் தரிசனஞ்செய்த நகரத்துக்கன்னியர்கள் ஆனந்தபரவசராகிப் பொரிமலர்களுந்தூவி மங்களாசாஸனஞ்செய்தல்.

விருத்தம்.

கண்டந்தக்கண்ணனையக்கன்னிமார்கள்
கஞ்சவதஞ் செய்யவந்தா ரிவரோயென்று
அண்டர்தொழு நாதனிந்த வய்யனென்ன
ஆச்சரியங் கொண்டவராய்க் கூடியன்று

தண்டாள மணிவடங்க ளசையவோடித்
தருமணமாம் புட்பமொடு பொரியுஞ்சேர்த்துச்
செண்டலங் காரதுலா சிரிக்கவங்கே
சிந்தினர் துயர்நீங்க முந்தினரே ... ... (உ௬௪)

இராகம் - மோகனம் - அடைதாளம்.

கண்ணிகள்.

க. புஷ்பமலர்களையிறைப்பார் — எங்கும்
பொரிகளைவாரிநிறைப்பார் -
அற்புதனிவனென்றுரைப்பார் - அந்த
அரியிவனென்று கைகுவிப்பார் ... ... ... *

உ. பூதனையைக்கொன்றபாலனும் - அதோ
போகிறார்நடுவினில் சீலனும் -
சாதகமாய்வந்தசகடனும் - அவனைத்
தாளாலுதைத்தவிகடனும் ... ... ... *

௩. லோகத்தைவாயுள்ளே கூட்டினன் - அந்த
சோதைக்கு முன்னுகக்காட்டினன் -
போகமாய்ப்பெண்களையணைந்தான் - அதிக
புனிதனுகியங்கேயிணைந்தான் ... ... ... *

௪. க்ஷீரத்தாழியையுடைத்தானும் - அங்கே
ததிகளைவாரிக்குடித்தானும் -
கோரகவந்து ஜொலித்தானும் - அது
நிசமில்லைபோவென்றொலித்தானும்... ... ... *

௫. நந்தர்மனையில்வளர்ந்தானும் - அவர்கள்
மைந்தனைப்போல இருந்தானும்
மந்தையில்மாடுமேய்த்தானும் - அங்கே
மலையெடுத்துமழைகாத்தானும் ... ... ... *

௬. என்னநோன்பவள் நோற்றுளே - சோதை
இவன்விளையாட்டுகள் பார்த்தாளே
அன்னங்கள்நோன்பினைசிலாகித்தார் - அந்த
அரிஇவனேயென்றுமோகித்தார்

எ. சர்ச்சனபரிபாலனும் - பொல்லா... ... ... *
துர்ச்சனர்க்கெல்லாங்காலனும்
பர்ஜன்னியம்தரித்தகையனும் - இங்கே
பிராதாவுடனேவந்தமெய்யனும் ... ... ... *

அ. லக்ஷ்மியுடையநாதனும் - நம்மை
ரக்ஷிக்கவே வந்தபோதனும்



பக்ஷமுடனவர்கூடினர் - கண்ணன்
பராக்கிரமங்கள் சொல்லிப்பாடினர் ... ... *

வசனம்.

இந்தவிதமான வைபவத்துடன் வருகிற கண்ணன் எதிருற்றுக் கர்வங்கொண்டு பேசியவண்ணானை வதைத்தல்.

விருத்தம்.

இந்தவிதமாக நகர்க்கன்னிமார்கள்
எழிலுடையான் சீர்கண்டு துதித்திருந்தார்
அந்தந்த ஆவணமும் தெருக்கள்தோறும்
அமைந்திருக்கும் அலங்காரவிபவமுற்றும்
சிந்தைகளிகூர வம்மான்கதியைச்
சீர்தூக்கியிதையாளாப் பாவியென்று
வந்திருக்கும் பகவான்தன் முன்னுல்கர்வ
வண்ணானுமுற்றெதிரில் நண்ணினனே ... (உ௬எ)

இராகம் - சௌராஷ்டிரம் - ஆதிதாளம்

பல்லவி.

ஏகாலியும்வந்தான் - மதுரை - ஏகாலியும்கொந்தான்

சரணம்.

ஏகாலியும் வெளுத்தவுடுப்புகளை - ஏகமாகவேமடித்தமடிப்புகளை
போகமானதோர்கஞ்சன்துயில்களை- புதுமையாகவேதூக்கியவொயில்களை
வேகமாகவேயூர்முன்வருமுண்டை-முந்தியகோட்டைவாசற்படியண்டை
நாகசயனனும்அண்ணனுமாக - நயந்துவுடைகளைக்கேட்கும்படியாக
(ஏகாலி)

கம்சனுடையமருமக்கமார்கள் - காணவந்தோம்இன்னஞ்சிலபேர்கள்
நிமிஷத்தில் அரசன்சமுகத்தில்போகிறோம்-நிகரமான எங்கள்பேட்டியை
[த்தருகிறோம்

வம்சத்தில் எதுகுலந்தன்னில்பிறந்தோம் - மகிமையானகோகுலந்தனில்
[சிறந்தோம்

சம்சயமில்லாமலிருவர்க்குந்தந்தால் - சகலபாக்கியமும்தருகிறோம்நந்தால்
(ஏகாலி)

பங்கநாமனேபிள்ளை[illegible]லடா - பதட்டமாக ஓடாதேநில்லடா
[illegible]யருடைமனைபுகுந்தசெழிப்படா-வாரிவெண்ணெய்பால்உண்டகொ
[ழுப்படா

[illegible]பெபுகுமமா பேயனுக்கு
எங்களுடையபிரபு இதுதன்னைக் கேட்டால் - இருவரையு மடிப்பார்ஓடிப்
[போமுட்டாள் ... (ஏகாலி)

ஓடெனக்கேட்ட வுத்தமனைக்க-உளறியவண்ணான் கண்டென் திகைக்க
காடுநீயெமபுரம் என்றவருரைக்க - காரணனவனுடை தேகத்தைக்கிழிக்க
கூடியதுகில்களைவாரியெடுக்க - கோவிந்தராமர் இருவரும்உடுக்க
தேடியேகஞ்சனைஸ்திரீதான்வருக - சேஷனுடனேகூடிச்சேவையும்தருக (ஏகா)

வசனம்.

இப்படிவண்ணானை வைகுண்டமேற்றி வரும்கண்ணனைக்கண்ட தைய
ற்காரன்தன்இல்லங்கொண்டுபோய்கண்ணனையலங்கரித்தல்

விருத்தம்.

வண்ணானுமிந்தவித முறைத்துவான
வளநாடுசென்றடைந்தபின்முகுந்தன்
விண்ணாடுந்தேவர்கண்டு வியப்படைந்து
வேணுநாதன்முதற் பெலியிட்டானென்றார்
பண்ணாடுந்தோழருக்கு அங்குள்ளவாடை
பங்கிட்டுப்பரந்தாமன் இருக்கநேரில்
கண்ணாடும்பாணனொன்னுங் கையானங்கே
காவென்றான் என்குடிலுக்குவாவென்றானே (உருஅ)

இராகம் - பைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

உபசாரங்கள் செய்தான் - உண்மையுடன்பாணன்
உகந்துராமகிஷ்ணர்க்கு

அநுபல்லவி.

பம்சரிபூதியிருந்தபாலர்களையடுத்து -
பார்த்துஅர்க்கியபாத்தியம்பரிவுடனேகொடுத்து ... (உபசா)

சரணம்.

க. என்னதபம்முன்னால் செய்திருந்தேனோ அய்யா
இருவருங்குடிலுக்கு எழுந்தருளினீர் மெய்யா
பன்னகசயனனைப் பணிந்துவினைகள் கொய்ய
பாக்கியம்என்ன செய்தேனோ பாரிலடியேனுய்ய ... (உபசா)

உ. தங்கச்சரிகைபின்னி சால்வைகளும் எடுத்து
சாரசநாமனுக்கும் அண்ணனுக்கும் கொடுத்து
அங்கந்தனக்கிசைந்த ஆடைகளு... ...
அம்புஜபாதத்தை அஸ்தங்களாற் பிடித்து ...

௩. முத்துக்களாலே குல்லாய்விசித்திரமாகவே யேற்றி
முகுந்தனையும் அவ்வண்ணனையும வாழ்த்தி
உத்தமமாகவே யுகந்துமுடியிற் சாத்தி
உள்ளங்களுங்குளிர்ந்து உத்தமனைப் போற்றி ... (உபசா)



௪. காசினியோர்புகழும் கண்ணன் தன்னைக்கண்டு
கபடநாடகசூத்ரதாரி இவனே யென்று
ஊசிநூலுடன்மோட்சம் உரையவரங்கள் கொண்டு
நேசமுடனே லட்சுமிநாதா சரணமென்று ... (உபசா)

வசனம்.

இப்படி அலங்காரத்தோடுவருங் கண்ணனைத் தட்டான் கண்டு கண்
ணனுக்குத் தன்னிடத்திருந்த திருவாபரண முற்றும் அணிதல்.

விருத்தம்.

உபசரித்தபாணனுக்கு வரங்களீந்து
உகந்துவெளிப்பட்டு நகர்வீதிதன்னில்
விப்வமாய்அங்குள்ள விநோதமுற்றும்
வேணுநாதன் நோக்கி நடக்கும்போது
சுபசகுனமே தோதன்னெதரிற்காணுந்
சொகுஸாச வருமாலைத் தட்டான்கண்டு
தபசிகட்குங்கிடையாத தரிசனத்தைத்
தாங்கினான்பழிநீங்கி ஓங்கினானே ... (உருக)

இராகம் - தோடி - ஏகதாளம்.

பல்லவி.

அலங்காரங்கள்செய்தானே - ஆசையுடனேதட்டான்
அலங்காரங்கள் செய்தானே

அநுபல்லவி.

கலைகளோதும்நாதனை - காணப்பெற்றேனேயின்று ... (அலங்)

சரணம்

க. சர்க்கரித்துத்தாள்வணங்கி - சுவாமிதன்னையடுத்து
அர்க்கியபாத்தியம்முதலாய் - ஆசனங்களுங்கொடுத்து (அலங்)

உ. விதம்விதமாகவே மிகுந்தபணிகள்கூட்டி
இதமுள்ளநாதனுக்கு ஏற்கும்படியேபூட்டி ... (அலங்)

௩. கேயூரகங்கண - கவசகுண்டலமெடுத்து
மாயாவதாரனுக்கு - மகிழ்ந்தவனுந்தொடுத்து ... (அலங்)

௪. பட்சமுடனேதட்டான் - பணிந்துஎதிரில்நின்று
லட்சுமிநாதனுடைய - லாவண்ணியந்தன்னைக்கண்டு (அலங்)

வசனம்.

இப்படிவருங்கண்ணனைச் சுதாமன்கண்டு அரசன் பூமாலையெல்
லாம் கண்ணனுக்குச்சூட்டுதல்.

விருத்தம்.

தட்டானும்இந்தவிதம் அலங்கரிக்கப்பெற்றுத்
தகுந்தபடிஅவனுக்கும் ஆசிகூறிப்
இட்டமாய்க்கண்ணனண்ணன் இருவராக
எழிலாகவருபவரைச்சுதாமன் கண்டு
கட்டங்கள்தீர்ந்த தெனமனதிலெண்ணிக்
கரம்பிடித்து இல்லத்திற்கொண்டுசேர்த்துச்
சட்டமாய்க்கஞ்சன் பூமாலைமுற்றும்
சாற்றினுன் இணையடியைப்போற்றினுனே ... (௨௬௰)

இராகம் - புன்னுகவராளி - சாபுதாளம்.

பல்லவி.

மாலைசாத்தினுன் - கண்ணனுக்கு - மாலைசாத்தினுன்

அநுபல்லவி.

மாலைசாத்தினுன் - மாதவன்கழுத்தில்
கோலமாகவே கொண்டவன் கரத்தில் ... ... (மாலை)

சரணம்.

க. வரிசைவரிசையாக - மலர்கள்தம்மையெடுத்து
பரிமளமாகவே - பாலர்கட்குத்தொடுத்து ... (மாலை)

உ. பன்னீருசவ்வாது - பக்குவமாகக்கொட்டி
உன்னிதசிலரை - உகந்தவனுங்கிட்டி ... ... (மாலை)

ங. மல்லிகைமுல்லைகள் - மணமுடனேதொடுத்து
வில்லிமாரன்மகிழ - வேண்டிக்கையிலெடுத்து ... (மாலை)

ச. தோளுக்குஇசைந்த - சுகந்தமலருங்கொண்டு
தாளுந்தடக்கையுந் - தாங்கியெதிரில்நின்று ... (மாலை)

ச. கம்சனுக்குஎன்று - கட்டியபூமாலை
பம்சரிநாதனுக்கு - பார்த்துஅவனும்மேலே ... (மாலை)

ரு. கரிமுகில்வண்ணனைக் - கண்டவனும்உகந்து
ஹரியென்றுயெண்ணியே - ஆச்சரியமிகுந்து ... (மாலை)

சு. லட்சுமிநாதனுக்கு - லலிதமாகஇசைய
வட்சஸ்தலந்தன்னில் - மணமுடனேஅசைய ... (மாலை)

வசனம்.

இவ்விதவைபவத்துடன் கண்ணன் தன்சிநேகிதர்களோடுகோட்டையண்டைவரும்போது முக்கோணலான கூனியைக்கண்டு நீயாரென்று வினவுதல்.



விருத்தம்.

சுதாமனும் தோத்திரித்து மாலைசத்திச்
சொல்லரிய உங்களது சேவைநோக்கி
இதாகிதங்களறியாத ஏழையானும்
இனியகதிகுடும்பமுடன் பெற்றேமென்ன
நிதானமாய் நீயினிதுவாழ்ந்திருப்பாய்
நிசாபதியும் சூரியனும் உள்ளமட்டும்
குதாகலமாய்க்குழுவோடு கோட்டையண்டைக்
கூடினுன் கூனிவரநாடினுனே ... ... (௨௬௧)

இராகம் - தன்னியாசி - ஆதிதாளம்

பல்லவி.

எங்குபோகிருய்பெண்ணே - சுகந்தங்கொண்டெங்கள் முன்னே
எங்குபோகிருய்பெண்ணே

சரணம்.

க. பங்கயம்போல்முகம் - பந்துபோல்இளங்கொங்கை
அங்கமுக்கோணலுடன் - அதிரூபமானமங்கை ... (எங்கு)

உ. உந்தன்பேரைச்சொல்லு - ஓடாதேநில்லு நில்லு
அந்தமாயுனதுவாயில் - அழகாமுத்தானபல்லு ... (எங்கு)

ங. சுந்தரியேயுந்தன்வளை - சொலிக்குங்கரந்தன்னிலே
கந்தமலர்மாரன் - களிக்கும்படியுன்னிலே ... (எங்கு)

ச. எங்களிருவருக்கும் - ஏற்குங்கலவைபெய்தால்
மங்களலட்சுமிநாதன் - மகிழ்ந்துஉதவிசெய்வார் ... (எங்கு)

வசனம்.

கூனி கண்ணபிரானுக்குச் சந்தனம் பூசல்

விருத்தம்.

திரிவக்கிரையெனுமாது இவர்கள்சொல்லைத்
தேர்ந்துமனமுவந்தடியேன் நமதுகஞ்சன்
மருவுதரும்கலவையது கொடுக்கும்பெண்நான்
மற்றொருவர் அவனுக்குப்பூசொணுது
இருநிலத்தில் உங்களுக்குத்தொழிலைச்செய்ய
இசைந்ததிந்தத்தின நல்லவேளையென்று
திருவுறையுமார்பனந்தத் தேவனுக்குத்
தீட்டினுள் சந்தனமுங்கூட்டினுளே ... (௨௬௨)

இராகம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

சந்தனம்பூசினாள் - குபஜை - ராமகிருஷ்ணருக்கு
சந்தனம்பூசினாள் - குபஜை

அநுபல்லவி.

௧. சந்தனம்பூசினாள் - நந்தர்பாலருக்கு
சொந்தமாகவே - விந்தைமார்பருக்கு ... ... (சந்தன)

சரணம்.

௨. பூசும்புனுகுசாந்துடனே - அத்தர்பன்னீரு
நேசமாகஅவள்எடுத்து
ஆசையாகவே - அற்புதபுருஷர்க்கு
வாசனைதருகவட்சஸ்தையடித்து ... ... (சந்தன)

௩. அரசனுக்கென்றங்கேகொணர்ந்த - சாத்துப்பொடிகள்
பரவசமாயவள்பரிந்து
பலபத்ரஸ்ரீகிருஷ்ணன்மார்பினில்
பரிமளத்துடனேபரந்தவள்சொரிந்து ... ... (சந்தன)

௪. இருவர்திருமேனிக்கிசைந்த - பரிமளங்கள்
இன்பமாகஅவளும்பூச
திருவுடையநாதன் - திருமார்புக்கிசைய
வருமிந்ததேவர்க்குவாசனைகள்வீச ... ... (சந்தன)

௫. கஞ்சன்கலவைதனைமொண்டு - கரத்திலேந்தி
பஞ்சின்மெல்லடிபாவைபணிந்து
பகவான்-அதிசேவையுங்கண்டு
தஞ்சமென்றவரைக்காப்பனெனத்துணிந்து ... (சந்தன)

வசனம்.

கூனைநிமிர்த்திய கண்ணபிரானைகூனிதன்னைமருவ அழைத்தல்.

விருத்தம்.

சந்தனமுமிந்தவிதம் பூசிநிற்கச்
சாமியும்அண்ணனுடன் கருணைகொண்டு
இந்துமதிசைரந்திரி மாதைநோக்கி
இவள்கூனை நிமிர்த்தவிதுவேளையென்று
தந்திரமாயவள் காலைத்தான்மிதித்துத்
தையல்இடைதனைப் பற்றிக்கையால் தூக்க
அந்தமுள்ள அரம்பைபோல் அவளுமாகி
அருகென்றாள் சேருமென உருகென்றாளே ... (௨௬௩)



இராகம் - தோடி - சாபுதாளம்.

பல்லவி.

எந்தனுடைகிரகத்துக்கு - வந்திடுமென்றுபட்டாடை
இழுக்கஇழுக்கநீரும் - திருப்பிக்கொள்கிறீரென்னஜாடை

அநுபல்லவி.

௧. மந்தகாசனேமன்மததாபந்தன்னைத் தீர்த்திடும்
மங்களவிக்கிரக சுந்தரரூபா
விந்தையாகமன்மதற்கு - தந்தையாய்விளங்குந்தீபா
நந்தமுகுந்தனே - சுந்தரவைகுந்தனே ... ... (எந்த)

சரணம்.

௧. வக்கிரந்தன்னைநிமிர்த்த - மாதவகோவிந்தகிருஷ்ணா
மருவியணைத்தென்னைச்சுகித்தாலாகாதோ
அக்கரையில்லாதவர்போல் - ஆட்டங்காட்டுவதேதோ
ஆனாலுங் குறும்புபோகாதோ
சக்கரபாணியேநானும் - வட்சஸ்தலத்தில்
சந்தனங்கள்பூசினேன் - எந்தனிடத்தில்வாதோ
அக்களங்கமாய்நினைத்து — அசட்டைசெய்வதுஞ்சூதோ
அய்யனேமெய்யனே ஆழியங்கையனே ... (எந்த)

௨. எத்தனைசொல்லியுமுமது - சித்தமிரங்கிலையோ
கர்த்தனேயென்னிடத்தில்கருணைவல்லையோ
வித்தகனேயும்முடைய - வித்தைகளைச்சொல்லையோ
சற்றேனுந்தயவில்லையோ
அத்தங்களாலேயென்னை - அணைத்துமருவ
அந்தஇடைமாதர்போலழகுகளுமில்லையோ
சத்தியமாகவுமக்குச்-சந்தனந்தரவில்லையோ
ஜாலனேலோலனே சஹஸ்த்ரநாமனே ... (எந்த)

௩. பெண்ணைக்கண்டாலிகத்தில் - பேயுமிரங்குமென்ற
பேச்சும்பொய்யாச்சுதோ இப்புவிதன்னிலே
மண்ணையுண்டவாயனே - மாதுமையல்கொண்டாளே
மருவவும்மனம்வாராதோ
உண்ணும்அதரபானம் - உடல்பூரிக்க
ஓதும்எழில்கொண்டவேணுகானனே
வெண்ணெயுண்டவனே - வேண்டிவேண்டியழைத்தும்
வேதனே போதனே விண்ணவர்க்குநாதனே ... (எந்த)

ச. கொங்கைக்குடமிரண்டும் - குலுங்குதேயும்மைக்கண்டு
   கோவர்த்தனோத்தாரணஞ்செய்தநாதனே
அங்கங்குளிரஎன்னை - அணைத்திடவாரும்வாரும்
   ஆபத்பாந்தவவேதனே
மங்கள்விக்கிரகரூபனே - மகிமையுள்ள
   வட்சந்தன்னில்லட்சுமியை வைத்திருக்குநாதனே
சங்கையென்னவுந்தனுக்கு - தழுவமனத்துட்கொள்ள
   ஜாரனே சோரனே சாமளாகாரனே ... ... (எந்த)

(வசனம்.)

கண்ணன் தனுர்ச்சாலையிற் பிரவேசித்து வில்லைமுறித்தல்.

விருத்தம்.

வருத்தியேயழைக்கு மந்தப்பெண்ணைநோக்கி
   வருகின்றேன் நின்குடிற்குவந்தகாரியம்
திருந்தவேநான்முடித்து நாளைமீண்டு
   திரும்புவேன் எனமொழிந்துஅவளைவிட்டு
விருந்தாளிபோலங்கே திரிந்துகொண்டு
   வேந்தனது தனுர்ச்சாலையுள்நுழைந்து
இருந்தகஞ்சன்வில்லை யிவர்கண்டுஅங்கே
   எடுத்திட்டார் இரண்டாக்கிப்பிடித்திட்டாரே (உசுச)

இராகம் - தனாசரி - ஏகதாளம்

பல்லவி.

எடுத்தாரே தனுசைக்கையில்
ஒடித்தாரேநாதன்

அநுபல்லவி.

அந்தஅரண்மனை அருகினிற்சென்று
சிந்தைகளிப்புடன் ஸ்ரீதரன்நின்று
விந்தையாய்த்தந்தையர்மீட்பதேஎன்று
சொந்தமானஅவர்சுகப்படஇன்று .... ... (எடுத்தா)

சரணம்.

க. பந்துகளெல்லாங் - கண்டுமகிழ்ந்திட
   பரந்தாமன்கரந்தன்னிலே - விசையா
   விந்தைசெய்யவே - வில்லையெடுத்தங்கே
   மெள்ளமெள்ளஇழுத்தார் - அசைய
   மந்தஹாசனும் - மன்னன்மனம்இடிய
   மளமளென்றொடித்தார் - ஓசையா



அந்தரத்தில்தேவர் - அதிசயந்தன்னைக்கண்டு
அகமகிழ்ந்துஇருந்தார் - ஆசையா
கண்டாரவாரந்தன்னை - கம்சனுடையகாலாள்
கடுகியேஓடிவந்தார் - கதறி
துண்டத்தனமாய்வில்லை - துணித்தவன்ஆரென்று
தூரத்தியடிக்கவந்தார் - பதறி
கண்டுஅதட்டும்பேரைக் - கடுகியேமடித்திட
கருத்துதன்னில்கொண்டார் - உதறி
கண்டகண்டவிடத்தில் - காவலிருந்தபேரை
ககனஞ்சேரவடித்தார் - சிதறி
வந்துஎதிர்த்தவரை - வாரியேயிறைத்தார்
மதுரைபட்டணமெங்கும் - பிரேதத்தைநிறைத்தார்
அந்தகம்சனுடை - ஆணவமழிய
அண்ணனுடனே - லட்சுமிநாதனும்வழியா ... (எடுத்தா)

வசனம்.

சூரியாஸ்தமான வர்ணனைகூறல்.

விருத்தம்.

அரசனதுவில்முறித்து அதட்டியங்கே
   அடுத்திருந்த சேனைகளைமடித்துவிட்டுப்
பரவசமாய்ராமகிஷ்ணரிரண்டுபேரும்
   பரிசனங்களெல்லோரும்பரிந்துசூழ
முரசொலிபோல்முழக்கமுடன்கூட்டமாக
   முன்னிருந்தஉபவனமேவந்துசேர்ந்தார்
கரவுகொண்டகஞ்சனுக்குக்காலங்கிட்டக்
   கரந்திட்டான்சூரியனுமறைந்திட்டானே ... (உசுரு)

இராகம் - ஸ்ரீராகம் - சாபுதாளம்.

பல்லவி.

அஸ்தமானமானனே - ஆதித்தனும்
அஸ்தமானமானனே -

அநுபல்லவி.

அத்தமானமானன் - ஆழியப்பில்வீழ்ந்தான்
உத்தமமானஒளியுடனேயாழ்ந்தான் ... ... (அஸ்த)

சரணம்.

௧. மறைக்குலத்தோர்கள்கண்டு - மந்திரஞ்சொல்லி
மன்னும்அர்க்கியங்கள்கொண்டு
கரைபுரண்டதோரத்தம் - கர்மியரக்கரழிய
கண்டுசெவ்வானத்தைக் -கருத்தில்நினைத்தொழிய... (அஸ்த)

௨. ஆகாயமென்றபெண்ணுக்கு - பதியாக
ஆறுபத்துக்கலைகண்ணுக்கு -
வேகமாகத்திங்கள் - முன்னேதோற்றுவானென்று
மிகவும்பயந்துகொண்டு- மேற்கேபோனானேவின்று (அஸ்த)

௩. அரவிந்தமலர்கள்இன்று - தம்முட
அன்பனைக்காணமல்நின்று -
சாரணனசந்திரன் - சார்ந்துவருவானென்று
சமுசயங்கள்கொண்டு - சாய்ந்துவிட்டதோவென்று... (அஸ்த)

௪. மைந்தர்களையெடுத்து - இரவினில்
மாதாகையில்பிடித்து -
அந்தமுடன்அணைத்து - அமுதங்கொடுப்பதென்ன
அரியையுள்ளேஅடக்கி - அரவிந்தமூடியதன்ன... (அஸ்த)

வசனம்.

சந்திரோதயவர்னனைக்கூறல்

விருத்தம்.

கதிரவனும் அஸ்தமிக்க உலகமெங்கும்
காரிருளும் வந்தங்கேமூடிக்கொள்ளத்
துதிபரவஇருள் நீங்கத் துயரமோடத்
தூதர்வந்து சூழ்வதுபோல்மீன்கள்வானில்
எதிரெதிராய் எங்கெங்கும் தோன்றிநிற்க
இந்துவரும்சகுனமெனவெவர்க்குங்காண
விதியுள்ளகஞ்சனது ஆயுள்காலை
விளம்புவானெனமதியுங்கிளம்புவானே ... (௨௯௬)

இராகம்-பிலஹரி - ஆதிதாளம்

பல்லவி.

சந்திரனும்உதித்தானே - பூர்வதிக்கில்

அநுபல்லவி

சந்திரனுதித்தானே - சகலகலைகளுந்தன்ன
மந்தகாசமாய்வாழும் - மாதவனுடைமின்ன ... ... (சந்தி)



சரணம்.

௧. அந்தகாரமிருகத்தை - அடித்தோட்ட
ஆனந்தம் எங்குங்காட்ட
விந்தையாகவிளங்கும் - விஷ்ணுதன்னைக்காண
வேகமாகத்திங்கள் - வேண்டிவந்தானேதோண ... (சந்தி)

௨. பூர்வதிக்கென்றஸ்திரீக்கு - லலாடத்தில்
பொட்டிட்டதாய்தடத்தில்
ஆர்வந்தன்னைக்கொண்டு - ஆனனமலரவந்து
ஆயர்பாலனைக்காண - அண்டிவந்தானேமூந்து ... (சந்தி)

௩. காமங்கொண்டபெண்களைக் - கண்டடுத்து
கையில்தனுவெடுத்து
சாமளவண்ணனைத்தேடிச் - சாரும்பெண்களைவாட்ட
சந்தோஷமாகநாடும் - சங்கதியனைத்துங்காட்ட ... (சந்தி)

௪. அகத்துடன்சஞ்சரிக்கும் - சோரரைநீக்க
அவனியில்நீதிதேக்க
இகத்தில்சகோரமுண்ண - எங்கும்பரந்துதோண
ஏற்றலட்சுமிநாதன் - இனியமுகத்தைக்காண ... (சந்தி)

வசனம்.

கஞ்சன் அவசகுனங்காணுதல்.

விருத்தம்.

நிலவுதன்னில் உபவனத்தில் கிளைகளோடு
நித்தியனுஞ் க்ஷீரான்ன முண்டிருந்தான்
இலவுதனைக் காத்திருந்த கிளிபோலானேம்
என்செய்தாரிச் சிறுவரிரண்டு பேரும்
சொலவதிரும்படி வில்லைச்சேனையோடு
சுறுக்காக முறித்தடித்த விதத்தைப்பார்த்துப்
பலமதிகமான கஞ்சன் பயமேகொண்டு
பதறினன் துர்ச்சகுனத்தால் கதறினனே ... (௨௯௭)

இராகம் - கண்டா - சாபுதாளம்.

பல்லவி.

அவசகுனங்களைக் - கண்டான் - கண்டான்
அலறியேகஞ்சனும் - நின்றான் - நின்றான்

அநுபல்லவி.

அரியுடைகாரணம் - என்றான் - என்றான்
அரசனுந்தயிரியம் - கொன்றான் - கொன்றான் ... (அவச)

சரணம்.

௧. கரத்தைநாசிமேல் - வைத்தான் - வைத்தான்
காலதண்டனைக்கண்டு - பதைத்தான் - பதைத்தான்
மரத்தையிலையில்லாமல் - பார்த்தான் - பார்த்தான்
மாநிலம்பள்ளமாய் - ஏற்ருன் - ஏற்ருன் ... (அவச)

௨. பார்தன்னில் ஓடியே - அலைந்தான் - அலைந்தான்
பாதத்தைக்காணுமல் - மெலிந்தான் - மெலிந்தான்
நீர்தன்னில் தன்னிழல் - தெரிந்தான் - தெரிந்தான்
நின்றசிரசில்லாமல் - முறிந்தான் - முறிந்தான் ... (அவச)

௩. தீபத்தில் தன்னிழல் - கண்டான் - கண்டான்
தேகத்தில் துவாரங்கள் - கொண்டான் - கொண்டான்
ஆபத்துக் காரையும் - காணுன் - காணுன்
அவனுடைய மதிகளுந் - தோணுன் - தோணுன் ... (அவச)

௪. மதியும்பிளவாகக் - காணக் - காண
மன்னனுக்குப்பயம் - தோணத் - தோண
விதியும் நமக்கிப்படி - ஆச்சே - ஆச்சே
விளங்குமென்கீர்த்தியும் - போச்சே - போச்சே ... (அவச)

வசனம்.

கஞ்சன் துர்க்கனவால் நடுங்கல்.

விருத்தம்.

அவசகுன மிந்தவிதங் கண்டதாலே
அரசனு மனதுநொந்து மிகக்கரைந்து
விவரமிது நாரதரு முரைத்துப்போன
வேளையிப்போ சமீபித்ததென நினைந்து
கவனமது நீங்காமல் கலக்கங்கொண்டு
கண்வளரும்போது நிதரிசனமேயாக
கவநவமாய் பூஷணங்க ளணிந்தமேனி
நடுங்கினுன் துர்க்கனவால் ஒடுங்கினுனே ... (௨௯௮)

இராகம் - ஆனந்தக்களிப்பு - ஆதிதாளம்

பல்லவி.

கண்டான் துர்ச்சொற்பனம் - கலங்கி
நின்ருனேயந்தகோமானும்



சரணம்.

௧. பவர்க்கத்திலழுத்தக்கண்டான் - கனவில்
பாரில்முண்டமாய் நிற்கக்கண்டான்
சவத்தையாலிங்கனங்கொண்டான் - அரசன்
தன்னைமறந்து அழுதுநின்ருன் ... ... (கண்டா)

௨. சிரசின்மேல்தைலந்தேய்த்துக் - கனவில்
தெற்குமுகமாகப்போகக் கண்டான்
அரசனுமிரத்தமாலை - பூண்டு
அப்போதேகழுதை மேலேறக்கண்டான் ... (கண்டா)

௩. சிவந்தவஸ்திரமுடுத்திக் - கனவில்
துணையில்லாமலேபோகக்கண்டான்
கவந்தமாகவேயுலகில் - கரிபூசிக்
கண்டபடித்தானுய்த் திரியக்கண்டான் ... (கண்டா)

௪. மிர்த்துவைப்பிடரியிலே - கண்டு
மெய்மறந்து தேகம் வாடிநின்ருன்
கர்த்தன்லட்சுமிநாதன் - எங்கும்
களித்துநின்றிருப்பதைக் கண்டுபயந்தான் ... (கண்டா)

வசனம்.

சூரியோதய வர்ணனைக்கூறல்.

விருத்தம்.

இரவகலஒளிதரவே எங்குகல்ல
எழிற்காணப்பறவைமுதல் எழும்பியாட
நறவுகொண்டொழுகின மலர்கள்யாவும்
நாதகீதங்களொடு தும்பிமொய்க்கக்
கரவுசெய்வார்கருத் தழியப்பயமுநீங்கக்
ககனத்தில்மீன்களெலாம் மறைந்துபோகப்
பரவுகடல்மீதிலே படிந்தபொன்போல்
பதித்திட்டான் சூரியனும்உதித்திட்டானே (௨௯௯)

இராகம் பிலஹரி - சாபுதாளம்.

பல்லவி.

உதித்தானேசூரியன் - உதயகிரிதுய்ய
பதிதாளனைவரை - பாவனங்கள்செய்ய

சரணம்.

க. பாலனுக்குஇந்திராணி பவளக்குன்றுகப்பணி
டோலந்தன்னிலேகட்டி ஜொலிப்பதுபோல்இனி
காலனுக்குப்பூமிபாரங்கழிக்கஅணி
கைதன்னிலேபிடித்துக் காட்டுகிறானேமணி ... (உதித்)

உ. மேற்றிக்கென்ற ஸ்திரீக்குமூக்குத்துபோல
பார்க்கஎல்லோருக்கும்பரிந் தெழுந்தானேகாலே
கார்க்கச்சக்கரவாளத்தைக் கதிர்கிரணங்களாலே
கண்முன்னாகவேவந்து கதித்தெழுஞ்சோதியாலே ... (உதித்)

ங. உத்தமமாயுலகில் உள்ளசேதனரென்ன
உச்சீவிக்கும்பொருட்டு ஓடிவந்தானேகண்ண
சித்தாளனைவரும் ஜெபதபங்கள்பண்ண
சித்திக்கும்பொருட்டாகத் தேடிவந்தானேஎன்ன (உதித்)

ச. மொக்களித்தமலரில் - மூடியிருந்தவண்டு
விகசிக்கவும்புஷ்பம் - வெளியில்வரவோவென்று
அக்கமாகஇருக்கும் - அந்தகாரத்தைக்கண்டு
அடித்துக்குலைகயிற்றன்ன - அவனேவந்தானேஎன்று (உதித்)

ரு. சத்துருபயங்களை - தரணிதன்னில்போக்க
சந்தோஷமாகவே - தானும்வந்தானேநோக்க
மித்துருஅனைவர்க்கும் - மேன்மைகள்உண்டாக்க
முன்னாகவேவந்து - முடுகிநின்றானேபார்க்க ... (உதித்)

சு. பரிமளத்துடன்தென்றல் - பாரிலெங்கும்வீச
பக்ஷிஜாலங்களெல்லாம் - படுத்தெழுந்துகூச
அரிக்கவேபாபங்கள் - அரிநாமத்தைப்பேச
ஆனந்தமாகவே - அவனேவந்தானேநேச ... (உதித்)

எ. காரணமாய்நாதன் கஞ்சனூருக்கின்று
கடுகிவந்திருப்பதைக் காட்டவந்தானேஎன்று
பூரணகும்பங்கள் பூமியிலேந்தியன்று
புண்ணியவான்களெல்லாம் புகழ்ந்தெதிரில்நின்று ... (உதித்)

அ. குங்குமவர்ணங்கொண்டு குளிர்ந்தகிரணங்களாட
கோபாலனைக்காணக் கூடிவந்தானேநாட
மங்கைலட்சுமிநாதர்க்கு மங்களங்கள்பாட
வந்தனம்செதிராக - வாய்த்திருக்கிறான்கூட ... (உதித்)

வசனம்.

கஞ்சன் மல்லரங்கத்தில் கொலுவீற்றிருத்தல்.



319

விருத்தம்.

இத்தவிதம் சூரியனு முதித்துத்தோன்ற
ஏக்கமுற்ற கஞ்சனுமங் கெழுந்திருந்து
மந்திரிகள் யாவரையும் அருகலைழத்து
மகுடமுடன் பணிகளெல்லாந் தரித்துநின்று
பந்தமுள்ள பாழ்மனத்தோன் பரிவாரத்தோடே
பதினெட்டு விருதுகளும் படிப்பதாக
அந்தமுடை யரங்கமணி மண்டபத்தைநாடி
அண்டினான் கொலுவதனில் மண்டினானே ... (உஎ௰)

இராகம் - துஜாவந்தி - ஏகதாளம்.

பல்லவி.

கொலுவிலிருந்தான் — கம்சனும்
கொலுவிலிருந்தான்.

அநுபல்லவி.

கொலுவிலிருக்கிறான் மதுராமன்னனும்
கோலாகலமாகவே - கோவிந்தனிங்கேவருவானேன்று
கோபத்துடன் சிம்மாசனத்திலே ... ... (கொலு)

சரணம்.

க. ராஜராஜர்கள்கண்டுநாடவே - ரம்பையூர்வசியாடவே
ஆசையாகவேமதுராமன்னனும்-அலங்காரத்துடன்கூடவே (கொ)

உ. அட்டகெஜங்களுங்கண்டுகாணவே - அதிபராக்கிரமந்தோணவே
கிட்டவேதோள்கள்தட்டியே - கெட்டிஜெட்டிகள்வந்துகாணவே ()

ங. குவலயாபீடமென்றயானையை - கொண்டுவரச்சொல்லிசேனையை
கவலையுடனேமாவட்டியும்வந்து-காணவேஅந்தக்கோனுமே (கொலு)

ச. நாலுவருணத்தோரும்வருகவே - கந்தர்வஅப்பைகள்தருகவே
மேலும்விப்பிரர்ஆசிகூறவே - வேந்தன்ஆவியும்உருகவே (கொலு)

ரு. அவரவர்க்குமரியாதைசெய்யவே - அந்தணர்க்குப்பூரிபெய்யவே
எவர்களும்வந்துதாள்கள்பணியவே - இறையவன்மனம்கையவே ()

சு. நவரத்னமண்டபந்தடிக்கவே - காளுங்கட்டியம்படிக்கவே
நவலட்சுமிநாரணன்வருகவே - தறுதலையான்பேரியடிக்கவே ()

வசனம்.

கண்ணபிரான் மல்லரங்கந்தேடி வருவதை நகரவாசிகள் தரிசித்த பெருமையைச் சொல்லுதல்.

விருத்தம்.

அடித்திருந்தார் வாத்தியங்கள் மண்டபத்தில்
அடுத்திருந்தவுபவனத்தில் துயிலுகாதர்
படித்தபுகழெனவுடனே கேட்டெழுந்தார்
பரபரப்பாயுடனின்ற இனத்தாரோடு
முடித்தமுடிப்பணி மணிகளணிந்து கொண்டு
முன்னிருந்த வீதிகளில் வருபவரைக்கண்டு
தடித்ததிருவரை போன்றதோள் கொண்டாரைத்
தரிசித்தார் துதித்தடியைப் பரிசித்தாரே ... (௨எக)

இராகம் — தன்னியாசி - ஆதிதாளம்

பல்லவி.

வருகிறார் ஹரியோடி - மல்லரங்கத்தைத்தேடி

அநுபல்லவி.

கருமுகில்வண்ணன்அண்ணன் - காரணமாகக்கண்ணன் (வருகி)

சரணம்.

க. பாமரனைத்தேடி - பிராதாவுடனேகூடி
தாமரைத்தாளன்ஓடி - சத்துருஇடத்தைநாடி ... (வருகி)
௨. ஆனைத்துதியோடொத்த - அஸ்த; ஞேலேகுத்த
வானில்தேவர்கள்போற்ற - வசுதேவகிபெற்ற ... (வருகி)
௩. ஒருத்திவயிற்றிற்பிறந்து - ஒளித்துக்கோகுலஞ்சிறந்து
கருத்தைவெளிதிறந்து - கஞ்சனைக்கொல்லப்பறந்து ... (வருகி)
௪. திருக்கண்களுஞ்ஜொலிக்க - திடன்கஞ்சனுஞ்சலிக்க
அருளட்சுமிசொல்பலிக்க - அய்யன்கண்ணன்கெலிக்க (வருகி)

வசனம்.

கண்ணன் குவலயாபீடமென்னும் யானையை வதைத்தல்.

விருத்தம்.

எழிலாக இத்தவிதம் நடந்துவந்து
ஏர்பெருகும் கோட்டைமுக வாயிற்சேர்ந்து
பொழியுமும் மதங்களுடைக் கரியதான
போர்புரியும் குவலயா பீடங்கண்டு
விழிசிவந்த இவ்வினை ஞரிருவரந்த
வெளிநிற்கும் மாவலன் தன்னைக்கூவி
வாட்டினன் சண்டைசெய்யக் கூட்டினனே ... (௨எ௨)



இராகம் - பந்துவராளி - சாபுதாளம்.

பல்லவி.

குவலயாபீடத்தைக் கூடிச்சண்டைசெய்தான்
கோபாலகிருஷ்ணனங்கே

அநுபல்லவி.

அவலீலையாகவே - அடிக்குஞ்சிம்மத்தைப்போல
அரசன்மல்லரங்க - வாசல்ன்முன்றலே ... (குவலை)

சரணம்.

க. அரையில்தட்டியைக்கட்டி - ஆபரணங்கள்பூட்டி
விரைவில்மயில் தோகையை - விளக்கமாகவேகூட்டி
கரிகண்ணுக்குஅங்கே - காலனைப்போல்காட்டி
அரியும்அதின்சிரசில் - அஸ்தத்தினாற்குட்டி ... (குவலை)
௨. குத்திகிற்குங்கண்ணனைக் - கொழுத்தயானையுங்கண்டு
கத்தியேதுதிக்கையால் - கட்டிப்பிடித்துக்கொண்டு
சுத்தியெறிந்திடச் - சூதாகஓடிமீண்டு
மத்தகஜத்தின்கீழ் - மாதவன்ஒளித்துண்டு ... (குவலை)
௩. ஒளிந்துஇருக்குமிடங் - காணமல்யானைகூச
தெளிந்துசெக்குபோலத் - தேர்ந்துகஜமும்வாச
அளிந்துமனங்குழைந்து - அரியைப்பற்றித்தேச
பளிங்குமண்டபத்துக்காய் - பாரில்கண்ணனைவீச... (குவலை)
௪. பார்தன்னில்வீழாமல் - பகவானும்ஓடியே
கார்போன்றயானையைக் - கைக்கொண்டுநாடியே
சீராகத்தூக்கியே - செகமீதில்கீடியே
பேர்போகஎறிந்தான் - பெருமானும்ஆடியே ... (குவலை)
௫. எறிந்ததோரானையும் - எழுந்துஎதிரில்வந்த
திரிந்துஇடம்வலமாய் - தேடிமனதுநொந்த
பரிந்துபாம்பைக்கருடன் - பற்றியதாகமுந்த
சரிந்துவீழ்ந்தழியச் - சாமளவண்ணனந்த ... (குவலை)
௬. பற்றியயானையை - பரந்தாமனும்அசைய
சுற்றிமாவலிபோலச் - சுழட்டியதிவிசையா
எற்றிநூறுமாரப்பால் - எறிந்துவெகுபசையா
வெற்றிலட்சுமிநாதன் - விஜயங்கொண்டான்இசையா (குவலை)

வசனம்..

கண்ணனும்பலராமனும் மல்லரங்கத்துக்குவருதல்.

விருத்தம்.

சண்டைசெய்தமத்தகஜம் சரிந்துவீழ்ந்து
சாமிகையால்பரலோகம்போனபின்பு
அண்டையுள்ளோர்தங்களையு மதன்கொம்பாலே
அண்ணனுடன் தானுமங்கேயழித்துவிட்டு
மண்டைபிளவாடலுற்ற மதக்கரியும்பாரில்
மலைபோலக்கிடப்பதையுங்கண்டுகண்ணால்
கொண்டையழகானவிளராம கிருஷ்ணர்கள்
கூடினார்மல்லரங்கம் சாடினாரே ... (௨௭௩)

இராகம் - ஸ்ரீராகம் - ஏகதாளம்.

பல்லவி.

வந்தார் - வந்தார் - கண்ணபிரான்

அநுபல்லவி.

வந்தார் - வந்தார் - கண்ணபிரான் - மல்லரங்கந்தன்னில்நாடி
பந்தமுள்ள கஞ்சன் கொலுவில் - பலராமனுடன்கூடி (வந்தார்)

சரணம்.

௧. மல்லனுக்குமடங்கலாயும் - மகத்துகட்குமகிழ்ச்சியாயும்
நல்லவர்க்குநாதனாயும் - நாரியர்க்குநன்மதனாயும் (வந்தார்)

௨. சத்துருகட்குச்சத்துருவாயும் - சாதுஜனசார்வராயும்
பத்தருக்குப்பரர்தாமராயும் - பாந்தவர்க்குப்பந்துவாயும் (வந்தார்)

௩. கஞ்சனுக்குக்காலனாயும் - கனமழையைக்காத்தோனாயும்
தஞ்சருக்குத்தாசனாயும் - தானவர்க்குத்தமனாயும் (வந்தார்)

௪. மெய்யனுக்குமெய்யனாயும் - மேலவர்க்குமேலனாயும்
கையிலாழிக்கண்ணனாயும் - கானும்லட்சுமிகணவனாயும் (வந்தார்)

வசனம்.

சபையிலிருந்தபெரியோர் கண்ணனைத்துதித்தல்

விருத்தம்.

மல்லரங்கம்வந்த இருவரையுங்கண்டு
மயங்கியேசபையிலுள்ள பெரியோர்யாரும்
அல்லலதுநீக்க நமக்கிவடமுற்று
அதிசயமாஞ் சேவைதரப்பெற்றநாமும்
எல்லையில்லாப்புண்ணியங்கள் என்னசெய்தோம்
என்றடியெல்லோருந் துதித்தெழுந்து



வெல்லமனங்கொண்டிருக்கும்நாதனென்றே
விரும்பினார்அடிபோற்றத்திரும்பினாரே ... (௨௭௪)

இராகம் - சங்கராபரணம் - அடைதாளம்

பல்லவி.

கண்ணாஉமதிருபாதம் நம்பினேம்
காத்துரக்ஷியும் கமலநேத்திரனே

அநுபல்லவி.

அண்ணனுடனே ஆடிவருகிற
ஆத்மநாதனே - அன்பர்போதனே ... ... (கண்ணா)

சரணம்.

௧. பூதகிதன்னைவதைத்தபாலனே
புகழ்ந்துசகடனையுதைத்தமூலனே
சூதாய்சுழல்காற்றை மிதித்தகாலனே
சுழற்றியேவற்சனை வதைத்தசீலனே ... ... (கண்ணா)

௨. மருதமரண்டையும் முறித்தசித்தனே
மடக்கும்புள்ளின் வாய்பிளந்தஅத்தனே
அரவம்வயற்றிலே வளர்ந்தநித்தனே
ஆடிப்பாம்பின்மேல் நடித்தவித்தனே ... ... (கண்ணா)

௩. கரத்தில்கிரிதன்னை எடுத்ததீரனே
காட்டுத்தீயைவாயில் விழுங்குஞ்சூரனே
புரத்தில்பாலரை ரக்ஷித்தவீரனே
பூவையர்தங்களை மருவும்மாரனே ... ... (கண்ணா)

௪. மகிழ்ந்துகோகுலம் தன்னில்வளர்ந்தோனே
மத்தகஜத்தின் மண்டைபிளந்தோனே
புகழ்ந்துஆச்சியர் பாடிக்களிந்தோனே
பூவளர்லட்சுமி யோடுமலர்ந்தோனே ... ... (கண்ணா)

வசனம்.

மல்லரங்கஞ்சேர்ந்த ராமகிருஷ்ணரைக் கொழுப்பேறியமல்லர் மல்லயுத்தத்துக்கு அழைத்தல்.

விருத்தம்.

திரும்பியந்தச் சபைக்கெதிராகநாடித்
தேடிவருங்கண்ணனையு மண்ணனையுங்கண்டு
பெரும்புலிபோல் கொழுப்பேறியங்கிருந்த
பேய்போன்றசாணூர முஷ்டிகனென்போர்

இரும்புவியிலுங்களது பராக்கிரமங்கேட்ட
எங்கள்கஞ்சனும்மை யிங்குவரவழைத்தார்
அரும்பலத்தாரெல்லா மரசன்முன்னே
ஆடலாம் சண்டைசெய்யநாடலாமே ... (௨எ௫)

இராகம் - பியாகு - சாபுதாளம்.

பல்லவி.

எங்களுடனே விளையாடவாருங்கள் இடைப்பயல்காள் நீங்கள்

அநுபல்லவி.

எங்களுடனேவிளையாடவாருங்கள் - இந்தசபைமுன்னேநில்லு
எல்லாருங்காணநீவெல்லு - எதிர்த்துச்சொல்லு ... (எங்க)

சரணம்.

க. மாடுகள்மேய்த்து மந்தையில்விளையாடும்
மல்லயுத்தந்தன்னைக்கேட்டு
மகராஜனும்சந்தோஷப்பட்டு - வரச்சொன்ன - விட்டு ... (எங்க)

உ. வித்தைசெய்கிறயுக்திகளில்கெட்டிக்
காரரென்று கேள்வியுற்றும்
காணவேணுமென்றே உங்கள்சித்தம் - என்ன - முற்றும் (எங்க)

ங. மலைபோன்றயானையை மடித்துவிட்டு இங்கே
மன்னன்வில்லையும்ஒடித்து
மறுத்தவர்யாரையும்அடித்து - இங்கே - நடித்து ... (எங்க)

ச. வெண்ணெயெடுத்து விசையாயெறிந்த
விளையாட்டுப்போலிது அல்ல
வெகுபிரயாசையாகவேநல்ல - மல்லனா - வெல்ல ... (எங்க)

ரு. கொஞ்சம்போது இங்கே போக்கித்திரிகுவோம்
கோபாலரோ சேர்ந்துவாரும்
கொப்பெனச்சண்டைகள்தாரும் - கோவைப் - பாரும் (எங்க

சு. கஞ்சனுங்கண்டவன் நெஞ்சங்களித்திட
கண்காட்சியாகவேகூடி
கட்சியாகநாம்நாடி - ஜெயிப்போம் - ஆடி ... (எங்க)

எ. உரலோடுபெண்களால் கட்டியுங் குட்டியும்
உறிபால்தயிர்வெண்ணெயுண்ட
ஓங்கியேதிருடிக்கொண்ட - பெகு - பண்ட ... ... (எங்க)

அ. லட்சுமிநாதன்கோ வந்தபோதிலும்
லட்சியம்எங்களுக்கேது
லாவண்யமாகஓது - இந்த போது ... ... ... (எங்க)



வசனம்.

மல்லுக்குஅழைத்த மல்லருக்கு கண்ணன்விடை தருதல்

விருத்தம்.

நாடிநின்றராமகிஷ்ண ரிரண்டுபேரும்.
நடித்திருக்கும் ஜெட்டிகளை யுற்றுநோக்கி
ஆடிவருஞ்சிறுபிள்ளை நாங்களென்று
அறிந்திருக்கும் நீங்களெம்மோடுசண்டை
தேடியழைத்திடுவதென்ன சூதோகாணத்
தெளிவாக அவர்க்குரைத்துத்தீரமாக
கூடிநாம்அரசன்முன்னே கொஞ்சநேரம்
கூறலாம் அழைத்தபடி நேரலாமே ... ... (௨எசு)

இராகம் - தன்னியாசி - ஏகதாளம்.

பல்லவி.

கஞ்சன்முன்னே - ஆடவல்ல - மல்லர்காள்கேளும்

அநுபல்லவி.

கஞ்சனண்டையியாகம்வாங்க-கண்டு-சென்று-நின்று-நாங்கள் (கஞ்ச)

சரணம்.

க. உங்களுக்கீடுகிடையாது - எங்களுக்கேதும்தெரியாது
இங்கேபின்னொருகைபாரு-இடையா-மடையா-என்றாய்-நாங்கள் ()

உ. நீங்களிருவரும்மேலாள் - நாங்களிருவரும்பாலாள்
ஓங்கியேகுத்துவீர்வாரும் - ஓடி - ஆடி - நாடி - நாங்கள் (கஞ்ச)

ங. உங்களிருவர்தேகங்கெட்டி - எங்களுடலம்மண்ணுங்கட்டி
இங்கேநீங்களெம்மைக்கிட்டி-எட்டி-தட்டி-குட்டி-நாங்கள் (கஞ்ச)

ச. தெரியுமோநீரென்றுகேட்டால் - தெரியாதென்றாலேமுட்டாள்
பரியாசஞ்செய்வாரோநாட்டார்-பாடி-தேடி-கூடி-நாங்கள் (கஞ்ச)

ரு. முட்டிகனோடுராமனும் - முகுந்தனொடுசாணூரனும்
கட்டியேநாம்சண்டைசெய்வோம்-கஞ்சன்-வஞ்சன்-காண - நாங்கள்

சு. எங்கள்பங்கிலேபெருமாள் - இருப்பதுமெய்யானால்திருமால்
உங்கள்இருவரையுங்கொல்ல-உதவி-இதவா-செய்வார்-நாங்கள் ()

வசனம்.

மல்லர்கள் தங்கள் ஆண்மையைக்கண்ணன் முன்சொல்லுதல்.

விருத்தம்.

அழைத்திருக்குங் கோபாலிருவரையுமங்கே
அகந்தைகற்றமல்லர்களு நோக்கிவானில்

தழைத்துவருஞ் சூரியன்போற் சிவக்கக்கண்கள்
தரணிதனில் எங்களோடெதிர்ப் பார்யாரும்
பிழைத்தவரைக்கண்டதையுங் கேட்டதுண்டா
பேதைகளே விதிதள்ளவந்தீரென்று
கழைத்தடியால்மாட்டோட்டும் பயல்காள்நீங்கள்
காலனூர்க்குப் போகக்கடவீரே (உஎஎ)

இராகம் - அடாணு - ஆதிதாளம்.

பல்லவி.

உங்களையுயிரோடுவிட்டோங்கள் போனால்
உலகத்தில் ஒப்புவாரோ

அநுபல்லவி.

திங்களைவிழுங்குமத்திரண்டகேதுக்கள்போல
உங்களையுலகத்திலுருட்டுவோம் அல்லாமல் ... (உங்)

சரணம்.

௧. நவலோகங்களுமுட்டவே - அழுகுரல்
சந்தன்எங்குமெட்டவே - செய்ய
இவடத்தில்கேலிகொட்டவே - கைகளாலே
இழுத்து அடித்துத்தட்டவே -
ஏய்க்கிறோம் - தலைகீழாய்ச் - சாய்க்கிறோம் - உயிர்போக
மாய்க்கிறோம் - தேகத்தைத் - தேய்க்கிறோம் - அல்லாமல் (உங்)

௨. மீனவதாரனெடுத்தாலும் - எங்களை
மிகவுஞ்சிங்கன்தடுத்தாலும் - வெல்ல
வானவர்வந்தடித்தாலும் - விடுமென்ன
வாமனன்மீறிப்படித்தாலும் -
இழுக்கிறோம் - வாயினால் - பழிக்கிறோம் - உடல்மைய
மழுக்கிறோம் - உங்களை - அழிக்கிறோம் - அல்லாமல் ... (உங்)

௩. ஆகாயத்தில்நீர்பறந்தாலும் - கருதியே
அலைகடற்குள்மறைந்தாலும் - செல்லப்
போகாவிடத்திற்பிறந்தாலும் - இருக்கவே
புகைபோகாவிடத்திற்சிறந்தாலும் -
வருகிறோம் - தலைகளைத் - திருகிறோம் - உதிரத்தைப்
பருகிறோம் - உங்களை - அருகிறோம் - அல்லாமல் ...... (உங்)

௪. கட்சியாகவந்து - உதவிசெய்ய
பட்சிவாகனனுவந்து - அழகிய
லட்சுமியுடன்சிந்து - பரடியிப்போ



லலிதஞ்செய்தாலும் - தந்து
நாடுவோம் - உங்களைத் - தேடுவோம் - கோல்களால்
சூடுவோம் - வதைத்திங்கே - ஆடுவோம் - அல்லாமல் ... (உங்)

வசனம்.

இராமகிருஷ்ணனிருவரும் மல்லருமாக மல்லுக்கு எதிர்த்தல்.

விருத்தம்.

வந்தசிறுகுழந்தைகளே யுங்களுக்கு
வட்டில்விளையாட்டிடமென்றெண்ண வேண்டாம்
இந்ததலஞ்சூழவூதும் காடுமல்ல
எழிலிடைச்சிமார்வாழும் பாடியாகாச்
சொந்தமாம் எங்கள்தொனிசோர்வில்லாத
சுந்தரஞ்சேர்பெண்களது இசையோகண்டாய்
சுந்தமலர்த்தாருடைய கஞ்சனுட்டுக்
கானமல்லரங்க் மிதிலெதிர்க்கலாமே ... (உஎஅ)

இராகம் - பந்துவராளி - ஆதிதாளம்

பல்லவி.

எதிர்த்தார்மல்லகஜெட்டிகளை - ராமகிருஷ்ணன்
எதிர்த்தார்மல்லகஜெட்டிகளை

அநுபல்லவி

எதிர்த்தாரிருவரும் - மதித்தார்அவர்பலம்
குதித்தாரெழும்பியே - சதித்தொருவர்க்கொருவர் ... (எதிர்)

சரணம்.

௧. கொட்டியேகரங்களை நீட்டியேபுஜந்தனிற்றட்டி-மீசைமுறுக்கி
அட்டகாசங்கள்செய்துமுட்டியினலிடித்துக்காட்டி-கர்ஜனைசெய்து
மட்டில்லாமானிடரை பொட்டெனப்பயர்கிடவாட்டி-லாகுகளாலே
குட்டிக்கரணம்போட்டு முட்டிமுழங்கால்களைக்கூட்டி-கிகிரிபோல
கிட்டன் இடமாய்வர - துட்டன் வலமாய்வர
எட்டியிருவர்களும் - கிட்டியே டீ கொடுத்து ... ... (எதிர்)

௨. எரியும்அக்கினிபோல - இருவர்கண்ணுஞ்சிவக்கவிழித்து-ஏகமாகவே
கரியும்சிம்மம்போல - கடினமானசண்டைதொழித்து-கண்டவர்சிலர்
அரியைவென்றமல்லர்-அகன்றிடுவாரோவெனப்பழித்து-அடுத்திருக்கு
கருகியகஞ்சனுமன்று - கண்களுங்கூசவேவிழித்து-காலனைப்போல [ம்
எரிதருங்கசரிபு - சரிசரியாகவிங்கு
வரிசைபெறும்விதமா - இரியும்மல்லருநின்று ... ... (எதிர்)

௩. அச்சமயமவர் - அச்சுதனைத்தள்ளியுதைத்து-ஆகாயந்தன்னில்
இச்சையாகஅங்கு - எழும்பியோடியேகுதித்து-முதுகினலே
உச்சிதமாகவேஉருண்டுஉடல்களும்பதைத்து-கஞ்சன்களிக்க
பச்சைவண்ணனை - பாரில்தள்ளியவன்மிதித்து-பயமில்லாமல்
கச்சைகட்டியலட்சுமி - மெய்ச்சுநாயகனங்கு
லச்சைசெய்யாமலே - லாவணியமாகநின்று ... ... (எதிர்)

வசனம்.

மல்லுக்கு எதிர்த்த ராமகிருஷ்ணனைச் சிறுபிள்ளைகளென்று அக்கியானத்தால் நினைத்தபெண்கள் விசனப்படல்.

விருத்தம்.

கண்ணனும் அண்ணனுமாயங்கு நின்று
கடுமனத்து மல்லரொடு கனத்தசண்டை
பண்ணிவரும் விந்தைதனைக்கண்டே யந்தப்
பட்டணத்து ஸ்திரீகளங்கு பயப்பட்டேங்கி
விண்ணவரும் வியக்குமிந்த விபுவைக்கியான
வீனமுள்ள பிள்ளைகளென்றே மதித்து
மண்ணிலுள்ள ஜீவனெலாங் கரையும்வாறு
மலங்கினர் கண்ணீரொழுகக் கலங்கினரே ... (௨௭௯)

இராகம் - புன்னுகவராளி - சாபுதாளம்.

கண்ணிகள்.

௧. பஞ்சமாபாதன்கன்கஞ்சன் - பாலகர்இருவரையும்
பகைத்திட்டான் - இங்கே - யழைத்திட்டான்
கொஞ்சமுந்தயவில்லாமல் - குழந்தைகளைமல்லருடன்
கூட்டினன் - சண்டை-மூட்டினன் ... ... ... *

௨. நெஞ்சில்இதக்கமில்லாமல் - வஞ்சகன்கஞ்சனுக்கிது
நீதியோ - என்ன - பிரக்கியாதியோ
கஞ்சவஞ்சமில்லாத - நந்தர்மகனை மல்லர்
நகைக்கின்றார் - கொல்லப்-பகைக்கின்றார் ... ... ... *

௩. எந்ததேசத்திலானலும் - இவனைப்போலமூடர்
இருப்பாரோ - காணப் - பொறுப்பாரோ
வந்துஇருக்குமிந்த - வளர்முடிமன்னரிங்கே
வருந்தாரோ - ஓதிப் - பொருந்தாரோ ... ... ... *

௪. இந்தசபைக்குநாங்கள் - எல்லவர்களுங்கூடி
ஏன்வந்தோம் - இங்கே - தான்வந்தோம்
சிந்தைமகிழும்லட்சுமி - ஸ்ரீதரன்இவனிடம்இன்று
ஜெயிப்பாரா - நம்மை - வதிப்பாரா... ... ... ... *



வசனம்.

கண்ணன்மேல் மோகங்கொண்டதைச் சொல்லுதல்.

விருத்தம்.

வதிக்காராளென்றுரைத்து வஞ்சிமார்கள்
வடிவாளன்தனைநினைந்து வருத்தப்பட்டுச்
சகிக்காதகஞ்சன்வாழ்கொடியநாட்டில்
சந்தோஷமாய்ப்பிரமன்பிறப்பித்தானே
தகிக்காறுதித்தேவன்வந்திப்போது
தார்வேந்தே எங்கள்மனோகுறையோ
வதிக்காதசெய்கையெல்லாங் காணஇங்கேன்
வந்திருந்தோமென நொந்துவாடுவாரே ... (௨௮0)

இராகம் - முகாரி - அடைதாளம்.

கண்ணிகள்.

௧. மயிற்றோகையாக வந்து பிறந்தாலிந்த
மாதவனுடைய முடியில்
மயிருடனேசேர்த்து முடித்தாதரிப்பரோ
மகிமையுடைய தோழிகேளீர் ... ... ... *

௨. வம்சநாணமாக வந்துபிறந்தாலிந்த
வாசுதேவனுடையவாயில்
பம்சரியாகவேயூதியாதரிப்பரோ
பைந்தொடிமார்களாகேளீர் ... ... ... *

௩. பீதாம்பரமாக வந்துபிறந்தாலிந்த
பெருமாளுடையஇடையில்
சதாகாலம் உடுத்தியாதரிப்பரோ
சரசங்கற்ற தோழிகேளீர் ... ... ... *

௪. நந்தகோகுலத்தில் வந்துபிறந்தால்நாம்
நாராயணன் நம்மைக்கூடி
மந்தகாசமாய்மருவியிருப்பாரோ
மணியணித்தோழியேகேளீர் ... ... ... *

௫. விருக்கமாய்பிருந்தாவனத்திற்பிறந்தால்நாம்
வேணுகானன்தன்னைக்கூடி
உருக்கமாகநாடியாடி யிருப்பரே
உண்மையுடையதோழிகேளீர் ... ... ... *

௬. கன்றும்பசுவுமாகப்பிறந்திருந்தாலேநாம்
கலந்துலட்சுமிபதியைக்கூடி

என்றும்பிரியாமல் எம்மோடிருப்பரோ
எழில்முகத்தோழியேகேளீர் ...

வசனம்.

மல்லர்கள்வதம்

விருத்தம்.

இந்தவிதஞ்சொல்லிச் சிறுநகையார்யாரும்
எழிற்கண்ணனைக்கூடியினிதுவாழப்
பந்தமுள்ளபலதவங்களாற்றினார்பார்
பாடியுள்ளமொப்பிடைச்சிமார்களெல்லாம்
சிந்தனைசெய்வதிலுமிப்போதுரிதமாகச்
சேவைவிட்டொழிவதுவேநலமென்றோத
அந்தவிடந்தன்னில் நின்றமல்லரோடு
அடுத்திட்டார்சண்டைசெய்யத் தொடுத்திட்டாரே (உ.அக)

இராகம் - பந்துவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

மல்லருடன்சண்டையைக்கேளும் - இளைஞர் செய்த
மல்லருடன்சண்டையைக்கேளும்

அநுபல்லவி.

மல்லருடன்சண்டைகேளும் - நல்லமதுரையையாளும்
கொல்லவினைந்தகோனும் - வெல்லப்பொருந்துவானும்
எல்லவருங்காண - மல்லர்களும்நாண
அய்யன்எடுத்துவாரி - செய்யுஞ்சண்டையில்மீறி
அவரையிவர்பிடிக்க - இவரையவர்கடிக்க
அண்டத்தவர்படிக்க - இண்டத்தவர்துடிக்க
ஆயிரம்பேர்திரண்டாலும் - சாகரங்கள்புரண்டாலும்
கூடுவோம் - பாலர்களைத் - தேடுவோம் - நந்தர்அஞ்ச
ஜாடுவோம் - ராஜனிடம் - நாடுவோம் - என்றுவந்த (மல்ல)

க. கத்திக்கருத்துமன்போல் - கத்திக்கண்ணன்பறக்க
சுற்றியேபருந்துபோல் - சுற்றிச்சூரன்மறைக்க
பற்றியேபாதத்தை - பற்றிப்பரக்தெறிய
குத்திக்கொல்லுவேனென்று - குத்திக்குடல்சரிய
நெற்றிதன்னிலிடித்து - நெற்றிரத்தம்வழிய
வித்தகனுமங்கே - வீரமனஞ்செழிய
புத்தியில்லாதமல்லன் - பழியுள்ளோர்நகைக்க



எதிர்த்துநின்றுனேமண்மேல் - கொல்லவரும்
யானைமுன்னேசென்றமான்போல் - இருவருமாய்
ஆகாயமுட்டவுதித்து - சாகாமல்கீழ்க்குதித்து
ஆண்மைகளைச்சொல்லிநின்று - விதம்விதமாய்
கேண்மைசெய்பவர்போற்சென்று - கைகள்கோர்த்து
அந்தவிடம்இந்தவிடம் எந்தவிடந்தன்னிலும்
அவரவர்களாகத்தோன்றினர் - வெல்லஎண்ணி
அண்டிவந்தானேஜெட்டி - அவனைப்பற்றி
அய்யன்உதைத்துத்தள்ள - வெய்யன்சினந்துமெள்ள
அடிபற்றியெறிந்தானே - அரைநொடியில்
தடியன்மேல்தெரிந்தானே - தெரிந்தவனும்
ஆகிலும்நம்மைநேராயெதிர்த்தவர்
ஆரையுங்காணேனென்றான் - சிறுபிள்ளை
பேரையுமெச்சிநின்றான் - நின்றவனை
அனந்தனுங்கண்டுஇவன் மனமும்அறிந்தவனாய்
ஆட்டியடித்திழுத்தான் - சாணூரனும்
மாட்டும்படிக்கிழுத்தான் - இப்படியாக
ஆனையும்அரியுமாக - தானும்அவனுமாக
அடர்ந்துஎதிரிலேறி - நடந்துநடந்துவந்த ... (மல்ல)

உ. திட்டிவருவான் - மல்லன் - கிட்டிவருவான்வல்லன்
தேடிவருவான் - மல்லன் - கூடிவருவான்வல்லன்
ஆடிவருவான் - மல்லன் - பாடிவருவான்வல்லன்
ஆர்த்துவருவான் - மல்லன் - பார்த்துவருவான்வல்லன்
அடியடியென்பான் - அவன் - இடியிடியென்பான்இவன்
அண்டுஅண்டுயென்பான் - அவன் - தண்டுதண்டுமென்பான்இவன்
எதிரெதிரென்பான் - அவன் - மிதிமிதியென்பான்இவன்
இந்தவகைகண்ணனை - முந்திமுந்திவந்தவனை
எலிகண்டபூனையைப்போல் - மனங்களித்து
பெலிகண்டசாமியைப்போல் - இருக்கையிலே
என்வலியுங்கண்டானவன் - தன்வலியும்பார்க்கலாம்
என்னுங்கருவங்கொண்டே - சொன்னவனை
புன்னகையுஞ்செய்துகொண்டே - பாலனிவன்
எடுத்தஜனனமிதோ - இன்றேடேமுடியுது

என்றுஅவனைத்தூக்கியே - ஆகாயந்தன்னில்
செண்டுஎன்னப்போக்கியே - எறிந்தவுடன்

இடிவிழுந்தபாவனையாய் - ஈனன்விழுந்தவனை

இதுவேதருணமென்னவே - கைகளாலே
பதிசேருகாளென்னவே - பதைக்கக்குத்தி

எற்றிஇருபுறமும் - பற்றிப்பலங்குறைய

எட்டிச்சிரசிற்புடைத்தான் - எமனுலகம்
கிட்டும்படியேபுடைத்தான். - சாணூரனும்

எரியுமனமுமாற - நரியுநமனுஞ்சேர
இறந்துவிண்ணிலேக - சிறந்துமலர்கள்தூவ ... (மல்ல)

௩. தோள்கள்முறிந்துபட்ட - தாள்களறுந்துகெட்ட
தொந்திகள்சரிந்துகொட்ட - மந்திபோலிளித்துவிட்ட
துர்த்தனையறிந்துமுட்ட - பார்த்துமுஷ்டிகனுங்கிட்ட
துயரப்பொருந்திவாட்ட - துடித்துவந்தானேநாட்ட
துஷ்டன்இவனையின்று - கஷ்டப்படுத்தவென்று
இஷ்டமனதிற்கொண்டு - சேஷ்டைசெய்யவேநின்று
இருக்கும்பலராமனோடு - பெருக்குநகைசெய்யநாடு
துடுக்குமெத்தசெய்யலாமென்று - இடுக்குசெய்தெதிரேநின்று

எதிர்த்தானேபெரும்புலியை - நாய்போல
கொதித்தானேதன்விதியை - இப்படியாக

தூறுபட்டுமாயவரும் - கூறுபட்டுச்சாயவரும்

தோள்கொட்டிவருவானை - கெக்கலிசெய்து
தாள்எட்டிவருவானை - அனந்தன்கண்டு

ஆவியடங்கவிப்போ - தாவிப்புடைப்பதொப்பே

அடித்துப்புரட்டினானே - தரைதனில்
இடித்துமிரட்டினானே - இரத்தங்கக்க

எட்டியேஒருகுத்து - இட்டவுடனேமாரில்

இடிந்துமனமுமறந்தான் - திடனற்று
மடிந்துஉயிருந்துறந்தான் - துறந்தவுடன்

எல்லாருங்கண்டுஅன்று - வல்லாளரிவரென்று

ஏற்றமாய்த்தூற்றினார்கள் - சிறுவரை
வாழ்த்தியேபோற்றினார்கள் - விண்ணவரும்

எக்களிக்கத்தங்களாவி - உட்களிக்கப்பூக்கள்தூவி
பக்கமுற்றார்லட்சுமிநாதன் - சிக்கியேமல்லருஞ்சென்ற (மல்ல)



வசனம்.

கஞ்சன்வதம்.

விருத்தம்.

சண்டையிட்ட சாணூரமுஷ்டிகானை
சரிப்படுத்தியெமபுரத்திற் கனுப்பிப்பின்னர்
அண்டைநின்றவிருமல்லர்ஒழிவுபட்டார்
அடுத்துநின்றஜெட்டிகளுமோடிவிட்டார்
கண்டகனுங்கஞ்சனென்னுங் கசடன்தன்னை
கதிசேர்க்கக்காலமிதுவென்று கண்ணன்
பண்டைவினையாலென்னை யனுப்பத்தகியாயம்
பாரென்றான் மேலூர்க்குச்சேரென்றானே ... (உசுஉ)

இராகம் - தோடி - சாபுதாளம்.

பல்லவி.

கருப்பையின்சிசுகொன்ற - கஞ்சனுக்கும் - கண்ணனுக்கும்
கலந்ததேசண்டை - தொடர்ந்ததே

அநுபல்லவி

நெருப்பைப்போலவே - கஞ்சன்கண்கள்மின்ன
நேசித்திருந்தவர் - அஞ்சிப்படிந்துதின்ன
வாளையுருவிநின்று - வலமிடமாகவே
வானத்தில்பருந்துபோல் - வருவானுநோகவே ... (கரு)

சரணம்.

க. சிறையிருக்கும்வசுதேவ - தேவகியையிப்போ
சேதிக்கிறேனென்று - செருக்குவானுமப்போ
சிறியிருதுங்தொழிய - செண்டுஎன்பதொப்பே
சிம்மாசனத்தருகில் - சேர்ந்தபாலனைப்பே

யெனவிவருபொரு - எதிரிலெனவரு
புலியினொடுபொரு - புலியிதெனதிரி
அரியினொடுபொரு - அரியிதெனவிரி
கரியினொடுபொரு - கரியிதெனவரி... ... (கருப்)

உ. எனக்குமுன்பிறந்த - ஆறுசிசுவைக்கொன்ற
எங்கள்குலத்துக்கு - ஈடனைகவேநின்ற
உன்னைவதைத்தபின் - உகந்துஇங்குசென்ற
என்னைஎல்லோர்களும் - ஏற்றும்படியின்று

எரியில்உயிர்பட - சரியில்நிலைகெட
தரையில்முடிகெட - நரிகள்இரையிட

எரியுமனம்விட - அரியுமகிழ்பட
கிரியும்விரிபட - புரியும்உயிர்விட ... ... (கருப்)

௩. மோசம்செய்யுமன்னன் - முடியைக்கையிற்பற்றி
கேசவனும்அன்று - கெட்டியாயவனைற்றி
வீசியேதொனிசெய்து - விசையாகவேமொற்றி
வாசவனுங்கோனே - வாரிவிண்ணில்தூற்றி

அணிகள்சிதறிட - அரைவாள்ஒடிபட
மணிகள்உதறிட - மலர்கள்விடவிட
துணிகள்கிழிபட - தொடைகள்முறிபட
கிணிகள்அடிபட - கெர்வமொழிந்திட (கருப்)

௪. கண்ணனுமுடிமன்னன் - கஞ்சனைவதைத்தார்
அண்ணனுமவன்தம்பி - எழுவரைச்சிதைத்தார்
அருகிருந்தவரெல்லாம் - அகமதுதிகைத்தார்
இருவரைக்கண்டங்கு - ஏற்கவேதுதித்தார்

விமலைதூவிட - அமலைகூறிட
சமனர்புகழிட - கமலன்கழல்பட
தமரமடிபட - சமரமுறிபட
நமரர்பயம்விட - நாதன்கெலித்திட (கருப்)

வசனம்.

நாரதர்மங்களம்பாடல்.

விருத்தம்.

கண்ணனும் அண்ணனுமா ஜெயமுங்கொண்டார்
ககனத்தில்தேவர்மலர்தூற்றிநின்றார்
பண்ணுடனேகந்திருவர் வாத்தியத்தோடு
பாடினார்ஆடினார் பரிந்துவாழ்த்த
எண்ணிநின்றபெண்களெல்லாமகக்களிக்க
எழுந்தங்குதுதித்துக்கொண்டேயிருக்க
வண்ணமுள்ளநாரதரும் வீணைகொண்டு
வணங்கினார்மங்களம் பாடஇணங்கினாரே ... (௨௮௩)

இராகம் - பந்துவராளி - அடைதாளசாபு.

பல்லவி.

மங்களம் - மங்களம் - சதா - ராமகிருஷ்ணருக்கு
மங்களம் - மங்களம் - சதா

அநுபல்லவி.

மங்களம் - மங்களம் - என்றார் - மகிழ்ந்துவானவர்கள்சென்றார்
சிங்காரரூபனைக்கண்டார் - சேவித்துஎதிரேநின்றார் ... (மங்)



சரணம்.

௧. தேவர்சிறைவிடுத்தவருக்கு - தேவகியை-திரும்பிவந்துஅடுத்தவருக்கு
பாபியானகஞ்சன்தன்னை - பாரில்தள்ளிமுடித்தவருக்கு
பதைத்துவந்தஜெட்டிகளை - பட்சிபோல்முறித்தவருக்கு (மங்)

௨. கின்னரகெருடர்கள்பாட - விண்ணில்நின்று - கெந்திருவர்தாளங்கள்
பன்னகருபனுடனே - பாலகிருஷ்ணனங்கோட [போட
பாடிரம்பையூர்வசியும் - பகவானைதுதித்துஆட... ... (மங்)

௩. அன்னைதந்தைமகிழும்படியாக - வந்தவருக்கும் - அம்மான்பவத்தை
[த்தீர்த்தவருக்கும்
மன்னன்உக்கிரசேனருக்கு - மணிமுடிசூட்டஇருக்கும்
மாயன்கிருஷ்ணராமருக்கு - மடுவில்குதித்துவந்தவருக்கும் (மங்)

௪. பட்சிவாகனனென்பவருக்கும் - பண்வாயசோதை- பாலனாகவளர்ந்த
வட்சந்தன்னில்லட்சுமியை - வாசமாகவைத்தவர்க்கும் [வருக்கும்
வானவேணுகானனாக - வந்துஅவதரித்தவர்க்கும் ... (மங்)

வசனம்.

கஞ்சன்தேவிமார்முதலியோர்புலம்பல்.

விருத்தம்.

பாடிநின்றநாரதரும் பரிந்துசூழ்ந்த
பரலோகவாசிகளும்பதிபோய்ச்சேர்ந்தார்
கூடிநின்றஜனங்க ளெல்லாங் குதுகலிப்பாய்
கொண்டாடிச் சிறுவர்களைக் குடிக்குச்சென்றார்
ஆடிநின்ற தூதர்களிற் சிலர்களோடி
அரண்மனைக்குள் ளுற்றுஅங்கேயேங்கி
வாடிநின்ற கஞ்சன் தேவியருக்கோத
வதங்கினார் புலம்பிமனமிதங்கினாரே ... (௨௮௪)

இராகம் - யமுனாகல்யாணி - சாப்புதாளம்.

பல்லவி.

என்னசெய்வோம் நாங்கள் - என்னசெய்வோம் நாங்கள்
எங்கள்கஞ்சனாரே

அநுபல்லவி.

என்னசெய்வோம் நாங்கள் - இருவரும் உம்முடன்
இறக்கத்தெரியாமல் - இருக்கிறோம் புவிமேலே ... (என்)

சரணம்.

கோபாலசிம்மம் - எதிர்த்துமதுரையில்
குதித்ததோமன்னவனே

கொழுத்த மதயானை - கஞ்சனென்று சொல்லி
கொன்றதோ சபைதன்னில் - மன்னவருடைமுன்னில் (என்)

௨. யாதவரென்ற - பெருங்காற்றுவீசி
யடித்ததோமன்னவனே
யாராலுஞ்சாவாத - அரசன்கஞ்சனை
யதுகுலகிருஷ்ணனின்று - வேரோடுமுறித்ததே ... (என்)

௩. வாசுதேவனென்னும் - கடல்பொங்கிமதுரையில்
வந்ததோமன்னவனே
மத்தியிலிருக்கின்ற - திட்டுக்கஞ்சனென
மறையவடித்ததோ வுன்னை - மறையவருடைமுன்னே (என்)

௪. தேவகிசுதனென்ற - வச்சிராயுதமெதிர்த்து
சேர்ந்ததோமன்னவனே
சிகரத்தோடொத்திருக்கும் - கொடிமுடிகஞ்சனை
சிதைத்ததோசபைதன்னில் - தேவர்களுடைமுன்னில் (என்)

௫. ஐம்பத்தாறுதேச - ராசர்க்குந்தலைவனாய்
ஆண்டரேமன்னவனே
அந்தரங்கந்தன்னில் - அரியைத்திரேஷியாக
அவருடையஸ்தத்தால் - அந்தகனூரடைந்தீர் ... (என்)

௬. இந்திரன்சந்திரன் - குபேரன்முதலிய
எல்லவரையுஞ் ஜயித்து
எம்பிரானையெதிர்த்து - எதிராளியாயெண்ணி
எங்கட்குப்பதியாக - இல்லாமற்போனீரே ... (என்)

௭. பூதங்களையென்றும் - இம்சித்துக்கொண்டிருக்கும்
பூபதிகஞ்சனென்று
பூதங்களைத்தும் - பிணமாகவேசெய்து
போட்டதோசபைதன்னில் - கூட்டங்களுடைமுன்னில் (என்)

௮. திருவாய்ப்பாடிதன்னில் - செய்யும்உற்பாதத்தை
தினந்தோறுங்கேட்டிருந்தும்
திருலட்சுமிகாதனை - தேவனென்றெண்ணாமல்
தேகந்தன்னையிழந்து - திருவடிசேர்ந்தீரே ... (என்)

வசனம்.

கண்ணன் தனது தாய்தந்தையாகிய வசுதேவர் தேவகி சிறையிருப்பைநீக்கி அவர்களுக்குத்தன் மனதிலிருந்தவைகளைச்சொல்லுதல்.



விருத்தம்.

இந்தவித மாய்க்கஞ்சன் தேவிமார்கள்
இரங்கியே யழுதிருக்கும் அவரைநோக்கிச்
சொந்தமாம் எங்களது மாமன்முன்னம்
சோர்வில்லாக் குழந்தைகளை வதைத்திருந்த
விந்தைவினை யால்மாண்ட விகடன்தன்னை
விரைவாக இடுகாட்டிற் கொண்டுசேரும்
எந்தையின் சிறையிருப்பை நீக்கவேண்டும்
என்றவர்கள் விலங்கறுத்து எதிர்நின்றாரே (உ-அடி)

இராகம் - தன்னியாசி - சாபுதாளம்.

பல்லவி.

மாதாபிதாவைக்கண்டு - வணங்கியெதிரேநின்று
மாதவனுரைக்கின்றாரே

அநுபல்லவி.

காதகன்கஞ்சனைக் - காலனூரிலேகூட்டி
சாதகமாய்ச்சேவை - தாய்தந்தையர்க்குக்காட்டி ... (மாதா)

சரணம்.

௧. பெற்றபிள்ளைகள்தம்மை - பெருமையுடனேதொட்டு
பிரியாமற்போஷிக்க - அதிர்ஷ்டமில்லாமல்விட்டு
எத்தனையோகாலங்கள் - கற்றிருந்தாலும்பட்டு
இம்சிக்கவுங்கஞ்சன் - பார்த்திருந்தோங்கேட்டு ... (மாதா)

௨. தந்தைதாய்கிரகந்தன்னில் - தரித்துவளராமற்சென்று
நந்தருடைமனையில் - நாங்கள்வளர்ந்தோம்நின்று
எந்தஇடந்தனிலும் - இருந்தாலுமேகன்று
விந்தையாய்தாயைத்தேடி - விரும்பிவரும்போலின்று (மாதா)

௩. எங்கள்நிமித்தியமாய் - இருவர்களும்மெய்யா
இருந்தீர்சிறைதன்னில் - எதிராளிகள்வைய
உங்களிருவருக்கும் - உகந்துபணிவிடைசெய்ய
உலகத்தில்சதகோடி - யுகமும்போதுமோஅய்யா ... (மாதா)

௪. குழந்தைகளிடந்தன்னில் - கோபஞ்செய்யாமல்பார்த்து
குதுகலிப்பாயின்று - கூட்டிக்கிரகஞ்சேர்த்து
இழந்தசெல்வங்கஞ்சன் - ஈய்ந்தான்தானைவார்த்து
எழில்லட்சுமிகாதனினி - இருப்பார்நம்மைக்காத்து ... (மாதா)

வசனம்.

பாட்டனுக்குப் பட்டங்கட்டுதல்.

விருத்தம்.

வணங்கியேயெதிர் நிற்கும்மைந்தர்தம்மை
வாரியேயெடுத்துச் சிமோந்தானந்த
கணங்கமாங்கண்ணீராலலம்பிமக்காள்
கைதொட்டுவளர்த்தெடுக்காப் பாவியென்று
இணங்கவேயவர்கள் சொல்லைக்கேட்டுக்கண்ணன்
இனிநடக்கும் வகைக்கேதுசெய்யவேண்டும்
மணங்கமழும் நம்பாட்டன்சிறைவிடுத்து
மகிழுவோம் முடிசூட்டிப்புகழுவோமே ... (௨௮௬)

இராகம் - சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி.

பட்டங்கட்டினுரேகண்ணன் - மாதாமகற்கு
பட்டங்கட்டினுரே கண்ணன்

அநுபல்லவி.

பட்டங்கட்டினுரேகண்ணன் - திட்டமாய்மதுராபுரி
பட்டணத்தையாளுமென்று - பாட்டன்உக்கிரசேனருக்கு (பட்)

சரணம்.

௧. யயாதிசாபம்விடுத்து - சபைதன்னில் - எல்லவரையும்அடுத்து
நியாயஞ்சொல்லியந்த - நிமலனங்கேபடித்து
நேயமாகவேகிட்டி - நெருங்கிமுடியெடுத்து ... (பட்)
௨. வைத்தசிறையழித்து - உறவினர் - வைக்கும்பயமொழித்து
உத்தமனுனஅந்த - உக்கிரசேனரையழைத்து
உலகத்தையாளவென்று - உகந்துமுடியமைத்து ... (பட்)
௩. பலராமனுடன்கூடி - பகவானும் - பரிந்தாசையாகநாடி
கோலமுடனிருந்து - கோமகன்தன்னைத்தேடி
குளிர்ந்தமனதுடனே - கோனுமுடியுஞ்சூடி ... ... (பட்)
௪. ஓடிப்போனவரைத்தேடி - கண்ணன் - ஒருங்குபடவேகூடி
நாடிப்பயந்தகஞ்சன் - நமனிடஞ்சென்றான்வாடி
நலந்தருஞ்செல்வமிந்தா - நான்தந்தேனெனப்பாடி ... (பட்)
௫. வாயுவைத்தான்அழைத்து - கணந்தனில் - வரும்படியாய்த்தழைத்து
பாயுவாய்இந்திரன் - பதிசேர்ந்துஇழைத்து
பரிசுத்தமாஞ்சுதர்மப் - படிகொணர்வாயுழைத்து ... (பட்
௬. கொண்டுவந்ததில்பெருக்க - சுதர்மமாங் - கோபீடந்தனிலிருக்க
தொண்டுசெய்திருக்கநான் - துணைபோலநீர்தரிக்க
துய்யலட்சுமிநாதன் - துணைசெய்யவேயிருக்க ... ... (பட்)



வசனம்.

நந்தகோபருக்குக் கோகுலஞ்சேரும்படிச் சமாதானங்கூறல்.

விருத்தம்.

பாட்டனுக்கு முடிசூட்டிப் பரிசனங்கள்
பண்ணமைச்ச மாரோடு வாழ்ந்திருக்கக்
கூட்டமிட்டுத் தன்னேடு கூடிவந்த
குழுவினர்களெல்லவர்க்கும் விருந்துசெய்து
நாட்டமிட்டுவளர்த்த திருநந்தன்தன்னை
நாரணனும்மகிழ்வாக நோக்கித்தாங்கள்
வாட்டமுறுமெமதன்னைக்காதுக்கோதும்
வாறென்றூர்கொஞ்சதினம்பாரென்றூோ ... (௨௮௭)

இராகம் - கேதாரகௌளம் - ஆதிதாளம்.

பல்லவி.

அய்யாநந்தரே - என்னுடை - வார்த்தையை
அறிந்துநீர்கேளும் மெய்யா

அநுபல்லவி.

மெய்யாகவுலகில் - விண்ணவர்கள்புகழும்
விளங்குங்கோகுலந்தன்னில் - முந்திநீர்உகந்திரும் ... (அய்)

சரணம்.

௧. எங்களிருவரையும் - உங்கள்பிள்ளைகளென்றே
எண்ணிவளர்த்ததாலே - இருந்தோம்புவியினின்றே
திங்கள்மதிவதன - தேவியசோதையங்கு
தெரிந்தாள் - இருந்துபொங்கி
தங்கமானஇடைச்சேரி - தன்னையுற்றும்
தோகையர்களோடு - தினமும்திரிந்துமுற்றும்
தங்கும்பசுக்குலங்கள் - தம்மைமேய்த்துநித்தம்
தம்பியும்அண்ணனும் - தழைத்தோம்உங்கள்சித்தம் ... (அய்)
௨. பெற்றவர்களைவிட - பிரியமாய்வளர்த்தார்
பெருகும்ஆசையையான் - பேசவும்ஆர்திறத்தார்
மற்றுநீங்களேயெந்தன் - மாதாபிதாக்களென்று
மறவேன் - எப்போதுநின்று
முற்றுமுங்களிடத்தில் - முழுமனதைச்செலுத்தி
மோசஞ்செயுமீனரை - முன்னேநாசப்படுத்தி
உற்றகாரியங்களை - ஒழுங்காகவேற்படுத்தி
உங்களிடத்துக்கு - உகந்துவருவேன்நத்தி ... (அய்)

௩. கூடவந்தவரை - கூட்டிவிருந்துசெய்து
கோகுலஞ்சேர்ந்துநீர் - குடியிருங்கள்உய்து
நாடும்நமதுசொந்த - நங்கைமாருக்கெல்லாம்
நான்வருவேன் - சொல்லும்
தேடும்எனதுகோக்கள் - திவ்யகுணத்தார்யார்க்கும்
திருக்கண்ணன்க்ஷேமத்தை - சேர்ந்துஉரைத்துபார்க்கும்
வாடும்எனதுஅன்னை - வையம்புகழுமாது
வஞ்சிக்குவருவேன்நான் - வருந்ாதேயெனவோது ... (அய்)

௪. அஷ்டலட்சுமி பதியும் - அப்பாவென்றுவிளித்து
ஆண்டவன் நம்மைவிட்டு - அகலானென்று களித்து
இஷ்டமாய்வெகுமானம் - எல்லவர்க்குங் கொடுத்து
இன்பமாகப் - படித்து
கட்டிக்கரத்தால் நந்தர் - காலிற்படிந்துதொண்டு
கருணையா பவர்மன - மாறக்கருத்துகொண்டு
அட்டிசெய்யாமல் நீங்கள் - ஆய்ப்பாடிதன்னைச்சேரும்
அடியேனும் பின்னோடே - அண்டுவேன்போய்வாரும் (அய்)

வசனம்.

கண்ணனுக்கு உபநயனஞ் செய்தல்

விருத்தம்.

சுந்தரஞ்சேர்தோளான் தன்னுரையைக்கேட்டுச்
சுகமாகக்கோகுலமே சூழ்ந்தார் நந்தர்
மந்தரஞ்சேர் மைந்தர்களை நோக்கிச்சொந்த
மாதாவும் மனமகிழ்ந்து வியப்படைந்தாள்
தந்தரமாம் நம்செல்வர்தங்கட்கிப்போ
தருமமாம் வசுதேவருபநயனஞ்செய்ய
அந்தரத்தார் மெச்சுகின்ற கர்க்கரையுமிங்கு
அழையென்றார் சீர்தூக்கும் விழைவென்றாரோ (௨௮)

இராகம் - மோகனம் - ஆதிதாளம்.

பல்லவி.

உபநயனங்கள் செய்தார் - ராமகிருஷ்ணர்க்கு
உபநயனங்கள் செய்தார்

அநுபல்லவி.

உபநயனங்கள் செய்தார் - உகந்ததன்மைந்தருக்கும்
விபவமாயன்றங்கே - வேதஞ்சொல்லியிருக்கும் ... (உப)



சரணம்.

௧. சொந்தமாகவேயெண்ணி - வசுதேவர் - சூழ்ந்தவரைநண்ணி
விந்தை விந்தையாய்ப் - பணிகள்அலங்கரித்து
வேண்டிப்பந்துகளை - விரும்பிவருவித்து
சந்தோஷமாகவே - சகலர்களுங்களித்து
சாமளவண்ணனும் - அண்ணனுமாய்ச்சொலித்து ... (உப)

௨. சகலமுனிவர்நாட - புரோகிதர் - சதுர்வேதங்களும்பாட
அகிதலமகிதல - மாணவர்களுங்கூட
ஆனந்தமாய்த்தேவர் - அரியமலர்கள்போட
பகவானென்றுபரிந்து - பணிந்துரம்பைகள் ஆட
பதினெட்டுவாத்திய - விருதுகளும் நீட ... ... (உப)

௩. பாலருதித்ததினம் - மானசீகமாய் - பதினாயிரங்கோதானம்
கால காலந்தன்னை - கருத்துதன்னிலறிந்து
கோலமானவசு - தேவர்கொண்டுசிறந்து
சீலமுடைய தேவ - பிராணமனைத்தெரிந்து
சேர்ந்தபடியேதானம் - தாரைவார்த்துப்பரிந்து ... (உப)

௪. பட்சமாயனுக்கிரகம்பெற்று - பகவானும் - பிராதாவுடனேயுற்று
லட்சலட்சமாய் - போஜனஞ்செய்துநந்து
தட்சணைபரிமள - தாம்பூலங்களுந்தந்து
குட்சியில்லோகங்களைக் - கொண்டவனைப்புகழ்ந்து ... (உப)

வசனம்.

கண்ணனும் அண்ணனும் சாந்திபரிடத்தில் படித்தல்.

விருத்தம்.

இந்தவிதம் உபநயனமானபின்பு
ஏற்றவெகுமதிகர்க்கர்க்கீய்ந்துவிட்டுச்
சந்ததமும்வித்தையில்லா திருக்கக்கூடா
சர்ச்சனர்கள் கூறலுற்றாரா கையாலே
முந்துமந்த அவந்தியிலேவாழுகின்ற
முநியமதிச் சாந்திபரிடத்திற்சென்று
சிந்தையதுகளிகூரக் கலைகள்கற்கச்
சேர்ந்திட்டார் அவரடிக்கீழ்வீழ்ந்திட்டாரோ ... (௨௯)

இராகம் - பைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

கலைகள்கற்றாரே - சாந்திபரிடத்தில் - கண்ணனும் அண்ணனுமா

அநுபல்லவி.

கலைகள்கற்றுக்கொண்டார் - காட்டிப்படித்துச்சொல்ல
நிலைமையாகச்சுருதி - நிகழ்த்திவரும்நல்ல (கலை)

சரணம்.

௧. வேதவேதாங்கமும் - விளங்குங்கலைக்கியானமும்
விண்ணவரும்வியக்க - வியாகரணங்கண்டும்
பேதமிகுந்தனூர் - வேதப்பிரமாணமும்
பேசுங்காந்தருவம் - பேராயுள்வேதமும்
சாந்தீபர் சொல்லுமுன் - சகலமுமுணர்ந்து
சந்தேகந்தீர - சங்கிரமந்தெரிந்து
மாந்திரமுதலிய - மந்திரங்களறிந்து
மார்க்கமும்வீக்கமும் - மதித்துடனிருந்து (கலை)

௨. ஆறுசாஸ்திரங்களும் - அரியபுராணங்களும்
அன்பர்எழுதிவைத்த - ஆயுபநிடதங்களும்
ஆறுவிதங்களான - அரசர்கள்நீதிகளும்
அய்யனும்அண்ணனும் - அமைந்தவிதங்களும்
எங்கெங்குங்கேட்டவர் - எவர்களும்பிரமிக்க
எடுத்தபுத்தகங்களும் - இரண்டொருநாள்முடிக்க
இங்கிப்படிபடிப்பார் - யாரென்றுகளிக்க
இசையாகவேதங்கள் - இருந்தவடஞ்சொலிக்க ... (கலை)

௩. அறுபத்துநாலுகலை - யானசுருதிகளும்
அத்திரபரீட்சையும் — ஆகாயக்கமனமும்
தருமசாத்திரத்தோடு - தர்க்கமீமாம்சமும்
தந்திரமாய்ச்சகுன - சாத்திரங்களோடும்
அலங்காரமாகத்திரு - ஆடுநாடகந்தேடி
அக்கினித்தம்பமுடன் - அய்யன்கருதிநாடி
மலங்கஞ்செய்யுமந்த - மல்லயுத்தத்திலாடி
மன்னுமனுக்குலங்கள் - மதிக்கும்படியேநீடி ... (கலை)

௪. அரியகலைமகளும் - ஆச்சரியமாய்ப்படிய
அண்டியிருந்தவர்கள் - ஆனந்தமாய்மூடிய
உரியபக்தர்யார்க்கும் - உண்மைஞானம்வடிய
ஓதிவைத்தகுருவுக் - குற்றதுயர்இடிய
சரிசரியாகவே — சகலகலைகளெல்லாம்
சந்தோஷமாகவே - சாற்றியஇவையெல்லாம்
அரியபுதல்வரங்கு - அறுபத்துநாலிலெல்லாம்
அமரும்லட்சுமிநாதன் - அனந்தனுமாகஎல்லாம் (கலை)



வசனம்.

சாந்தீபர் குருதட்சணையாகப் பிரபாசதீர்த்தத்தில் மாண்ட புத்திரனைக்கொண்டுவந்து கொடுக்கும்படிக் கேட்குதல்.

விருத்தம்.

கலைகளெல்லாமோ தியுணர்ந்தானபின்னர்
கருத்துடனே குருதட்சணைகொடுக்கவெண்ணி
நிலைகண்டஅய்யரோயுமக்கு வேண்டும்
நிதியெதுவோயது கேட்பீரென்னவந்த
தலைபடுமவ்வேதியனுங் கண்ணன்தன்னை
தாமோதரனிவனே யெனமதித்து
அலைபுரளும்பிரபாசதியமிழ்ந்தமைந்தன்
அருளுவீர்அவனையிங்கே தருகுவீரே ... (௨௯)

இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

தாரும்தாருமே - மைந்தனைக்கொண்டு - வாரும்வாருமே

அநுபல்லவி.

வாருமையாமாயாவதாரா
தாரும்எனதுமைந்தனைநேரா ... ... ... ... (தாரு)

சரணம்.

௧. கடலில்போனபாலன்தன்னை - கண்டழைத்துவாரும்முன்னே
இடரில்லாமற்காரும்என்னை - இஷ்டமகனைத்தாருஞ்சொன்னேன் ()

௨. ஆசையுள்ளபாலனைய்யா - அழைத்துஓடிவாருந்துய்யா
மோசம்வராமற்காருஞ்செய்யா - வேண்டுமகனைத்தாரும்மெய்யா ()

௩. ஏகபுத்திரவிஷயமன்று - எல்லவர்க்குந்தெரியுகண்ணு
வேகமாகவாரும்பன்று - விரும்புமகனைத்தாரும்கண்ணு (தாரு)

௪. அட்சரஞ்சொன்னகுருவுக்கு - ஆரியராமென்மரபுக்கு
தட்சணையாய்சாந்தீபருக்கு - லட்சுமிநாதாநேருக்கு ... (தாரு)

வசனம்.

பிரபாச தீர்த்தத்தில் இறந்து போனபுத்திரனைக் கொண்டுவந்து கொடுக்கும்படிக் கண்ணனைக்கேட்கக், கண்ணன் வருணனிடத்துக்குப் போனபோது வருணன்சொல்லுதல்.

விருத்தம்.

இன்னவிதமாய்த்தட்சணை குருவுங்கேட்க
எழிற்கண்ணனத் தீர்த்தமருகிற்சேர
அன்னதுகண்டங் கிருந்தவருணன்வந்து
அடிபணிந்து கைகட்டியெதிரில்நிற்க
கன்னயமாயிதிலிறந்த புத்திரனையிப்போ
நான்காண என்னிடத்திற் கொணர்வாயென்ன
என்னநான் சொல்வதொரு அரக்கனன்று
இம்சித்தான் அவன் கதையையியம்புவேனே (௨௧௧)

இராகம் - புன்னாகவராளி - அடைதாளம்.

பல்லவி.

இயம்புவேன் கேளும் - பஞ்சஸன் கதையை
இயம்புவேன்கேளும்

அநுபல்லவி.

இயம்புவேன்கேளும் - சுயம்புவேநாளும்
இடம்புரியுடலுக்குள் - இருக்கிறான் கடலுக்குள் (இயம்)

சரணம்.

௧. அவனோடேவாது - செய்வதற்கு - அடியேனோசாது
அண்டும்அவன்தன்னை - அழித்துச் சோதியுமுன்னே
அமரும்புத்திரன்தோண - அவனையும் நீர்காண ... (இயம்)

௨. சங்கரூபமாகி - சதாகாலம் - ஜலத்துக்குள்ளேகி
தங்குவானைக்கண்டு - தாமோதரனேசென்று
தலையுமுடல்பிளக்க - தத்துசெய்தான்விளக்க ... (இயம்)

௩. இப்புவிதன்னில் - இடறுகன் - இவன்செய்ததுன்னில்
மெத்தவுமுண்டேல் - மெய்யா யான்நேரில்
மிகுதியாகத்தோண - மீண்டங்கு நீர்காண ... (இயம்)

௪. அச்சமில்லாமல் - அனைவர்க்கும் - ஆபத்தில்லாமல்
கட்சிசெய்தவரும் - கசடன்தன்னைப்பாரும்
லட்சுமிநாதனே - லாவண்ணியபாதனே ... (இயம்)

வசனம்.

வருணனிவ்வாறு சொல்லப் பஞ்சஸனைக்கொன்று யமபுரத்துக்குக் போய் தான்கைப்பற்றிய பாஞ்ஜசன்னியத்தைப்பூரிக்க யமன் அதுகேட்டுப் கண்ணன்காலில் விழுந்து ஸ்தோத்தரித்தல்.



விருத்தம்.

வருணனிவ்வாறோதக் கடலுக்குள்ளே
வசுதேவமைந்த னுடனங்குபாய்ந்து
தருணமிதுவென்று பஞ்சஸனைக்கிழித்துத்
தான்நாடும் புத்திரனைக்காணுதாலே
வருணமதற்குள் தோன்றும்வடிவமைந்த
வலம்புரியாஞ் சங்கெடுத்துஅண்ணலோடு
அருணனெனயமநகரஞ் சேராராஜன்
அணிந்திட்டான் அதையூதப்பணிந்திட்டானே (௨௧௨)

இராகம் - யமுனகல்யாணி - ஏகதாளம்.

பல்லவி.

அரி அரிமுகுந்தா - ஆ - ஆ - ஆ - ஆ - ஸ்ரீஅரிஅரிமுகுந்தா.

அநுபல்லவி.

௧. அரிமுகுந்தாவாமனா - அன்பர்மகிழும்நேமனா
தெரியஎன்முன்னேவந்த - தே - தே - தே - தேவா ... (அரி)

௨. உனையன்றிதெய்வமுண்டோ - உலகளந்தானைக்கண்டோ
மனைதோறும்வெண்ணெயுண்ட - மா - மா - மா - மாயா (அரி)

௩. முக்குணத்துக்கீர்த்தியே - முதல்வனாமூர்த்தியே
எக்குலமும்வாழ்த்தியே - ஏ - ஏ - ஏ - நாதா ... ... (அரி)

௪. பட்சிவாகனசீலனே - பாருக்கெல்லாமூலனே
லட்சுமிவாழ்மார்பனே - லீ - லீ - லீ - லீலா ... ... (அரி)

வசனம்.

இந்தவிதமாகத்துதித்து நிற்கும்யமதருமனை நோக்கிக் குருபுத்திரனைத் தரச்சொல்லிப் பெற்றுக்கொண்டு குருவிடத்துக்குவந்து கண்ணன் குரு தட்சணையாகப் புத்திரனைக் கொடுத்தவுடன் கண்ணனைச் சாந்திபர்துதித்தல்.

விருத்தம்.

இந்தவிதஞ்சரணடைந்தே அரியைப்போற்றி
யெமதருமன்இங்குற்ற தென்னையென்ன
சந்ததமுமெனக்குரைத்த குருவின்மைந்தன்
சார்ந்திருக்குமவனை யெனக்களிக்கச்சொல்ல
சிந்தைகளிகூரவுடன் கொணர்ந்தபோது
சீக்கிரமாயவனோடேங்கரம்விட்டு
பந்தமாய்குருதட்சனை கொடுக்கஅன்னோன்
பாரொன்றன் பரிந்தெம்மைக் காரொன்றானே (௨௧௩)

இராகம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

ஆனந்தம் ஆனந்தம் ஹரியே எங்களது
அபீஷ்டத்தைத்தீர்த்த துரையே

அநுபல்லவி.

ஆனந்தமாயுலகில் அன்றுசென்றபாலனை
அழைத்துஉயிருடனே - அன்பாய்க்கொடுப்பாருண்டோ (ஆன)

சரணம்.

௧. ஆதியந்தமும்நீரோ - அண்டங்கட்கு
ஆதாரபூதனும்நீரோ
ஜோதியாகவிளங்கும் - சுப்பிரகாசரும்நீரோ
சோதையுடகிரகத்தில் - சூதாய்வளர்ந்தவரோ ... (ஆன

௨. எங்குந்தானாகஇருந்தீர் - இடைத்தெருவில்
ஏழையைப்போலவளர்ந்தீர்
அங்கும்அவர்களுக்கு - ஆபத்துக்கள்விடுத்தீர்
இங்கும்எங்களுக்கு - இஷ்டமகனைகொடுத்தீர் ... (ஆன)

௩. சர்வாந்திரியாமிநீரே - தன்னுக்குள்
சகலமுங்கொண்டசீரே,
அர்ச்சாவதாரமுதல் - அனந்தரூபங்கள்கொண்டீர்
அகண்டபரிபூரணா - அடியேன்முன்னாகநின்றீர் ... (ஆன)

௪. சிருஷ்டிதிதிசம்மாரா - சின்மயரூபா
சேருந்துளவத்தாரா
கிருஷ்ணனாகவேவந்து - தோலீலைகள்செய்த
கேளும்லட்சுமிநாதா - கிடைக்காவருள்பெய்த ... (ஆன)

வசனம்.

ஸ்ரீ கண்ணன் தனக்கோதிவைத்த ஆசாரியரிடத்து விடைபெற்று வடமதுரைசேர்ந்து சேனைத்தலைவரான உத்தவரையழைத்துக் கோகுலஞ்சென்று தம்முடைய இனத்தார் முதலியவர்களுடைய க்ஷேமலாபங்களை விசாரித்துவரும்படி யனுப்புதல்.

விருத்தம்.

ஆனதுகண்டக் குருவும் மகிழ்ந்தானந்த
ஆசியுடன்கூத்தாடித் துதித்துநிற்கத்
தேனமுதகுணமுடையான் விடையும்பெற்றுத்
தேரேறியண்ணனுடன் மதுரைநோக்கிக்



கானகமுங்கருமலையுங் கடந்துமீண்டு
கட்டியங்களோதத் தன்னகரஞ்சேர்ந்து
சேனமெனப்பறந்தோட வுத்தவரைக்கூவிச்
செப்புவார் கோகுலஞ்சேரவொப்புவாரே ... (௨௧௪)

இராகம் - ஆனந்தபைரவி - அடைதாளம்

பல்லவி.

உத்தவாநீரிதைக்கோரும் - கோகுலஞ்சென்று
உண்மையுரைத்திங்கேவாரும்

அநுபல்லவி.

உத்தவரேநீர்கோரும் - ஒளிருங்கோகுலஞ்சேரும்
அத்தனைபேர்களுக்கும் - ஆர்த்திகள்தீர்த்துவாரும் ... (உத்)

சரணம்.

௧. நந்தகோபருடன்சோதை - யவடந்தன்னில்
எந்தவிதமானாளோபேதை
மைந்தர்பிரிந்ததினால் - மனமும்மெலிந்துவாடும்
சிந்தைமகிழும்படி - செப்புவீர்நீரும்ஓடும்

௨. அஞ்சுலட்சங்குடிதன்னில் - அமரும்பெண்கள்
ஆசையாய்ப்பார்க்கநானுன்னில்
வஞ்சித்துப்போனானென்று - மயங்குவாரங்கேநின்று
நெஞ்சிற்கவலைதீர்க்க - நீரும்போய்வாரும்இன்று ... (உத்)

௩. காமிகள்மனைதனையுற்று - நீரும்அவாள்
காதோடேகாதுசள்வைத்து
நேமியங்கையனைச்சேர்ந்து - நேசித்திருந்ததைப்பாடி
பூமியிலாகுங்காரியம் - பூர்த்திசெய்துவருவேன்நாடி ... (உத்)

௪. கோக்களெல்லாஞ்சேர்த்தடுத்து - காடுதன்னில்
குன்றையெடுத்துமழைதடுத்து
தாக்கவந்தசங்கரூளனை - தலையுடைத்தகதையைச்சொல்லும்
நோக்கலட்சுமிநாதனார்க்கு - நோக்கிவருவேனென்னச்சொல்லும் ()

வசனம்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஆக்கியாபித்தபடி உத்தவர்கோகுலஞ் சேர்ந்த போது நந்தகோபர் கண்ணனைக்குறித்து விசாரித்தல்.

விருத்தம்.

கண்ணனுடையாக்கினையைச் சிரமேற்கொண்டு
கருத்தோடிரதமேறிப் பிரயாணமாகி
விண்ணவரும் வியக்குமந்தக் கோகுலத்தில்
விரிகதிரான் விழுவேளைதன்னில்சேர்ந்த
வண்ணமுருவாய்ந்த வுத்தவனைநந்தன்
வாமனன்தன்தூதனெனவுளநினைந்து
கண்ணகலாக்கருமுகினேர்மாயன் காதை
காட்டென்றான் செவிக்கமுதாவூட்டென்றானே (௨௧௫)

இராகம் - முகாரி - ஆதிதாளம்.

பல்லவி.

உத்தவாவும்மைக்கண்டு - புத்திரன்தூதனென்று
உள்ளங்குளிர்ந்தேனே

அநுபல்லவி.

உத்தவாஎந்தன்மீதில் - மெத்தக்கிருபைகள்செய்ய
இத்தனைதூரம்வந்தீர் - யாங்களும்இன்றுஉய்ய ... (உத்)

சரணம்.

௧. வசுதேவர்தேவகி - விலங்கைத்தறித்தாரா
மகுடம்தரித்தவுக்ர - சேனரும்பரித்தாரா
அசுரசம்மாரன் - அரும்புகழ்விரித்தாரா
அன்னைதந்தையரிஷ்டம் - அடையக்குறித்தாரா ... (உத்)

௨. தந்தையர்எங்களை - தாமோதரனும்எண்ண
தாதியர்எல்லோரும் - தழைத்துஅங்கேநண்ண
மந்தைக்குமுன்போல - மாடோட்டக்கண்ண
மந்தகாசலோலன் - மகிழ்ந்துநவநீதம்உண்ண ... (உத்)

௩. இந்திரனால்நேர்ந்த - இடையூறதனைப்பார்த்து
எந்தவிரலிலே - எடுத்துஎம்மைக்காத்து
விந்தையாயவரோடி - விளையாடிக்கைகோர்த்து
விளங்கும்அவனைக்கண்டு - வினைகளெல்லாந்தீர்த்து ... (உத்)

௪. அவன்திரிந்தஇடத்தில் - அய்யன்அடியைக்கண்டு
அந்தந்தங்கண்டங்கே - அமரும்மனதுகொண்டு
குவலயாபீடமென்னுங் - குன்றைமுறித்ததுண்டு
கோபாலசிமானை - கோரியேநாங்கள்சண்டு ... (உத்)



௫. பதினாயிரங்கரி - பலமுள்ளகஞ்சனை
பார்தனில்தள்ளிய - பதைமல்லவஞ்சனை
சதிசெய்ததீர - சத்குணநெஞ்சனை
சார்ந்துநாங்கள்வாழ - சமையமெதுமிஞ்சின ... (உத்)

௬. கர்க்காசாரியர் - கண்டுஉரைக்கப்பண்டு
கதையின்படியேயவர் - கர்த்தரென்பதுகண்டு
நிற்கநாங்களிங்கு - நேர்ந்துஅவன்தன்தொண்டு
நித்தமுஞ்செய்திருக்க - நேரலையெனவிண்டு ... (உத்)

௭. வளர்த்திருந்தவளிதோ - வருந்துகிறாளென்று
வந்துஇருக்கும்நீர் - வாடுவதைப்பாரென்று
இளைத்தவர்முகம்பாரா - எங்கள்பாலர்க்கின்று
இரங்கிரோம்நாங்களென்ன - இயம்புவீர்நீர்சென்று ... (உத்)

௮. பட்சமாய்எங்கள்மேலே - பரந்தாமனையடைந்து
பாரில்உம்மைப்பிரிய - பதைக்கிறோரேயிடைந்து
லட்சுமிநாதனே - லாவண்ணியமாய்நடந்து
லலிதமாய்சேவைதர - லகுவாய்வணங்கடந்து ... (உத்)

வசனம்.

நந்தரும் சோதையும் இவ்வாறுபுலம்பஉத்தவர் அவர்களுக்கு தேறுதல் சொல்லுதல்.

விருத்தம்.

அந்தநந்தர் சோதையுடன் அழுதுநிற்க
ஆவினத்தோடணிவளையார்தேடிவாட
சிந்தையதுமிகத் தளர்ந்துத்தவருமங்கே
சீராகச்செகதீசன் சேதியெல்லாம்
மந்திரமாயவர்க்குரைக்கக்கருணைகொண்டு
மார்க்கமாய்வேண்டிதனக்குரைத்தவாறு
மந்தைகுடியோடிங்குவளர்ந்த மாயன்
மாலென்றான்விசனமறக் கேளென்றானே ... (௨௧௬)

இராகம் - சாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

ஏன்வருந்துகிறீர் அய்யா - அய்யன்
தான்வந்துறுவர்பார்மெய்யா

அநுபல்லவி.

ஏன்வருந்துகிறீர் - எங்களுடையகண்ணன்
இருந்தார்விளையாடி - குருந்துமேலேயேறி - திருந்தமாதரோடி (ஏன்)

சரணம்.

க. தேவதேவர்க்களாலும் - தெரிசிக்கக்கூடாத
தேவன்உங்களிடத்தில் - தெளிவாய்வளர்ந்திருக்க
மூவர்க்குங்கிடையாத - மோதும்அதிசயங்கள்
முன்னைநீங்கள்கண்டும் - முறையிடுவதேனோ
அண்டசராசரங்கள் - அனைத்தையும்வயிற்றுக்குள்
அடக்கியபுண்ணியன் - அகண்டபரிபூரணம்
அவனுக்குநிகரேது - அவனுக்கவனேசரி
அவனைக்கண்டபின்னும் - அண்டுமோதுன்பங்கள்
ஆனதாலேநீங்கள் - பானமற்றுஇங்கே - கானமாகநின்று (என்)

உ. திருவினக்குள்ளாக - தேடியேவைத்திருக்க
நீத்தெடப்போவாரா - தேயத்தில்கண்டீரா
திருமாலும்பிள்ளையாய் - தெரியக்கோகுலத்திலே
திருந்துவிளையாடத் - தேடினீர்புண்ணியம்
அய்யன்வடமதுரை - யடைந்திருக்கிறானென்று
அந்தமதியைவிட்டு - அடுத்திருக்கிறானென்று
அன்புபாராட்டியே - அனுதினம்துதிநின்று
அவனுடைலீலைகள் - யாவையுமுடித்தின்று
அடுக்கானஉங்கட்கு - முடுக்கானவரங்களை - கொடுக்கிறதைமறந்து (என்)

௩. அரியும்உங்களிடத்தில் - அமர்ந்திருப்பவனுக்கு
அத்தாட்சிவேறென்ன - ஆவுந்தருக்களும்
பரியும்பக்கியும் - பலபலஜெந்துவும்
பாருங்களூரில் - படிந்திருக்குஞ்செழிப்பை
கரியைக்கார்த்தநாதன் - காலத்தளவைநாடி
கைகொண்டுதான்வந்த - காரியத்தைத்தேடி
கடுகியங்கேமுடித்து - கண்ணனிங்கேவாடி
கலங்குமாயர்பாடிக்கு - கருத்தாகவேயோடி
வருவாரிவடத்து - உறுவாரைக்கண்டு - தருவர்ஆகையாலே (என்)

௪. பட்சமாகலட்சுமி - பர்த்தாஇவனேயென்று
பாடியோர்எல்லாரும் - பாடித்துதிக்கநின்று
அட்சயக்கின்னர - கந்தருவருங்கண்டு
ஆடிக்களித்திட - அரம்பையர்போற்றிட
அமையுந்தேவனைக்காண - அடுத்ததுநாளென்ன
அதிமதிகந்தரோ - அகற்றுந்துக்கமென்ன
அருந்ததியும்புகழும் - அசோதையெனுமன்ன
ஆகத்தலைபடும் - அனந்தனைக்காணுந்துன்ன
ஆறுஞ்சிலதினம் - பாரும்புகழொடு - கோரும்மகன்தனை (என்)



வசனம்.

உத்தவர்நந்கோபர் முதலியவர்கள் கண்ணன்பிரிவால் உண்டாகிய விசனத்தையாற்றிக் கோபிகளுக்குநியமனப் படிசுவாமியின் சேதிகளைக் கூறவருபவரைக்கண்டபெண்களேசுதல்.

விருத்தம்.

உத்தவரும்ஒருவாறு தேறச்செய்து
உகந்தவரோடன்றிரவுதள்ளிமீண்டு
சுத்தமதிக்கொடியிடையார்வாழுமந்த
சொகுசானகோகுலத்திலருணனோடு
நித்தியமாய்ச்செய்கடனைமுடித்துவிட்டு
நியமனத்தால்ரதமேறிவருபவரைக்கண்ட
பித்தகுணப்பெண்களெல்லாம்அக்குரூரனென்றே
பேசினர் அவன்குணத்தையேசினரோ ... (௨௧௭)

இராகம் - தன்னியாசி - சாப்புதாளம்.

பல்லவி.

வருகிறான் அக்குரூரன் - மறுபடியும்
வருகிறான் அக்குரூரன்

அநுபல்லவி.

வருகிறான்அக்குரூரன் - வந்துகண்ணனையன்று
பெருகிமதுரைகொண்டு - பேர்ந்தவன்இதோ இன்று (வரு)

சரணம்.

க. அங்கேயிறந்தகஞ்சன் - அவனுக்குத்தரகிரியை
அதனைச்செய்யநமது - அருந்தசையைக்கொண்டு
இங்கேயிறந்தவர்கள் - எல்லாரையும்சேர்த்து
எடுத்துக்கொண்டுபோக - இருக்கும்பிரேதங்கண்டு ... (வரு)

உ. சற்றும்அறிவில்லாமல் - சக்ரதரனைக்கொண்டு
சாகக்கஞ்சனைக்கொன்று - சந்தோஷத்தைக்கெடுத்து
முற்றும்நமக்குவஞ்ச - மோசஞ்செய்யநினைத்து
மூடன்அக்குரூரனிங்கு - முன்னேநிற்கஅடுத்து ... (வரு)

௩. கண்ணன்பேரைச்சொல்லி - கன்னிகளைச்சேர்த்து
கடுகிமதுரைபோக - கனிவாயுரைத்துமட்டி
எண்ணங்கொண்டுமுந்தி - இரதமீதிலேறி
ஏகுங்கருத்திநோடு - இருக்கிறான்நம்மைக்கூட்டி ... (வரு)

ச. கட்சிமிகவுஞ்செய்து - காரியங்கள்தெரிந்து
காரணம்என்னமோ - கானஞ்செய்துநடித்த
லட்சுமிநாரணன்தன்னை - லாவண்ணியமாயழைத்து
லலிதமாய்நம்மைஎல்லாம் - லகுவாகவேபிரித்த ... (வரு)

வசனம்.

அக்குரூரனென்று கேலிசெய்தபெண்கள் அருகுற்று இரதம்விட்டிறங்கிய உத்தவரைக்கண்டு ஸ்ரீகண்ணபிரான் அனுப்பியதூதனாக இருக்க வேண்டுமெனப்புகழ்தல்.

விருத்தம்.

மூலமதுதெரியாமல்கேலிசெய்து
மொய்குழலார்எல்லாருமொருங்குசேர்ந்து
ஆலமெனவருபவன் அக்குரூரனென்றே
அவமதித்துத்தூஷித்தேயிருக்கும்போது
சீலமதுபெருகுமுத்தவருமாங்கே
சிறப்பாகத்தேரைவிட்டிறங்கினானை
கோலமிகுபெண்கள்மனதோங்கியன்று
கூடினார்சங்கையுற்றுப்பாடினாரே ... (உகஅ)

இராகம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

என்னென்றுசொல்லுவோம் - தோழி
இவனுடைரூபத்தைப்பாரீர்

அநுபல்லவி.

என்னென்றுசொல்லுவோம் - இந்திரஜாலனைப்போல்
வண்ணங்கொண்டே - யாரோ - வந்திருக்கிறாரடி (என்)

சரணம்.

க. அங்கத்தில்பீதகம்தரித்து - இங்கே - அரியைப்போல்விளங்கிறார்ஜொ[லித்து
பெண்களெல்லாருஞ்சென்று - பேசியவரைக்கண்டு
பெருமாள்வாராராவென்று - பேணிக்கேட்போம்வாடி ... (என்)
உ. மாயாவதாரனைப்போல - இங்கே - வந்திருக்கிறாரதிகாலை
ஞாயமாகச்சென்று - நாடியவரைக்கண்டு
காதன்வாராராவென்று - நயந்துகேட்போம்வாடி ... (என்)
ந. எங்கள்கண்ணனாகநின்று - இங்கே - இருக்கிறாரேயிதோஇன்று
மங்கையெல்லோருஞ்சென்று - மகிழ்ந்துஅவரைக்கண்டு
மாலும்வாராராவென்று - வணங்கிக்கேட்போம்வாடி ... (என்)



ச. பங்கயநயனனையொத்து - இங்கே - பார்த்திருக்கிறார்நம்மைமுற்றும்
அங்கேயவரைத்தேடி - அத்தனைபேருமோடி
அருள்லட்சுமிநாதன்கூடி - அமர்ந்ததைக்கேட்போம்வாடி (என்)

வசனம்.

இந்தவிதமாகக் கோபிகள் உரைத்து உத்தவரைச்சூழ்ந்து ஸ்ரீகிருஷ்ணபகவான் க்ஷேமாதிகளை-தனிமையாயவரையழைத்துப் போய்விசாரித்து, வண்டாக வந்தவரைநினைத்து - கண்ணன் பிரிவால்தங்களுக்குண்டாகியதுயரத்தை - யந்தபரந்தாமன் செவிகளில்சாற்றும்படிச்சொல்லுதல்.

விருத்தம்.

இந்தவிதமாகக் கோபிகளுஞ்சூழ்ந்து
ஏகாந்தமாகவழைத்தெதிரில்நின்று
அந்தநந்தர்சோதையுடை க்ஷேமங்கோரி
அறிந்துவரவும்மைவிட்டாரல்லகண்டாய்
சிந்தைகளித்தெங்களுடை சேதிதன்னை
செவிகேட்கமுயன்றவராய்த்தோன்றவில்லை
வந்துமதுஉண்டுலவும் வண்டேலோக
வாழ்வென்றார்காரியமுடிவிற்றாழ்வெனுரே ... (உகக)

இராகம் - புன்னாகவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

இந்தஸ்திதிகாணவோவந்தாய் - வண்டேகேளும்
இதற்கோநீயிங்கேயமர்ந்தாய்

அநுபல்லவி.

சொந்தஙங்கள்உடலில் - சோருதேஉயிர்கள்துள்ள
வந்துஇந்தநிலையை - வனதாமன்செவியிற்சொல்ல (இந்த)

சரணம்.

க. மதுமலருள்ளமட்டும் - தும்பிகளும்
மகிழ்வாயிருக்குநாட்டும் - அதுவொழிந்தால்
பதுமம்வேறேநாடும் - பரிவாகக்கூடி
பறந்துஅங்கேஓடும் - பான்மையைப்போல்
பரந்தாமன்எங்களைவிட்டு - பட்டணம்போய்ச்சேர்ந்தான்
பைந்தொடிமாருடன் - பாடிஆடநேர்ந்தான் ... (இந்த)
உ. இராமாவதாரந்தன்னில் - எழில்கண்டு
இயந்தஅரக்கிமுன்னில் - இரக்கமற்று
தாரதலத்தில்உன்னில் - தயைவிட்டு

தம்பிமூக்கரிந்தானென்னில் - அவன்விட்ட
தும்பிநீயாகையாலே - தூரப்போவாய்துட்ட
நம்பியஎங்களண்டை - நாடாதேயிருஎட்ட ... (இந்த)

௩. மதுரைப்பட்டணப்பெண்ணும் - மலர்களில்
மதுவைமிகவும்உண்ணும் - எங்கள்
சதுரன்பிரிவைநண்ணும் - நாங்கள்புட்பம்
சாத்தோமென்பதையெண்ணும் - விரைவாயந்த
தளிர்குழல்சூடுவார் - தங்களைத்தேடியே
தாமோதரனது - லீலையைப்பாடியே ... ... (இந்த)

௪. தங்கள்கண்ணுக்கருகி - லுத்தவர்நிற்க
தாங்கள்மறந்துருகி - கண்ணனோடு
திங்கள்ஒளியிற்பெருகி - வனந்தன்னில்
திரிந்தாடியதைக்கருதி - வெளிவிட்டு
தேகாபிமானமற்று - தேவதேவனையுற்றும்
தேடியேமனம்வாடும் - திருக்கூத்தையாமுற்றும் ... (இந்த)

௫. பின்னும்ஒருமாது - வெகுதூரம்
பேர்ந்துவந்ததையோது - கண்ணனிடம்
இன்னுங்கொண்டுதோது - செய்யஎண்ணி
இருக்கிறாயேயிப்போது - இதற்காக
நல்லமனதோடிங்கே - நாடிவையதுகொண்டு
நாங்களெல்லோரும்வாழ்த்த - ஞானமங்களம்உண்டு (இந்த)

௬. தட்சணம்அவடஞ்சென்று - எங்கள்மேல்
பட்சம்வைத்தங்குநின்று - செவிசாற்றி
லட்சுமிநாதனையின்று - லலிதஞ்செய்து
லகுவாய்சேர்ப்பாய்கொண்டு - இப்படிசெய்தால்
மெத்தப்புண்ணியமுண்டு - மேவிமதுரைபோக
எத்திஎங்கள்துரையை - இழுத்துவருவாயாக ... (இந்த)

வசனம்.

கோபிகாமணிகள் இவ்வாறுகூற அதற்குஉத்தவர்கண்ணன் நியமனப்படி அவர்களுக்குவிடைதருதல்.

விருத்தம்.

வண்டாகப் பெண்களெல்லா மிவ்வாறோத
வந்திருந்த வுத்தவருஞ் செவியிற்கேட்டுக்
கண்டவர்கள் கருத்துக்கு மகிழ்ச்சிகொண்டு
கண்ணனுங்களைப்பிரிந்தானென்னும்வார்த்தை



மண்டலத்தில்நீங்களெந்த விடத்திற்கண்டீர்
மனிதர்நிழல்உடலைவிட்டுத் தூரமேக
அண்டமது அன்றளந்தான் உங்களோடே
அறையென்றான்இருப்பனெனவுரையென்றானே (௩ா)

இராகம் - கல்லியாணி - ஆதிதாளம்.

பல்லவி.

கோபிகளைக்கண்டார் - உத்தவர் - குருந்தேறிய
கோலநாதனைவிண்டார் - உத்தவர்

அநுபல்லவி.

ஆரியர்காணாத - அந்ததடத்திலே
அழகியமதியாரை - மர்தைஇடத்திலே ... (கோ)

சரணம்.

௧. சாமிஅவன் சாமிஅவன் - சத்தியமே - இங்கே
சதாகாலமிருப்பது - நித்தியமே
சேவையுஞ்செய்குவீர் - தத்தியமே - தேவன்
ஜெகத்துக்கெல்லாமிவன் - மத்தியமே

பாயும்யமுனைசூழ்ந்த - பாடிகளுங்குதிக்கும்
பரந்தாமன்பக்தியால் - பரலோகமும்விதிக்கும்
தோயுங்குறிகண்டேன் - துயரேதுஇப்பதிக்கும்
துய்யன்உங்களிடத்தில் - துலங்கிறோமதிக்கும் (கோ)

௨. பெருமான்உங்களைவிட்டுப் - பிரியேன் - என்று
பேசிவரச்சொன்னார் - உரியேன்
தருவார்சதாகாலம் - தரியேன் - எங்கும்
தங்கியிருப்பதாக - அறியேன்

என்றுஎண்ணச்சொல்லி - எழிலிடையார்க்கோதி
எவர்கள்கண்டாலுமுந்தி - எத்தும்படிபோதி
அன்றுபோலஇன்று - அமர்ந்திருப்பதாய்க்காதி
லகத்தியமுளனென்று - அறியச்செய்தித்தேதி (கோ)

௩. பற்பலவிதமாய்ப்படித்து - பாடியில்
பஞ்சாயுதத்தான் - அடுத்து
குலமானகோபியரை - விடுத்து - இருக்கக்
கூடாதென்பதை - யெடுத்து

கோரும்அப்பெண்களுக்கு - குணம்வரும்படியூட்டி
கோகுலநாதனது - குதூகலத்தைக்காட்டி

பாரும்சிலதினங்கள் - பட்சம்அவர்மேல்நாட்டி
பரிந்துமனதுவைத்துப் - பாபகர்மத்தையோட்டி (கோ)

௪. இதயம்இதயமவன் - என்று - எப்போதும்
ஏத்திப்பணிந்தவராய் - நின்று
உதயமவன்அருளை - கொண்டு - ஒருமிக்க
உறுதிகளுஞ்செய்தால் - நன்று

பெருகியுங்கள்மனதில் - பேசியிருக்கநல்ல
பெருமாள்கிருபையுற்று - பிறக்கும்விவேகம்வெல்ல
திருலட்சுமிநாதனோடி - தேடிவருவார்சொல்ல
திங்கள்பழிக்குமேலாம் - திவ்யவதனமுள்ள ... (கோ)

வசனம்.

உத்தவர் உரையைக்கேட்ட கோபிகாரத்தினங்கள் கண்ணனது க்ஷேமாதிசயங்களை விசாரித்துத்தாங்கள் அந்தப்பகவானோடு செய்த லீலாவினோதங்களையுஞ்சொல்லுதல்.

விருத்தம்.

இன்னவாறுத்தவர் கூறக்கேட்டபெண்கள்
இனியதிருக்கூத்தாடி வாழ்த்திநாதன்
தன்னடியைத்தங்கள் சீர்மனதிருத்தி
தானவர்வானவர் வணங்குந்தகைமையாகக்
கன்னலெனுங் குணமுடையகணவானை
காயாம்பூவண்ணனது க்ஷேமங்கோரிப்
பன்னகன்தன் தம்பிமுன்னால்எங்களோடு
பாடினார் சேதிசொல்விநாடினாரே ... (௩௱௧)

இராகம் - பந்துவராளி - அடைதாளம்.

கண்ணிகள்.

௧. உத்தவரேநல்வரவாய் வந்திரா
பத்தர்பரிபாலன்பண்பாயுற்றாரா
சித்தந்தன்னிலெங்களைநினைத்துக்கொள்வாரா
சீக்கிரத்திலேகோகுலத்தைப்பார்ப்பாரா ... ... *

௨. கதறஎங்களைக்காமவோடையில்
கண்ணன்தள்ளியேகடினமாகவே
அதரபானம் அளிக்காமலெங்களை
அழுங்கவிட்டிங்கேயகன்றுபோனாரே ... ...

௩. மங்கையர்களுங்கூடியமுனையில்
மார்கழிநீராடிமகிழும்வேளையில்



எங்களாடையையெடுத்துஓடியே
ஏற்றிப்புன்னைமேல்இருந்ததைச்சொல்வாரா ... ... *

௪. வசந்தருதுதன்னில்மாயன்குழல்கேட்டு
மன்மதன்மலர்வாளியால்நொந்து
பசுமந்தைதன்னில்எங்கள்பதிகளைவிட்டு,
பதறிவந்ததைப்பரிந்துஉரைப்பாரா ... ... *

௫. மந்தகாசமாய்மருவிக்கூடியே
மகிழ்ந்துகிரீடித்து இருக்கும்வேளையில்
அந்தரத்தானமாய்அவனும்ஓடியே
அலையவிட்டதையறிந்துசொல்வாரா ... ... *

௬. கூடிகோபிகள்மனதுவாடியே
கோபிகாகீதைகோரிப்பாடியே
தேடியெல்லோரும் இருக்கும்வேளையில்
திரிந்துவந்ததைத்தெரிந்துசொல்வாரா ... ... *

௭. சந்திரமண்டலம்போலக்கூடிய
தையல்கட்கெல்லாம்நாதனாகிய
விந்தையாகவேவிரும்பிச்சேர்ந்திட்ட
வேடிக்கைதன்னைவிளங்கச்சொல்வாரா ... ... *

௮. மடிமேல்முடிவைத்துபடுக்கும்வேளையில்
மருதம்ஏறியமாயக்கண்ணனும்
அடியார்களுடைவார்த்தையேதேனும்
அந்தரங்கமாய்உமக்குச்சொன்னாரா ... ... *

௯. எப்போதாகிலும்ஒருகாலந்தன்னிலே
ஏகாந்தமாய்இருக்கும்வேளையில்
தப்பாமல்எங்களோடுகூடியே
சரசஞ்செய்ததைச்சாற்றியிருப்பாரா ... ... *

௰. ஆனாயாகிலும்அடுத்துச்சொல்வமா
ஆத்மநாயகன்அமர்ந்தசேதியை
நேராகஎங்கள்லட்சுமிநாதற்கு
நேசமுள்ளஅந்தரங்கத்தோழரே ... ... *

வசனம்.

கண்ணன்தங்களோடு கோகுலத்தில் செய்த லீலாவிபவம் முற்றும் அவருக்குச்சொல்லி உத்தவரே அதிசீக்கிரத்தில் அந்தமாயாவினோதன் எங்களையிவ்விடம் வந்துபாராவிட்டால் எங்கள் உயிர்நீங்கியபிரேதத்தைத்தான் காணலாமெனச்சொல்லுமென்றது.

விருத்தம்.

அந்தரங்கத்தோழரென்றே யறிந்துபெண்கள்
அடுத்தவரோடய்யன் திருக்கூத்துமுற்றும்
விந்தைவிந்தையாய்நடந்த விநோதக்கோஷ்டி
விளம்பியேயெங்களது இருப்பைப்பாரும்
நந்தர்மகன்அதிதுரையாய் இவடந்தன்னில்
நடந்துவந்துபோகுமுயிர் காராவிட்டால்
சொந்தமுள்ளநாங்களெல்லா முடிவமென்றே
சொல்லென்றார்எம்முறையை விள்ளென்றாரே (௫௱௨)

இராகம் - அடாணா - ஏகதாளம்.

பல்லவி.

வரச்சொல்லுவீரய்யா - கிருபைசெய்து - இங்கே
வரச்சொல்லுவீரய்யா

சரணம்.

௧. வரச்சொல்லுவீரய்யா - மாதவனைமெய்யா
மங்களமாக - நாங்கள் இங்கேயுய்ய ... ... (வரச்)

௨. உயிர்தரியாதென்று - உரையும்அவர்க்குச்சென்று
ஓடிவாராவிட்டால் - ஒழியும்இன்று ... ... (வரச்)

௩. அன்னம்அருந்தோமென்ன - அவர்செவியில்பன்ன
முன்னம்முனைந்துநீர் - மொழியும்துன்ன ... (வரச்)

௪. மதுமலர்முடியாது - மாயனைக்காணாது
மங்கையரெல்லாரும் - மடிவாரென்றோதி ... (வரச்)

௫. உறங்கோமிரவுதன்னில் - உம்மைநினைந்துமுன்னில்
கறங்குபோலேயலைந்து - கதறுகிறார்மண்ணில் ... (வரச்)

௬. எங்கள்இருப்பைக்கண்டு - ஏற்றும்அவர்க்குக்கொண்டு
மங்கைலட்சுமிநாதற்குச் - சொல்லும்புண்ணியமுண்டு (வரச்)

வசனம்.

இவ்வாறுகூறியகோகுலவாசிகளின் உரையைக்கேட்ட உத்தவர்சிலநாள்அங்கிருந்து அவர்களுக்குத்தேறுதல் சொல்லிமதுரைக்குவந்து கண்ணபிரானுக்குப்பாடியில் தான்கண்ணுற்ற க்ஷேமாதிசயங்களைக் கூறுதல்.

விருத்தம்.

கருத்தாகப்பெண்களெல்லாங் கண்ணன்தன்னை
கரும்பெனவேபேசியவர் சலிப்பில்லாமல்



திருத்தமாயுயிர்போகு மென்றுரைக்கத்
தேறவேவழிபாடுசெய்தேஹதி
விருத்தமதிக்கோகுலத்தில் சிறிதுகாலம்
வீற்றிருந்துவிடைபெற்று விருந்துமுண்டு
பருத்ததிருத்தோளுடையபரந்தாமனண்டைப்
படித்திட்டார் சேதிசொல்ல அடுத்திட்டாரோ (௫௱௩)

இராகம் - கல்யாணி - சாப்புதாளம்.

பல்லவி.

கிருஷ்ணாகேளும் - கிருஷ்ணாகேளும் - இஷ்டமாயெந்தனையாளும்
கிஷ்ணாகேளும் - கிருஷ்ணாகேளும்

அநுபல்லவி.

கிஷ்டதூதன்என்று அழைத்தார்
இஷ்டமாயென்னைத்தழைத்தார் ... ... (கிருஷ்)

சரணம்.

௧. தேவதேவாதிவ்யநாமா - திரு - தேவதேவாதிவ்யநாமா
தருமமுக்குண - ஒருவர்சரியல - திருமலமய - அருமபதமுடை
திரு - தேவதேவாதிவ்யநாமா
தங்கும்பதி - எங்கும்பதிநினை - திங்கட்பணி - தங்கட்கணியுடை
திரு - தேவதேவாதிவ்யநாமா
பாவநாசாநித்தியசோமா
தாவவேண்டும்பற்றிசீமா
தருவாய்சேவைநீயும்பூமா ... ... (கிருஷ்)

௨. கோலக்கோகுலவாசா - குண - கோலக்கோகுலவாசா
புல்லெனஒரு - கல்லெனசிறு - நில்லெனவரு - இல்லெனவமர்
குண - கோலக்கோகுலவாசா
பொங்கும்மதி - யெங்கும்அதிசய - துங்கம்வரு - தங்கும்படிமலர்
குண - கோலக்கோகுலவாசா
நீலமேகப்பிரகாசா
பாலப்பாடிசேரும்ஈசா
சீலத்தோர்தேடும்போஜா ... ... (கிருஷ்)

௩. சர்வசர்வகால்ந்தேடி - சாமி - சர்வசர்வகாலந்தேடி
ஜகமதிலுண - அகமதிநண - இகமதிலெணு - மிகமதியென
சாமி - சர்வசர்வகாலந்தேடி

அலையும்படி - நிலையும்படிசெய - கொலையும்படி - தலையும்வினையது
சாமி - சர்வசர்வகாலந்தேடி
சாகிறார்களங்கேபாடி
கர்வமென்பதுமேயோடி
கானஞ்செய்கின்றார்ஆடி ... ... (கிருஷ்)

௪. அந்தஅந்தஇடத்திலய்யா - அன்பர் - அந்தஅந்தஇடத்திலய்யா
அடியனேக - விடியுமாக - முடியுநீரும் - படியமேலே
அன்பர் - அந்தஅந்தஇடத்திலய்யா [மவர்
அருள்தங்கிய-இருள்குங்கியபெரு- பொருள்பற்றிய-மருள்கொண்டிடு
அன்பர் - அந்தஅந்தஇடத்திலய்யா
சிந்தைவந்தசெல்வ மெய்யா
எந்தைலட்சுமியேந்துங்கையா
வந்துகந்துகாருந்துய்யா ... ... (கிருஷ்)

வசனம்.

கண்ணன்முன் உரைத்தபடிஉத்தவரோடு கூனிவீட்டுக்குப்போகுதல்.

விருத்தம்.

உத்தவர்பாடியுற்ற சேதிமுற்றும்
உரைத்துப்பின்திருக்கண்ணனெதிரில்நின்று
வித்தகனேவிமலனே விண்ணும்மண்ணும்
வேண்டுமெலர்ப்பாதனேவியப்பையிங்கே
நத்துமெனக்கோர்நாவேபலவோவில்லை
நானவர்கள்பக்திதனைச்சொல்கவென்னச்
சித்தமதுகளிகூர்ந்துஸ்ரீதரனுமப்போ
சிந்தித்தான் கூனியிடம்வந்துற்றனே ... (௧௱௪)

இராகம் - கேதாரகௌளம் - ஆதிதாளம்.

பல்லவி.

வந்தான்வந்தான் - கண்ணனும் - வந்தான்வந்தான்

அநுபல்லவி.

வந்தான்வந்தான்மாயாவதாரன் - வருந்துமடியவர்க்கருளுமுபகாரன்
சுந்தரமாகசோதையுடைபாலன் சொகுசாய்குபசைவீடுதேடிசீலன் ()

சரணம்.

௧. பூசக்கொடுத்தகூனியைநினைந்து - புனிதனும் அங்குபுகழநாடியே
வாசனைவீசும்மலர்களணிந்து - வாசுதேவனும்வருகஓடியே
ஆசையாயரவிந்தலோசனன் - ஆனந்தங்கொடுக்கஅவளைத்தேடியே
தாசதாசரதியின்கூட்டுக்கு - தாமோதரனும்மகிழ்ந்துவீட்டுக்கு (வந்)



௨. அண்டபிண்டத்தையுண்டுஉமிழ்ந்தவன் - ஆயர்மனைகளில்வந்துவளர்
[ந்தவன்
கொண்டல்வண்ணன்கோபியரையணைந்தவன் - குன்றைக்குடையாக
[எடுத்துச்சுமந்தவன்
தண்டைச்சிலம்புகள்தாளில்அணிந்தவன்-தரணியைமுன்னம்தாவியள
[ந்தவன்
மண்டலந்தன்னில் குபசைபாட்டுக்கு - மகிழ்ந்துகேட்கவே அவள்தன்
வீட்டுக்கு (வந்தா)

௩. கோடிசூரியன்கூடியுதித்தாற்போல்-கோமளமென்னும்மேனிதன்ன
[வே
ஆடிபூஷணம்அசைந்துமேனியில்-அலங்காரமாகக்காந்திமின்னவே
நாடிப்பெண்களுங்கண்டுநத்தவே-நந்தர்மகனையெல்லோரும்பன்னவே
பாடிச்சனங்களும்பரிந்துதேட்டுக்கு-பங்கயத்தாளன் கூனிவீட்டுக்கு ()

௪. மாமனைக்கொன்றுவருகிறேனென்று-மாயன்சொல்லியபடியேயன்று
எமனூருக்குஏற்றிவிட்டபின்-இதங்கியிவளுக்குஅருளும்படியின்று
க்ஷேமங்கோரியதாசியிட்த்துக்கு-ஸ்ரீதரனும்இங்கேவருகிறானென்று
பூமலர்களுந்தூவமேட்டிலே-பூலட்சுமிநாதன்குபசைவீட்டிலே. ()

வசனம்.

கூனி அலங்காரஞ்செய்துகொண்டு கண்ணனிடத்துக்கு வருதல்.

விருத்தம்.

வந்துநின்ற மாயவனை மாதுங்கண்டு
மகிழ்ந்தெதிரில் மாசகல எழுந்திருந்து
அந்தமுள்ள அரம்பைபோல் செய்தளந்தன்
அய்யனே யென்றவரை வலமும்வந்து
சொந்தமா யுடன்வருமுத் தவர்க்குமப்போ
சுவர்ணபீ டங்கொடுத்துப் பூசைசெய்து
விந்தைமிகப் பெருகப்பூ ஷணந்தரிக்க
வேண்டினாள் தாதிகளைத் தூண்டினளே ... (௧௱௫)

இராகம் - பைரவி - சாபுதாளம்.

பல்லவி.

அலங்காரங்கள்செய்துவந்தாள்
அழகுடையகுபசை - கேளி

அநுபல்லவி.

இலகவேபணிகள்சிரா - இந்திரஜாலன்நேரா ... (அலங்)

சரணம்.

௧. தண்டைச்சிலம்புகள்தாளில் - வண்டயங்கள்அசைய
கண்டசரத்துடனேபணி
கரந்து - பறந்து - துறந்து - இரந்து - மறந்து ... (அலங்)

௨. அங்கங்களுக்தெரிய - அழகுசல்லாவுடுத்து
பங்கயமுகத்திலகம்
தீட்டி - கூட்டி - நாட்டி - ஆட்டி - காட்டி ... ... (அலங்)

௩. கொங்கைக்குடங்குலுங்க - தங்கரவுக்கையிட்டு
மங்கைநயனங்களாலே
மயக்கி - இயக்கி - துயக்கி - வியக்கி - முயக்கி ... (அலங்)

௪. வண்டார்அளகத்தை - வாரிஜடைபின்னி
கொண்டையிலேகுசுமம்
குலுங்க - விளங்க - துலங்க - அலங்க - இலங்க ... (அலங்)

௫. வஞ்சியிடையவள் - கொஞ்சிகொஞ்சிநடந்து
அஞ்சனத்துடன்சாந்து
அணிந்து - தணிந்து - திணிந்து - குணிந்து - பணிந்து (அலங்)

௬. அந்தமுடனடைக்காய் - அஸ்தந்தன்னில்பிடித்து
சொந்தலட்சுமிநாதற்கு
கொடுக்க - முடுக்க - தொடுக்க - அடுக்க - படுக்க ... (அலங்)

வசனம்.

கூனியோடு அவள் இச்சித்தபடி கண்ணன் திருக்கூத்தாடுதல்.

விருத்தம்.

அலங்காரஞ்செய்தெதிரில் அன்னம்போல
அசைந்துவரும் அழகுநடைவாய்ந்தபெண்ணை
நலங்கமழுங்காரணனும் நாடிநிற்கும்
நங்கைதனைக்கரம்பற்றி மஞ்சமேற்றி
இலங்கமனங் கொண்டிருக்கு மிவளோடின்று
ஏற்றபடிகிரீடிக்க வேண்டுமென்று
தலம்புகழுந்தாரணிந்த மாயன்முந்தித்
தழுவினன் அவள்புழையைக்கழுவினனே ... (௩௱௬)

இராகம் - அடாணு - அடைதாளம்.

அநுபல்லவி.

கேசவனுடனேகூடி - கேளிக்கிரகந்தன்னைநாடி
ஆசையாகவேகுபஜை - ஆர்த்திகளுடனேபாடி ... (கேளீ)



சரணம்.

௧. வச்சிரமணிமஞ்சத்துடைய - படிதன்னிலே
பச்சைநீலஞ்செம்பும் - பளபளென்னவே
உச்சிதமாய்க்கட்டில்மேலே - முத்துஜாலர்களும்மின்ன
அச்சுதனுடன்குபஜை - மெச்சிவிளையாடநன்னை ... (கேளீ)

௨. கட்டியநிலைக்கண்ணாடிகள் - நாலுபுறமும்
ஒட்டியரேக்குகளால் - ஒளிகள்தரவே
திட்டமாய்க்குளோபுலஸ்டர் - இட்டமணிகள்விளங்க
சட்டமாகவேகுபஜை - கிட்டனுடனேதுலங்க ... (கேளீ)

௩. வாசனைகெந்தங்களுடனே - அத்தர்பன்னீர்
நேசமாயிருந்துஅவள் - அங்கேவீசவே
பூசுஞ்சாந்துபுனுகும் - வீசும்பச்சைக்கற்பூரம்
கேசவனுடன்குபஜை - வாசமாயிருக்குஞ்சாரம் ... (கேளீ)

௪. மல்லிகைமுல்லைகள்தொடுத்த - மஞ்சமீதில்
சொல்லியபடிமாயன் - கூடஅடுத்து
சல்லாபமாயிருவர் - உல்லாசலீலைதொடுத்து
வல்லானோடுகுபஜை - நில்லாமலேபடுத்து ... (கேளீ)

௫. காலக்கிரமம்அறிந்து - கேளிக்கிரகத்தில்
கோலமாகவேயிவ - ரங்கேயமர்ந்து
சீலமாகவேயிவர் - ஜாலஞ்செய்யாமலன்று
தாலந்தனிலேயென்றும் - சேலாகோன்பிதுஎன்று... (கேளீ)

௬. பட்சணபோக்கியங்களுடனே - பலவகை
லட்சணமாகவேபானம் - பண்ணிமகிழ்ந்து
லட்சுமிபுகாரணனும் - பட்சமாயிருந்ததுபோல்
இடமாயிவர்களிங்கே - கிட்டவிருந்தாடியதால் ... (கேளீ)

வசனம்.

கண்ணன் கூனிக்குசமாதானங்கூறி அக்குரூரர் வீட்டுக்குப்போகப் பரீக்ஷித்துக்கு சுகமுனிகூனியின் மகிமைனத்தைச் சொல்லுதல்.

சௌபத்தியம்.

கூடியேமகிழ்ந்தாடியானபின் கூனியும்
கோவிந்தனை நோக்கிக்கூறலுற்றாள்
நாடியேவளைகூனையன்று நீநிமிர்த்திய
நாயகாஎன்குடியிற் சிறிதுகாலம்
ஆடியேயமுதுண்டு ஆனந்தமாகவென்
ஆசைமுற்றுந்தீர்த்து அகலுமய்யா

நீடியேயிருந்திங்கே நிழல்போலவேயண்டி
நீங்காதுபிராணனே நிற்குமெய்யா
எடுத்துமடிமேல்வைத்து - முகத்தைப்பார்த்து
ஏற்றபடியிதவுசொல்லிமுத்தமிட்டு
அடுத்து இருஎன் றவனையவடம்விட்டு
அக்குரூரர்மனைநோக்கிப்போகின்றாரே

இராகம் - சஹானா - ஆதிதாளம்.

பல்லவி.

வீடுவிட்டதைக்கேளும் - ராஜா - கூனி - வீடுவிட்டதைக்கேளும்

அநுபல்லவி.

வீடுவிட்டதைச்சொல்கிறேன்ராஜா
வேணுகானன்மேலதிநேசா ... ... ... (வீடு)

சரணம்.

௧. ஜனனமரணங்கள்தீர - ஸ்ரீதரனைக்கேளாமல்நேரா
மனனஞ்செய்யாமலாற - மருவக்கோரினள்சேர ... (வீடு)
௨. ஜனகாதிமுதலோர்நாடி - தவசுசெய்துங்காணுன்தேடி
கனகாம்பரதாரியைக்கூடி - காமந்தீரொன்றானேபாடி (வீடு)
௩. பெருக்கமாகஇருக்கும்வாழ்வு - பெருமாளடிதன்னில்தாழ்வு
உருக்கமாகத்தங்கும்வீழ்வு - உகந்துகேட்டாளேயூழ்வு (வீடு)
௪. பூமியில்புதையலுற்றார் - போட்டுக்கொப்பனாஏற்றார்
சாமிலட்சுமிநாதனைப்பற்றாள் - சைரந்திரிகலவிபெற்றாள் (வீடு)

வசனம்.

அக்குரூரர் சொன்னபடிவந்து தரிசனந்தந்த கிருஷ்ணனை ஸ்தோத்திரஞ்செய்தல்.

விருத்தம்.

கேட்டபடி குபணைக்கு இன்பந்தந்து
கேசவனுமிதவுசொல்லி எழுந்திருந்து
நாட்டமாய்உத்தவரும்பலராமனோடு
நயந்துவரஅக்குரூரர் மனையைநாடி
தேட்டமாய்வாழுமவர் குழுவைக்கிட்டித்
தேடிவரும்தேவதேவனையுங்கண்ட
வாட்டமது இன்றெனக்குஒழிந்ததென்ன
வணங்கினன் அடிதொட்டுஇணங்கினனே ... (௩௱௭)



கொச்சகங்கள்.

௧. கண்டவுடனக்குரூரர் கண்ணனையுமண்ணனையும்
பண்டளவில்செய்ததவப்பலனோ என்பாக்கியமோ
அண்டமது அன்றளந்த அரியேஅருமலர்த்தாள்
தண்டைச்சிலம்பொலிக்கத் தரிசித்தேனின்றிங்கே ... *
௨. நின்றுடனேஅன்றெழுந்து நித்தியனைஆசனத்தில்
மன்றங்கறங்க மகிழ்வாயிருத்திமனத்
தென்றுமறவா திருக்கவரமருள்வாய்
கன்றுடனேகாலிகளுங் காத்ததிருக்காவலனே ... *

இராகம் - பைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

தெரிவாரார் - கண்ணா - தெரிவாரார்

அநுபல்லவி.

தெரிவாரார்தேவகிவயிற்றில் - அறியாமல்நீயுதித்ததால்
பரியும்என்மனத்தொட்டுப் - பிரியாதேயெந்தனைவிட்டு (தெ)

சரணம்.

௧. வஞ்சகனைதுஷ்ட - கஞ்சனையிப்பூமியிலே
பஞ்சாகவேஅடித்த - எஞ்சாதமாயன்நீயே
காட்டினாய் - விதியை - ஓட்டினாய - ஆயனைக்
கூட்டியேசுகிக்கச்செய்த - மேட்டியேயுன்பெருமையை (தெ)
௨. அரனயன்முதலானோர் - பரனுன்னையறியார்கள்
இரவென்றும்பகலென்றும் - உறவென்னவருந்தேவே
காடினாய் - மனையில் - கூடினாய் - பாதத்தை
சூடியேயென்வினைபோக்கி - ஆடியேவருமுன்னை ... (தெ)
௩. சதுர்யுகங்கள்தோறும் - பிதுர்த்தேவதையானோரும்
மதுரம்உரைக்கஆறும் - கதிரவனேகண்பாரும்
காருமே - வினையறச் - சேருமே - ஞானத்தைக்
கோரும்அடியேனிருள் - தீருந்தேவனேயுன்னை ... (தெ)
௪. உலகத்திலுனையன்றி - இலகுந்தெய்வமேது
பலபக்திசெய்வானா - தலந்தனிலிருப்பானா
தாண்டுவேன்-விடச்சொல்லி - வேண்டுவேன்-கடைக்கண்ணால்
ஆண்டுலட்சுமிநாதா - அண்டிநிற்குமுன்னை ... ... (தெ)

வசனம்.

கண்ணன் அக்குரூரரை அஸ்தினாபுரத்திற்கனுப்பி எனதத்தை குந்தியையும் அவர்புத்திரர் பாண்டவாள் முதலியவர்களுடைய க்ஷேமங்களை விசாரித்துவரும்படி சொல்லுதல்.

விருத்தம்.

இந்தவிதம் அக்குரூரர் துதிக்கப்பெற்ற
எழிற்கண்ணன் சிறியதந்தை யாரைநோக்கி
உந்தன்மதி பாகவத ரிடமேநின்று
உபகாரஞ் செய்பவர்நீ ராகையாலே
எந்தனது உரைகேட்டு எழுந்திருந்து
ஏர்பெருகும் அத்தினு புரமேசென்று
சிந்தையது கலங்குமத்தை யுடனேசெல்வர்
சேதியென்றூர் தெரிந்திங்கு ஓதென்றூரே .... (கூாஅ)

இராகம் - கேதாரகௌளம் - ஆதிதாளம்.

பல்லவி.

அத்தைகுந்திசேதி - முற்றுந்தெரிந்துஇங்கே
அக்குரரோவாரும்

அநுபல்லவி.

பத்தியில்பரிந்தவர் - படிதன்னில்நீரேஅய்யா
இத்தினம்புண்ணியம் - என்செய்தோமோமெய்யா ... (அத்)

சரணம்.

க. திரிந்துதீர்த்தயாத்திரைசெய்வார் சிலமானிடர்
தேவாலயந்தேடியலேவார் சிலமானிடர்
பரிந்துநாலுவேதம்படிப்பார் சிலமானிடர்
பகவத்பக்தருண்மையறியார் சிலமானிடர்
இப்போதுநீர்சென்று - தப்பாதென்க்ஷேமங்கூறும்
இப்பாரில்பாண்டுசெல்வர் - எப்படியானூர்பாரும் ... (அத்)

உ. யாகம்எக்கியங்கள்முதல்செய்வார் சிலமானிடர்
ஆண்டவன்பக்திதனையறியார் சிலமானிடர்
போகாதிகள்தேடியழிவார் சிலமானிடர்
புண்ணியங்கள்செய்யத்தெரியார் சிலமானிடர்
உபகாரஞ்செய்பவர் - உம்மைப்போலாருண்டு
விபவமாயங்குற்று - வேண்டுமெவரைக்கண்டு (அத்)

ங. கண்டபகைவர்முன்போர்செய்யார் சிலமானிடர்
களத்திற்புறங்காட்டியோடுவார் சிலமானிடர்
தொண்டர்களைக்கண்டால்நின்று சிலமானிடர்
தூஷித்துத்துறத்தியேதிரிவார் சிலமானிடர்
அண்டமளந்ததாளன் - அவன்பெயரைப்பாடி
அருமனத்தார்வாழும் - அந்நகரத்தைநாடி (அத்)



பெரியோர்கள்திருக்கோஷ்டிதன்னில் சிலமானிடர்
பிரியமாயவரோடுசேரார் சிலமானிடர்
உரியோரெவர்வந்தபோதும் சிலமானிடர்
உண்மையைச்சொன்னாலுங்கேளார் சிலமானிடர்
தெரியும்லட்சுமிநாதன் - தேடியுதவிசெய்ய
பரியும்அவடம்நட்டுப் - பாருமென்சொல்லய்யா ... (அத்)

வசனம்.

கண்ணன் நியமனப்படி அஸ்தினாபுரம்வந்த அக்குரூரரைக்கண்ட குந்தி தங்கள் க்ஷேமாதிசயங்களைச் சொல்லுதல்.

விருத்தம்.

கந்தமலர் மாலைவளர் கண்ணனுக்கினை
கருத்தாக அக்குரூரர் சிறமேற்கொண்டு
பந்தமாம் பாண்டவர்கள் வாழுமத்தின
பதிசேர ரதமேறிப் பயணமாகி
அத்தஅயோத்தியி லுள்ளோர் தம்மைக்காண
அதிதுரையாய் வருபவரை நெருங்கிஐவர்
சந்ததமுந் திருத்தாளை வணங்கிக்குந்தி
சாற்றினள் குறைதீரப் போற்றினளே ... (கூாக)

இராகம் - புன்னாகவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

தேடியக்குரூரர்வந்தார் - எந்தனுக்கு-ஸ்ரீகிருஷ்ணனுரைதந்தார்

அநுபல்லவி.

வாடும்பயிர்களுக்கு - வருஷம்பொழிந்ததன்ன
நாடும்எங்களிடத்தில் - நற்சேதிசொல்லிப்பன்ன ... (தேடி)

சரணம்.

க. அண்ணன்வசுதேவர்நினைந்தாரா - அவருடைபாலாள்
அத்தையென்றென்னையறிந்தாரா
கண்ணன்ராமனிங்குவாராரா - எந்தனது
கண்ஜலத்தைக்கையால் துடையாரா
எண்ணுமென்மக்களுக்கு - இருந்துமுடியைச்சூடி
விண்ணுமண்ணுங்களிக்க - வேண்டிமனதுநாடி ... (தேடி)

உ. பாம்பைபிடித்துஎடுத்தார் - பகைவர்கள்
பாலனைக்கடிக்கவிடுத்தார்
வீம்புக்குவிஷத்தைத்தொடுத்தார் - விவேகமற்று

விரும்பியன்னங்கொடுத்தார்
ஆற்றில்வசியைநாட்டி - அவனைகுதிக்கச்செய்ய
பார்த்துப்பீமனைக்கிட்டி - பரந்தாமனருள்பெய்ய ... (தே)

௩. கண்ணன்சகுனிகளைச்சேர்த்து - கர்மிகளெல்லாம்
கனத்தஇடும்பையேற்று
உன்னநடுங்கவேபார்த்து - மலைமேலே
உருட்டிக்கட்டினரேசார்த்து
என்னசொல்வேனையா - எங்கள்விதிப்படியே
பன்னகசயனனும்மை - பரிந்தனுப்பியப்படியே ... (தே)

௪. ரட்சகனிங்கேசொலிக்கவே
கட்சிகளெல்லாஞ்சலிக்கவே
பட்சிவாகனனளிக்கவே - பரிந்துநின்று
பாண்டவர்கள்கெலிக்கவே
இச்சையுள்லட்சுமிநாதன் - இகத்தில்பயம்நீங்க
கச்சைக்கட்டுமடையர் - கருகநாங்கள்ஓங்க ... (தே)

வசனம்.

இப்படியாகச்சொல்லிவந்தகுந்தி அக்குரூரர் எதிரிற்கண்ணனைப்புகழ்தல்.

விருத்தம்.

இன்னவிதமாகவேகுந்தியன்று
இளங்காளைப்பாண்டவர்களிருக்கைதன்னை
கன்னலெனுமக்குரூரர்காதுக்கோத
கருதரியதுன்பமெல்லாங்கதறியோட
பன்னகனுந்தம்பியுமாய்ப்பாடிசேர்ந்து
பரிந்தங்கேவளர்ந்துவந்தஅதிசயத்தை
நன்னயமாயவன்செயலைமனதிருத்தி
நாடினன்புகழ்பாடிஆடினனே ... ... (௩௰)

இராகம் - கல்யாணி - ஆதிதாளம்.

பல்லவி.

காரும்காருமையா - எங்களைக்கண் - பாரும்பாருமெய்யா

அநுபல்லவி.

காருக்கிருடைகொண்டு - சேருமெங்களிடத்தில்
தாருந்தரிசனத்தை - நீருமிந்தவிடத்தில் ... (காரு)



சரணம்.

௧. கடலிலேவழிதப்பி - உடலிலேயுயிர்தப்பி
கலங்குமாதுமிபோல - கதிபெறவேதப்பி
இடந்தப்பிதடந்தப்பி - எங்கள்மதியுந்தப்பி
இருக்கஜலருந்தப்பி - எளியன்பக்தியையொப்பி ... (காரு)

௨. அஷ்டதிக்கோடியும் - ஆறுகள்ஆடியும்
அக்கினியிற்குளித்து - அருமையாய்பாடியும்
இஷ்டமாய்த்தேடியும் - இகத்தோர்கள்ஓடியும்
என்னமாய்நாடியும் - எட்டாவடிகூடியும் ... ... (காரு)

௩. ஊசிமேலேதவம் - உண்டுசெய்வதவம்
உன்னாதிவிஸ்வரவம் - பூதம்பயனேபாவம்
நாசிமேலேசவம் - நல்விரலிடவைம்
நாராயணனேபவம் - நசிக்கச்செய்தேன்தவம் ... ... (காரு)

௪. பக்தியில்லாமனூரில் - பஜனைசெய்வார்பாரில்
பாடியிடையரூரில் - பசுகாத்தவன்சேரில்
முக்திகொடுக்கவூரில் - முனைந்திருக்கசேரில்
மூடர்போலப்பாரில் - முயலாவென்னைசேரில் ... (காரு)

௫. கோகுலந்தனிலுற்று - குருந்துமேல்சேலைவைத்து
கோபிகளைப்பற்றி - கூடுகாதனேமூற்றும்
ஆகுலந்தனையாற்றி - ஆளுந்தேவாமூற்றும்
அருஞ்செல்வர்களையுற்று - அருள்வாய்பரமமூர்த்தி ... (காரு)

௬. விந்தைமலையெடுத்து - வேளைமழைதடுத்து
வேணுகானம்படித்து - விரும்பியங்கோடித்து
அந்தலட்சுமிதடித்து - ஆடும்படிகொடுத்து
அடியன்துயர்விடுத்து - அழைக்கவென்னையடுத்து ... (காரு)

வசனம்.

இந்தவிதம்துதித்துப்பாடிய குந்தியைவிட்டுத் திருதராஷ்டிரனிடத்துக்கேகி அக்குரூரர் தருமநீதியைக்கூறுதல்.

விருத்தம்.

குந்தியிந்தவிதம் அரியைப்பாடியாடிக்
கோவிந்தன்செயலாலேமகிழ்ச்சியுற்று
எந்தனிலம்பின்னேகளைக்காக்கத்தேவன்
எப்போது வந்தருள்வனென்றுகேட்கச்

சொந்தமாம்நங்கண்ணன்கொஞ்சநாளில்
சோர்வகல இங்குறுவரென்றுசொல்லி
அந்தகன்தன்னரண்மனையையன்றடைந்து
அகலென்றார்வஞ்சகமேன்புகலென்றாரோ ... (௩௰௧)

இராகம் - பந்துவராளி - சாபுதாளம்.

பல்லவி.

திருதராஷ்டிரனே சொல்லும் - திருதராஷ்டிரனேசொல்லும்

அநுபல்லவி

தேகமனித்தியமென்னும் - திரேஷங்களைவிடும்
தேவதேவனைத்தேடும்

சரணம்.

௧. பிறப்பதும்இறப்பதும் - போவதும்வருவதும்
இருப்பதும்உலகினில் - என்னநிச்சயமோதும் ... (திரு)

௨. தண்ணீரிற்குமிழிபோல் - சரீரம்அழியுமென்று
எண்ணிவிவகாரந்தன்னை - இனிசெய்வதேதென்று ... (திரு)

௩. பஞ்சவர்க்குப்பாதி - பங்கைநீயுங்கொடுக்க
வஞ்சவுன்பாலரும் - வையமதிலடுக்க ... ... (திரு)

௪. வந்துகௌரவகுலத்தில் - அந்தகனாய்பிறந்தாய்
இந்தமதியைவிட்டால் - இனியாகிலுஞ்சிறந்தாய் ... (திரு)

௫. இப்போதாகிலுஞானக் - கண்ணாலேநீயும்பாரும்
தப்பாதிகபரம் - தாமோதரனைக்கோரும் ... ... (திரு)

௬. ஐவரும்உன்மக்க - ளாகநீயூரினில்
செய்யப்போர்நன்றாகச் - செப்புவர்பாரினில் ... (திரு)

௭. ஓரவஞ்சந்தன்னை - யொதுக்குநீயும்பண்டு
கோரவினையொழிந்து - கூடப்பதவியுண்டு ... (திரு)

௮. பரலோகசாதகம் - பார்த்துஅறிந்துகொள்ளும்
வரலக்ஷ்மிநாதனை - வாழ்த்தியுன்காலந்தள்ளும் ... (திரு)

வசனம்.

அக்குரூரருக்குத் திருதராஷ்டிரன் மறுமொழிகூறல்.

விருத்தம்.

வந்தந்தஅக்குரூரர்உரைத்தசேதி
வையகமும்வானகமுங்குளிரக்கேட்டும்
சிந்தையதுமிகக்களித்தேன்அய்யாமுன்னம்
செய்தவினைப்பயனதனை நீக்கவென்றால்



மூந்துமுக்குணமுடையமும்மூர்த்திகட்கும்
முடியாதகாரியத்தைமுடிக்கவிந்த
அந்தகனுனென்செய்வேன்நீதிமானே
ஆறென்றான்கெதியேதுபாரென்றானே ... (௩௰௨)

இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

அக்குரூரரேவாரும் - அதிகிருபையுடனே
அடியேன்சொல்வதைக்கேளும்

அநுபல்லவி.

அக்குரூரரேநீரும் - அடுத்துச்சொல்வதேதேனோ
அய்யன்செயல்படியே - ஆகுந்தடுக்கலாமோ ... (அக்கு)

சரணம்.

௧. அடிக்கும்பெருங்காற்றில் - அலையுந்தீபத்தைபோல
அலையுதேயென்மனது
படித்துப்பஞ்சாங்கஞ்சொல்லி - பாண்டவர்மேற்பகை
பசகளைவிடும்படி - பாரிலுரைத்துங்கேளார் ... (அக்கு)

௨. சூரியகிரணத்தால் - சுடுகின்றபளிங்குபோல்
சுடுகின்றதென்னுள்ளம்
கோரியேகுணங்கொண்டு - குறைநீக்குவீரென்று
கூறியுங்கேளாத - கொடுமைந்தனெனக்குண்டு ... (அக்கு)

௩. சந்திரன்தன்னிழல் - ஜலத்தனிலுற்றாற்போல்
சலிக்கின்றதென்னெஞ்சம்
மந்திராலோசனைகொண்டு - மறுக்கச்சகுனியுண்டு
மர்மந்தெரிந்துநண்ண - மார்க்கந்தெரியேன்பண்ண (அக்கு)

௪. நாலுவேதங்களுக்கு - நாதனாகவிருக்கும்
நாராயணனேவந்து
மேலுசெய்நீதிகள் - வேண்டியுரைத்துங்கேளா
மிகுசெல்வருண்டென்று - மெய்க்கண்ணன்தனக்கோதும் (அக்கு)

வசனம்.

அக்குரூரர்தான் அத்தினபுரம் போய்வந்தசேதிகளைக் கண்ணனுக்குச் சொல்லுதல்.

விருத்தம்.

அந்தகனுன்என்மக்கள் அக்கிரமத்தை
அறிந்தெடுத்துஉரைத்தாலுமவனையிப்போ

சோர்தயாஞ்சகுனிகன்னன்முதலானோர்கள்
சொல்லியேயவன்மனைதக்கரைக்கின்றார்கள்
மூர்தமதியக்குரூராமுனியேயென்மேல்
முறையாகமதுரைநகர்சேருமென்ன
கந்தமிகப்பெருகுரதமீதிலூர்ந்து
கண்டிட்டான்கண்ணனுக்குவிண்டிட்டானே ... (௩௰௩)

இராகம் - சௌராஷ்டிகம் - சாப்புதாளம்.

பல்லவி.

போய்வந்தசேதிகேளும்புதுமலர்ப்பாதா - நான்
போய்வந்தசேதிகேளும்

அநுபல்லவி.

போய்வந்தசேதிகேளும் - புண்ணியவானேநீரும்
தாய்வருந்தஜவர் - தரணியிலிருப்பைப்பாரும் ... (போ)

சரணம்.

க. அத்தைகுந்தியென்னைக்கண்டு
அரவக்கொடியோன்துன்பம்
மெத்தசெய்துவரும் - விதத்தையோதுவேன்கல்ல
நத்துமென்கண்ணனுக்கு - நானிங்குகந்துசொல்ல ... (போ)

உ. விடத்தைக்கலந்து அன்னம்
வேண்டியிட்டுபீமன்
கடத்தையொழிக்கவஞ்சன் - கருதிச்செய்தான்தொல்லை
தடத்தில்தாமோதரன் - தயவாற்சாகவில்லை ... (போ)

௩. இன்னம்எத்தனைசூதோ
எண்ணிப்புரிந்தான்துரியன்
பின்னம்வராமற்பின்னை - பெருமான்கிருபைகொண்டு
அன்னம்புசித்துஅங்கே - அவனிருக்கிறதுண்டு ... (போ)

௪. அந்தக்குருடன்தன்னை
அடுத்தென்னசொல்லியும்
பந்தவிடாமற்பங்கு - பாண்டவர்க்கீயேனென்ன
சொந்தலட்சுமிநாதா - சோர்ந்துவந்தேனென்ன ... (போ)

வசனம்.

அஸ்திப்பிராப்தியென்னும் கஞ்சன் தேவியரிருவரும் தகப்பனாகிய ஜராசந்தனிடஞ்சென்று கணவனிறந்ததைச் சொல்லிப்புலம்பல்.



விருத்தம்.

ஆண்டவரோடக்குரூரர் அத்தினபுரமேசென்று
அங்குகுந்தி யர்தகனோடைவரான
பாண்டவர்கள் சேதியெல்லாமுறைக்கக்கேட்டுப்
பகவானுங்காலம் வருமென்றிருந்தான்
மாண்டகஞ்சன் தேவியராம்அஸ்திப்பிராப்தி
மகததேசத்திலுறை ஜராஜந்தன்பக்கல்
பூண்டமணிப் பூஷணத்தோடடியில்வீழ்ந்து
புலம்பினர் கண்ணீர்விட்டலம்பினரே ... (௩௰௪)

இராகம் - ஆகிரி - ஏகதாளம்.

கண்ணிகள்.

க. அய்யாஜராசந்தனே - அனியாயமாய்க்கணவன்
நொய்யாமானிடன்கையால்
மெய்யாயழிந்துபோனாரய்யா ... ... ... *

உ. நந்தகோபகுமாரர் - வந்தார்மதுரையில்வீரர்
உந்தன்மருமகனைநேராய்
உயிரைவாங்கினார்பாராய் ... ... ... *

௩. எங்களிருவருக்கும் - மங்கிலியசூத்திரங்கள்
தங்கக்கயிறறுந்து
மங்கிவிட்டோம்பிரிந்து ... ... ... ... *

௪. மஞ்சள்குங்குமத்தோடு - வாசனைபுனுகுசாந்தும்
அஞ்சனமடைக்காய்முற்றும்
நஞ்சாக்கினாரோகித்தம் ... ... ... ... *

௫. விடயாதிபோகமெல்லாம் - மெய்யென்றிருந்தோமய்யா
இடைஜாதிகண்ணன்தன்னால்
தடமாடிப்போச்சுமன்னா ... ... ... ... *

௬. கைம்பெண்ணென்றெங்களை - கண்டவர்களுஞ்சொல்ல
இச்சைசெய்தான்பிரமன்
இருக்கநீயும்பரமன் ... ... ... ... *

வசனம்.

புலம்புந்தன்பெண்களுக்கு ஜராசந்தன் சொல்லுதல்.

விருத்தம்.

நஞ்செனவேஜராசந்தன் பெண்கள்சொன்ன
நந்தர்மைந்தன்செய்கைதனைக் கேட்டேயுள்ளம்

அஞ்சுவதாய்பதைபதைத்து அக்கினியென்னும்
ஆறதனில்அவனியுள்ள ஆயரெல்லாம்
சஞ்சலமேகொடுவருந்த அழித்துவிட்டுச்
சரியாகப்பழிக்கு பழிதீர்ப்பேன்எந்தன்
பஞ்சுமிகநாணுபதப்பாக்கியமே நீங்கள்
பாரென்றான் உரைகேட்டுத்தேரென்றானே ... (௩௰௫)

இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

பெண்களாகேளுஞ்சொல்கிறேன் - எந்தனுடைய
பெலத்தினாலேவெல்கிறேன்

சரணம்.

௧. பெண்களாவுங்களுடை - புருஷனைக்கொன்றவனை
எங்கேயிருந்தபோதும் - எதிர்த்துநான்செய்வாதும் ... (பெண்

௨. கடல்மலைபுவிஸ்தம்பம் - காட்டுக்குள்போனாலும்
அடமாகச்சொல்கிறேன் - அரியவனானாலும் ... ... (பெண்)

௩. யாதவக்குடிகளை - வேரோடேயறுக்கிறேன்
தூதனாங்கிருஷ்ணனை - துரத்தியேஓறுக்கிறேன் ... (பெண்)

௪. கோகுலமென்கிற - கூட்டமாகிறகாட்டை
கோபாக்கினியாலே - கொளுத்துவேனவர்வீட்டை ... (பெண்)

௫. சதுர்முகப்பிரம்மாஓடி சண்டைக்குவந்தபோதும்
எதிராகவறுக்கிறேன் - எவராயிருந்தபோதும் ... (பெண்)

௬. கூடியகூட்டத்துடன் - ஓடியிந்திரன்வந்தாலும்
தேடினான் நொறுக்கிறேன் - தேவதேவனானாலும் (பெண்)

௭. ஈஸ்வரன்தான்எதிர்த்து - எதிரியாய்வந்திருக்க
பாஸ்கரனைச்சொலித்து - பக்ஷிப்பேன்நான்பெருக்க ... (பெண்)

௮. எடுத்துஅஸ்திரசஸ்திரம் - ஏகமாய்வந்தாலுருண்டு
அடித்துமடிப்பேனவனை - அவனியில்நான்வெருண்டு (பெண்)

வசனம்.

ஜராசந்தன் சதுரங்கசேனையோடு மதுராக்குக் கண்ணனைத்தேடி வருதல்.

விருத்தம்.

இந்தவிதமாயுரைத்துப் பெண்களுக்கு
இருக்குநகர்சதுரங்கசேனை கொண்டு
அந்தரத்தில் வானவரும்நடுங்கமண்மேல்
அமைச்சர்களைத் தாண்டிவரவழைப்பிரென்ன



விந்தைபெறும் அஸ்திரசஸ்திரங்களோடு
வேணமட்டும் பலவகையாயுதமுஞ்சேர்த்துப்
பந்தமுடன்மதுராக்குப் பயணமாகிப்
பாய்ந்திட்டான் ரதமீதுதோய்ந்திட்டானே ... (௩௰௬)

இராகம் - நாதனாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

வருகின்றான்சந்தன் - பலிகொடுக்க
வருகின்றான்சந்தன்

அநுபல்லவி.

வருகின்றஜராசந்தன் - பொருகின்றபெருமந்தன்
வளர்பெருஞ்சேனைதேடி - வடமதுராயைநாடி ... (வரு)

சரணம்.

௧. இருபத்துமூன்று - அக்குரோணி - சனைக்கொண்டு
இருச்குமிடையனாயின்று - இறக்கடிப்பேனென்று
இரதத்தின்மீதேறி - இராமகிருஷ்ணனைக்கோரி ... (வரு)

௨. விதிகொண்டுதள்ள - விருதாவில் - வேதனைகொள்ள
ததியில்தனைமறந்து - தன்னூராயுர்துறந்து
நதிகளெல்லாந்தாண்டி - நாதநாதனையண்டி ... (வரு)

௩. மேலோர்சொற்கேளான் - புவியினில் - மிகுதுஷ்டன்மீளான்
காலமதுஇழுக்க . கண்டவர்கள்பழிக்க
கர்வமதுபெருக்க - காணவெகுமுக்காறுக்கா ... (வரு)

௪. அண்டியேநேர - அனைவரும் - அந்தகனூர்சேர
அருள்லட்சுமிநாதனிங்கே - அவதரித்தான்துங்க
அதிசயந்தெரியாமல் - அவன்பலங்குறியாமல் ... (வரு)

வசனம்.

பிந்தஜராசந்தன் மதுராமுன்னிருந்த உத்தியானவனத்தைப் புகழ்தல்.

விருத்தம்.

அரியென்றேயறியாமல் ஜராசந்தன்வந்து
அதிரதரோடளவிடாச் சேனைகொண்டு
துரிதமாய்வடமதுரா முன்னிருந்து
துலங்குபெருஉத்தியானவனத்தைக்கண்டு

விரிவாகஇருக்கும்பல விருக்ஷங்களோடு
விண்ணவரும்வியப்படையவிளங்குகோப்பை
கரிபரியோடதில் தங்கிவிடாய்கள்தீரக்
கதித்திட்டான் புகழ்ந்ததையேதுதித்திட்டானே (௩௰௭)

இராகம் - கல்யாணி - சாபுதாளம்.

பல்லவி.

கண்டானேஜராசந்தன் - உத்தியானவனம்
கொண்டானே ஆனந்தம்

அநுபல்லவி.

கண்டான்உத்தியானவனம் - சென்றான்ஜராசந்தன்
கொண்டான்அதிசயம் - நின்றான்அதின்நயம் ... (கண்)

சரணம்.

க. சிங்காரவனந்தன்னில் - ஸ்தம்பம்அனேகம்நிற்க
ஜலம்வரும்வழியங்கே - சற்றுந்தோன்றாதுஏற்க
தங்கமாளிகைமுன்னில் - தலங்கநீருந்தேக்க
தோன்றுமாரிகாலம்போல் - துளிக்கப்பலரும்பார்க்க (கண்)

உ. அல்லித்தாமரையுடன் - அழகுசெங்கழுநீரும்
அலங்காரமாய்த்தடத்தில் - அனேகபுட்பங்கள்சேரும்
மல்லிகையிலமர்ந்து - வண்டினங்களூரும்
மங்கையெல்லாருங்கிள்ளி - மகிழும்வேடிக்கைச்சீரும் (கண்)

௩. விருக்ஷம்ஓங்கிவளர்ந்து - மேகமண்டலமுட்ட
விதவிதமாய்க்கதலி - பலன்களனேகங்கொட்ட
உருக்கமாய்ப்பட்சிகள் - ஓடிவந்துகிட்ட
உலகத்தில்மனிதர்க்கு - உயர்ந்தருசியுந்தட்ட (கண்)

௪. கண்டவர்எல்லாருங் - களிக்கும்படியிருக்க
கானத்தில்இருடிகள் - கனிகளுண்டுபெருக்க
அண்டத்தில்லட்சுமியும் - ஆனந்தமாய்க்குறிக்க
அமரும்படியிவனே - அசையாமலேயுருக்க ... (கண்)

வசனம்.

ஜராசந்தன் சதுரங்கசேனைகளுடன் வடமதுரையைச்சூழ்ந்து வருவதைக்கண்ட தேவர்கள்கண்ணனுக்கும் பலராமருக்கும் தேர்ப்பாகனேடும் சகலாயுதமும் பொருந்தியதேவவிமானங்கள் அனுப்பியது.

விருத்தம்.

துதித்திருந்தஜராசந்தன்சேனையோடு
துலைந்திரம்வந்தபெரும்விடாயுந்தீர்ந்து



விதித்தபடிபடைகளுமேசென்றுமீறி
வேகமாய்மதுரைநகர்சூழ்ந்துகொள்ள
அதித்தயவோன்அய்யனுமேகண்டுபோரில்
அனைவரையுமன்றுடனேயழிக்கவெண்ண
மதித்துவிண்ணோரிருவருக்குமிரண்டுதேரை
மாட்டினார்கொண்டங்குகூட்டினாரோ ... (௩௰௮)

இராகம் - சங்கராபரணம் - அடைதாளம்.

பல்லவி.

தேரைக்கண்டாரோ - கண்ணன்திருத்
தேரைக்கண்டாரோ

அநுபல்லவி.

தேரைக்கண்டாரோ தேவர்கள்நீடவும்
தேடியேதம்மைத் திரும்பிநாடவும் ... ... (தேரை)

சரணம்.

க. இரண்டுசூரியர்கூடி - ஏககாலத்தில் - இழிந்துறுவதுபோல
திரண்டசேனைகளைத் - தீய்க்கவருவதுபோல்
மிரண்டுஅவர்கள்ஓட - மேகவண்ணனைநாட ... (தேரை)

உ. அஸ்திரசஸ்திரமனேகம் - அழகான - அம்புராதுணிமிஞ்ச
கஸ்திசெய்ஜரா - சந்தனுங்கண்டஞ்ச
பஸ்திமாதலியோட்ட - பலருமேகண்ணுட்ட ... (தேரை)

௩. சங்குச்சக்கரத்தோடு - சரியான - சர்வாலங்காரங்காட்ட
பொங்கியமரர்கூடி - போற்றிவிண்ணுதம்மீட்ட
அங்குபக்தர்கள்கூற - அவர்கள்மகிழ்ந்தேற ... (தேரை)

௪. துங்கச்சாரதிவர்து - வினயமாகச் - சுவாமியைச்சேவிக்க
தங்கப்பதத்தைவைத்துத் - தரியுமென்றுதுதிக்க
அங்குலட்மிபார்க்க - அவருள்ளமும்பூர்க்க ... (தேரை)

வசனம்.

கண்ணன்திருத்தேர்களைக்காட்டி அண்ணனுக்குச் சொல்லுதல்.

கொச்சகம்.

தேர்தனைக்காட்டினின்று திருக்கண்ணனண்ணன்தன்னை
பார்தனிலவதரித்த பான்மைமகாமேதுக்கென்னில்
ஊருள்ளதுஷ்டர்தம்மை யொருமிக்கவதைத்துக்கொல்லப்
பேருள்ளபடியாயின்று பேசுவேன்கேளென்றானே ...

இராகம் - ஆனந்தபைரவி ஆதிதாளம்.

பல்லவி.

அண்ணா - அண்ணா - அண்ணாகேளும் - அவனைத்தவிர
அனைவரைக்கொன்றிங்குமீளும்

அநுபல்லவி.

அண்ணாநம்மோ - டாயர்கள்சூழ
அவதரித்த - அடியார்களும்வாழ ... ... ... (அண்)

சரணம்.

௧. வருகிறசோதியைக்கண்பாரும் - வந்தவுடனே
மகிழ்ந்துஅந்தரத்தில்ஏறும்
தருகின்றஎதிரிசரங்களுமிரண்டாய்
தறித்தவன்சேனையைமடித்திடநீரும் ... ... ... (அண்)

௨. பூமிபாரங்களையொழிக்க - வசுதேவன்
புத்திரராஞேம்நாம்செழிக்க
காமியானஅந்தஅசுரனைத்தவிர
கண்டதுண்டமாயவர்களையழிக்க ... ... ... (அண்)

௩. யுத்தத்திலவனைநாம்விட்டால் - மிருந்தவனை
யோட்டிவருவனந்தமுட்டாள்
புத்தியில்லாதமடையனைவிட்டு
படைத்தந்தகளத்தைதூற்றிடவாரும் ... ... ... (அண்)

௪. அரசனைச்சூழ்காட்டைத்தீய்த்து - அடிபட்டு
அனைவர்முடிகளையுஞ்சாய்த்து
ஆராயிருந்தாலும்அப்பெரும்படையினை
அதஞ்செய்துபாரில்ஜெயந்தரவேணும் ... ... (அண்)

வசனம்.

ஜராசந்தன்கண்ணனை யேசுதல்.

விருத்தம்.

சொல்லியிந்தவிதமண்ணன்காதிலோதிச்
சுந்தரஞ்சேரிருவர்களுந்தேரிலேறி
மல்லுசெய்யவர்திருக்குமடையரோடே
மர்மமதைத்தெரிவிக்கவேண்டுமென்று
நல்லமதுவொழுகு திருவாயிலன்று
நாரணன்வைத்தூது சங்கிஞைசகேட்டு
கொல்லவந்தான்படையுடனே நடுக்கமுற்றுங்
கூறுவானண்ணனையே தூறுவானே ... (௩௰௯)



இராகம் - மோகனம் - ஏகதாளம்.

பல்லவி.

என்னதெரியுமடா - மடைப்பயலே - ஏறுமுன்
இங்கேவந்தெதிர்த்த - சிறுமுயலே

அநுபல்லவி.

சின்னவர்களோடேசேர்ந்து நான்போர்செய்தால்
சேனுலகோர்கூடிச்சிரிப்பாரேபோடா ... ... (என்)

சரணம்.

௧. நாயகிமார்கூட்டமல்லஎந்தன்சேனை
நந்தன்மனையில்வளர்ந்தவனே
காயாம்பூமேனியைக்காளியுங்கூளியுங்
கண்டவுடனேபட்சிக்குமடா ... ... ... (என்)

௨. அம்மாஅம்மாவென்றுஅந்தமங்கைதன்னில்
அழைத்தபசுமாடுபோலவல்ல
சும்மாமலைக்காதேயசுவங்கள்கெர்ஜனை
சுரணைகெடச்செவிடாகும்போடா ... ... (என்)

௩. சகடாசூரனையுதைத்துஉறங்கேனென்று
தைரியத்தோடிங்குவந்தாயோடா
பகடனைப்போலிந்தவண்டிகளென்றுதே
பாரிலுன்றனைச்சதைக்குமடா ... ... ... (என்)

௪. பிருந்தாவனமல்லவந்துவிளையாட
பெருவீரனிருக்கின்றபூமியடா
கருநிறரூபனேஎன்முன்னேநில்லாதே
கசக்குவேஞேடிநீமறைபோடா ... ... (என்)

வசனம்.

ஜராசந்தன் சொன்னவைகளைக் கண்ணன் மறுத்துரைத்தல்.

விருத்தம்.

பரபரப்பாய்ஜராசந்தன்பேசுகின்ற
பான்மைதனைக்கண்டுகண்ணன்நகையுஞ்செய்து
கரங்காலுசிரங்களெல்லாம் வேறுபட்டுக்
கண்டதுண்டமாகவே கூறயிட்டு
மரமொன்றேயிங்கு நிற்குஞ்சேனைத்தோப்பில்
மர்மத்தைச்சிறிது நிமிஷத்திற்காண்பாய்
தரமாகநாங்களதை முடிக்குநேர்ப்பை
தடுஎன்றுன்சொற்படி கையெடுசென்றனே (௩௨௰)

இராகம் - ஆரபி - ஆதிதாளம்.

பல்லவி.

நல்லவீரனல்லகொடியா - எங்களை
வெல்லுவையோநீயுந்தடியா

அநுபல்லவி.

சொல்லியபடிநாங்கள்செய்யவந்திருக்கிறோம்
சூரா - சூரா - சூரா - தீரமுள்ள ... ... (நல்ல)

சரணம்.

௧. ஆனைசேனைகளெல்லாமழிய - உந்தன்
ஆணவமானதும்ஒழிய
ஊனைப்பேய்கள்கூடி - உண்டுமனங்களித்து
ஓட - ஓட - ஓட - உணர்வுள்ள ... ... (நல்ல)

௨. ஜெயித்தேனென்யாரையுமென்றாய் - மெத்த
சவுரியத்தோடிங்குநின்றாய்
மயிதலமூடனே - மண்டைபுழுவின்று
மாள - மாள - மாள - மானமுள்ள ... ... (நல்ல)

௩. கற்றவன்சொல்லிக்கொள்வாயோ - அந்தக்
காரணம்நீயறியாயோ
பித்துக்கொண்டவன்போல - பினற்றுகிறாய்நீயும்
பேயா - பேயா - பேயா - பெருமையுள்ள ... (நல்ல)

௪. மகததேசத்தானெனவிண்டாய் - நின்று
வாயினாலுளறிக்கொண்டாய்
நகராதிபதியான - நலமில்லாமடைய
நாயே - நாயே - நாயே - நாணமுள்ள ... ... (நல்ல)

வசனம்.

கண்ணனிவ்வாறுபழிக்கச் சராசந்தன் கோபங்கொண்டு வில்லைவளைத்து யாதவர்களையதப்படுத்துதல்.

விருத்தம்.

வீசுபிணக்காடுயுத்த பூமியென்று
விளங்கிடவே வில்லதனைவளைத்துநின்று
ஏசுகின்ற கண்ணனண்ணன் இரண்டுபேரை
இருந்தவிடந்தெரியாமற் சரத்தால்மூடி
ஆசுகவிபாடுவோர் போலநிலந்தன்னில்
அம்புவிட்டுஆயரெல்லா மழியும்வாறு



தாசுமிகவெழும்பரதமீதி லூர்ந்து
தாறினான்ஜராசந்தன் மாறினானே ... (௧௨௪)

இராகம் - கல்யாணி அடைதாளம்.

பல்லவி.

எடுத்தானேகைவில்லை - ஜராசந்தன்
தொடுத்தானேசரமாரி

அநுபல்லவி.

அடுத்தான்ஜராசந்தன் - அவர்கள்வந்துநாட
ஆயர்களனைவரை - அவன்சேனைகள்ஜாட ... ... (எடு)

சரணம்.

௧. எரியைப்போல்கண்ஜொலிக்க - கோபமாக
எதிர்த்தவர்மனஞ்சலிக்க
கரியும்அரியைவந்து - காலத்தாலே
கலங்காமலேமுந்து
சரியாகசாமியைத்தாக்கவும்
சாதுஜனங்களையடித்துப்போக்கவும்
பரிகள்கட்டியரதத்தைநீக்கவும்
பாரிலிரத்தவெள்ளமாக்கவும் ... ... ... (எடு)

௨. மதுரைப்பெண்கள்கூட - மாடமீதில்
மயங்கிமனதுவாட
எதிரிசெய்யும்போரை - கண்டு
இன்றுநம்மூர்சூறை
என்றுநின்றவரழுதுகூசவும்
எங்குங்கத்திகேடயங்கள்வீசவும்
குன்றுமழியசரங்கள்தூவவும்
கோபாலரெல்லாம்நொந்துசாவவும் ... ... (எடு)

௩. தண்ணன்ராமனைச்சற்றும் - அசையாமல்
கட்டினாற்போல்முற்றும்
எண்ணில்லாதஅம்பு - மாரிபோல
எவினானேவம்பு
விண்ணில்விசையாய்ச்சரங்களேறவும்
வெளியில்சாமிகாணுமற்கூறவும்
புண்ணாய்த்தேகமுழுதும்பீறவும்
புதுச்செவ்வானமாகமாறவும் ... ... ... (எடு)

௪. சல்லடைக்கண்ணாகி - ஆயர்கள்
சலித்தாரேயுன்னாலே
கொல்லப்போர்செய்யப்போக - அறியாத
கோவோட்டிகளாக
களத்தில்பிணமலையாகச்சேர்க்கவும்
கண்டவர்களுநடுங்கிவேர்க்கவும்
உளத்தில்பயமேகொண்டுநிற்கவும்
ஊரில்கூளிகள்வந்தேற்கவும் ... ... ... (எடு)

வசனம்.

இராமகிருஷ்ணர்கள் ஜராசந்தன் சேனைகளையழித்து அவனையும்புடைத்தல்.

விருத்தம்.

அடித்திருக்குஞ்சராசந்தன்தன்னைநோக்கி
அங்கிருந்தராமகிருஷ்ணரிரண்டுபேரும்
பிடித்தவில்லைவளைத்துடனேசரங்களாலே
பேயன்விடுமம்புகளைவெட்டிரண்டாய்
துடித்தோடுமாயர்களைநிறுத்திமுன்விற்
றலங்கிரதபரிகரியுமழிந்துசாய
கடித்தவரக்கனுமன்றநடுங்கமண்மேல்
காடினானவனையுஞ்சாடினானே ... (௧௨௨)

இராகம் - தோடி - அடைதாளம்.

பல்லவி.

அடித்தாரேராமகிருஷ்ணன் - ஜராசந்தன்
அடித்தானேமனம்நொந்து

அநுபல்லவி.

அடித்தாரேயவரன்று - அசையாமலேநின்று
பிடித்தகைவில்லேந்த - பிணம்பிணமாய்ச்சிந்த ... (அடி)

சரணம்.

௧. வில்லைவளைத்துவேண - அதி
விந்தையாகத்தோண
எல்லையில்லாமற்காண - விசையாய்
எங்குமழைப்பாண
எரியுஞ்சரங்களென்னவேறிட
யானைகுதிரைகளெல்லாம்பீறிட
பொரியுஞ்சேனைகள்தேகங்கூறிட
பூமிபார்க்கவும்ரூபம்மாறிட ... ... ... (அடி)



௨. இருபத்துமூன்றக்ரோணி - வந்த
இராக்ஷசசேனைகோணி
அருகுற்றசாரங்கபாணி - அரக்கன்
அழியக்கண்டுநாணி
பேசுவீரமும்பின்னமாகவே
பெண்கள்கேட்டேடல்விம்மியேகவே
வீசுகைகளுமறந்துநோகவே
விரும்புநரிகளுக்கிரையாய்ப்போகவே ... ... (அடி)

௩. ஆறாரத்தமாயோட - அதிலே
அஸ்தந்தாளங்கள்போட
கூறுபட்டுநீட - தலைகள்
குதித்ததிலேயாட
பேயுஞ்சடங்களைவாரித்தின்னவே
பெரியவிருந்துசெய்பெருமாளென்னவே
சாயுங்கூளியும்பருக்துந்துன்னவே
சண்டைவல்லவனொன்றுபன்னவே ... ... (அடி)

௪. இடையர்பயமுநீங்க - மதுரை
இடுக்கங்களும்வாங்க
கடையன்கருதித்தேங்க - பலராமன்
கையாற்பிடித்தோங்க
கருத்துதெரிந்துடன்கண்ணனோடியே
காரியமிருப்பதைக்காதிற்பாடியே
திருத்தமித்தவிடவுந்தேடியே
திரும்புவனெனமறுத்துக்கூடியே ... ... (அடி)

வசனம்.

ஜயத்தோடுதிரும்பிய ராமகிருஷ்ணன் வரவைநோக்கிப் பட்டணத்தைஜனங்கள் அலங்கரித்தல்.

விருத்தம்.

அபஜயத்தாற்சராஜந்தன்றவத்திற்கேக
அதைத்தடுத்தேயவன்றேழரூரிற்சேர்த்தார்
விபவமாய்ராமகிருஷ்ணரிரண்டுபேரும்
விண்ணவருமலர்சொரியநகரநோக்கி
சுபகரமேசெய்துவருமவர்கள்மேலே
சுந்தரிமார்பலவர்ணப்பொடியுந்தூவ
அபரிமிதமானகொடித்தோரணங்களாட
ஆடினார்அலங்கரித்துப்பாடினாரே ... (௧௨௩)

இராகம் - கேதாரகௌளம் - ஆதிதாளம்.

பல்லவி.

அலங்காரஞ்செய்தாரோ - மதுரைநகர்
அலங்காரஞ்செய்தாரோ

அநுபல்லவி.

அலங்காரஞ்செய்தாரோ - அயோத்திநகரைப்போல
நலந்திகழுமதுரை - நவரத்னதீபம்போல ... (அல)

தரு.

க. ஜயபேரிகளடிக்க - வானில்நின்று
தேவர்புகழ்படிக்க
நயமாய்க்கொடிபிடிக்க - மணியோசை
நாதமெங்குந்தடிக்க
வாழைமரங்களுநாட்டியே - நெடு - வாகுந்தோரணமாட்டியே
தாழைமலர்களைக்கூட்டியே - ஒளி - வீசப்படங்களுந்தீட்டியே (அல)

உ. ஜலமெங்கும்விட்டு - கோலங்கள்
சந்தினத்தாலிட்டு
நிலமெங்கும்பட்டு - விரித்தாற்போல்
சேர்ந்தபடிதொட்டு
கற்பூரஆர்த்திகளொளிக்கவே - திரு - கன்னிகண்ணனைவிளிக்கவே
தற்பரன்மிகக்களிக்கவே - மணம் - தங்குபன்னீர்தெளிக்கவே (அல)

௩. அப்ஸரஸ்திரீகளாட - மதுரைநகர்
ஆடவரெல்லாங்கூட
விப்பிரர்களுநாட - ஆசிகூறி
விரும்பியக்ஷதைபோட
வந்துபாட்டனைக்கூடவே - கொண்டு - வந்தபொருள்பதம்தேடவே
தந்துமாளிகைநீடவே - அன்று - தங்கிமங்களம்பாடவே (அல)

வசனம்.

நாரதர்காலயவனைப்போய்த் தூண்டுதல்

விருத்தம்.

இந்தவிதவைபவமாய்ராமகிருஷ்ணர்
எங்கெங்குந்துதித்திடவேநகரஞ்சேர்ந்து
அந்தபுகளந்தன்னிற்பறித்தெடுத்த
அணிமணிகள்யாவுமூதாதைக்கீய்ந்து



சிந்தைதமகிழ்வொடுதாங்கள்வாழுமாடஞ்
சேர்ந்துசுகமாகவேவீற்றிருந்தார்
விந்தைசெயுநாரதனுங்காலயவன்தன்னை
வேண்டினன்சண்டைக்குத்தூண்டினனே ... (௩௨௪)

இராகம் - மோகனம் - அடதாளம்.

பல்லவி.

காலயவனேகேளடா - வீரனெனக்
கருத்தில்நினைப்பதுவீணடா

தரு.

க. யாவரையுஞ்செயித்தாய் - மெத்த
சாமர்த்தியவானென்றுபேர்வகித்தாய்
தேவரையும்பகைத்தாய் - அந்தத்
தேவகிமைந்தரைநீயறியாயோடா ... ... (கால)

உ. ராமகிருஷ்ணர்களென்றும் - இருவர்
நாமம்அனேகமாகக்கொண்டும்
பூமியிற்புதுமையண்டும் - அந்தப்
புத்திரரைநீயறியாயோடா ... ... ... (கால)

௩. எல்லவருக்குஞ்சிக்கா - னவன்
இல்லாதவிடம்லுத்தர்வீடுதுலுக்கா
நல்லவரிடத்திலெக்கால - நித்திய
னுடுமுவரைநீயறியாயோடா ... ... (கால)

௪. கஞ்சனையும்வதைத்தான் - வந்த
வஞ்சமல்லரையன்றுவாட்டிச்சிதைத்தான்
பஞ்சாயானையையுதைத்தான் - அந்தப்
பாலரிருவரைநீயறியாயோடா ... ... ... (கால)

௫. பூதனையைக்கொன்றான் - வந்த
மோதன்சகடனைமோதியேவென்றான்
நீதமத்தியில்நின்றான் - அங்கே
நேருஞ்சிறுவரைநீயறியாயோடா ... ... (கால)

௬. கன்றைவிளவிலெறிந்தான் - சுற்றி
என்றுமரக்கரையிம்சித்திருந்தான்
கொன்றுவிருதுமெத்த - லட்சுமி
கூறவிருப்பவனையறியாயோடா ... ... (கால)

வசனம்.

நாரதரைக்காலயவன் கண்ணனுடைய வடையாளங்களைச் சொல்லக் கேட்க அவர்அடையாளங்கூறுதல்.

விருத்தம்.

நாரதனுமிவ்விதமாயுரைத்துநிற்க
நயந்தபடிச்செய்தவெல்லாநோக்கியங்கு
சூரனெனத்திரியுமந்தச்சிறுவரையேநேரில்
சூழ்ந்துடனேபோர்செய்யக்கருத்துட்கொண்டு
கோமரும்விஜிப்பயனுமவனைத்தள்ள
நீணிலத்தில்வாழ்நாளுநெருங்கமுன்னில்
சீரமருமப்பயல்கள்ரூபமுற்றுஞ்
செப்பென்றானறிந்தபடியொப்பென்றானே (௩௨௫)

இராகம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. காளமேகம்போல் காயமுடையவன்
அடையாளங்கேளும்
கனககுண்டலம் காதிலுடையவன்
அடையாளங்கேளும் ... ... ... *

௨. பூரணவித்தையும்பொதுவாய்க்கற்றவன்
அடையாளங்கேளும்
போரிலேவல்லவர் புறமதுகாட்டான்
அடையாளங்கேளும் ... ... ... *

௩. அண்ணனும்வெண்மையாய் அவனோடிருப்பன்
அடையாளங்கேளும்
அருமையாங்காரியம் யாவுஞ்செய்குவன்
அடையாளங்கேளும் ... ... ... *

௪. உச்சியிற்றோகை யொருவன்கட்டுவன்
அடையாளங்கேளும்
ஒன்றுமறியாரை யொத்திடுமவனுடை
அடையாளங்கேளும் ... ... ... *

௫. தாம்பினாற்கட்டிய தழும்புகளுள்ளவன்
அடையாளங்கேளும்
தரணியில்வரையைத் தாங்கியகையன்
அடையாளங்கேளும் ... ... ... *



௬. தஞ்சமென்றவர்க்குத் தயிரியஞ்சொல்பவன்
அடையாளங்கேளும்
தையல்லட்சுமி மெச்சிடும்வடிவன்
அடையாளங்கேளும் ... ... ... *

வசனம்.

நாரதர்போனவுடன் காலயவன் மூன்றுகோடி மிலேச்சர்களுடன் மதுரையைச்சூழக் கண்ணன் அண்ணனுக்குச்சொல்லல்.

விருத்தம்.

அடையாளமிந்தவிதஞ் சொல்லிப்போனார்
அடுத்துடனேஜராசந்தன்காலயவன்றன்னைக்
கடையானமடைப்பயல்கள்தம்மைக்கொல்லக்
கடுகெனவேநீயொருகைபாரென்றோத
இடையாதமிலேச்சனுமேசேனையோடு
எப்புறமுமதுரையினைச்சூழக்கண்ணன்
குடையாதபடிநம்மூர்ச்சனத்தையண்ணா
கூட்டுவோம்ஓரிடத்துள்நாட்டுவோமே ... (௩௨௬)

இராகம் - சாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

சங்கருஷணநீரும் - மதுரைசுற்றி
சத்துருவளைந்தான்பாரும்

தரு.

௧. சங்கருஷணகேளும் - சகலநம்மவருக்கும்
எங்காகிலுந்துருக்கம் - ஏற்படுத்திடவேண்டும் ... (சங்)

௨. ஏற்படுத்தாவிட்டால் - ஏறிச்சராசந்தன்
இன்றைக்கோநாளைக்கோ - எதிர்த்துயுத்தமுஞ்செய்வன் (சங்)

௩. யுத்தத்திலெல்லாரு - முற்றுஞ்சண்டைசெய்யாமல்
ஒருத்தரொருத்தராக - ஓண்டியேபோரிடுவார் ... (சங்)

௪. ஒருத்தனைத்தடுத்துநாம் - ஊடாடிநிற்கையில்
ஒருத்தனுள்ளேநுழைந்து - ஊரைக்கொள்ளையிடுவான் (சங்)

௫. கொள்ளையிடுவதன்றி - கொன்றுயாதவர்களை
உள்ளிருக்கும்பெண்களை - யொடுங்கச்சிறையில்வைப்பான் (சங்)

௬. அப்படிச்செய்யாமுன்னே - யனைவரையுஞ்சேர்த்து
இப்போதுவோரிடத்தில் - இருக்கச்செய்யவேவேணும் (சங்)

வசனம்.

இவ்வாறுகண்ணன் அண்ணனுக்குச் சொல்லிக் கடல்நடுவில் ஒரு துருக்கம்கட்டும்படி விசுவகர்மாவுக்குத் திட்டஞ்செய்ய அவன்கட்டுதல்.

விருத்தம்.

என்றிந்தவிதமண்ணன்காதிலோதி
எம்பெருமான்திருவுளத்தில்நினைத்தபோது
மன்றுவிட்டுவிசுவகர்மாவினையமாக
மலரடிமேல்வீழ்ந்துவாய்பொத்திநின்று
இன்றென்னையழைத்தகாரியத்தையோதி
ஏழைக்குத்திட்டமதுசெய்வீரென்னக்
கன்றெடுத்தேயெறிந்தவனுங்கடலுக்குள்ளே
கடியென்றொருதுருக்கமுடியென்றானே (௧௨௭)

இராகம் - பியாகு - ஏகதாளம்.

பல்லவி.

கட்டினான்துவாரகாபுரி - கடலில்விசுவகர்மா-
கடலில்விசுவகர்மா-

அநுபல்லவி.

அட்டதிக்குப்பாலருடையபட்டணமுந்தோற்கும்
இட்டமாகவேராமற்குங்கண்ணற்கும்
இழைத்துக் - கல்லறுத்துச் - சந்தடைத்து - முத்தமுத்தி (கட்)

தரு.

௧. ஆகாயத்தையளவுந்திருமதிலுந்தேறவே
அரமனையாஸ்தானவீதியந்தமேறவே
நாகலோகக்கன்னியுங்கண்டு நயந்துகூறவே
நான்முகனுடைநகரநாணவே
காட்டி - வெளிகாட்டி - படந்தீட்டி - மணிகூட்டி ... (கட்)

௨. வீடுகள்தோறுஞ்சாளர வேதிகைகளும்
விளங்குநவரத்தினமிழைத்த விசித்திரவகைக்களும்
நாடுஞ்சந்திரகாந்தத்தூண்கள்நாட்டுந்தகைகளும்
நளினபச்சைபோதிகையுடன்
நாட - சவைதேட - பலவோட - நிழலாட ... (கட்).

௩. சூரியனுகாயந்தன்னில் வந்துநிற்கவும்
சொர்னதவங்கள்திறக்குஞ்சமையம்பார்க்கவும்
ஆரிபருஞ்சேரவரும் அழகையேற்கவும்



ஆரணவேதங்களோத
அரிய - திருவிரிய - அதிபிரிய - மனைதெரிய ... (கட்)

௪. திங்கள்முதலொளியு நானுந்தீபஸ்தம்பமும்
தீதகலகிணறு நடபாவிகும்பமும்
மங்களமாயங்குநட மாடும்பிம்பமும்
மாணிக்கப்பணியுங்கொண்ட
மாட - வரிகூட - ஒளிபீட - கரியாட ... ... (கட்)

௫. வாயுவருவழிகள்யாவும் வகையாய்க்காட்டியே
வாசவனிதைப்பார்க்கமெத்த மனதைக்கூட்டியே
ஆயமொன்றுங்கண்டிராத அந்தந்தீட்டியே
ஆணிப்பொன்னினுலிழைத்த
அறையுந் - திருவுறையும் - புகழ்நிறையும் - பெருகறையும் (கட்)

௬. செங்கெற்கொத்துவாழைக் கமுகெங்குங்கட்டியே
சேருமணமாலை புட்பச்சித்திரமொட்டியே
கன்னல்பலாதென்னை சோலைமுற்றுநீட்டியே
கருத்தின்படியே செய்துமுடித்து
கண்டு - சொலவிண்டு - நலமண்டு - மகிழ்கொண்டு ... (கட்)

வசனம்.

கண்ணன்தனதுபந்து முதலியயாதவர்களையெல்லாம் துவாரகையிற் சேர்த்ததைப்பற்றிச் சொல்லுதல்.

விருத்தம்.

கருதரியதுருக்கமொன்றுகடலுக்குள்ளே
கண்ணனைமனப்படியேசெய்ததச்சன்
அருகுற்றேயவனடியில்வீழ்ந்துநின்றே
அதன்முடிவைச்சொல்லிவிடைபெற்றுச்சென்றான்
தருவைநிகராகவிருந்தென்றுமூழைத்
தாங்கிநிற்குமெம்பெருமான்யோகத்தாலே
கருவுடையபந்துபசுதோழர்தம்மைக்
காத்திட்டான்துவாரகையிற்சேர்த்திட்டானே (௧௨அ)

இராகம் - மோகனம் - சாபுதாளம்.

பல்லவி.

சேர்த்தான் இனத்தோரை - பயமில்லாமற்
காத்தான்இனத்தோரை

அநுபல்லவி.

சேர்த்தான்இனத்தோரைச் - சிறக்கத்துவாரகைதன்னில்
பார்த்துத்துவாரதேவர் - பலமாகக்காக்கமுன்னில் ... (சேர்)

தரு.

௧. சுதர்மமென்னும்பீடம் - அதுமுன்னம்
சொல்லுமதுரைநகர்க்கு
அனுப்பியிருந்ததையிப்போ - அவனளிக்கவூர்க்குள்
ஆரவே - இனஞ்சேரவே - தனமீறவே - மனநேரவே (சேர்)

௨. மூன்றுலட்சம்அஸ்வம் - வருணன்தேடி
முகுந்தனுக்கீந்தானன்று
எந்தலாங்கண்ணனும் - எல்லாரையுமதற்குள்
ஏற்றவே - மலர்தூற்றவே - அடிபோற்றவே - தலமாற்றவே (சேர்)

௩. அந்தந்தத்திக்குப்பாலர் - உள்ளபொருள்
அவையுமளித்தார்வந்து
சந்துபொந்தில்லாமற்சமைத்த - நற்றுருக்கத்தன்
சாரவே - அவரூரவே - கைதீறவே - மதிதேறவே ... (சேர்)

௪. என்னதவங்கள்செய்தார் - துவாரகைதன்னில்
இடையரிருந்துவாழ
பன்னுலட்சுமிகூடிப் - படிக்திருக்கத்தடத்தில்
பாடவே - ஜனங்கூடவே - ரதியாடவே - ஜய்காடவே (சேர்)

வசனம்.

யாதவர்களைத் துவாரகையிற்சேர்த்த கண்ணன் பலராமர்சகிதராய் மதுரையைவிட்டுத் தனியேவருபவரைப்போல் நிராயுதராய்வரக்கண்ட காலயவன் நாரதர்சொல்லிய அடையாளத்தொடு விளங்குந் தன்மையெல்லா மொத்திருக்கக் கோபித்துப்பார்க்குதல்.

விருத்தம்.

சேர்த்தங்கேயினத்தாரைச்சுகிக்கச்செய்து
சிறக்கவேகண்ணனண்ணனிருவராகப்
பார்த்தவர்கள்மதுரைவிட்டுவீதிதன்னில்
பழையபடிநடந்துலவித்திரிவார்போல
வார்த்தைசொல்லிவருபவரைக்கண்டுமீறி
வந்துயிரை யிழக்குங்கா லயவனுமன்று
மூர்த்தியாமுகுந்தனென்றெண்ணுமற்கோபம்
மூட்டுவான்கெடுமதியாற்காட்டுவானே ... (௩௨௧)



391

இராகம் - தோடி - ஆதிதாளம்.

பல்லவி.

கண்டானேகாலயவன் - கண்ணன்வரவுங்
கொண்டானேகோபமவன்

அநுபல்லவி.

அண்டமளந்ததாளன் - அடுத்துவருகவும்
கண்டந்தமூடனுங் - கடுத்துப்பெருகவும் ... ... (கண்)

தரு.

௧. சதுர்முகன்முதலோர்கள் - தபசுசெய்துங்காணாத
சகஸ்திரநாமஹரியும் - பதிதன்தன்முன்னாக
எதிர்த்துறவுங்கண்ட - இம்மூடன்புத்திகெட்டு
ஏதோவாபார்ப்போமென்று - ஏற்றனையழகனை ... (கண்)

௨. ஆனைசேனைகுதிரை - அஸ்திரசஸ்திரமுதலாய்
ஆயுதமொன்றையும் - அஸ்தந்தன்னிற்றொடாமல்
கானல்வெயிலெறிக்கக் - கால்நடையாய்நடந்து
கடுகிவரவுங்காலக் - கதியாலிவனுஞ்சாகக் ... (கண்)

௩. நல்லதனமுஞ்செய்து - நயந்தெந்தனுடன்பேசி
நாட்டைவிடவுஞ்சொல்லி - ஞாயங்கள்பேசவோ
வெல்லமனதுவைத்து - வேகமாய்வாரானோ
வேறென்னகாரியம் - விதிதள்ளிவந்ததென்று ... (கண்)

௪. நாரதன்சொன்னபடி - நானிலத்திலழகாம்
நன்னீலகாந்தியும் - நடையலங்காரமும்
வீரனைப்போலிருகை - வீசிவெகுயடைவாம்
வேண்டும்லட்சுமிரூபன் - விமலன்விபவமுற்றும் ... (கண்)

வசனம்.

கபடநாடகனாகியகண்ணன் காலயவனைக்கண்டு பயந்தவன்போலோடுதல்.

விருத்தம்.

தண்டுளமார்பனையிவ்விதமாய்க்கண்ட
தடியனுமடைத்துழுக்கன்வினையினாலே
அண்டிவருமண்ணனுடன் போரோசெய்ய
அடுத்திவனுங்குதித்தெதிர்த்து வருகநேரில்
கண்டுமிகப்பயந்தான் போற்கண்ணனன்று
கையிலாகாதவனன்ன வோடல்நோக்கிப்

பண்டுபலபேரையிங்குஜெயித்தவீரப்
பதியென்றனிதுவென்னமதியென்றனே ... (௩௩௰)

இராகம் - ஆகிரி - ஆதிதாளம்.

பல்லவி.

ஓடாதே ஓடாதே - யுத்தத்துக்குப்பயந்து
ஓடாதே ஓடாதே

அநுபல்லவி.

நீடாதே நீலமேகனேயின்று
நில்லுநில்லுஒருகையென்னுடன்பாரு ... ... (ஓடா)

சரணம்.

௧. குவலயாபீடத்தைக் - கொன்றதிப்படியோடா
குலைந்து திகிலடைந்து - குலையுகடுக்கநீ ... (ஓடா)

௨. சாணூரமுஷ்டிகனைச் - சதைத்தவனீயோடா
சண்டைக்குப்பயந்து - சவுரியங்கெட்டுநீ ... (ஓடா)

௩. மதுராதுராகஞ்சனை - மடித்தவன்நீயோடா
மானங்கெட்டேடல் - வாழிவுஞ்சாமேல்நீ ... (ஓடா)

௪. ஜராசந்தன்முதலோரைச் - செயித்தவனீயோடா
சாதித்துலுக்கன்தனக்-கஞ்சியிப்போதுநீ ... ... (ஓடா)

௫. கக்ஷியற்றவனே - காலைமேய்க்கிப்போல
லக்ஷ்மிபோல்வார் - நகைக்கும்படியாநீ ... (ஓடா)

வசனம்.

காலயவன் தன் சாமர்த்தியத்தைச் சொல்லி ஓடினலும் விடேனென்று சொல்லுதல்.

விருத்தம்.

நீதிகளைச்சொல்லியவன் பின்றொடர்ந்து
நித்தியனைப் பயந்தோடுபவனுயெண்ணி
ஆதியிலேயயனெழுத்தின்படி மிலேச்சன்
அடுத்துமனங்கடுத்துத் தன்கால்வலிக்கச்
சோதிநெடுமாலடியைத் தொடர்ந்துகிட்டிச்
சூதுசுழல்வித்தையினையறியா மட்டி
எதிலான்வலியைத் தூக்காமல்முற்றும்
ஏசுவான்மடிமையினற் பேசுவானே (௩௩௧)



இராகம் - அடாணு - அடதாளம்.

பல்லவி.

விடுவேன்நானென்றெண்ணுதே - அடடா
கெடுவாய்நீதுள்ளியோடாதே

அநுபல்லவி.

விடுவேனுவுன்னைநான் - வேலையிலொளித்தாலும்
வடுவேபடப்பிடித்து - வதைப்பேனிப்போதடித்து ... (விடு)

௧. அண்டர்கள்வந்துனக்கு - இத்தருணத்தில்
அடுத்துதவிகள்செய்தாலும்
மண்டலத்தோர்கள்கூடி - எந்தனுடனே
மாறுடவந்தாலும்
மடக்குவேன் - கர்வம் - அடக்குவேன் - சொல்லி
ஒறுக்கிறேன்தலைதனை - நறுக்கிறேனல்லாமல் ... (விடு)

௨. கானகந்தன்னிற்சென்று - கண்படாமல்
கபடமாய்மறைந்தாலும்
ஆனமலைக்குகையில் - வராமல்நான்
அடுத்துநீயுறைந்தாலும்
நாடுவேன் - விடாமற் - கூடுவேன் - என்றும்
காட்டுவேன்கைத்திறம் - காட்டுவேனல்லாமல் ... (விடு)

௩. திருமூர்த்திகளுங்கூடி - யுனக்கிங்கு
திறமாயுதவிசெய்ய
வருகீர்த்தியுடனின்று - வழிதேடி
வாட்டுவேனீநய்ய
வருத்துவே - னுன்னைத் - திருத்துவேன் - கட்டி
இருத்துவேன்தீயினிற் - பொருத்துவேனல்லாமல் ... (விடு)

௪. கண்டவர்சேர்ந்துநின்று - கதையாகக்
கண்ணுவுந்தனைப்பேச
வண்டமர்கொண்டைலட்சுமி - வனிதைபோல்வார்
வாயாலுந்தனையேச
எடுக்கிறேன் - கையினல் - முடுக்கிறேன் - பெயர்தனை
ஒடுக்கிறேனின்றோடே - கெடுக்கிறேனல்லாமல் ... (விடு)

வசனம்.

கண்ணன் காலயவனையலக்கழித்ததைச் சொல்லுதல்.

விருத்தம்.

விடுவேனோநானென் றிவ்விதமாயன்று
விதிகிழியப்பின்றொடர்ந்தேயேகிநேர்
கடுநிலைமைகண்ட ஸ்ரீந்தபகவான்முற்றும்
நடுங்கியேபோகின்றானெனவுமெண்ணக்
கடும்புள்ளுங்கல்லுகளுமுறுத்தத்தேகங்
கசடனதுமனனையக்கோபமேற
அடுசித்தமோடுவருமசட்டுநாயே
ஆவென்றான்நெருங்கியதுன்சாவென்றானே (௩௩௨)

இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்

பல்லவி.

நெருங்கிறப்போலேவருவன் - கசடன்
நெருங்கினால்தூரத்தில்தெரிவன்

அநுபல்லவி.

மருங்குடனோடி மடையனுமெதிர்க்க
மணிவண்ணனை மனிதனாகவேமதிக்க ... ... (நெரு)

௧. பிடிபிடியென்று கண்ணனழைப்பன் - பேயன்
பிடிக்கவந்தாற் றொலையிலிருப்பன்
அடியாகவேயோட - தூர்த்தன்மனதுவாட
கடிகிக்கண்ணனைத்தேட - காலன்வரவைநாட ... (நெரு)

௨. நாலுபக்கமுஞ்சுற்றித்திரிவன் - துலுக்கன்
நாடிவந்தாலெதிரிற்றெரிவன்
காலுமிகக்கடுக்க - காடுமலையடுக்க
கண்ணன்தனைப்பிடிக்கக் - காலமின்றேவெடிக்க ... (நெரு)

௩. பள்ளந்தனிற்கண்ணன்மறைவன் - பாபீ
பார்க்கவுந்தானங்கிலிறைவன்
மெள்ளமெள்ளநடக்க - மிலேச்சன்கொழுப்படக்க
கள்ளன்வனங்கடக்க - கருத்தின்படிமடக்க ... (நெரு)

௪. விருக்ஷத்தின்கீழிலேபடுப்பன் - வீணன்
வீசிவரவுமோட்டம்எடுப்பன்
கிருஷ்ணனையவன்மெத்த - கேலிசெய்துசுற்ற
கேள்வன்லக்ஷ்மிதத்த - கேசவனும்எத்த ... ... (நெரு)

வசனம்.

கண்ணனைத் துரத்தியோடிய காலயவன் குகையில் நுழைந்தவுடன் கிருஷ்ணன் மறைந்தது.



விருத்தம்.

வகையானவெப்பொருளுந்தானாயிருந்தும்
வையமுண்டபெருமானேயாயிருந்தும்
தொகையில்லாப்பலநாமங்கொண்டிருந்தும்
தொங்கண்டமுனதேகமாயிருந்தும்
தகையில்லாமனிதரைப்போலோடியன்று
தன்னையறியாதபடிநடித்துக்காட்டிக்
குகைதனிலேசென்றங்குபுகுந்துகொள்ளக்
கூறினான்துடுக்கனுயிர்மாறினானே ... (௩௩௩)

இராகம் - பியாகடை - சாபுதாளம்.

பல்லவி.

குகையில் நுழைந்தானே - விதிபோலத்
தகையிலிழைந்தானே

அநுபல்லவி.

குகையில் நுழைந்தானே - கோபதாபத்தாலே
வகையில்மதிகெட - வல்லுயிரும்பட ... ... (குகை)

சரு.

௧. ஓடிமலைத்தும்பில் - புகுந்தங்கே
உறங்கும்வேந்தனைக்கண்டு
வாடியிங்கேயொளித்து - வம்பனெனக்களித்து
நாடியவனைப்பற்ற - நமனிவனைச்சுற்ற ... ... (குகை)

௨. பட்டசிரமத்தாலே - துலுக்கனும்
பதறிக்கண்டவனென்று
எட்டிச்சிரசின்மேலே - இட்டான்உதைபொன்று
கெட்டதவன்தூக்கம் - கேசவனைப்பார்க்க ... (குகை)

௩. இவ்விதமாயெண்ணி - யிவடத்தில்
இருந்தால்வரேனென்று
மந்தமதியோடுற்ற - மடையாவென்செய்தாயென்ன
சிந்தியாமற்பழிக்கச் - சீக்கிரங்கண்விழிக்க ... (குகை)

௪. அண்ணலுங்கண்திறக்கத் - துடுக்கனும்
அழிந்தானிறுதி
எண்ணமெடுத்தபடி - யெப்படியுமுடிக்கும்
கண்ணன்மனப்படியே - கடையனும்போய்மடிய ... (குகை)

வசனம்.

முசுகுந்தசக்கிரவர்த்தியின் சங்கதிகளைப்பரீக்ஷித்துக்குச் சுகமுனிவர் கூறுதல்.

விருத்தம்.

நெடியவனைக்குகைதனிலே யரசனேகி
　நீணிலத்திலுறங்கி நின்றனெனவுரைக்க
வடியவருந்தெள்ள முதகுணத்துத்தூய
　வடிவாலமாமுனியே மகிழ்ந்தெனக்கு
முடியுடையமுசுகுந்தன் கதையைச்சீராய்
　முற்றுமேதனைய கூர்ந்தேயருள்வீரென்ன
அடியனும் பரீக்ஷித்துக்கேட்டவாறு
　அறிவிப்பானொருவிதமாய்த் தெரிவிப்பானே ... (௧௬௪)

இராகம் - தேவகாந்தாரி - சாபுதாளம்.

பல்லவி.

பரீக்ஷித்தேநீர்கேளுஞ் சொல்லுகிறேன் - அவன்
பழையசரித்திரத்தை

அநுபல்லவி.

பரீக்ஷித்தேநீர்கேட்டதிறற்சொல்ல
பாரிலவன்விருத்தாந்தமிதுநல்ல ... ... (பரீ)

தரு.

௧. இக்ஷ்வாகுவம்சத்தில்மனுமாந்தாதிகள்
இஷ்டபுத்திரன்காணும்
பக்ஷமாகுமந்தக்ஷத்திரியகுலத்துக்குப்
பாவனன்அவன்காணும் ... ... ... (பரீ)

௨. காரணத்தாலேபுத்திரபவுத்திராதிகள்
கடந்தாரிவ்வுலகம்
வாரணங்காத்தான்பக்தரிலிவனொரு
வையகத்தில்திலகம் ... ... ... (பரீ)

௩. விண்ணவர்முன்னலசுரர்க்குப்பயந்து
விரும்பினார்பதியாக
கண்ணீராறுகளுடையவறுமுகக்
கடவுளும்விதியாக ... ... ... ... (பரீ)

௪. சேனபதியாகச்சேவற்கொடியோனும்
சேர்ந்தானேகொண்டு



னானவிதமாகத்தேவர்கள்கூடி
நடந்தாரோபண்டு ... ... ... ... (பரீ)

௫. இந்தமட்டுந்தள கர்த்தனைஎங்கட்கு
இருந்தநிலையின்று
சிந்தையில்மோக்ஷந்தவிரநீகோரும்
செப்புந்தருவோமென்று ... ... ... (பரீ)

௬. உரைதனைக்கேட்டுஅசுரரைவென்றுநான்
ஒடுக்கினதற்காக
வாரைதனிற்சென்றுகண் - வளரவேயெனக்கு
வரந்தருவீராக ... ... ... ... (பரீ)

௭. இந்தாபிடியென்று தேவருமப்போது
ஈய்ந்தாரேகொள்ள
அந்தவசனத்தையரசனுந்தாங்கியே
அடுத்தானிதற்குள்ளே ... ... ... (பரீ)

௮. நித்திரைசெய்கையில் மத்தியிலெவர்களும்
நிலத்திலெழுப்பினாலே
பற்றியேதேகம் - பஸ்பமாயுடனே
படிவார்மண்மேலே ... ... ... (பரீ)

௯. இருபத்தேழ்யுகமா யுறக்கமேசெய்து
இருந்தானிதவாக
திருலக்ஷ்மிநாதன் வருமட்டுக்குகைதனை
தேடிப்பதமாக ... ... ... ... (பரீ)

வசனம்.

கண்விழித்தஅரசன் ஜெகசோதியாகத்திவ்விய சேவைசாதித்திருக்கும் எம்பெருமானைக்கண்டு அக்கியானத்தால் யாரெனக்கேட்டது

விருத்தம்.

இவ்விதமாய்முசுகுந்தன்கதையைச்சொல்லி
　எம்பெருமான்சரிதையினியியம்பக்கேளும்
செவ்விதரும்பீதாம்பரதரனேயாகிச்
　சேர்ந்ததிருக்கரங்களிற்சங்காழிகொண்டு
அவ்விடமுஞ் சோதிமய மாகமுற்றும்
　அரசனுஞ் ஞானத்தா லரியைக்கண்டும்
எவ்விடத்துச் சீமானே வந்ததிங்கே
　யதென்றான் கானறிய வோதென்றானே ... (௧௬௫)

இராகம் - முகாரி - ஆதிதாளம்

பல்லவி.

ஆனந்தச்சேவைதந்தவர்நீராரோ
அறியச்சொல்லுஞ்சுவாமி

அநுபல்லவி.

நானெந்தநாளிலும் நானிலத்திற்காணாத
கல்ரூபமேனியோய் நான்காணும்படியிங்கு ... (ஆன)

தரு.

௧. இந்திரனோசந்திரனோ - ஈசன்சதுர்முகனோ
எதிராகவந்தவராரய்யா
மந்திரவேதங்களோதும் - மர்மம்போலுமுற்ற
மாதவனேயொன்று மறையாமலேமுற்றும் ... (ஆன)

௨. சிலையுங்கல்லுமுள்ளுஞ் சேர்ந்தவரைமீதிற்
றேடியேவந்தவராரய்யா
மலைகுகைதன்னிலே வந்து இருள்போக்கி
மாசற்றதீபம்போல் - மறவாவருள்தேக்கி ... (ஆன)

௩. கோட்டிசூரியனிங்கு கூடியுதித்தாற்போல
குகைதனில்வந்தவராரய்யா
பூட்டியபூஷணம் வனமாலைசாற்றியே
புரளும்படியெதிரில் புனிதமாய்த்தோற்றியே ... (ஆன)

௪. சுற்றியெந்தனையிவன் சூழ்ந்துஎதிரில்வந்து
துடுக்காலுதைத்தவனாரய்யா
நித்திரைதெளியவே நீசன்நீறுகிப்பார்க்க
சித்தத்திலதிசயச் சேவைகொண்டுஏற்க ... (ஆன)

௫. இச்சகந்தன்னில்லக்ஷ்மி யிஷ்டங்கொள்ளும்ரூபா
இதனுள்நுழைந்தவர்நீராரய்யா
நிச்சயம்நானறிய நீதமாய்வாய்மலர்ந்து
நேர்ந்தபடியருளும் நேத்தியாகக்கலந்து ... (ஆன)

வசனம்.

கண்ணன் திருவாய்மலர்ந்து தன்வரலாற்றை யரசனுக்கு ஒருவிதமாய்ச் சொல்லுதல்.

விருத்தம்.

ஆனபடி யரசனித்த விதமாய்க்கேட்க
அய்யனுமே யருள்சுரந்தப் பதியைநோக்கித்



தானவரும் பூமியுள்ள மனிதர்மக்கள்
தங்குகின்ற ஜீவசெந் துகளோடு
வானவரு மெனதுவிருந் தாந்தமுற்றும்
வகைவிபர மறியார்க ளாகையாலே
ஞானமதி யுடையாய் நான்வந்தகாரியம்
நாட்டுவேன் மகிழ்வாகக் காட்டுவேனே ... (௩.௩.௬)

இராகம் - மோகனம் - சாபுதாளம்.

பல்லவி.

நான்வந்தகாரியநேமம் - ஸ்ரீமந்
நாராயணனெந்தன்நாமம்

அநுபல்லவி.

நான்முகன்முதலோர்கள் பூதேவியொடுசாற்ற
நம்மைப்பூபாரத்தைத் தீர்க்கும்படிப்போற்ற ... (நான்)

தரு.

௧. தர்மசமஸ்தாபனஞ்செய்ய - பொல்லாக்
கர்மிகளையெல்லாங்கொய்ய
மர்மத்துடனந்த வசுதேவர்க்குச்சிறந்த
மைந்தனாகவேவந்து மகிதலத்திற்பிறந்த ... (நான்)

௨. கம்சன்முதலானபேரை - பாரில்
கண்டித்தேனேசென்றுநேரே
அம்சம்முதலான அவதாரங்கள்முந்த
அசுரர்தமைவதைக்க ஆய்க்குலத்தில்வந்த ... (நான்)

௩. அதட்டியேயென்னுடன்வந்தான் - கொழுத்த
அசடனுங்குகைதனிற்புகுந்தான்
பதட்டமாகவேயுன்னைப் பங்கப்படவுதைக்க
பஸ்மாய்ப்போகவும் - பார்த்திடவுநகைக்க ... (நான்)

௪. ஆதியுமந்தமுநானே - சகல
அண்டபிண்டமெல்லாம்நானே
நீதியாகவிந்த நீசனைச் சிக்ஷிக்க
நிறைலட்சமிநாதனுப் பக்தனைரக்ஷிக்க ... (நான்)

வசனம்.

முசுகுந்தன் எம்பிரானை வரங்கேட்குதல்.

விருத்தம்.

கண்ணன்றன்னவதாரவைபவத்தைக்
கருத்திலேபடும்படியாகச்செய்து
திண்ணமாமுனக்கினிமேலென்னவேணடுந்
தீவரமாயுரைத்திடுகவெனவுமன்னன்
அண்ணலேயிவ்வுலகத்தாசைமுற்றும்
அகற்றியேயடியன்மேற்கிருபையாக
நண்ணவேயென்மனதைத்திருத்தித்தேற
நாட்டுவீர்நின்னடியிற்கூட்டுவீரோ ... ... (௧௩௭)

இராகம் - எதுகுலகாம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

ஜென்மம்வேண்டாம் - இனி
ஜென்மம்வேண்டாம் - ஸ்ரீதரா - ஹரி - முகுந்தா
ஜென்மம்வேண்டாம்

தரு.

௧. பிறப்பதுமிறப்பதும் பிரபஞ்சத்திலுழல்வதும்
மறப்பதுமாயிந்த மானிடக்கூடொழிய ... ... (ஜெ)

௨. மலஞ்சலங்கிருமிசர்ம மாம்சவுதிரத்தோடு
நிறைந்தசரீரமிந்த நிச்சயங்கண்டதுபோதும் ... (ஜெ)

௩. தாரபுத்திராதிகள் தனதான்னியங்களும்
சாஸ்விதமாயெண்ணித் தானிருந்ததுபோதும் ... (ஜெ)

௪. தோற்றுருத்தியில்மூச்சு காற்றுபுகுந்ததெனச்
சோற்றுத்துருத்தியிதைச் சுமந்துநின்றதுபோதும் ... (ஜெ)

௫. அரசனுனென்றுசொல்லியகம் பாவங்கள்பண்ணி
அநித்தியமிவ்வுடற்கொண்டு அலைந்துநின்றதுபோதும் (ஜெ)

௬. ஆடுகள்தழைகள்மேய அடுத்துக்கிணற்றில்தாவி
ஓடிவிழுவதுபோல - உள்ளசரீரம்போதும் ... (ஜெ)

௭. ஐம்பொறியையடக்கி - அகோரதவங்கள்செய்து
எம்பெருமானைக்காண - இந்திரபட்டங்கேட்பார்போல (ஜெ)

௮. தேடப்போனசஞ்சீவி - ஓடியெதிரில்வந்து
நாடியதெனலட்சுமி - நாதாவுந்தனைக்கண்டு ... (ஜெ)

வசனம்.

**கண்ணன் முசுகுந்தனுக்கு வரங்கொடுத்தல்.**



விருத்தம்.

ஜென்மமெனக்கினியளியாவண்ணமாக
ஜெகதீசாமனமிதங்கியேழைக்கின்று
கன்மமிந்தவுடலெடுத்துவாழுநாளிற்
கர்க்கருணைத்திருந்தபடியாகக்கண்டேன்
தன்மமுந்தன்திருவடியிற்சேர்த்துக்கொள்ளத்
தயவாகவிவ்வரத்தைத்தருகவென்ன
இன்பமிருந்திடுபரமனினிமையாக
இயம்புவான்நிகாற்றசுயம்புவானே ... (௧௩௮)

இராகம் - மத்தியமாவதி - சாபுதாளம்.

பல்லவி.

இன்னொருஜன்மமெடுத்துப்புவிதனில்
இஷ்டப்படிநீயடைவேந்தா

அநுபல்லவி.

விண்ணவருடைய நியமனம்பெற்றுநீ
வேறொருஜன்மத்திற்கிடைக்கும்வேந்தா ... (இன்)

தரு.

௧. க்ஷத்திரியனுகப்பிறந்துஉலகினிற்
சஞ்சரித்தவுந்தன்கன்மநீங்க
வித்தகனுனகுலந்தனிற்கலந்து
வேதியனுகவந்திடுவாய்வேந்தா ... ... (இன்)

௨. உத்தரதிக்கினில்பதரிகாசிரமத்தில்
ஒண்டிநீபக்தியினுல்
மெத்தவுமரியதபசுகள்செய்தினி
வேண்டியபடியடைவாய்வேந்தா ... ... (இன்)

௩. அந்தபவுருஷ்ணகிரியையடைந்துநீ
அரியையமனத்திருத்தி
தந்தவக்காலையில் தனியாய்த்தவஞ்செய்யத்
தருவேனிவ்வரம்வேந்தா ... ... ... (இன்)

௪. பக்ஷிமிருகம்முதல் யாவையுங்கொன்றவுன்
பாவந்தொலைந்தேக
லக்ஷமிநாராயணனைநீஸ்துதிக்க
லபிக்குந்திருவடிபாதம்வேந்தா ... ... (இன்)

வசனம்.

கண்ணனும்பலராமனுமாகக் காலயவன்சேனைகளை யெல்லாமழித்து மதுரையில் அவரவர்விட்டுப்போன பொருள்களைச் சேர்த்தெடுத்து வாகனமீதிற் போட்டுக்கொண்டு துவாரகையைநோக்கி வரும்போது ஜராசந்தன் பதினெட்டாந்தரம் வந்தெதிர்த்ததைச் சொல்லுதல்.

கொச்சகம்.

௧. மன்னனும்வரங்கள்பெற்ற மகிழ்வினாலடிமேல்வீழ்ந்து
துன்னவேபடிந்தெழுந்து துயர்நீங்கிமனம்போற்சென்றான்
பன்னருங்கண்ணனப்போ பரிந்தண்ணனோடுசேர்ந்து
மன்னியமிலேச்சன்சேனை மடக்கியேவதைத்திட்டாரோ *

௨. வதைந்தவர்தம்மையெல்லாம் வானுடுசேரச்செய்து
புதைத்திடப்போட்டுப்போன பொருள்யாவுமதுரைதன்னில்
சிதைந்திடாதிருக்கச்சேர்த்துச் சீராகவருமார்க்கத்தில்
சதைந்திடவடிப்பனென்றே ஜராசந்தன்வருகின்றானே *

இராகம் - நாதனாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

வருகிறான்பதிதன் - கண்ணனைத்தேடி
வருகிறான்பதிதன் - (பதினெட்டாந்தரம்)

தரு.

௧. வருகவுங்கஜங்கட்கு மதஜலங்கள்வடிக்க
வாளுடைமன்னனுக்கு வலதுதோளுந்துடிக்க
பெருகவுஞ்சேனைவெள்ளம் பிரபலமாய்முடுக்க
பேதிக்கக்கண்ணனைப் பின்னோடியேயடுக்க ... (வரு)

௨. இருபத்துமூன்றக்ரோணிசேனைகளையுங்கூட்டி
ஏகமாய்மாரிகாலஇடிபோற்பேரியுங்கொட்டி
அருவருத்திடும்படி யன்றவன்கைநீட்டி
அண்ணனைகண்ணனையடிப்பதாகவதட்டி ... ... (வரு)

௩. அதட்டிவரவுந்தூளி யாதித்தனையுமூட
அதுகண்டதேவர்களறியாமையால்வாட
பதட்டமாய்ப்பாமரன்பாலர்களைத்தேட
பார்தனிற்காலத்தைப்பார்த்தவர்களுமோட ... (வரு)

௪. தேடிவருபவனை ஸ்ரீதரனுங்காண
கூடிக்கொணர்ந்தபொருள்கொட்டிக்கானகந்தோண
ஓடியிருவரும் ஒதுங்கிப்போகவுங்கண்டு
உற்றபடியுரைக்க ஓங்கியவனும்விண்டு ... ... (வரு)



வசனம்.

கண்ணனையும் அண்ணனையும் ஜராசந்தன்பழித்தல்.

விருத்தம்.

நாமமுடைராமகிருஷ்ணப்பயல்களேநீர்
நடுக்கமெடுத்தோடுதலும்நியாயமாமோ
பாமரரோர்பார்தனிலெங்குற்றபோதும்
படியநீர்கடலுக்குள்புகுந்தபோதும்
தூமமதுநுழையாததுவாரத்துள்ளே
தோன்றாமலங்கொளித்துக்கொண்டபோதும்
நேமமாய்ச்சொன்னபடியுலகைவிட்டு
நீக்குவேனுமதுயிரைப்போக்குவேனே ... (௩௩௧)

இராகம் - மோகனம் - அடதாளம்.

பல்லவி.

விடுவேனோநானுன்னை - சபதஞ்சொன்னேன்
வெறியாவோடாதேமுன்னே

அநுபல்லவி.

விடுவேனோநானும்மை - வீரன்மகதன்இம்மை
வேறெந்தத்தடத்துள்ளே - விரும்பிச்சென்றாலுந்தம்பி (விடு)

சரணம்.

௧. கோடாலிதனுசுவில் ஆயுதங்களனேகம்
கொண்டவனெதிர்த்தாலும்விடுவேனோ
நாடெல்லாம்நீர்சுற்றி நாடித்திரிந்தபோதும்
நரிக்கிரையாக்காமல்நானினிவைப்பேனோ... ... (விடு)

௨. ஆறுமுகத்துடனே யானதேவருங்கூடி
அரனயன்வந்தாலும்விடுவேனோ
நாறும்படியுடலை நறுக்கிப்பருந்துக்கும்
நாய்க்கும்பேய்க்கும் உனைநானிடாமலிப்போ ... (விடு)

௩. ஊழிதிரண்டதுபோல் உலகமெல்லாமுருண்டு
ஓடியேவந்தாலும் விடுவேனோ
நாழிபொழுதிற்குள்ளே நானும்மையெமபுரம்
நாட்டினிற்சேர்க்காமல் நான்விட்டுப்போவேனோ ... (விடு)

௪. பக்ஷமாகவுந்தன் பந்துதாய்தந்தையர்
பறந்தவர்சேர்ந்தாலும் விடுவேனோ
வக்ஷத்தில்லக்ஷ்மியை வைத்தவனோடியே
வந்தாற்றானாகிலும் வதையாமற்போகேனே ... (விடு)

வசனம்.

இவ்விதமாக ஜராசந்தன் சொல்லிப்பின்தொடர இவனைக்கொல்ல வேறொருவ னிருக்கிறானென அண்ணனுக்குக் கண்ணனுரைத்து இருவருமாக எதிர்ப்பட்டமலையின் மீதேறிப்பயந்தவர்போலப் போக்குக்காட்டித் துவாரகையிற் சேர்ந்தார்களென்பதை யறியமாட்டாதவனும் மலைமீதேறிச் சோதிக்கச்சக்தியற்ற மூடச்சிரோன்மணியாகிய ஜராசந்தன்மலையைக்கொளுத்தியதைச் சொல்லுதல்.

விருத்தம்.

விடுவேனோநானென்று பின்னேயோட
  விபுவாகுங் கண்ணனண்ணனிருவரன்று
நெடுவரையின்மீதேறிப் போக்குக்காட்டி
  நேராகத்துவாரகையே வந்துசேர்ந்தார்
படுபாவியிச்செய்கை தெரிந்துகொள்ளப்
  பக்குவமேயாகாதால் மனதுநொந்து
சுடுநெருப்பும்விறகுகளு மதனைச்சுற்றிச்
  சொருகினான் கொளுத்திமனம்பெருகினானே (௩௪௰)

இராகம் - தோடி - சாபுதாளம்.

பல்லவி.

வேகுதேபர்வதம் விருக்ஷங்களொடுகூட
மேகமண்டலம்நாட

அநுபல்லவி.

வேகுதேபர்வதம் வேகமாய்வேறாக
வேய்புதர்களும்பற்றி வெந்துடனீறாக ... ... (வேகு)

சரணம்.

௧. தடாகங்களும்வற்றித் தரைதானெனப்படிக்க
தணலாகமலைக்கல்லுந் தாங்கமலேவெடிக்க
அடையாளமில்லாமல் அவடமெங்குங்கருக்க
அரசனுமதுகண்டு அவனுள்ளமும்பெருக்க ... (வேகு)

௨. தொகையாகமலையுள்ள வேடர்களும்வேக
துயரானபுலிசிம்மம் தோன்றுமலேசாக
வகையானமிருகங்கள் வாழ்நாட்களுமேக
வதைந்தார்பாலரொன்று வாயாடும்படியாக ... (வேகு)

௩. கணைபோலப்பொரிகள் கிளம்பியெங்குந்தெரிய
கதிர்கதிராகவே கொழுந்துவிட்டெரிய



அணைகடந்தங்கே யக்கினியுஞ்சொரிய
ஆய்ப்பாலரிருவருமதமா மெனப்பொரிய ... (வேகு)

௪. அந்தமலையன்று அருணனைப்போல்விளங்க
அதித்துலையோருக்கு அழகுதீயாயிலங்க
வித்தைலக்ஷ்மிநாதன் வேடிக்கையாய்துலங்க
வேணுவெந்தானென்று வீணிலிவன்அலங்க ... (வேகு)

வசனம்.

பலராமர்திருமணம்.

விருத்தம்.

மலையதனைக்கொளுத்திய பின்மடையனன்று
  மனமகிழ்ந்தே தன்னிடத்துக்குற்றானென்று
கலையறிந்தசுகமுனி யவ்வாறுகூறக்
  கனகமணிமுடியணிந்த வரயன்மேலும்
நிலையெதுவுங்கண்டிருக்கு நித்தியானந்தன்
  நீள்சரிதையென்ன வெனத்தொடங்கிக்கேளும்
சிலைதோளான்பலராமன்திருமணத்தைச்
  செப்புவார்மகிமைதனை யொப்புவாரோ ... (௩௪௧)

இராகம் - பியாகு - தாளம் - அடதாளசாபு.

பல்லவி.

பலராமன் கலியாணச்சிறப்பை
பகருவேன்கேளாய் - நான் - புகலுவேன்கேளாய்

அநுபல்லவி.

௧. நலமுடையராஜரெவரும்நாளுமேபுகழு - வெகு
ரம்மியமாக விவ்வுலகிலெங்குமேதிகழும்
புவி யெங்குமேதிகழும் ... ... ... (பல)

௨. விதிப்படியே திருமணமுஞ் செய்துமுடித்தார் - வந்த
விண்ணவரும் மண்ணவரும் விரும்பிப்படித்தார்
புகழ்ச்சொல்லிப்படித்தார் ... ... ... (பல)

௩. ரைவதனென்கிறவரசன் நாடியுகந்தான் - தன்
நல்லபுத்திரிரேவதியைக்காண மலர்ந்தான்
அகந்தானு மலர்ந்தான் ... ... ... (பல)

௪. பண்டுபிரமதேவன் சொன்னபடிகளித்திட்டான் - அந்தப்
பாவைலட்சுமிபோலும் பெண்ணை ராமர்க்களித்திட்டான்
பலராமர்க்களித்திட்டான் ... ... ... (பல)

வசனம்.

இனிமேல் எம்பெருமானாகிய திருக்கண்ணன் உருக்மணிதேவியைத் திருமணஞ்செய்த விர்த்தையைச் சொல்லுகிறேன்கேளென்று சுகமுனி வர்பரீக்ஷித்துக்குச் சொல்லஆரம்பித்தது.

விருத்தம்.

எண்டிசையும்புகழ்கின்ற பலராமற்கோ
இவ்வகையாய்த்திருமணஞ் செய்தானபின்னர்
மண்டிவந்தசால்வாதி-முதலானோரை
மாதவனுமொவ் வொருவராய்ச்செயிக்கக்
குண்டினபுரமாளும் பீஷ்மராஜன்
குமரியாம் ருக்மணியைக்கண்ணனுக்குப்
பண்டினிய கல்யாண நிகழ்ந்தவிந்தைப்
பகருவார்பழைமறையைநிகருவாரோ ... (௩௪௨)

இராகம் - காபு - ஆதிதாளம்.

பல்லவி.

வெல்லு வெல்லும் வெல்லுமரசே - வினைகள்விட்டு நீங்கவின்று
வெல்லு வெல்லும் வெல்லுமரசே

அநுபல்லவி.

நல்லகதியுண்டாமந்த - நாரணனுடைகதையால் ... (வெல்)

சரணம்.

௧. கேட்கக்கேட்க ஆனந்தம்பிறக்கும்
கேட்டவுடனே கியானந்திறக்கும்
வாட்கையானபொய்ம்மைமபறக்கும்
வாசுதேவனுடையகதையால் ... ... (வெல்)

௨. கர்ணபூஷணமாய்த்தரிக்கும்
காலபாசவேனாப்பறிக்கும்
மரணஜனனவியாதியறுக்கும்
மாதவனுடையகதையால் ... ... ... (வெல்)

௩. காணக்காணக்காக்ஷிகொடுக்கும்
கண்டவுடன்கவலைவிடுக்கும்
பூணப்புதுவுடையாகவடுக்கும்
புண்டரீகாக்ஷன்கதையால் ... ... ... (வெல்)

௪. புசிக்கபுசிக்கருசியேதழைக்கும்
புனிதருறவுதன்னையழைக்கும்



நசிக்கவினைகள்வாங்களிழைக்கும்
ரமதுலக்ஷ்மிநாதன்கதையால் ... ... (வெல்)

வசனம்.

உருக்மணிதேவியின் அவயவாலங்காரத்தைச் சொல்லுதல்.

விருத்தம்.

இன்னனபலங்கள்யாவும்
எற்றமாய்ப்பெறலாமென்று
மன்னவன்பீஷ்மனுக்குதித்த
மைந்தனாவருக்குப்பின்னால்
பொன்னெனத்தோன்றிவந்த
புனிதருக்மணியின்தேகம்
உன்னருமெழில்சேர்ரூபம்
ஓதுவான்சாதுவானே ... ... (௩௪௩)

இராகம் - சஹானா - தாளம் - சாப்பு.

பல்லவி.

செய்யாள்ருக்மணி சிறந்தவழிவினை
செப்புகிறேன்கேளும் - வேந்தோன் - செப்புகிறேன்கேளும்

அநுபல்லவி.

மெய்யாய்கருமுகில் நாணுமவள்கூந்தல்
மின்பிறைநுதல்வில் லொக்கும்புருவமுள்ள

சரணம்.

௧. சேலைப்பழித்திடும் சிறந்தஇருவிழிகள்
சிமிழ்புனைநாசிமின்னாள்
மேலுஞ்செங்கனிபோல விளங்கும்அதரமொடு
வெண்டரளநகைவினா கமலவாய்மன்னும் ... (செய்)

௨. வள்ளையிருசெவிகள் வயங்கும்பளிங்குகன்னம்
மதிமுகசங்குகண்டம்
ஒள்ளியமென்பணை யொக்கும்புயமொடு
உயர்கனகும்ப வுபயஸ்தனமிலங்குஞ் ... ... (செய்)

௩. கற்பகமென்கரம் கடற்சுழிநிகருந்தி
காணருந்துடியிடையாள்
அற்புதஇளவாழை யனையதொடையிரண்டு
அலவன்போல்முழங்காலு மம்புயமலர்ப்பத ... (செய்)

௪. இன்பமோடனுதினம் இலக்குமிபோலங்கு
எழிலாகவேவளரும்
அன்புடையவன்ற ளழகையவனிதன்னில்
ஆதிசேஷனாலும் அளவிடவொண்ணாத ... ... (செய்)

சீசபத்தியம்.

௧. சீதரனுக்கவள் மீதுசித்தமேவியபின்பு
சித்திரவடிவங்கள்திகழலாச்சு
மாதவனுக்கவள்மீது மையல்மேவியபின்பு
மான்விழியாளிடைக்கையமாச்சு
ஆதிகோவிந்தனுக்கன்பு மேவியபின்பு
அளகபாரந்தனக்கழகுமாச்சு
நீதிசேர்காரணன் நெஞ்சுகந்திடுபின்பு
நீலநேத்திரிமுகம் நிறமதாச்சு
இப்படியிருவர்க்கும் மனதிலேயிச்சையுண்டாய்
ஒப்பிலாசுகுணலக்ஷண மாதியோங்கிவளரச்
செப்புமாயவன்பாரியாய்ச் செகதலத்தில்
அப்பதிதன்னைச்சேரும் அதிசயம்அறைகுவேனே ... ... *

௨. கன்னியருடன்கூடி விளையாடுங்காலையிற்
கருதுவாளந்தருக்குமணிமாது
அன்னமுண்டிடுவேளை ஆகிருஷ்ணவென்றவரை
அறைகுவாளந்தருக்குமணிமாது
இன்னமுஞ்சப்பிர மஞ்சத்தில்படுத்தவரை
எண்ணுவாளந்தருக்குமணிமாது
பொன்னின்மயில்போலுலவும் போதவரைநீதமாய்ப்
போற்றுவாளந்தருக்குமணிமாது
இந்தவிதமாக எக்காலமும்நினைந்து
விந்தையாய்ச்சுகமாகி நாள்தோறுமேபொருந்தி
தொந்தமாயிருவரும் இந்தத்தொல்லுலகிலே
அந்தமாய்க்கூடிடும் ஆச்சரியஞ்சொல்லுவேனே ... ... *

வசனம்.

உருக்குமணியைக் கண்ணனுக்குத்திருமணஞ் செய்யும்படிப் பீஷ்மராஜன்பந்துகளோடும், மந்திரிமார்களோடும், சபையாரோடும், ஆலோசனைசெய்ய அவர்களெல்லோரும், துவாரகாபுரிவாசனுக்கே கொடுப்பது நலமெனக்கூறுதல்.

விருத்தம்.

மாசிலாருக்மணிக்குப் பீஷ்மராஜன்
மணஞ்செய்யும் பருவந்தான்வந்ததென்று



ஆசிலாக்கண்ணனுக்குத் தானளிக்க
அருகிருந்தசபையாரோடாலோசிக்க
ஏசிலாச்செயலாகுமிதுவேநல்ல
எண்ணமெனவவர்களெல்லாம்நெஞ்சுகந்து
தூசிலாக்கிருஷ்ணனுக்குக் கொடுக்கும்வாறுய்த்
தூண்டுவார்அரசனையும்வேண்டுவாரோ ... (௩௪௪)

இராகம் - இந்துஸ்தானிகாபி - ஆதிதாளம்.

இராஜனேநல்ல யோசனைசெய்தீர்
நாடருங்கனமதையேநண்ணி
காசினியோர்கள் கண்டுபணிந்திடுங்
கண்ணனைமருமகனாயெண்ணி ... (இராஜ)

௨. வசுதேவனுக்கும் பீஷ்மனேயுமக்கும்
வாய்த்ததுநல்லசம்பந்தமையா
அசுரசம்மாரன்தனக்கேகொடுக்க
அனைவர்க்கும்சம்மதமாமெய்யா ... (இராஜ)

௩. துவாரகையெனும் வளநகர்தனையாளும்
துளாயைவரவழைத்திடும்பாரும்
அவாவுடைருக்மணியதிசயரூபத்திற்
கானவன்வந்திடில் மனநேரும் ... (இராஜ)

௪. பங்கஜநயனி வடிவினுக்கேற்ற
பரிந்திடுரூபன்அவன்தானந்தம்
செங்கமலக்கண்ணன் தனக்கிசைந்த
சேடிருக்மணியிவள்தான்சொந்தம் ... (இராஜ)

௫. கிடைத்ததுநமக்குக் கிளிமொழியாளால்
கிருஷ்ணன்தரிசனமேயுய்ய
படைத்ததுபிரமன்பக்குவமாக
பண்ணுந்திருமணமேசெய்ய ... (இராஜ)

௬. இம்மையிற்பெண்க ளெவரினுஞ்சிறந்த
எழில்மிகுமின்மகளினைக்கொண்டு
ரம்மியமாகசுந்தருளும்அந்த
லட்சுமிநாதன்தனைக்கண்டு ... ... .... (இராஜ)

வசனம்.

இந்தவிதம் சபையிலுள்ள யாவரும்கண்ணனுக்கே ருக்மணியைக் கொடுப்பது நலமென்று சொல்லுவதற்கிசைந்த பீஷ்மராஜனை உருக்கு

மன்னென்னும் மூத்தகுமாரன் அப்படியிடையனுக்குத் தன்தங்கையைத் திருமணஞ் செய்யக்கூடாதென்று தடுத்ததைச்சொல்லுதல்.

விருத்தம்.

இன்னவிதம்ருக்மணியைக்கண்ணனுக்கு
இஷ்டமொடுதரவேண்டுமென்றுசேதி
பன்னவர்தசபையோர்களுரையைக்கேட்டு
பார்மதிக்கும்பீஷ்மனவ்வாறுளத்தில்
கன்னலெனுமாதரசை மணஞ்செய்விக்கக்
கருத்ததினிலுறுதிகொண்டிருக்கருக்மன்
தன்னளவாயாவுமுள தெனவேயெண்ணி
தடுத்திட்டான்கெடுமதியோடடுத்திட்டானே (௩௪௫)

இராகம் - சங்கராபரணம் - ஆதிதாளம்.

பல்லவி.

தடுத்தானேருக்மன் சொந்தத்தங்கைகல்யாணமதை
கெடுத்தானேபீஷ்மன்பிள்ளை கிருஷ்ணனெனச்சொல்லுமதை (தடு)

தரு.

௧. வாய்மதத்திறுற்குலைத்து - மன்னன்தானென்னமலைத்து
தாய்தந்தையரைக்கலைத்து - தாரணியிற்தன்புகழைத்தொலைத்து (தடு)

௨. மண்ணதில்மகிழ்ந்துநின்று - மற்றோரை இகழ்ந்துசென்று
கண்ணனைமடையனென்று - கனவிலும்அதுகடவாதின்று (தடு)

௩. அதிவிதரூதுகொண்டு - ஆயர்பாடியிலேகண்டு
விதியிலெதுகுலம்பண்டு - வீழ்ந்தானென்றிகழ்ந்துவிண்டு (தடு)

௪. பட்டம்சிம்மாசனமாதி - பாரினில்படைத்தநீதி
இட்டஞ்சிசுபாலனேதி - இருக்கதிதுஎன்னசேதி ... (தடு)

௫. மங்களகரமகன்று - மாடுமேய்த்தவனுக்கின்று
தங்கைருக்மணியையன்று - தந்திடேனெனப்புகன்று (தடு)

௬. விலக்ஷணமற்றோனுக்கு - வேந்தர்குலமல்லானுக்கு
இலக்ஷம்சொன்னாலும்எனக்கு - ஈய்ந்திடேனிடையனுக்கு (தடு)

வசனம்.

இவ்விதம் கண்ணனுக்குத் திருமணஞ் செய்துக்கொடுக்கக் கூடாதென்று ருக்மன்தடுத்த செய்தியை ருக்மணிகேள்விப்பட்டு விசனத்தால் இஷ்டபாங்கியரோடு முறையிடல்.



4/11

விருத்தம்.

இப்படியவ்வுருக்குமனுமிகழ்ச்சியாக
வசியேதிருமணத்தைத்தடுத்தசெய்தி
ஒப்பிலாவுருக்மணியுங்கேள்விப்பட்டு
உடல்பதைக்கநாராசம்செவிபுகுந்து
கப்பியதுதான்போலக்கலங்கிநின்று
கருத்திசைந்தபாங்கியரையழைத்திதற்கு
எப்படியுங்கண்ணனையேசேரும்வாறாய்
ஏற்றுவீர்ஒருவிதந்தான்சாற்றுவீரே ... (௩௪௬)

இராகம் - முகாரி - அடதாளம்.

பல்லவி.

சகியேநீசொல்லடி - அந்தரங்க
சகியேநீசொல்லடி

அநுபல்லவி.

சகியேநீயோதடி - சந்தேகந்தீரஎன்னை
அகிலலோகநாதன் - அடைவாரோ - அணையாரோ ... (சகி)

தரு.

௧. அண்ணனாருக்மன் - அரசனெதிரில்மானே
கண்ணனுக்குத்தர - கருத்தில்லையென்றானே ... (சகி)

௨. குட்டிக்கலகஞ்செய்து - குண்டுணியாய்த்தானே
மட்டிசிசுபாலனுக்கு - மணஞ்செய்யவென்றானே ... (சகி)

௩. பச்சைவண்ணனென்னை - பாராரோகிருபையூர
இச்சையாய்வாராரோ - இவ்விடந்தனிற்சேர ... (சகி)

௪. இலக்ஷ்மிகாதனெனது - கற்கருத்தறியாரோ
பக்ஷமாயென்கரம் - பற்றவும்சேராரோ ... ... (சகி)

வசனம்.

இவ்விதமாக மனம்வருந்திய ருக்மணியைநோக்கி அப்பாங்கியர்களில் வசனசாதுரியென்னுந் தோழியொருத்தி கண்ணனேவந்து திருமணம்புரிவனெனச் சமாதானஞ்சொல்லுதல்.

விருத்தம்.

இன்னவாயோதுபசுங் கிளியைப்போன்ற
எதிரில்யிருந்த ருக்மணியும் வருந்துங்காலை
மன்னுதிருச் சடையந்த ஜானகிக்கு
வாஞ்சையொடு மனந்தேறச் செய்தவண்ணம்

தன்னிகரி லாதருகில் சர்வகாலம்
தங்கிநின்ற தோழியரி லொருத்திமுந்தி
தன்னியே தேற்றரவு பலவாருகச்
சொல்லுவாள் சந்தேகங் கெல்லுவாளே ... (ஙசஎ)

இராகம் - எதுகுலகாம்போதி - அடதாளம்.

பல்லவி.

வருவார் வருவார் கண்ணன்
வந்துன்னை மணஞ்செய்வார்
வருந்துவதேனோ அம்மா.

அநுபல்லவி.

திருவாபரணமொடு - திகழ்பீதாம்பரநண்ணி
பரிவாகவேயுற்ற - பாரிநீதானென்றெண்ணி ... ... (வரு)

சரணம்.

க. துட்டருக்குமன்பேச்சு - சிறிதும்ஈடேறுமோ
தொல்லுலகிலவன் கலகங்கள்மீறுமோ
மட்டில்லாப்புகழ்கண்ணன் - வல்லமைமாறுமோ
மணஞ்செய்ய வுனையிப்போ - மாலுச்கொருபாரமோ (வரு)

உ. வையமதிற்கொடிய - சிசுபாலன்முதலோர்க்காதி
வல்முடியோர்க்குக்கண்ணன் வாளாகுமாம்பேதி
பையவுலகிலெங்குந் - தெரியாதோ இந்தச்சேதி
பயமேனுனக்குவீணில் - பாரின்னம் எட்டுத்தேதி (வரு)

ங. வண்டுநிகர்த்தகரு - விழிமாதரசேமன்று
மன்னவர்மகிழ்மண - மருவியுன்றனையன்று
அண்டமதனையெடுத் - துண்டகண்ணன்நின்று
அன்புடன் துவாரகை - அழைத்துச்சேருவரென்று (வரு)

ச. பக்ஷமுடனேயந்த - விண்ணவருங்கோர
பாவைதேவகியாதி - பலருங்காணவேதிர
இலக்ஷ்மிநாதனும் - ரம்மியமாய்க்கூர
நாடியுன்றனிடம் - நலமாகவேசேர ... ... (வரு)

வசனம்.

இப்படி மனச்சந்தேகம்நீக்கிய தோழியைப்பார்த்து கண்ணனுக்குப் போய் தன் மனக்குறையையும் அரண்மனையில் நடந்த விர்த்தாந்தத்தையும் சொல்லும்படியாகத் தங்கள் அரண்மனைப்புரோகிதர்களில் புத்திமிகுந்த வேதியரொருவனை யழைத்துவரும்படி ருக்மணியுரைத்தல்.



விருத்தம்.

ஆழிசூழுலகுதன்னில் கிருஷ்ணமூர்த்தி
அன்புடனே மணஞ்செய்ய வருமாருகத்
தோழியிந்த விதமுரைத்த சொல்லைக்கேட்டு
துயரற்ற ருக்மணியச் சகியைநோக்கி
நாழியொரு தடையின்றி வேதியரையிப்போ
நம்மிடத்திற் கொண்டுவரல் வேண்டுமென்று
வாழியென அன்றுரைக்கும் வஞ்சிதன்னை
வருத்தினள் அழைத்துவரத் திருத்தினளே ... (ஙசஅ)

இராகம் - செஞ்சுருட்டி - அடதாளம்.

பல்லவி.

வேதியனையழைத்துவாடி
வேகமாயோடி

அநுபல்லவி.

மேதினியில் என்றனக்கு
மெல்லியுன்போலொருவல்லியில்லை - யந்த ... ... (வேதி)

சரணம்.

க. தயவுசெய்தென்மீதுசற்று - தையலேபோடி
நயமதாகவேயுரைத்து - நாடியெங்குந்தேடி
சேடியிப்போதந்த ... ... (வேதி)

உ. பேசிதாமதஞ்செய்யாதே - பெண்ணேநீயோடி
காசினியிலெவருமஞ்சும் - காலன்சிசுபால
மாலன்வருவானந்த ... (வேதி)

ங. கருதிருக்மன் அனைவரையும் - கலகஞ்செய்கிறான்
துரிதமாகச்சென்றுநீயும் - சொல்லியங்கேபல்லி
துல்லியனுமந்த ... ... (வேதி)

ச. தக்கவெகுமானம்உனக்குத் - தருகிறேன்நீடி
மிக்கலக்ஷ்மிநாதன்தன்னை - வேண்டியுடன்தாண்டி
ஆண்டுசென்றேயந்த ... (வேதி)

வசனம்.

தோழி ருக்மணியின் இஷ்டப்படி வேதியரிடத்திற்சென்று அவரை வரும்படி சொல்லுதல்.

விருத்தம்.

சோதிமிகு நவரத்தினப் பணிகள்பூண்டு
சுந்தரியாம் ருக்மணிசெய் திட்டந்தன்னை

நீதிலாச் சகிதனது சிரமேற்கொண்டு
தீவரமாய்ச் சென்றந்த வேதியர்க்கு
நீதியாய்த் தலைவணங்கி யஞ்சலியுஞ்செய்து
நேரிழையாள் உம்மையழைத் திடவேசொன்ன
சேதிதனை யானுரைக்க வந்தேனென்று
செப்புவாள் மதிமுகத்தை யொப்புவாளே ... (௩௪௧)

இராகம் - புன்னாகவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

அய்யாவேதியரோநீரும் - எங்களம்மணி
அழைத்திடச்சொன்னாள்வாரும்

அநுபல்லவி.

மெய்யாகஜெபதப ஓமங்கள்புரிந்திடும்
துய்யவேதங்கள் கலைதுலங்கவேதெரிந்திடும் ... ... (அய்)

சரணம்.

௧. சந்திரமுகியொன்று - உமதிடத்தில்
சாற்றிடவேண்டுமென்று
எந்தனையனுப்பினாள் - இட்டுவரச்சொல்லி
இப்போதுவாராவிடில் - இதையஞ்சலிப்பாள்மெல்லி ... (அய்)

௨. சீக்கிரம்வருவீரோ - அடியாள்சொல்லும்
சேதியைத்தெரிவீரோ
மார்க்கமதனைப்பார்த்து - மனந்துயருற்றவஞ்சி
மாதெனையனுப்பினாள் - மர்மமுரைக்கக்கெஞ்சி ... (அய்)

௩. பங்கஜதளநயனி - ருக்மணிமாது
பரிமளமலர்சயனி
எங்கள்துரைசானிக்கு - இருக்கின்றதும்மால்மணம்
இன்றதுமுடிந்திடில் - எவர்க்குமதுவேகுணம் ... (அய்)

௪. உண்டிலையெனுமிடையாள் - அற்புதமாக
உற்றஅன்னத்தின்நடையாள்
அண்டிலக்ஷ்மிநாதன் - அருளால்கண்ணன்தன்னை
அன்புடன்இட்டுவர - அனுப்புங்காரியமென்னை ... (அய்)

வசனம்.

இவ்விதம் சொல்லிய தோழியோடு அதிவிரைவில் தனது நேமநிஷ்டைகளெல்லாம் முடித்துக்கொண்டு வேதியர் ருக்மணியிடத்திற்கு வருதல்.



விருத்தம்.

அனுதினமும் நாயகியின் ஏவலெல்லாம்
ஆவலுடனேசெய்ய அருகிருக்கும்
மினுமிடைநேர் தோழியிந்தச் சேதிசொல்ல
மேலான வேதியனுங் கேட்டுகந்து
பனுவலந்த விதிப்படியே நேமநிஷ்டைப்
பரபரப்பாய் செய்துடனே பூர்த்திசெய்து
மனுமுறையாம் மணமிப்போ முடியுமென்றே
மருகுவார் மறையவரும் வருகுவாரோ. ... (௩௫௰)

இராகம் - மோகனம் - அடதாளம்.

பல்லவி.

வேதியர்வருகின்றாரோ - துரிதமாக
வேதியர் வருகின்றாரோ

அநுபல்லவி.

வேதியர்வருகின்றார் - மேன்மைமிகவும்பூண
மாதுருக்மணிதன்னை - மகிழ்ச்சியுடனேகாண ... (வேதி)

சரணம்.

௧. முகத்தில்நாமந்துலங்க - மார்பில்வெள்ளை
முப்புரிநூலிலங்க
மகத்துவமுளநல - மந்திரமோதிக்கொண்டு
வருகையிலதிசுப - சகுனவண்ணமுங்கண்டு ... (வேதி)

௨. காதிற்குண்டலம்அசைய - திருமணிக்
கழுத்திற்றுவடமிசைய
கோதில்லாநவரத்தினப் - பவுத்திரம்விரலில்மின்ன
கூறும்பட்டாடையிடை - கூடியங்கேதுன்ன ... (வேதி)

௩. கனமருமலர்முடித்து - சந்தனம்பூசி
கையிற்புகத்தம்பிடித்து
வினயமுடனேவந்து - மெல்லியொடுதொடர்ந்து
மேதினிமீதுவெகு - விரைவாகவேநடந்து ... ... (வேதி)

௪. அச்சுதன்அருள்பெற்றோன் - சாத்திரமொடு
அருமறைகளுங்கற்றோன்
மெச்சும்புகழ்படைத்த - விப்பிரன்அன்புகண்டு
லக்ஷ்மிநாதன்பேரில் - நிறைபக்தியேகொண்டு ... (வேதி)

வசனம்.

வேதியர்வந்ததை தோழியோடி ருக்மணிக்குச் சொல்லுதல்.

விருத்தம்.

தேவிநீ யுரைத்தவெல்லாம் தெளிவாகச்சென்றங்கோதி
தாவிவேதியர்க்குக்காதில் தகுந்தவாறியற்றிநின்று
ஆவியாங்கண்ணன்றன்னை அருகுறும்விதமேயாக
வாவியும்வயல்சூழ்நாட்டில் வருவித்துவந்தேனம்மா (ஙருக)

இராகம் - செஞ்சுருட்டி - ஏகதாளம்.

பல்லவி.

விப்பிரர்வந்தாரம்மா - அம்மா
விப்பிரர்வந்தாரம்மா

சரணம்.

க. விப்பிரர்வந்தாரம்மா - மெல்லிநீகேளம்மா
வேதங்கற்றோனம்மா - அம்மா... ... ... (விப்)

உ. பத்திரிகைகளிக்க - பரமனிடமளிக்க
சத்தியுள்ளோனம்மா - அம்மா ... ... ... (விப்)

ங. துவாரகாபுரிசென்று - சுவாமிக்குரைத்தின்று
துரிதம்வருவாரம்மா - அம்மா ... ... ... (விப்)

ச. உன்கவலையையோட்ட - உள்ளம்மகிழ்ச்சிகாட்ட
உட்னேவந்தாரம்மா - அம்மா ... ... ... (விப்)

ரு. கோதைலக்ஷ்மியும்நோக்க - கோபாலன்தன்னைச்சேர்க்க
வேதியர்வந்தாரம்மா - அம்மா... ... ... (விப்)

வசனம்.

உருக்மணிவந்த வேதியர்க்கு வந்தனைவழிபாடு செய்தல்.

விருத்தம்.

வந்தவேதியரைக்கண்டு மாதுருக்மணிவணங்கி
இந்திரன்போலவெண்ணி யிடவலசாரிவந்து
சந்தமாய்ச்சோட சோபசாரங்கள்மிகவேபண்ணி
விந்தயாயாசனத்தில் வீற்றிருந்திடுமென்றாளே (ஙருஉ)

வசனம்.

வந்த வேதியர் அழைத்தசேதி யென்னவென்று ருக்மணியைக் கேட்குதல்.

விருத்தம்.

வீற்றிருந்திடுமென்றோதும் மெல்லிருக்மணியையந்த
ஏற்றவேதியருங்கண்டு இன்பமாயனுக்கிரகித்து
ஊற்றமாயெனையழைத்த உள்ளகாரியமேதென்ன
சாற்றுவாள்கண்ணன்பால்போய்சங்கதியுரையுமென்றே (ஙருஉ)



வசனம்.

கண்ணபிரானைத் திருக்கல்யாணஞ் செய்து கொள்ளும்படி உருக்மணி ஓலையெழுதுதல்.

அகவல்.

பார்புகழோங்கும் பரதகண்டத்தில்
நீர்வளமிகுந்த நெடுங்கடல்சூழ்ந்த
மன்னர்கள் பகுதிவழங்கிடு செங்கோல்
துன்னியசேனைகள் துலங்கியவந்த
திருவளர் சூரசேனமாபுரியில்
இருநிதிபடைத்த இளவரசென்னும்
சீர்வசுதேவர் செய்தவந்தனிலே
பூரணச்சந்திரன் போலவுதித்துச்
செழுமணிக்கிரீடம் சிரசினிலோங்க
வழுவிலாக்குண்டலம் வனைசெவியிலங்க
வச்சிரகேயூர வலயங்கள்மின்ன
உச்சிதக்கவுத்துபமுரமதிற்றுன்ன
முத்துச்சரப்பணி மோகனமாலைகள்
ரத்தினப்பதக்கம் ரவியெனவிளங்க
மட்டிலா ஒளிநவமணிகள் குயின்ற
பட்டிடையரைஞாண் பளபளவென்ன
இணையிலாக்கங்கண மிருகரத்தொளிரக்
கணையாழிவிரலில் காந்திதுலங்கத்
தண்டைகள் தங்கச்சதங்கையினூபுரம்
கண்டைக்காலில் கலகலவென்னத்
மிக்கவேயிடையில் வெய்யவன்கூசத்
தக்கபீதாம்பரம் தகதகவென்னக்
கூடுசங்காழிகுணபத்மரேகை
நீடும்பதத்தில் திகதிகவென்ன
புயலெனமுதுகிற் புதுமையாயுள்ள
உயர்மச்சரேகை யொளியதுசெய்யக்
கஸ்தூரிமுகமுங் கமலநேத்திரமும்
விஸ்தாரமார்பும் விரிமலருந்தியும்
திகழபயஸ்தமும் திவ்யபொற்பதமும்
புகழுடைமனதும் புன்னகைவாயும்
மாதர்கள்மயங்கும் மன்மதவடிவும்
ஆதரவாக அலைகடல்மத்தியில்
துவாரகாபுரியோர் தொழுதடிபணியும்

அவாவெனும் வினையையகற்றுகோபாலா
மச்சக்கூர்மவராக முதலாய்
உச்சிதமாந்தசவுருவெடுத்தோனே
காதலாயானையைக் காத்திடுமூலா
நீதமாய்நித்தியனென்றிடுசீலா
உலகெலாம்முன்னம் ஓரடியளந்த
இலகியகீர்த்தி இசைநெடும்பாதா
முச்சகம்புகழ முன்புபார்க்கடலில்
பச்சையாலிலை மேற்பள்ளிகொண்டவனே
மண்டலமதனில் வந்துமோகினியாய்
அண்டருக்கப்போ தமுதளித்தோனே
தருணத்தில்வந்தருள் தாமோதரனே
பெருமணப்பொருளாம் பிரணவப்பொருளே
பாமரமற்ற பக்தர்தங்களைத்
தாமரக்கையால் தழுவுநாதா
பக்ஷமாய்முன்னம்பாரேழிரண்டும்
குக்ஷியிற்கொண்ட கோலாகலனே
லக்ஷ்மிதன்னை லாவண்ணியமாக
வக்ஷத்தில் வைத்தவனமாலிஹரியே
வஞ்சனையாலுமை மாய்க்கநினைத்தக்
கஞ்சனைக்கொன்ற காம்பீரியனே
நஞ்சுளய்முனாநதியிற் காளியனை
விஞ்சாதடக்கும் விமலபொற்பாதா
வரைதனையெடுத்து மாவனந்தன்னில்
நிரைதனைக்காத்த நின்மலரூபா
பூதனைசெய்விஷம் புந்தியிற்கண்டு
வேதனைசெய்து விழமடித்தோனே
தாயசோதைக்குத் தரணியாவையுமே
வாயதிற்காட்டிய மகிமையுள்ளோனே
அதிபாலியத்தில் ஆயர்பாடியிலே
எதுகுலம்ஓங்க எண்ணிவந்தோனே
இந்திரன்துதிக்கும் இணையடிகளிலே
சுந்தரமாகச் சொல்லிவணங்கி
யடியாளுருக்மணி யஞ்சலிசெய்து
படிவமாயெழுதும் பாக்கியவிண்ணப்பம்
தேவரீரமைத்த தெள்ளருளாலே
பூவினிலிதுவே பொருந்தியக்ஷேமம்
இப்பொழுதுமக்கே யென்றனையளித்து



ஒப்பிலாத்திருமணவுச்சவமுடிக்க
வேண்டுமென்றெனது மேலானதந்தை
ஈண்டுளமுயற்சி யியற்றிடுங்காலை
அண்ணனுருக்மனகமதிற்கெடுதி
எண்ணியுமக்கே ஈயொணாதென்று
சிசுபாலனுக்குச் சீர்மணமுடிக்க
விசுவாசமாக விரும்பியுற்றோர்க்கும்
துற்போதனைகள் தோன்றியமட்டும்
கற்பனையாகக் கழல்வதுமன்றி
இடையனென்றும்மை யேகதேசமதாய்
மடையனென்றோதி மன்னவர்சபையில்
இகழ்ச்சியேசெய்து இயம்பியதல்லால்
மகிழ்ச்சியேகொண்டு மற்றும்ஓதியதைச்
செப்பொணாதென்றன் சிறுவாயினாலே
எப்படியுமைக் கெழில்மாலைசூட்டத்
தகியீதுவென்று தஞ்சமாயானும்
மதிதனிலெண்ணி மதித்திடுவதனால்
காசினிபோற்றுங் கௌரிசன்னதிக்கு
நேசியாய்ச்சென்று நின்பொருட்டடியாள்
பூசையன்பொடு புரிந்துமீளுங்கால்
ஆசையாய்வந்து அவ்வழிமறுத்து
என்றனையுமது இரதத்திலேற்றி
நன்றுளதுவாரகா நகரத்திற்சேர்த்துக்
கடிமணங்கொள்ளக் காதலாய்க்கோரும்
அடியளாமென்னை யாட்கொள்ளுவீரே

வசனம்.

உருக்மணியம்மன் இன்னமும் வாய்மொழியாகக் கண்ணபிரானுக்குச்சொல்லும்படி யுரைத்தல்.

விருத்தம்.

இன்னலமா யுருக்குமணியுமின்பமாக
எழுதியதன்மனதிலுள்ளச் சேதியெல்லாம்
மன்னியதோர் திருமணஞ்சேர் ஓலைதன்னை
மார்க்கமுள்ளவேதியன் தன்கையிற்றந்து
பொன்னணியு மயிலனையார்மாடஞ்சூழ்ந்த
புதுநகராந் துவாரகையில்வாழுகின்ற
தன்னைநிகரற்ற கண்ணன் தனக்குமுற்றும்
தாவென்றாள் இதைச்சொல்லிவாவென்றானே ... (௧௦௪)

இராகம் - யமுனகல்யாணி - அடதாளம்.

பல்லவி.

சொல்லுமையாவேதியரே - துவாரகாநாதனுடனே
சொல்லுமையாவேதியரே

அநுபல்லவி.

அல்லும்பகலுமும்மையேயென்று
அலைகிறாளந்தருக்மணியென்று ... ... ... (சொல்)

சரணம்.

௧. அசுரனுக்குமாலைசூட்ட
அஞ்சுதே - யென்றன் - நெஞ்சம்
வசுதேவபுத்திரற்கிதை
மர்மமாகவே - கொஞ்சம் ... ... ... (சொல்)

௨. உருக்குமனுடைவசனங்கேட்டு
உள்ளம் - பதைத்திடவு - நொந்து
இருக்கிறாளென்று கண்ணனுக்கு
ஏற்றப்படியே - வியந்து ... ... ... (சொல்)

௩. பொட்டெனவேயுமைவிவாகம்
புரிந்திடுதல் - நன்மை - யென்று
இட்டமுடன்முற்றுநம்பி
இருக்கிறாளந்த - ஏந்திழையின்று ... ... (சொல்)

௪. அன்புடையலக்ஷ்மியேற்றும்
அச்சுதனுங் - கிருபை - பண்ணி
இன்பமாகவழைத்துச்செல்ல
எழுந்தருளும்படி - யெண்ணி ... ... (சொல்)

வசனம்.

வேதியர்கண்ணனிடத்திற்கேகுதல்

விருத்தம்.

இவ்விதமாம் ருக்மணியின் மதுரச்சொல்லும்
ஏற்றநற் றிருமுகமுங் கையிற்கொண்டு
செவ்வியனும் வேதியனுஞ் சிரமேற்றாங்கிச்
சேனழயின் சம்மதத்தோ டெழுந்திருந்து
எவ்வகையுந் திருக்கண்ணன் றனையழைத்து
இந்தவிடம் வந்திடுவே னென்றுமேலும்
அவ்விதமாய்ப்பகவானைத் தரிசிப்பேனென்ன
ஆடினார்பக்தியுடன் ஓடினாரே ... ... (கூறு)



421

இராகம் - எதுகுலகாம்போதி - அடதாளம்.

பல்லவி.

பாக்கியம்என்செய்தோனோ - பகவானைக்காண
பலித்ததேயென் அதிர்ஷ்டம்

அநுபல்லவி.

சிலாக்கியமுடைய - சத்காரியம் புரிந்தேனோ
சந்நதிகள்தோறும் - சேவித்திருந்தேனோ ... ... (பாக்)

சரணம்.

௧. சாதுகளுடன்கூடி - சதாகாலம்
சம்பாஷித்தேனோநாடி
மாதவங்கள்செய்து மாநிலத்துய்த்தேனோ
மாமறையோருக்குஊழியஞ்செய்தேனோ ... ... (பாக்)

௨. ஆலயங்கள்கட்டி - அம்புவியில்
ஆழுங்குளங்கள்வெட்டி
சீலநேமநிஷ்டைசெய்து நானுகந்தேனோ
சேதுமுதல்திவ்யதேசம்போய்வந்தேனோ ... ... (பாக்).

௩. எக்கியாதிகிருதுக்கள்செய்து - அரிபதத்தில்
ஏற்றமலர்கள்பெய்து
பக்குவமாகநான் பிரார்த்தித்துத்தணிந்தேனோ
பாகவதர்தமை பக்தியாற்பணிந்தேனோ ... ... (பாக்)

௪. லக்ஷ்மிநாதன்தன்னை - சேவைசெய்ய
நான்செய்தபூசைமுன்னை
பக்ஷமுடனின்று பண்ணுநல்வினைகண்டு
பாவைருக்மணியருள் பணியையான்மேற்கொண்டு ... (பாக்)

வசனம்.

இவ்வாறாகத் துதித்துச்செல்லும் வேதியர் துவாரகையென்னுந் திருநகரத்தமைந்த கோபுரங்களையும் உன்னதமாட மளிகைகளையும் அதன் அதன் அலங்காரங்களையுங் கண்டு ஆனந்தப்படுவதைச் சொல்லுதல்.

விருத்தம்.

பாரிலிந்த விதமாகப் பஜனைசெய்து
பரிந்தோடும்வேதியன் தன்விழிக்குநேரில்
சீரம்ருந்தேவர் முதல்மக்கள்யாரும்
சேவிக்கத்தேடி வருஞ்சிறப்பமைந்த

ஊரெனவே நூதனமாய்க் கடலுக்குள்ளே
உண்டானது வாரகையாம் நகரந்தன்னிற்
கார்முகிலுந்தவழுந் திருக்கோபுரத்தைக்
கண்டிட்டார்அதிசயமாய் விண்டிட்டாரே ... (௩௫௬)

இராகம் - நாதநாமக்கிரியை - அடதாளம்.

பலலவி.

கண்டார்வேதியரும் - துவாரகாபுரியைக்
கண்டார்வேதியரும்

அநுபல்லவி.

அண்டத்தவர்களென்றும் - அன்பாகவேதொண்டு
அற்புதமாகச்செய்து - ஆசைபுரியப்பண்டு
புண்டரீகக்கண்ணன் - புண்ணியஸ்தலத்தைக்கண்டு
புதுமையாகவுள்ளம் - பூரித்தஞ்சலிகொண்டு ... ... (கண்)

சரணம்.

௧. மேருமலைநிகர்த்த விந்தைகோபுரங்களும்
மின்னும்பலமணிகள் மேவியமதில்களும்
காருலவியபெருங் கடல்சூழ் அகழிகளும்
காவல்மருவுங்கோட்டைக் ககனஞ்செல்கொடிகளும்
கண்டவர்மகிழும் - பிரகாரமும் - விண்டலம்புகழும்
நவசித்திர
விளங்குமண்டபங்களும் - துலங்குதுவசஸ்தம்பமும்
இலங்கும்விமானங்களும் - தலங்கொள்ஆலயங்களும் ... (கண்)

௨. தாமரைப் பொய்கையுந்தழைத்திடுபுன்னையும்
தக்கவசோகமந்தாரத்தருக்களும்
பூமணமாமலர் பூசுஞ்சந்தனமகில்
பொருந்துஞ்சோலைகளும் புகழுநற்சாலையும்
பூங்கிளிகொஞ்சும் - விநோதமும் - மாங்குயில்விஞ்சும்
அற்புதங்களும்
மருவுமல்லிகைமுல்லை - பொருவில்சகந்தமொடு
திருவின்சண்பகத்தொடு - அருங்குசுமங்களாதி (கண்)

௩. சங்கமிருதங்கம் - தாளபூரி பேரி
சார்ந்திடுமெக்காளைசகலவாத்தியங்களும்
துங்கத்தூபமும் தூயநைவேத்தியமும்
தொடர்ந்தசாமரைசத்திரசோடசோபசாரம்



சுகமாகநிகழும் - வைபவங்கள் - அகிலமுந்திகழும்
விந்தைகளும்
அரம்பையரும்இணையில் - நிரம்பியமாதர்கள்
தரும்பரதநாட்டிய - அரங்கத்தினழகையும் ... ... (கண்)

௪. அருமறைமுழங்கிடும் - அந்தணர்வீதியும்
அறநெறிவழுவாத அரசர்தம்வீதியும்
வரும்பொருள்வைசியர் வாழ்ந்திடுவீதியும்
மற்றுநகர்ஜனமருவுநல்வீதியும்
வண்ணமாடங்கள் - ஆபரணங்கள் - எண்ணில்கூடங்கள்
நிறைந்திடும்
ஏற்றகடல்நடுவில் - தோற்றுந்தீபமதை
சாற்றும்மெல்லியின்பொருட் - டேற்றமாகச்சென்று ... (கண்)

௫. அன்னைருக்மணிசொற்கள் அரியவேதமென்று
ஆனந்தமாகவும் ஆகமதினில் அன்று
முன்னையநல்வினை முதுபயனுமென்று
முற்றுங்களிப்புடனே பெற்றலிகிதம்கொண்டு
முப்புரிநூலன் - சாத்திரங்கற்ற - ஒப்பறுசீலன்
எப்பொழுதும்
ஒண்மையில்ருக்மணி - உண்மைகருத்தின்படி
திண்மையுடையகண்ணன் - வண்ணநகரைநின்று ... (கண்)

௬. இந்திரபுரியொடு எழில்மலரோன்புரி
இலங்குதனதன்புரி ஈசனமரும்கிரி
வந்தமதிலவைகள் அனைத்துமிணையிலாது
அமைத்துவிளங்குகின்ற அழகியதுவாரகை
ஆயர்தங்கோனை - அருளுடைய - தூயசீமானை
அழைத்துவரச்
சொல்லுங்கன்னிகையொடு - அல்லும்பகலும்லக்ஷ்மி
வல்லியுங்களித்திடச்சொல்லுவேனெனவோடி

வசனம்.

இந்தவிதம் துதித்துக்கொண்டுவந்த வேதியனைக்கண்ட கண்ணன் சர்வோபசாரங்களுஞ்செய்து தகுந்த ஆசனத்திருத்திவந்தகாரியம் என்னவெனக்கேட்குதல்.

விருத்தம்.

வேதியனுந் துவாரகையின் விந்தையெல்லாம்
விருப்பமொடு கண்டவுடன் மெய்மறந்து

ஆதியாங் கண்ணனை நற்சேவைசெய்து
  ஆனந்த வாரியிலே யாடிநிற்கும்
நீதிமிகும் விண்ணவர்கோன் மறையோனுக்கு
  நேயமாய் வந்தனமும் புரிந்திங்கின்று
சேதிநீர் வந்தவிதம் சொல்கவென்னச்
  செப்புவான்கார்மேகமொப்புவானே ... (கடுஎ)

கண்ணிகள்.

இராகம் - புன்னாகவராளி - ஆதிதாளம்.

க. அர்க்கியபாத்தியங்கள்கொடுத்து
அதிதியைமிகவடுத்து
அற்புதஆசனம்அளித்தார் - அனந்தநாமன்
பொற்புறமனதிற்களித்தார் ... ... ... ... *

உ. வந்தவிப்பிரரைமதித்து
மஞ்சம்விட்டுக்கீழ்குதித்து
வண்ணமாய்வந்தனம்புரிந்தார் - மாதவன்தானும்
எண்ணியேபுந்தியிற்றெரிந்தார் ... ... ... ... *

ந. ஷட்ரசஅன்னமிருந்து
சகலகனிவர்க்கம்தந்து
சந்தனதாம்பூலம்நீட்டினார் - சாமளவண்ணன்
கந்தமலர்மாலைசூட்டினார் ... ... ... ... ... *

ச. அத்தருபன்னீர்தெளித்து (கண்)
ஆனந்தக்கடல்குளித்து
அந்தரங்கமாகவழைத்தார் - அச்சுதநாமன்
தந்தரமதனையிழைத்தார் ... ... ... ... ...

ரு. சப்பிரமஞ்சம்மீதிருத்தி
சரிமரியாதைபொருத்தி
சங்கதியைச்சொல்லுமென்றார் - சார்வபௌமன்
இங்கிதமாய்எதிரில்நின்றார் ... ... ... ... ... *

சு. எந்தநாட்டிலேயிருந்து
எவர்அனுப்பினார்தெரிந்து
என்னதான்உமதுபேரும் - வேதியரே
பன்னுவீர் அதனைநீரும் ... ... ... ... ... *

எ. இத்தனைதூரம்நடந்து
இருவனந்தனைக்கடந்து



எப்படிவந்தீரோசொல்லும் - மாதவரோநீர்
ஒப்பறுமுன்கவலைவெல்லும் ... ... ... ... *

அ. எந்தவேந்தன்உமதுசொந்தம்
என்றுலக்ஷ்மிநாதனந்தம்
இசையவேதான்கேட்டருளினார் - மறையவன்தனை
நசையமெய்ஞானத்தருளினார் ... ... ... ...

வசனம்.

இதைக்கேட்ட வேதியர் தான் வந்தகாரியத்தைச்சொல்லி ருக்மணி எழுதிய திருமுகத்தைக் கண்ணபிரான் திருக்கரத்திடுதல்.

விருத்தம்.

இப்படியக் கண்ணபிரான் கேட்டதற்கு
  எதிருள்ள மறையவனு மிகுமையாக
மைப்படியுங் கண்ணாளு ருக்மணிவிரும்பி
  வரைந்தளித்த இந்த விதமும்பால்
ஒப்பவே கொடுத்தங்கு நடந்ததை
  ஒன்றுமே யொளியாமற் செவியிலிட்டுச்
செப்பமா யழைத்துவரச் சொன்னாள்சேதி
  தெரிகுவீர் கிருபையொடு வருகுவீரே ... (கடுக)

இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

கண்ணனே - மணி - வண்ணனே - ருக்மணிமாதை-
கடைக்கண்பார்த்தருளும் - அண்ணலே

அநுபல்லவி.

கண்ணுவுனதரிய - கல்யாணகுணங்கள்தம்மை
வண்ணுமனதிலெண்ணி - வருந்தியிங்கடியாளுமை ... (கண்)

சரணம்.

க. சப்பத்துடனேநீரும் - சார்வபௌமனேநீரும்
சந்தோஷமாகவன்று - சாற்றுமுறைமையாளும்
இன்பத்துடனேகூடி - யிருக்கும்ருக்மணிநாளும்
இணங்கியும்மைவருந்தி - இட்டுவரச்சொன்னாள்சேளும் (கண்)

உ. சிங்கத்துக்காகாரமாக - செப்பிடுங்கரியைக்கண்டு
சென்றுநரிமூக்கிற்குத்தித் - தூக்கியேகொண்டு
பொங்குவதுபோலவேயன்றோ - பொல்லாதகுணங்களுண்டு
பூமிதன்னிற்சிசுபாலன் - புல்லுவனென்றுளேயீண்டு ... (கண்)

௩. ஞானமொடுபூர்வத்தில் - நான்முகனுரைத்துத்தந்த
நாரணனேநடமிடு - வேதமுகந்திடுமிந்த
மானிலத்தில்தோற்றகோன்பு - சத்தியமேயாகிலத்த
மாதவனெனக்குப்பதி - யாய்வருவானென்றாள்சொந்த (கண்)

௪. பக்ஷிவாகனனைவிட்டு - பாமரரைத்தொடேனென்றாள்
பாரில்பலஜென்மமெடுத்தாலு - மும்மைவிடேனென்றாள்
லக்ஷ்மிநாதனையன்றி - நேசியேன்மற்றோரையென்றாள்
நீடுலகில்மணமாலை - நீசருக்கிடேனேயென்றாள் ... (கண்)

வசனம்.

இ து வு ம து

விருத்தம்.

கண்ணனேயடியேன் சொல்லுரைக்கிதங்கிக்
கலகஞ்செய்திடும்வாருய் மாதினண்ணன்
எண்ணரியசதுரங்க சேனையுள்ள
இசைவிலாச்சிசுபாலன் தனக்கேமாலைத்
திண்ணமுடனிடச் செய்வானென்னக்கேட்டுத்
தியங்கியே ருக்மணியுமென்றனோடு
வண்ணமுடன் நீர்வந்தால் உயிர்தரித்த
வாழ்வென்றாள் அல்லாதுதாழ்வென்றாளே ... (௩௫௧)

இராகம் - கலியாணி - அடதாளம்.

பல்லவி.

கண்ணநீர்வரவேண்டும் - ருக்மணிமாதின்
கருத்தைமுடிக்கவேண்டும்

அநுபல்லவி.

கண்ணநீர்வரவேண்டும் - கவலையதனைக்கொய்ய
வண்ணமாந்திருச்செல்வி - வாழமணமுஞ்செய்ய ... (கண்)

சரணம்.

௧. எங்கிருப்பாளோவென்று - ராஜக்கிரகத்தில்
எப்படிச்செல்வதென்று
செங்கண்மாலேமனதில் - சிந்திக்காமலேவந்து
சீக்கிரஞ்சேரச்சொன்னாள் - சேயிழைதானுவந்து ... (கண்)

௨. வாசற்காப்போரைக்கொன்று - விவாகஞ்செய்ய
வகைதேடவேண்டாமென்று
ஆசைக்கண்ணனுமுள்ளம் - அன்பற்றிருந்தாற்கெஞ்சி
அழைத்துவரவேசொன்னாள் - அபரஞ்சிபோன்றவஞ்சி (கண்)



௩. திருமணமுதல்நாள்சென்று - கௌரிபூசை
திருப்தியாய்புரிந்தன்று
வரும்வழிதனிலென்னை - வந்துடன்ரதமேற்றி
பெருமையாய்செல்கவென்றாள் - பேதைநின்பதம்போற்றி (கண்)

௪. பக்ஷமுடன்மணந்து - விதிப்படியே
பாரில்சிறப்பமைந்து
லக்ஷ்மியோடுதிரு - நாரணனும்பெருக்க
நாடிவாழ்ந்திடல்போல - நலமாய்ச்சுகித்திருக்க ... (கண்)

வசனம்

இவ்வாறு ருக்குமணியுரைத்தனவெல்லாஞ் சொன்னபடி யொன்று மொழியாமற் சொல்லியவேதியர் உரையைக்கேட்டகண்ணன் இதோ இந்நொடிலேயே பிரயாணமாகி மாதின் இஷ்டப்படி முடிப்பேனென்று சொல்லுதல்.

விருத்தம்.

வண்டுநேர்கூந்தலாள் கருத்தையெல்லாம்
வருமறையோன்வாயாரச் சொல்லக்கேட்டுப்
பண்டுசெய்த புண்ணியத்தால்மாதினிஷ்டம்
பலிக்குமெனவேதியரைப் பரிந்துநோக்கி
அண்டுமெந்தஅசடர்களை யழித்துநானும்
அழகியருக்மணிதனக்கு மாலைசூட்டக்
கொண்டுவரல் திண்ணம் போயுரையுமென்னக்
கூறினான் கண்ணனுடன் வீறினானே ... .. (௩௫௨)

இராகம் - தன்னியாசி - ஆதிதாளம்.

பல்லவி.

வருகிறேனய்யா - மங்கையைமணம்புரிய
வருகிறேன்மெய்யா

அநுபல்லவி.

வருகிறேன்மெய்யாநான்-வம்பர்தங்களைப்போக்க
தருகிறேனானந்தம் - தையலவளைக்காக்க ... ... (வரு)

சரணம்.

௧. வேதியரேநீரும் - விரும்பிவந்தீரென்முன்னே
யாதொருதடையின்றி - யானும்உமதுபின்னே
நீதியாய்ப்பெரியோர்கள் - நேர்ந்துமகிழ்ச்சிகூற
வாதியாய்நானங்கு - வஞ்சிகோரிக்கைதேற ... ... (வரு)

௨. துட்டசிசுபாலன்மெத்த - துள்ளிவிழுகிறுனென்று
மட்டில்லாக்கேள்வியுற்றேன் - மர்மத்தைபோக்கவின்று
இட்டசருகெல்லாம் - கெடுமக்கினிக்குமுன்னில்
பட்டப்பகலிலே - பாழாக்கிறேன்பார்தன்னில் ... (வரு)

௩. மதிமுகமங்கைக்கு - மனதிலானந்தங்கூட
சதியதுசெய்யுமந்த - சத்துருக்கள்பயந்தோட
அதிதுரையாகவந்து - ஆனைகளெல்லாங்கடந்து
திலக்ஷ்மிபோன்றவளை - தூக்குகிறேன்கடந்து ... (வரு)

வசனம்.

கண்ணன் தான்வேதியரோடு சொன்னபடிப்பிரயாணப்பட்டுக்குண்டினபுரம் போகவெண்ணிச் சாரதிக்கு இரதத்தையலங்கரித்துக் கொண்டு வரும்படித் திட்டஞ்செய்தல்.

விருத்தம்.

தாரணியில் வேதியனுக்குரைத்தவாறுய்த
தன்னுடைய மனப்படியே செலுத்தவல்லச்
சாரதியையருகழைத்துச் சமயமின்று
சார்ந்திடவேயிணையில்லாத் தேரைக்கொண்டு
வாரதிரும்படிக் குண்டினபுரமேயேக
ஓட்டிவரல்வேண்டுமெனச் சொன்னபோது
கோரதிகமான பரிதம்மைப்பூட்ட
நேர்ந்திட்டான் அலங்கரிக்கச் சேர்த்திட்டானே (௩௬௧)

இராகம் - தன்யாசி - அடதாளம்.

பல்லவி.

தேர்அலங்கரித்தான் - சாரதி
தேர்அலங்கரித்தான்

அநுபல்லவி.

தேர்அலங்கரித்தான் - தேவரும்மகிழ
தேர்ந்தவர்கண்டதைத் - திவ்யமாய்ப்புகழ ... (தேர்)

சரணம்.

௧. பத்தரைமாற்றுத் தங்கவொளியைவெல்லும்
பச்சைமுதற் பற்பலமணிகளொல்லும்
உத்தமமாம்மலர் மாலைகள்புல்லும்
யோசனைதூரம் ஒருநொடியிற்செல்லும் ... (தேர்)

௨. சித்தரித்தவச் சிரசிம்மங்களைமாட்டி
சிங்காரமாய்க் கதலிக்கரும்புங்கூட்டி



உத்கலமுத்துக்குடைக் கொடிகள்காட்டி
ஓடும்புரவிள் ஒய்யாரமாய்ப்பூட்டி ... ... (தேர்)

௩. உச்சிதச்சித்திரப் படங்களும்மன்ன
உன்னதத் தங்கக்கலசங்கள்மின்ன
விசித்திரப்பட்டுச் சீலைகளுந்துன்ன
வெண்கலமணி கணகணவென்ன ... ... (தேர்)

௪. அண்டர்களுடன் அருமுனிவர்கல்ல
ஆசிகளுங்கூறி ஆனந்தமாய்வல்ல
எண்டிசையும்நிறை இடறுகளைவெல்ல
இஷ்டலக்ஷ்மியும் இன்பமுடன்சொல்ல ... (தேர்)

வசனம்.

இவ்விதமாய் அலங்கரித்துக்கொணர்ந்தரதத்தின்பேரில் கண்ணனும் வந்த வேதியருமாக எழுந்தருளிச் செல்லாநிற்கையில் இங்கே யுருக்மணியின் திருமணத்திற்காகக் குண்டின புரத்தைப் பீஷ்மராஜன் அலங்காரஞ் செய்வதைப்பற்றிச் சொல்லுதல்.

விருத்தம்.

இப்படியே கொண்டுவந்த தேரின்மீது
இங்கிதமாய் வேதியனுங் கண்ணன்றானும்
ஒப்புறவே யேறியந்த வூரைவிட்டு
ஒண்டொடியைக் காணவெகு தீவரத்தில்
கொப்பெனவே குண்டின புரத்தருகில்சேரக்
கோமகனும் பீஷ்மன் சிசுபாலனுக்குச்
செப்பமுள திருமணமே செய்யுமாறு
சீரிட்டான் அலங்கரிக்க கேரிட்டானே ... (௩௬௨)

இராகம் - பியாகடை ஆதிதாளம்.

பல்லவி.

குண்டினபுரம் - அலங்காரங்கள்செய்தார் - கோலாகலமாக

அநுபல்லவி.

அண்டரும்மகிழ்ந்திட - வரும்பொருள்செலவிட்டு
மண்டலத்தில்ருக்மணி - வரமணத்தின்பொருட்டு ... (குண்)

சரணம்.

௧. விந்தைவிந்தையாய் மேகமண்டலமுட்ட
விழைபசும்பந்தலிட்டு
சுந்தரமகரத்தோரணமிலங்கிட
சுற்றிலுந் தொங்கவிட்டு

தோரணமாகவெண்ணிலவெனச்சீலைகள்
தூக்கிமேலிற்கட்டி
அந்தமிகுந்தரசகுண்டொடுஜாலர்கள்
அணிஅணியாகவொட்டி ... ... (குண்)

௨. பச்சையாங்கன்னல்கமுகிளவாழை
பக்குவமாகநாட்டி
மெச்சிடுஞ்சோதிபளிங்குவிளக்குகள்
மேன்மைபொருந்தமாட்டி
உச்சிதக்கண்ணடி சித்திரப்படங்கள்
ஒளிதரவெங்குங்கூட்டி
கச்சிதப்பூமலர்மாலைசரங்களும்
கட்டி அற்புதம்நீட்டி ... ... (குண்)

௩. ஜோதிபொருந்திய திருமணப்படிகள்
சுபகரமாய்ப்பொருத்தி
கோதிலாநவமணிகளிணலங்கே
கோலங்களுந்திருத்தி
ஆதிமுறைப்படி அரசாணிக்காலும்
அங்கமாகநிறுத்தி
தீதிலாரத்தினகம்பளமெங்கும்
தெரியவிரித்துஇருத்தி ... ... (குண்)

௪. திருவளர்லக்ஷ்மிகோரியநகரினில்
திரட்சியாய்த்தனமெடுத்து
பருமணிக்கிரீடங்கள்தரித்திடுமன்னர்க்கு
பட்டோலைகள்விடுத்து
ஒருமையானவேதியர்கள்புரோகிதர்
ஒழுங்காய்வரவடுத்து
பெருமையாகவேபதினெண்வாத்தியப்
பேரிகைகளுந்தொடுத்து ... ... (குண்)

வசனம்.

உருக்மணியின் மணக்கோலத்தைப்பற்றிச் சொல்லுதல்.

விருத்தம்.

அருந்தக்கை மாதரசின் பீஷ்மராஜன்
அந்தணர்க ளனைவரையும் வரவழைத்துத்
திருந்துமுக ருக்மணியின் சாந்திநன்மை
தீவரமாய்ப் புரிந்துநற் றனமீந்து



431

மருந்தென வந்துற்ற மைவிழியாரன்று
மங்களா சாஸனமுஞ் செய்துநின்று
பொருந்துமணக் கோலமுடன் நடத்தவெண்ணிப்
பொங்கினர் மனங்கொண்டு தங்கினரே ... (௩௬௨)

இராகம் - பந்துவராளி - ஏகதாளம்.

௧. கல்லியாணக்கோலஞ்செய்தார்
கன்னியர்தாவக் - கதம்பங்கள்தூவ
நன்னிலைதேவ - நாயகிமேவ
கல்லியாணக்கோலஞ்செய்தார்
கன்னிகைருக்மணிக்கு
நல்லதினம்-மணமீது - மங்கையையுட்காரவைத்தார் (சோபனமே)

௨. மங்கையுட்காரவைத்து
நன்மொழிநேசி - நறுமலர்வாசி
மஞ்சளும்பூசி - மங்களம்பேசி
மங்கையையுட்காரவைத்து
நலமுடனேமிகப்பாடி
மஞ்சனசந்தனதயிலம் - மகிழ்வுடனேசிரசிலிட்டார் ... (சோ)

௩. மகிழ்வுடனேசிரசிலிட்டு
மங்கையரன்று - வர்ணித்துநின்று
அங்கலையொன்று - அரிதேவியென்று
மகிழ்வுடனேசிரசிலிட்டு
மாதுருக்மணிக்குமணம்
வகையுடனேவல்லியர்கள் - மஞ்சனநீராட்டிவைத்தார் (சோ)

௪. மஞ்சனநீராட்டிவைத்து
வஞ்சியுமிலங்க - மாகனந்துலங்க
நெஞ்சினில்மலங்க - நேரிழைவிளங்க
மஞ்சனநீராட்டிவைத்து
மாதினங்கம்கலைதுவட்டி
விஞ்சவேகஸ்தூரிபொட்டு - மினுக்கிடவேஜடைபின்னூர் (சோ)

௫. மினுக்கிடவேஜடைபின்னி
விந்தைசெய்பணிகள் - வேண்டியஅணிகள்
சுந்தரமணிகள் - சொகுசுறுந்துணிகள்
மினுக்கிடவேஜடைபின்னி
விரைகமழ்பூமலர்முடித்து
களங்கமில்ஜவ்வாதணிந்து - கனகவொட்டியாணமிட்டார் (சோ)

௬. கனகவொட்டியாணமிட்டு
கண்ணைனுக்கென்று - காரிகைகயன்று
வண்ணமுதென்று - வகையினையொன்று
கனகவொட்டியாணமிட்டு
கருதிநலங்குகள் தீட்டி
பணிமலரணிமெல்லியர்கள் - பாடியாரதியெடுத்தார் (சோ)

௭. பாடியாரதியெடுத்து
பாவையர்மகிழ்ந்து - பாடியேபுகழ்ந்து
சேவையையுகந்து - சீர்களுநிகழ்ந்து
பாடியாரதியெடுத்து
பாங்குகள்வாய்த்திடவென்று
கூடியெல்லோர்களுமதித்து - கொம்பனையாளைத்துதித்தார் (சோ)

௮. கொம்பனையாளைத்துதித்து
கூடவேகலந்து - கும்பலுமலர்ந்து
நாடவேநினைந்து - நன்மையையிணைந்து
கொம்பனையாளைத்துதித்து
கோருலக்ஷ்மியையின்று
கொண்டுதிருமணஞ்செய்ய - கோபாலன்வருவனென்றார் (சோ)

வசனம்.

சிசுபாலன்மணக்கோலங்கொள்ளுதல்.

விருத்தம்.

குண்டலி புரத்தரசன் பீஷ்மராஜன்
கோதைமணக் கோலமுட னலங்கரித்து
மண்டலத்தி லரசாளுஞ் சிசுபால னன்று
மதித்தபடி வருவனென்று நோக்கிநிற்கப்
பண்டைய வழக்கம்போ லவனுக்குள்ள
பணிமணிகள் சீராகப் பூட்டி க்ஷேமங்
கொண்டிடவே கலியாணஞ் கோலஞ்செய்யக்
கூடினார் சுகமாகப் பாடினரே ... ... (௪௩)

இராகம் - மத்தியமாவதி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. மணக்கோலமதுகொண்டான்
மாசேதிநாடன்
அணைவென்ருக்மணியையென்
றறைந்தான்மதிகேடன் ... ... ...



௨. நாடியே அலங்கார
நலங்குகள்நிகழ
மாடிமேல்விளங்கினன்
மங்கையர்மகிழ ... ... ... ... *

௩. சந்தனத்தயிலம்
சவ்வாதுடன்கூட்டி
அந்தமாய்ப்பூசினார்
ஆசையாய்க்கிட்டி ... ... ... ... *

௪. மங்களகரமாக
மஞ்சனமாட்டி
தங்கவஸ்திரங்களும்
தரித்தார்பணிபூட்டி ... ... ... ... *

௫. முல்லைமல்லிகைமலர்
முடித்தார்கள்வியந்து
எல்லையில்பெண்ணுக்
கேற்றனென்றார்நயந்து ... ... ... *

௬. தோரணபாஷியம்
துலங்கவேகட்டி
பாராளும்வேந்தனைப்
பாடினாரெட்டி ... ... ... ... *

௭. யாத்திராதானங்கள்
யாவையும்புரிந்து
சாத்திரவிதங்களை
சாற்றினார்தெரிந்து ... ... ... ... *

௮. லக்ஷ்மிநாதன்செயல்
தெரியாமலாடி
கக்ஷியாய்ப்புறப்பட்டான்
கலியாணந்தேடி ... ... ... ... *

வசனம்.

இவ்வாறு மணக்கோலங்கொண்டுவருகின்ற சிசுபாலன் இடைவழியில் அவசகுனங்கண்டதைச்சொல்லுதல்.

விருத்தம்.

கோலமுட னிவ்வாறு சிசுபாலனன்று
குதூகலமாய் மாலையிட மனதிலெண்ணி

ஞாலமதில் பதினெண் வாத்தியமொலிக்க
நாற்புரமுஞ் சதுரங்க சேனைசூழச்
சீலமுடை ருக்மணிவாழ் நாட்டைக்கிட்டிச்
சேருமுன்னந் தனதுஇடத் தோள்துடிக்க
ஆலமென இடைவழியி லெதிராய்நேரில்
அடைந்திட்டான் சகுனத்தா லுடைந்திட்டானே (௪௯௪)

இராகம் - உசேனி - ஆதிதாளம்.

பல்லவி.

வருகின்றான்சிசுபாலன் - அவசகுனத்தால்
உருகின்றான் - சிசுபாலன்

அநுபல்லவி.

வருகின்றான்சிசுபாலன் - மாதரசியைநாடி
அருகில்அசுரர்சூழ - அதிதிரளாயாகவோடி ... ... (வரு)

சரணம்.

௧. ஜராசந்தன்முதலோரைச் - சேர்த்துஅனுப்பிவிட்டும்
கரத்தில்பளபளென்ன - கட்கங்கடாரிதொட்டும்
தராதலங்கண்டவர்கள் - தயங்கும்படியாய்நட்டும்
தன்மனவெண்ணத்தைத் - தாவிமுடிக்கும்மட்டும் ... (வரு)

௨. இப்படியாகவிச்சை - இழுக்கவூரைக்கடந்து
வருமிவர்க்கெதிரில் - இரண்டுநாகம்நடந்து
செப்பியபடியோடிச் - செல்லஅவையடைந்து
சிறும்புரவிகண்ணிற் - ஜலம்வடியவுடைந்து ... ... (வரு)

௩. சத்திரப்பட்டுத்துவஜங்கள் - சாமரங்கள்முறிய
சாகசமாகவே - சகலபட்சியிரைய
அத்திரவருஷம்போல - அன்றுமழைவிரிய
யானையுங்கல்லைவாரி - ஆனமட்டும்எறிய ... ... (வரு)

௪. பூமிகிடுகிடென்றப் - போதுடனேநடுங்க
காமியானஅசுரர் - காலங்களும்ஒடுங்க
சாமிமனப்படியே - சகலமுங்கூடிப்பொங்க
சங்கடங்கண்டுமனஞ் - சலிக்காமலேயோங்க ... ... (வரு)

வசனம்.

கண்ணன் ருக்மணியை மாலையிடும்படிப் பீஷ்மகநகரஞ்சென்றானென் னுஞ் சேதியறிந்த பலராமன் தன்தம்பிக்கு உதவியாகப்புறப்பட்டு வருவதைச்சொல்லுதல்.



விருத்தம்.

சிசுபாலனிவ்விதமாய்ச் சகுனங்கண்டு
செல்லிதேவகிபுதல்வ னெதிருற்றாலும்
அசுவமுதல் சதுரங்க சேனைசூழ
அவனையுமே ஜெயித்திடலா மெனவேதெய்வப்
பசுவானருக்மணியை மாலைசூட்டப்
பயமற்று மனதிலெண்ணி நடக்குங்காலை
விசுவாசஜனங்களொடுகண்ணனண்ணன்
வேண்டினான் உதவிவரத் தூண்டினானே ... (௪௯௫)

இராகம் - காபி - சாபுதாளம்.

பல்லவி.

பலராமன் வருகின்றார்
பரிந்துதம்பிக்காகவே

அநுபல்லவி.

பரிந்துதம்பிக்காகவே - பீஷ்மன்
பட்டணந்தனிலேகவே... ... ... ... ... (பல)

சரணம்.

௧. கலையோதும்விப்பிரருடனே - கடுகிச்சென்றான்கண்ணன்
மலைபோலஅசுரர்கூடி - மடக்குவரென்னஅண்ணன் (பல)

௨. இஷ்டனுக்கநேகமான - கெடுதிசெய்வாரோயென்று
இஷ்டமாகப்பலராமன் - எண்ணம்மனதிலேகொண்டு... (பல)

௩. அய்யனுக்குஉதவியாக - ஆயர்களைக்கூட்டியே
கையிலாயுதம்முதலாய் - கலப்பைகளும்காட்டியே ... (பல)

௪. தட்சணமேயூரைவிட்டுத் - தம்பிதனைத்தேடியே
லட்சுமிநாதனுக்குதவி - லலிதமாகக்கூடியே ... (பல)

வசனம்.

இவ்விதமாகப் பலராமனும் கண்ணனும் வேதியரும் தங்கள் பரிவா ரங்களுடனே பீஷ்மனகரத்தில் ஒருபக்கம்கூடிச் சமயம்நோக்கியிருக்கச் சிசுபாலன்வந்து சேர்ந்ததைக் கேள்வியுற்ற ருக்மணி தான் தூதனுப்பிய வேதியர் வராமையைப்பற்றித் தன்பாங்கியோடு விசனப்படுதல்.

விருத்தம்.

ஆகவே பலராமன் கண்ணன்பக்கல்
அவ்விடத்தி லோர்புறமாய் வீற்றிருக்க
ஏகமாய் அசுரர்சூழம் வருவதைநோக்கி
எதிராகப் பீஷ்மன்முதல் யாருஞ்சென்று

மோகமொடு அழைத்ததிக விநயமாக
முற்றுமே யுபசாரஞ் செய்துநிற்க
யூகமாயிதைக்கேட்ட ருக்மணியுமன்று
உன்னுவாள் மனதையப் பன்னுவாளே (௪௬)

அகவல்.

அன்பானபாங்கியென்னம்மணிகேளாய்
இன்பமாய்ச்சவுரிபாலுற்றவேதியரும்
இன்னமுந்தான்வரவில்லையென்செய்வேன்
முன்னிராப்பொழுதும்விடிந்திடலாச்சே
முரசவாத்தியங்கள்முழங்கிடவந்த
வரபுரோகிதரும்வந்திடலாச்சே
விசுவாசமாய்த்தந்தைவெடியற்காலத்தில்
சிசுபாலனுக்கெனைச்சீர்மணம்புரிய
எத்தனப்படுவரோயென்னநான்செய்வ
துற்றமிமாதெனக்கொன்றுந்தோன்றிலையே
காதகசிசுபாலன்கருத்தினைக்கொண்டு
மாதெனைக்கொள்ளவந்திடலாச்சே
அண்டியென்னண்ணன்அசுரரையழைத்துக்
கொண்டுஇப்பொழுதுகொப்பெனவருவன்
எப்படியிருக்குதோயென்விதியம்மா
ஒப்பிலாவேதியன்ஊற்றமாய்ச்சென்று
திருமுகமதனைத்திருத்தேவன்கையில்
ஒருமையாய்க்கொடுக்கஉள்ளத்திலஞ்சி
இருக்கின்றனரோஏதும்நானறியேன்
பெருக்குறுவயதால்பிராமணன்சோர்ந்து
நடக்கவொண்ணாதுநடுவழிதன்னில்
தடக்கமாயெங்குதங்கிட்டனரோ
அல்லதுகண்டுஅறையினுங்கண்ணன்
நல்லமனதுடன் நாடாதிருந்தரோ
பெண்வார்த்தையென்று பேசியேநெஞ்சில்
எண்ணியேசும்மா இருந்துவிட்டாரோ
ஓதருமந்த உறவினர்கூடி
மாதவன்தன்னைவழிமடக்கினரோ
மாயவனிங்குவாராமையாலே
தூயவேதியரும் தூரநின்றாரோ
பிரமனெனக்கும் பிரிதிவிந்தனுக்கும்
வரமுடிபோட்டுவைத்தானோவில்லையோ



437

எந்தனைமாலையிட்டிடநாதன்
வந்திடுவாரோ வஞ்சியேயறியேன்
முக்கண்ணன்தேவிமுராரிபாலனை
இக்கணம்சேர்க்க எண்ணுவாளில்லையோ
உத்தமன்தன்னை யுள்ளத்திலெண்ணி
பத்தியாய்விரதம் பாலிக்கவில்லையோ
நயமாகயாவரும் நல்வேளைநாடிச்
சுயம்வரமிங்கு ஜோடிக்கலாச்சே
இனியென்னகாரியம் என்றுமேதனது
கனியிதழ்வாயினால் கதறியேநின்று
அன்னமேபுசியாள் அருந்துயில்கொள்ளாள்
நன்னயமாக நகைகயேநகையாள்
கண்ணில்நீர்துடையாள் கஸ்தூரிபொட்டிடாள்
வண்ணமாய்ச்சேலையும் வகையுடனணியாள்
கூந்தலிற்பரிமள குசுமங்கள்முடியாள்
மாந்தளிர்மேனியில் மணமதுபூசாள்
பொங்கமாயுடலிற் பூஷணந்தரியாள்
மங்களமாக மாடத்திலுலவாள்
அழகியகண்களில் அஞ்சனந்தீட்டாள்
பழகியகிளியுடன் பாஷைபுரியாள்
இப்படியிருக்க எழில்மதனன்று
தப்பிலாவைங்கணை தாக்கியேநிற்கச்
சந்திரன்தானும் சாந்தமில்லாமல்
விந்தையாய்ச்செந்தணல் வீசமீதினிலே
மந்தமாருதமென வழங்கிடுதென்றல்
தொந்தமாய்ச்சேர்ந்து துயருறமோத
மயிலினமழகிய மாடப்புறாக்களும்
குயிலொடுகிள்ளைகள் கோஷமாய்க்கூவ
மாதுருக்மணிக்கு மையலுமீற
ஏதுநான்செய்வே னென்னவென்விதியே
வகையொன்றுமறியேன் மாலினோர்செயலோ
தகையதுபெற்றுத் தழைத்துவாழ்வேனோ
என்றையமாகி யேக்கமேயுற்று
நின்றுமால்வரவை நீள்விழிநோக்கி
ஆலோசனையால் அறிவுமேலிட்டு
பூலோகந்தன்னில் பொருந்தினளுயிரோ.

வசனம்.

இவ்விதமாகச் சுவாமிவராமையைப்பற்றிச் சந்தேகத்தால் மனது வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும் ருக்மணியைநோக்கி ஓர்தோழி கண்ணன் இப்போது இங்கே எழுந்தருளி உனதிஷ்டப்படியே நடத்துவரென்று தயிரியஞ்சொல்லுதல்.

கொச்சகம்.

நாயகிபிந்தவாறு நடுங்கியேகலங்கிநிற்க
நேயமாந்தோழியன்று நிகரிலாருக்மணிக்கு
தூயமாந்துவாரகைக்குத் துரிதமாய்ச்சென்றவிப்ரர்
ஆயமாய்வருவரென்றே யன்புடனுரைக்கின்றாளே

இராகம் - தன்னியாசி - ஆதிதாளம்.

பல்லவி.

வருவாரடிமானே - விப்பிரரும்இதோ
வருவாரடிதேனே

அநுபல்லவி.

வருவாரடிமானே - மாதவனையழைத்து
தருவாரடிக்ஷேமம் - தரணிதன்னிலுழைத்து ... ... (வரு)

சரணம்.

௧. கோரிக்கையதற்கேற்க - கோபாலனைச்சேர்க்க
வாரிஜதளநேத்ரி - மனக்கவலையைத்தீர்க்க ... ... (வரு)

௨. அசுரப்படையையோட்ட - அதிசவுரியங்காட்ட
வசுதேவசுதன்தன்னை - மகிழ்ந்துஉன்னிடங்கூட்ட ... (வரு)

௩. நல்லசகுனம்பெய்ய - நாளிதுஎன்றுஉய்ய
வல்லவரானகண்ணன் - வந்துகைபற்றப்பய்ய ... ... (வரு)

௫. லக்ஷ்மிமணதின்படி - நாதன்வருவாரடி
அக்ஷயவேதியனும் - அதிபுத்திமானடி ... ... (வரு)

வசனம்.

இவ்வாறு வசனசாதுரியென்னுந் தோழியுரைத்து நிற்கும்போதே சென்ற விப்பிரர் ருக்மணியிடத்துக்குவந்து தான்போய் வந்தசேதியைச் சொல்லுதல்.

விருத்தம்.

இப்பொழுது வந்துறவ ரென்றேயோதி
எதிரிருக்கும் பாங்கியினல் லோசைமுற்றும்



செப்பமாய் முடியாம லிருக்கும்போதே
சீராக விப்பிரருஞ் சுபச்சேதிகொண்டு
ஒப்புறவே யுற்றவளைக் கண்டுபொங்கி
ஒண்டொடியு முபசாரத் தோடிருத்தி
எப்படியாய் விட்டதுநீர் சென்றமாற்றம்
ஏதென்றாள் மனங்களிக்க வோதென்றாளே (௪௬௭)

இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. (ருக்மணி) விப்பிரனேசரணமும்மைக்கண்டபோதே
மெத்தவுஞ்சந்தோஷங்கொண்டேன்
செப்புமையாசேதி ஸ்ரீஹரிவந்திங்கே
சேரக்கனவதுகண்டேன் ... ... ... *

௨. (விப்பிரர்) செப்புமையாவென்ற செல்வியேயுன்னிட
சித்தமின்று நிறைவேற
ஒப்பிலாதஅந்தக்கண்ணன்வந்தருளுவர்
உன்திருமணத்துக்குச்சேர ... ... *

௩. (ருக்மணி) வருவரென்றுசொன்ன வார்த்தையைக்கேட்டோன்
வல்லுயிர்தரித்திங்கேயிருந்தேன்
ஒருமையாக யுமக்கென்னபிரதி
யுபகாரஞ்செய்வேனுள்ளமுகந்தே ... ... *

௪. (விப்பிரர்) செய்வேனென்ற அந்தச்சீருள்ளதங்கிய
சித்தமிருந்திடில்போதும்
உய்வேனுண்மையாக ஒண்டொடியேயிந்த
உலகினிற் குறையில்லையோதும் ... ... *

௫. (ருக்மணி) உய்வேனென்றுசொன்ன உண்மைக்குலதெய்வ
உத்தமரோவெகுதூரம்
தையலுக்காகவே சென்றுவந்தீரென்னை
க்ஷமிக்கவேணுமிந்தநேரம் ... ... ... *

௬. (விப்பிரர்) க்ஷமிப்பதென்னவந்த சுவாமிசேவையெனக்குச்
சம்பவித்ததேபெரும்பாக்கியம்
அமைப்பில்கரும்புதின்னக் கூலியுங்கேட்பரோ
அதுபோலவாகுமேயோக்கியம் ... ... *

௭. (ருக்மணி) புரிவதும்உம்மாலே புருஷாகாரியாக
போய்வந்தபுனித அந்தணனே
பரிவுடனுந்தனுக்காயிரநமஸ்காரம்
பண்ணினேனைமுதகத்குணனே ... ... *

வசனம்.

இவ்வாறு சுபச்சேதி ருக்மணிக்கு வேதியர் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது கண்ணன் தன் பரிவாரத்தோடு வரக்கண்ட பீஷ்மராஜன் எதிர்சென்று தகுந்த உபசாரத்தோடு அழைத்துவரச் சபையிலுள்ள பெரியோர்களும் பட்டணத்து ஜனங்களும் கண்ணனது ரூபலாவண்ணியத்தைக்கண்டு புகழ்தல்.

விருத்தம்.

வேதியனுஞ் சுபமாக ருக்மணிக்கு
விரும்புமுன் கருத்துடனே கூடுமென்றான்
ஆதியாய் விளங்குமரி கண்ணனாக
அவதரித்த வெம்பெருமான் வருதல்கண்டு
சோதிமிகு மணிக்கிரீட பீஷமனேடிச்
சுந்தரமா யுபசரித்தே யழைத்துநேர
நீதியுடைப் பெரியோர்கள் வணங்கியன்று
நிசமென்றார் பாக்கியத்தின் வசமென்றாரோ (௪௯௮)

இராகம் - பந்துவராளி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. கண்ணனைக்கண்டவுடன் கன்னிருக்மணிக்கிவர்
கணவனென்றுரைத்தார்கள் - சிலபேர்கள்
விண்ணனைமாலையிட என்னதபஞ்செய்தாளோ
வேலிருக்மணியென்றார் - சிலபேர்கள் ... ... *

௨. இந்திரன்ஆதியர்த இமையவன் - தானேவென்று
எண்ணிப்பிரமித்துநின்றார் - சிலபேர்கள்
மந்திரமறையவர் வணங்குநாதனென்ன
மதித்துக்கொண்டேயிருந்தார் - சிலபேர்கள் ... *

௩. அங்கஜன்தானேவென்று ஐயம்மனதிற்கொண்டு
ஆச்சரியத்தோடிருந்தார் - சிலபேர்கள்
பொங்கும்மன்மதனுகில் பூங்கணையெங்கேயென்று
புனிதனுகவேயுரைத்தார் - சிலபேர்கள் ... ... *

௪. கோடிசூரியன் போலவிளங்குகிறாரென்று
கூடியேகொஷித்தார் - சிலபேர்கள்
மேட்டிமையாகவரும் மேகவண்ணனைக்கண்டு
மெச்சிக்கைதட்டிநின்றார் - சிலபேர்கள் ... ... *

௫. சதுர்முகன்இருவருக்கும் சரியானரூபத்தைச்
சமைத்துவைத்தானென்றார் - சிலபேர்கள்



எதிராஞ்சிசுபாலனைச் செயித்து ருக்மணிமாதை
இவரேயடைவரென்றார் - சிலபேர்கள் ... ... *

௬. கெதியாகவெல்லவர்க்கும் கேட்டவரமருளும்
கெருடவாகனனென்றார் - சிலபேர்கள்
மதிக்கும்லக்ஷ்மிமகிழ் மங்கைருக்மணிக்கிவன்
மணவாளனென்றுரைத்தார் - சிலபேர்கள் ... ... *

வசனம்.

கண்ணன் தன்பரிவாரத்துடன் பீஷ்மனகரத்திற் கெழுந்தருளிய சேதியைக்கேட்ட சிசுபாலனுடைய சயின்னியத்திலுள்ள வீரர் தங்கள் பராக்கிரமங்களைச்சொல்லிக் கண்ணனையேசுதல்.

விருத்தம்.

நீதமாய்ருக்மணியை மாலைசூட்டல்
நிச்சயமிப்புருஷ னென்றேயுரைத்தார்
காதகராஞ்சிசுபாலன் சேனையன்று
கருதிவந்த சோதைமகன் சேதிகேட்டு
ஆதரவாயிவனுக்காரிங்கே யென்று
அவனவனுக்குண்டான திறமைகூறிப்
பேதகமாய்க்கண்ணனையேயவர்களெல்லாம்
பேசுவார் இடையனென்றே யேசுவாரே ... (௪௯௯)

இராகம் - மோஹனம் - ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. திரண்டுமூன்றுலோகமும் ஒன்றாய்வந்தாலும் பீஷ்மன்
திருமகளைவிடேனென்றான் - ஒருமூடன்
ண்டுதேவகி மைந்தன்தன் சேனையை
ரஅடிப்பேனென்றான் - ஒருமூடன் ... ... ... *
மூதலாரேரும் அவனுக்குத்துணைவரில்
அடித்துச்ஜெயிப்பேனென்றான் - ஒருமூடன்
பயமில்லாமல்வந்த பசுமாட்டிடையரை
பீரில்முடிப்பேனென்றான் - ஒருமூடன் ... ... ... *

௩. இளையாருத்திரனிங்கு இவனுக்குதவிவந்தால்
இடித்துப்புடைப்பேனென்றான் - ஒருமூடன்
வளையவேவந்த வாதியின்சேனையை
வதைத்திடுவேனென்றான் - ஒருமூடன் ... ... ... *

௪. விண்ணவரெல்லாருங் கூடியெதிர்த்தபோதும்
வேலியைவிடேனென்றான் - ஒருமூடன்

கண்ணனைஜெயித்தான் சேதிநாடனுக்கு
கலியாணஞ்செய்வேனென்றான் - ஒருமுடன் ... ... *

௫. கட்சியாவந்தக் காட்டிநரிந்தோர்களை
கதறவோட்டுவேனென்றான் - ஒருமுடன்
பட்சிவாகனன்லட்சுமிபதி யென்றறியாமல்
பலவாறுபேசினான் - ஒருமுடன் ... ... ... ... *

வசனம்.

இவ்வாறுபேசிய சேனைகளைக் கையமர்த்தி, ஜராசந்தன் இனிநடக்க வேண்டிய விஷயங்களுக்குப் பிரயத்தினப்படுவது நலமெனக்கருதி, பீஷ்மனிடஞ்சென்று, ருக்மணியைச் சிசுபாலனுக்குத் திருமணஞ்செய்து கொடுக்கும்படிக் கேட்க, பீஷ்மராஜன் விடைதருதல்.

விருத்தம்.

மூடரவர்மொழிந்திருந்த சேதிகேட்டு
முடிமன்னன்ஜராசந்தன் உற்றுநோக்கி
ஆடகப்பொன்ருக்மணியை மணமேசெய்து
அன்றுசிசுபாலனுக்குக் கொடுக்கவென்ன
நாடவரும் குண்டினபுரத்து மன்னன்
நல்லதுசம்மரபிலுள்ள வழக்கம்போல
தேடவருமென்புத்ரி மணக்கோலத்தைத்
தீர்க்கின்றேன்திருமணம் பின்பார்க்கின்றேனே ... (சஎ0)

இராகம் - பியாகடை - ஆதிதாளம்.

பல்லவி.

செப்பும்வகை - களிக்கிறேன் - புத்திரியைப்பின்
சிசுபாலனுக்களிக்கிறேன்

சரணம்.

க. ஒப்பியேருக்குமன் - உரைத்தவார்த்தையைநாங்கள்
இப்போதுசம்மதித்தோம் - இதனைக்கேளுங்கள்நீங்கள் (செப்)

உ. குலதேவதைபூசைக் - குறித்தெத்தனப்படுவோம்
கலைகள்விதித்தபடி - கல்யாணஞ்செய்திடுவோம் ... (செப்)

ந. பொங்குங்கொற்சேனைகளாய் - புறங்காக்கவேகூட்டி
மங்கைபத்தூர்க்குப்பின் - வருமொன்னலரையோட்டி (செப்)

ச. பெண்களிக்கவிதிப்படி - பிறங்குமின்னைகளொட்டி
சங்கரன்தேவிபூசை - சகசமாய்ச்செய்வான்கிட்டி ... (செப்)



ரு. அலங்காரமாய்ச்சரிகை - ஆடையணிகள்பூட்டி
குலுங்கவேபுட்பங்கள் - கோதைமுடியிற்சூட்டி ... (செப்)

சு. பிரார்த்தனைமுடிந்தபின் - பெண்கொடியைக்கொணர்ந்து
கீர்த்தியுடனேமணக் - கேளிக்கையாய்புரிந்து ... ... (செப்)

எ. திருவின்மணப்படியே - திட்டமாகமுடியும்
பெருகும்ருக்மணியின் - பிரீதிப்படி விடியும் ... ... (செப்)

வசனம்.

இவ்வாறு பீஷ்மன், ஜராசந்தனுக்குரைத்து, ருக்மணியையலங்கரிக்கும்படி தாதிகளுக்காக்ஞாபிக்க, உடனே அவர்கள் அலங்கரித்ததைச் சொல்லுதல்.

விருத்தம்.

குண்டினபுரத்துமன்னன் கூறுஞ்சொல்லைக்
கோலமுடிச்சராசந்தன் கேட்டப்போது
கொண்டலென்காற்புரமுந் தனதுசேனை
கூடியேவளைந்திடவுஞ் செய்துநின்றான்
அண்டர்களும்வியக்க ருக்மணியைக்கிட்டி
அன்னநடைப்பெண்களெல்லா மந்தமாகச்
சென்றலங்காரஞ் சதியிவள்தானென்று
சேர்ந்திட்டார் அலங்கரிக்கசேர்ந்திட்டாரே ... (சஎக)

இராகம் - பிலகரி - சாபுதாளம்.

பல்லவி.

சிங்காரங்கள்செய்கிறார் - ருக்மணிதேவிக்கு
சிங்காரங்கள்செய்கிறார்

அநுபல்லவி.

சிங்காரங்கள்செய்யவும் - சேதனர்கள்உய்யவும்
அங்கருமணியைத்தூய - ஆயிரநாமனுக்கிய ... ... (சிங்)

சரணம்.

க. திருமஞ்சனங்காட்டி - பீதகவாடை
தேவியிடையிற்கூட்டி
பெருமையுள்ளவல்லிக்கு - பிரீதியுள்ளமெல்லிக்கு
கருமுகில்வண்ணனுக்கேற்க - கடையன்சிசுபாலன்பார்க்க (சிங்)

உ. கோதிக்கூந்தலைவிடுத்து - குடமல்லிகை
கொழுந்துவேர்களும் எடுத்து
சோதியுள்ளமங்கைக்கு - சுந்தரமாம்கன்னிகைக்கு
நீதிகண்ணனுக்காய்மெல்ல - சேரிமையாளுக்குகல்ல ... (சிங்)

௩. பணிகளனேகம்பூட்டி - பதுமமுகத்தில்
பாங்காய்கஸ்தூரிதீட்டி
அணிபொருந்தியமித்திரியை - அரசனுடையபுத்திரியை
மணிவண்ணனிடத்திற்கூட்ட - மாதுகவலையையோட்ட (சிங்)

௪. லக்ஷ்மிதன்னையலைழத்து - நீலவேணிகள்
லாவண்ணியமாய்த்தலைழத்து
தக்ஷணமேபாலியை - தரணியில்நல்லீலையை
பக்ஷிவாகனனுக்கென்று - பாவையர்கள்பாடிநின்று ... (சிங்)

வசனம்.

இவ்விதமாய் அலங்காரஞ்செய்துகொண்ட ருக்மணியம்மன் தன் தோழிமார்களோடும் பந்துவர்க்கங்களோடும் கௌரிதேவியைப் பூஜிக்க வருதல்.

விருத்தம்.

சிங்கார மிவ்விதமாய்ச் செய்தபின்னர்
சேர்ந்தவர்கள் மகிழ்வாகப் பாடிநேர்ந்து
இங்காரு மிவளுக்கே யிணையாய்ச்சொல்ல
இவவிடத்தி லொருபெண்ணு மில்லையென்று
கங்காதரன்தேவி தன்னைப் போற்றக்
கருதியே கண்ணனையே தோயும்வாறாய்
மங்களவாத் தியமுழங்கச் சந்நிதிக்கு
மண்டினார் பூசைசெய்ய அண்டினாரே ... (௪௭௨)

இராகம் - பூரிகல்யாணி - ஆதிதாளம்.

பல்லவி.

கௌரிபூஜைசெய்யவருகிறாள் - கன்னிருக்மணி
சௌரியைக்கோரி - கௌரிபூசைசெய்யவருகிறாள்

அநுபல்லவி.

கவரியிருமருங்கும்வீச - கச்சைகளிரு - கழல்களிலும்
கல - கல - கல - கலவெனவே ... ... ... (கௌரி)

சரணம்.

௧. மிக்கமுத்துக்குடைபிடிக்க
மெல்லியர்கட்டியம்படிக்க
தக்கபேரிகையடிக்க
தங்கப்பணிகளும்பூண்டு - தக - தக - தக - தகவெனவே (கௌரி)

௨. உரிமைமணக்கோலம்நாடி
உறவினர்பலர்களுங்கூடி



பரிமளமலர்களைச்சூடி
பட்டுத்துகிலுந்தரித்து - பள-பள-பள-பளவெனவே (கௌரி)

௩. அன்னப்பெடையனநடையாள்
அழகியதுடியிடையாள்
கன்னலெனுமொழியுடையாள்
கலவைகளிதமுடனணிந்து-கம-கம-கம-கமவெனவே (கௌரி)

௪. லக்ஷ்மிகோரிக்கைப்படிய
நல்வேதியன்சொல்முடிய
தக்ஷணம்சிசுபாலனிடிய
தரணியிலெவருங்களிக்கத்-தள-தள-தள-தளவெனவே (கௌரி)

வசனம்.

இவ்வாறுவந்த ருக்மணி கௌரிதேவியைத் தான்கொண்டகருத்தின் படிக் கண்ணனையே தன்பர்த்தாவாக நேமித்தருளும்படிப்பூசைசெய்தல்.

விருத்தம்.

வருகைவா நிதிபோலு மிந்திரன்கை
வாள்போலும் வானத்தி லுலவுகின்ற
உருவான சந்திரன்தன் ஒளியைப்போலும்
உரகரத் தினமுடைய காந்திபோலும்
தருநிழலைப் போலுமிவ் வுலகத்தோர்க்குத்
தாய்போலு மிதுகாறுங் காணக்கூடாச்
சுருதிமூலப் பொருட்குச்சொந்தம்போலுஞ்
சூழ்ந்திட்டாள் பூசைதனிலாழ்ந்திட்டாளே (௪௭௩)

இராகம் - பைரவி - சாபுதாளம்.

கண்ணிகள்.

௧. கௌரியேயுன்னைப்பூசைசெய்கிறேன் - கனபக்தியுடனே
கழல்களில்மலரொடுத்துப்பெய்கிறேன்
சௌரியையெந்தன்பதியாயருளுவாய் - ஓலோகமாதா
சதியெனக்கந்தவரமேதருகுவாய் ... ... ... ... *

௨. கன்னிகாவிரதத்தைத்தீர்த்திடும் - கமலக்கண்ணி
கண்ணைத்திறந்துஎன்னைப்பார்த்திடும்
உன்னியபிஷேகம்பண்ணுறேன் - ஓசங்கரன்தேவி
உன்னைக்குலதெய்வமாகவெண்ணுறேன் ... ... ... *

௩. பட்டுச்சேலையுன்னிடையிற்சாற்றுறேன் - பார்வதிதேவி
பணிந்துன்னைமிகப்பரிந்துபோற்றுறேன்

மட்டில்லாதபணிகள்பூட்டுறேன் - ஓஅம்பிகாதேவி
மணமாமலர்கள்முடியிற்சூட்டுறேன் ... ... ... *

௪. குங்குமப்பிறைநுதலிலணிகிறேன் - சாமளாதேவி
குறைகள்தீர்க்கவுன்னைப்பணிகிறேன்
சங்கரன்மகிழ்ந்தணையுமீஸ்வரி - ஓங்காரதேவி
சமையந்துணைசெய்வாய்சர்வேஸ்வரி ... ... ... *

௫. தும்பைவில்வம்பூசைபுரிகிறேன் - காளிகாதேவி
தூபதீபநைவேத்தியந்தருகிறேன்
நம்பிவாயனம்மாதர்க்கிகிறேன் - ஓகிராமதேவி
நங்கைமிகவுமகிழ்ச்சியாகிறேன் ... ... ... ... *

௬. அன்னைதந்தையும்நீயென்னம்மணி - திரிபுரசுந்தரி
அரியையென்னிடங்கூட்டுங்கண்மணி
மின்னுமிடையாள்மனதீடேறவே - ஓசாம்பவியிந்த
மெல்லிக்கிரங்குங்கருணைகூறவே

வசனம்

இதுவுமது கௌரிதேவியை வரங்கேழ்க்குதல்.

விருத்தம்.

பூசித்தகோமகளைப் பெண்களெல்லாம்
பொன்மல ரட்சதையெடுத்துச் சிரமேலிட்டு
யாசித்தபேர்களுக்குப் பொருளுமீந்து
அவனியில் நீவாழ்கவென்ன ஆசிகூற
நேசித்த நித்தியகல் யாணதேவி
நினைந்தபடி பதிசேர வேண்டுமென்று
மாசித்த மயேஸ்வரியைப் பாடிநின்று
மகிழ்ந்திட்டாள் வரமீயப் புகழ்ந்திட்டாளே (௪௭௪)

இராகம் - அபுரூபம் - அடதாளம்.

பல்லவி.

பார்வதிகண்ணே - என்
பதியாய்ச்செய் - பார்வதி

அநுபல்லவி.

பாரெல்லாமுந்தன்கீர்த்திவிரிந்திட
பாலகோபாலனைப்புரிந்திட ... ... ... (பார்வதி)

சரணம்.

௧. காரணியன்னபூரணியேகேளும்
காரணன்மீதெனக்குக்குறிப்பு
கல்யாணஞ்செய்வதற்குனக்குப்பொறுப்பு ... (பார்வதி)



௨. கிஷ்டியேயெனதிஷ்டமதனைக்கேளும்
கிஷ்டனைப்பதியாகக்கூட்டும்
துஷ்டன்சிசுபாலனையோட்டும் ... ... ... (பார்வதி)

௩. ஈஸ்வரிமயேஸ்வரியேகேளும்
கேசவன்என்னைத்தேரிலேற்றவும்
ஆசையாய்ப்பூமாலைசாற்றவும் ... ... ... (பார்வதி)

௪. மங்கையேகிருஷ்ணன்தங்கையேநீர்கேளும்
சங்கையில்லாமலேவரிக்கவும்
மங்கல்யசூத்திரம்தரிக்கவும் ... ... ... (பார்வதி)

வசனம்.

இவ்வாறு பூஜித்து வரமும்பெற்ற ருக்மணி, சூழ்ந்திருந்த பரிவாரங்களும் தோழிகளும் பிரமிக்கும்படி மோகனரூபங் கொண்டதைச்சொல்லுதல்.

விருத்தம்.

தேவர்களு மெச்சவே யீஸ்வரியையன்று
திறமாகப் பூசித்து வரமும்பெற்று
காவலனுந் தானினைத்த கண்ணனங்கு
கருதியபோல் வந்தனரோ இலையோவென்று
தாவவரும் தன்சகியைப் பார்ப்பாள்போலத்
தலைமயிரைத் தள்ளுவளாய்த் திரும்பிநோக்கி
ஆவல்தரும் மோகனரூ பத்தைக்காட்ட
அடுத்திட்டாள் பிரமிக்க வெடுத்திட்டாளே (௪௭௫)

இராகம் - மத்தியமாவதி - ஆதிதாளம்.

பல்லவி.

விரதமோகினியாகிவந்தாள் - ருக்மணிதேவி
மேதினியோர்க்குக்காட்சிதந்தாள்

அநுபல்லவி.

விரதமோகினியாகி - விண்ணவர் துதிக்கரிய
உரகசயனன்தன்னை - யுகந்துமணம்புரிய ... ... (விரத)

சரணம்.

௧. கருமுகில்போலளகம்உடையாள் - மிகத்தளிர்த்த
கதலிதன்னைப்பழிக்குந்தொடையாள்

உருவமமைந்தஅன்னநடையாள் - காணுவதற்கு
உண்டோஇலையோஎன்னுமிடையாள்
உம்பர்அரம்பையரும் - உளமதனிற்பிரம்மிக்க
இம்பர்முனிவர்களும் - இதயமதில்துதிக்க ... ... (விரக)

௨. சேலைநிகர்த்தவிழிமன்ன - மாலைப்பொழுதின்
செவ்வானமொத்துகரந்துன்ன
பாலினினியமொழிபன்ன - வெண்டரளம்போல்
பற்கள்பளபளென்னமின்ன
பகருஞ்சந்திரவிம்ப - வதனமதுதுலங்க
திகழுங்கனகரும்ப - ஸ்தனமிரண்டுங்குலுங்க... ... (விரக)

௩. அசுரப்படைகளுஞ்சலிக்க - தங்கச்சரிகை
ஆடையாபரணஞ்சொலிக்க
வசுதேவபுத்திரனுங்கெலிக்க - ஜெயபேரிகை
மங்களவாத்தியமொலிக்க
மல்லிகைமுல்லைமலர் - வகித்துப்பரிமளிக்க
அல்லும்பகலுமிந்த - அம்புவியோர்களிக்க ... ... (விரக)

௪. வானத்தவர்களெல்லாமொன்று - நோக்கவேலக்ஷ்மி
வல்லபனுக்கெதிரிற்சென்று
சேனையுடனேகூடிநின்று - அசுராதிகள்
செருக்குடனேசேர்ந்துஅன்று
செவ்வியில்மிகுந்திடுஞ் - சேயிழையேகன
திவ்வியரதத்தின்மேல் - தீவரம்வறென ... ... (விரக)

வசனம்.

இவ்வாறு மோகனரூபங்கொண்டு கண்ணுங்கருத்தும் கண்ணனையே தேடிநிற்கையில் பலராமர் தமது தம்பியை இதுசமயம் ருக்மணியையெடுத்து ரதமேல்வைத்துத் துவாரகைக்குச் செல்வாயென்றுரைத்தல்.

விருத்தம்.

விரதமோ கினியாகி ருக்மணியுஞ்சூழ்ந்த
வீணர்களை யக்கணத்திற் மயங்கச்செய்தாள்
நிரதபல ராமருடன் கண்ணன்தன்னை
நெருங்கியே யிதுசமய மென்றுரைத்து
பரதமிகு பரிஜனங்கள் நடுவுதன்னில்
பண்பாக விருக்குங் கன்னியையிப்போது
சரதமுடன் எடுத்துநீ செல்வதெந்தன்
சம்மதியென்றார் சேர்ப்பதுநம் பதியென்றாரே (௪௭௬)



இராகம் - மத்தியமாவதி - சாபுதாளம்.

பல்லவி.

இதுவேநல்லசமயம் - ருக்மணிதன்னை
எடுத்துவந்திடலமையும்.

அநுபல்லவி.

இதுவேநல்லசமயம் - எண்ணில்மனதில்நன்று
அதிதுரையாகச்சென்றால் - ஆகுங்காரியமின்று ... (இதுவே)

சரணம்.

௧. விதர்ப்பதேசன்புத்திரி - வேந்தர்குலத்து
மெல்லியர்தங்கள்மித்ரி
மதித்துன்னுடனேகூட - வந்திடுவாள்செல்வாய்
மாற்றரையெளிதினில் - வல்லமையால்வெல்வாய் (இதுவே)

௨. கோரியுன்னைத்தெரிந்து - கொடுமதியர்
கூட்டத்திலேயிருந்து
பாரினில்வாடுறாள் - பட்சமுடனேநாடி
தேரினிலேயேற்று - தீவரமாயோடி ... ... (இதுவே)

௩. துஷ்டன்ருக்குமன்தங்கை - மனதினில்
துயரமாகிறாள்மங்கை
இஷ்டம்பூர்த்திசெய்ய - இதுவேநல்லகாலம்
இன்பமுடன்செல்வாய் - இருக்கின்றதனுகூலம் ... (இதுவே)

வசனம்.

கண்ணன் தனதண்ணன் சொல்லியவைகளுக்கு மெய்ச்சி உடனே ரதமீதெடுத்துக்கொண்டு செல்லுதல்.

விருத்தம்.

அண்ணனன்றுரைத்த வெல்லாம் கண்ணன்நின்று
அருமையாய்த் தன்மனதிலமரவிட்டு
வண்ணமுடனேசென்று வஞ்சிக்காக
வருதிரண்டசேனைகளை விலக்கியங்கு
பண்ணமைந்தமொழியாள் ருக்மணியைக்கண்டு
பட்சமுடனவள் பயத்தைமுற்றுநீக்கி
எண்ணரியகீர்த்தி மணங்கொள்வோமென்று
எடுத்திட்டார் ரதமீது விடுத்திட்டாரே ... (௪௭௭)

இராகம் - தன்னியாசி ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. எடுத்தாரேருக்மணியைக்கரத்தில்
விடுத்தாரேரதத்தில்
கெடுத்தாரேவந்த எதிரிகளதமாய்
கிளிமொழியாட்கிதமாய் ... ... ... ... (எடு)

௨. யானைகளாதிசேனையையெல்லாம்
அடித்துத்துரத்தியோட்டி
வானவருடைய நாதனும்மன்மத
வடிவுதன்னைக்காட்டி ... ... ... ... ... (எடு)

௩. சுற்றிவளைந்த சேனைகளெல்லாம்
ஸ்மரணையும்மறந்திருக்க
அத்தருணத்தில் அத்திருமகளை
அன்புடனுதரிக்க ... ... ... ... ... (எடு)

௪. தம்மையேகோரியிருக்கிறாளென்றவள்
தாபங்களைநீக்கி
நிம்மதியாகவேநீலமேகனும்
நிமிஷத்திலேதூக்கி ... ... ... ... ... (எடு)

௫. பக்கத்துதவியாய் வந்திடுமசுரப்
படைகளெல்லாமொழிய
அக்கரைலட்சுமிநாதன்மேலமாரும்
அன்புடன்மலர்பொழிய ... ... ... ..., (எடு)

வசனம்.

இவ்வாறு ருக்மணியைக்கண்ணன் ரதமீதெடுத்துச் சங்கத்தைபூரித்துப் போனபிறகு மயக்கம் நீங்கி தெளிவுபிறந்த படைகளும் பரிஜனங்களும் கண்ணனைத்தூஷித்தல்.

விருத்தம்.

எடுத்துடனேருக்மணியை ரதத்திலேற்றி
எழிற்கண்ணன் துவாரகையை நோக்கிச்செல்ல
தடுத்தவரையடித்தோட்டியக்குமிஞ்சத்
தங்கிநிற்குஞ் சேனைகளும்நடுங்குமாறு
அடுத்திருக்கும் பாஞ்சன்னியம் எடுத்தேயூத
அங்கிருந்த அசுரர்களெல்லாமெழுந்து
கெடுத்திடுவோம்மடைப்பயலை யிப்போதென்று
கிளம்பினார்சவுரியங்கள் விளம்பினாரே ... (௪௭௮)



இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. வெண்ணைதிருடி வீடுதோறும் உண்டதுபோல
வேகமாகவிங்குவந்து - பீஷ்மன்
பெண்ணைத்திருடிக்கொண்டு போகிறவனையின்று
பிடித்துவருவேனென்றான் - ஒருவன் ... ... ... *

௨. சுற்றிலுமனேகசூரர்களிருக்கையில்
சூதாகவேயிங்குவந்து - அறியாமல்
அத்தருணம்அந்தஅரிவையையெடுத்தோனை
அழியச்செய்வனென்றான் - ஒருவன் ... ... ... *

௩. பாரினில்ஸ்திரீகள் மத்தியிலிருந்த
பாவைகைபிடித்தவன்தன்னை - இப்போ
வீரியமுடனேவாளுக்கிரையாக
வீசிவருவேனென்றான் - ஒருவன் ... ... ... ... *

௪. சிசுபாலனுக்கென்றுநிச்சயித்தவளை
ஜெகத்தோர்நகைக்கவேசெய்த - அந்த
வசுதேவனுடைமைந்தன்றன்கர்வத்தை
வாங்கிவிடுவேனென்றான் - ஒருவன் ... ... ... *

௫. இத்தனைபேரையும் இந்திரஜாலஞ்செய்து
இளிக்கச்செய்திட்டவன்தன்னை - இதோ
குத்திவிழத்தள்ளிகோதைருக்மணியை
கொண்டுவருவேனென்றான் - ஒருவன் ... ... ... *

௬. பஞ்சலக்ஷம் இடைப்பெண்களைப்போலிந்த
பத்மினியையெடுத்தவனை - தூரம்
மிஞ்சவொட்டாமல்ஓடிநான்மறித்து
மீட்டுவருவேனென்றான் - ஒருவன்... ... ... ... *

வசனம்.

இவ்வாறு விருதுகூறிநிற்குஞ் சேனைகளுடனே ஜராசந்தன் சென்று கன்னிகையைக் கொண்டுபோகுங் கண்ணனைவழிமறுத்ததைச் சொல்லுதல்.

விருத்தம்.

மூடருரைத்திடுஞ் சொல்லைக்கேட்டேயந்த
மூர்க்கமுள்ளஜராசந்தன் பகைமேற்கொண்டு
ஆடவர்முன்திருடனைப்போலிடையன்வந்து
ஆண்மையொன்றுங்காட்டாமற்கன்னிதன்னை

கூடமணம்புரிந்திடு வோமென்றுதேரிற்
கொண்டுமகிழ்வாகவே போனுனென்னச்
சேடனுமே புகலரியகண்ணன்முன்னே
சென்றிட்டான் விதியென்னவென்றிட்டானே (சஎகூ)

இராகம் - பிலகரி - சாபுதாளம்.

கண்ணிகள்.

க. நின்றுத்தரஞ்சொல்லிப்போடா
நீதியற்றமூடனே
அன்றுயுத்தஞ்செய்தொளித்த
அஞ்சா - வஞ்சா - நெஞ்சா - பஞ்சா ... ... (நின்று)

உ. தமித்தியனுக்குரியமாதைத்
தான்கிரகிக்கலாமோடா
பமித்தியனேயெனைத்திரும்பிப்
பாரு - கூறு - ஊரு - சேரு ... ... ... (நின்று)

ந. பிண்டிபாலம்சூலம்முசலம்
பெலத்தவாயுதங்களும்
கொண்டுகொங்கள்வந்தோமிதோ
குள்ளா - கள்ளா - உள்ளா - வின்ளா ... ... (நின்று)

ச. சுற்றியேவளைத்திநாங்கள்
சோரவுந்தன்மேனியை
குத்தியடித்திப்போரத்தம்
குடிப்போம் - கடிப்போம் - பிடிப்போம் - ஒடிப்போம் (நின்று)

ரு. தேரில்மங்கையையெடுத்து
தீவரமாப்போகிறாய்
நேரில்யுத்தஞ்செய்திடுவோம்
நில்லு - வெல்லு - சொல்லு - செல்லு ... ... (நின்று)

வசனம்.

இந்தவிதமாக ஜராஸந்தன் விருதுகூறிப் பின்றொடர்ந்து வருவதைக் கண்ட பலராமர், தன் தம்பியை ருக்மணியோடு துவாரகைக்குப் போகும் படியுரைத்துத்தானும் தன்பரிவாரங்களோடும் அவர்களைப் பின்றொடர வொட்டாமல் அடித்துத் துரத்திவிட்டதைச் சொல்லுதல்.

விருத்தம்.

நில்லென்று சொல்லியேகும்பலகாக
நெருங்கியே மூடர்களுஞ்சூழும்போது



கல்விமதியிருந்தபலராமனன்று
கண்ணனைருக்மணியுடனே துவாரகைக்கு
செல்லுமெனத்தானனுப்பி விட்டக்குள்ள
சேனையொடு ஜராஸந்தன் முதலானோரை
வல்லிருப்பாயுதங்களன்று கையிலெடுத்து
வாட்டினன் சண்டையிட்டு ஓட்டினனே ... (சஅய)

இராகம் - முகாரி - ஆதிதாளம்.

பல்லவி.

சண்டைசெய்கிறான் - பலராமன் - அசுரருடன்
சண்டைசெய்கிறான் - பலராமன்

சரணம்.

க. மண்டலமீதினில் மகத்துக்கள்களிக்க
அண்டியவசுரரும் அன்றுடனொளிக்க
கண்டகண்டமாகக் கரமுடல்நெளிக்க
அண்டையில் உதவியாரெனவிளிக்க ... ... (சண்டை)

உ. கலப்பையையவர்கள் கழுத்திலேமாட்டி
மலைக்கவோரிடத்திலே மடக்கியேகூட்டி
சலிப்புறபூமியிற் சாய்த்திடஈட்டி
யுலக்கைகளாலுடல் பிளந்திடவேவாட்டி ... (சண்டை)

ந. கத்திகடாரிகள் களமதிலெறிய
சுற்றியேவந்த சூரருமுறிய
மத்தியிலிருந்தவர் மண்டையுஞ்சரிய
அத்தனைபேர்களு மழிந்திடவேபெரிய ... ... (சண்டை)

ச. அசுவப்படைகளொடு அணியணியடுத்து
அசுரரேவியகணை யனைத்தையுந்தடுத்து
இசைவானவாயுதம் எண்ணறவெடுத்து
விசையாகவந்தவர் மீதினிலேவிடுத்து ... ... (சண்டை)

ரு. அடவியிலெங்கும் அணுத்திரள்பறக்க
வடிவுறுசேனைகள் வல்லுயிர்துறக்க
மடையருக்குளமதில் மயக்கமும்பிறக்க
படியினிலெங்குமே பலங்களுஞ்சிறக்க ... ... (சண்டை)

சு. வந்தஜராசந்தன் மதத்தினையடக்கி
சந்தித்தசால்வனை சக்தியையொடுக்கி
தொந்தியிடும்பனைத் தூக்கியேஇடுக்கி
முந்தியவுண்டர்களை மூர்ச்சிக்கவேமடக்கி... ... (சண்டை)

௭. சேனையிற்சிலர்கள் சிதறியேஓட
ஏனையசூரர் இடிபட்டுவாட
கானத்திலழுகுரல் கடலிலும்நீட
வானத்தில்தேவரும் வந்துடன்நாட ... ... (சண்டை)

௮. துண்டந்துண்டமாக துடித்துடல்மேவ
ஒண்டியெவ்விடத்திலும் உதிரமும்பாவ
அண்டியேவருத்தத்தால் அனைவருங்கூவ
கண்டுலக்ஷ்மியுங் களித்தவளாயுலாவ ... ... (சண்டை)

வசனம்.

இவ்வாறு பலராமனால் அபஜயமாகித் திரும்பிய சிசுபாலனை ஜராசந்தன்கண்டு நீதியுரைத்துத் தயிரியப்படுத்துதல்.

விருத்தம்.

இந்தவிதம் பிணிமாகிச் சிலபேர்சூரர்
ஏகமா யந்தகன்தன் னூரடைந்தார்
நந்தர்சுதன் செய்கையினைக் கண்டுஅஞ்சி
நாணியே சிலவரச ரோடலுற்றார்
மந்தமதி சிசுபாலன் விசனத்தாலே
மாலையிட முடியாதால் மறைந்துபோக
நந்தலுறுஞ் சமயமதில் ஜராசந்தனேகி
காதினன் இதவுசொலக் கூடினனே ... (௪௮௧)

இராகம் - ஸ்ரீராகம் - அடதாளம்.

பல்லவி.

சொல்கிறேன்கேளடா - சூட்சமாகக்கொஞ்சம்
சிசுபாலனேவாடா

அநுபல்லவி.

சொல்லுகிறேன்கேளுன் - சோகமோகந்திர
வெல்லுகிறேன்நானே - வேந்தனேநீயாற ... ... (சொல்)

சரணம்.

௧. தேகத்திலேயுயிர் இருந்தாலிப்படிப்பட்ட
ஸ்திரீகள்பலரைக்காணலாம் - இந்த
தேகம்போனலப்பால் பிராணன்வருமோடா
தெரிவையைநினைந்துநீ தியங்கிவாடாதேநான் ... (சொல்)

௨. தெய்வசங்கற்பமிப்படி பிருக்கதேயாகில்
சிந்தித்தால்பயனேதடா - இப்போ



தெய்வமவனிடத்தில் தெள்ளருள்புரிந்ததால்
தேவகிமகன்பக்கல் ஜெயமுமிருந்ததடா ... ... (சொல்)

௩. பூடகமான இப்பூமியின்வாழ்க்கைமுற்றும்
பொம்மலாட்டந்தானடா - இதை
நாடியிங்கேவந்து நாணத்தையுமிழந்து
நான்பட்டபாட்டையும் நன்றாகவேயுனக்கு ... ... (சொல்)

௪. இருபத்துமுக்கோடி யக்ரோணியையவர்
பதினேழுதடவைவென்றார் - பின்பு
வருபதினெட்டாந்தர மந்தமடையனை
மலையோடேயெரித்த வல்லமையறியாயோ ... ... (சொல்)

௫. நாளையதினத்திலே ராஜராஜர்களோடு
நானவடஞ்சென்று - அந்த
காளையிடையன்வந்து கருதிக்களவுசெய்த
கன்னியைக்கொண்டேதன் கண்முன்னேவிடுகிறேன் (சொல்)

௬. சுகத்தில்களிப்பாயும் சலிப்பிற்றுக்கமாயும்
சொல்லுவார்உலகத்தோர்கள் - அப்படி
இகத்தில்நான்திரியாமல் என்னைலக்ஷ்மீபதி
எதிர்த்தாலும்வென்று இங்குநான்திரும்புவேன் ... (சொல்)

வசனம்.

இவ்வாறு ஜராசந்தனால் தயிரியங்கூறக்கேட்ட சிசுபாலன் சேனைகளுடன் தன் நகரஞ்சென்றதையும், கண்ணன் ருக்மணியையெடுத்துப் போனதையுங் கேள்வியுற்ற ருக்மணியினண்ணன் தண்டுதளங்களோடுசென்று கண்ணனையெதிர்த்தல்.

விருத்தம்.

திருத்தமாய் ஜராசந்த னுரையினாலே
தீவிரமாய்ச் சிசுபாலன் நகரஞ்சேர்ந்தான்
வருத்தமாய் ருக்மனும் கண்ணன்செய்த
வஞ்சனையை மனங்கொதிக்கக் கேட்டெழுந்து
பருத்தரத மீதேறிச் சேனைசூழ
பயணமாய் வெகுவிரைவிற் போய்மடக்கி
ஒருத்தனைத் தங்கையினைக் களவுசெய்த
ஒழிவென்றான் இதுஎன்ன இழிவென்றானே (௪௮௨)

இராகம் - மோகனம் - அடதாளம்.

பல்லவி.

ஏனெடுத்துப்போறாய்திருடா - இப்போ
தெனதுதங்கையைவிட்டுவிடடா

அநுபல்லவி.

தேன்மொழியாள்தன்னை - தேரிற்கொண்டுசெல்லும்
திருடா - திருடா - திருடா - விடுவிடடா ... (ஏனெ)

சரணம்.

௧. ராஜன்பீஷ்மன்சுதன்நானடா - வருமோ
நல்லமதியுனக்குத்தானடா
மாசில்லாகோத்திரகுலமடா - யானும்
மனதில்நீயறியாததேதடா
வஞ்சித்தென்தங்கையை - வந்தெடுத்துப்போருய்
வாதா - வாதா - வாதா - விடுவிடடா ... ... (ஏனெ)

௨. எந்தஇடத்தில் பிறந்தாயடா - அப்பால்
எங்குபோய் நீசிறந்தாயடா
புந்திநலந்துறந்தாயடா - அரசன்
புத்திரியென்பதை மறந்தாயடா
அடவியில்மாடுகள் மேய்த்திட்டபுத்தியோ
அதமா - அதமா - அதமா - விடுவிடடா ... (ஏனெ)

௩. நிஜமென்பதுன்னிடமேதடா - சொல்லாய்
நெருங்குமுன்வாழ்வுநில்லாதடா
இசையுமிவ்வேலைதகாதடா - சொன்னேன்
என்னுளுமுனக்கிதுநீதடா
எளிதமாகவேயிப்படிசெய்திட்டாய்
இடையா - இடையா - இடையா - விடுவிடடா (ஏனெ)

௪. காயம்வேண்டுமானால்நில்லடா - என்தன்
கருத்துத்தங்கையைவிட்டுச்செல்லடா
பேயனேநீயென்னசொல்லடா - பார்ப்போம்
பேசும்என்தனைநீவெல்லடா
தொல்லுலகிலுன்னைத் தூஷிக்கநேரிடும்
துஷ்டா - துஷ்டா - துஷ்டா - விடுவிடடா ... (ஏனெ)

வசனம்.

இந்தவிதம் தூஷித்த ருக்மனைக் கண்ணன் நோக்கி புன்சிரிப்பு கொண்டு அவனைப்புடைத்ததைச் சொல்லுதல்.

விருத்தம்.

சிந்தைகளித்திட வெந்தைபீஷ்மராஜன்
செல்வியாய் வந்துதித்த தங்கையான



சுந்தரஞ்சேர் பெண்ணரசைவிடடாவென்னச்
சொல்லியே பழிகூறியெதிர்த்து நிற்கும்
மந்தமதிருக்மனைக் கண்ணன்கண்டு
மனமாரப் புன்னகையுஞ் செய்துமேலே
வந்திருந்த வானவருங் களிக்குமாறு
வாரினர் சரமழையாய்த் தூறினரே ... (௪௮௩)

இராகம் - பியாகடை - ஆதிதாளம்.

பல்லவி.

வாட்டினனே - கண்ணன்
வாட்டினனே

அநுபல்லவி.

வாட்டினன் ருக்மனது
கூட்டமாஞ் சேனையிற்றுவி
நீட்டமாய்க்கரங்கள் வில்லில்
பூட்டியே வேகமாயேவி ... ... ... ... (வாட்)

சரணம்.

௧. வந்தமணிரதங்களை - வரிசையாய்ப்பொடியாக்கி
மதகரிசிலவற்றை - மாட்டியுயிரைப்போக்கி
அந்தமிகுபுரவிகள் - அத்திரங்கள்படநோக்கி
அலறியோடவுங்காலாள் - அணிகலைந்தேகத்தாக்கி
ஆவெனும் பெருங்கோஷம்
அமர்களமதிலெங்கும்மேவ - அருகில்வர
அழைத்துச்சாரதிகளை
அப்பனங்குலையெனச்சீவ - உதிரம்எழ
காவலரெவர்களுங்
கதறிப்பதறியெங்குந்தாவ - காணுஞ்சிலர்
கருதியிதென்னவென்று
கலங்கிமனதுமிகநோவ - வதைத்துமேலும்
இப்படிச்சிலரையகந்த - எமலோகமதிற் சேர்த்து
தப்பினவரையும்மிகத் - தண்டிக்கத்தருணம்பார்த்து ... (வாட்)

௨. எனதருஞ்சேனைகளை - இப்படிநீயடிக்க
ஏற்குமேகவுனைவிடேன் - இவ்வுலகில்நடிக்க
தனதாகநீயெந்தன் - தங்கையைக்கைபிடிக்க
தாஷ்டிகங்கொண்டவுன்னைத் தரணிதனிற்றுடிக்க
செய்திடவெனக்கோர்

தடையிலக்ஷணத்தினிற்பாராய் - இப்பொழுதென்
சேவகத்திறமையைச்
செலுத்துகிறேன்சிறிதுநேராய் - திருடன்போல
தையலையபகரித்திடும்
இந்தபழிதனைச்சேராய் - முடித்திடாமல்
தரித்திடிலுயிரினி
யுருக்குமனல்லகான்தேராய் - எனச்சினந்து
அம்புகள்சொரிந்திடவே - அஞ்சனவண்ணனுங்கண்டு
உம்பருமகிழ்ந்திடவே - ஓங்கியாயுதங்கொண்டு ... (வாட்)

ஙூ. உன்சமர்த்தும்என்சமர்த்தும் - ஒருகையில்பார்க்கலாம்
உன்தங்கையைமீட்கவந்த - உன்ஆசையைநீக்கலாம்
சஞ்சலமிருந்திடில் - சண்டையிற்றீர்க்கலாம்
சாமர்த்தியமிருந்தால்நீ - சகசமாய்வெற்கலாம்
என்றெளிர்கணைகளை
எடுத்தவன்மீதினில்வீய - விடுத்தெதிர்த்து
இலகியசிலபடைகளை
இருநிலமதில்மாய - கண்டதுண்டமாய்
நின்றிடப்புரிந்துதிரம்
புவியெங்கிலுந்தோய - சிலவசுரர்
நிறையமர்க்களமகன்றோர்
திக்கினிலொளியும்பாய - மாகவேயோடி
சேர்ந்திடுமவர்களையுஞ் - சின்னபின்னமாகச்செய்து
சேர்ந்திடுமவர்களையும் - நின்றுதலைகளைக்கொய்து (வாட்)

ச. தங்கையைக்கொணர்ந்ததுங் - தவிரஎன்னையடித்தாய்
தயிரியமாகச்சில - தானைகளைக்கெடுத்தாய்
இங்குசூதாகவந்து - எங்கள்பெண்ணையெடுத்தாய்
ஏகிமுன்கோகுலத்தில் - இருந்தவரையடுத்தாய்
எதனக்கித்தனைமதம்
இடையாவெனக்கூவி - சிசுபாலனுக்கு
இணையெனவுனையியம்
பிடுவரோஅறிவினர்காவி - ஞலெக்காலும்
நிதிமதியாசிலை
யுனக்குளதோஇப்புவியி - லெனவிகழ்ந்து
நெடுமுடைவாள்கதை
யீட்டிகடாரிகளேவி - யுபயோகிக்க
அத்தனையுமொருகணையாலே - தடுத்தச்சுதனும்
இத்தரையில்தேவகியின் - இஷ்டமாகுமச்சுதனும் (வாட்)



459

வசனம்.

இவ்வாறு கண்ணன் வந்தவர்களையும் ருக்குமனையும் புடைத்து நிற்கையில் ருக்குமன் கடுஞ்சினமடைந்து உடைவாளையுருவித்தன்னை வெட்டவர்தவனைக்கண்ணன் பிடித்துக்கொண்டு உயிரைவாங்கும்படி யுத்தேசிப்பதையறிந்த ருக்மணிகொல்லாமல் மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுதல்.

விருத்தம்.

இன்னவா யதஞ்செய்யு மவனைக்கண்டு
இடையிலுள்ள வாளதனை யுருவியோடி
பின்னமே செய்யவரும் ருக்குமனைப்பார்த்துப்
பேசவொண்ணுக் கீர்த்தியுடைக் கண்ணன்றானும்
சன்னதமாய்ப் பட்டயத்தைப் பிடுங்கிகொண்டு
சாதகமா யுயிர்வாங்கப் போகுமுன்னம்
மின்னலெனு மிடையாள் திருவடியைப்பற்றி
மேலென்றாள் அண்ணனைவிட் டேலென்றாளே. (சஅச)

இராகம் - சாமா - ஜம்பைதாளம்.

கண்ணிகள்.

க. பிராதாவைக்காரும் - பிராணேசாநீரும்
பாரியென்னுரைகேளும்
ஆளும் - தாளும் - இன்றாளும் - பரந்தாமனே
பாதகன்பிழையை - க்ஷமித்திடும் - க்ஷமித்திடும் - க்ஷமித்திடும் *

உ. இவனைநீரடித்தால் - என்னவரும்மடித்தால்
ஈரேழுலகுநாதா
வேதா-போதா-மலர்ப்பாதா - எதுகுலேசனே
இவன்உயிரைக் - காத்திடும் - காத்திடும் - காத்திடும் ... *

ஙூ. சரியானவருடன் - சண்டைசெய்யக்கடன்
சத்துருவைமடியும்
கடியும் - யடியும் - போர்முடியும் ஜகத்காரணா
சத்தியெல்லாநீர் - அறிகுவீர் - அறிகுவீர் - அறிகுவீர் ... *

ச. மகனைவதைத்திட்டால் - மாதாபிதாகேட்டால்
மனத்துயரப்படுவார்
கெடுவார் - சுடுவார் - உயிர்விடுவார் - கிருஷ்ணமூர்த்தியே
மைத்துனன் உயிரைக் - காருமே - காருமே - காருமே ... *

வசனம்.

இந்தவிதம் சொல்லிய ருக்மணியின் உரையைக்கேட்டு மனதிரங்கிய கண்ணபிரான் ருக்மனைத் தேரிற்பிணித்து அவமானப்படுத்தியபோது பலராமர்வந்து கட்டவிழ்த்துச் சமாதான நீதியுரைத்ததைச் சொல்லுதல்.

விருத்தம்.

காருமென்ற ருக்மணியி னுரைக்கிதங்கி
கண்ணனுமக் கசடனுயிர் வாங்காமல்விட்டுப்
பாருமப்பா மைத்துனனே மரியாதையின்று
பண்ணுகிறேன் உலகிலுள்ளோர் மெச்சுமாறு
தேருடனே யவனைகன்று யிறுகக்கட்டித்
தீவரமாய் ஐங்குடுமி யாய்ச்சிரைக்க
ஆருமெதிரில்லாத பலராமன்வந்து
அடுத்திட்டான் நீதிசொல்லி விடுத்திட்டானே (௪௮௫)

இராகம் - பைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

கிட்டாவுனக்கிந்தத்துஷ்டத்தனம்ஒதடா
கிருபையாளனேஏதடா

அநுபல்லவி.

முட்டாளாகவேயவன் - இருந்தபோதிலுந்தலை
மொட்டையடித்து - முகமீசை சிரைப்பாருண்டோ ... (கிட்)

சரணம்.

௧. சம்பந்தியாகவே - யிருக்கும்பீஷ்மனுடை
தலைமகனுமிவன் - மானமென்பதுகெட
கொம்பனையாளுக்குக் - கோபம்மனதிற்பட
கொடுமையித்தனையாமோ - கோபாலனேயடா ... (கிட்)

௨. வெட்டினாலும்சிரம் குற்றமில்லையிந்த
விதமாகச்செய்தது - மேன்மையாமோபொருந்த
கட்டினையத்தேரினில் - கண்ணீருமவன்சிந்த
கபடநாடகாவுந்தன் - கருத்தறியான்சொந்த ... ... (கிட்)

௩. தேகபந்துவாக - இருக்கும்ருக்குமனுக்கு
தெரியாதவர்போல - தீமைசெய்தாய்கோக்கு
வாருடையவிந்த - மாதுருக்மணிக்கு
வருத்தமுண்டாகாதோ - வசையாமிதுஉனக்கு ... ... (கிட்)



௪. சத்துருமித்துருக்களை - சமமாகவேயோதும்
தம்பியுனக்கிவன் - மீதென்னவெகுகுரோதம்
உத்தமியாம்லக்ஷுமி - உன்னிடுவாள்பேதம்
உலகினில்உனக்கிது - உண்மையாய்அபவாதம்... ... (கிட்)

வசனம்.

இவ்வாறு கண்ணனுக்குரைத்து ருக்மணியைநோக்கிப் பலராமன் சமாதானஞ் சொல்லி விசனத்தையாற்றுதல்.

விருத்தம்.

கண்ணனருகணைந்திந்த விதமேயாகக்
கடுங்கோபத்தையாற்றியடுத்திருந்த
வண்ணமுகுவாய்ந்த ருக்மணியைநோக்கி
வந்தவுனதண்ணனையும் பங்கஞ்செய்தான்
எண்ணமாய்என்தம்பிமேலே கோபம்
இப்போழுது நீ கொள்ளாவிதமேயாக
நண்ணவேநான்சொல்லும் வார்த்தைகேட்டு
நாடென்றுன் நடுநிலைமை தேடென்றானே ... (௪௮௬)

இராகம் - சௌராஷ்டிகம் - ஆதிதாளம்.

பல்லவி.

விசனப்படாதேயம்மா - ருக்மணியம்மா
விசனப்படாதேசும்மா

அநுபல்லவி.

விசனமேனினிமேலே - வீணன்வாய்மதத்தாலே
பசையில்லாவார்த்தைசொல்லி - பட்டபாட்டைநோக்கி (விச)

சரணம்.

௧. இப்படியிழிவாக - இவ்விடம்வந்தடுத்து
செப்பவொண்ணாதகேலி - செய்தவனுக்காக ... ... (விச)

௨. முன்னம்நீசெய்தவத்தால் - முகுந்தனேபதியாக
கன்னயமாகவின்று - நாடியபடியாலே ... ... (விச)

௩. தேய்வதும்வளர்வதும் - திங்களுக்கிலையோபாரில்
ஆய்வதன்னண்ணன்செய்த - அகந்தையைநீகண்டு ... (விச)

௪. கக்ஷிசெய்தஇவன் - காலகாலமட்டும்
லக்ஷுமிபோலும்பெண்கள் - நகைக்கச்செய்தானைப்பார்த்து (விச)

வசனம்.

இவ்வாறு பலராமர் சமாதானஞ்சொல்லிக் கண்ணனைருக்மணியோடு துவாரகைக்கு அழைத்துவரும்போது துவாரகையிலுள்ளோர் எதிர்வந்து தக்கமரியாதையோடுகூடி அந் நகரஞ்சேர்ந்ததைச் சொல்லுதல்.

விருத்தம்.

ஓதுபல ராமர்சொல் லுரையினாலே
ஒண்டொடியு முள்ளமிது என்னக்கண்டாள்
தீதுசெய்த ருக்குமனுங் குண்டலிக்குத்
திரும்புவேன் கண்ணனைக் கொன்றுனெலென்று
வாதுசெய்ய வேறூர்க்குப் போனனப்பால்
வல்லாள ரிருவரும் ருக்மணியினோடு
கோதில்லாத் துவாரகைக்கு வருதல்நோக்கிக்
கூறுவார் எதிர்வந்து நேருவாரே ... ... (௪௮௭)

இராகம் - மோகனம் - அடதாளம்.

பல்லவி.

கிருஷ்ணனையெதிர்கொண்டுவருகின்றார் - அர்த
கேசவனுக்குநதர்தருகின்றார்

அநுபல்லவி.

துஷ்டசம்மாரனுந் தோகையோடுறக்கண்டு
இஷ்டானைவரும் - இதையங்களிகொண்டு ... (இரு)

சரணம்.

௧. குற்றவாளிகளைத்தடுத்து - அந்தக்
கோதையொடுதேரிலடுத்து
உற்றகீர்த்திதனையெடுத்து - ஓங்கி
யூருக்கருகிலேகடித்து
உம்பரும்மகிழவே - உச்சிதன்வரகாடி
சம்பிரமமாகவே - சகலர்களுங்கூடி ... ... (இரு)

௨. சத்திரசாமரங்கள்பிடிப்பார் - அப்போ
சகலவாத்தியங்களுமடிப்பார்
கத்திதேவன்புகழ்படிப்பார் - அந்தக்
காரணன்முன்னிலேகடிப்பார்
கனமாகப்பூரண - கும்பங்களுங்கொண்டு
இனமாகமந்திரம் - எல்லோர்களும்விண்டு (இரு)



௩. துவாரகாநாதனைப்போற்றுவார் - அங்கே
தூபதீபங்களையேற்றுவார்
நிகரமானமலர்தூற்றுவார் - அழகிய
நீலமேகனுக்குச்சாத்துவார்
நேசமுடன்உப - சாரங்களுஞ்செய்து
மாசில்லாதபன் - னீர்களுமேபெய்து ... ... ... (இரு)

௪. பேராயிரத்தானைப்பாடுவார் - மகிழ்ந்து
பிரியமாயெல்லாருங்கூடுவார்
நேராகக்கூடியேயோடுவார் - துணையாய்
நெருங்கியசேஷனைநாடுவார்
உச்சிதமங்கள - வாழ்த்துகளுஞ்சொல்ல
மெச்சியேசேர்ந்தனர் - மேன்மைசெய்யுநல்ல ... (இரு)

௫. நகூஷிசெய்தவரைமடித்து - நல்ல
கன்னிருக்மணிகைபிடித்து
தக்ஷணம்அன்புடனெடுத்து - பசுந்
தங்கரதந்தனில்விடுத்து
தங்கியஜெயமுடன் - தாமோதரன்வர
தையல்லட்சுமியும் - தான்மகிழ்ச்சிதர ... ... (இரு)

வசனம்.

கண்ணன் தாய்தந்தையர்முதலிய பெரியோர்களைவணங்கி ருக்மணியை யழைத்துவந்த சமாசாரத்தைச் சொல்லுதல்.

விருத்தம்.

கூட்டமாய்த் துவாரகையிற் சேர்ந்தபின்பு
கோலமா யரண்மனைக்குள் நுழைந்தகண்ணன்
பாட்டன்முதற் பெரியோரை வணங்கியன்று
பயன்பெருகு மாசீர்வா தங்கள்பெற்று
காட்டமாய்ப் பெற்றதாய் தந்தையரைக்கிட்டி
காயகியுந் தானுமா யடியில்வீழ்ந்து
தேட்டமாய் நங்கைதனைக் கொணர்ந்தசேதி
தெரிவிப்பான் உள்ளபடி விரிவிப்பானே ... (௪௮௮)

இராகம் - உசேனி - ஆதிதாளம்.

பல்லவி.

அழைத்துவந்தேனையா - மரசன்மகளை
அழைத்துவந்தேனையா

அநுபல்லவி.

அழைத்துவந்தேனையா - அழகியருக்மணியை
தழைத்துமணம்புரிய - தரணியிற்சத்குணியை ... (அழை)

சரணம்.

௧. அண்ணனுதவியால் - அனைவரையுஞ்செயித்து
வண்ணமுடையமாதின் - வடிவையதிசயித்து ... (அழை)

௨. குவலயத்தோரிகழ - கொடியருக்குமன்தன்னை
அவமானமதுசெய்து - அடித்தோட்டியுள்முன்னை ... (அழை)

௩. நமதுமனதுக்கு - நன்றாயிசைந்துசெல்லும்
குமரியிவளையானுங் - கொணர்ந்தேன்இஷ்டத்தைச்சொல்லும் ()

௪. சிசுபாலனுக்கென்று - செப்பியிருந்தவளை
சுசியுள்ளநீர்மகிழ - சுந்தரியாமிவளை ... ... (அழை)

௫. பக்ஷமாய்என்னைச்சேர - பார்வதியைப்பூசித்தாள்
லக்ஷ்மிமகிழும்படி - லலிதமாய்நேசித்தாள் ... (அழை)

வசனம்.

கண்ணன் இவ்வாறு சொன்னதைக்கேட்ட வசுதேவர் துவாரகையை அலங்கரித்துச் சகலராஜாக்களுக்கும்மணவோலையெழுதும்படித்திட்டஞ்செய்தல்.

விருத்தம்.

மகனுரையைக் கேட்டவசு தேவருக்கு
மாறாத மகிழ்பெருக வுடனெழுந்து
இகமதிலே பீஷ்மன்முதற் கிரீடஞ்சூடும்
ஏர்பெருகும் ராஜாக்க ளனைவருக்கும்
சுகமாக மணவோலை யெழுதச்செய்து
சுத்தரமாய் வேண்டியவை சேர்க்கச்சொல்லி
மிகமேலோர் களிக்கநக ரலங்கரித்தல்
மெய்யென்றார் மனப்படியே செய்யென்றாரே (௪௧)

இராகம் - உசேனி - அடைதாளம்.

பல்லவி.

பட்டணம் அலங்கரித்தார் - திருமணம்
கிட்டனுக்கென்றுரைத்தார்

சரணம்.

௧. பட்டணந்தன்னில் - பவளத்திறற்கால்கள்
பாங்காகவேநாட்டினார் - அதில்



இட்டமதாய்நவரத்தினத்தாற்பல
விட்டங்களும்பூட்டினார் ... ... ... ... (பட்)

௨. கோலமரகதக் - கற்களினாலே
கொடுங்கைகளுங்கூட்டினார் - மிக
மேலும்பசும்பொற்றகடுகள் ஜோதியாய்
மீதிலெங்குந்தீட்டினார் ... ... ... ... (பட்)

௩. வண்ணமமைந்த - பசுங்குலைகளுள்ள
வாழைக்கமுகுநட்டார் - மேலே
எண்ணரிய மகரதோரணங்களும்
எங்கிலுமாடவிட்டார் ... ... ... ... (பட்)

௪. சந்தனத்தாலே தரையும்மெழுகியே
சங்கிறற்கோலமிட்டார் - அந்த
மந்தகாசனுக்குத் திருக்கலியாணமென்று
மங்களம்பாடப்பட்டார் ... ... ... ... (பட்)

௫. அம்பொன்திகழும் - மணப்படிகளிட்டு
அரசாணிக்காலும்வைத்தார் - எங்கும்
வம்பவிழுமலர்மாலைகளுந்தூக்கி
மனதிற்சந்தோஷமுற்றார் ... ... ... ... (பட்)

௬. கோபாலனுக்குத் - திருமணமென்றொளிர்
கொடிவிளக்குகளேற்றினார் - வந்த
பூபாலபீஷ்மன் புதல்விசுபமென்று
புஷ்பங்களுந்தூற்றினார் ... ... ... ... (பட்)

௭. பூரணபொற்குடம் - வைத்துமந்திரங்கள்
பூசுரரும்ஓதினார் - அன்று
சீராகப்பதினெட்டுவாத்தியம்நகரத்தில்
செம்மையாக ஊதினார் ... ... ... ... (பட்)

பீஷ்மன்புத்திரியைக் - கொண்டுவந்தானென்று
பெருமையாகப்படித்தார் - ருக்மணி
பூசித்தவண்ணம்மணம்முடிந்ததென்று
புகழ்ந்தவர்கள் நடித்தார் ... ... ... ... (பட்)

வசனம்.

பீஷ்மன்முதல் சகலராஜாக்களும் பந்துஜனங்களும் முனிவரர் ரிஷீஸ்வரர்கள் முதலிய பெரியோர்களும் கண்ணன் திருக்கல்யாண மகோற்சவத்தைக்கண்டு களிக்கும்படித்துவாரகையில்வந்து சேர்ந்தவைபவத்தைச் சொல்லுதல்.

விருத்தம்.

அலங்காரஞ் செய்திருக்கும் நகரத்திற்கு
அழகுமுடிக் கிரீடாதி மன்னர்கூட்டம்
கலங்குமனக் கவலைதனை நீக்கித்திற்கும்
காகைத்து முனிவரெலாஞ் சேர்ந்தபின்னர்
நிலம்புகழு மிந்திராதி தேவர்கூடி
நேராக விண்ணின்று பார்த்திருக்க
நலங்கமழும் மணவோலை கண்டபீஷ்மன்
நாடினன் துவாரகையிற் கூடினனே ... (சகூ௱)

இராகம் - சாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

இராஜனும்பீஷ்மன் - மகராஜன்வசுதேவன்
வாழும்மனைக்குவந்தானே

அநுபல்லவி.

வாசுதேவகிமைந்தன் - மணவோலைதன்னைக்கண்டு
ஆசையுடனேபர - மானந்தமதுகொண்டு

சரணம்.

௧. கத்திவருங்கரியும் - கனைத்துவரும்பரியும்
முத்துக்குடையுந்தேரும் - முறையாய்க்காலாள்களும்
வெற்றியரசர்களும் - விழைபலதேசத்தாரும்
சுற்றமுடன்கண - சந்தோஷமாய்த்துவாரகையில்
ஜோதிமிகுத்துவருக - பேரிகை
யாதிமுழக்கந்தருக
சுகுணமேவுஜெயவிருதுகள்வீற
சூரர்வீரர்களுங்கட்டியங்கூற
மகரதோரணங்கள் வரிசையாயிலங்க
மாதர்நடனமாட - மங்களம்பாட
இங்கிதம்நீட - கொண்டாட ... ... ... (இராஜ)

௨. தங்கப்பல்லக்கிலுற்ற - தனருக்மணியைப்பெற்ற
மங்கையாந்தாய்முதலாம் - வண்ணவஞ்சிமார்கள்
பொங்கமாயலங்காரம் - பூண்டிருக்கின்றதாதி
நங்கையரனைவரும் - நன்முகமலர்கொண்டு
நலமுடன்புடைசூழ - கோரியே
வலமதுவந்துதாழ
நாடியுசிதவெண்கவரிகள்வீச



நண்ணியெச்சரிக்கைகாரியர்பேச
கூடிப்பூமகளுங் குலவுநற்றுவாரகை
குடிகள்மகிழ்ச்சிசேர - வெடிகள்தீர
முடிவொய்யார - உதார ... ... ... ... (இரா)

௩. ஓங்குவசுதேவர் - உறவினர்யாவரும்
தீங்கறுமறையவர் - திரளதுமூலமாய்
தாங்கியபூரண - தங்கக்குடங்களொடு
பாங்குடன்மந்திரங்கள் - பரிவுடனோதிவித்து
பயனுறவெதிர்சென்று - சீர்பெறு
சுயபதிமுனம்நின்று
பக்ஷமாகமரியாதைகள்தரவே
பதியைநாடியழைத்தினிதுடன்வரவே
லக்ஷ்மிகோருமுயர் துவாரகைநகரில்
நன்குவிடுதிகொடுத்தார் - சங்கைவிடுத்தார்
செங்கைகொடுத்தார் - அடுத்தார் ... ... ... (இராஜ)

வசனம்.

பீஷ்மராஜன் துவாரகையிற்சேர்ந்தபின்பு அவருக்குத்தக்கவாறு மரியாதைபுரிந்து விடுதியுந்தந்து வசுதேவர் திருக்குமாரனாகிய கண்ணனை நோக்கி ருக்மணியை பீஷ்மராஜன் விடுதிக்கனுப்பி அவளுடைய தாய்தந்தையரோடு கலியாணமண்டபத்துக்கு வரும்படிச் செய்யச்சொல்லுதல்.

விருத்தம்.

மகபதியும் மகிழ்பீஷ்மன் துவாரகைக்கு
மனமார வந்திட்டா னென்னப்பின்னர்
சுகமாக வசுதேவர் மகனைச்சுட்டி
சுந்தரஞ்சேர் ருக்மணியைத் தந்தையின்பால்
புகழுறநா மனுப்பிமணக் கோலத்தோடு
புதுமையா யவர்கொண்டு வரவேசெய்தல்
மிகமேலாம் எனதிஷ்டங் கண்ணநல்ல
மிதமென்றார் உன்கருத்தை யுதவென்றாரோ (சகூக)

இராகம் - ஜாவளி - சாபுதாளம்.

பல்லவி.

கிருஷ்ணாவென்சொற்கேளடா - ஹ-ஹ-ஹ
கிருஷ்ணாவென்சொற்கேளடா

அநுபல்லவி.

இஷ்டமுடனுளடா - ஹ-ஹ-ஹ ... ... ... (கிருஷ்)

சரணம்.

௧. குண்டினபதிபுத்திரியை - அவன்
அண்டையில் சேர்மித்திரியை ... ... ... (கிருஷ்)

௨. பன்னுமிதுகஷ்டமா - நானும்
சொன்னபடி யிஷ்டமா ... ... ... ... (கிருஷ்)

௩. அனுப்பவுஞ்சம்மதியா - யென்சொல்
இனிப்புறநிம்மதியா ... ... .... ... (கிருஷ்)

௪. உந்தன்இஷ்டம்என்னடா - சற்
றெந்தனுடன்பன்னடா ... ... ... ... (கிருஷ்)

௫. லக்ஷ்மிகரம்நடிக்க - மிகு
பக்ஷமணம்முடிக்க ... ... ... ... (கிருஷ்)

வசனம்.

கண்ணன் தன்தகப்பனுடைய இஷ்டப்படியே செய்வது தனக்குஞ் சம்மதமென்று சொன்னவுடனே ருக்மணியைப் பீஷ்மராஜன் விடுதிக்கு அழைத்துப்போக அங்கேயவர்கள் சிங்காரஞ் செய்தவைபவத்தைச்சொல்லுதல்.

விருத்தம்.

தந்தையுரை குருவார்த்தையாகக் கொண்டு
தன்மனமுமப்படியே யென்னக்கண்ணன்
சிந்தைமகிழ் வாகிவசு தேவரன்று
சிறப்பாகப் பூவையரை யொன்றுகூட்டி
விந்தைமிகு பதினெண் வாத்தியமுழங்க
விபவமாய்ப் பீஷ்மனிடம் போகச்செய்யப்
பந்தமாய் நலங்காதி ருக்மணிக்குப்
பண்ணினர் அலங்கரித்து நண்ணினரோ ... (௪௯௨)

இராகம் - முகாரி - சாபுதாளம்.

பல்லவி.

சிங்காரஞ்செய்தார் - ருக்மணியை
சிங்காரஞ்செய்தார்

அநுபல்லவி.

சிங்காரங்கள்செய்தார்நன்று
ஸ்ரீகிருஷ்ணனுக்கென்றவர்களன்று ... ... ... (சிங்)

சரணம்.

௧. தாமரைப்பூங்கழல்கள்தன்னில்
தண்டைச்சிலம்புகள்கூட்டி



கோமளமேனிக்கிசைந்த
கோலப்பணிகளும்பூட்டி - மேலும்
கங்கணந்தோள்வளையோடு
கையில்வங்கிகள்தொடுத்து
தங்கவொட்டியாணம்சேலை
தையலிடைதனிலுடுத்து ... ... ... ... (சிங்)

௨. கண்டசரங்கள்பதக்கம்
கல்லிழைத்தட்டிகைமாட்டி
கொண்டைக்கலங்காரமாக
குடமல்லிமுல்லைகளுஞ்சூட்டி - மின்னும்
பத்தரைமாற்றுள்ளதங்க
பவளக்குண்டுகளேற்றி
முத்துமூக்குத்திநத்து
மூக்கில்விளங்கவேசாற்றி ... ... ... ... (சிங்)

௩. காதில்லோலைசிமிக்கி
கமலசரங்களுமிட்டு
மாதுமுகந்தன்னில்நல்ல
மணமாம்கஸ்தூரிபொட்டு - சொல்லும்
லக்ஷ்மிபோல்ருக்மணியும்
ஞானிலத்திலேகளிக்க
பக்ஷமுடன்கண்ணனுக்கே
பாரியாகஅவரளிக்க ... ... ... ... ... (சிங்)

வசனம்.

இவ்வாறு ருக்மணிக்கு தாய்வீட்டில் கல்யாணநலங்கு முதலிய வைபவங்களுஞ் செய்துகொண்டிருக்கும்போது வசுதேவர் தன்திருக்குமாரனாகிய கண்ணனுக்கு மணக்கோலஞ்செய்யும் பெருமையைச்சொல்லுதல்.

விருத்தம்.

சிங்கார நலங்குமுத லாகச்செய்து
செய்ததவப் பலப்பிராப்தி ருக்மணிக்கு
பொங்கமாய்க் கண்ணனே பதியாய்வாய்த்த
புண்ணியத்தை யோசிக்கிற் புதுமையென்றார்
துங்கமாம் புரோகிதர் பந்துக்களோடு
தூமணிநேர் மைந்தன்தன் மணக்கோலத்தை
இங்கிதமாய்ச் செய்யவசு தேவரன்று
எடுத்திட்டார் மதிமாரோ டுத்திடட்டாரோ (௪௯௩.)

இராகம் - நாதநாமக்கிரியை - ஏகதாளம்.

பல்லவி.

மணவாளக்கோலங் - கொண்டானேமாயன்
மங்கைருக்மணி - மகிழும்படியே - ஆயன்

சரணம்.

க. பணிவாளரவணை - மீதினிற்படுத்தோன்
பாரினில்யாவிடர் - போனுருவெடுத்தோன்
அணையவேமாதினை - அன்புடனடுத்தோன்
அம்புவிமீதினில் - அதிசயங்கொடுத்தோன் ... ... (மண)

உ. இலகுபொன்னுடை - இடையினிற்றரித்தோன்
எழில்மிகுஆபரணம் - இசையவேபரித்தோன்
கலமுடன்சிகைமுடி - காடியேவரித்தோன்
காணயமேனியில் - நறுமணம்விரித்தோன் ... ... (மண)

௩. புன்னகையானனுக்கு - பூமலர்களுஞ்சாந்த
போதவுங்கற்பூர - தீபங்களுமேற்ற
மன்னியஆரத்தி - மகிழ்வாகவுமாற்ற
மாதர்களிருபுறம் - வாழ்த்தியும்போற்ற ... ... (மண)

ச. வட்சஸ்தலத்தன்னில் - வனமாலைகீண்டோன்
வாசமாய்லக்ஷ்மியை - மார்பினிற்பூண்டோன்
பட்சமாய்க்கோதையைப் - பாக்குறமீண்டோன்
பாகவதர்களைப்-பரிவுடனாண்டோன் ... ... (மண)

வசனம்.

இவ்விதமைபவ மணக்கோலத்துடன் கண்ணனை வசுதேவர் பீஷ்மராஜனுடைய விடுதிக்குக்கொண்டுபோய் ருக்மணியை தன்குமாரனுக்குத் திருமணஞ்செய்துகொடுக்கும்படிக் கேட்குதல்.

விருத்தம்.

இவ்விதமாய்த் திருமகனைக் கோலத்தோடு
எழிற்பீஷ்மன் விடுதிக்கு வசுதேவர்தானும்
செவ்விதரும் கிளையோடு மமைச்சரோடும்
சேரயவ் வரசனிடஞ் சேர்ந்தபின்னர்
இவ்வுலக வாழ்க்கைமரி யாதையைப்போல்
இயல்பாக ருக்மணியாஞ் செல்விதன்னைத்
திவ்வியமா மென்கண்ணன் தனக்களிக்கத்
தேறென்றார் நின்கருத்தைக் கூறென்றாரே (சகச)



இராகம் - ஸ்ரீராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

கன்னியைத்தரல்வேண்டும் - கண்ணனுக்குத்தன்
கன்னியைத்தரல்வேண்டும்

சரணம்.

க. கன்னியைத்தரல்வேண்டும் - கருத்ததனைப்பன்னும்
மன்னியஅழகுள்ள - மாதுருக்மணியென்னும் ... (கன்)

உ. சந்திரபிம்பத்தையொத்த - சாரசமுகத்தாளாம்
மந்தகாசனிடம் - மகிழும்அகத்தாளாம் ... ... (கன்)

௩. அந்தமாமுவமைக்கு - அன்னநடையாளாம்
செந்திருமால்மெச்சும் - சிறந்தசிற்றிடையாளாம் ... (கன்)

ச. மங்கையர்வியந்திடும் - மானொத்தவிழியாளாம்
இங்கையக்கண்ணனுக்கும் - பதமாங்கன்மொழியாளாம் (கன்)

பட்சமாய்க்குலத்துக்கு - பாக்கியம்போன்றவளாம்
லட்சுமிகாதனுக்கும் - சம்மியமானவளாம் ... ... (கன்)

வசனம்.

இவ்வாறு வசுதேவர் பீஷ்மராஜனை ருக்மணியைத் தன்குமாரனாகிய கண்ணனுக்குத் தரும்படி கேட்டதற்கு அவர் சம்மதித்துத் தனது புத்திரியோடு வசுதேவருடைய அரண்மனைக்கு வருகிற வைபவத்தைச் சொல்லுதல்.

விருத்தம்.

தருங்காம் வள்ளல்வசு தேவரன்று
தரல்வேண்டும் ருக்மணியைப் பிள்ளைக்கென்ன
வருபெரிய கீர்த்தியாக மனதுட்கொண்டு
வையமதிற் செய்ததவப் பலனீதென்று
பெருமையுறு மென்புதல்வி தன்னைப்போ
பின்றோடே யழைத்துவந்து மணமேசெய்து
திருமகளைத் தருமாறு வருகும்போது
தெரிகின்றான் சேவையது தருகின்றனே ... (சகூ)

இராகம் - அசாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

மாதுருக்மணிவந்தானே - அவர்கள்கண்டு
மகிழுஞ்சேவைதந்தானே

அநுபல்லவி.

மாதுருக்மணிவந்தாள் - வானவர்கண்டறிய
சீதமலர்மாரி - சேர்ந்தவர்கள்சொரிய ... ... (மா

சரணம்.

௧. தாமரைத்தாள்சொலிக்கவே - கலகலவென்ன
தண்டைச்சிலம்பொலிக்கவே
க்ஷேமம்மிகப்பலிக்கவே - தொடையிரண்டும்
செவ்வாழையைக்கெலிக்கவே
சித்திரக்கொடியை - நிகர்த்திடுமிடைமின்ன
செப்பையொத்தகும்ப - ஸ்தனமிரண்டுந்துன்ன
சுத்தமேவுசங்கு - கண்டவடிவேயென்ன
சோதிமதிமுகமும் - துலங்கிடவேசொன்ன ... (மாது

௨. தங்கச்சேலையுந்துலங்க - ரத்னப்பணிகள்
தகதகவென இலங்க
பொங்குமாலைகளலங்க - மல்லிகைமுல்லை
பொலிகுழல்மிசைநலங்க
பூசும்அத்தர்சவ்வாதுகள்வீச
புதுமையாக - வெல்லோர்களும்பேச
மாசில்பாங்கியர் - சூழஉல்லாச
மதிமிகுந்தரதி - சரசப்பிரகாச ... ... ... (மாது

௩. வானவரெல்லோரும்புகழ - நகரமெங்கும்
மங்களவாத்தியம்திகழ
ஆனமங்கையர்மகிழ - கோரியபடி
அற்புதமணம்நிகழ
அந்தமாகவே - விருதுகள்தாவ
அரசர்யாவரும் - ஆனந்தமேவ
விந்தைரம்பையர் - விண்ணிலுலாவ
மெல்லியர்கதம்பப் - பொடிமிசைதூவ ... ... (மாது)

௪. சேவையைக்காணப்போகுமோ - வர்ணிக்கஆதி
சேஷனாலும்ஆகுமோ
பாவைசவுரியின்மோகமோ - நிறைவேற
பண்ணினதபபாகமோ
அவனிமீதில்மிகு - அறிவுடையோரும்
அன்றுலட்சுமியின் - அகமதிற்கோரும்
கவலைபோக்கிவரும் - கண்டுயர்சீரும்
கருதிமகிழ்ந்துமிகக் - கனமுடன்நேரும் ... ... (மாது)



வசனம்.

உருக்மணி அரண்மனைசேர்ந்தபின் கண்ணனை உலகவழக்கம்போலப் பரதேசம் போகும்படிச்செய்த பெருமையைச்சொல்லுதல்.

விருத்தம்.

மாதுருக்மணி கண்ணன் மனைபுகுந்த
மாட்சிமையைக் கண்டுடனே மனதுபொங்கி
நீதகல விரதாதி பூசைமுற்றும்
தீவிரமாய் செய்தவர்கள் முடிந்தபின்னர்
ஓதுமவர் குலதர்ம வழக்கம்போல
உள்ளதிரு வாத்தியத்தின் முழக்கத்தோடு
சாதுளனும் பரப்பிரம்ம சொரூபனங்கே
சார்ந்திட்டான் பரதேசம் நேர்ந்திட்டானே (௪௩௪)

இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

பரதேசம்வருகின்றான் - பாலகிருஷ்ணன்
பரதேசம்வருகின்றான்

அநுபல்லவி.

பரதேசம்வருகின்றான் - பாவனமாய்முடித்து
விரதமனேகஞ்செய்து - வித்தகனும்நடித்து ... (பரதே)

சரணம்.

பொருவிலாக்கல்யாண பேரிகையுமடிக்க
பூசக்கிரவாளக்குடை பொற்புறவேபிடிக்க
திருவுருவாமந்தத் தேவிமணம்முடிக்க
ஜெயவிஜயாவென்று கட்டியமும்படிக்க ... ... (பரதே)

ஆனைமேல்அம்பாரிவைத்து அரசர்வா
ஆயிரநாமனுக்கவர் உபசாரந்தர
வானத்தில்தேவருடை வாத்தியங்களதிர
வஞ்சியர்கற்பூர ஆரத்திகொண்டெதிர ... ... (பரதே)

கானமுனிவர்களுங் கண்ணனிடத்திற்கூட
கற்புடைமங்கையர் களித்துமங்களம்பாட
தானவர்கண்டுடன் தரியாமலேயோட
தையலர்கள்கூடித் தங்கிநடனமாட ... ... (பரதே)

தோரணபாஷியம் தொடுத்துமுடியிற்கட்டி
சோபனத்தண்டுலம் தோளதனில்மாட்டி

காரணமாகவே கண்ணிலஞ்சனந்தீட்டி
கமலத்திருவடியில் பாதுகையும்பூட்டி ... ... (பரதே)

௫. புஸ்தகமுங்கையிற் பொற்பிரம்பும்பிடித்து
புனுகுசவ்வாதுடனே புதுமலரும்முடித்து
அஸ்தத்தில்விசிறியும் அந்தமாகக்கொடுத்து
அன்புடனினிதான வசனங்களும்படித்து ... ... (பரதே)

நாடியமாமனும் பீஷ்மன்பரிமளிக்க
நங்கையைத்தருமாறு நாரிகேளமளிக்க
நீடியதன்குலம் நீனிலத்திற்றளிக்க
நெருங்கியலக்ஷ்மி நெஞ்சமதுகளிக்க ... ... (பரதே)

வசனம்.

பரதேசம்போன கண்ணனை மாமனாகிய பீஷ்மன்சமாதானஞ்சொல்லி யழைத்துவந்து திருக்கல்யாண மகோற்சவங்கொண்டாடிய வைபவத்தைச் சொல்லுதல்.

விருத்தம்.

பரதேசம் போனவனை யழைத்துவந்து
பாவைருக் மணியையுமே தோள்மேல்வைத்து
வரமென்ன இவள்பெற்ற ளென்றுவந்தார்
வாயார வாழ்த்திப்பூ மாலைமாற்றி
தரமாகப் பொன்னூசல் மீதன்னோரை
தங்கவே செய்துநல் லிசைகள்பாடி
யிரதிமதன் போலவே மணமேலேற்றி
யெய்திட்டார் திருமணமுஞ் செய்திட்டாரே (௦௦௦)

இராகம் - அசாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

அச்சுதன்திருக்கலியாண வைபவஞ்சொல்ல
ஆனந்தம்எங்கும் ஆகுமே

அநுபல்லவி.

மெச்சும்புகழொடு - மேட்டிமையாயுய்யும்
மெல்லிருக்மணிதன்னை - வியந்திடவேசெய்யும் (அச்)

சரணம்.

௧. அருமறையந்தண ரனைவரும்வந்திருக்க
அம்புவிமன்னர்கள் அண்டியங்கேதரிக்க
திருவள்பலபல திரட்சியதுநெருக்க



தெளிவுளக்கண்ணனைக்கண்டு உடல்பெருக்க
தெரிவைமார்களும் - தெரியவேதிகழும்
தீரர்யாவரும் - திறமதைப்புகழும்
அறிவுளமுனிவரர் - அகமதில்மகிழும்
ஆசைதம்பதிகட் - கற்புதம்நிகழும் ... ... ... (அச்)

௨. தேவன்ருக்மணியொடு திருமணப்படிதங்க
தேர்ந்தகாற்கேயரங்கு சீருடனேயிலங்க
பூவினிலதிசுபபூரிசின்னம்முழங்க
புதுமணமாலைகள் பொருந்திமார்பிற்றுலங்க
புகலும்வேதசாஸ்திர - முறையொடுசொல்ல
பொங்கும்விஷ்வக்சேனர் - பூசையைப்புல்ல
நிகரில்பாலிகைகள் - நிகழ்ந்திடவல்ல
நின்றுபாதபூசை - புரிந்திடும்நல்ல ... ... ... (அச்)

௩. மாமன்பீஷ்மராஜன் மரியாதையொடுதக்க
வகைவகைதானங்கள் வழங்கியங்கேயொக்க
க்ஷேமமாய்க்கூறைச்சேலை சிலம்பொலியாட்குடுக்க
செந்நெல்குவியில்மன்னன் செல்வியுமேயடுக்க
சீர்மிகுந்தமாங் - கலியமுஞ்சாற்றும்
சேடிமார்கள் - ஜெயமங்களம்போற்றும்
நேர்மைவானவர் - நிறைமலர்தூற்றும்
நீதியுடைய - ஓமங்களுமாற்றும் ... ... ... (அச்).

௪. மாதின்விரல்பிடித்து மணவாளனுமகிழ்ந்து
மன்னியஅரசாணிக் காலினைவலம்வந்து
ஆதிவழக்கமம்மி - மிதித்தருந்ததிமுகந்து
அமருங்கற்பினாள்கண்டு - அன்புடனேபுகழ்ந்து
நீடுபடியிலிரு - வோர்களும்மன்னும்
நிமலவேதியர்கள் - ஆசிகள்பன்னும்
ஆடும்வேசியர் - அபிநயந்துன்னும்
அரிவைமார்கள்தரும் - ஆரத்திமின்னும் ... ... (அச்)

விரைகமழ்பன்னீரும் வீசிப்பூச்செண்டெடுத்து
மேலானகதம்ப கஸ்தூரியுமேதொடுத்து
புரையிலாசுபகர தாம்பூலமும்அடுத்து
பூரிதட்சணைகளும் பொலிவாகவேகொடுத்து
பொங்கமாகவே - பொடிகளுந்தூவும்
பொருவிலாது - மஞ்சனங்களுமேவும்
துங்கமான - மணவிருந்துகள்யாவும்
துலங்கியபார்த்திபன் - மகிழ்ந்துஉலாவும் ... ... ... (அச்)

கூ. விண்ணின்றுகந்திருவர் வீணைகொண்டுமீட்ட
மேனகையூர்வசி மீதினிற்கைகாட்ட
எண்ணருமங்கையர் இனியமுகங்கிட்ட
எக்களித்தானந்த மங்களமுங்கூட்ட
துங்கமுனிவரர் அனுக்கிரகம்வளரும்
தூயசாமளன் - எதுகுலந்துளிரும்
செங்கைமாவிரலில் - மோதிரம்ஒளிரும்
சிந்தைதருக்மணிலட்சுமி - சேரமிகக்குளிரும் ... (அ

வசனம்.

கண்ணனும் ருக்மணியும் ஊசலாடிய வைபவத்தைச் சொல்லுதல்.

விருத்தம்.

திருமணமும் வைபவமாய்ச் செய்துமேலும்
தேயத்து வழக்கமதை யனுசரித்து
இருவிசும்பிற் றேவர்கின் றெக்களிக்கமின்னல்
இடையாரும் பலவாறு பாடியாட
மருவுதரும் புஷ்பத்தா லலங்கரித்து
மண்டபத்தில் மணப்பலகை தூக்கிவிட்டு
உருவுதனி லொப்பில்லாப் பெண்ணும்பிள்ளை
ஊடினர் இருந்தூச லாடினரோ ... ... (சகூ)

இராகம் - பைரவி.

ஊசல்.

க. சுந்திரமாம் செம்பவளக் கால்கள்காட்டி
ஜோதிமணி வயிரத்தால் விட்டம்பூட்டி
அந்தமிகு தங்கச் சங்கிலிகள்மாட்டி
அற்புதமாய் மரகதத்தால் பலகைகூட்டி
கந்தமலர் மாலையணிந் தின்பமாக
காந்திதர வேயதன்மேல் வீற்றிருக்க
விந்தைசெறி கண்ணபிரா னாடிரூசல்
மெல்லிருக் மணியுடனே யாடிரூசல் ...

உ. இந்திராதி தேவர்களா விழைத்தவூசல்
எழில்மலரோன் தானுகந்தே யேற்றுமூசல்
சொந்தமொடு பிஞ்சகனுந் துதிக்குமூசல்
சொல்லரிய முனிவர்களும் பணியுமூசல்
சந்திரனுஞ் சூரியனும் போற்றுமூசல்
சற்சனராம் பாகவதர் சாற்றுமூசல்



புந்திமிகு கண்ணபிரா னாடிரூசல்
பூவைருக் மணியுடனே யாடிரூசல் ... ... *

ங. நவரத்ன கசிதமணிப் பணிகள்மின்ன
நல்லபீதாம்பரமாந் துகிலுமன்ன
சுவர்க்கமது மாமலர்கள் முடியில்சூட்டி
சுந்தரமாம் களபகஸ் தூரிதீட்டி
உவமையிலாத் திலதப்பொட் டிட்டனேக
உம்பர்களுந் துதித்தாட வுசிதமாக
புவனமகிழ் கண்ணபிரா னாடிரூசல்
பொன்னிருக் மணியுடனே யாடிரூசல் ... ... ... *

ச. மதிவதன சரஸ்வதியோர் வடந்தொட்டாட்ட
மாயனது தங்கையுமோர் வடந்தொட்டாட்ட
சதிராக விந்திராணியுமோர் வடந்தொட்டாட்ட
சாசலட்சுமியுமோர் வடந்தொட் டாட்ட
அதிவடிவ அரிவையர்கள் கவரிவீச
அன்பர்களும் அற்புதத்தைக் கண்டுபேச
துதிசெய்யுங் கண்ணபிரா னாடிரூசல்
தோகைருக் மணியுடனே யாடிரூசல் ... ... ... *

வசனம்.

ஊசலாடியபின் இலக்குமிபோலும் பெண்கள்கூடி லாலிபாடிய பெருமையைச் சொல்லுதல்.

விருத்தம்.

ஊசலிருந் தாடினா ருலகமெச்ச
உள்ளபெரி யோர்மறையோ ருகந்துவாழ்த்த
பாசபந்த வூழ்வினைக ளெல்லாமோட
பக்தருக்கு ஞானமதி யன்றுகூட
வாசலிலே வந்தவர்கள் கூட்டமாக
வஞ்சியர்தம் இசைகேட்டு மகிழ்ச்சியாக
ஏசலிலா மங்கையர்கள் திரண்டுநின்று
எடுத்திட்டார் லாலிசொல அடுத்திட்டாரோ (சகக)

இராகம் - சஹானா - சாபுதாளம்.

லாலி.

லாலி-லாலி-லாலி-லாலி-லாலிநந்தகுமார
நவநீதசோரா ... ... ... ... ... (லாலி)

க. கோலருக்மணி மகிழ்நாதா - அந்த
கொற்றமாபலிபுவியளந்திடும்பாதா ... ... ... (லாலி)

உ. சேலமிருந்திடும்வேதா - ஆயச்
சேயிழைதம்முடனுடும்விநோதா ... ... (லாலி)

ங. உலகமுண்டபெருவாயா - வான
உத்தமர்க்கமுதமளித்தவுபாயா ... ... (லாலி)

ச. இலகியபிரகலாதன்நேயா - யாரும்
இச்சிக்கும்வசுதேவனீன்றநற்சேயா ... ... (லாலி)

ரு. ஆதிமூலம்என்னவந்தாய் - யானை
ஆபத்தைநீக்கியபயமுந்தந்தாய் ... ... ... (லாலி)

சூ. அம்புவியோர்புகழ்பாலா - உயர்
அண்டருக்கென்காளும் அதியனுகூலா ... ... (லாலி)

எ. நம்பும்அன்பரைக்காக்கும்லீலா - நல்ல
நற்றவர்போற்றிடும் நாதனும்மேலா ... ... (லாலி)

அ. திருவேங்கடத்தமர்நாதா - என்றும்
தேவிலட்சுமிமார்பில் தாங்கியமோதா ... ... (லாலி)

வசனம்.

இவ்விதம் லாலிசொல்லியபின்னர் எச்சரிக்கை பாடியதைச் சொல்லல்.

விருத்தம்.

லாலியிந்த விதமாகப் பாடியன்று
லட்சுமிபோற் பெண்களுமே கூடிமேலும்
ஆலிலைமேற் பள்ளியிடுத் தாயரோடு
ஆடிநிற்கு மெம்பெருமான் வைபவத்தை
நூலின்முறை யிடுமாறு சொல்லவெண்ணி
நூதனமாய்க் கலியாணக் களிப்பைக்காட்ட
ஏலவே திருமாலி னவதாரமுற்றும்
ஏத்துவார் எச்சரிக்கையினுற் போற்றுவாரோ (நூா)

இராகம் - நாதநாமக்கிரியை - சாபுதாளம்.

எச்சரிக்கை.

க. மெச்சுமறைகொண்டசோமுகா - சுரனுக்காகவெண்ணி
மச்சாவதாரஞ்செய்த - மாயாஎச்சரிக்கை ... ...

உ. ஆர்வமுடன்அமரர்தமக் - கன்றுஅமுதளித்த
கூர்மாவதாரஞ்செய்த - குணவாயெச்சரிக்கை ...

ங. மேதினியையளிக்கும்பொருட் - டாகவிருப்புற்று
ஆதியில்வராகவுரு - வானயெச்சரிக்கை ...



ச. சேருடையபிரகலாதன்தன் - சிறந்தபக்திக்காக
நாரசிங்கவவதாரஞ்செய் - நாரணனெச்சரிக்கை ... ... *

ரு. பூமாபலிபுவியைக்கொள்ளப் - புந்திதனிலெண்ணி
வாமனவதாரஞ்செய்த - வண்ணனெச்சரிக்கை ... ... *

சூ. ஆவலுடனசுரர்தம்மை - அடக்கப்புவிதன்னில்
மூவர்களும்மெச்சும் மூலராமாஎச்சரிக்கை ... ... ... *
துஷ்டராக்ஷஸப்பொருளேயிந்த அவனிபாரந்தீர்க்க
கிஷ்டாவதாரஞ்செய்த - கேசவாயெச்சரிக்கை ... ... *

அக்ஷயமாய்த்திருவேங்கடத் தமர்ந்தேயென்றுநிற்கும்
லட்சுமியுகர்திடவேசெய்யும் - லலிதாஎச்சரிக்கை ... *

மங்களம்பாடுதல்.

விருத்தம்.

எச்சரிக்கையாகவே போற்றிசெய்து
ஏகாந்த மாகமனம் போனவாறு
மெச்சவே பாடியுடல் பூரிக்கமேலும்
மேலான காரியங்க ளியற்றிநின்று
மச்சாவ தாரமுத லெடுத்தவிஷ்ணு
மகிமைதனைக் கண்டவர்க ளதிசயித்து
பச்சையா லிலைமேலே பள்ளியானைப்
பாடினர் மங்களங் கொண்டாடினரோ ... ... *

இராகம் - சுருட்டி - அடதாளம்.

க. வசுதேவபுத்திரா - வருக்மணிநேயா
மங்களம் - சுப - மங்களம்
பசுபதியிதயத்தில் - பரவியநற்றாயா
மங்களம் - ஜெய - மங்களம் ... ... ... ... *

இந்திராதிதேவர்கள் - ஏத்திடுநற்குண
மங்களம் - சுப - மங்களம்
மந்திரபுயவன் - மாலியேநிற்குண
மங்களம் - ஜெய - மங்களம் ... ... ... *

ஆயர்மங்கையர்களை - அன்புடன்காத்தவா
மங்களம் - சுப - மங்களம்
வாயில்அசோதைக்கு - வையங்காட்டியசீலா
மங்களம் - ஜெய - மங்களம் ... ... ... *

இராஜகோபாலசீல - னென்றெவரும்போற்ற
மங்களம் - சுப - மங்களம்

## ஸ்ரீமகாபாகவததசமஸ்கந்தநாடகம்.

பராசரர்முதலோர்கள் - பணிந்திடும்பாதா
மங்களம் - ஜெய - மங்களம் ... ...

௫. சக்கிரவர்த்திமகிழ் - சாசமாம்நற்குண
மங்களம் - சுப - மங்களம்
அக்கரையாகவே - ஆனையைக்காத்தவா
மங்களம் - ஜெய - மங்களம் ... ...

௬. சேஷசயனனென்றே - சிறந்தநற்றிருநாமா
மங்களம் - சுப - மங்களம்
தோஷமென்பவையெலாம் - தொலைத்திடுமூலனே
மங்களம் - ஜெய - மங்களம் ... ...

௭. திருவேங்கடத்துறை - தேவதேவநாதா
மங்களம் - சுப - மங்களம்
அருமறைக்கிழவரும் - அனுதினந்துதிலோலா
மங்களம் - ஜெய - மங்களம் ... ... ...

௮. ரம்மியமுடனர்த - லட்சுமிமகிழ்நாதா
மங்களம் - சுப - மங்களம்
சம்மதித்திக்கதை - சாற்றிடச்செய்தவா
மங்களம் - ஜெய - மங்களம் ...

### வாழிவிருத்தம்.

நதிகளும் ஏரிகளும் ஜலம்நிரம்ப
நாட்டிலே விளைபொருள்கள் நயமாய்விற்க
துதிபரவு நல்லோர்கள் குலங்களென்றுந்
துயரற்றுக் கிளைகளுட னேபெருக்க
அதிபக்தி வினயமுட னிச்சிர்காதை
அன்பாக வெழுதினோர் படித்தார்கேட்டார்
மதியிரவி நேர்லட்சுமி வரமும்பெற்று
...நிலத்தில் சுகமாக வாழ்வர்மாதே

...க்கல்யாணம் முற்றிற்று.

---

Office of the Registrar
... Madras